கேரள பாணினீயம்

(மலையாள இலக்கணம்)

தமிழாக்கம்

மா. இளயபெருமாள்

தமிழ்த்துறை,
கேரளப் பல்கலைக்கழகம்,
காரியவட்டம், திருவனந்தபுரம்.

1977

கேரளப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை வெளியீடு எண்: 13.

கேரள பாணினீயம்

(மலையாள இலக்கணம்)

தமிழாக்கம்

மா. இளையபெருமாள்

தமிழ்த்துறை,
கேரளப் பல்கலைக்கழகம்,
காரியவட்டம், திருவனந்தபுரம்.

1977

Kerala University Tamil Dept. Publication Series No. 13
(Grammar)

KERALA PANINIYAM

Tamil Translation

by M. ELAYAPERUMAL.

First Published
February 1977.

Printed at
Kerala University Co-operative
Stores Press, Trivandrum.

Price Rs. 15-00

Published by
Department of Tamil,
University of Kerala,
Kariavattom, Trivandrum.

அறிமுகம்

கி. பி. 14-ம் நூற்றாண்டில் எழுந்த லீலாதிலகம், கி. பி. 1851-ல் குண்டர்ட் எழுதிய ''மலையாள மொழி இலக்கணம்'', கி. பி. 1895-ல் எ. ஆர். ராஜராஜவர்மா எழுதிய ''கேரள பாணினீயம்'' ஆகியவற்றை மலையாள மொழியின் முககியமான மூன்று பேரிலக்கண நூற்கள் எனக் குறிப்பிடலாம். அவற்றுள் இன்று கேரளத்தில் பள்ளிப் படிப்பு முதல் பட்டப் படிப்புவரை மிகுந்த பயிற்சி பெற்று விளங்குவது கேரள பாணினீயமே.

இப்பேரிலக்கணம் பாணினி முனிவர் படைத்த பழைய கருவி லிட்டு வார்த்தெடுக்கப்பட்டது (2)* என ஆசிரியரே கூறுவதிலிருந்து அவரது வடமொழி இலக்கணப் புலமை நன்கு விளங்கும். தமிழ் இலக்கணமாகிய நன்னூலின் கருத்துக்களை ஏறத்தாழ இருபது இடங் களில் மேற்கோள் காட்டுவதிலிருந்து ஆசிரியரின் தமிழ் இலக்கணப் புலமை நன்கு விளங்குகிறது. இவற்றோடு கன்னட இலக்கணம், தெலுங்கு இலக்கணம் ஆகியவற்றின் கருத்துக்களும் ஆங்காங்கு சுட்டப்படுகின்றன. திரவிட மொழிகளின் இலக்கணங்களை ஆராய்ந்த மேலைநாட்டு அறிஞர்களான ஆர்டன், எல்லிஸ், கால்டு வெல், கிரால், கிற்றல், குண்டர்ட், பர்னல், பெயிலி, ஸ்டீவன்ஸன் ஆகியோர் கருத்துக்கள் இந்நூலில் ஆங்காங்கே ஆராயப்படுகின்றன. லீலாதிலகத்தையும், குண்டர்ட்டின் மலையாள வியாகரணத்தையும் இவ்விலக்கண நூலில் பெரிதும் பயன்படுத்தியிருக்கின்றார் என்பத னைக் கூறத் தேவையில்லை.

இலக்கணப் பயிற்சியைப் போன்றே ஆசிரியரது இலககியப் பயிற்சியும் மிகுந்த பரப்புடையது; இருக்குவேதம், குமாரசம்பவம், சாணககிய சூததிரம, பஞ்சதந்திரம், பாரதம், ரகுவம்சம், சாகுந்தளம் முதலிய வடமொழி இலககியங்களும், இராமசரிதம், உண்ணிநீலி சந்தேசம், கிருஷ்ணகாதை, குஞ்சன்நம்பியார் பாடல்கள், சந்திரோதச வம், சம்பு நூற்கள், சிவபுராணம், தச்சொள்ளிப் பாட்டு, நளசரிதம், நிரணம கவிஞர்களின் பாடல்கள் முதலிய மலையாள இலகியங்களும், கபிலர் பாடல், கம்பராமாயணம், குலசேகர ஆழ்வார் பாடல் முதலிய

---

* தொடர்ந்து அடைப்புக் குறிக்குள் இடபபடும் எண்கள் இந்நூலின பக்கங்களைக் குறிக்கும்

தமிழ் இலக்கியங்களும் சான்றுகளாக எடுத்துகாட்டப்படுவதிலி ருந்து அதனை உணரலாம்.

குண்டர்ட் முதலிய மேலைநாட்டு அறிஞர்களின் இலக்கண முயற்சிகளைப் பாராட்டி நன்றி தெரிவிகின்றார். அவர்களது கருத் துக்களை ஆராய்ந்து தன்னுடைய ஆராய்ச்சியின் பயனுக பல கருத துக்களை ஏற்றுகொள்ளவும செய்கிறார். எடுத்துகாட்டாகச் செய் யாய் முதலியவற்றில் ஆ இருக்கிறது என்ற கால்டுவெல்லின் கருதது (271), பெயரெச்ச விகுதியாகிய அகரம் அகரச சுட்டினின்று வந்தது என்ற குணடர்ட் கருதது (282), பழைய கன்னடத்திலுள்ள அம் என்பதன் மெல்லினம் கெட்டுத் தோன்றிய அகரமே மலையாளத்தில் இரண்டாம் வேற்றுமையாகிய அகரமாகவும, தமிழின் ஐகாரமாகவும் மாறியது என்ற கால்டுவெல்லின் கருதது (172) முதலியவற்றை ஆசிரியா காரண காரியங்களோடு ஏற்றுககொள்கின்றார். தமது ஆராய்ச்சிக்குப் பொருந்தவில்லையென்றால் தகக சான்றுகளோடு மறுப் பது இவரது ஆய்வுச் சிறப்பாகும். காரித அகாரிதங்களை முறையே Strong verbs, weak verbs எனக் குண்டர்ட் கூறுவதையும் (282), பெய ரெச்ச விகுதியாகிய அ என்பது ஆறும் வேற்றுமை உருபிலிருந்து வந் தது எனக கால்டுவெல் கூறுவதையும் (282), செய்தும், செய்கும் ஆகியவற்றில் உம் எதிர்கால இடைச்சொல் எனக் கால்டுவெல் கரு துவதையும (218), மலையாளத்தின் நான்காம் வேற்றுமை உருபாகிய உ என்பது ஆறும வேற்றுமை உருபினின்று தோன்றியது எனக குணடாட்டும கால்டுவெல்லும் கூறுவதையும், உடெ என்பது அது என்ற சுட்டிலிருந்து வந்தது என்ற கால்டுவெல்லின் கருத்தையும் (174) கேரள பாணினி தகுநத காரணங்களோடு மறுப்பதை எடுத்துக் காட்டாகக கூறலாம்.

கேரள பாணினியததில் ஆசிரியர் தனது சொந்தக கருத்துகளா கப் பலவற்றைக் குறிப்பிட்டிருப்பது பாராடடத்தகக்து. குறிப்பாக இலகக்ணக் கூறுகளின் வரலாற்றைப் பல இடங்களில் குறிப்பிடு கிறார். எடுதத்துகாட்டாக செய்யட்டெ என்பது செய்யவொட்டும் என்பதிலிருந்து தோன்றியது (236), அணம் என்பது வேண்டும் என்ப திலிருந்து தோன்றியது (236); இல் என்ற ஏழாம் வேற்றுமை உருபு வீடு என்ற பொருளுடைய இல் என்ற சொல்லிலிருந்து தோன்றியது (174); ஆண்டான்ற பின்வினையெச்சம் ஆ என்ற நடுவினையெச்சத்தி னின்று தோன்றியது; ஒட்டுதல் என்ற வினை வடிவமே மூன்றும் வேற்றுமை ஒடு (172); இறநத கால உருபாகிய இ அல்லது இன் 'இது' என்ற அஃறிணைச் சட்டினின்று தோன்றியிருக்கலாம் (232); நடுவினையெச்சத்தின் அகரவிகுதி சேய்மைச் சுட்டே (233); ஆண்

என்பதே அன் என்ற ஆண்பால் விகுதியாக மாறிற்று (145); ஆள் என்ற வடிவமே ஆள் என்ற பெண்பால் விகுதியாயிற்று (145); அனுபவம் என்ற பொருளுடைய 'து' என்ற அடிச்சொல் விகுதியே ஒன்றன்பால் விகுதியாயிற்று (145) முதலியவற்றைக் காட்டலாம்.

கேரள பாணினி சில கருத்துக்களைத் துணிவோடு தயக்கமின்றிக் கூறிவிடுவது, போற்றத் தக்கது. அவற்றுட் சில வருமாறு: மலையாளம் தோன்றியது தமிழின் துணை மொழியாகவே என்ற காரியத்தில் இனி எந்தத் தருக்கத்திற்கும் இடமில்லை (61); 2. ஏலாதிலகம் கிடைத்ததோடு, சமீபகாலம்வரை மலையாளம் யாதொரு விதியுமில்லாத இழிந்த மொழியாயிருந்தது என்றும, மலையாளத்திற்கு முதன் முதலில் இலக்கணம் இயற்றுதற்கு ஒரு ஐரோப்பியப் புலவரே அமைத்தார் என்றும், ஏற்பட்டிருந்த இகழ்ச்சியும் மொழிப் பற்றின்மையும் நீங்கினவல்லவா (61); 3. மணிப்பிரவாளக் கவிதை வழக்கில் வந்த நாள் முதல் மலையாளிகளுக்குத் தமிழோடு ஒரு கடினமான வெறுப்பும் சமஸ்கிருதத்தோடு காரணமற்ற ஒரு தலைச் சாய்வும் நாளுக்கு நாள் வளர்ந்து வந்திருப்பதால், தமிழ்ச் சொற்களைத் தாராளமாக உபயோகிக்கத் தொடங்கினல், பெரும்பான்மையோர்க்கும் சுவையின்மைக்கு இடமளிக்கும் (278); 4. "இராமாயணம் தமிழ்", "பாரதம் தமிழ்" முதலிய பெயர்களுள்ள பல செய்யுள் நூற்களும் சாக்கியர்களிடத்தில் இன்னும் இருக்கின்றன; அவர்கள் ஏதோ ஒரு பக்தி மயக்கத்தாலோ, மனமின்மையாலோ இவ்வகை நூற்களை வெளியிடத தயங்குகின்றனர் (56); 5. தமிழர்களுக்கு ஐந்திரவியாகரணப் பயிற்சியால் சமஸ்கிருதத்தைப் பின்பற்றிய குற்றம் சில இடங்களில் நிகழ்ந்துண்டு; நமக்கு முடிந்தவரை அக்குற்றம் நேராது பார்த்துகொள்ளவேண்டும்; 6. மலையாளத்தில் 'தவ' என்ற வடமொழி உருபைக் கடன்வாங்கியது தன்மாத்திரை உருபுகளின் வறுமையாலும், மலையாளிகளின் வடமொழி வேட்கையின் ஆதிக்கத்தாலும் ஆகும் (197); 7. மணிப்பிரவாளக கவிஞர்கள் சமஸ்கிருத வேற்றுமைகளையே மலையாள வேற்றுமைகளுக்குப்பதில் மிகுதியும் பயன்படுத்தியது பெரிய குழப்பங்களுக்கு இடமளித்தது; 8. உரிச்சொல் என்பதன் இலக்கணம் பேதகத்தின் இலக்கணத்தோடு முரணுகிறது (134); 10. தமிழில் கடன் என்பதன் இறுதி எழுத்து னகரமன்று நகரமே; 11. சமஸ்கிருதத்தில் ஒரே வேற்றுமை வடிவம் பல பொருட்களைக் குறிக்க, மலையாளத்தில் ஒவ்வொரு பொருளைக் குறிக்கத் தனித்தனி உருபுகள் உள்ளன. எடுத்துக்காட்டாக மூன்றும் வேற்றுமைக்கு ஏது, ஒற்றுமைநயம், காரணம், கருத்தா, உடனிகழ்ச்சி, அதிலூடே என்ற ஆறு பொருட்கள் உள்ளன. இவற்றிற்கு முறையே ஆயிட்டு,

ஆயி, கொண்டு, ஆல், ஒடு, ஊடே ஆகிய உருபுகள் உள்ளன. இவற்றையெல்லாம் ஒன்றுசேர்த்து ஒரு பெயரிடுவது சரியன்று. இவைபோன்ற கருத்துக்கள் இந்நூலுள் அருகியன அல்ல.

மலையாள இலக்கியத்தை மாத்திரமல்ல வட்டார வழக்குகளையும் கேரள பாணினி ஆங்காங்கே ஆராய்கின்றார். உலகு, நாடு என்று முற்றியலுகரமாக எழுதுவது பாதிரிகளின் மலையாளத்திலுள்ளது; குற்றியலுகரத்தைப் பிறைச் சின்னமிட்டுக் காட்டுவது வடகேரளத்திலுள்ளவர்களுக்கு விருப்பமில்லை; எங்கள் என்பது இழிமொழி; ஞங்ஙள் என்பது உயர்மொழி (151); நாம் என்பதை ''நோம்'' எனச் சில வட்டாரத்தினர் மாற்றுவதுண்டு (151); சில வட்டாரங்களில் 'அவர்' என்பது பெண்களை மரியாதையாகக் குறிக்கப் பயன்படுத்தப் படுகிறது (159); தலைச்சேரி முதலிய வட பகுதிகளில் மக்கள் ரேகெ என எகரம் சேர்த்தே எழுதவும் படிக்கவும் செய்கின்றனர் (86); ஆஞல் திருச்சூர் மக்களின் உச்சரிப்பில் எகரத்தைவிட அய் என்ற யகரமே ஒலிக்கின்றது (86); பச்சை மலையாளத்தில் எழுதப்பட்ட கவிதைகளையும் ஆசிரியர் குறிப்பிடத் தவறவில்லை (61)

கேரள பாணினியத்தைப் படிக்கும்போது ஒரு தலைசிறந்த இலக்கியத்தைப் படிப்பது போன்ற உணர்வு ஏற்படுகின்றது. அதற்கு முக்கிய காரணம் ஆசிரியர் ஆங்காங்கு கையாளும் உவமை, உருவகம் முதலியவை ஆகும். இலக்கணமில்லாத மொழியை அரசனில்லாத நாட்டோடு ஒப்பிட்டு இலக்கணத்தின் பெருமையை விளக்குகிறார் (1); ஆரிய திராவிட கலப்பை ஆறு காயலில் விழுவது போன்றது என்று குறிப்பிடுகிறார் (21); கொடுந்தமிழ் மொழி திராவிடமாகிய இமயமலையினின்று பாய்ந்த சமஸ்கிருத யமுனையோடு கலந்து மலையாளமாயிற்று எனக் கூறுகிறார் (21); கேரள மொழியைப் பருவம் நிறைந்த மணமகளாகவும், அதனோடு கலந்த சமஸ்கிருதத்தை மணமகளுகவும், அவர்களுக்கு இடையில் திருமணத்தை நிகழ்த்தியவர் எழுத்தச்சன் என்றும் உருவகப்படுத்துகின்றார் (54); மலையாள மொழியின் வளர்ச்சிக காலகட்டங்களை மண்ணிலிட்ட தேங்காயினின்று தோன்றும் குருத்து காய்க்கத் தொடங்கி மரமாகுமவரையுள்ள பருவங்களோடு ஒப்பிடுகிறார் (49); உயிரெழுத்துகளை மா, பலா முதலிய சுதந்திர மரங்களைப போன்றவை என்றும், மெய்யெழுத்துகளை மரங்களில் முளைத்து வளரும் ஒட்டுச் செடிகள் போன்றவை என்றும் குறிப்பிடுகிறார் (66); ஆங்கிலத்தின் 'T' என்ற ஒலியையுடைய றகரம் தன் ஒலியை இன்று இழந்த தன்மையைப் பசு இறந்தாலும் மோரின் புளிப்புப் போவதில்லை என்று குறிப்பிடுகிறார் (41); செம்பையும் இரும்பையும் சேர்த்து உருக்கி வெண்கலம் உண்டாக்குவதைப் போன்று இரண்டு ஒலிகளைப்

பொருததி இணைப்பது சம்ஸர்க்கம் என்று குறிப்பிடுகிறர் (72); பிடில் வாசிக்கும் ஒருவனுகுக கம்பிகளில் வில் ஓட்டுவதிலுள்ள ஏற்ற இறக்க வேறுபாடுகளால் இசையில் எத்தனைவிதம் விநோதங்கள் காட்ட இயலுமோ, அதனில் பன்மடங்கு விநோதங்கள் மனிதனுக்குக் குரல்வளை முதலிய இடங்களில் நாவசைவினுல் வர்ண ஒலியில் எழுப்ப இயலும் (78); உணவுப் பொருட்களில் சிலவற்றை நாம் வேகவைத் தும் சிலவற்றை வேகவைக்காமல் பச்சையாகவும பயன்படுத்துவதைப் போன்று மொழியிலும் சில சொற்களை உருபு சேர்த்தல் முதலியவற் ருல் நாகரிகப்படுத்தியும் சிலவற்றை மாற்றம் இல்லாத இயற்கை நிலை யிலும் வழங்குவதுண்டு (121); வினையின் காரகங்கள் குறைதலை, காளன் என்ற கறிககு வேண்டிய உபபு, மிளகு, புளி ஆகிய சுவை களுள் ஒன்று குறையும் சுவையின்மை போன்றது எனக கூறுகிறர் (183); நிகழ்காலத்தை இரண்டு நிலங்களுக்கு இடையிலுள்ள வரப் பிற்கு ஒப்பிடுகிறர் (227); சிதைவுற்ற அடிச்சொற்களை உறுப்புக் குறைந்த மனிதர்களோடு ஒப்பிடுகிறர் (254); செய்க என்ற நடுவினை யெச்சம் பரப்பிரமத்தைப்போன்று உபாதிகளற்றது எனக குறிப்பிடு கின்றர் (289); இவ்வாறு வாழ்கையின் சாதாரண நிலைகளிலிருந்தும், தத்துவங்களிலிருநதும் இவர் கையாளும் உவமைகள் அமைகின்றன.

உவமை, உருவகம் போன்று ஆற்றலுள்ள பல மரபுச் சொற் ருடர்களை இவர் கையாள்வதும் குறிப்பிடத்தகக்கது. வினையெச்ச 'ஆன்' என்பதை, ''அழைககாது வநது நுழைந்த விருந்து'' எனக குறிப்பிடுகிறர் (298); எழுததச்சன் செய்த மலையாள எழுத்துச் சீர் திருத்தத்தைக் குறிப்பீடும்போது கிரந்த எழுத்துக்களின் ''வாலும் தலையும் முறித்து'' எனக குறிப்பிடுகின்றர் (69); தமிழின் 'ட'கரத் தில் சிறிய வேறுபாடு செய்து, புதிய மலையாள எழுத்தமைத்து ''t'' என்ற ஒலியை மீண்டும் கொணர்ந்த செய்தியைக ''கல்லறையினின் றும் தோண்டியெடுத்துக கழுவி மினுக்கி விளங்கச் செய்தோம்'' என் கின்றர் (41); இலக்கணக கருத்துக்களை ஆராய்ந்து முடிவு செய்வதை வழகுமன்றத்தில் இருபகக வழகையும் விசாரித்துத் தீர்பபுக் கூறுவ தைப் போன்று அமைப்பது சுவை தருகின்றது (232).

இயல்பான நகைச்சுவையும் இடையிடையே தோன்றுமல் இல்லை. எனககு ஒரு சீடன் கிடைத்திருக்கிறன். அவனுக்கு சாப் பிட்ட உடன் தூங்கவேண்டும்; தூங்கி எழுநத உடனே சாப்பிட வேண்டும் என்பது ஒரு சிறந்த எடுத்துக்காட்டு.

இந்நூல் ஒரு நீண்ட முகவுரையுடன் கூடியது. புணர்ச்சியதி காரம், வினையடிச் சொல்லதிகாரம், பேதகச் சொல்லதிகாரம், இடைச்

சொல்லதிகாரம், சொற்றொடர் நிலையதிகாரம், சொற்களின் தோற்றம் என்ற ஏழு பகுதிகளைக் கொண்டது மொத்தம் 194 நூற்பாக்களைக் கொண்ட இந்நூலுக்கு ஆசிரியரே உரையும் எழுதிச் செல்கின்றார். இலக்கணங்களைக் கூறும் பகுதியில் தெளிவான சிறிய வாக்கியங்களால வெளியிடுகிறார் எனினும் விவாதப் பகுதிகளில் மிக நீண்டு வளைந்து செலலும் வாக்கியங்களை வியப்பு, நகை முதலிய சுவைகளோடும, மிகுந்த மறுப்பாற்றலோடும் பெருமபான்மையாகக் கையாள்கிறார். இந்நூற் சுருக்கம் இங்குத் தரப்படுகின்றது.

கேரளம்:

மலையாள நாட்டின் வரலாற்றைத் தொல்காப்பிய உரையில் காணப்படும் வேணாடு, பூழிநாடு, கற்கா நாடு, சீதநாடு, குட்டநாடு, குடநாடு, மலயமானாடு ஆகியவற்றிலிருந்து தொடங்குகின்றார் கேரள பாணினி. பரசுராமர் கேரளததைப் படைத்தார் என்பதனையும், திருமாலின் மீன் அவதாரக் கதையையும், நம்பூதிரிகள் கேரளத்தில் குடியேறியதையும இதனோடு இணைக்கிறார்.

மலையாளம்:

மலையாள மொழியின் தோற்றத்தைக் குறிதது ஆசிரியர் கருத்து மிகத் தெளிவானது. மலைநாடாகிய மலையாளததில பழங்குடி மக்கள் தமிழர்கள். அவாகளது மொழி தமிழே; அவ்வாறு அமைந்த கொடுந் தமிழில் ஒன்று மலையாளமாகத் திரிந்தது. மலையாளததின் அடிப்படையும, மேற்கூரையும் இன்னும் தமிழ் நிலைநிறுதியவையே வேற்றுமொழி ஒன்றும் மலையாள மொழியின் உட்பகுதியைத தொடவில்லை'' எனத தெளிவுறுத்துகின்றார் ஆசிரியர். பினனர்த் திராவிட குடுமபத்திலுளள மொழிகளின பெயர்களைக கூறித திராவிடர்கள் தென்னிந்தியாவின் ஆதிகுடி மக்களே என்றும், வட இந்திய மொழிகளோடோ, சிதியன், துரேனியன் முதலிய கிளைகளோடோ குறிப்பிடத தகுந்த உறவு திராவிட மொழிகளுகில்லை எனவும் கருதுகிறார்; ஆரியர்கள் தென்னகததில் நுழைநத பிறகு மிதமிஞ்சிய வடமொழிக் கலப்பால் மணிப்பிரவாள இலகியம தோன்றிய வரலாற்றைக கூறுகின்றார் கேரளததின் கலாச்சாரதததில் ஏற்பட்ட மாறுதல்கள் பின்னர் விளகப்படுகின்றன. வீடுகளில் அன்றாடம் வழங்கும் சொற்களில் வடமொழிகளும் மலையாளத்திற்கும் பெரிதும் தொடர்பில்லை என்பது அவரது கருதது. அடுதது, வடமொழிக்கும மலையாளத்திற்குமுள்ள வேறுபாடுகளைக குறிப்பிடுகின்றார் ஆசிரியர். ஏழு வேற்றுமைகளுக்குரிய இருபததொரு எண்கள், வினைச்சொற்களின் பிரயோக பேதங்கள், மொழி முதலில் எதிர்மறை உருபைச் சோததல், பேதகச சொல்லோடு

பால், எண் உருபுகளைச் சேர்த்தல், பேருயிர்ப் பொலிகள், உரசொலி கள், உதாத்தம் முதலியன மலையாளத்தில் இல்லை என்பது குறிப்பிடப் படுகின்றது.

மலைநாட்டைச் சேரமன்னர்கள் ஆண்ட காலத்திலிருந்து தொடங்கி, ராட்டிரகூடர், சாளுகியர், மாலிகாபூர் முதலியோரு டைய படையெடுப்பையும் குறிப்பிடுவிட்டு, மலையாளம் தமிழின் தொடர்புவிட்டுத் தனியாகப் பிரிந்த வரலாற்றை விளக்குகிறார் ஆசிரி யர். மலைகளின் இயற்கையமைப்பு அதற்கு முக்கிய காரணமாகக் குறிப்பிடப்படுகின்றது. மருமக்கள் தாயம் முதலிய பண்பாட்டு முறை களும் தமிழிலிருந்து பிரிவதற்கு உதவின. கி. பி 6-ம் நூற்றாண்டிலி ருந்து ஆரியப் பிராமணர்கள் இங்கு குடியேற்றப்பட்டதும், அவர்கள் நிலவுரிமை முதலிய செல்வாக்குகளைப் பெற்றதும் கொல்லமாண்டின் தொடக்க காலத்தில் அமைந்தன. அதன் பின்னர் ஆரியத் திராவிடப் பண்பாட்டுக் கலப்புக் காரணமாகப் பல பழக்கவழக்கங்கள் தோன் றின. மூத்த மகனுக்கு மட்டும் வேத முறைப்படி இல்லற வாழ்க்கை, ஏனையோர்க்குத் துறவு போதும் என்ற நிலைகள் புகுத்தப்பட்டன.

பின்னர்த் தமிழினின்று வேறுபட்ட மலையாளமொழித் தனித் தன்மைகள் விளக்கப்படுகின்றன மெல்லினமாக்கல் (மாங்ஙா), அண்ண ஒலித்திரிபு (பிடிச்சு), உயிர்க் குறுக்கம் (மழ), உயிர் ஒலி மாற்றங்கள் (பெடுதல்), பால் வேறுபாட்டொழிப்பு (அவன் வந்து, அவள் வந்து) முதலிய வேறுபாடுகள் விளக்கப்படுகின்றன. அதன் பின்னர் றகரத்தின் பழைய ஒலி ஆங்கிலத்தின் 'T' என்பதைப் போன்றது என்பது பல காரணங்களால் வற்புறுத்தப்படுகின்றது. சில மலையாளப் பாடல்கள் தமிழ்ப்படுத்தப்பட்டும், தமிழ்ப் பாடல்கள் மலையாளப்படுத்தபபட்டும் விளக்கப்படுகின்றன. மலையாளம் வளர்ந்த நிலையை முற்கால நிலை (கி பி. 825 முதல் 1325 வரை), இடைக்கால நிலை (கி. பி. 1325 முதல 1625 வரை), தற்கால நிலை (கி. பி. 1625க்குப் பின) என்று மூன்றாகப் பிரித்து விளக்குகின்றார். மணிப்பிரவாள நடை செயற்கை நெறி எனறும், அதனில் பல கோமாளி உருவங்கள் உடைய சொற்கள் காணப்படுகின்றன என்றும், உணர்ந்து நிரணம் கவிஞர்கள் வடமொழி வேறுமையிறுதிகளைக் குறைத்து இலக்கியம் இயற்றினர். பின்னர் எழுத்தச்சனது முயறசியால் புதிய மலையாளம் உருவெடுத்த வரலாறு கூறபபடுகிறது. ஆரிய எழுததை ஏற்றுக் கொள்ளுதல், சமஸ்கிருத யாப்பு விதியைத் தமிழ் விருத்தங்களில் கலத்தல் முதலிய சீர்திருத்தங்கள் அவரால் செய்யப்பட்டன. ஒவ்வொரு காலப் பகுதியில் எழுந்த இலக்கியங்களுக்கும் சான்றுகள் காட்டப்படுகின்றன.

எழுத்து:

எழுத்தச்சன் காலம்வரை மலையாளிகள் வட்டெழுத்தைப் பயன் படுத்தி வந்தனர். பின்னர் ஆரிய எழுத்து வடமொழிக கலப்பின் தேவையால் ஏற்றுகொள்ளப்பட்டது. திராவிடச் சிறப்பெழுத்துக் களாக ற, ழ, ள, ட, ன ஆகியவை குறிப்பிடப்படுகின்றன. குற்றிய லுகரத்தில் தமிழிற்கும் மலையாளத்திற்கும் மிகுந்த வேறுபாடு உளது. மலையாளத்தில் குற்றியலுகரம் சொல்லிலக்கணத்தை வரையறைப் படுத்தவும் செய்கின்றது. ''செய்து'' என்பதில் குற்றியலுகரம் விஜை யெச்சமாகவும் முற்றியலுகரம் விஜைமுற்றுகவும் அமைகின்றன (89). பல மெய்யிறுதிச் சொற்களில் தாங்கொலியாகக் குற்றியலுகரம அமை கின்றது. (வாக்கு, மனஸ்=மனஸ்ஸு) எனவே குற்றியலுகரம் வலலெழுத்தோடே வரவேண்டும் என்ற நியதி இல்லை. அடுத்து எழுத்துப்போலி குறிப்பிடப்படுகிறது. அகர எகரப்போலி (ஜனம்= ஜெனம்), இகர எகரப்போலி (இல=எல), அவ்=ஒளகாரப்போலி (ஒளவண்ணம்). ககர வகரப்போலி (தடகுன்னு=தடவுன்னு), ஞகர நகரப்போலி (ஞண்டு=நண்டு), டகர ளகர ழகரப்போலி (நாடிக= நாழிக, சம்ராட்=சம்ராள்), ணகர னகரப்போலி (துணியுன்னு=துனி யுன்னு) னகர லகரப்போலி (பொன்குடம்=பொல்குடம்), தகர லகரப் போலி (உத்சவம=உல்சவம), ககர பகர விகற்பம் (கேள்ககான்= கேள்ப்பான்), மகர வகரபபோலி (வண்ணான்=மண்ணான்), யகர நகரப்போலி (யான்=நான்), ஸகர தகரப்போலி (வாஸல்=வாதல்), ரகர றகரப்போலி (சிரிக்குக = சிறிக்குக), ழகர ளகரப்போலி (அப்போழ்=அப்போள்) முதலியவை குறிப்பிடப்படுகின்றன.

புணர்ச்சி:

பத இடைப்புணர்ச்சி (மரம்+இல்), பத இறுதிப் புணர்ச்சி (பொன்+பூ), இருநிலைப் புணர்ச்சி (மணி+அற+இல்) உயிரோடு உயிர், உயிரோடு மெய், மெய்யோடு உயிர், மெய்யோடு மெய் எனப் புணர்ச்சி பகுக்கப்படுகிறது. கெடுதல், தோன்றல், இரட்டுதல், திரி தல் ஆகியன புணர்ச்சி விகாரங்கள். விதிகள் பின்வருமாறு அமைக கப்படுகின்றன: குற்றியலுகரம் (செய்து, செப்புன்னு) முன்னர் உயிர் வரின் கெடும்; அல்ல, இல்ல ஆகியவற்றின் முன் உயிர் வரும்போது அகரம் கெடும; ஆயி, போயி என்பதன் இகரம் உயிர்வரின் கெடும்; நடுவினையெச்சத்தின் (செய) அகரம உயிர்வரின் கெடும்; வேறு பல இடங்களிலும் புணர்ச்சியில் அகரம் கெடும்; அட்டெ, ஆதெ, உடெ, ஊடெ ஆகியவற்றின் இறுதி எகரம் உயிர்வரின் விகற்பமாய்க் கெடும் முதலியன அவ்விதிகள்.

தோன்றற் புணர்ச்சி:

அண்ணை உயிர் ஒலியின் முன் உயிர் வரும்போது யகரமும், இதழ் உயிர்முன் உயிர்வரின் வகரமும உடமபடு மெய்யாய்த் தோன்றும். (தீயாட்டு, பூவம்பு); விஜனமுற்றுகளிலும் பெயரெசசங்களிலும் வேறு சில புணர்ச்சிகளிலும உயிர்முன் உயிர்வரின் னகரம உடம்படு மெய் யாய்த் தோன்றும். (காட்டினேன், கருதின, கரிமபுலி); சுட்டெழுத் துகள், பெயரெச்சம் ஆகியவற்றின் முன உயிர வரின் வகரம தோன் றும்; யகரமன்று. (அவன், இவன், உவன்); இடைச்சொற்களின் முன் உடம்படு மெய் வருவது ஙன்றன்று. (அதா ஒருவன்); ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ ஆகியவற்றின் முன் உயிர்வரின் யகரமோ வகரமோ தோன்றும். (காய், நாவு, தீயு, பூவு, கோவு, கையு); அணண உயி ரின் பின் இரட்டிய ககர உருபு வரின் இடையில் யகரம் தோன்றும். (தலய்க்கு); உருபு முதல் க அன்றெனினும இதழ் ஒலி முன்னும் யகரம் தோன்றுவதில்லை. (அரகைல், வெறுக்குன்னு); என்பன இவவகைப் புணர்ச்சி விதிகள்.

இரட்டற் புணர்ச்சி:

வேற்றுமைப் புணர்ச்சியிலும், பண்புத் தொகையிலும், அன் மொழித தொகையிலுமட, ஆற்றல் மிக்க வல்லின மெய்கள் இரட்டும் (தலககட்டு); உம்மைத் தொகையில் இரட்டல் இல்லை (கைகால்); விகுதி கெடாத தொகைகளிலும இரட்டல் இலலை (அண்டர்கோன்); முன்வினையெச்சம் (போய்ப்பறஞ்ஞு); தன்வினையெச்சம் (கூடப் போந்து); கட்டளை வினையெச்சம் (காணுகில்ச் சொல்லாம்); வேற்று மைப் போலி (நெற்றியிலேக் கண்ணு) முதலியவற்றில் இரட்டுதல் உண்டு; சுட்டெழுத்தின் பின்னரும் எல்லா மெய்யெழுத்துக்களும் இரட்டும் (அக்காலம், அம்மாதிரி).

திரிதற் புணர்ச்சி விதிகள்:

ண் + த = ட (விணடலம்); ல் + ந = ன (நன்னூல்); ள் + ந = ண (தொண்ணூறு); ல் + ம = ன்ம (நென்மணி); ள் + ம = ண்ம (உண்ம); ன் + க = ங்க (ராமங்கல்); மகரம் வல்லெழுததின் இன மெல்லெழுத்தா கத் திரியும்; ஈற்று மகரம் வகரமாகத் திரியும் (கனவும்) ஆகியன திரி தற் புணர்ச்சியின் விதிகள்.

பதவியல்:

கேரள பாணினி, ஒரு பொருளைக் குறிக்க ஒலிகளைக் கூட்டிச் சேர்க்கும் எழுத்தின் கூட்டத்திற்குச் சொல் (கரிம்பு) என்றும், உருபு முதலியவை சேர்ந்தோ, சேராமலோ வழங்குவதற்கு ஏற்ற சொல்லைப்

பதம் (கிழவன்) என்றும் இலக்கணம் வகுக்கின்றார். வெளிப்படைப் பொருள் தருபவற்றை வாசகம (குடம்) என்றும், வெளிப்படையாக ஒரு பொருளைக காட்டாது, இரண்டு வெளிப்படைப் பொருளின் தொடர்பைக குறிப்பது தியோதகம (இடைச்சொல்) என்றும் பாகுபடுத்துகின்றார்; வெளிப்படைப பொருள் தருபவற்றைப் பெயா (மரம்), வினை (வரும்), பேதகம (கறுத்த) என மூன்றுகப் பகுக்கின்றார்; இடைச்சொற்களை நிபாதம் (உம), அவ்வியம் (என்ன=என்ற) என இரணடாகப் பிரிக்கின்றார்; வழக்கு அடிப்படையில் அவை கதி (கொணடு=ஆல்), கடகம (உம்), வியாட்சேபகம் (அய்யோ), விளு விடைச் சொல் (ஒ), தேற்றம் (தன்னை) எனப் பிரிக்கப்படுகின்றன.

பெயர், வினை, பேதகம் எனப் பிரிவது பொருளின் அடிப்படையிலேயே. எடுத்துக்காட்டாக, பெண்கள் என்ற பொருளைத தரும் நல்லார் என்ற சொல்லில நல் என்பது பெயா. எதிர்கால உருபு சேர்ந்த நல்லூர் என்பதில் நல் என்பது வினை. பெயருகு வேற்றுமைத தொடர்பு காரணமாகவும், வினைக்குக கால உருபுகள், முற்று, எச்சம் முதலியவை காரணமாகவும் உருவ வேறுபாடுகள் அமைகின்றன. பேதகததிற்கும வினைக்கும உருவத்தில ஒற்றுமை உண்டு. எடுத்துக காடடாக, செறிய என்ற பேதகச் சொல் மாறிய என்ற பெயரெச்ச அமைபபை உடையது

பொருட்பெயர் (ராமன்), குணப்பெயர் (அழகு), வினைப்பெயர் (படிப்பு) எனப் பெயர் மூன்றுவகைப்படும. சிறப்புப் பெயர் (ராமன்), இனப் பொதுப்பெயர் (மனிதன்), பொதுப்பெயர் (எல்லாம்), மேயப் பெயர் (மண்) எனப் பொருட்பெயர் நான்குவகைபபடும். தன்மைப் பொதுப்பெயர் (என்), முன்னிலைப் பொதுப்பெயர் (நின்), விவேசகப் பொதுப்பெயர் (அ, இ, உ, ஒரு), வியாட்சேபகப் பொதுபபெயர் (எ, யா), வினுப் பொதுபபெயர் (ஏ, ஆர், எநது), நாஞசர்வப் பெயர் (சில, பல), விதந்து கூறும் பொதுபபெயர் (இன்ன), முழுமைப் பொதுப்பெயர் (எல்லாம்), தன்மையை உணர்த்தும பொதுப்பெயர் (தன்), அம்சவாசிப் பொதுப்பெயர் (மிகக), பிறிதை உணர்த்துவது (மற்று), ஏகோ ஒன்று என்பதை உணர்த்துவது (வல்ல) எனவும் பொதுப்பெயர்கள் பகுகபப்படுகின்றன.

செயப்படுபொருள் குன்றியவினை (உறங்குதல்), செயப்படு பொருள் குன்றுவினை (உண்ணுதல்) எனவும், தன்வினை (ஓடுதல்), பிறவினை (ஓட்டுதல்) எனவும் வினைகள் பகுக்கப்படுகின்றன. கால உருபுகளைச் சோக்கும்போது ''கு'' என்பதைச் சேர்ககவேண்டிய பகுதிகள காரிதம் என்றும் (கேளகுன்னு), அல்லாதவை அகாரிதம்

(பிரியுன்னு) என்றும் பிரிவு செய்யப்படுகின்றன; கரோதிக் கிருதி (சிறப்புள்ள முற்றுவினை), சர்வக்கிருதி (சிறப்பு இல்லாத எச்சவினை) எனவும் பிரிக்கப்படுகின்றன. வினையெச்சம் (தேச்சு=தேய்த்து), பெயரெச்சம் (கொடுத்த) என எச்சவினை இரண்டுவகைப்படும்.

பேதகம் பெயர்விசேடணம் (கறுத்த) வினைவிசேடணம் (செற்று=சற்று) எனவும் அமையலாம். சுததம் (நல், திரு, செம், வன், செறு), பொதுப்பெயர் (அ=அவ்விடம்), எண்ணுக குறிப்பன (ஒரு, இரு, மூ, நால், விபாவகம் (பொட்டன்=செவிடன், பொட்டி=செவிடி), அளவைக குறிப்பன (இதற=இத்தனை, குறெ=குறைய), பெயரெச்சத்தினின்று தோன்றியவை (கெட்டிய பெண்), வினையெச்சத்தினின்று தோன்றியவை (கூடெப்போகுன்னு) என ஏழு பகுதிகளாகப் பேதகங்கள் பிரிக்கப்படுகின்றன.

நன்னூலார் கூறிய பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம் ஆகியவை விளக்கப்படுகின்றன. ஆனால் மலையாளத்தைப் பொறுதத அளவில் பகுதி, விகுதி, இடைநிலை என்ற மூன்றே போதும் என்பது ஆசிரியர் கருத்து.

பகுதிவிகுதிகள்:

பகுதி, விகுதி சேர்ந்த ஒலி உருவமே சொல். அவை சேருமிடத்துச் சில எழுததுக்கள் சேர்ககப்படுகின்றன. அவற்றிற்கு இடைநிலை என்று பெயர். பகுதியும், இடைநிலையும் சேர்ந்த பகுதி அங்கம் என்று பெயர் கொடுக்கப்படுகிறது. பெயர்களில் பாலுருபு, எண்ணுருபு, வேற்றுமையுருபு ஆகியவையும், வினைகளில் காலமும் சேர்ந்து உருவ வேறுபாடுகள் உண்டாகின்றன. பேதகங்களுக்கு இவை இல்லை.

பெயர் விகுதிகள்:

இடையண்ண ஒலியாகிய அகர இறுதிச் சொற்களில் பால் வேறுபாடு இல்லை. ஆனால மரியாதையைக குறிக்க அவைகளைச் சோப்பதுண்டு (தந்தையான், தள்ளையாள்). மிகுந்த மரியாதையைக் குறிப்பதறகு ஆர சேர்க்கப்படும (தந்தையார்). இதழ் ஒலியாகிய அகர இறுதிச சொற்களில் மட்டுமே பால் விகுதிகள் சேர்க்கப்படுகின்றன. மூவிடப் பெயர்களில் ஆணபாலிற்கு அன் (அவன்); பெண்பாலிற்கு அள் (அவள்); அஃறிணைககு து (அது). சில சொற்களில் பெண் பால் விகுதி ச்சி எனத் திரியும் (செட்டிச்சி). அஃறிணைககு அன் என்ற விகுதி வரும் (கூனன்=கூனலுள்ள மாடு). அலிப்பாலிற்குப் பால் விகுதி தேவையில்லை. குடம முதலியவற்றில் உள்ள அம் பால் விகுதி அன்று அங்க விகுதியே. ஆட்டம் முதலியவற்றிலுள்ள அம் தொழிற்

பெயர் விகுதி. மரதத்தின்றெ முதலியவற்றில் இன் போன்று அத்தும் இடைநிலையே (சாரியையே). காற்றத்து என்ற வேற்றுமைப் போலியிலும அத்து சாரியையே. அலிபபால் விகுதியாகக் காணப்படும் அம் எனபது ஆதிகாலத்தில் ''அந்'' என இருந்தது. கூவிளத்தின் வேர் என்பது கூவிளத்தும வேர் என அமைகின்றது. அந என்பது சமஸ்கிருததிலுள்ளதுபோல அம என்ருகியிருக்கின்றது. மகர நகரப் போலியே இதற்குச சான்று; இநத அந் என்பது அத்து என ஆயிற்று. ஹிதமோடு, ஹிதத்தோடு என்ற இரண்டு வடிவங்களும அம், அத ஆவதற்குச் சான்றுகள். அன், அள், து ஆகிய விகுதிகள் ஒருமை யெண்ணையும் குறிகின்றன. பலர்பால் விகுதியாக அர் என்பதும், அஃறிணைப பலவின்பால் விகுதியாக அ என்பதும அமைகின்றன. சமஸ்கிருததிலுள்ளது போன்ற இருமை எண் திராவிட மொழிகளில் இல்லை. பால் வேறுபாடு இல்லாத இடததில் சொல்லின் உருவமே ஒருமையெண்ணைக் குறிகின்றது (காடு). பால் வேறுபாடு உள்ள பன்மை (மிடுகன்மார்), பால் வேறுபாடு இல்லாத பன்மை (மிடுக்கர்), மரியாதைப் பன்மை (தாபுராக்கன்மார், பட்டர்) எனப் பன்மை மூன்று வகைப்படும் அஃறிணையின் பன்மையைக் கள் விகுதி குறிகும் (மலகள); இது வேலகாரதிகள் முதலிய உயாதிணைப் பெயரோடு வருவதன் காரணம ஒன்றன்பால தன்மையை அமைத்தலே. சுட்டோடு அகர விகுதி பன்மையைக குறிகதும (அவ) விகுதி மேல் விகுதிகளாக அர், கள் ஆகியனவும் (சிஷ்யாகள்), கள், மார் என்பனவும் (பெங்ஙள்மார்) வரும். பண்மையெண்ணைக் குறிகும் விசேடணம் உள்ள இடத்தில் அஃறிணைச்சொற்களுக்குப் பன்மை விகுதி வேணடா (பதுரூப). உயிருள்ள அஃறிணைச் சொற்களில் கள் வருவதில் தடையில்லை (பத்துப் பசுகள்). ஞான் என்ற தன்மைப் பெயர் என் என்ற விகுதியினின்று தோன்றிற்று நின் என்பதினின்று நீ என்பதும், தன் என்பதினின்று தான் என்பதும, தோன்றின. எங்ஙள், ஞங்ஙள் ஆகியவை முறையே என்+கள், ஞான்+கள் என்பனவாகும். நம்மள் என்பதில் இரு பன்மை விகுதிகள் அமைகின்றன. கன்னடதில் காணப்படும் நீம்[1] என்ற வடிவததோடு, கள் சேர்ந்து நிங்ஙள் அமைகின்றது; இயாள் என்பதும, அங்ஙு என்பதும் முன்னிலையைக் குறிக்கும் என்பன சில முக்கிய கருத்துக்கள். அ, இ, உ, எ ஆகிய நான்கையும சுட்டெழுதகியல் என்ற தலைப்பில் ஆராய்கின்ருர். உகரம் தமிழில் அரிதாக வழங்க, மலையாளத்தில் மறைந்துவிட்டதன் காரணமாக அணமைக்கும், சேய்மைக்கும் நடுவிலுள்ளதைப் பற்றிப் பேசும் தேவையிலலை என்பதனைக குறிப்பிடுகின்ருர். ஏ, யா, எ ஆகியவை வினு

1 தமிழில் சிவகசிந்தாமணியில் உள்ளது.

வடிவங்கள். எந்து என்பது தமிழில் என்னது என்பதைப் போன்ற வடிவம்; அது ஆண் பெண் பெயர்களை விசேடிக்கும் (எநது மனுஷ்யன்). சுட்டெழுத்துக்களினின்று 'இன்' என்ற அலிப்பால் வடிவமும், ஆர் என்ற ஆண் பெண் பொது வடிவமும் தோன்றியுள்ளன சில, பல, வல்ல (ஏதோ), எல்லா, ஒரு, மிக, மற்ற ஆகியவையும் குறிப்பிடப் படுகின்றன. மலையாளத்தில் எண் விகுதிகள் நான்கு; அர், மார், உயர்திணைக்கும், அ, கள் அஃறிணைகுக்கும் உரியன. மார் என்பது ஆர் என்பதன் திரிபே. அலிப்பன்மைகு அகரமும் விகுதியாகும். (பல, சில, அவர், செய்தன) என்பவை குறிப்பிடப்படுகின்றன.

வேற்றுமை:

கேரளபாணினிய ஆசிரியர் வேற்றுமைகளுகு வடமொழியி னின்று வேறுபட்டவகையில் தனிப்பிரிவுகள் அமைக்கின்றார். உருபு ஒன்றும் இல்லாத நிர்தேசிகா வேற்றுமை முதலாவது; அது கருத தாப் பொருளுடையது. தசரதன் என்ற அரசன், சிங்கம் ஒரு மிருக மாகும் என்பவையும் அதில் அடங்கும். செயப்படுபொருளை குறிக் கும் பிரதிகரர்சிகா இரண்டாவது; அதன் உருபு எ என்பது (ராமனெ = ராமனை). சாட்சி என்ற காரகப் பொருளுடைய சம்யோஜிகா வேற் றுமை மூன்றாவது. ஓடு என்பது அதன் உருபு (சிவன் சகதியோடு சேருன்னு). சுவாமி என்ற காரகப் பொருளுடைய உத்தேசிகா வேற் றுமை நான்காவது; கு அல்லது உ அதன் உருபு (அவள்கு புத்ரன் உண்டாயி, அவனு புதரன் உண்டாயி) ஏது என்ற காரகப் பொருளை உடைய பிரயோஜிகா வேற்றுமை ஐந்தாவது; ஆல் அதன் உருபு. பாகசியத்தால் சாதிச்சு என்பது எடுத்துக்காட்டு. உடைமைப் பொரு ளைக் குறிக்கும் சம்பந்திகா வேற்றுமை ஆறாவது; உடெ என்பது அதன் உருபு. ஜானகியுடெ புஸ்தகம் என்பது எடுத்துகாட்டு அதி கரணம் (இடம்) என்ற பொருளை உடைய ஆதாரிகா வேற்றுமை ஏழா வது; இல், கல் ஆகியன அதன் உருபுகள். மெத்தயில் கிடகுன்னு, படிக்கல் நில்க்குன்னு என்பன எடுத்துக்காட்டுகள். முன்னிலைப் படுத்தும் பொருளை குறிக்கும ஸம்போதன என்பது எட்டாவது; அதனைக் குறிகப் பெயரோடு ஏ சோகப்படவேண்டும். உயிரிறுதிப் பெயரெனின் இறுதி நீளும்; தேவியே, தேவீ ஆகியன எடுத்துகாட்டு கள். மேற்குறிப்பிட்ட வேற்றுமைகளில் சமஸ்கிருதத்தில் உள்ள பொருட்களில் ஏதேனும் ஒரு பகுதியே உளது. மெய்யிறுதிப் பெயர்கள் வேற்றுமையோடு சேரும்போது இன் சாரியை சேரும் (கண்ணினெ = கண்ணினை). அச்சாரியை ஆறும், நான்காம் வேற்றுமைகளுக்கு ஒரு தலையாகவும், ஏனையவற்றிற்கு வரதும் வராதும் அமையும (ராஜாவி னோடு=ராஜாவோடு). இல் என்ற ஏழாம் வேற்றுமை உருபிற்கு இன்

சாரியை வேணடாம். (கண்ணில்) கல் உருபிற்கு இன் தோன்று தலோ, இரட்டலோ தேவை (குருவின்கல் = குருவிடம், படிக்கல்). நகர இறுதிப் பெயர்களுக்கும், இன் சாரியை சேர்ந்த பெயர்களுக்கும் உகரமே நான்காம வேற்றுமை உருபு. (ராமனு, மரத்தினு) அஃறிணைப் பொருட்களுககு இரண்டாம் வேற்றுமை உருபைப் பயன்படுத்தாமலே பெரும்பான்மையிடங்களில் செயப்படுபொருள் தோன்றும். (வெள்ளம் குடிக்குன்னு) எழுவாயும், செயப்படுபொருளும் அஃறிணைப் பொருளாயின் உருபு சேர்த்தலே நன்று. (கோடாலி மரததை முறிகுமு) திராவிட மொழிகளில் உருபு தனித்து நின்றும், கதியாகச் சேர்ந்தும், இரண்டு முறையில் வேற்றுமை அமைகின்றது. இரண்டினையும் வேறுகக் காட்டுதற்கு அவறறைத் தனிவேற்றுமை என்றும், கலப்பு வேற்றுமை என்றும் பெயரிடலாம். கதி வேற்றுமைக்கு சில எடுததுக் காட்டுகள். கற்பூரமவரெ – முதல்வேற்றுமை, உப்புதொட்டு – இரண்டாம் வேற்றுமை புகரனேடுகூட – மூன்றும் வேற்றுமை, மோட்சத திறகு வேணடி – நான்காம் வேற்றுமை, வ்ருட்சததில் நின்னு – ஏழாம் வேறறுமை. இதனைத்தவிரத் தொகை வேற்றுமைகளும் உள; எடுத்துககாட்டு. அது மூலம், அது நிமித்தம முதலியன.

வேற்றுமைப்போலி (விபக்தி ஆபாசம்):

1. கிலம். எல்லா வேற்றுமைகளோடும் சேராத உருபுகள். எ-டு: கல் என்ற ஏழாம வேற்றுமை உருபு பன்மைப் பெயர்களோடு சேர்வதில்லை. 2. தொகை. உருபு தொககு அங்கம் மாததிரம நிற்கும் வேற்றுமைகள். எ-டு: காற்றத்து. இங்கு இடம் காலம ஆகிய ஏழாம் வேற்றுமைப்பொருள் இல்லை. குன்னின் மகள் என்பது ஆறும் வேற்றுமை உருபு தொக்கு நிற்பது. 3. இரட்டிப்பு. ஒரு வேற்றுமை உருபின்மேல் மற்றொரு உருபு சோந்து வருதல். வெள்ளததிலோட்டு என்பதில் இல் என்ற ஏழாம் வேற்றுமை உருபின்மேல் ஒட்டு என்ற மூன்றும் வேற்றுமை உருபு வருகின்றது. இவ்வியலில் இருட்டத்து, நிலாவத்து, காற்றத்து, மழையத்து முதலியவைகள் குறிப்பிடப்படுகின்றன.

காரகங்கள்:

பெயருக்கு வினையோடுள்ள தொடர்பு எனவும், எவையெல்லாம் சேர்ந்து ஒரு வினையைத் தோன்றச் செய்கின்றனவோ அவையெல்லாம அவ்வினையின் காரணம் எனவும் வீளகுகப்படுகின்றது. கருத்தா, செயப்படுபொருள், சாட்சி (சிவன் சக்தியோடு சேர்தல), சுவாமி (கறிககு உப்புச் சேர்த்தல்), கரணம் (நாவினுல் நக்குதல்), ஏது

(தூதன் சொல்லால் போதல்), ஆதாரம் (எள்ளில் எண்ணெய் இருத்தல்) ஆகிய காரகங்கள் விளக்கப்படுகின்றன. இரு செயப்படுபொருள் வழக்கு (அம்பு தூதனை எய்தான்) இரண்டு எழுவாய் முதலிய காரகச் செய்திகளும் விளக்கப்படுகின்றன.

தத்திதங்கள்:

பெயர்களினின்றும், பேதகங்களினின்றும் தோன்றும் சொற்கள் ''தத்திதம்'' எனவும், வினையடிச் சொற்களினின்று தோன்றுவது ''கிருதது'' எனவும் பெயர் பெறும். தசரதன் என்ற பெயரினின்று தாசரதி என்பதும், ம்ருது என்ற பேதகத்திலிருந்து மிருதுத்துவம் என்பதும் தருசிப்பது என்ற பெயரினின்று தருஷ்டி என்பதும தோன்றுதல் சில எடுத்துக்காட்டுகள். புதும, கள்ளன், வெளுப்பு முதலியவை சில தன்மாத்திர தத்துவங்கள். அதனை உடையவன் முதலிய பொருள்களில் தத்வதத்தித்திதம தோன்றும். கூனன் தெகன் முதலியவை பொதுப்பால் தத்தித வடிவங்கள். நூரும் (நூருவது), அங்கு (அங்கு), அப்போர் (அப்பொழுது), அன்னு (அன்று), அத்ர (அங்ஙனம) முதலியவைகளும் எண், இடம், காலம், அளவு, முறை ஆகிய பொருள்களில் வரும் தத்திதங்களே.

கால இடைநிலைகள்:

இறந்தகாலத்தைக் குறிக்கும் 6 உருபுகளும் அவை வரும் வினையடிகளும் குறிப்பிடப்படுகின்றன. 1. இ-ற, ர, ள முதலிய மெய்யிறுதிகள் (மாறி, இளகி). 2. து - 1) உயிரில் முடியும் அடிச்சொற்கள் (தொழுது) 2) சில்லில் முடியும் வினையடிச்சொற்கள் (கண்டு). 3) குறிலொற்று அடிச்சொல் (புக்கு = புக் + து). 3 த்து - காரித அடிச்சொல்லோடு வரும் (கொடுத்து). 4. ந்து-அ காரித அடிச்சொல்லோடு வரும் (சேர்ந்து). 5. ச்சு - அண்ண உயிர் இறுதியடிச்சொல்லோடு வரும் (அடிச்சு). 6 ஞ்ஞு - அண்ண உயிர் இறுதியடிச்சொல்லோடு வரும் (கரஞ்ஞு). சில வினைகளோடு இகரமும் உகரமும் வரும் (சொல்= சொன்னு, சொல்லி). இவ்விதிகளில் அடங்காதவை ஆயி, சதது முதலியன. பகுதிகளும் கால இடைநிலைகளும் இடையில் க்க் என்பதும் (கேள்க்குன்னு). ப்ப் என்பதும் (நடப்பூ) வரும். கக என்பது எதிர்மறையிலும் வரும (நடக்காஞ்ஞு). உ, உம ஆகியவை (காணும்) எதிர்காலததைக் குறிக்கும். மலையாளத்தில் இலக்கிய மொழியில் மாத்திரமே ப்ப், வ் ஆகியன எதிர்கால இடைநிலைகள் (வருவேன், நடப்பேன்). எதிர்காலம் இருவகைப்படும்: எல்லாக் காலத்திற்கும் பொதுவான செய்தியைக் குறிப்பிடும காலம் சில எதிர்காலம்; ஊ என்பது அதன்

குறி; ஸர்ப்பம் வளஞ்ஞே நடச்கு (நடக்கும்); அல்லாத எதிர்காலம் அவதாரிக எதிர்காலம் என அழைககப்படுகிறது.

வினைப்பாகுபாடு:

வினைச்சொல் முற்றுவினை (வினைமுற்று, அங்கிக்கிரியை) எனவும், பற்றுவினை (பெயரெச்சம், வினையெச்சம், அங்கக்கிரியா) எனவும் இருவகைப்படும். மலையாளம் இடம் காட்டும் விகுதிகளின் துணை இல்லாமலே வினைமுற்றுகளை ஆகக்கிக்கொளகின்றது. வினையெச்ச வடிவத்தை அழுததி ஒலித்தால் இறந்தகால வினைமுற்று. அல்லாது ஒலித்தால் வினையெச்சம்; முற்றுகரமாக ஒலித்தால் வினைமுற்று; குற்றுகரமாக ஒலித்தால் வினையெச்சம். வினைமுற்றுகளின் இறுதி உகரம் நீளவும் செய்யும் (வநநூ). வினைச்சொற்களின் பொருள் தன்னளவில் நில்லாது பொருள் விரிதலும் உண்டு. மலையாளம் பால் விகுதிகளை நிரந்தரமாக விலகிவிடவில்லை. கவிஞர்கள் இன்றும் கையாள்கின்றனர். ஆன், ஆள், ஆர், து, ஆய், ஈர், ஏன், ஓம் முதலியவைகள் சில சான்றுகள். இவற்றில் முறைகேடுகளும உண்டாயின; நீ செய்தான், நான் கேட்டடிஞன், நாம் வாழ்ந்தான் போன்றவை கவிதைகளிலும வந்திருகின்றன. இவை மலையாளதில் பேச்சு மொழியில் இன்று காணப்படாமை குறிப்பிடததக்கது. பிரகாரம் என்பது ஆங்கிலதில mood எனக் கூறபபடும வினைமுறைகளின் வேறுபாடே; அவை நான்குவகைப்படும். 1. நியோஜகம (வியங்கோள், அட்டே, போகட்டே = போகட்டும்). 2. விதாயகம் (உடன்பாடு, ஆம இன் – போவின் = போமின், வராம் = வரலாம). 3. அனுஞ்ஞாயகம் (கட்டளை = அணம், வரணம் = வரவேண்டுய). 4. நிர்தேசிகம். அட்டே என்பது ஒட்டே என்பதினின்றும் அணம் என்பது வேணம் என்பதினின்றும், ஆம் என்பது ஆகும் என்பதினின்றும் மருவியன. இச்சொற்களைச் சேர்க்கும் சொற்களினின்றும பிரிக்காது விருப்பம், கட்டாயம் முதலிய பொருள் வேறுபாடுகள் ஆராயப்படுகின்றன. ஆலும (வங்நாலும் = வருக), ஊ (வாங்ஙூ = வாங்குக), ஆவு (சேர்த்துதாவூ = சேர்ப்பேஞக) முதலியவையும் இடுக, வரிக போன்ற வியங்கோள் முறைகளே. ஏனைய காரகங்கள் இருப்பினும் செய்வினை வழககு செயபபாட்டுவினை வழக்கு ஆகியவையே முககிய மாக வழங்கப்படுகின்றன. அதனேடு தொழில் காரகத்திற்கு முதன்மையளிககும் வழக்கும ஏற்றுகொள்ளபபடுகின்றது (காயம் மணக்குன்னு). செயபபாட்டுவழககு மொழி மரபிற்குப் பொருந்துவது அன்று எனினும் புதுமை, ஐயுறுதீர்தல் முதலியவற்றிற்காக மாததிரம் பயன்படுததபபடுகிறது. அதன் உருபு தமிழிலுள்ள படு என்பதன் திரிபாகிய பெடு எனபதாகும் (காணப்பெடுன்னு).

பிறவினை:

காரிதத் தன்வினை அடிச்சொல்லோடு முதலில் ப்பி சேர்க்க வேண்டும். எல்லா அடிச்சொற்களுக்கும் இ விகுதி சேர்க்கவேண்டும் (களிப்பிக்குன்னு). அஃறிணையின் வினையென்றால் அடிச்சொல்லைக் காரிதமாகினால் போதும் (பொடிகக்க). உயர்திணையின் வினையென்றால் இகரம சேர்ககவேண்டும் (பணியிகக்க). அஃறிணை வினைகளில் மெய்யிறுதி அடிச்சொல்லிற்கு வல்லினம இரட்டல் போதும் (ஆட்டுன்னு, ஆடிகக்குன்னு) அடிச்சொல மெய் மெலலெழுதெனின் வல்லெழுத்தாகவேண்டும் (முகக்குன்னு). கட்டாயத்தால வினை செய்யப்படும்போது உயர்திணையாயினும் அஃறிணை ஒப்பே (மடங்குன்னு, மடக்குன்னு). காட்டிப்பிக்குன்னு முதலியவற்றைப்போன்று பொருட் குறிப்பில்லாது இரண்டு மூன்று பிறவினை விகுதிகளை வழங்குவது தேவையற்றதும் அழகற்றதுமாகும். ர், ல், ழ், ள் இதழொலி அகரம் ஆகியவற்றில இறும் அடிச்சொற்களோடு த்து சேர்ககப்பட வேண்டும் (துவர்த்துன்னு, அஃற்றுன்னு, நீட்டுன்னு, வீழ்த்துன்னு, நடத்துன்னு) குறிலடுத்த மெயயிறுதியெனின் உகரயிறுதியாகி இகரம் சேர்ககவேண்டும (விடுவிகக்குன்னு). பிறவினை, ஈரேவல் முதலிய ஆராய்ச்சியில் உயர்திணைவினை, அஃறிணைவினை என வினை இரண்டாகப் பிரிக்கப்படுகிறது. பிறவினையில் கருமயோகம் என்ற பிரிவும் எய்துகின்றது. இதனோடு செயபபடுபொருள் குன்றியவினை, குன்றுவினையும் பிரிககப்படுகின்றது. காரித அகாரித வினைப்பிரிவும் இதனோடு சோத்து நினைகக்கப்படுகின்றது.

வினைகளின் பெயரடிச்சொல்:

பெயர்களினின்று, அப்பெயர்ப் பொருளைச செய்தல், அதுபோல் ஆதல முதலீய பொருளைக்கொண்டு வினைகள் தோன்றுகின்றன. எடுத்துககாட்டாக, கல்லிததல் (கல்), முறுமுறுத்தல (முறுமுறு) என்ற ஒலிக்குறிப்பு. வன்பிததல் (வன்பு), ஒன்றித்தல் (ஒன்னுதல), குழம்புதல் (குழம்பு), கெடும்புதல் (கெடும்பு), தடித்தல் (தடி), பலததல் (பலம்), சுமய்ததல் (சும=இருமல்), நரைததல் (நர=நரை), மதுரிததல் (மதுரம்), தொலிதல் (தொலி=தோல்), கரிதல் (கரி), புகைதல் (புக) ஆகியவை குறிப்பிடப்படுகின்றன. பெயர்களோடு பெடு என்ற துணை வினை சேர்ந்து வினைகள அமைகின்றன (சுகபபெடுன்னு). வட மொழிச் சொற்களும இம்முறையில் மலையாள வினைகள் ஆக்கப்படுகின்றன (சிந்திக்குன்னு).

சிதைந்த அடிச்சொற்கள்:

காலம், பிரகாரம் முதலியவற்றின் வகைகள் எல்லாவற்றிலும் வழங்காது சிதைந்து காணப்படும் சொற்கள் கிலதாதுகள் எனக

குறிப்பிடப்படுகின்றன. அவை உள் (உண்டு), என் (என்னு), இல் (இல்லாதெ). அல் (அல்லாதெ), அரு (அருது), வேண் (வேண்டும்), தக (தக்க), மிக (மிக்க) போல் (போலும்), புக் (புக்கு), உற் (உற்ற), கன் முதலியவைகள். இவற்றுள் தமிழில் என், வேண், தக, மிக், போல், புக, உறு என்பன கால இடைநிலையை ஏற்கும் வினைப்பகுதி கள். உள், இல், அல், அரு, வல் ஆகியன குறிப்பு வினைமுற்றின் அடிச்சொல்லாக அமையும பண்புச் சொற்கள்.

துணைவினை:

முன்வினையெச்சம் (பறஞ்ஞுபோயி), பின்வினையெச்சம (பற யான் போயி), நடுவினையெசசம (பறகவேணம்) ஆகியவற்றோடு துணை வினைகள் சேர்க்கப்படுகின்றன. கொள் (போந்துகொள்க), இடு (கேட்டிட்டு). வெய் (நிறுத்தி வெகுன்னு), விடு (தன்னுவிட்டு), கள (சாடிக்களஞ்ஞு), கொடு (பிடிச்சுகொடுத்து), அருள் (தீர்த்தருள்), இரு (கொன்னிருந்து) போ (தோறறுபோய்), வரு (நடததிவருந்து), கூடு (முடங்ஙிகக்கூடு). கழி (முழுத்து கழிஞ்ஞு), தீர் (பறஞ்ஞுதீர்ந்து), சமை (வந்து சமஞ்ஞு) முதலியவை துணைவினைகளாக அமைகின்றன. இவறறின் பொருள் மாறுதல்களும குறிப்பிடப்படுகின்றன. பொருள் வேறுபடுத்தும் இணைவழக்கு (மூலபபொருளின் விரிவு, தற்செய்தி, பொறுப்பு, உடன்பாடு முதலியன), கால இணைவழககு (வந்நிரிக குன்னு என்பது வந்து சிறிது நேரமே ஆயிற்று எனப பொருள் படு தல்), முழுநிலை இணைவழககு (உண்டாகும் என்பது எடுததுககாட்டு) என மூன்றுவகையாகப் பகுக்கப்பட்டு விளக்கப்படுகின்றது.

எதிர்மறை:

எதிமறையாகுதற்குச் சேர்ககப்படும் இணைப்புச் சொற்களா வன: இல்ல (வநில்ல = வரவில்லை), வேண்ட (வரேண்ட = வரவேண் டாம்), கூடா (வநுகூடா = வரக்கூடாது), அருது (செல்லருது = செல்லாதே), வய்யா (செய்யவய்ய = செய்யமுடியாது), ஒல (செய் யோல). செய்யாயும் (முக்காலத்தையும குறிக்கும் எதிர்காலம), செய் யாஞ்ஞு (இறந்தகால எதிர்மறை), செய்யாயின்னு (நிகழ்கால எதிர் மறை) ஆகியவற்றில் ஆ என்னும் எதிர்மறையைக் குறிககும் இடை நிலை காணப்படுகின்றது.

வினைச் சமுச்சயம்:

வினைச் சமுச்சயதில் வினைமுற்றுக்களை மாத்திரம் தொகுதிப் படுத்தும வடமொழி போலாது மலையாளம் செய்யுக என்ற வாய்ப்பாட் டுச் சொல், (வசிகுகெயும, கெட்டுகெயும், கொல்லுகெயும் செய்து),

நடுவினையெச்சம் (களிகையும்), துணைவினை உள்ள இறந்தகால வினை யெச்சம் (கண்டிட்டும், கேட்டிட்டும்), செய்து என்னும் வாய்ப்பாட்டுச் சொல் (ஸ்புடீகரிச்சும, மறச்சும் இல்ல) ஆகியவற்றோடு உம் என்ற எண்ணிடைச் சொல்லைச் சேர்த்து வினைச்சொற்களை எண்ணுகின்றது.

அங்கக்கிரியை:

நிகழ்ந்தது என்பதை மாத்திரம் நினைவுறுத்தும் சாத்தியக் கிரியை, நிகழ்ச்சியினின்று ''குதிரையின் ஓட்டம்'' என்பது போன்று கிடைக்கின்ற சித்தக்கிரியை எனக் கிரியை இரண்டுவகைப்படும். சாத்தியக்கிரியையில் விசேடியமாகவும், முதன்மையாகவும் நிற்பது அங்கி (கொடுத்தது=கொடுத்தான்) விஷேடணமாகவும் முதன்மை யின்றியும நிற்பது அங்கம். இவை பெயரெச்ச வினையெச்சங்கள். வினைமுற்றோடு அ என்ற விகுதியைச் சேர்க்கும்போது பெயரெச்சம் உண்டாகின்றது (செய்து+அ, நல்கி+அ, செய்யுந்து+அ). எதிர் காலப் பெயரெச்சத்திற்கு வருங்கால வினைமுற்றே வழங்குகின்றது (வருங்காலம்). ஒரு என்பதும கவிதையில் பெயரெச்ச விகுதியாக வரும் (வந்தேயரு=வந்த). பெயரெச்சம எல்லாக காரகங்களையும் கொண்டு முடியும். வியங்கோளிலிருந்து மாத்திரம் பெயரெசசம பிறப்ப தில்லை பெயரெச்சத்தோடு பால்விகுதியைச் சேர்த்தால் பெயரெச்சப் பெயர் தோன்றும் (அறிஞருவன்). முன்வினையெச்சம் (செய்து), பின் வினையெச்சம் (செய்யான்=செயற்கு), தன்வினையெச்சம் (செய்ய, செய் யவே), நடுவினையெச்சம் (செய்ய, செய்கையால, செய்யுக), கட்டளை வினையெச்சம் (செய்யில், செய்கில், செய்யுகில், செய்தால்) என வினை யெச்சம ஐந்துவகையாகப் பிரிக்கப்படுகின்றது. நடுவினையெச்சத்துள் வரும செய்க, செய்யுக ஆகியவை பெயராகவும், வினைமுற்றாகவும் வரும். இடு என்ற துணைவினை (தாமஸிச்சிட்டுப படிச்சு என்பதில் தாமஸித்தல் என்ற) வினை முககியததுவத்தையும், (குளிசசிட்டு உண்டு) ஆயிட்டு என்ற துணைவினை (படிசகாலையிட்டு) கால வேறுபாட்டையும் குறிக்கும். வினையெச்சத்திற்கும, அதுகொண்டு முடியும் வினை முற்றிற்கும் இடையிலுள்ள நுண்மையான பொருள் வேறுபாடுகளாக ஆசை, ஆற்றல், திறமை, மனநிறைவு முதலியவை குறிககப்படுகின் றன. நடுவினையெச்சத்தின் வழக்கு மலையானத்தில் அருகிப்போனதன் காரணங்களும் குறிககப்படுகின்றன. 'ஆதே' என்ற எதிர்மறை வினை யெச்சம் முன்வினையெச்சமாகவும், பின்வினையெச்சமாகவும், பாட்சிக வினையெசசமாகவும் வரும். கட்டளை வினையெச்சத்தோடு உம் என்ப தைச் சேர்ததால் அங்கீகாரப் பொருள் அமையும் (நிரூபிச்சாலும்).

தொழிற்பெயர்கள்:

விஜையினின்று தோன்றிக் காரகங்களில் ஒன்றைப் பொருட் பயனுகக் கொண்டது தொழிற்பெயர். இவற்றின் விகுதிகளாக அல் (செய்யல்), தல் (கெடுதல்), ப்பு (கிடப்பு), வு (அறிவு), ச (வீழ்ச்ச), தி (அறுதி), த்து (நெய்த்து), த்தம் (பிடித்தம்), அ (கொட), இ (தோலி = தோல்வி), அம் (நீளம்), ம (கூர்ம), வி (மறவி), இல் (வெயில்), படி (நடபடி), தல (நடுதல), மானம் (வருமானம் = வரவு), டு (சுமடு), ம்பு (கெடும்பு), வாரம் (தங்ஙாரம்). இவற்றுள் அகரம் ஐகாரமாகவும், சகரம் சைகாரமாகவும், மகரம் மைகாரமாகவும் தமிழில் கூறப்படும். ப்பு பு என்பதிலும், தது து என்பதிலும், ததம் அம என்ப திலும், ம்பு பு என்பதிலும் அடகுகப்படும்.

காரகப் பெயர்கள்:

விஜையின் அடிச்சொற்களோடு அன், இ முதலிய விகுதிகள் சேர்ந்து கருததா, முதற்காரணம், இடம் முதலிய பொருள்களில் கார கப் பெயர்கள் அமைகின்றன (சதியன் = சதிபபவன், அரிப்பன் = அரிக கப பயன்படுவது, கால தாங்கி). இவை பெரும்பாலும தொகைச் சொற்களில் காணபபடுகின்றன (காற்றுடி = காற்றில் ஆடுகின்ற பொருள்).

பேதகச்சொற்கள்:

எங்கிலேயில் வரினும் விசேடணச் சொற்கள் பேதகச் சொற்கள் என அழைகுகப்படுகின்றன. அவை தொகை வகையிலோ (செறு பயறு), சுதநதிர வடிவிலோ (செறிய மரம்) வரும். பெயரையோ, விஜையையோ, குணதையோ விசேடிதது வரும (ஒட்டுநேரம், ஒட்டு நன்னு, ஒட்டு பலிச்ச காரியம்). எண்ணுப் பேதகங்களாக ஒரு, இரு, மூ, நால், ஐ, ஆறு முதலியவை குறிகுகப்படுகின்றன. திராவிடத்தி லுள்ள எண்ணுப் பெயர்கள் வடமொழியினின்று கடன் வாங்கினவா என்பது குறிதது கருத்து வேறுபாட்டோடு ஆராய்கின்ருர் ஆசிரியர். காட்டிலெ ஆன முதலிய வேற்றுமைப்போலிகளும் பேதகங்களாக வரும்.

இடைச்சொற்கள்:

இடைச்சொல் நிவாதம் (ஏ, ஓ), அவ்வியம் (குறிச்சு, என்ற, ஆகும்) என இருவகைப்படும். இடைச்சொற்களும் அவற்றின் பொருள் களும் அடுத்து விளகுகப்படுகின்றன (316). இடைசசொற்களின் பொருள்வகைகளும், வழக்கு மாறுபாடுகளும் இலக்கணததில் கூற

வேண்டிய செய்திகளல்ல எனக் கூறிவிட்டு, உம், ஒ ஆகிய எண்ணிடைச் சொற்களைப் பற்றிக் கூறுகின்றார்.

சொற்றொடர்:

தொடர்மொழி அதிகாரத்தில் எழுவாய், பயனிலை என்ற இரண்டு முக்கிய உறுப்புகளையும் அவற்றின் விசேடணங்களையும் விவரிக்கின்றார். சொல் வரிசையில் முதன்மை பற்றிப் பயனிலை முன்வரலாம். விசேடணம் விஷேடியத்தின் முன்னர்தான் நிற்கும. சொல் உருபுகளும் உருபுகளைப்போலப பெயர்களின் பின்னரே நிறகும்.

பண்புததொகையின் விரிநிலையில் ''வயசன் ஆய பிராம்மணன்'' என்பதிலுள்ளது போன்று, பால் எண்ணின் பொருததம் காணப்படுகின்றது. ஆனால் தக்கவையான காரணங்கள் என வேண்டா, தக்க தாய காரணங்கள் என்பதே போதும. பெயர் குழுவைக குறித்தால் பன்மை உருபின்றியே பன்மையைக காட்டும் (படஜனம). அஃறிணைப் பெயர்கள் செய்யுளில் உயர்திணைப் பாலைப் பெறுவதுண்டு (கோகிலங்கள் கூவிடினர்). ஒரு பெயரை வேறொரு பெயரால் விஷேடிக்கும் பொழுது உருபு சேர்ககப்படுகின்றது. இரண்டிலும் சோக்கலாம். (ஜனங்களுடெ எல்லாருடெ சமமதம்).

தொகைகள்:

மலையாளத்தில் வினையெச்சம் வினையோடும் (கொண்டாடும்), பெயர்வினையோடும் (நிலைநில்க்குக), பெயரெச்சம் பெயரோடும் (பெற்றம்ம), பெயர் பெயரெச்சத்தோடும் (தேன் ஒலும்), பெயர் பெயரோடும் (பொற்குடம்), பண்பு பெயரோடும் (வெண்சாமரம்) சேர்ந்து தொகைகள் உண்டாகின்றன. வேற்றுமைத் தொகை நிலைமொழியிலும், அன்மொழிததொகை அன்மொழியிலும், உம்மைத்தொகை எல்லா மொழியிலும் பொருட்சிறப்பு உடையன. வேற்றுமைத் தொகையில் பேதமாதல், கொன்னததெங்கு ஆகியவை முதல் வேற்றுமைத்தொகையாகக் குறிப்பிடப்படுகின்றன. நெடுங்கண்ணி, நான்முகன, முக்கண்ணன் முதலியவை அன்மொழித தொகையாகக் காட்டப்படுவது ஒரு வேறுபாடு. உவமத தொகையின் புறத்துப் பிறக்கும் அன்மொழித் தொகையை உவமை உருபு உள்ளது (கஞ்ச நேர்மிழி), உவமை உருபு வராதது (மதிமுகி), உவமானம் தொக்கு வருவது (பேடக்கண்ணி) என மூன்றுகப் பிரிக்கிறார். அச்சனம்மமார், அஞ்சாறு முதலியவை உம்மைத் தொகைக்கு எடுத்துககாட்டாகக் காட்டப்படுகின்றன.

சொற்களின் வரலாறு:

மலையாளத்திலுள்ள சொற்களைச் சத்துவம், தாது, தர்மி என மூன்றுகப் பிரிக்சின்றார். இவற்றிலிருந்து முறையே பெயர், வினை,

பேதகம் முதலிய சொற்கள் பிறக்கின்றன. பண்டைக் காலத்தில் தாதுககள் ஒரு மாதிரை உள்ளனவாகவே அமைந்திருந்தன. அவற்றை முழுச் சொல்லாக்கச் சில மாற்றங்கள் செய்யப்படுகின்றன. சமஸ்கிருத தாதுககள் இகரம் சேர்த்து (வத்வதி) ஆகுகப்படுகின்றது. தாதுக்களினின்று தோன்றுகின்ற வினைகள், பெயர்கள் ஆகியவை இறுதியில் தரப்படுகின்றன. மலையாளத்திலுள்ள சொற்களைத் திராவிடச் சொற்கள் என்றும், பிறமொழிச் சொற்கள் (சமஸ்கிருதம், ஆங்கிலம்) என்றும் இரண்டாகப் பிரிக்கலாம. திராவிடச் சொற்களைச் சொந்தம் (மலையாளத்தில் மாத்திரம் காணப்படுவது – பனி, முண்டு முதலியவை), சாதாரணம் (எல்லா திராவீட மொழிக்கும் பொதுவானவை – மழை முதலியவை), தேசீயம் (மலையாள வட்டார வழக்குகள் – தாப்பா (அப்பா) முதலியவை) என மூன்றுகப் பகுக்கின்றார். பிறமொழிச் சொற்கள் தற்பவம் (பல்யங்கம்=பல்லக்கு, பட்சம்=பக்கம் முதலியன), தற்சமம (சந்தோஷம், விரகம், விசாரம் முதலியன) என இரு வகைப்படும.

அடிச்சொற்கள்:

மொததம 556 அடிச்சொற்கள் தரப்படுகின்றன. அண்ண அகரத்தில் அகாரிதம் 50; காரிதம் 41; இதழ்அகரத்தில் காரிதம் 13; அண்ண ஆகாரததில் அகாரிதம் 6; காரிதம் 2; இதழ்ஆகாரததில் காரிதம் 1; இகர இறுதியில் அகாரிதம் 59; காரிதம் 27; ஈகார இறுதியில் அகாரிதம் 1; உகர இறுதியில் அகாரிதம் 4; காரிதம் 21;குற்றியலுகரம் 13; ஊகார இறுதியில் காரிதம் 3; ஏகார இறுதியில் அகாரிதம் 3; காரிதம் 1; ஐகாரித இறுதியில் காரிதம் 2; ஒகாரித இறுதியில் காரிதம் 1; ஓகார இறுதியில் அகாரிதம் 2; ஆகிய உயிர் இறுதி அடிச்சொற்கள் 237 தரப்படுகின்றன. மெய்யிறுதி அடிச்சொற்களில் க்–25, ங்–62, ச்–5, ட்–33, ண்–6, த்–19, ன், ந்–7, ப்–12, ம்–4, ய்–5, ர்–அகாரிதம் 33, காரிதம் 11. ல–அகாரிதம் 11, காரிதம் 5, வ–8, ழ்–9, ள் அகாரிதம் 24, காரிதம் 3, ற–27, ற்–4, ஸ்–2 என ஆக 329 காட்டப்படுகின்றன. அடைதல், அணைதல், அரைதல் முதலியவை அட, அண, அர என மலையாளத்தில் அமைகின்றன. ஆராய்தல், காய்தல், சாய்தல் முதலியவை யகரம் இல்லாது ஆரா, கா, சா எனத் தரப்படுகின்றன. தூர் என்ற தமிழ் வினையடி தூ எனத் தரப்படுகிறது. ஊற்று என்பது ஊ எனத் தரப்படுகிறது. தேய் என்பது தே எனவும், மேய் என்பது மே எனவும், வேய் என்பது வே எனவும், ஏய் என்பது ஏ எனவும் தரப்படுகின்றன. அழகு, கொஞ்சு, ஆடு, ஏந்து, சிலம்பு, ஊறு முதலிய குற்றியலுகர ஈறுகள் அழுக், கொஞ்ச், ஆட், ஏந்த, சிலம்ப், ஊர் என வல்லீறுகத தரப்படுகின்றன. சுருங்கு,

ஊன்று ஆகியவை சுருங்ங், ஊன்ன் என மெல் இணை இறுதியாகத் தரப்படுகின்றன. கழுவு, தடவு, தழுவு, விரவு முதலியவை கழுக், தடக, தழுக, விரக் எனக் ககர ஈருகத் தரப்படுகின்றன. கம்முதல், தும்முதல் முதலியன கம்ம், தும்ம் என இருமகரஈருகத் தரப்படு கின்றன. கூவு, சீவு முதலியவை கூவ், சீவ் என வகர இறுதியாகத் தரப்படுகின்றன. ஏசு, பூசு, பேசு, வீசு முதலிய தமிழ்ச்சொற்கள் ஏஶ், பூஶ், பேஶ், வீஶ் என ஶகர இறுதியாகத் தரப்படுகின்றன.

இதன் மூலநூலின் முதற்பதிப்பு 1895-ல் வெளியிடப்பட்டது. அதன் பின்னர் திரு. கே. ஆர். வீ. மேனேன் அவர்களால் 1950, 1956, 1964, 1966 ஆகிய ஆண்டுகளில் பதிப்புகள் வெளிவந்தன. கமலாலயப் புத்தக டிப்போவின் ஆதரவில் 1969-ல் ஒரு பதிப்பு வெளியிடப்பட்டது. சாஹிததிய ப்ரவர்த்தக ஸகரண சங்கத்தினரின் முதற்பதிப்பு 1968-ல் வெளியிடப்பட்டது. தொடர்ந்து வந்துள்ள அதன் பதிப்பு களில் டாகடர். கே. இராகவன் பிள்ளை, திரு. கே. எம். டானியல் ஆகி யோரின் முகவுரையும், குறிப்புரையும் கூடிய பதிப்பு 1970-லும், 1974லி லும் வெளிவந்துள்ளன. மூலநூலில் இல்லாத சிறப்புப் பெயரகராதி யும் எடுத்துக்காட்டகராதியும் இமமொழி பெயர்ப்பில் சேர்க்கப்பட்டுள் ளன. தமிழிலக்கண வேறுபாட்டுக குறிப்புகள் ஆங்காங்கே தரப் பட்டுள்ளன.

1971 ஜூன் 3, 4 நாட்களில் பேராசிரியர் டாக்டர். வி. ஐ. சுப்பிர மணியம் அவர்கள் தோற்றுவித்த அகில இநதிய திராவிடமொழியியல் மாநாட்டு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டபோது கேரள பாணினி யததை மொழிபெயர்க்க வேண்டும் என்ற எண்ணம் என் மனதில் தோன்றி அதன் நிணைவாக இந்நூல் உருப்பெற்றது.

இதணைப் பல்கலைகழக வெளியீடாகப் பிரசுரிக்க அனுமதி தந்த பெருமதிப்பிற்குரிய கேரளப் பல்கலைகழகத் துணைவேந்தர் டாக்டர். ஆர். எஸ். கிருஷ்ணன் அவர்களுக்கும், பதிவாளர் உயர்திரு. ஏ. ஸ்ரீதரமேனேன் அவர்களுககும் நன்றி கூறக் கடமைப் பட்டுள்ளேன்.

கேரளப் பல்கலைக்கழக சமஸ்கிருதத் துறைப் பேராசிரியர் டாக்டர். எஸ். வெங்கிடசுப்பிரமணிய ஐயா தமது பல்வேறு அலுவல் களுககிடையில் பல ஐயங்களைப் போககி உதவி செய்தார்கள். மலையாளத் துறையைச் சார்நத பேராசிரியர் டாகடர். கே. இராமச் சந்திரன் நாயர், டாகடர். புதுசேரி இராமச்சந்திரன், டாகடர். பி. வி.

வோலயுதன் பிள்ளை, டாக்டர். வி. எஸ். சர்மா, டாக்டர். டி. பாஸ்கரன், சமஸ்கிருதத் துறையைச் சார்ந்த டாக்டர். என். பரமேஸ்வரன் உண்ணி, திரு. இ. ஈஸ்வரன் நம்பூதிரி, திரு என். வி. பத்மநாபன் உண்ணித்திரி ஆகியோரும் இத்தகைய ஊக்கமளித்தனர். மொழி பெயர்ப்பை மூலநூலோடு ஒப்பிடுவதிலும், அச்சுப் பிரதியை திருத்துவதிலும் டாகடர். கி. நாச்சிமுத்து, திரு. சி அரசமுத்து, திருமதி. எஸ். ஆர். கிருஷ்ணம்பாள், செல்வி. இந்திரா மானுவேல், செல்வி. வாசந்தி, செல்வி. நீலாகுமாரி, திரு ப. பத்மநாபன் தம்பி ஆகியோர் துணை செய்தனர். இவ்வன்பர்களுக்கு என் நன்றி.

திருவனந்தபுரம்
28-2-1975

மா. இளையபெருமாள்

ஏ. ஆர். ராஜராஜவர்மாவின்
வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புகள்

பிறப்பு	— கொல்லம் ஆண்டு 1038 – கும்பமாதம் 9-ம் நாள் (கி. பி. 1863).
பிறந்த இடம்	— சங்கனஞ்சேரி லக்ஷ்மிபுரம் அரண்மனை.
தாய்	— கேரளவர்மா வலிய கோயில் தம்புரானின் அன்னையின் சகோதரி மகளாகிய பரணிததிருநாள் அம்ம தம்புராட்டி.
தந்தை	— ஏற்றுமானூர் பாற்றியால் இல்லத்திலுள்ள ஓணத்துருத்தி வாசுதேவன் நம்பூதிரி.
இரண்டு வயதுக் குழந்தையாக இருந்தபோது அவரும் அவருடைய சிறு குடும்பமும் வாழத்தொடங்கியது	— அரிப்பாடு அரண்மனையில்.
அனந்தபுரம் அரண்மனையில் வாழத்தொடங்கியது	— 1046-ல்.
இளமைப் பெயர் (செல்லப் பெயர்)	— கொச்சபபன்.
ஆரம்ப ஆசிரியர்	— வாரியராசான் (சுனைக்கரை வாரியர்)
முதற் கல்வி	— 12 ஆண்டுகள் – கணக்கும், கூட்டி வாசிபபும, சமஸ்கிருதத்தில் சில தொடக்கப் பாடங்களும்.
மாமனூர்	— கேரள காளிதாசன்.
மாமனூரிடம் கற்ற நூற்கள்	— நைடதம், மானவேதச்சம்பு, சாகுந்தளம், மாலதிமாதவம், குவலயானந்தம், ரஸகங்காதரம், சித்தாந்த கௌமுதி முதலியன.
திருவனந்தபுரம் அரசாங்க உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்தது	— 1056-ல்.

மெற்றிக்குலேஷன் தேர்வில் வெற்றிபெற்றது	— 1058-இல்.
கல்லூரிப் படிப்பு	— 1061-ஆம் ஆண்டு எப். ஏ. தேர்வில் வெற்றிபெற்றார்.
பி. எஸ். ஸி. வகுப்பில் தேறியது	— 1065-ம் ஆண்டு.
சிறப்புப் பாடம்	— விஞ்ஞானம்.
ஸமஸ்கிருதப் பள்ளியில் இன்ஸ் பெக்டராக திரு மூலந்திருநாள் அரசரால் நியமிக்கப்பட்டது	— 1065-ல்.
அதற்குப்பின் பெற்ற பட்டங்-கள்	— சமஸ்கிருத எம். ஏ. (மாகாணத்தில் முதல் நிலையில்).
சமஸ்கிருதப் பள்ளி முதல்வராக நியமிக்கப்பட்டது	— 1069-ல்.
திருவனந்தபுரம் அரசர் கல்லூரி யில் நாட்டுமொழி தூப்பிரண் டாக நியமிக்கப்பட்டது	— 1074-ல்.
சிறப்புப் பெயர்	— கேரள பாணினி.
இயற்றிய நூற்கள்	— பாஷா பூஷணம், ஸாஹித்திய ஸாஹியம், விருத்தமஞ்சரி.
சமஸ்கிருதத் திராவிடமொழி களின் பேராசிரியராக உத்தி யோக உயர்வு பெற்றது	— 1087-ல்.
வகித்த பதவிகள்	— பாடப்புத்தகக் குழுத் தலைவர், விரி வுரையாளர் குழுவின் செயலாளர், அங்கத்தினர், சமஸ்கிருதத்திலும் மலையாளத்திலும் பல்கலைக் கழகத் தேர்வுப் பரிசோதகர்.
திருமணம்	— 1064-ல்.
மனைவியார்	— மாவேலிக்கரை எம். உதயவர்ம ராஜாவின் கனிஷ்ட சகோதரியாகிய ஸ்வாதித்திருநாள் தம்புராட்டி.
மக்கள்	— மாவேலிக்கரை பாகீரதி அம்மத் தம்புராட்டி, எம். ராகவராஜவர்ம ராஜா.
அமரர் ஆகியது	— 1093 - மிதுன மாதம் 4-ம் நாள். 56-ஆவது வயதில்.

சுருக்கப் பெயர் விளக்கம்

அகம் = அகநானூறு
உ. ரா = உத்தர ராமாயணம்
எ–டு = எடுத்துக்காட்டு
எழுத்து = எழுத்ததிகாரம்
ஐங் = ஐங்குறுநூறு
கலி = கலித்தொகை
கிரு. கா = கிருஷ்ணகாத
கிரு. ச = கிருஷ்ணசரிதம்
கு. ஸம் = குமாரசம்பவம்
குறு = குறுந்தொகை
கே. உ = கேரள உல்பத்தி
கே. ரா = கேரளவர்மா ராமாயணம்
சாண = சாணக்கியசூத்திரம்
சிலம்பு = சிலப்பதிகாரம
சி. பு = சிவபுராணம்
சீ. வி = சீதாவிஜயம்
சொல் = சொல்லதிகாரம்
தமய. நா = தமயந்தி நாடகம்
தி. க = திருவிதாங்கூர் கஜெட்
தொ. வி = தொன்னூல் விளக்கம்
தொ = தொல்காப்பியம்
ந. ச = நளசரிதம்
நள. ச = நளசரிதம்
நற் = நற்றிணை
நன் = நன்னூல்
ப. சொ = பழஞ்சொல்
ப. த = பஞ்சதந்திரம்
பரி = பரிபாடல்
பாக = பாகவதம் கிளிப்பாட்டு
பா. நை = பாஷாநைஷதம்
பா. மா = பாஷாமாகம்
பார = பாரமேஸ்வரி வியாக்கியானம்
பா. ஶா = பாஷா சாகுந்தளம்
பிர = பிரயோக விவேகம்
புறம் = புறநானூறு
ம. பா = மகாபாரதம்
ம. வ்யா = மலயாள வ்யாகரணம்
ம. ஶா = மணிப்பிரவாள சாகுந்தளம்
மணி. ஶா = மணிப்பிரவாள சாகுந்தளம்
ரா. ச = ராமசரிதம்
வை. ஶ = வைஷதீயிகம்
ஸாகு = ஸாகுந்தளம்
ஸீ. வி = சீதாவிஜயம்
ஶி. பு = சிவபுராணம்
ஹ. கீ = ஹரிநாம கீர்த்தனம்

உள்ளுறை

		பக்கம்
1	நூலாசிரியரின் முகவுரை	1
2	நூலாசிரியரின் முன்னுரை	4
3	புணர்ச்சியதிகாரம்	100
4	பெயரதிகாரம்	137
5	வினையடிச் சொல்லதிகாரம்	202
6	பேதகச் சொல்லதிகாரம்	309
7	இடைச்சொல்லதிகாரம்	315
8	தொடர்மொழியதிகாரம்	319
9	சொற்களின் தோற்றம்	335
10	எச்சவியல் – அடிச்சொற்கள்	348
11	சிறப்புப் பெயரகரவரிசை	361
12	எடுத்துக்காட்டகராதி	366
13	நூற்பா முதற்குறிப்பகராதி	389
14	திருத்தம்	390

நூலாசிரியரின் முகவுரை

ஒரு மொழியின் இலக்கணத்தை இரு முறையில் அமைக்கலாம். அம்மொழிச் சொற்களின் உருவ அமைப்பு, சொற்றொடர் மரபு முதலிய வற்றைத் தற்கால நடைமுறைக் கேற்பச் சோதனை செய்து நோக்கி அவற்றிற்கெல்லாம் துணைப்பிரிவுகள் தோன்றும் முறையில் விதிகள் அமைத்தல் ஒருமுறை. இது ஊகம் என்று கூறப்படும் தனி யுக்தி யின் அடிப்படையில் எழுவதால் இதனை 'ஊகமுறை' எனலாம். இரண்டாவது முறை இலக்கணம் எழுதவேண்டிய மொழியின் தோற் றம் முதல் இன்றுவரையுள்ள பல காலகட்டங்களில் எழுந்துள்ள வேறுபாடுகளைக் கண்டு அவற்றின் போக்கிற்கொத்த விதிகளை அமைத்தல். இது வரலாற்றை அடிப்படையாகக்கொண்டு தோன்றுவ தால் இதற்கு 'வரலாற்றுமுறை' எனப் பெயரிடலாம். முன்னைய முறையில் இலக்கணம் இயற்றுதல் எளிது. ஆனால் பின்னையதால் தான் பயன் மிகுதி. இலக்கண நூற்களை விஞ்ஞான நூற்களோடு சேர்த்துக கணக்கிட வேண்டுமெனில், அது பின்னைய முறையில் தான் எழுதப்படல் வேண்டும்.

இலக்கணத்தின் சரியான கடமை பெயர்ச் சொற்களின் பால் வேற்றுமைகளிலோ, வினையடிச் சொற்களின் காலம், பொருள் முறை முதலியவற்றிலோ இன்ன வடிவ விகுதி வேண்டும் என்று அறிவுரை கூறுவதன்று. இவற்றிற்கெல்லாம அவ்வம் மொழிகளைப் பேசு வோர்க்கு இலக்கணத்துணை அரிதாகவே தேவைப்படும். பேசத் தொடங்கிய நாள்முதல் ஒலித்து வழங்கிவரும் தாய்மொழியின் வடிவ வேறுபாடுகள் எல்லாவற்றையும் பழகுகத்தாலேயே அவர்கள் கை வசப்படுத்திக் கொள்வர். வாசனை உளதெனின், சிறிது வழக்கறிவு கொண்டே கவிதை எழுதவும் முடியும். ஆனால் இது பிழை, இது சரி என விதித்தல், புதிய கருத்துக்களைத் தேவைக்கேற்பப் படைக்க வழி யுண்டாகுதல், பழைய மரபுகளையும், குடும்பச் சொத்துக்களையும் (பண்டைய இலக்கியம்) பண்டைய மொழிநிலைகளையும் பேணுதல், பிற தாக்குதலால் கெடுதல் ஏற்படாதவாறு காத்தல், தவருன உரிமை யால் எழும் விதி மீறலால் கேடு வராதிருக்க விதியமைத்தல் ஆகிய வற்றையெல்லாம் இலக்கணத்தாலன்றிச் செய்ய முடியாது. அது மட்டுமன்று, இலக்கணமில்லாத மொழி அரசனில்லாத நாடு போன் றது. ஆட்சியிலும தந்திர வேறுபாடு அமைவதைப் போன்று ஊக

முறை இலகுகணம் அரச அதிகாரத்தின் இடத்தையும், வரலாற்று முறை இலக்கணம் பிரமுக அதிகாரத்தின் இடத்தையும் வகிக்கும்.

கேரள பாணினியம் அதன் முதல் வெளியீட்டிலேயே வரலாற்றை அடிப்படையாககி இயற்றப்பட்ட ஒரு மலையாள இலக்கணமாயிருந்தது. எனினும பாணினியம் என்ற பெயரிறகேற்ப ஊக மரபிற்கு ஒரு முதன்மை அதில் கொடுக்கப்பட்டுள்ளது. உண்மையில் இலகுகணப் பேரரசனுகிய பாணினி முனிவரின் முறை பெரும்பான்மை பற்றி (சதரிணியாயப்படி)[1] வரலாற்று முறையில் அமைந்ததென்று லகு பாணினியத்தின் இரண்டாம் பகுதியில் உறுதிப்படுத்தப்பட்டுளது. மரபாடிய ஆசிரியர்களுப் பின்வந்த உரையாசிரியர்களே பாணினியை ''உரிமையைத தவருகப் பயன்படுத்தியவ''ராக ஆக்கிவிட்டனர். ஆனுல் பெரும்பான்மையும் வடிவ விதிகள், வரையறைப்படுத்தப்பட்ட மாறுபாடுகள் முதலிய விதியமைப்பில் தெரிவதுபோன்று முனிவருக்கும் இயல்பாகச சிறிது அதிகார வெறி இருந்தது என்பது வெளிப்படை. பகுதிகளைத் திட்டப்படுத்துதல், பகுதிகளை வேறுபடுத்தலால் ஏற்படும் இடையூறுகள், முழுவதும் தொகும் உருபுவிதி அமைப்பு முதலியவைகள அவருககு ஏகச சகிகிராதிபத்தியத்திலுளள பேராசையை வெளிப்படுத்துகின்றன என்பதை ஒப்புக்கொள்ளாமல் இருகக முடியாது.

பாணினி முனிவர் படைத்த பழைய கருவிலிட்டு வார்த்தெடுத்தால் மேற்கூறப்பட்ட சில குறைகள் கேரள பாணினியத்திலும் ஏற்பட்டுள்ளன. அவவகைப் பிழைகளையும் முடிந்த அளவுக்குத் திருத்தம் செய்து இந்த இரண்டாம் பதிப்பைப் பெருமக்களின் முன் படைக்கிறேன். வடிவத்திலும், இயல்பிலும் மாத்திரமல்ல, உள்ளடக்கத்திலும் கேரள பாணினியத்தின் இப்புதிய பதிப்பில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் செய்யவேண்டியதேற்பட்டது. சரியாகச் சொன்னுல், முதற் பதிப்பிற்கும இரண்டாம் பதிப்பிற்கும் கேரள பாணினியம் என்ற பெயரில் மட்டுமே ஒற்றுமை என்றுகூடச் சொல்லலாம். அதனுல் இப்புத்தகம் கொலலம் ஆண்டு 1071-ல் வெளியிடப்பட்ட கேரள பாணினியத்தின் இரண்டாம் பதிப்பு என்று கூறி அறிவிக்கவேண்டியுளது. பெயரையும் கூட மாற்றலாம் என்று எனக்குத் தோன்றியது. ஆனுல் சில நண்பர்கள் அதற்கு உடன்படாததால் மாற்றவில்லை. ஆங்காங்கே சில பகுதிகள் முதற்பதிப்பிலிருந்த முறையிலேயே இதிலும் அமைக்கப் பெறவில்லை என்றும் கூறமுடியாது.

1 பலர் குடைபிடித்துகொண்டும் சிலர் குடையில்லாதும் செல்கின்ற கூட்டத்தைப் பொதுவாகக் குடைக்காரர்கள் எனக் கூறுவதைப் போன்று பெரும்பான்மை பற்றிக் கூறல்.

ஏறத்தாழ இருபது ஆண்டுகளுக்கு முன்னர் இளமையின் எளிய மன எழுச்சியின் பயனாக எழுதப்பட்ட ஒரு இலக்கணத்தை முழுவதும் பரிசோதித்து முறையை மாற்றிப் பல புதிய செய்திகளையும் சேர்த்து விரித்தெழுதி இம்முறையில் வெளியிடுவதற்கு என்னைத் தூண்டியன பின்வருவனவாகும்: சென்னைப் பல்கலைக கழகத்தினர் மலையாளத்தில் பி. ஏ. தேர்விற்கு அமைத்த பல விருப்பப் பாடங்களில் ஒன்றாக இதனை அமைத்ததும், நாட்டுமொழி அபிவிருத்திக்குப் பல முறையிலமைந்த தொடர்களை நாள்தோறும் கைக்கொண்டு வரும் நமது பொன்னுதமபுரான் திரு உள்ளம், தலைநகரிலுள்ள அரசினர் கல்லூரியில் பயிலும் மாணவர்களுக்கு இலக்கணம பயில வாய்ப்பு ஏற்படுத்தியதுமாகும். ''ஸாஹித்தியஸாஹ்யம'' முதலிய பிற நூற்களைப் போன்று கேரளபாணினியத்தின் திருந்திய தோற்றமும், வகுப்புகளில் நிகழ்த்திய சொற்பொழிவுகளிலிருந்து தோன்றியதே. அதனால் எனது இம்முயற்சி மலையாள மொழியின் சிறப்பிற்குச் சிறிதேனும துணைசெயுமெனின, அதனாலுள்ள மேன்மை என்னைக் காட்டிலும் சென்னைப் பலகலைக கழகத்திற்குமு, திருவிதாங்கூர் அரசிற்குமே ஆகு மென்பதை உடன்பட்டேயாக வேண்டும். அவர்கள் வழி இனியும நமது தாய்மொழிக்குப் பலவிதங்களில் பேருள் கிடைப்பதாக!

இந்த நூலைப் படைப்பதில், பின்வரும் நூற்களும எனக்குப் பெரிதும் துணைசெய்தன:

1. திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் — அருள் திரு. கால்டுவெல், டி. டி. எல். எல். டி.
2. மலையாள இலக்கணம் — அருள் திரு. எச். குண்டர்ட், டி. பி. எச்.
3. தமிழ் – நன்னூல் மூலம் — பவணந்தி
4. நன்னூல் – ஆங்கிலம — ஜாயஸ். சாமுவல் பிள்ளை
5. கன்னட இலக்கணம் (ஆங்கிலம்) — அருள் திரு. டாகடர். எப். கிற்றல்
6. தெலுங்கு இலக்கணம், ஆந்திரசப்த சிந்தாமணி — நன்னயபட்டாரகப் பிரணீதம்
7. ,, ஸுலப வியாகரணம் — வி. சுப்பாராவ்
8. ,, (ஆங்கிலம்) — அருள் திரு. எ. எச். ஆர்டன், எம். ஏ.
9. தமிழ் ஸ்டடீஸ் — எம். சீனிவாச ஐயங்கார், எம். ஏ.
10. லீலாதிலகம் (கையெழுத்துப்பிரதி)

திருவனந்தபுரம்
1916, நவம்பர் 30

ஏ. ஆர். ராஜராஜவர்மா

நூலாசிரியரின் முன்னுரை

மலையாள நாடும் மொழியும்

1. மலையாளம் என்ற சொல் தொடக்கத்தில் நாட்டின் பெயராக மாத்திரம் வழங்கியது. மலையாள நாட்டில் வழங்கும் மொழி என்ற பொருளில் நாம் மலையாள மொழி என்று சொல்கிறோம். நாட்டிற்கு மலையாளம் என்றும் மொழிக்கு ''மலையாண்ம'' அல்லது ''மலையாய்ம'' என்றும் இருந்த பெயர் வேறுபாடு காலப்போக்கில் மறைந்துவிட்டது. தற்கால மலையாளத்தின் தோற்றத்தோடு நாட்டின் பெயரையே மொழிக்கும் பயன்படுத்தத் தொடங்கினர். அதனால் இப்போது ''மலையாண்மை'' என்பதற்குப் ''பழைய மலையாள மொழி'' என்றும் சிலர் பொருள் கொள்கின்றனர்.

2. மலையாள நாட்டின் பரப்பும் அதன் பாகங்களும் பல காலங்களில் பல விதங்களில் அமைந்திருந்தன. திருவிதாங்கூர், கொச்சி, மலபார் மாவட்டம் ஆகியவை சேர்ந்த நிலப்பகுதிக்கே இப்பொழுது இப்பெயர் வழங்குகின்றது. நாட்டுமக்களாகிய தமிழர் பாண்டிக்கும்[1] மதுரைக்கும் மேற்கே கிடக்கும் மலைப்பகுதிக்கு மலைநாடு என்று பெயரிட்டிருந்தனர். மேற்குத்தொடர்ச்சி என்ற மலைத்தொடரின் மேற்குப் பக்கமுள்ள நிலப்பகுதியெல்லாம் இப்பகுதியில் உட்பட்டிருக்கலாம். ஆரியாவர்த்தத்தினின்று தெற்கு நோக்கி வந்த ஆரியர்கள் இந்நிலத்திற்குக் ''கேரளம்'' என்று பெயர் சூட்டினர். ''கேரம்'' என்று கூறப்படும் தென்னைமர மிகுதியை இப்பெயர் குறிப்பாய் உணர்த்துகின்றது. இதன் எல்லைகள் ''கன்னியாகுமரி முதல் கோகர்ணம் வரையிலும்'' என்று கருதப்படுகின்றது. வீரர்களைக் கொன்ற பாவம் தீரப் பரசுராமன், கடலரசனை வென்று பிராமணர்க்குத் தானம் செய்த பூமி என்ற புராண அடிப்படையில், வடமொழியில் இந்நாட்டைப் ''பார்க்கவ க்ஷேத்திரம்'' என்றும் வழங்குவதுண்டு. அயல்நாடுகளிலிருந்து வாணிபத்தின் பொருட்டு வந்த அரபியர் முதலிய பிறநாட்டினர்

1 தென்பாண்டிநாடு.

அரபிக்கடலின் கரையிலுள்ள நாடுகளைப் பொதுவாக "மலபார்" அல்லது "மலிபார்" என்ற பெயரால் அழைத்து வந்தனர். இப்பகுப்பில் கிழக்கு மேற்கு எல்லைகள் வரையறுக்கப்படவில்லை. ஐரோப்பியர் தமிழ்மொழியையும் மலபார் என்று கூறி வந்தனர். கிரேக்கர்கள் தமிழகம் என்பதை "தமிலிகெ" என்று ஆக்கி இந்நாட்டிற்குப் பெயர் கொடுத்திருந்தனர்.

வடமொழியில் கேரளம் என்று சொல்லப்பட்டுவரும் சேரநாட்டில் தொல்காப்பியம் என்ற தமிழ் இலக்கணப்படி,[1] 1. வேணாடு, 2. பூழிநாடு, 3. கற்காநாடு, 4. சீதநாடு, 5. குட்டநாடு, 6. குடநாடு, 7. மலயமானாடு என்ற ஏழு பகுதிகள் இருந்தன. இவற்றில் குட்டநாடு என்ற பெயர் மத்திய திருவிதாங்கூரிலே சில தாலுகாக்களுக்கு இன்றும் வழங்கி வருகின்றது. வேணாடு என்பது பழங்காலத்தில் இடவா முதல் தெற்கில் மாத்திரம் பரந்திருந்த திருவிதாங்கூர் சமஸ்தானத்தின் பெயராக இருந்தது. பிற்காலத் தமிழ் நூலாசிரியர்கள் மலைநாடு அல்லது மலைமண்டிலம் என்று ஏறத்தாழ சேரநாட்டிற்குத் தான் பெயரிட்டனர். ஒருகாலத்தில் சேலம், கோயம்புத்தூர் ஆகிய இன்றைய இரண்டு மாவட்டங்களும் சேர அரசர்களின் ஆட்சியின் கீழிருந்தன. பரசுராமன் கேரளத்தில் ஐம்பதுகொங்கணங்களைப் படைத்தார் என்று புராணக் கதைகளில் காணப்படுவது, இந்த ஏழு நாடுகளைக் கருதி அமைந்திருக்கலாம்.

3. ஒரு காலத்தில் மலையாளநாட்டைக் கடல் கொண்டதாகவும் பின்னர்ப் பின்வாங்கியதாகவும் நிலநூற்களில் காணப்படுகின்றது. "பரசுராமன் கடலின் நின்றும் மீண்டும் கொண்டு வந்தான்" என்று புராணங்கள் முழங்குவதும் இந்நிகழ்ச்சியைக் கருதியே அமைந்திருக்க வேண்டும். வேறுசில இதிகாசக் கதைகளுக்கும் அடிப்படை இதுவாக இருக்குமோ என ஊகிக்கவும் இடம் ஏற்படுகின்றது. பூர்ணப்படி இறுதிக் கடல்கோள் திராவிட நாட்டில்தான் நிகழ்ந்தது. திராவிடத் தலைவனாகிய சத்தியவிரதன் கிருதமாலையாற்றில் அந்திவணக்கம் செய்யும்பொருட்டுக் கையில் எடுத்த நீரில் ஒரு சிறிய மீனைக் கண்டான் என்றும் அது பிதிர்வணக்கத்திற்கெடுத்த நீரினின்று நீங்காது நின்றதால் அதனை மன்னன் அரண்மனைக்குக் கொண்டுவந்து காப்பாற்றுகையில் தினந்தோறும் இடும் பாத்திரம் நிறைந்துவந்து, நான்காவது நாளுக்குமுன் பெருமீனாய் வளர்ந்து, ஏழுநாட்களுள் கடல்கோள் ஏற்படும் செய்தியையும், அப்போது செய்யவேண்டிய செய்கைகளையும்

1 தொல்காப்பியத்தில் (சொல் 400) 'பன்னிருநிலத்தும்' எனவே குறிப்பிடப்பட்டுளது. இப்பெயர்களெல்லாம் உரையாசிரியர் குறிப்பிடுவன.

அரசனுக்கு உணர்த்திவிட்டுக் கடலுள் சென்றது என்பதுமன்றே மீனவதாரக் கதை. திராவிட நாட்டின் கடலோரம் கேரளம். அதன் எல்லை கிருதமாலை நதியாகவிருந்தது என்பது "கிருதமாலை ஒருபுறம்; மலையமலை மற்றொருபுறம; மேற்கு கடல்" என்று இன்னும் கற்பனையில் சொல்லிவரும எல்லைகளில் நின்று தெளிவாகின்றது. அதனால் ஆறுவதாகிய ஊழியின் இறுதியில எழுந்தது என்று முழங்கப்படும் கடலகோள் கேரளத்தில் ஏற்பட்ட கடல்கோள் ஆக இருக்கக் கூடாதோ?

யுக்தி வழியில் சிந்திப்பதென்றால் மீனவதாரத்திற்குத் தமிழ் நாட்டு வரலாற்றில் சான்றுகளை ஊகிப்பதற்கு வேண்டுமளவு வழி காணப்படுகின்றது. ஹயகிரீவ மஹாசுரனால் திருடப்பட்ட வேதங்களை மீண்டும் கொணர்வதற்குத்தான் திருமால மீனாக அவதரித்தார். இக் கதையை, "ஒரு காலத்தில் வழக்கற்றுப்போன வாணிசிரமாசாரங்களைத் திராவிட தேசத்தில மீண்டும் வாழ்விக்க வேண்டிய தேவை நேரிட்டது என்ற செய்தியைப பற்றியுள்ள பொருள்வாதம்" என்று கருதுவதில் முரணிலை. பண்டைக காலத்தில் சிறு கூட்டங்களாகத் தெற்கு நோக்கிவந்த ஆரியர்கள், ஆதிகுடி மக்களாகிய திராவிடர்களை நீண்டகாலம் கீழடங்கி இருந்தனர் என்று பண்டைத் தமிழ்ச் சான்றுகளினின்று அறியப்படுகின்றது சிறப்பாகக் கேரளத்தில ஆரியர்கள் சிந்துநதி முகத்திலிருந்து புராதன காலத்திலேயே கடல்வழி வந்து கோகர்ணம் வழி தெற்கு நோக்கிப பரந்து குடியேறியிருப்பதற்கு வழியுண்டு. வடமொழி ஒலிகளை உச்சரிப்பதில ஏனைய திராவிடாகளில் ஓரு கூட்டத்தினருக்கும் இல்லாத சில சிறப்பு முறைகள் மலையாளிகளுக்கு இருப்பது இந்த ஊகத்திற்கு ஒரு முகிய சான்றாகின்றது. உகரத்தை (ம்) ளகரமாய் ஒலிக்கின்ற முறை இருக்குவேதத்தில் மாத்திரம் காணப்படுகின்றது. அது இன்றும் கேரளரின் வடமொழி உச்சரிப்பில் சாதாரணமாகக் காணப்படுகின்றது. ஸம்ராட்ப்யாம = ஸம்ராள்ப்யாம,[1] வஷட = வஷள்[2] முதலியன. இவ்வாறு முதன்முதலில் கடல்வழி கடந்துவந்த ஆரியர்கள் மேற்குத் தொடர்ச்சி மலையைக் கடந்து கிழக்கு நோக்கிப பரந்தாலும, முக்கியமாகக கேரளத்திலேயே தங்கியிருந்திருக்கலாம். கூட்டத்தின் பலக்குறைவினால் இவர்கள் சில திராவிட ஆசாரங்களை ஏற்றுக்கொண்டு, ஆரிய மத ஆசாரங்களைக் குறைக்கவும செய்திருக்கலாம. பின்னர்ப் படிப்படியாக ஆரியாவர்த்தத்தில ஆதிக்கம் நிலை நிறுத்திவிட்டு, அங்கிருந்து விந்தியமலைத்

1 இரு சாம்ராட்டுகள்.

2 தேவர்களுக்குத அவியுணவளிக்கும்போது பிரயோகிக்கும் ஒலிமுறை.

தொடரைக் கடந்து தெற்குப் பகுதியை ஆகிரமித்தது. ஆரியக் குழுக்கள் பழங்குடி மக்களாகிய இந்த இனத்தாரோடு மோதியபோது, அவரை ''ஒதுக்கப்பட்டவர்'' என்றும் ஆசாரமற்றவரென்றும் இகழ்ந்திருக்க இடமுண்டு. திராவிடரை ஒதுக்கப்பட்டவாகளாகிய க்ஷத்திரியர் என்று மனு சொல்வதை நோக்குக.

பௌண்ட்ர கா சௌத்ரவிடா, கம்போஜா யவனா: சகா:
பாரதா பஹ்ல வாஶீனா: கிராதா தரதா: கசா:
ஶனகைஸ்து கரியாலோ பாதிமா: க்ஷத்ரிய ஜாதய:
வ்ருஷலத்வம் கதா லோகே ப்ராமணாதர்மதேனசா.[1]

மனுஸ்மிருதி 43, 44

கடல்கோளின்பின் திருமால் வேதத் திருடனுகிய ஹயக்ரீவனைக் கொல்லவே, ஆரிய ஆசாரங்கள் முறையாக வழக்கிற்குக் கொண்டு வரப்பட்டன. ஆசார மாறுதல்களை ஏற்றுக்கொண்டு முதலில் வந்த ஆரியாகளில், கடல்கோளுக்குப் பின் எஞ்சியவாகளது சந்தானங்கள், இப்பொழுது கேரளத்தில் காணப்படும் வேதமில்லாத நம்பூதிரி சாதியினராக இருக்கலாம் என்றும் ''கேரளத்தில் அனுசாரங்கள்''[2] என்று சொல்லப்படுபவையெலலாம் இங்கு கூறப்பட்ட அசாதாரண ஆசாரங்களின் எச்சமிச்சங்கள் என்றும் கொண்டால், எனது யூகம் சரியாகும். ஆனால் இவ்வகைச செய்திகள் வரலாற்றுசிரியனின் அதிகாரத்தில் உட்பட்டனவாகையால் இலக்கண ஆசிரியனுக்கு அதில் நுழைய உரிமையில்லை.

4. மலைநாடாகிய மலையாளத்தில் பழங்குடி மக்கள் தமிழர்கள் என்பதோடு, அவர்களது மொழி தமிழாகவும் இருந்தது. ஆனால் எல்லாக் காலங்களிலும் செய்யுள்மொழி அல்லது வரமொழி,[3] நாடோடி மொழி அல்லது வாய்மொழி என்ற வகை வேறுபாடு வழக்கிலுள்ள எல்லா மொழிகளிலும் உள்ளதுபோன்று, இத்தமிழிலும இருந்தது. செய்யுள் மொழிக்கு ''செந்தமிழ்'' என்றும், நாடோடி மொழிக்குக் ''கொடுந்தமிழ்'' என்றும் தமிழ் நூலாசிரியர்கள் பெயரிட்டிருகின்றனர். அவ்வாறமைந்த பலவகைக கொடுந்தமிழகளில் ஒன்று நமமுடைய மலையாளமாய் அமைந்தது. இப்பொழுது உள்ள நிலையில் வட

1 பௌண்டர், சௌடர், திராவிடர், கம்போஜா, யவனர், சகர், பரதா, பஹ்லர், சீனர், கிராதர், தரதர், கசர், ஆகிய சத்திரிய சாதியினர் தங்கள் கருமங்களை மெல்ல மெல்லக் கைவிட்டதனாலும் அந்தணர்களை நீண்டகாலம் காணாதிருந்தமையாலும் விருஷலர்கள் (சூத்திராகள்) ஆயினர்.

2 ஏனைய இடங்களில் இல்லாத தனி ஆசாரங்கள்.

3 ''வடகடைபபகுபதம் ரமொழி'' தொ. வி. 86.

மொழியின் பல ஆதிக்கங்களும் மலையாள மொழியில் நுழைந்து வலுப்பெற்றன எனினும், அடிப்படையும் மேற்கூரையும் இன்றும் தமிழ் நிலைநிறுத்தியவைதாம். சிறப்பான முறைகளொன்றும் மலையாள மொழியின் உட்பகுதியைத் தொடவில்லை. மரத்தால் செய்யப்பட்ட சுவரைக் களைந்து அவ்விடத்தில் செங்கல் வைத்துச் சுவர் கட்டுதல், சாளரங்கள் வைத்து இருளையும் தடைகளையும் நீக்குதல் ஆகிய இவ் வளவுதான் வடமொழி வர்த்தகனுக்குத் தனது மலையாள வீட்டில் சீர் திருத்தம் செய்ய முடிந்தது. இக்கொள்கையை நிலைநிறுத்துவதற்கு வேண்டிய சான்றுகள் இந்தப் பகுதியில் மற்றோரிடத்தில் விளக்கப் படுகின்றன.

5. மலையாளத்தின் பழைய வடிவம் கொடுந்தமிழ் என்று கூறப்பட்டதன்றே. செந்தமிழ்தான் எந்த மொழிக் குடும்பத்தில் உட் பட்டதென்பதையும் முடிவுகட்ட வேண்டும். திராவிடம் என்ற ஒரு தனிக் குடும்பத்தின் உட்பட்ட மொழியாகும் தமிழ். அக்குடும்பத்தின் அங்கங்கள் கீழ்விளக்கப்படுகின்றன.

1 — 1. தமிழ; 2. மலையாளம்
2 — 3. கன்னடம்
3 — 4. துளு; 5. குடகு; 6. தோடா; 7. கோடா
4 — 8. கூர்க்; 9. மால்டோ
5 — 10. கோண்டி; 11. கோண்டா (கூயி)
6 — 12. தெலுங்கு
7 — 13. பிராகுயி

இவற்றில் தமிழ் – மலையாளங்கள் ஒரே மொழியின் வடிவ வேறு பாடுகள் ஆகின்றன என்பது முன்னரே விளக்கப்பட்டதன்றே. கன்னடத்திற்கும் தமிழோடு பெரும் நெருக்கம் உண்டு. துளு, குடகு, தோடா, கோடா என்ற தாய்வழி மொழிகள், தமிழ் – மலையாளங்களுக்கும், கன்னடத்திற்கும் இடையில் நிற்கின்றன. மேலும் இவை மிகுதியும் கன்னடத்தைச் சார்ந்திருக்கின்றன. கூர்க், மால்டோ என்ற இரண்டு மொழிநிலையும், முன்கூறிய நான்கு மொழிகளின் நிலையை ஒருவழி ஒத்ததாகும். கோண்டி, கூயி என்ற இருமொழிக்கும் தெலுங்கினோடு இரத்தத தொடர்பு உண்டு. தெலுங்கு பழங்காலத்திலேயே மூலக குடும்பத்தினின்றும் பிரிந்துபோய்விட்டது. பிராகூயி தனியாகப் பலுசிஸ்தானத்தில் அகப்பட்டுப் போனதால் அதனைப் பிற மொழி ஆதிகமும் பெரிதும் பாதித்தது. திராவிட மொழிகளில் தமிழ், தெலுங்கு, கன்னடம, மலையாளம், துளு, குடகு என்ற ஆறுமொழிகள்

இலக்கியம் முதலியவற்றுல் வளம்பெற்றிருக்கின்றன. இறங்கு வரிசையில் அவை இங்கு குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

மேர்வரையின் நீளத்தால் அகற்சியும், சரிந்த வரையால் சார்பும் காட்டும் முறையில் கீழ் கொடுக்கப்படும் படத்தில் திராவிட மொழி களுக்கு மூலமொழியோடு உள்ள அகற்சியும், சார்பும், ஒன்ருேடு மற் ருென்றிற்குள்ள உறவும் காட்டப்படுகின்றன.



6. திராவிட இனத்தினர் தட்சணுபதம் என்று கூறப்படும் தென்னிந்தியாவின் ஆதிக்குடிகளாகவே இருக்கவேண்டும் என்பது பரவலான ஊகம். ஆரியர்கள் இந்தியாவிற்கு வருவதன்முன் திரா விடர் வடக்கில் அங்குமிங்கும் பரந்திருக்கலாம் என்பது மட்டும குறிப் பிடப்படவேண்டியதொன்று. ஆரியர்களைப் போன்றும், மகமதியர் களைப் போன்றும் திராவிடர்களும் பிறநாடுகளிலிருந்து இங்குவந்து குடியேறினர்கள் என்பதற்கு ஒரு சான்றும் காணப்படவில்லை. அத னல் அவர்களுடைய மொழிகளும் ஒரு தனிக்கிளையாக அமைகின்றன. வடமொழியோடோ, அதிலிருந்து சிதைந்தெழுந்த வட இந்திய நாட்டு மொழிகளோடோ திராவிட மொழிகளுக்குக் குறிப்பிடத் தகுந்த யாதொரு உறவுமில்லை. ஒலி இலக்கண ஆசிரியர்கள் மொழிகளைச் சில பகுதிகளாகப் பிரித்ததில், சிதியன், டார்ட்டார், துரேனியன்

என்று கூறப்படும் நன்கு அறியப்படாத பல கிளைகளோடும் திராவிட மொழியினத்திற்குச் சார்பு உள்ளதாக வாதங்கள் எழுப்பப்படுகின்றன. எனினும் அவையொன்றும் கொள்கை நிலையை அடையவில்லை. இவ்வினத்தில் ஆஸ்திரேலியப் பெருந்தீவின் வடபகுதியில் வழங்கும் மொழிகளுக்கும் திராவிட மொழிகளுக்கும் சில அங்கங்களில் காணப்படும் பொருத்தம் மட்டும் தெளிவாகியிருக்கின்றது.

7. ஆரியர்கள் தென்னகத்தில் நுழைந்து ஆரிய மத ஆசாரங்களையும், ஆரியச் சீர்திருத்தங்களையும், நிலைநிறுத்திய சூழ்நிலையில் ஆரிய மொழியாகிய சம்ஸ்கிருதம் திராவிட மொழிகளில் பரவலான செல்வாக்குச் செலுத்தத் தொடங்கிற்று. வடமொழியிலிருந்து சொற்களைக் கடன்வாங்குதலும், வடமொழி வாககியங்களையும் அணிமுறைகளையும் ஏற்றலும், திராவிட மொழிகளில் வழக்கில் வந்தன என்பது மட்டுமன்று, தனித்து வழங்கததடைகள் பெற்றிருந்த சில மொழிகள் சம்ஸ்கிருதத்திலிருந்து வேற்றுமை உருபுகளையும், வினைமுற்றுகளையும், இடைச்சொற்களையும் தத்தெடுத்துச் சேர்த்து, ''மணிப்பீர வாளம்'' என்ற ஒரு புதிய வேஷம் கட்டுதற்கும் தொடங்கின. இவ்வகைச் சிறப்பு முறைகளெல்லாம் செய்யுள் மொழியையல்லாது உலக வழககு மொழியைப் பாதித்துவிடவில்லை. குடும்பத்தில் முதுமைப் பதவி வகிக்கும் தமிழ் மட்டும் புதுமோடிகளில் மயங்காது பழைய பாரம்பரியங்களைக் கைவிடாது வாழ்கின்றது. தெலுங்கு என்ற பெயரே மூன்றுபால் அல்லது த்ரிகலிங்கம் என்ற வடமொழியின் தற்பவமாய்விட்டது. கரைநாடு 'கர்நாடகம்' என்ற வேடம் தரித்துக் கொண்டது. இகுழுவில் தமிழ் என்பதன் வடமொழி உருவம் ''திராவிட'' என்ற சொல். தமிள் – த்ரமிளா – த்ரமிளம் – த்ரவிளம் – த்ரவிடம. முதல்வனின் பெயர், கோத்திரப் பெயராய் அமைவது போன்று 'திராவிட' என்பது மொழிக் குடும்பத்திற்குப் பொதுப் பெயராய் அமைந்தது.

வடமொழி நூலாசிரியர்கள் தென்னிந்திய முன்னைய மொழிகளை ''ஆந்திர திராவிடங்கள்'' என்றும் குறிப்பிட்டுள்ளனர். இது ஆந்திர மொழியாகிய தெலுங்கிற்கும் தமிழிற்குமிடையே உள்ள அகற்சியை அடிப்படையாக்கிச் சொன்னதாக இருக்கலாம்.

8. மணிப்பிரவாள மலையாளத்தில் வடமொழியின் மிகுதியைக் கண்டு மயங்கித் தலைசிறந்த நூலாசிரியர்கள் கூட, சம்ஸகிருதத்தில் திராவிடம் கலந்து உருவாகிய மொழி மலையாளம் என்று ஐயுற்றதுண்டு. அதனால் திராவிட சமஸ்கிருதங்கள் வேறுபட்ட வருக்க மொழிகள் என்பதற்குச் சில முக்கியச் சான்றுகளை இங்கு எடுத்துக்

காட்டுவோம். ஒரு வருக்கத்தைச் சார்ந்த மக்கட் சமூகம் வேறு இனத்தைச் சார்ந்த மக்கட் சமூகத்தோடு அன்றாட வாழ்வில் கலக்கும்போது, இரண்டு இனத்தின் உடைத்தோற்றம், உலகியல் ஆசாரங்கள், நடைமுறைகள் முதலியனவெல்லாம் கூடிக்கலந்து மாறுதலடைவது போன்று, அவர்களது மொழிகளின் சொற்கூட்டமும் மாறுதலடையும். ஆனால் மத ஆசாரங்கள், குடும்பப் பாரம்பரியங்கள், உரிமைமுறைகள் முதலியவை அரிதாகவே மாறுதலடையும். அதனைப் போன்றே மொழிகளின் வாககிய முறை, உரு அமைப்பு, மரபுச் சொற்றொடர் ஆகியவை மாறுவது சாதாரணமாக இல்லை. இயல்பாக ஆரியர்களின் நாகரிகச் சிறப்பு, பரவலான ஆதிகம் இவை காரணமாகத் திராவிடர்களின் மத ஆசாரங்களும் மாறிப்போயின. எனினும் மொழிகளின் புறத்தோற்றத்தில் பங்கு வகிக்கும் சொற்களில் அல்லாது, உள்நிலையாகிய இலக்கணத்தில் யாதொரு மாற்றமும் ஏற்பட்டதில்லை.

9. சமஸ்கிருதத்திலிருந்து சொற்களைக் கடன்வாங்கியதுகூடச் சில இன்றியமையாத் தேவைகளுக்கோ, ஆடம்பரங்களுக்கோ மாததிரமாகும். வீடுகளில் அன்றாடம் வழங்கும் சொற்களில் வடமொழிகளும், திராவிடத்திற்கும் யாதொரு தொடர்பும் இல்லை என்பதைக் கீழ்க்காட்டப்படும் பெயர்களையும், வினைகளையும, இடைச் சொற்களையும நோக்கின் உணர முடியும்.

I பெயர்கள்

எண்	சமஸ்கிருதம்	தமிழ	மலையாளம்	கன்னடம	தெலுங்கு	துளு
1	பிதா	தந்தை	தந்த	தந்தெ	—	—
2	மாதா	தாய்	தாய்	தாய்	தல்லி	—
3	ஸுனு:	மகன்	மகன்	மகன்	—	மக
4	ஶிர:	தலை	தல	தலெ	தல	தரெ
5	அக்ஷி	கண்	கண்ணு	கண்	கன்னு	கண்ணு
6	நாஸா	மூக்கு	மூகு	மூகு	மூக்கு	மூகு
7	கர:	கை	கைய்	கய்	சேயி	கைய்
8	ஸூர்ய:	ஞாயர்*	ஞாயர்	நேஸர்	—	—
9	சந்த்ர:	திங்கள்	திங்கள்	திங்கள்	—	திங்களு
10	த்யௌ:	வான்	வான்	பான்	வின்னு	—
11	திவஸ:	நாள் (பகல்)	நாள் (பகல்)	நாள்	நாடு	—
12	ராத்ரி:	இரவு	இரவு	இருள்	இருளு	—
13	அக்னி:	தீ	தீ	தீ	—	தீ
14	க்ருஹம்	வீடு	வீடு	வீடு	வீடு	—
15	க்ராம:	ஊரு	ஊரு	ஊரு	ஊரு	ஊரு
16	ஶ்வா	நாய்	நாய்	—	—	நாயு

* ஞாயர் = ஞாயிறு என்றிருத்தல் வேண்டும்.

மேற்காட்டிய வடமொழிப் பெயர்களெல்லாம் இப்பொழுது மலையாளத்தில் வழங்கி வருகின்றனவெனினும் அவைகள் ஆடம்பரத்திற்காக வடமொழியிலிருந்து ஏற்றுக்கொள்ளப்பட்ட தற்சமங்கள் அல்லாது மொழியின் சொந்தச் சொற்களல்ல. நகம், முகம், ஸுகம், துக்கம் முதலிய இன்றியமையாச் சொற்களே இப்பொழுது தற்சமங்களாக மாத்திரம் மலையாள மொழியில் காண்பது, பழைய திராவிடச் சொற்களே விலக்கிக் களைந்ததினாலேயேயாம்.

II விஜனகள்

எண்	வடமொழி	தமிழ்	மலையாளம்	கன்னடம்	தெலுங்கு	துளு
1	பட்சணம்	தின்னுக	தின்னுக	தின்னுக	தின்னுக	தின்னுக
2	பானம்	குடிக்குக	குடிக்குக	குடிக்குக	குடிக்குக	—
3	கமனம்	போகுக	போகுக	போகுக	போகுக	போகுக
4	ஸ்தானம்	நில்க்குக[1]	நில்க்குக	நில்க்குக	நில்க்குக	நில்க்குக
5	தாவனம்	ஓடுக	ஓடுக	ஓடுக	ஓடுக	ஓடுக
6	வசனம்	சொல்லுக	சொல்லுக	ஸொல	—	—
7	ஹனனம்	கொல்லுக	கொல்லுக	கொல்லுக	—	கெமர
8	ஸ்ரவணம்	கேள்க்குக	கேள்	கேளு	—	கேணு
9	ஆஸனம்	இரிக்குக[2]	இரிக்குக	இரிக்குக	இரிக்குக	இரு
10	ஆகமனம்	வருக	வருக	வருக	வருக	வருக

III இடைச்சொற்கள்

எண்	வடமொழி	திராவிடம்				
		தமிழ்	மலையாளம்	கன்னடம்	தெலுங்கு	துளு
1	ச (எண்ணிடைச் சொல்)	உம்	உம்	உம்	–	
2	வா (விகற்பப் பொருள்)	ஓ	ஓ	ஓ	ஓ	–
3	ஏவ (தேற்றப் பொருள்)	ஏ	ஏ	ஏ	ஏ	ஏ

பதிற்பெயர்களெல்லாம் திராவிட மொழிகளில் ஒரே வடிவமாகவும், வடமொழியிலிருந்து வேறுபட்டனவாகவும் அமைகின்றன.

---

1 நில்க்குக – நிற்றல். 2 இரிக்குக – இருத்தல்.

IV பதிற்பெயர்கள்

வடமொழி	திராவிடம்
தத்	அ
ஏதத்	இ
கிம்	ஏ
த்வ, யுஷ்மத்	நின்
ம, அஷ்மத்	என்
அதஸ்	உ

10. இனி, இலக்கண விதிகளைக் குறித்துக் காண்போம்.

(1) ஏழு வேற்றுமைகள், ஒவ்வொன்றிற்கும் மும்மூன்று எண்கள், ஒவ்வொரு எண்ணிற்கும் தனித்தனி உருபுகள் என 21 ஆக வேறுபடும் வடமொழியிலுள்ள வடிவ வரிசைக் கோலாகலங்களொன்றும் திராவிட மொழிகளுக்கில்லை. உருவ அமைப்பிலும் முதல் ஐந்து எண்கள் வல் வேற்றுமைகள்[1] ஏனைய எல்லாம் மெல் வேற்றுமைகள், என்ற வேறுபாடு இல்லை. திராவிட மொழிகளிலோ முதல் வேற்றுமைக்கு உருபு இலலை.[2] ஏனைய எல்லா வேற்றுமைகளிலும் பகுதியில் மாற்றமில்லை. எண்கள் இரண்டே உள்ளன. அவற்றிற்குரிய வீகுதி வேருதலால், வேற்றுமையுருபு எண்தோறும் மாறவேண்டா. வேற்றுமைத் தொடர்பைக் குறிப்பதற்கு உருபு மட்டுமன்று, சொல்லுருபுகளைப் பயன்படுத்தும் கதிகளும் உள. "மிடுக்கன்மாரைக் கொண்டு" என்ற வேற்றுமை வடிவத்தைப் பிரித்து நோக்குக.

மிடுக்கன்மாரைக் கொண்டு

பகுதி உருபுகள் ஆகியவற்றின் பிரிவு

பகுதி	உருபு				
	ஒருமை	பன்மை	2-ம் வேற்றுமை உருபு	கருவிப் பொருளில் உள்ள கதி	
மிடுக்கு	அன்	மார்	ஐ	கொண்டு	

வடமொழியிலோ "படுபி:" என்பதில், பிஸ் என்ற ஒரு உருபே இவற்றை எல்லாம் குறிக்க உள்ளது. மட்டுமன்று; அவ்வுருபிற்கே கர்த்தா, ஏது, உடனிகழ்வு, உபாயம் ஆகிய பொருட்களும் உள.

(2) திராவிட மொழிகளில் வடமொழியில் உள்ளனபோன்று விகரண பேதம்,[3] பதபேதம், (ஆத்மனே பத பரஸ்மை பதங்கள்)[4]

1 முதல் வேற்றுமையின ஒருமை, இருமை, பன்மை எனகளும், இரண்டாம் வேற்றுமையின் ஒருமை இருமை எண்களும்.

2 போக்கு எழுவாய் உருபும் தோற்றியலிங்கம் ஒரு மூன்றும் இல்லை செழுந்தமிழ்க்கே பிர. 49.

3 Conjugational usages. 4 வடமொழி வினைப்பாகுபாடுகள.

செய்வினை, செயப்பாட்டுவினை, பாவே[1] என்ற பிரயோக பேதம் ஒன்றும் இல்லை. வினைகளின் காலம், பொருள் முறைகளுக்கு உட்பிரிவு வேறுபாடுகளும் குறைவாகவே உள்ளன. எதிர்மறை, எண், விகற்பம் ஆகியவற்றை ஆக்கும் முறை முழுவதும் வேறுபட்டதாகும். எச்சங்களுக்கும் ஸம்ஸ்கிருதத்திலுள்ள வினைமுற்றுகளுக்குமிடையில் பெரிய வேறுபாடு உளது முற்றுவினைகளில் ஸம்ஸ்கிருதத்தில் இல்லாத விகுதி வேறுபாடு திராவிட மொழிகளில் சிறப்பாக உள்ளது.[2]

(3) இணைப்பு இடப்பெயர்[3] திராவிட மொழிகளில் இல்லை. அதன் தொழிலைப் பெயரெச்சம் நடத்துகின்றது. பால் குறிக்காத பன்மையெண் திராவிட மொழிகளின் ஒரு சிறப்பாகும். அஃறிணைப் பொருட்களைக் குறிக்கும் பெயர்களுக்கும் அவற்றை விளக்கும் பெயர்களுக்கும் பால் வேறுபாடு இல்லாததும் அதனைப் போன்றதே.

எ-டு.	ஸம்ஸ்கிருதம்	திராவிடம்
	ஸிம்ஹம் ஸிம்ஹி	ஆண்சிம்ஹம் பெண்சிம்ஹம்

அஃறிணைப் பெயர்களுக்கும் பன்மை விகுதி வேண்டா. எண்ணுப் பெயரடை சேர்ததால் விகுதி வழங்ககூடாது என்பதும், உளது. எ-டு. பத்து ரூபா, எட்டுப் பசு.

(4) உரிச்சொற்களோடு திராவிட மொழிகளில் பால், எண், விகுதிகளைச் சேர்ப்பது இல்லை. படு – படீயஸ் – படிஷ்ட என்பவை போலுள்ள சிறப்பு வடிவமும் திராவிட மொழிகளில் இல்லை.

(5) திராவிட மொழிகள் ஒட்டுநிலை அமைப்பை உடையன. ஸம்ஸ்கிருதம் உட்பிணைப்பு நிலை உடையது.

(6) சமஸ்கிருதத்தில் உள்ள பேருயிர்ப்பொலிகளும் உரசொலிகளும் திராவிட மொழிகளில் இல்லை. திராவிட மொழிகளில் உள்ள ழ, ற, ன ஆகியவை ஸமஸ்கிருதத்திலும் இல்லை.

(7) உதாத்தம் முதலிய சுரபேதம்[4] திராவிட மொழிகளில் ஒருகாலும் இருந்ததிலை

11. மலையாளம் தமிழின் ஒரு கிளைமொழி என்பது தொடக்கத்திலேயே சொல்லப்பட்டதன்றே. அது முக்கிய மொழியாகிய தமிழிலிருந்து வேறுபட்டுத தனிமொழி என்ற நிலையை எத்தனை காலங் கொண்டு அடைந்தது என்றும், அதற்கமைந்த காரணங்கள் யாவை

1 Inpersonal usages.

2 திணை பால் உணர்த்தும் விகுதி தெய்வ மொழிக்கு இல்லை. பிர. 49.

3 Relative pronouns.

4 எடுத்தல், பகுத்தல், நலிதல் ஆகிய சுரபேதங்கள் (தொல், எழுத்து 141) உரையாசிரியாகளால குறிப்பிடப்படுகின்றன.

என்றும் இனிச் சிந்திக்க வேண்டும். எல்லா மொழிகளுக்கும் சுவை வேறுபாடு காரணமாக வட்டார வேறுபாடுகள் வருவதுண்டு. மலையாளத்திலேயே இப்பொழுது இடைநாட்டு மலையாளம் தவிர, தெற்கத்திய மொழி, வடக்கத்திய மொழி என்ற வகை வேறுபாடு நாம் கொள்வதுண்டன்றே? அதைப் போன்றே தமிழிற்குத்

தென்பாண்டி குட்டம் குடம்கற்கா வேண்பூழி
பன்றீ யருவா வதன்வடக்கு – நன்றுய
சீதம் மலைநாடு புனனுடு செந்தமிழ்சேர்
ஏதமில் பன்னிருநாட் டெண்.

என்ற கருத்துப்படி, பன்னிரண்டு நாடுகளில் வட்டார மாறுபாடுகள் ஏற்பட்டிருந்தன. இப்போதைய மதுரையில் வழங்கிய மொழிக்குச் செந்தமிழ் என்றும், மேற்கூறிய 12 தேசங்களில் வழங்கி வந்த மொழிக்குக் கொடுந்தமிழ் என்றும் தமிழ் நூலாசிரியர்கள் பெயர் கொடுத்திருந்தனர். மேற்கூறிய பன்னிரண்டு நாடுகளில் குட்டம், குடம், கற்கா, வேண், பூழி என்னும் ஐந்தும் இன்றைய கேரள தேசத்தில் உட்பட்டவை. இந்த ஐந்து நாடுகளிலும் வழங்கிய கொடுந்தமிழ் மலையாளமாக வளர்ந்ததற்கு காரணங்கள் யாவை?

(1) மலையாள நாட்டின் அமைப்பு கிழக்கு எல்லை முழுவதும் பரந்துள்ள மலைத்தொடர்ச்சியால் ஏனைத் தமிழ்நாட்டிலிருந்து வேறுபட்டுத தனிப்பட்டுவிட்டது.

பழங்காலத்தில் தென்னிந்தியாவின் தென்கோடி சேரம், சோளம், பாண்டியம் ஆகிய மூன்று நாடுகளாகப்பகுக்கப்பட்டிருந்தது. அவற்றில் மேற்குத் தொடர்ச்சி மலையின் மேற்குப் பகுதியும், கொங்கு நாடும் உட்பட்டிருந்தன. மூன்றும் சுதந்திர நாடுகளாய் விளங்கின. எனினும், அவற்றிடையே சண்டைகளும், ஒன்றைவிட ஏனைய இரண்டும் மேன்மை வாய்ந்தன என்ற பெருமிதமும, அதன் காரணமாகப் பல போர்களும், போர்வெற்றியின் அடிப்படையில் சிறப்பும் மாறி மாறி அமைந்தன. மூவரையும தவிரப் பல்லவர், சாளுகியா, இராட்டிரகூடர் முதலிய பிறநாட்டாரின் ஆகிரமிபபுகளும் அகிரமங்களும் நடைபெற்றன.

இத்தகைய நாட்டுப் பகுதிகளின் பரிமாற்ற கோலாகலங்களில் எல்லாத் தமிழ் நாடுகளும் வேறு வழியின்றி ஒன்றோடொன்று தொடர்புகொள்ள வேண்டி வந்தது. அன்றைய ஆட்சிமுறையும் குறிப்பிடத்தக்க தகுதி வாய்ந்திருந்தது. தலைநகரமும், அதனைச் சூழ்ந்துள்ள பகுதிகளுமே ஒரு பேரரசனின் கீழ் வளம் பெற்று வந்தன.

ஏனையப் பகுதிகளையெல்லாம் சிற்றரசர்களாகிய 'உத்தியோகஸ்தர்-களே' ஆண்டு வந்தனர். ஒவ்வொரு ராஜ்யத்தையும் பல நாடுகளாகப் பிரித்து, ஒவ்வொரு நாட்டையும் ஆளும் அதிகாரிகளாகப் பிரபுக்கள் நியமிக்கபபட்டனர். சிற்றரசர்களாகிய பிரபுக்கள் காலந்தோறும் தங்கள் அதிகாரத்தைக குல பரமபரையாக வகித்து வந்ததனால், அவர்களுட் சிலர் முக்கியத்துவம் பெற்றும், பெயரளவில் அரசனுக்குக் கீழடங்கி உண்மையில் உரிமை பெற்ற நிலையிலும் ஆண்டனர். இத்தகையோரின் கூட்டத்தில், குட்டநாட்டின் தலைவனுகிய செங்குட்டுவன் என்ற தலைவனைப் பற்றிப் பழைய தமிழ் நூற்களில் பல கதைகள் காணப்படுகின்றன. அது மட்டுமன்று, பதிற்றுப் பத்து என்ற தமிழ் நூலில் சேர அரசர்கள், மலையாள நாடுகளை ஆண்ட சிற்றரசர்கள் ஆகியோரின் வீரச்செயல்களை வருணித்து மலையாள நாட்டில் வாழ்ந்த கவிஞர்கள் பாக்கள் புனைந்திருக்கின்றனர். பதிற்றுப் பத்தில் முதற் பத்தும, இறுதிப் பத்தும் ஒழிந்த ஏனையப் பாடல்கள் இன்று கிடைத்திருக்கின்றன. இவற்றுள் ஏழாம் பத்து செல்வக்கடுங்கோ வாழியாதன் என்ற சேர அரசனை முன்னிலைப் படுத்திக கபிலர் என்ற பிராமணக கவிஞர் இயற்றியது. இப் புலவர் பாண்டி நாட்டில் [1]திருவடஹூர் என்ற ஊரில் பிறந்து, மலையாளத்தில் வந்து வதிந்து ''பொய் கூறுதவர்'' என்று பொருள்படும் பொய்யா நாவிற் கபிலர்[2] என்ற புகழ்பெற்ற கவிஞர் ஆவார். இவரது கவிதைகளின் தலைமக்களெல்லாம் மலைநாட்டிலுள்ள வள்ளல்களே. ஐங்குறு நூறு, சிலப்பதிகாரம் முதலிய வேறு கேரள நூல்களாகிய தமிழ்க் கவிதைகளும் உள. சமீப காலத்தில் கொல்லம் ஆண்டுத் தொடக்கம் வரை, தமிழக் கவிதை பாடிய கேரளத்தவர்களைக குறித்து அறிய முடிகின்றது. ஐயனரிதனர் என்ற கேரளத் தமிழ்க் கவிஞர் கி. பி. 7-ம் நூற்றாண்டிலோ 8-ம் நூற்றாண்டிலோ வாழ்ந்திருந்ததாகக் அறியப்படுகின்றது. 'முகுந்த மாலை' என்ற வடமொழித் துதிப்பாடல்களின் ஆசிரியராகிய குலசேகர ஆள்வாரைப் பற்றித திருவிதாங்கூரிலுள்ள எல்லோரும் கேள்விப்பட்டிருப்பாரன்றே. இந்த அரசப் புலவரும் தமிழ்ப்பாகைகள் புனைந்திருக்கின்றார்.

மேற்காட்டிய முறையில் தமிழ் நாடும் மலையாள நாடும் ஒரே அரசனின் கீழ் அமைந்திருந்த காலமவரை தமிழ் மொழியும் மலையாள மொழியும் ஒன்றாகவே இருந்தன. கேரளத்து நூற்களில் செந்தமிழிலிருந்து வேறுபட்ட சில வடிவங்களும் (ஒல்லார்) சொற்களும் (போத்து, பட்டி, கைப்பில முதலியவை) காணப்படாமலில்லை. ஆனால்

1 திருவாதவூர் என்றிருத்தல் வேண்டும்.
2 புறம் 174-10.

அவைகளெல்லாம் வட்டார வழக்கு வேறுபாடுகள் என்றே கணக்கிடப் பட்டுள்ளன. சிலப்பதிகாரம் தமிழின் ஐம்பெருங்காப்பியங்களில் ஒன் றாகத் தமிழர்களால் இன்றும் புகழப்பட்டு வருகின்றது. சோழ பாண் டிய நாடுகளைப் போன்று, மலைநாட்டையும் மூவரசரில் ஒருவர் ஆளு தல் என்ற முறைமை, பெருமாள்களின் ஆட்சிக காலத்தோடு முடிவுற் றது. ''கேரளோற்பத்தி'' என்ற புராணநூலே நம்பினால், பெருமாள் களும் கூட அரசப்பிரதிநிதிகளே தவிர அரசர்களல்லர். வரலாற்றுப் படி நோக்கினாலும், பெருமாள்கள் மூவரசர்களில் ஒருவரின் பிரதிநிதி களாகவே இருக்கக்கூடும். இராட்டிரகூடர், சாளுக்கியர், முதலிய வெற்றி ஆர்வம் கொண்டவர்களின் படையெடுப்பால பாண்டிய, சோழ அரசர்களின் சக்தி குறைந்ததோடு சில அரச மரபுகள் மறைந்தும், ஒன்று மற்றொன்றோடு கலந்தும மாற்றமடைந்தன. கி. பி. 1293-ஐ அடுத்து உயிர்நீத்த சுந்தரபாண்டிய ராஜாதிராஜனோடு மூவரசர்களின் சக்தி மறைந்துவிட்டது. 1310-ம் ஆண்டில் மலிககாபூர் என்ற முகமதி யப் படையெடுப்பாளன் தென்னிந்தியாவில் நுழைந்து நாடு முழுவதை யும் கொள்ளையடித்து, எல்லாப் பொருட்களையும் கவர்ந்து சென்றான். இந்த அனைத நிலையில் கொல்லத்துத் தேசிங்க நாட்டின் அரசனாக இருந்த ரவிவர்ம குலசேகர ராஜா பாண்டிய சோழ நாடுகளாக கைப் பற்றிக் காஞ்சிபுரத தலைநகரில் பேரரசனாகச் சில காலம் ஆண்டதுண்டு. ஆனால் கேரளரின் போகூழ் காரணமாக அவ்வரசன்கீழ் நிலமகள் நிலை யாக வாழவில்லை. விஜயநகரதை ஆண்ட இந்து அரசர்களும, ஆர்க் காட்டிலுள்ள நபாக்கன்மார்களும[1] சகதியும் நிலைபேறும் எய்தினர் எனினும், கிழககிந்தியக் கம்பனியார் திப்புவை வென்று, மலபாரில் நுழைந்ததுவரை உள்ள நீண்ட காலததில் மலையாளமும் பாண்டியும்[2] ஒரே அரசனின் ஆட்சியின்கீழ் என்றும் உட்பட்டிருந்ததில்லை.

''இறுதியாக ஆண்ட பெருமாள், பாஸ்கர ரவிவர்மா சேரமான் பெருமாளாயினும் சரி பள்ளிபாணப் பெருமாளாயினும் சரி, அவர் தனது நாடு முழுவதையும் தன் மக்களுக்கும் மருமக்களுக்கும் பங்கிட் டுக் கொடுத்தார்'' என்பதன்றோ நமது பழைய கதை. அன்று முதல் மலையாளத்தினருக்கும் பாண்டிக்காரர்களுக்குமுள்ள அன்றுடத் தொடர்பு அற்றுவிட்டது. அரசியல் காரணமாக யாருகும் பிறநாட்டு எல்லைக்குள் செல்லவேண்டிய தேவை ஏற்படவில்லை. அத்தேவை இருந்த காலத்தில் வழித்தடையாகக் கருதப்படாத மலயமலைத் தொடர், இகாலம் முதல் இருநாடுகளுக்குமிடையில் ஒரு பெரிய தடை யாக அமைந்தது. புனித யாத்திரை மேற்கொள்ளும் பகதர்களையும்

1 நபாக்கன்மார் – நவாப்புக்கள். 2 தமிழ்நாடு.

காடு சுற்றிப்பார்த்து மகிழ்பவர்களையும் தவிர சாதாரண மக்கள் மலை யிடுக்கிலுள்ள இடைவழிகள் வழி அங்கிருந்து இங்கும் இங்கிருந்து அங்கும் செல்லுதல் என்பது மிகவும் அரிதாகத் தொடங்கியது. இரண்டு கூட்டத்தினருக்கும இடையேயுள்ள தொடர்பு குறைந்த போது, அவர்கள் மொழிகளிலும் வட்டார வழகசு வேறுபாடுகள் மிகுந்தன. சிலப்பதிகாரத்திலும் மற்றும் காணப்படும் வேறுபட்ட வழகசுகளில் பெரும்பான்மையும் மலையாள நாட்டுக் கொடுந் தமிழில் மிகுதியாக அமைந்தன.

(2) ஏனைய நாட்டினர்க்கில்லாத பல தனிமுறைகள் மலை யாளத்தினருக்கு ஏற்பட்டதால், அவர்கள் ஒரு தனிக்கூட்டமாக மாறு தற்குள்ள வசதி வாய்த்தது.

மருமக்கள் தாயம், முன்குடுமி, முண்டு உடுத்தல் முதலியவை களெல்லாம் மாறுபட்ட ஆசாரங்களாகும். இவைகளில் ஒன்றும் இங் நாட்டில் புதியதாகத் தோன்றியதல்ல. பதிற்றுப்பத்தில் புகழப்படும் வள்ளல்களும், அரசர்களும் மருமக்கள் தாயம் அனுசரித்ததாக அந் நூலிலேயே கூறப்பட்டுள்ளது.* அன்றுட நட்பு உண்டாயிருந்த காலத்து, இவ்வகை வேறுபட்ட வழக்கங்களொன்றையும் ஒரு தனி முறையாகப் பாண்டிக்காரர்கள் கணக்கிடவில்லை. எனினும் இம் முறைகளில் அவர்களுக்குத் திருப்தி இருந்ததில்லை என்பதற்குச் சான்றுள்ளது. "மலையாள நாட்டை ஆள, அரசர்கள் இல்லாதாக, நம்பூதிரிகள் அப்போதப்போது அயல் நாடுகளில் சென்று பெருமாள் களைக் கொண்டு வந்தனர்" என்று கேரளோற்பத்தி ஆசிரியர் முழுக்க மிடும் ஐதீகத்திற்குக் காரணம் இந்தச் சலிப்பாக இருக்கலாம் என்று ஊகிகக இடமுண்டு. பரசுராமன் வழிவந்தவர்கள் என்று தங்களைக் கூறிக்கொண்டு நம்பூதிரிகள் கூடித்திரிய அரசர்களைத் தங்கள் சாதி யில் விவாகம் செய்வித்து மக்கள் தாய முறையை மேற்கொள்ள அனு மதிக்காமலிருந்தது தங்கள் சக்தி குறைந்துவிடுமோ என்று ஐயுற்ற-தன் காரணமாக இருகக்லாம். பாண்டிய சோழநாடுகளை வென்று வேகவதி (வையை)க கரையில் முடிசூட்டு விழா நடத்திய தேசிங்க நாட்டு இரவிவர்ம குலசேகரன் ஒரு பாண்டிய இளவரசியை மணந்த பின், அவர்களது சந்ததியின் நிலை என்ன என்பதை அறிய வழி யில்லை. அது எவ்வாருயினும், மருமக்கள் தாயம் முதலிய தனி ஆசாரங்கள் மலையாளநாட்டைத் தனியாக ஆக்கி, அதன்வழி மலை யாள மொழியைத் தமிழிலிருந்து பிரிப்பதற்கும் உதவின என்பது திண்ணம்.

* பேராசிரியர் மு. இராகவையங்கார் முதலியோர் இககருத்தை மறுத்துப் பதிற்றுப் பத்தில் கூறப்படுவது மக்கள வழியே என நிறுவுகின்றனர்.

(3) நம்பூதிரிகளின் செல்வாக்கும் ஆரிய திராவிடக் கலப்பும் : கிறித்து ஆண்டுத் தொடக்கத்தின் முன்னரே, பிராமணர், பௌத்தர், சமணர் ஆகிய ஆரியர்கள் தென்னாட்டில் புகுந்துவிட்டனர். ஆனால் அவர்கள் தனித்தனிக் குடும்பங்களாக வந்தனரேயன்றிப் பெரிய குழுவாக வந்ததில்லை. ஆரியப் பிராமணர் கிராமங்களாகக கேரளத்தில் குடியேறி வாழத் தொடங்கியதும் கி. பி. 6-ம் நூற்றாண்டிலாகும். அக்காலத்தில் சுடம்ப அரச வம்சத்தை நிறுவிய மதுரவர்ம ராஜா கோகர்ணத்திலிருந்து கேரளததிற்கு ஆரியப் பிராமணரை வரவழைத்துக் குடியேற்றினர் என்பதற்குச் சான்றுண்டு. அதன் பின்னாப் பாண்டியன், சோழன் முதலிய பிற வேந்தர்களும், அவர்களிடமிருந்து அதிகாரம் பெறற வேறு பெருமாள்களும் பல தடவைகளில் கேரளததில் பிராமணர்களைக் குடியேற்றி நிலபெறச செய்ததுணடு. சமீப காலத்தில் பிராமணர்க்கு ஊர் கொடுத்துக் குடியேற்றிப் புண்ணியம் தேடியவர் கேரள ராஜா சிறைக்கலை கோலத்திரியாவார். அவர் இரண்டு சுடவையாக ஸாகரம் (237) என்றும் சமுத்திரம் (257) என்றும் எண்ணிக்கையுள்ள பிராமண கிரகங்கள் நிறுவினர். வலிய வந்தேறிய பிற மதத்தினராகிய யூதர்களுக்கும், கிறிததவர்களுக்கும பலவிதப் பதவிகளும், உரிமைகளும, அதிகாரங்களும கொடுக்கத்தக்க வள்ளன்மை படைத்த நாட்டவர்கள், தாங்கள் வரவழைத்த சொந்த மதத்தினராகிய நம்பூதிரிகளுககு உபசாரங்களோடு எல்லாவித அதிகாரங்களும் தானம் செய்யத் தயஙகினா என்று ஐயுறக்கூட இடமில்லை. அதனால் நமபூதிரிகள் அவர்கள் வாழ்ந்த கிராமஙகளில் எல்லா அதிகாரஙகளையும் அடைந்திருகக வேணடும. கி. பி. 629 க்கும் 645 க்கும் இடையில் இந்தியாவுககு வந்த ஹியூன்சாங என்ற சீனநாட்டு யாத்திரிகன் தென்னிந்தியாவில், குறிபபிடததக்க ஆரியர்களின் குடியிருப்புகளைக் கண்டதாக எழுதவில்லை. கி பி. 774-ல் வீரராகவச் சக்கரவாத்தி கொடுங்கல்லூரில் இரவிகோர்த்தான் என்ற வணிகனுக்கு மணிகிராமத தலைமைப் பதவி கொடுத்ததைக் கூறும் செப்புப் பட்டயததில் பன்னியூர், சொவ்வர என்ற பிராமணக் கிராமக்காரர்களை, வேணாடு, குட்டநாடு ஆகியவற்றை ஆண்டவரோடு* சம நிலையில் சாட்சிகளாக அமைத்திருப்பதால், 774-ம் ஆண்டினிடையில் நம்பூதிரிகள் கேரளத்தில் குறிப்பிடத்தக்க சில அதிகாரங்களைப் பெற்றிருந்தனர் என்பது தெளிவாகிறது. மதுரவர்மா 6-ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் பிராமணர்களைக் குடியேற்றி நிலபெறச் செய்த செய்தி முன்னரே கூறப்பட்டுள்ளது. இவைகளையெல்லாம் தொகுத்துப் பார்க்கும்போது நம்பூதிரிகள் கேரளத்தில் நிலையாக

* ஆண்டவர் – அரசன்.

வாழத் தொடங்கியது கி. பி. 600 முதல் 774 வரையுள்ள ஒன்றே முக்கால் நூற்றாண்டிற்குள்தான் என்று ஊகிக்க முடியும். கொல்ல மாண்டின் தொடக்கமாகிய 825 ஐ ஒட்டியதாகும் நாம் இங்கு கூறும் கால கட்டம். பெருமாள்களின் ஆட்சி முடிவடைந்ததும், சங்கராச் சாரிய சுவாமிகள் அவதரித்து திக்விஜயம் செய்து 'அத்துவைத சாங்கிர மதம்' நிறுவியதும், கிட்டதட்ட இக்காலகட்டமே. இந்த இரண்டு நிகழ்ச்சிகளில் ஒன்றின் நினைவாகவே கொல்லமாண்டு என்றொரு ஆண்டு தொடங்கியது என்றும் பரவலான எண்ணம் உண்டு. மூவரசர்களின் குலங்கள் மறைந்து, தென்னிந்தியாவில் அரச உரிமைச் சண்டைகளும் குழப்பங்களும் அனுதை நிலையும் தொடங்கியதும் இக் காலத்தில்தான்.

'இது ஒரு நல்ல தருணம்' என்று கருதி நம்பூதிரிகள் அவர்களுடைய அதிகாரங்களை மிகுதியாகச் செலுத்தத் தொடங்கினர். மேல் காட்டப்பட்ட நிகழ்ச்சிகள் அவர்களுடைய உயர்ந்த ஆசைகளுக்குத் துணை நின்றன. சிறப்பாக மருமக்கள்தாயம் முதலிய கேரளத்தி லுள்ள தனிப்பட்ட ஆசாரங்கள் அவர்களது ஆசைகள் நிறைவேறத் தேவைக்கு மிஞ்சிய நிலையில் துணை செய்தன. பண்டு சத்திரிய அரசர்கள் மேற்கொள்ளாதிருந்த மருமக்கள்தாயத்தை அவர்களும் மேற்கொள்ள வேண்டுமென்று நம்பூதிரிகள் விதித்தனர். நாட்டின் பாதுகாவலர்களாகிய ''அறுநூறர்[1], பதினாயிரத்தார்'' என்றும் மற்றும் கூறப்படும் நாயர் கூட்டங்களோ, இச்செய்கையில், சிறிதும் தடை மேற்கொண்டதில்லை. நாட்டுப் பரம்பரைப் பழக்கங்களை நாட்டில் வாழ்பவர்களெல்லாம் மேற்கொள்ளவேண்டும் என்பது அவர்களது நாட்டுப்பற்றின் வெறியாக அமைந்தது. இதைத தவிரப் ''பேரொளிபடைத்தது'' என்று பண்டே புகழ்பெற்ற ஆரியச் சீர்திருத்தத்தின் ஆசாரியர்களும் நடைமுறையாளர்களும் இந்த நம்பூதிரிகளாக இருந்தனரன்றோ. ஆரிய நாகரிகத்தின் பல்வேறு வழிகளெல்லாம் தங்கள் கைவசமிருந்தது இவர்களுக்கு ஒரு பெரிய வாய்ப்பாக அமைந்தது. சுருக்கிக கூறினால் புதிதாய் வந்த ஆரிய வர்க்கமும், பழங்குடி மக்களாகிய திராவிட வர்க்கமும் ஒன்றோடொன்று கலந்து இணைவதற்கு வேண்டிய கருவிகளெல்லாம் பொருந்தி வந்தன. இரண்டும் கூடிச் சேர்ந்து ஒரு கஷாயமாயிற்று. நன்றாய்க் கலந்து இணைந்ததனால் அக்கஷாயத்திற்கு இயல்பாக வீரியம் மிகுந்திருந்தது. போதாததற்குச் ''சிறியன் கிறித்துவாகள்'' ஒரு மருந்துப் பொடியும் சேர்த்தனர். அதனை உண்டதனால் கேரளத் திருமகளுக்கு உடல் வளமும், மதி விரிவும், ஒளியும் வளர்ந்தன.

1 அறுநூற்றுவர் நாயர்கள்.

பாண்டிய சோழ நாடுகளைவிடக் கேரளத்தில் ஆரியத் திராவிடக் கலப்பிற்குப் பலம் மிகுந்திருந்தது. திருமணம் வழியுள்ள ஆரிய இரத்தத் தொடர்பு மற்றநாடுகளில் இந்த அளவில் திராவிடர் அடைவதற்கு வசதி ஏற்படவில்லை. அதனால் கேரளத்தவரின் ஆரியச் சீர்திருத்தத்திற்கு அதற்கேற்ப ஒரு "மாற்று" மிகுந்துளது என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும். "நம்பூதிரிகள் நாட்டு மகளோடு பொருந்துதற்காக வாணுசிரம தருமங்களைத் தவிர்த்தனர் என்ற ஒரு பழிக்கும் இடங்கொடுக்கவில்லை. உண்மையை நடுநிலையில் நின்று எண்ணினால், ஸ்மிருதியில் விகற்பம் அனுமதித்துள்ள இடத்தில் ஏனைய நாட்டினர் ஆதரிக்காத விகற்பங்களை இவர்கள் ஏற்றுக் கொண்டனர் என்பதே உளது. "மூத்த மகனுக்கு மடடும் வேத முறைப்படி இல்லற வாழ்வு. ஏனையோர்களுக்குத் துறவு போதும்" என்ற ஒரு வசதியை அவர்கள் நடைமுறையிலாகக கொண்டனர் என்றால், அதற்குப்பதில் பிரமச்சரிய விரதததிலும் இல்லற ஆசாரங்களிலும் தீவிரக் கட்டுப்பாடுகளையும் ஆக்கி வைத்தனர். பெண் பருவமடைந்த பின்னுள்ள திருமணம் தடைசெய்யப்படாமையால் பருவமடைந்த பெண்கள் மணமாகாதிருத்தலுமுண்டு. விதவைகள் தலை மொட்டையடிததல் முதலியவையும் வேண்டா என்றும் விதித்தனர். இவ்வகை ஆசார மாற்றங்கள் குழப்பம் ஒன்றும் இல்லாது மன ஒருமைப்பாட்டோடு நடந்ததில் வியப்புத் தோன்றுகிறது. பாய்ந்துவரும் ஆறு காயலில் விழுவது போன்று, வந்து நுழைந்தவராகிய ஆரியர் இங்கிருந்த திராவிடரில் கலந்தனர் என்பதே உண்மை. வேறுபட்ட இனத்தவராகிய மக்கள் கலந்தது போன்று அவர்களது மொழிகளும் கலப்பில் பொருந்தின. திராவிட இமகிரியினின்று பாய்ந்து கொடுந்தமிழ் மொழி இவ்விதத்தில் சமஸ்கிருத யமுனையோடு கலந்து மலையாளமாக அமைந்தது. யமுனையின் சங்கமம் கங்கைகருக் செழிப்பும் பெருமைக் காரணமும் ஆகும் என எண்ணினால், மலையாளத்திற்குக கொடுந் தமிழாயிருந்த நிலையைவிடப் பெரிதும் மேன்மை ஏற்பட்டதென்று கொள்ள வேண்டும்.

12. இனிக கொடுந்தமிழாயிருந்த மொழி எவ்வாறு மலையாளமாகத் திரிந்தது என்பதைக் குறித்துச் சிந்திககவேணடும். வட்டார வழக்குகளைக கொண்டு மாததிரம், மொழி வேறுபட்டதெனக கருதுவதற்கு நியாயமில்லை. அது மட்டுமன்று; வட்டார வேறுபாடுகள் பதிற்றுப்பதது முதலிய நூல்களிலும் ஏற்பட்டிருந்தன என்றும், எனினும் அவைகள் இன்றும் தமிழ நூற்களாகவே சுருதப்படுகின்றன என்றும் கண்டோமன்றே? அதனால் இன்ன இன்ன இனங்களில் மலையாளம் தமிழிலிருந்து வேறுபடும என்று நாம் வேறுபடுததத் தக்க

விதம் சில பொதுவிதிகளைக் காட்டினுலேயே, மலையாளம் ஒரு சுதந்திர மொழி என்ற நிலையை எய்தும். அவ்வாறு ஏதேனும் விதிகளும் உளவோ என்று ஆராயலாம். கீழ் விளக்கும் கொள்கைகளை ஒட்டித் தமிழ் – மலையாள வேறுபாடுகளை அமைக்கலாம்.

1. மெல்லினமாக்கல் 2. அண்ண ஒலியாய்த் திரிதல் 3. உயிர்க் குறுக்கம் 4. பால்வேறுபாட்டொழிப்பு 5. அரிய பழைய வழக்குகளைப் பயன்படுத்தல 6. அங்கபங்கம்.

1. மெல்லினமாக்கல் :

மெல்லின எழுத்து, தன்னை அடுத்துப் பின்வரும் எழுத்து வல்லினமெனில் அதனையும் சென்று பாதித்து ஆக்கிரமித்து மெல்லின மாக்கிவிடும். மெல்லினம் முன்னும் வல்லினம் பின்னுமாயுள்ள ஒற் றினை வந்தால், மெல்லெழுத்து இரட்டித்த பயனை விளக்கும். வல்லி னத்தின் ஒலியை மாற்றி அதன் ஒலியைக் கேட்க முடியாத நிலையில் ஆகுகும். அதனால்

ங்க்>ங்ங; ஞ்ச>ஞ்ஞ; ந்த்>ந்ந; ம்ப>ம்ம; ன்ற>ன்ன என ஆகும்.

எ-டு.

நிங்கள்	– நிங்ஙள்	வந்தான்	– வந்நான்
நெஞ்சு	– நெஞ்ஞு	திரும்புக	– திரும்முக
தின்தான்[1]	– தின்நான்	பஞ்சி	– பஞ்ஞி
சிம்புக	– சிம்முக	சொன்ருன்[2]	– சொன்னன்
பஞ்சம்	– பஞ்ஞம்	கன்று	– கன்னு[3]
மாங்காய்	– மாங்ஙா	ஒன்று	– ஒன்னு[4]

வல்லினம் ஒரு விகுதியின் முதல் எழுத்தாக வருமிடத்தெல்லாம் இவ்விதி முழுவதும் நடக்கும். அவ்வாறுள்ள விகுதிகள் இரண்டு உள்ளன. அவை ''து'' என்ற இறந்தகால விகுதியும், ''கள்'' என்ற பன்மை விகுதியும் ஆகும். ஏனைய இடங்களில் இவ்விதி சில இடங் களில்தான் செயலாற்றும். மெல்லினத்தை அடுத்துவரும் எழுத்தையும்

1 தின்ருன் – தின்னன் என்றிருக்கவேண்டும்

2 சொற்றன என்ற வடிவமே தமிழிலும் உள்ளது.

3 இது தமிழுக்கும் பொதுவனறு என முற்றிலும் கூறமுடியாது. அங்ஙனம் இங்ங னம, யாங்ஙனம் முதலிய சொற்களில் ங்க் – ங்ங ஆதலும், சிம்புதல் – சிம்முதல், திரும்புதல – திருமுதல முதலியவற்றில் ம்ப் – ம்ம் ஆதலும், சில இலக்கியத் தமிழி லும வட்டார வழக்கிலும் காணப்படுகினறன.

4 மலையாளத்தில் 'ஒந்நு' என ஒலிக்கப்பட்டாலும், ஒன்று என்பதன் மெல்லினமாதல் ஆகிய இதுபோனறவை பொருள விளக்கத்திற்காக 'ஒன்னு' எனத் தரப்படு கின்றன.

தன்னுள் ஆக்கித் தன் மயமாக்கித் தன் உருக்கொடுக்கும் ஒரு பெருஞ் சக்தி மலையாள மொழிக்கு வந்துசேர்ந்ததால், அது மலையாளிகளின் சம்ஸ்கிருத ஒலிப்பையும் பாதிப்பதுண்டு. சமஸ்கிருதத்திலாயின் ஒவ் வொரு வல்லினத்திலும் முதல் வல்லெழுதைவிட, மூன்றும் வல் லெழுத்துக்கே இம்மாற்றம் பெரிதும் நிகழும்.

மங்கலம் – மங்ஙலம்	அஞ்ஜனம் – அஞ்ஞனம்
மண்டபம் – மண்ணபம்	சந்தனம் – சந்நனம்
அம்பா – அம்மா[1]	

ஆனால் தற்பவங்களில் அல்லாது தற்சமங்களில் மெல்லினமாக் கல் எழுத்தில் நிகழ்வதில்லை.

2. அண்ண ஒலியாய்த்திரிதல்:

'த' வர்க்கம் என்று கூறின், தமிழ் எழுதது வரிசைப்படி த, ந என்ற இரண்டு எழுத்துகளே உளவன்றே. இவற்றை உறழ்ந்தும் ஒத்தும் இணைக்கும்போது, த்த, ந்ந, ந்த என்ற மூன்று ஒற்றிணைகள் அமையும். இவற்றின் முன்வரும் உயிர் அ, இ, எ, ஐ என்ற அண்ண ஒலிகளில் ஏதேனும் ஒன்றாயின், அவற்றின் அண்ண ஒலிமுறை[2] இந்த அண்பல் ஒலிகளில் பரந்து அவைகளை அண்ண ஒலிகள் ஆக்கும். அண்பல் ஒலிகளுக்கு அண்ணமாற்றம் அளிப்பதால் இம் மாற்றத்திற்கு அண்ணமாய்த்திரிதல் என்றும் பெயரிடப்பட்டது. பொருந்துமிடம் நோக்கியே இத்திரிதலை நிகழ்த்த வேண்டும். எவ்வா றெனின்

த — ச
ந — ஞ
த்த — ச்ச
ந்ந — ஞ்ஞ
ந்த — ஞ்ச

இந்த விதியும் உருபுகளைப் பொறுத்தவரையிலும் முழுவதும் பொருந்தித் தோன்றுகின்றது. அதனால் ''த்து'', ''ந்து'' என்று முடிகின்ற இறந்தகால வடிவங்களே இங்கு முக்கிய எடுத்துக்காட்டு கள். ''நத'' என்பதை ''ஞ்ச'' என்று திரிக்குமபோது முன்கூறிய மெல்லினமாதலும் நிகழ்ந்து இறுதியில் 'ஞ்ஞ' என்று முடியும் என் பதை நினைத்துகொள்க.

1 இசசொறகளில வரும் ஒற்றிணைகளில் g, j, ḍ, ṭḍ, b எனற கடமொழியின் மூன்றும் வருக்க ஒலியே உளளன.

2 ந்த் என்பது ஞ்ச் ஆதல் (திரிந்தான – திரிஞ்சான) பேச்சுத் தமிழில உளது. ஆயின அது ஞ்ஞ் எனறு மெல்லிணை ஆவதிலலை. தத – ச்ச ஆதல (படிசசாள்) பேச்சுத்தமிழிலுளது. நகர ஞகரபபோலி இலக்கியத்தமிழிலுளது. நண்டு–ஞண்டு.

அல — அலைந்தான் — அலஞ்சான் — அலஞ்ஞான்
அறி — அறிந்தான் — அறிஞ்சான் — அறிஞ்ஞான்
பிடி — பிடித்தான் — பிடிச்சான்
வை — வைத்தான் — வெச்சான், வச்சான்
வா[1] — வாய்த்து — வாய்ச்சு
சீ — சீந்து — சீஞ்சு — சீஞ்ஞு
தே[2] — தேந்து — தேஞ்சு — தேஞ்ஞு
ஐந்து — அஞ்சு
நெருககம் — ஞெருககம்
நான் — ஞான்
நண்டு — ஞண்டு
நரம்பு — ஞரம்பு

3. உயிர்க்குறுக்கம் :

உயிர்களை வேண்டிய அளவுக்கு முற்றிலும் திறந்து ஒலிக்காது, அடைத்தொதுகி ஒலிப்பதுதான் இதன் தன்மை.

அ. இது முகியமாக உகர ஒலியில்தான் காணப்படுகின்றது. குறைத்து (மூடிப்பிடித்து) ஒலிப்பதனால் இதற்குக் குற்றியலுகரம் என்று பெயர் கொடுகக்ப்பட்டிருக்கிறது. இது தமிழிலும் இல்லாத தன்று. ஆனால் தமிழில் இது ஒரு ஒலிவேறுபாடேயன்றி இலகக்ணப் பகுதிகளையோ பொருளையோ பாதிப்பதில்லை.[3] மலையாளத்திலோ முன் வினையெச்சதிற்கும வினைமுற்றிற்குமுளள வேறுபாடு பலவிடங்களி லும் உகரத்தின் ஒலி வேறுபாட்டால் குறிக்கப்படுகின்றது. முற்றுகர இறுதி எனின் வினைமுற்று ஆகும். குற்றியலுகரம் இறுதி எனில் முன்வினையெச்சம் என்று கூறப்படும் இறந்தகால வினையெச்சம் ஆகும் என்பது விதி.

எ–டு.

வினைமுற்று – கண்டு	முன்வினையெச்சம் – கண்டு்		
வினைமுற்று – கேட்டு	முன்வினையெச்சம் – கேட்டு்		
இயற்பெயர் – வேலு	ஆயுதம்	– வேலு்	
இயற்பெயர் – சங்கு	இதயம்	– சங்கு்	

---

1 வாய்(த்தல்), சிந்துதல் = கிறுதல், பிளததல்.
2 தேய்(தல்)

3 குறிய இ, உ ஆகியவறறைப் புணர்சசி வேற்றுமையும் பொருள் வேற்றுமையும் சோக்கி வேறெழுத்தெனறு வேண்டினர் எனபர் இளம்பூரணர் (தொல்காப்பியம், எழுததிகாரம் 2.)

குற்றியலுகரத்தை ஒரு உகரமாகக் கணக்கிடுவதில்லை. தனியாயுள்ள மெய்யினை ஒலித்து நிறுத்தும் வசதியின்மையைப் போகசும் பொருட்டுக் கொடுக்கும் ஓர் உயிர் அடையாளம் என்றே அது இலக்கணத்தில் கருதப்படுகிறது. அதனால் வேறோர் உயிர் முன்வரும் போது இது முழுவதும் கெடும். பின்வரும் ஒற்றின் இரட்டல் முதலிய வற்றிற்கும் இது காரணமாவதில்லை. தமிழ் இலக்கணத்திலோ, ஏனைய உயிர்களோடு ஒத்த நிலையில் குற்றியலுகரத்திற்கும் விலை உண்டு. தமிழ் விதிப்படியுள்ள முத்துகுடை, மாட்டுப்பொங்கல் முதலிய சில இரட்டல் வந்துள்ள வழக்குகள் இன்றும் மலையாளத்தில் எஞ்சிக் கிடக்கின்றன.

(ஆ) பகுதி, உருபு ஆகியவற்றின் இறுதியில் வரும் ஐகாரம் குறைந்து அகரம் ஆகும்.[1] எ-டு.

தமிழ்	— மழை	இலை	விலை	உடைய	அடைந்தான்	ஐந்து
மலையாளம்	— மழ	இல	வில	உடய	அடஞ்ஞான்	அஞ்சு

இறுதியில் காட்டப்பட்டுள்ள சான்று போன்று அரிதாக இறுதியல்லாத ஐகாரமும் அகரமாய் விடுவதுண்டு. ஐகாரம் அ+அ+இ என்ற மூன்று உயிர்கள் சேர்ந்து உண்டாகிய சந்தியக்கரமாகும என்று வடமொழியில் கணிக்கப்படுகின்றது. ஆனால் மலையாளத்திற்குத தமிழ் உச்சரிப்பே தேவை.

அம்முனி கரம் யகர மென்றிவை
எய்தின் ஐயொத திசைக்கும் அவ்வோ
டுவ்வும் வவ்வும் ஔவோ ரன்ன.[2]

என்ற நன்னூல் நூற்பாவின் கருத்தை நோக்கும்போது ஐ, ஔ ஆகிய உயிர்களின் உறுப்பொலிகள் இவை என்பது தெளிவாகின்றது.

ஐ = அ+இ அல்லது அ+ய்
ஔ = அ+உ ,, அ+வ்

ஐகாரத்தைப் பிரிக்கும் இரண்டு முறைகளில் முதலிலுள்ளதைக கன்னடமும், இரண்டாவதை மலையாளமும் ஏற்றுகொண்டன.

தமிழ்	மலையாளம்	கன்னடம்
மழை	மழய்	மடஇ, மடெ

1 பேச்சுத்தமிழில் இறுதி ஐகாரம அகரமாவதிலலை. எனினும அகரத்திற்கும், எகரத்திற்கும் இடையொலியாக மாறும். குறைத்தான – குறச்சான் என்பதில் ஐகாரம் அகரமாகும்.

2 நன்னூல 125.

'மழய்' என்பதன் அக்ரம் புணர்ச்சியில்தான் தெளிவாகக் காணப்படும். இந்தத் தன்மை வேறுபாடு கொண்டு, இவ்வாறு தோன்றும் அகரத்தைச் சரியான அகரததிலிருந்து வேறு பிரித்தறிய வழியுமுண்டு.

தடை — தட = தடயுங்ஙு
தட — தட = தடவுங்ஙு

என்ற மாதிரியில் ஐகாரத்தின் இடத்தில் வந்த அகரத்திற்குப் புணர்ச்சியில் யகரமும், தனி அகரததிற்கு வகரமும் துணையாய் வரும். இவ் வேறுபாட்டின் அடிப்படையில் மலையாளததிலுள்ள அகரங்களை அண்ண ஒலி என்றும் சுததம் என்றும் இலக்கணத்தில் வகைப்படுத்த வேண்டியுள்ளது.[1] தமிழிலுள்ள ஐகாரத்தைக கன்னடர்கள் எகரமாக மாற்றியுள்ளனர். அதனால் கன்னடத் தொடர்புள்ள மலையாளப் பகுதிகளில் சமீபகாலம்வரை சில உருவங்களில், சிறப்பாக "க்க" என்ற எழுத்தை முதலில் கொண்ட உருபு சேரும்போது அகரத்திற்குப் பதில் எகரம் எழுதப்பட்டுவந்தது. "மழெக்கு", "மறககுங்ஙு" முதலியன. குண்டர்ட்டின் அகராதியில் பல இடங்களிலும் இவ்வாறு அச்சிடப்பட்டிருக்கின்றது.

(இ) பொதுவிதி இயற்றத்தக்க முறையில் இல்லை எனினும் அகர எகரமும் இகர உகரமும் சிலவிடங்களில் மாறிமாறித் தோன்றுகின்றன.[2]

எ–டு.

தமிழ்	மலையாளம்
சொல்லெணம்	சொல்லணம்
பருமாற்றம்[3]	பெருமாற்றம்
படுக	பெடுக
புரூவு	பிரூவு, ப்ரூவு
பிரான்	புரான்
சொல்லின்ரூன்[4]	சொல்லுன்னு
நாட்டின்புறம்	நாட்டும்புறம்
ஸமயத்தின்கல்[5]	ஸமயத்துங்கல்

1 இவ்வேறுபாடு சொறகளின் தோற்றம் என்ற பகுதியில் குறிக்கப்பட்டுள்ளது.
2 புரண்டான – பிரண்டான் முதலிய பேச்சுத் தமிழில் உகரம் இகரம் ஆகின்றது. கங்கை – கெங்கை போன்றவற்றில் அகரம் எகரம் ஆகின்றது.
3 பரிமாற்றம் என்றிருகக வேணடும்
4 சொல்கினரூன எனறே தமிழில் உள்ளது. சொல்லின்ரூன் முதலிய வடிவங்கள் இராமசரிதம் முதலிய பழைய மலையாள இலக்கியங்களில் காணப்படுகின்றன.
5 சமயத்தினகண்.

இதில் ''எணம்'' என்பது அணம் என்று ஆகியதும் இன்ருன் என்பது உன்னு என்ருகியதும் புறநடையின்றி முழுதும் பொருந்துகின்றன.

4. பால் வேறுபாட்டொழிப்பு :

தமிழில்[1] காலத்தைக் குறிக்கும் சொற்களாகிய வினைமுற்றுக்களில், எழுவாயின் பால் இடம், எண் ஆகியவைகளைக குறிக்கும் விகுதிகள் சேர்க்கப்படுகின்றன. மலையாள மொழி இவற்றையெல்லாம் முற்றிலும் தவிர்த்துவிட்டது.

	தமிழ்	மலையாளம்	
அவன்	வந்தான்	அவன்	வந்று
அவள்	வந்தாள்	அவள்	வந்று
அவர்	வந்தார்	அவர்	,,
நீ	வந்தாய்	நீ	,,
நீங்கள்	வந்தீர	நிங்ஙள்	,,
நீர்	வந்தீர்	நிங்ஙள்	,,
நான்	வந்தேன்	ஞான்	,,
நாங்கள்	வந்தோம்	ஞங்ஙள்	,,

நம்பூதிரிப் பிராமணர்கள் இவ்வொழிப்பிற்கு உதவியிருக்க வேண்டும். ஸமஸ்கிருதத்தையோ அதன் வழக்கு மொழிகளில் ஒன்றையோ பேசவேண்டியிருந்த நம்பூதிரிகளுக்கு வினைமுற்றுக்களுக்கு எழுவாயோடு பொருத்தம் வேண்டும் என்பது ஓர் அரிய செய்தியாகத் தோன்ற இடமில்லை. ஆனல் இந்த விதியில் வடமொழிக்கும் தமிழிற்கும் ஒரு பெரிய வேறுபாடு உள்ளது. ஸமஸ்கிருதத்தில் பால் விகுதிப் பொருத்தம் வேண்டியதன்று. தமிழில் அதுவும் வேண்டும். மலையாளம் எதுவும் வேண்டாம் என அமைத்தது. இடவிகுதிகளையே சரியாகப் பார்த்து வழங்குவது கடினம் என்று நினைத்திருந்தவர்கள், பால் வேறுபாடு என்ற மூன்ருவதொன்றையும் சேர்க்க வேண்டும் என்ற நிலை வந்தபோது ''ஆயின் எல்லாம் ஒன்ருக ஒழியட்டும்'' என்று தவிர்த்துக கொள்ளுதலில் நல்ல நியாயம உண்டு. சிறப்பாக வினைமுற்றுக்களில் இடம் முதலிய வேறுபாடு குறிப்பதில் தமிழுள்ள விதி ''பயனற்றவைகளை மீண்டும் செய்தல்'' போன்று சிறிதும் தேவையற்றது என்று தோன்றும. ஞான், நீ, மற்றுள்ளவர் என்பவையன்ருே இட வேறுபாடுகள். இவ்வேறுபாடுகளை வினைவடிவத்தில்

1 சங்கத் தமிழிலும் இடைக்காலத் தமிழிலும் பால் காட்டும் விகுதியினறிச சில முறுக்கள் காணப்படுகின்றன. உம்மிறு (தரும) சின், இசினிறு (நுவனறிசின்), முதலியன.

காட்டுதற்கு மூவிடப் பெயர் உறுப்புக்களையே எடுத்துத் தேய்த்துரைத்து ''உருபு'' (விகுதி) என்று கூறி, எல்லா மொழிகளும் பயன்படுத்தும். ஆனால் உட்பிணைப்புடைய ஸமஸ்கிருதம் முதலிய மொழிகளில் விகுதியின் இடம் வகிப்பன மூவிடப் பெயர்களின் தேய்ந்து மறைந்த துண்டுகள் என்பதை ஒலி இலக்கண ஆசிரியர்களால் ஊகிக்க முடியுமே தவிர சாதாரண மனிதர்களால் தெளிவாய்க் காணமுடியாது. ஒட்டுநிலை அமைப்புடைய தமிழிலோ மூவிடப் பெயர்கள், இடவிகுதிகள், ஆகியவை தெளிவாய்க் காணப்படுகின்றன.

வடமொழியில் :

ஒருமை எண்	பன்மை எண்
ஸ கரோதி	தே குர்வந்தி
த்வம் கரோஷி	யூயம் குரூத
அஹம் கரோமி	வயம் குர்ம்ம

''அஹம்'' முதலிய ஸர்வ நாம உருவங்களுக்கும் ''மி'' முதலிய உருபுகளுக்கும் இடையில் ஒரு நெருக்கமும் வெளிப் பார்வையில் காணப்படுவதில்லை. இனித் தமிழில் இவ்வொற்றுமையை நோக்குக.

எழுவாய்	பயனிலை
அந்த பொத்தையன்	உளறினான்
மாமனார்	சொன்னார்
நீர்	சொன்னீர்
நீங்கள்	சொன்னீர்கள்
நான் (= ஏன்)	சொன்னேன்
நாங்கள் (ஞேம்)[1]	சொன்னேம்
அது அப்படி	வந்தது

இச்சான்றுகளில் எழுவாயிடத்தில் நிற்கும் மூவிடப் பெயர்களும் அவைகளில் காணப்படும் பால் எண் விகுதிகளுமே, பயனிலை உருவங்களிலும் மீண்டும் வருவதைத் தெளிவாய்க காணலாம்., எண்ணடை சேர்க்கும்போது அஃறிணைப் பெயர்களுக்குப் பலவின் பால் விகுதி வேண்டா என முடிவு கட்டியுள்ள திராவிட மொழிக்கு, இந்த ''மீண்டும் கூறல்'' சிறிதும் பொருந்துவதில்லை என்ற உத்தி கருதி, மலையாளிகள் இடம் முதலிய வேறுபாடுகளை முழுவதும் தவிர்த்தனர்.

உண்மையில் கால்டுவெல் துரை கருதுவது போன்று, தனிப்பட்ட ஒரு வினைமுற்று உருவமே இல்லை. பார்த்து என்பது ''பார்''

1 'ஓம்' என நிருக்க வேண்டும்.

என்ற பகுதியின் இறந்த கால உருவம். அதனோடு ஆன், ஆள் ஆகிய பால் விகுதிகளில் ஒன்றைச் சேர்த்தால் அது எழுவாயோடு உள்ள பொருத்தத்தால் ''முற்றுவினை'' என்று சொல்லப்படும் முககிய வினைச் சொல் ஆகிவிடும்.

''அ'' என்ற சுட்டெழுத்தைச்[1] (படர்க்கை இடப் பெயர்) சேர்ப்ப தனின் எச்சவினையின் (முககியமற்ற வினைச சொற்களில்) உட்பட் டுப் பெயரெச்சமாய் முடியும். ''நான் பார்த்த (பார்தது – அ) புஸ்தக மானது'' முதலியன எடுத்துககாட்டுகள். பார்த்த என்ற பெயரெச்சத் தோடு அன், அள், அர், து ஆகிய பால் விகுதிகளைச் சேர்த்தால், பார்த்தவன், பார்த்தவள், பாத்தவர், பார்த்தது முதலிய காரக வினை யாலணையும் பெயர்கள் (Nominal Agents) உண்டாகும். பார்த்து என்ற இறந்த கால வடிவம் ஒரு மாற்றமும் செய்யப்படாது தனியே கின்ருல் வினையெச்ச வடிவமாகும். எ-டு.

''புஸ்தகம் பார்த்துச சொல்லறேன்''[2]

தமிழிலக்கணத்தின் போக்கு இங்ஙனமாகும். பார்த்து என்ற வடிவம் தனியே கின்ருல் வினையெசசமும், ஆன், ஆள் என்ற பால் விகுதி களைச் சேர்ததால் வினைமுற்றும் ஆகுமன்ரே? இங்கு மலையாளி செய்த மாற்றம் இத்தனையே: பால் முதலிய வேறுபாடுகள் தேவை யில்லை; அவற்றிற்குப் பதில், தமிழில் குற்றியலுகரமாகக் கூறப் படும் து என்ற விகுதியின் உகரத்தை எடுத்தலோசையோடு ஒலித் தால் வினைமுற்றாகும். படுத்தலோசையோடு ஒலித்தால் வினையெச்சம் என்பது தமிழ் முறையே. பயனிலைகளின் இறுதியிலுள்ள உகரம் எடுத்தலோசையோடு உச்சரிக்கப்பட்டுள்ளது என்பது ''வந்நூ ஶரத் ஸமயம்புத மொன்னகன்னூ''[3] முதலிய வழக்குகளால் வெளிப்படை. பார்த்தல்ல, ''பார்ததிருகுந்நு'' முதலிய வினையெச்ச வடிவங் களிலோ உகரம் கெடுவதனல் அங்கு அது படுததலோசைப் படுத்தப் பட்டிருக்கிறதென்பதும் தெளிவு. இவ்வாறு மலையாளதில் பாலெண் விகுதிகளைத் தவிர்த்தலை மிகவும் எளிதில் செய்ய முடிந்தது.

5. அரிய வழக்குகளைப் பயன்படுத்தல் :

கிலம் என்ருல ''வழக்கரியது'' – ஒரு காலத்தில் வழக்கில் இருந்து காலப்போக்கில் வழககில்லாது போனது. அததகைய விகுதி களையும் உருபுகளையும் விலக்காது பயன்படுததுதலே அவைகளைப்

1 பெயரெச்ச உருபு சுட்டெழுத்தா ?

2 சொல்கிறேன்.

3 வந்தது சரத்காலம்; மேகம் சிறிது அகன்றது: இதில் வந்நு, அகன்னு ஆகியவை எடுத்தலோசையால நீணடன.

பேணல். தமிழில் ஒரே இலக்கணத் தொடர்பைக் குறிப்பதற்கு "நன்னூல்" விளக்குகின்ற முறையில் வேறுபட்ட பல விகுதிகள் பண்டு வழக்கிலிருந்தன. அவற்றில் பெரும்பாலும் பேச்சுத் தமிழ் மொழியில் வழக்கற்றுப் போயின. செய்யுளில் கூட எல்லாம் வழங்கப் படவில்லை. அவ்வாறுள்ள வழக்கற்ற வடிவங்கள் மலையாளத்தில் வழங்குகின்றன. ஒன்றிரண்டு எடுத்துக்காட்டுகள் கூறுவோம்.

(அ) பின் வினையெச்சம்: ஸம்ஸ்கிருதத்திலுள்ள "தும்" (துமுன்) என்ற விகுதியின் இடத்தை வகிக்கும் எதிகால வினையெச் சத்தைக் குறிக்கும் 'ஆன்' என்ற விகுதி தமிழில் இபபோது வழக்கில் லாது போய்விட்டது. நிகழ்கால வினையைக் குறிக்கும் நடுவினை யெச்சமே எதிகாலப பொருளிலும் வழங்கப்படுகின்றது. எ-டு.

தமிழ்	மலையாளம்
குளிக்க வந்தேன்	குளிக்கான் வந்து
வாசிக்கப் போகிறேன்	வாயிக்கான் போகுன்னு
இருக்கச் சொன்னா	இரிக்கான் சொன்னர்

தமிழில் நடுவினையெச்சம் வழங்கவேண்டுமிடங்களில் மலையாளம் அதனை முன்வினையெச்சமாக ஆக்கியுள்ளது. எ-டு.

தமிழ்		மலையாளம்
சொலலத் துடங்கினான்	=	சொல்லித் துடங்ஙி
சொலலக்கூடாது	=	சொல்லிக்கூடா

மொத்ததில் மலையாளதில் சரியான நடுவினையெச்சம் வழக்கில் மிக வும் குறைந்துபோய்விட்டது. "சொல்லப்பெடும்" என்ற செயப்பாட்டு வழக்கு, சொல்ல வேணம், வேண்டா முதலிய வியங்கோள் வினைகள், சொல்லாம் (சொல்+ஆம)[1] என்ற உடன்படலைக் குறிக்கும் வினை ஆகியவற்றின் இடத்தில் இப்போது நடுவினையெச்சம் வழங்குவ துண்டு. வினையெச்சவியலை நோக்குக.

'இல்' என்று இறும் கட்டளை வினையெச்சத்தின் வழக்கிலும் மாறுதல்கள் வந்துள்ளன. "விகுதிகளை நேராக நடுவினையெச்சத்தில் சேர்த்தல்" என்ற மரபு அரிதாகிவிட்டது. அதற்குப் பதிலாக "என்" என்ற விவரண வினையின் கட்டளை வினையெச்சத்தை ஒரு இணைப்பு இடைசசொலலாகப் பயன்படுத்தல் பெரும்பான்மை வழக்கு. "போகில்" என்பதற்குப் பதில் "போகுனெங்கில்" "போயெங்கில்" "போகுமெங்கில்" என்பவை வழங்கப்படுகின்றன. பழைய வடிவம்

1 சொல்லலாம என்பது

காலவகையைக் குறிக்கவில்லை. புதிய வடிவங்களில் கால வேறுபாடு தெளிவாகக் குறிகப்படுகின்றது.[1] தமிழில் இருந்த தோரணையும், ஆடம்பரமும் கூளையப்பட்டு, வினையெச்சங்களின் வழககு மலையாளத்தில் தேவையையும் பயனையும் நோககிச சீர்திருத்தப்பட்டுள்ளது.

(ஆ) ஏவல் முன்னிலைப் பன்மை: மலையாளம வினைமுற்றுகளுக்கு இட வேறுபாடு வேணடா எனத் தவிர்த்தது. அதற்குக் காரணம் இடவிகுதிப் பதவி வகிககும் மூவிடப பெயர்கள் எழுவாயிலும், வினைமுற்றிலும வருதலால் ஏற்படும் இனிமையின்மையே ஆகும். ''மீண்டும் வருதல்'' தோன்றுத இடத்து இடவேறுபாடு குறிததல் மலையாளத்தில் விரும்பப்படுவதொன்று. அதனால் ஏவல் முன்னிலையில் மட்டும் மலையாளம் இடவேறுபாட்டை ஏற்றுக்கொண்டுள்ளது. வெறும் அடிச்சொல்லோடோ ''உம்'' என்ற எதிரகாலம் சோந்த வடிவத்தோடோ ''இன்'' என்ற வினையைச் சேர்த்தால் முன்னிலைப் பன்மைவினை ஆகும். எ–டு.

அடிச்சொல்	அடிச்சொல்லோடு 'இன்' சேர்தல்	எதிர்கால வினையோடு சேர்தல்	தமிழ்
வர்	வரின்	வருவின்	வாரும்
கேள்	கேள்ப்பின் கேள்ககின்	கேள்க்குவின்	கேளும்
காண்	காணின் காண்மின்	காணுவின்	காண்மின், காணும், காண்மினீர்(?)
செய்	செய்யின் செய்வின்	செய்யுவின்	செய்மின், செய்யும், செய்மினீர(?)

தமிழில் 'இன்' என்ற விகுதி அரிதாய்க் கவிதைகளிலேயே காணப்படுகின்றது. ''உம்'' என்ற விகுதியே சாதாரணமாய் வழககில் காணப்படுகின்றது. ''இன்'' என்ற விகுதி வடிவதைதத் தனியாகப் பிரித்து நன்னூல் நூற்பா முன்னிலைப் பன்மை விகுதிகளில் எடுத்துக காட்டவில்லை. ஏனைய முன்னிலை விகுதியோடு ''மின்'' என்ற ஒரு வடிவம் மட்டும் கொடுக்கப்படுகின்றது. புணர்ச்சியால் ''இன்'' என்ற விகுதியின் முதலில் எழுத்துக்கள் தோன்றி யின், வின், க்கின், ப்பின், மின் என்ற வடிவங்களில் வரலாம். இதனைப்போன்றே நன்னூல்

1 இம்மரபு சங்க நூற்களிலேயே காணப்படுகினறது. அஞ்சுவல் எனின (நற்-72), ஆயினம் எனின் (குறு-164), அருளிதி எனின (ஐங-275), நினைந்தனிர் எனின் (அகம்-271), நல்குவன எனின் (அகம்-98) முதலியன சில சான்றுகள. ஆனால் இவ்வழக்கு சிறுபான்மை.

பின்வினையெச்ச விகுதியாகிய ''ஆன்'' என்பதையும் பொதுவே கூறுதுவான், பான் என்ற ஒரு சில உருவங்களை மாத்திரம் கூறுகின்றது.[1] இதிலிருந்து இன் என்ற முன்னிலைப் பன்மை விகுதியும், ஆன் என்ற பின்வினையெச்ச விகுதியும் நன்னூல் ஆசிரியராகிய பவணந்தியின் காலத்திலேயே வழக்கரியவற்றோடு சேர்ந்துவிட்டன என்று தெளிவாகின்றது. அதனால் தமிழில் இலக்கணம் நிலையாய் உருப்படும முன்னரே மலையாளம் அதினின்று வேறுபட்டுப் பல வழிகளிலும் சுதந்திரம் காட்டத் தொடங்கியது என்று ஊகிக்கலாம். இவ்வகைச் சான்றுகளை அடிப்படையாகக்கொண்டு டாகடர். கால்டுவெல் ''தமிழ்மொழி அதன் உணமை உருவைப் பெறுமுன்பே மலையாளம் அதினின்று வேறுபடத தொடங்கியது'' என்று கருதுகின்றார். மலையாளம் தமிழிலிருந்து சிதைந்த ஒரு வழக்கு மொழியேயாகும் என்று தமிழர்கள் இகழ்வது அவர்களின் மொழிப்பற்று என்றே கணக்கிடப்பட வேண்டும.

முன்னிலைப் பன்மை வடிவங்களின் சான்றுகளில் எதிர்கால வடிவம் தமிழில் ஏவற் பொருளில் வழங்கப்படுகின்றதென்று காட்டப்பட்டதன்றே. இவ்வழக்கு மலையாளத்திலும் உண்டு. எதிர்கால வடிவங்களில மலையாளிகள் கொண்டது தமிழர் கொண்ட வடிவமன்று என்பதே வேறுபாடு. தமிழில் 'உம்' என்ற எதிர்கால உருவமும், மலையாளத்தில் ஊ என்ற எதிர்கால உருவமும் ஏவலில் வழங்கபடும். எ–டு.

தமிழ	மலையாளம்
நீர் இங்கே வாரும், இரும்	தான் இவிடெ வரு, இரிக்கூ

6. அங்க பங்கம்:

சில பழைய திராவிடச் சொற்களிலும் உருபுகளிலும் மலையாள மொழி வசதிகு வேண்டி, எழுத்துக்களாக குறைத்துள்ளது. இவ்வகை வடிவங்கள், வாலும தலையும் வெட்டும்போது உண்டாகும் உருமாற்றத்தால், எளிதில் அறிய முடியாத விதத்தில் மாறிப்போயிருக்கின்றன. இவற்றில் சிலவற்றின் வரலாற்றைப்பற்றி இலக்கண ஆசிரியர்களுககே முடிவான கருத்து ஏற்படவில்லை. சில எடுததுக் காட்டுகள்:

(அ) ''க்கு'' என்ற நான்காம் வேற்றுமையுருபு உடய என்ற ஆறும் வேற்றுமையுருபு ஆகியவை சிலவிடங்களில் சில விதிகளுக்கேற்ப ''உ'' என்றும் ''உடெ'', ''டெ'' என்றும் எழுத்துக் குறைத்துச் சுருக்கப்பட்டுள்ளன.

1 நன்னூல் 343

எ–டு.

4-ம் வேற்றுமை	6–ம் வேற்றுமை
அவனு, அவன்னு அவள்க்கு	அவனுடெ (அவன்டெ = அவன்றெ) அவளுடெ

பெயர்ப்பகுதி இயல்பாகவோ இன் என்ற சாரியை சேர்ந்தோ 'ன்' என முடிந்தால் 4-ம் வேற்றுமையில் உ என்ற சிதைந்த உருபு மட்டுமே வரும் (னு என்றோ ன்னு என்றோ இறுதி உருவம் அமையும்). 6-ம் வேற்றுமையில் டெ என்ற சிதைந்த உருபு மட்டும் வரும். இதுவே விதி. 'அதின்னு' 'மரத்தின்னு' முதலிய வடிவங்களில் 'இன்' என்பது இடைநிலையாகும்[1] என்பதை உணராது, மலையாளத்தில் ''இன்னு'' (இ+ன்+உ) என்று நான்காம் வேற்றுமைக்கு ஒரு சிறப்பு உருபு உண்டு என்றும், அவ்வுருபு ''தனது'' முதலிய ஆறாம வேற்றுமைச் சொற்களில் காணப்படுவதும், ஸமஸ்கிருதத்தில் ''அதனுடைய இது'' என்ற விரித தொடரின் இடத்தை வகிப்பதும் ஆகிய ''அது'' என்பதிலிருந்து தோன்றியது என்றும் டாக்டர குண்டர்ட் கருதுகின்றார். 'டெ' என்பதும் 'அது' என்பதனின்று தோன்றியது என்பதுதான் அவரது கருதது என்று தோன்றுகின்றது. வேறு ஒரு துரை (டாக்டர் ஸ்டீவன்ஸன்) கன்னடத்திலுள்ள 'றெ' என்ற ஆறும் வேற்றுமை உருபோடு ''டெ'' என்பதனை இணைக்கின்றார். டாக்டர் கால்டுவெல்லோ முதலிற் கூறிய இரண்டு துரைகளின் கருத்துக்களையும் குறை கூறுகின்றார். எனினும் அவன்டெ (அவன்றெ) என்பதிலுள்ள 'டெ' ஐயமற்ற நிலையில், (I doubt not, he says) 'அது' என்பதன் சிதைந்த உருவமே என்று ஆணையிடுகின்றார். இககருத்தில் ''அவன்றேது'' என்ற வழககில் (அவன் + அது = அவன்றெ; அவன்றெ+அது = அவன்றேது) 'அது' என்பது மீண்டும் வருகின்றதே என்று தானே குறை கூறிக்கொண்டும், இமமாதிரி ''மீண்டும் வரல்'' மற்ற மொழிகளிலும் உண்டு என்று அமைதியும் கொள்கின்றார்.[2] இவ்வாறு இதனைப் பொறுத்த அளவில் மூன்று டாகடர்களுக்கும் மூன்று கருததுக்களுண்டு. குண்டர்ட்டின் தவறுக்குக் காரணம் நிச்சயமாக, நிகண்டு எழுதிய பெயிலி துரையே. அவர் தனது நிகண்டில் பெயர்களை ''கு'' – வகை, ''னு'' வகை என்று வகைப்படுத்துகின்றார். ''கு'' என்ற 4-ம் வேற்றுமையில் இறும் பெயர்கள் ''க்கு'' வகை என்றும் ''னு'' என்று இறுபவை ''னு'' வகை என்றும் பொருள்.

---

1 சாரியை இங்கு இடைநிலை எனக் குறிப்பிடப்படுகிறது.

2 6-ம் வேற்றுமை உருபு ஏற்ற சொல் மீண்டும் 6-ம் வேற்றுமை உருபைச் சிறுபான்மை, சாத்தனதனது என ஏற்கும். தொல். சொல். 104.

உண்மையில் 4-ஆம் வேற்றுமை யேற்ற எப்பெயரும் ''னு'' என்று இறு வதில்லை. ''ன்'' என இறுகின்ற பெயர்களில் ''உ'' மாத்திரம் சேர்ந்து 4-ம வேற்றுமை வடிவம் தோன்றுகின்றது என்ற விதியை இவர்கள் கொள்ளவில்லை என்று தோன்றுகின்றது. மெய்யீறனைத்தும் ''இன்'' இடைநிலை சேர்க்கவேண்டியனவா தலின் பலவிதப் பெயாகளும் ''இன்'' என முடியும். எனவே ''இன்'' உருபு ஆகும் என்று கருதினால், பெயர் களை னு வகை, ரு வகை என்று வகைப்படுத்துவதில் ஒரு வியப்பு மில்லை. 'அவன்டெ' என்றெழுதாது 'அவன்றெ' என்று றகரமாக எழுதும் மரபைக் கண்டு, ஸ்டீவன்ஸன் மயங்கிவிட்டார். அவருடைய பெயர் கூடச் சரியான ஆங்கில ஒலிப்பு முறையில் மலையாளத்தில் எழுதின் ''ஸ்டீவன்ஸன்'' என்று அமையும் என்பதை அவர் உணர்ந் திருந்தால் இந்த அபாயததிற்குள் குதித்திருக்கமாட்டார் ''ன்றெ'' என்ற கூட்டெழுத்தின் ஒலிப்பு வேறெங்குமில்லாத ஒரு தனித்தொனி யில் அமைவதென்றும் அது nde (ன்டெ) போலமைவதென்றும் அறிந்த தன் பின்னர் கால்டுவெல் ''அதனையும் இதனையும் பிடிகசப் போன தற்கு'' ஒரு அமைதியும் காணமுடியவில்லை. ஆனால் தங்கள் வாழ் நாள் முழுவதையும் நம் மொழியைப் பயில்வதற்குச செலவு செய்து, வரலாற்றிகும் யுகதிக்கும் பொருந்த அவைகளின் இலக்கணங்களை வரையறைப்படுத்தித் தந்த துரைகளுக்கு நாம் நன்றி தெரிவிக்காது, பரிகசிப்பதன்று இது. ''ன்றெ'' என்ற ஒலியை நாம் எத்தனை முறை சொல்லிக் கேட்பிததாலும் பிற தேசத்தாருக்குச் சரியாக உணர முடி யாது. ''ற'' என்ற எழுத்தை உச்சரிப்பது சரியான றகரம் போன் றன்று என்பது எந்த மலையாளிகும் உடன்பாடு. யாருக்கேனும் ஐய முண்டெனின்,

''என்றெல்லாம் கேட்டவனெரு நுறுங்ஙாம்வஸிக்கின்ற நேரம்''[1]

என்றும் மற்றும் மலையாளத்திலேயே வட்டெழுத்து நிலையில் எழுதி யுள்ளதைப் படித்து நோக்குக. இங்கு ''ற'' என்பதன் தொனி t என் பதற்கும் த என்பதற்கும் இடைப்பட்டது. அதனால்தான் அதற்கு ஆங்கில t என்பதோடு ஒலி ஒப்புமை கூறப்பட்டது. றகரத்தைத் தனியே ஒலித்தால் அது தெளிவாவதில்லை. இரட்டித்து ''ற்ற'' ஆகும்போது அது போதுமளவு தெளிவாகின்றது. எ-டு. attest அற்றெஸ்ட். ஆனால் ''ன்ற்றெ'' என்றன்றே எழுத வேண்டும் என்று வினவின், 'ன்னு' வின் பின்பு வல்லினம் இரட்டித்த எழுத்துப் பொருந்துவதன்று. மெல்லினததின் பின் ஒரெழுத்தும் இரட்டுவது வழக்கமன்று. இரட்டும்போது உள்ள ஒலியைத் தனி ஒலியாய்

1 .என்றெல்லாம கேட்டவன் ஒரு சிறிது அமைதியுறுகின்ற நேரம்.

வழங்கின் தேவை நிறைவு பெறவும் செய்யும். ஒலிப்பில் கண்டிப்பு உள்ளவர்கள் ''ன்ற்றெ'' என்று எழுதியிருந்தனரோ என்பதை உறுதிப்படுதத இப்போது நமக்குச் சான்றில்லை.

''ன்றெ'' என்று இப்போது எழுதி வரும் எழுத்தமைப்புத் திராவிட ஒலியியற் கொள்கைகளுகு முழுவதும் பொருந்தும் என்று வாதிட முடியும். ஸமஸ்கிருத முறைப்படி தடையொலிகள் ஐந்து[1] வர்கங்களிற்படும். அவை தவிரத் தமிழில் ஆருவது ஒரு வருகமு முண்டு.[2] ஸம்ஸ்கிருதத்தில் வல்லினம, அதிவல்லினம், மிருது, கோஷம், மெல்லினம் என ஒவ்வொரு வர்க்கத்திலும் ஐநதைந்து எழுத்துக்கள் உள. இவற்றுள் அதிவல்லினம், கோஷம் ஆகியவை முறையே வல்லினம, மிருது ஆகியவறறின் பேருயிர்ப்பு மாத்திரமே என்பது ஒலித்து நோககின், தெளிவாகும். அதனுல் உயிர்களில் குறில் நெடில் வேறுபாட்டைப் போன்று, தடையொலிகளில் சிற்றுயிர்ப்பு, பேருயிர்ப்பு ஆகிய வேறுபாடு, இனவேறுபாட்டை உண்டாக்குவதில்லை. இந்த உததிப்படி நோககின் ஸம்ஸ்கிருததில் ஒவ்வொரு வருக்கத்திலும் வல்லினம், மிருது, மெல்லினம் என மூன்று வண்ணங்களே உள்ளன. இம் மூன்றும் தமிழிலுள்ள எழுததுகளிலும் உண்டு. மிருது வல்லினத்தை எழுதிக்காட்டத தனி எழுத்துக்கனை ஏற்படுத்தவில்லை என்பது மாத்திரமே குறை. ''மொழி முதலில் மட்டும் வல்லெழுத்திற்கு அதன் ஒலி உள்ளது. மொழியிடையில் எனின் அதனை மிருது வல்லினமாககி ஒலிக்க வேண்டும்'' என்பது தமிழில் விதி. அதன்படி மகன் என எழுதினும் ''magan'' என்பது போன்று படிக்கவேண்டும். இன்றைய மலையாளத்தில் னகரத்திற்கும் நகரத்திற்கும் வெவ்வேறு அடையாளம் ஏற்படுத்தாததைப் போன்று ஏற்படுத்திய ஒரு வசதியாகும் இது.[3] தமிழில் இனவெழுத்துக்களாவன :

1. க, ங	2. ச, ஞ	3 ட, ண
4. ற, ன	5. த, ந	6. ப, ம.

கழுத்திலிருந்து உதடுவரை உள் நின்று புறத்துவரும முறையில் றவர்க்கத்தின் நிலை நான்காவதாக வரும். அதன் பிறப்பிடம அண்ணபல்லாகும். ஒலி தலையிலிருந்து பிறக்கும் ஒலிகளும அண்ணபல் ஒலிக்கும் இடையிலமையும். றகரம் மொழியிடையில் அல்லாது மொழி முதலில்

1 க, ச, ட, த, ப வருக்கங்கள்.

2 ற, ன என்ற வருககம்.

3 தமிழில் க ழ என்ற மாறறொலியன்கள் இரண்டிற்கும் ஒரெழுத்து அமைநதிருத்தலை மலையாளத்தில் ந ன என்ற ஒலியனகளுக்கு ஒரெழுத்து அமைத்ததலோடு ஒப்பிடுதல் ஒருபுடைச்சேரல்.

வராததால் மிருது வல்லொலி வேறுபாடு இதற்கு ஏற்பட்டதில்லை. எனினும் ஏனை வருக்கங்களைப் போன்று இதற்கும ஆரிய மொழி ஒலிகள் கொண்டு நிறைவு செய்வது கடினமன்று. மலையாளத்தில் எழுத்தின்மையால் ரோமன் எழுத்துகளைப் பயன்படுத்துவோம்.

வல்லினம	மிகுவல்லினம்	மிருதுவல்லினம்	கோஷம்	மெல்லினம்
t	th	d	dh	n

இவ்வெழுத்துகளின் ஆங்கில ஒலி இங்குக கருதப்படுகிறது. Enter என்ற ஆங்கிலச் சொல்லில் r என்ற ஒலியைத் தவிர்த்து ஒலித்தால் ''என்றெ'' என்ற மலையாள ஒலியாகும் என்று கூறின் போதும்.

இனி ''உடெ'' என்பதன் உகரத்தைக் கெடுத்த பின் டகரத்திற்கு இவ்வித மாற்றம் செய்தது ஏன் என்ற வினாவிற்கு விடை கூற வேண்டியுளது. இது புணர்ச்சி நிலைகளில் ஒன்றாகும். கண் + து = கண்டு, விண் + தலம் = விண்டலம், மரம் + கள் = மரங்கள், நின் + கள் = நிங்கள் முதலிய புணர்ச்சிகளை நோக்குக. மெல்லெழுத்தும் வல்லெழுததும் முன் பின்னாக இணைதுவரின் வல்லினத்தை மெல்லெழுத்தின் வர்கத்திலுள்ள வல்லெழுத்தாகக வேண்டும். வல்லெழுத்தை மெல்லெழுததோடு ஓரினம் (assimilation) ஆக்க வேண்டும் (பொருந்தச செய்ய வேண்டும்); மெல்லினத்தின் பின்வரும் வல்லெழுத்தை முன்னினமாக்க வேண்டும். மெல்லெழுத்தின் பின் சொந்த இனமே நிற்க முடியும் என்ற ஒரு பொது விதி இச்சான்றுகளிலிருந்து தெளிவடையும். இமுறையில் ஒரு நூற்பா நன்னூலில் உளது. ஆனல் அது ஒரு பொது விதியாகக் கூறப்படவில்லை.[1] இப்புணர்ச்சி நூற்பாவின் படி ''உடெ'' என்பதன் உகரம் கெட்டு, முன் நிற்கும் ன் என்ற னகரத்தோடு டெ சேரும்போது டகரம் தன் இன வல்லெழுத்தாகிய றகரமாகத திரிகின்றது.

இவ்வளவும் கூறியதால், ன்றெ என்பதன் எழுத்தமைப்பும் ஒலிப்பு முறையும் சரி என்றெய்தும். இதன் மேல் ஒரு வினு இங்கு எழும். வருதான் = வருகான் என்பதைப் போன்று, முன் கூறிய மெல்லினமாகலின்படி வல்லினமாகிய ற என்பதும் அதன் மெல்லினமாகிய ன என்பதும், இணைந்து அதன் மயமாகி ''ன்னெ'' என்று ஏன் ஆகவில்லை? இதற்கும் விடை சொல்வோம். வல்லெழுத்தின் முன் மெல்லினமாய்த திரிவது உருபின் முதலாக வல்லினம் வரினே என்பது ஒருதலை ஆகும். இங்கு உருபு ''உடெ'' என்பதாதலால்,

1 நன்னூல பல விதிகளில் (111, 112, 114, 115) இச்செய்தியைக் கூறுகின்றது. ஆனல தொல்காப்பியம் (எழுத்து 25) ஒரே நூற்பாவில் இதனைக கூறுகின்றது.

"டெ" என்பது உருபு முதலாகிய வல்லினமன்று. உகரம் கெட்ட பின் டகரம் முதலில் வருவதைக் கணக்காக்க வேண்டியதில்லை. என்றெ என்பதை மெல்லினமாக்கினால் 'என்னெ' என்ற இரண்டாம் வேற்றுமை ஒருமை வடிவத்திற்குச் சமமாய்விடும் என்ற ஒரு குறையும் உண்டு. ட வர்க்கத்தைப் போன்று மெல்லினமாக்கல் ற வர்கத்திற்கு வேண்டாம்.

ஆனால் இக்கட்டுரையில் எல்லாவற்றிற்கும் மேலாக ஒரு குற்றச் சாட்டுப் புறப்படுகின்றது. "ற, ன" என்ற ற வர்கம் ஆருவதென்று கூறப்பட்டதன்றே? அந்நிலையில் மெல்லினமாகுதல் முறையில் ன்+ற என்ற னகர றகர ஒற்றிணைகளெல்லாம், றகரம் உருபு முதல் எனின் புறநடையின்றி மெல்லினமாய்த் திரியும். அதனை ன்ன என்று மாற்றவேண்டும். ஆனால் அவ்வாறன்றி ங்ங என்ற மாற்றமே காணப்படுகின்றது. எவ்வாறெனின்:

செய்யின்று = செய்யிங்று = செய்யுங்று (ன்னு – என்றன்று)
கன்று = கங்து (ன்னு – என்றன்று)
ஒன்று = ஒங்று (ன்னு – என்றன்று)

இக்குற்றச் சாட்டிற்கும் சரியான அமைதி உண்டு. "ன்ற" என்ற கூட்டெழுத்தைத் தமிழர்களில் சாதாரண மக்கள் ஒரு மாறுபட்ட முறையிலே உச்சரிக்கின்றனர்.

குன்று – குன்ட்று (kundru)
ஒன்று – ஒன்ட்று (ondru)

இதிலுள்ள றகர ஒலி மலையாளிகளுக்குச் சிறிதும் பிடிக்கவில்லை. அவர்கள் அவ்வொலியை முற்றிலும் வேண்டாம எனத் தவிர்த்து விட்டனர். எனவே மலையாள முறையில் இவ்வொலிகள்:

ஒன்து (ondu), குன்து (kundu)

என்ற நிலையிலாயின. றகரம் கெட்டபோது தகரத்திற்கு (th) முதன்மை எய்திற்று. இந்தக் கூட்டெழுத்தில் னகரமும் (th) தகரமும் வேறுபட்ட இனமாதலால் ஓரினமாதல் வேண்டும். வழக்கப்படி (கண்+து = கண்டு) மெல்லெழுத்தோடு வல்லெழுதது (மிருது வல்லெழுத்து) பொருத்தம் வரத்தக்கவிதத்தில் ஓரினமாக்குவதெனின் "புனராயானுவறபி" என்ற விதிப்படி நீக்கி றகரமே மீண்டும் வந்து சேரும். அதனால் நேர்மாறுக மிருது வல்லினத்தோடு பொருதாதம் வருதலுக்காக மெல்லினம் மாற்றப்பட்டது. எனவே "ன்த" என்பது "ந்த" என்றாயது. இங்நிலையில் வந்த பிறகு மெல்லினமாக்கலைப் பயன்படுத்தும் போது, மந்தம் என்பது மங்நம் என்றுவது போன்று "குந்து" என்பதும்

''குந்து'' என்றும், ஒந்து என்பது ஒந்து என்றும் வேடம் மாறியமைக்
தன. இம்முறையில் தமிழிலுள்ள ''ன்ற'' எல்லாம் மலையாளத்தின்
ன்ன என்று மாறுது ''ங்ங'' என ஆகிவிட்டன.

இனித தமிழில் றகரத்திற்கு இவ்வித ஒலிப்பு வந்ததன் காரண
ணத்தை ஊகிக்கலாம். அதனைத் தொடங்கு முன்னர் நாம் புதிதாய்
ஏற்படுத்திய வர்க்கததில் வல்லெழுதுதிற்கு ஒரு புதிய வரி வடிவமும்
கொடுக்க வேண்டும். இல்லையெனில் அதனை 'நிறயுக' என்ற சொல்லி
லுள்ள றகரம் என்றே கருதவேண்டிவரும் என்பது மட்டுமன்று நமது
ஆய்வில் றகரத்தைப் பற்றியும் சொல்லவேண்டியதுண்டு. அதனால்
''ன்றெ'' என்பதிலுள்ள றகரத்திற்கு 'ட்' என்ற வரிவடிவம் கொடுக்க
லாம். இது தமிழ் நூற்களில் டகரத்தின் வரிவடிவமாகும். இப்புதிய
எழுத்தின் ஒலி உகரத்திற்கும் தகரத்திற்கும் இடையொலியாகையால்,
தமிழ் டகர வடிவம் அதற்குப் பொருந்தவும் செய்யும். எனவே புதிய
வருககம் ''டன'' என்ற எழுத்துக்களாகும். அவற்றுள் ட வல்லின
மும் ன மெல்லினமுமாகும். ஙகரத்தைப் போன்று ட கரமும் சாதாரண
மாகத் தனித்து வருவதில்லை. ஒன்றில் இரட்டும். இன்றேல் அதன்
இன எழுத்தோடு சேர்ந்து கூட்டெழுத்தாக நிற்கும். எ–டு.

ங்ங	ங	ட்ட	ட
அங்ஙனெ	மரங்கள்	தீட்டி (தீற்றி)	என்டெ
இங்ஙனெ	தொங்குந்து	தெட்டு (தெற்று)	என்டு (என்று)

இனி ''நிறயுக'' என்பதிலுள்ளது போன்று தமிழ் மலையாளங்
களில் ''ற'' என்ற வடமொழியிலில்லாத ஒரு எழுத்து உளதன்றே?
அதன் தோற்றம், தன்மை ஆகியவற்றைக காண்போம். ஏனைய திரா
விட மொழிகளில் இத்தகைய ஒரு எழுத்து இருந்திருக்கலாம். எனி
னும் இப்போது அது தமிழிலும் மலையாளத்திலுமே காணப்படு
கின்றது. தெலுங்கில் ''கடரேஹம்'' என்று கவிஞர்கள் மாத்திரம்
சிலவிடங்களில இதனை எழுதுவதுண்டு. எழுதினும் ஒலியில் ரகர
றகர வேறுபாடு இலலை.

தமிழ்	மலையாளம்	கன்னடம்	தெலுங்கு	துளு
நூறு	நூறு	நூரு	நூரு	நூரு – 100

மேல் காட்டிய சொல்லில் தெலுங்கும் கன்னடமும் ''ர'' பயன்
படுத்துவதால், ரகரத்தின் வேறுபட்ட ஒலியே றகரம் என்று ஊகிக்க
லாம். இதற்கு வேறு சான்றுகளும் உள. மலர் + பொடி = மலற்பொடி.
இச்சொற்றொடரில் பொடி என்பதனோடு சேரும்போது மலர் என்பதன்
ரகரம் றகரமாய் விடுகின்றது. ஒலி வேறுபாட்டைச் சிந்தித்தால்

ரகரத்தை வல்லினமாக்கினால் றகரமாகும் என்றுணரலாம். எனவே மிருதுவாகிய ரகரத்தை வல்லினமாக்குதற்குத்தான் றகரம என எய்துகின்றது. வல்லெழுத்து எனக் கூறப்படினும் க ச ட ட த ப ஆகிய வல்லெழுத்துக்களில் இல்லாத ஒரு ஒலிச் சிறப்பு றகரத்திற்கு உண்டு.

றகரத்தை இரட்டும்போது ஏற்படும் ஒலி எத்தகையது? முன் கூறிய சிறப்பொலியோடு இரட்டித்து ஒலிக்க முடிவதில்லை. எனவே அந்த அம்சத்தை நீக்கிவிட்டு இரட்டிக்க வேண்டும். அந்த அம்சத்தைத் தவிர்க்கும்போது ரகர ஒலி மிஞ்சும். ''குற்றம்'' (குறம்) முதலியவைகளில் கேட்பது இத்தகைய ஒலியையே. எழுதது இரட்டலில் இவ்விதம் ஒரு அம்சத்தை விட்டுவிட்டு இரட்டல் என்பது ஒரு சிறப்பு விதி என்று கூற முடியாது. வடமொழியில் வல்லினத்தின் நான்காம் ஒலி இரட்டுதலை நோக்குக.[1]

ഭ = ബ ധ = ദ
ഭ = ഭ ധ = ധ

இங்கு வல்லினத்தின் நான்காம் ஒலியிலுள்ள பேருயிர்ப்பை நீக்கி விட்டு இரட்டிக்கப்படுகின்றன. இரட்டிய இணைகளின் முன் பகுதி மென்மைப்பட்டுப் போகின்றது. எனவே அவற்றை இரட்டித்தால் ஒரு மிருது வல்லினமும் நான்காம் ஒலியும் சேர்ந்த பயனே உள்ளது. அது போலவன்றே றகரம் இரட்டும்போது, அவ்வினையில் முற்பகுதி ரகரமாகவும், பிற்பகுதி றகரமாகவும் மாறுவது? இரட்டிய றகரத்தை மலையாளிகள் ஒலிப்பதில் சிறிது வேறுபாடுள்ளது. அவர்கள் குற்றம் என்றெலிகாது, குர்ரம் என்றே ஒலிக்கின்றனர். அதனால் மலையாளத்தில் றகரத்தை யன்று, ரகரத்தையே இரட்டுவது வழககம் என்று கூறவேண்டியிருக்கின்றது. தெலுங்கரும் கன்னடரும் றகரத்தை முழுவதும் தவிர்த்த நிலையில், மலையாளிகள் இரட்டலில் றகரம் வேண்டாம, ரகரம் போதும் என்று கொண்டதாக அமைதி கொள்ளலாம்.

இத்துணையும் செய்திகள் முடிவு செய்யப்பட்டனவல்லவா? இனி இரட்டிய டகரம் சேர்த்து ஏற்படுததியுள்ள தெட்ட (தெற்று), தெட்டி (தெற்றி) என்ற சொற்களையும், இரட்டித்த றகரம் உள்ள ''மாற்றம்'', ''நீற்றல்'' என்ற சொற்களையும் அடுத்தடுதது ஒலித்து, அவைகளின் ஒலிகளை ஒப்பிட்டு நோக்குக. இரண்டும் ஒன்று போலவே இருக்கும். தனித்து நிற்கும்போதுதான், ரகரத்திற்கும் டகரத்திற்கும் ஒலி வேறுபாடு வேண்டுமளவு உள்ளது. இரட்டித்த ஒலியில் இரண்டையும் பிரித்தறிவது கடினம். சரி. ''ஒன்றை டகரம இரட்டித்தது என்றும் மற்றொன்றை றகரத்தின் இரட்டல் என்றும் கொள்ள

1 ഭ (bh) + ഭ (bh) = ബ (b) + ഭ (bh); ധ (dh) + ധ (dh) = ദ (d) + ധ (dh).

வேண்டுமோ? இரண்டையும் ஏதாவது ஒன்றின் இரட்டல் என்று கருதிக்கொள்ளலாம்'' என்ற ஒரு ஐயத்திற்கு இங்கு இடமுண்டு. அதனையும் தீர்ப்போம்.

தன்வினை		பிறவினை
நீங்ஙுன்னு	= நீங்குதல்	நீக்குன்னு
முங்ஙுன்னு	= மூழ்குதல்	முக்குன்னு
காணுன்னு	= காணுதல்	காட்டுன்னு
உண்ணுன்னு	= உண்ணுதல்	ஊட்டுன்னு
தின்னுன்னு	= தின்னுதல்	தீடீ்டுன்னு (தீற்றுன்னு)
தென்னுன்னு	= (கால்) இடறுதல்	தெடீ்டுன்னு (தெற்றுன்னு)

மேல் காட்டப்பட்ட வடிவங்கள் ''அடிச்சொல்லின் மெல்லினத்தை அதன் இனமாகிய வல்லெழுத்தாக்கி இரட்டித்தால் தன்வினை பிறவினையாய் முடியும்'' என்ற விதிகளுக்குச் சான்றுகள், இவற்றுள், ங, ண ஆகியவை முறையே க, ட ஆக மாறியது போன்று னகரமும் டகர (றகர) மாகியது என்பது வெளிப்படை. எனவே தெடீ்டுன்னு (தெற்றுன்னு), தீடீ்டுன்னு (தீற்றுன்னு) ஆகிய சொற்களில் றகரத்தின் ஒலியம்சம் சிறிதும் இல்லையென்பதை உடன்பட்டேயாக வேண்டும். இனி:

மாறுன்னு – மாற்றுன்னு

நீறுன்னு – நீற்றுன்னு

என்ற உருவ அமைப்பை நோக்குக. தன்வினையடிச்சொலலின் ஈற்று ஒற்றை இரட்டித்தால் பிறவினையாய் முடியும் என்ற விதிப்படி ஏற்பட்ட வடிவங்கள் இவை. இவற்றிற்கு டகரத்தோடு யாதொரு தொடர்பும் இல்லையென்பது வெளிப்படை. அதனால் ''டீ்டீ'' என்பதும் ''ற்ற'' என்பதும் ஒலிப்பில் பெரும்பாலும், ஏன், முழுவதும் ஒரே வடிவம் என்பதும் எய்துகின்றது.

இங்கு படைத்துள்ள ட (ற)கரம், டீ்டீ என்ற இரட்டலிலோ, ன்டீ என்ற இன ஒற்றிணையிலோ அல்லாது பயன்படுவதில்லை என்று காட்டப்பட்டுள்ளது. ஆகவே ஒலிக்கு மாத்திரம் முதன்மையளித்து எழுதினால் ஆங்கிலத்தில் Connection என்பதற்குப் பதில் Connexion என்று எழுதுமாறு போன்று ''தீடீ்டுன்னு'' என்று எழுதவேண்டிய விடத்து 'தீற்றுன்னு' என எழுதத் தொடங்கியிருக்க வேண்டும். சரியான வரலாறு மறக்கப்பட்டுவிட்டது என்பது மாத்திரமன்று. வீரூப்பூக்காகவும் எழுத்தில் இவ்வகைத் திறமையைக் காட்டுவது எல்லா மொழிகளிலும் காணப்படுகின்றது. ''I owe you'' என்பதற்குப் பதில்

ஆங்கிலத்தில் "I. O. U." என்ற சுருக்க வடிவைப் படைத்தவர்களின் மனநிலையை நோக்குக. தொடக்கத்தில் தெற்று என்ற றகர ஒற்றிணையாய் எழுதியது பிழையென்று இலக்கண ஆசிரியர்கள தடை செய்திருக்கலாம் எனினும், காலம் செல்லும் தோறும், அவர்கட்கும் ''அடிக்கும் வழியில் செல்லாததனால், செல்லும் வழியில் அடிக்கவேண்டி'' வந்திருக்கலாம். இத்தனையும் நிகழ்ந்த பிறகு ''ன்டி'' என்ற கூட்டெழுத்திற்காக மாதிரம் ''டி'' என்ற எழுத்தை இலக்கண ஆசிரியர்கள் எவ்வளவு பத்திரமாகப் பேணினும், அது எவ்வளவு காலம் நிலைநிற்கும்? ''தீற்றுன்னு'' என்றவிடத்தில் இரண்டு றகரம் உளவெனின் ''ன்டி'' என்பதில் ஒரு றகரம் தாராளம் போதும் என்று மகளிர் உரிமை காட்டத் தொடங்கினர். இவ்வாறு டகரத்தின் கதை முடிந்தது. நாம் அதைக கல்லறையினின்றும் தோண்டி எடுத்துக கழுவி, மினுககி விளங்கச் செய்தோம் என்பதே உளது. ஆனல் ''பசு இறந்தாலும் மோரின் புளிப்புப் போவதில்லை.'' எழுதுதில் மட்டுமே தமிழர் ''தெற்று[1] செய்கிறார்'' என்பதே உளது. ஒலிப்பில் டகரத்தின் குடியிருப்பு இன்னும் உளதென்று மனநிறைவு கொள்ளலாம். ''செய்கின்டார்'' என்ற இன்றைய ஒலியில் றகர ஒலியைச் சேர்த்துக் கலகின்றனர் என்ற குற்றமே உளது. எழுத்தில் ''ற'' காணப்படுவதால் அதன் தொனி, பூவ வாசனையால் தங்களை அறியாதே வரும் டகரத் தொனி ஆகிய இரண்டும் கலந்து தமிழர் உச்சரிக்கின்றனர். ''ன்டெ'' (ன்றெ) என்ற மலையாளத்திலுள்ள 6-ஆம் வேற்றுமை ஒருமை வடிவத்தில் மட்டுமே இப்பொழுது டகரத்தின் சரியான ஒலி எஞ்சிக் கிடக்கின்றது. அதனது தோற்றத்தைத் தேடிக் கண்டுபிடிகக புறப்பட்ட போதன்றே, அநியாயமாக முழுவதையும் பறித்துவிட்டு, நாடு கடத்தப்பட்ட தண்டனையால், நீகி வைகபபட்டிருந்த ஒரு பாவமுமறியாத எழுத்தின் சொந்தமான சில விலைமதிப்புள்ள சொத்துக்கள் பிறர் வசப்பட்டுக கிடப்பதைக் கண்டு பிடிக்கவும், அவைகளைத் தொடர்ந்து சென்று, கண்டால் இனம் அறியாத முறையில் சடைந்து தளர்ந்து செத்துக்கொண்டிருந்த பொருளுககு உரியவனையே நிச்சயித்தறிந்து பொதுமக்கள் முன்னிலையில் படைப்பதற்கும் நமக்கு வாய்ப்புக் கிடைத்தது. மலையாளிகளும் டகார ஒலியைக கெடுக்காதது பெரும் பாக்கியமே.

ஆனல் நாம் இவ்வளவு முயன்று மீண்டும் உயிரளித்துக் கொண்டுவந்த டகரத்திற்கு எந்தக் காலத்திலாவது நெடுங்கணக்கில் ஒரு தனி வடிவம் இருந்ததாக ஊகிக்க வழியுண்டோ? இக்கேள்விககு விடை எளிதில் கூற முடியாது. எழுத்து வரிசை பல காலங்களிலும்

1 தெற்று – தவறு.

மாறிமாறி வந்திருக்கிறது. இப்பொழுதுள்ள நெடுங்கணக்கு தமிழில் உறுதிப்பட்டது 14-ம் நூற்றாண்டில்.[1] அதற்கு நெடுங்காலத்திற்கு முன்னரேயே டகரத்தின் இடத்தை றகரம் ஆக்கிரமித்திருக்க வேண்டும். இலக்கண நூற்களிலிருந்து ஏதாவது துப்புக் கிடைக்குமா என நோக்கின், அந்நூற்களின் ஆசிரியர்கள் நெடுங்கணக்கின் எழுத்துக்களின் ஒலி பற்றியல்லாது வரிவடிவத்தைப் பற்றி ஒன்றும் கூறவில்லை.[2] ஏதாவது கூறியிருந்தாலும், வரிவடிவங்கள் பலதடவை மாறுபடுத்தப்பட்ட கட்டத்தில் அது நமக்கு இப்போது வேறுபடுத்த முடியாத விதத்தில் ஆக்கப்பட்டிருக்கின்றது. இலக்கண ஆசிரியர்கள் எழுதியிருந்த வரிவடிவங்களையும் அவற்றின் ஒலிகளையும் நாம் இப்போது எவ்வாறு அறிய முடியும்? பழைய நூற்களையெல்லாம் புதிய வரிவடிவத்தில் எழுதப்பட்ட நிலையிலேயே நாம் காண்கின்றோம் என்பது மட்டுமன்று. தமிழிலே முதன்மை வாய்ந்த இலக்கண ஆசிரியராகிய தொல்காப்பியரே எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்திருந்ததாக டாகடர் பர்னல் நிறுவியிருக்கின்றார். நன்னூலாசிரியராகிய பவணந்தியும் பிற்பட்டவரே.

"வல்லினம் கசடதபற வெனவாறே."[3]

"மெல்லினம் ஙஞணநமன வெனவாறே."[4]

என்ற நூற்பாகளில் பவணந்தி றகரத்தை வல்லினத்தோடும் னகரத்தை மெல்லினத்தோடும் ஏனைய ஐவருக்கத்தோடு சேர்த்துக கணக்கிடுவதையும்,

"அன்னம் நுனிநா நனியுறிற் றன வரும்"[5]

என்று றனக்களுக்கு ஒரே இடத்தில் பிறப்புக் கூறியதையும் நோக்கும் போது இன்று றகரத்தின் வரிவடிவமாகக் காணப்படும் ற என்ற எழுத்து டகர ஒலியின் வடிவமாக இருக்காதோ? என ஐயுற இடமுண்டு. றகரம் ரகரதத்தின் ஒரு வேறுபட்ட ஒலியே எனக்கொண்டு, அதனை ஒலி இலக்கண ஆசிரியர்கள் கருதவில்லையென்றுகலாம். ஆயின் அப்பொழுது அரியுக என்பதும் அறியுக என்பதும் ஒன்றுகிப் போகும். அது இருக்கட்டும். "கன்னடத்தில் எவ்வாறோ அதனைப் போன்றே தமிழிலும்" என நினைத்துக்கொள்ளலாம். மலையாளத்தில் னகரத்திற்கும், நகரத்திற்கும் ஒரெழுததே உளதன்றே. எனினும் நாம் சரியாக அவ்வொலிகளைப் படித்துவருகின்றோமன்றே. அதனைப்

1 நெடுங்கணகது வரிசைமுறை இங்கு கருதப்படுகிறது போலும்.

2 தொலகாப்பியா வரிவடிவம் பறறிப் பேசியிருக்கிறார். தொல், எழுத், 14-16.

3 நன், 68. 4 நன், 69. 5 நன, 86.

போன்றே தமிழரும் படித்துவந்திருக்கலாம். இவ்வாறு கருதுவதெனின் டகரத்திற்கும் றகரத்திற்கும் ற என்ற ஒரு எழுத்தே இருந்தது என்று கருதுவதுதான் கொஞ்சம் கூட நன்று. ''தீற்ற'' என்றவிடத்து டீ'' என்பதற்குப் பதிலாகவும், ''மாற்றம்'' என்றவிடத்து ''ற்ற'' என்பதன் அடையாளமாகவும் ''ற்ற'' என்ற எழுத்துகள் பயன்படுத்தப்பட்டன என்றே இருக்கட்டும். மலையாளத்தில் ''நகச்சு'' என்று காணப்படும எழுத்தில் முதலதை நகரமாகவும், இரண்டாவதை னகரமாகவும படிப்பது போன்று பவணந்தியும் படித்திருக்கலாம்.

வடமொழியாளர்களாகிய ஆரியர்களின் வரவு திராவிடர்களின் நெடுங்கணக்கில் குழப்பம் ஏற்படுததியிருக்கலாம். ட, ற ஆகிய இரண்டும் சமஸ்கிருதத்தில் இல்லாத திராவிட எழுததுகுகள். அவற்றில்தான் பெரிய குழப்பங்கள் காணப்படுகின்றன. தொல்காப்பியம் கூட ஐந்திர வியாகரணம் நோக்கி ஆக்கப்பட்டதாகும்.[1] ஸமஸ்கிருதத்தில் ட வர்க்கமே இல்லாதிருந்தது. அதன் இடத்தில் (இப்போது ட வர்க்கம் காணப்படுகின்ற இடத்தில்) த வர்க்கம் பயன்படுத்தப்பட்டு வந்தது. பிராதிசாகயர்[2] ''விநாமம்'' என்றும், பாணினீயர் ''ணத்வம்'', ''ஷ்டுத்வம்'', ''மூர்த்தன்யாதேசம்'' என்றும் கூறும் ஒலி எழுத்து வேறுபாடுகளை நோக்குக. தமிழிலோ அண்பல் ஒலியாகிய த வர்கத்தின் பின் ட வர்க்கம், ட வர்க்கம் ஆகிய இரண்டு வர்க்கங்கள் இருந்தன. ஆரியாவர்த்தத்திலேயே ஆரியரும், திராவிடரும் கலந்தபோது, ஆரியர் த வர்க்கத்திலிருந்து தெளிவாக வேறுபட்ட ட வர்க்கத்தைத் திராவிடர்களிடமிருந்து ஏற்றுக்கொண்டனர். திராவிட நாட்டிற்குள் ஆரியர் வந்து பரந்தபோது, திராவிடர்கள், த வர்க்கம் ட வர்க்கம் ஆகியவற்றின் இடையில் ஒலித்த காரணத்தால், ஒலிவேறுபாட்டுத் தெளிவற்ற ட வர்க்கத்தைத் தவிர்த்தனர். தமிழில் வர்க்கம் என்றால் வல்லெழுத்து, மெல்லெழுத்து என இரண்டே உள்ளனவன்றே ? அவற்றில் வல்லெழுத்தாகிய டகரத்தை தலையிற் பிறக்கும் இடையெழுத்தாகிய ரகரத்திலும், அதனை வல்லோசையேற்றி றகரத்தில் உட்படுத்திவிட்டு, மெல்லெழுத்தாகிய னகரத்தை மாத்திரம் ஏற்றுக்கொண்டனர். இந்த னகரத்திற்கும் அண்பல் மெல்லினமாகிய த வர்க்க நகரத்திற்கும் இடையிலுள்ள வேறுபாடு நுண்ணியதாகையால், ஒலிப்பில் இரண்டும் ஒன்றுபோலாகிவிட்டன. இம்முறையில் இப்பொழுது காணப்படும் குழப்பம் தமிழில் நிகழ்ந்திருக்கலாம்.

---

1 ''ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்'' பாயிரம்.

2 வேதத்தில் சுலோகங்கள், பதங்கள் ஆகியவற்றின் ஒலிப்பைப் பற்றிய நூல் பிராதிசாக்கியம்.

இக்காலத்திலோ தமிழிலுள்ள ஒலிப்பு மிகவும் மோசமான நிலையை அடைந்துள்ளது. நகர னகரங்களுக்கும் ரகர றகரங்களுக்கும் எழுத்திலல்லாது ஒலிப்பில் ஒரு வேறுபாடும் காணப்படவில்லை. அரியுக என்பதும் அறியுக என்பதும் எழுத்தில் காணும்போது வேறு. தமிழ் உச்சரிப்பில் ஒன்றே. 'ந' என்றும் 'ன' என்றும் உள்ள எழுத்துகளை எங்கு பயன்படுத்த வேண்டும் என்பதை இலக்கணம் படித்தவனே அறிவான். டாக்டர். கால்டுவெல்லே நகர னகரங்களுக்கு எழுததில் மட்டும் வேறுபாடு உண்டு என்று அதனை கண்டதார். அவர் இவ்வெழுத்துக்களுக்கிடையிலுள்ள உண்மை வேறுபாட்டை நுண்ணிதின் நோக்கியிருந்தால் நாம் மீண்டும் உயிர் கொடுத்த டக ரத்தை இதற்கு முன்னமே கண்டுபிடித்திருப்பார். தமிழின் நிலையை நோக்கும்போது மலையாளத்திலுள்ள ஒலிப்பு முறை மிகவும் உயர்ந்த நிலையில் அமைந்திருக்கின்றது. நகரத்திற்கும் னகரத்திற்கும் வெவ் வேறு எழுத்துகள் இல்லையெனினும் மலையாளிகள் இரண்டு எழுத்துக்களையும் வேண்டுமிடங்களில் வேறுபடுத்தி ஒலிக்கின்றனர். ரகர றகரங்களுக்குத் தனித்தனி எழுத்து உள்ளதால், சிறு குழந்தைகளுக்குப் போலும் ஒலிப்பில் பிழை நேர்வதில்லை.

ஏன் அதிகம் கூறவேண்டும்? 'ன்றெ' என்பதில் னகரமும் றகரமும் எழுதப்பட்டாலும், 'டெ' என்ற னகர டகரங்களையே மலையாளிகள் ஒலிக்கின்றனர். இடையில் இந்த ஆய்வு மிக நீண்டுவிட்டது. இனியேனும் அதனை நிறுத்திவிட்டுச் சொல்ல வேண்டிய பொருளுக்குள் நுழைவோம்.

'உடய' என்ற ஆரும் வேற்றுமை உருபின் இறுதியில் உள்ள எழுத்தைக் கெடுத்து உடெ என்று முதலில் ஆக்கப்பட்டது. முதலெழுத்தையும் கெடுத்து 'டெ–டெ' என்று காலப்போக்கில ஆக்கியிருக்கலாம். 'டெ' என்ற மிகச சிதைந்த வடிவம், முன்னர் 'ன்' உள்ள இடத்தில் மட்டுமே வருவது எல்லா இடத்தும் பொருந்தும். 'அவன்றெ' நாத்தூன்றெ[1] போன்ற வடிவங்களைப் போன்று 'குட்டிடெ' என்ற சிதைந்த வடிவத்தை இலக்கிய மொழியில் வழங்குவதில்லை. 'க்கு' என்ற நான்காம் வேற்றுமையின் இரட்டிய ககரம் கெட்டதற்குக் காரணம் 'அவனுக்கு' 'வீட்டுக்கு' முதலிய வடிவங்களில் குற்றியலுகரத்தின் பின் மெய் வரும்போது ஏற்படும் ஒலிக்குறை காரணமாயிருக்கலாம். அவள்க்கு, அவர்க்கு முதலியவை போன்று இரட்டிய ககரம் பொருந்துமிடத்துக் கெடுதல் நிகழ்வதில்லை. குற்றியலுகரத்தை முடிந்தவரை இலேசாக்கி ஒலிக்கவேண்டும் என்பது மலையாளத்தின் போக்கு.

1 அவனது, நாத்தூரனினது. நாத்தூன் = கணவனின் சகோதரி. (சிலம்பு : 16–19).

(ஆ) வேண்டும் > வேணும் > வேணம் > ஏணம் > எணம் > அணம். "செய்ய வேணடும்" என் றிருந்த சொல் இவ்விதம் செய்யணம் என்று ஆகி அமைந்தது. இதனைப் போன்றே ஆகும > ஆம். எ-டு. செய்ய ஆகும் > செய்யாம்.

இங்குக் காட்டப்பட்ட ஆறு விதிகளின்படி ஏற்படும் விகாரங் களைத் தவிர, வடமொழியின் நெடுங்கணக்கை ஏற்றுகொண்டது முதல் மலையாளத்திற்குப் பலவிதத்திலும் வேட மாறுபாடுகள் ஏற்பட் டுள்ளன. எவ்வாறெனின்,

1.	திருக்கால் = த்ருக்கால் எதிர்வஶம் = எத்ருவஶம் அதிர்த்தி = அத்ருத்தி	}	'இறு' என்ற எழுத்தை ஏற் றுக கொண்டமை.
2.	நனயுன்னு = நநயுந்நு என்ஞோடு = எநநோடு அன்யாயம் = அந்யாயம்	}	நகர னகரங்களுக்கு எழுத்து வேறுபாடின்மை.
3.	க்ரந்தம் = க்ர[1]ந்தம் ப்ரகாரம் = ப்ர[2]காரம் மர்யாத = மர்யா[3]த மற்கடம் = மர்க்கடம்	}	ரகர றகர ஒற்றுகளை ஒரே எழுதுதால் எழுதல்.
4.	இடம் = இடஂ தனம = தனஂ	}	மகர ஒற்றினிடதில் அனுஸ்வாரம்.
5.	பால் = பால்[4] மரத்தில் = மரத்தில்[5]	}	லகரச் சில்லிற்குப் பதில் தகரச்சில்.

ஒன்று, அது, காடு ஆகிய குற்றியலுகரங்களை வேண்டிய இடங்களில் ஒன்ன, அத, காட என்று அகரமாக எழுதும் மரபும், எ, ஒ ஆகிய உயிர்களில் குறில் நெடில் வேறுபாடில்லாது ஒரே வடிவமாக எழுதும் நிலையும் வடமொழி நெடுங்கணக்கு இங்கு புகுந்ததோடு மலை யாளத்தில் நுழைந்துவிட்டன. ஆனால் இகுறைகள் இப்போது தீர்க் கப்படும் நிலையில் ஆகிவிட்டன என அமைதி கொள்ளலாம். "குற்றிய லுகரத்திற்கு ஏதாவது ஒரு அடையாளம் வேண்டும்" என்றும், எ, ஒ நெடில்களுக்கு ே என்ற கொமபு பயன்படுத்த வேண்டும என்றும் எல்லா அச்சுக்கூடதினர்களும் ஒப்புகொண்டுள்ளனர்.

13. மேல்விளக்கிய விதிகளைப் பயன்படுதி மலையாளத்தைத் தமிழிலும், தமிழை மலையாளதிலும் ஆக்கலாம் என்று உணர்த்து தற்குச் சில எடுத்துக்காட்டுகள் இங்குத் தரப்படுகின்றன.

1, 2, 3. ஆகியவை கூட்டெழுத்துக்கள். 4, 5. மலையாளத்தில் தனி வடிவமுள்ள. ாற்றுலகர ஒற்று.

மலையாளம்

கற்றக்கார் மல்க்கு ழலிகளொரோ ராக பேதம் புணர்த்திட்
டிற்றிற்ரேலும் மதுரஸமயம் சிந்துபாடும் தசாயாம்
முற்றம் தோறும் கிளிகளதினெக் கேட்டிருந்நக் கணக்கெ
முற்றும் பாடின்ரெடமயி! ஸகே! மற்றமங்ஙளே து பின்னெ.

—உண்ணுநீலி ஸந்தேசம்

தமிழ்

கற்றைக்கார் மற்குழலிகளொரோ ராக பேதம் புணர்த்தீட்
டிற்றிற்ரேலுமம மதுர சமயம் சிந்துபாடும் தசாயாம்
முற்றம் தோறும் கிளிகள தஜெக் கேட்டிருந்தக கணக்கே
முற்றும் பாடுகின்ற இடம், ஏ, தோழ மற்றமப்புறத்தது பின்பு.

மலையாளம்

இங்ஙனெ போயங்ஙு பம்கிக ளோடுமே
தங்ஙின பூங்காவில் புக்க நேரம்
மெல்லவே சொல்லிஞன் வல்லவீ நாயக-
னல்லேலும் சாயலாரெல்லா ரோடும்
பூ மணமாயோரு காழ்ச்சயும் கைக்கொண்டு
தூர்ம கலர்நநொரு தென்னலிவன்
ஸேவிப் பானுயிங்ஙு வந்நது கண்டாலும்
மேவுமிப் பூங்காவு தன்னிலூடெ ?

—கிருஷ்ணகாதை

தமிழ்

இங்ஙனம் போயங்கு பங்கிகளோடுமே
தங்கின பூங்காவில் புக்க நேரம்
மெல்லவே சொல்லிஞன் வலலவீ நாயக-
னல்லேலும் சாயலாரெல்லா ரோடும்
பூமண மாயோரு காழ்ச்சியும் கைக்கொண்டு
தூமை கலர்ந்தொரு தென்னலிவன்
சேவீப்பானுயிங்கு வந்தது காண்
மேவுமிப் பூங்கா தன்னிலூடே.

தமிழ்

பேயரே யெனக்கு யாவரும் யானுமோர்
பேயனே யேவர்க்கும் இது பேசியேன் ?
ஆயனே அரங்கா என்றழைக்கின்றேன்
பேயணு யொழிந்தேனென் பிரானுக்கே.

மலையாளம்

பேயரே யெனிக்கேவரும் ஞானுமொரு
பேயே யேவர்க்கும இது சொல்லியெந்து
ஆயனே ரங்கேஸா என்னழலுன்னேன்
பேயா யொழிஞ் ஞேனென் தம்புரானு தான்.

தமிழ்

வானுளும் மாமதிபோல் வெண்குடைக்கீழ் மன்னவாதம்
கோனுகி வீற்றிருந்து கொண்டாடும் செலவறியேன்
தேனுர் பூஞ்சோலத்திரு வேங்கட மலைமேல்
கானுருய்ப் பாயும் கருத்துடையேனுவேனே.

—பெருமாள் திருமொழி

மலையாளம்

வானுளும் மாமதிபோல் வெண்குடக்கீழ் மன்னவர் தன்–
கோனுயி வென்னிருந்து கொண்டாடும் மட்டறியேண்டா
தேனுர்ந்த பூஞ்சோலயெழும் திருவேங்கட மலமேல்
காட்டாருய் பாயானபிப்ருயமுடயோனுவு ஞான்.

தமிழ்

மும்மை சாலுலகுக்கெல்லா மூலமந்திரத்தை முற்றும்
தம்மையே தமக்கு நல்கும் தனிப்பெரும்பததததாதானே
இம்மையே யெழுமை நோய்க்கு மருந்தினை யிராமனென்னும்
செம்மைசேர் நாமம் தன்னைக் கண்களிற்றெரியக் கண்டான்.

—கம்பராமாயணம்

மலையாளம்

த்றித்வமார்ந்த மூன்னுகுமுலகின்னெல்லாம் மூலமந்த்ரத்தெ
முற்றும்
தன்னெத்தான் தன்னுளுகள்ககு நல்கும் தனிப்பெரும்-
பதத்தைத்தான்
இஜ்ஜன்மத்திலே ஏழு நோவின்னும் மருந்தினெ ராமனென்னும்
செம்மசேரும் நாமம் தன்னெக கண்களால் தெரியக் கண்டான்.

தெலுங்கு

தாமஸிம்சி ஸேய தகது எட்டி கார்யம்பு
வேகிரம்பன் அதியு விஷமம் அகனு.

மலையாளம்

தாமஸிச்சு செய்ய தகாத்த கார்யத்தெ
வேகிப்பிக்கில் அதும் விஷமம் ஆகும்.

தெலுங்கு

பச்சிகாய தெச்சி படவேய பலம் ஒளனே ?
விஸ்வா பிராம விரஸ வேம.

மலையாளம்

பச்சககாய் எடுத்து பழுக்கவய்க்கவே பலமாகுமோ,
விஸ்வாபிராமனுய அல்லயோ வேம, கேளெடோ.

தெலுங்கு

தேவீ ஈ ஸப வித்வாம்ஸுல மயமை உன்னதி. காவுன இப்புடு சேயவலயு பனினி வினுமு. பூர்வமு காளிதாச கவிசே ரசயிம்பம்படின அபிஜ்ஞான ஶாகுந்தளம் அனுநாடகமு லோகமுன விலஸில்லுசு உன்னதிகதா ?

மலையாளம்

தேவீ, ஈ ஸப வித்வான்மார்மயமாயி இரிக்குன்னு. ஆகயால் இப்போள் செய்யவேண்டுன்ன பணியெ (வேலயெ) கேள்க்கூ. பூர்வம் காளிதாஸ கவியால் ரசிக்கப்பெட்ட அபிஜ்ஞான ஶாகுந்தளம் என்ன நாடகம் லோகத்தில் விலஸிச்சு கொண்டிருக்குன்னில்லயோ.

கன்னடம் (செய்யுள்)

ஆ தேவியிம் சூன்யவிபாகி லோகம்
மை தோர்ப்பு தீராரனெயப்த மீகள்
வைதேஹி யெம்பீ பெஸரும் நிரஸ்தம்
மை தாள்து பாளில்லவெ ராமனின்னும்.

[பதப்பொழிப்பு : ஆ தேவியிம் சூன்ய இது ஆகி லோகம் மை தோர்ப்புது. ஈர்-ஆர்-அனெ அப்தம் ஈகள். வைதேஹி எம்ப ஈ பெஸரும் நிரஸ்தம். மை தாளுத் பாளி இல்லவெ ராமன் இன்னும்.]

மலையாளம்

ஆ தேவியால் (யோடு) சூன்யமதாயிட்டு லோகம் மெய்யு தோன்னிப்பிகுன்னு (ஆவிர்ப்விக்குன்னு). ஈராறுமததெ (12) அப்தம் இப்போள் வைதேஹி என்ன ஈ பேரும் நிரஸ்தம். மெய்யு தரிச்சிட்டு வாழுக இல்லயோ ராமன் இன்னும்.

கன்னடம்

பூர்வதல்லி உத்தாலகன பத்னியு பதிகெ அனுரூபளாகி நடெயதெ இத்து தரிந்தல்லவெ கல்லாகி ஹோதது. அனுஸூயா தேவியு பதிகெ அனுகுணவாகி நடெதத்துரிந்த ஸூர்யனூ ஸஹா உதயிஸதே ஹோகி தேவகர்ளிந்தலு ஸ்தோத்ர மாடிஸி

கொண்டனு. ஸீதா தேவியு ஆரண்யெக்கெ ஹோகுத்திட்ட பதியன்னு அனுஸரிஸி அவன ஹிந்தயே ஆரண்யக்கெதானூ ஹொரடலு ஸ்ரீராமனு நீனு ஆரண்யககெ பரவேட வெந்து நன்னந்தே நீனு ஏகெ கஷ்டபடபே கெந்துகேளிதனு.

மலையாளம்

பூவத்தில் உததாலகன்றெ பதனி சதிக்கு அனுரூபயாயி நடக்காதெ இருந்நதிஞலல்லே கல்லாயிப்போயது. அனுஸூயா தேவி பதிககு அனுகுணமாயி நடந்நதிஞல் ஸுர்யனும்கூடி உதிககாதெ போயிட்டு தேவதகளாலும ஸ்தோதறம் செயயிச்சு கொண்டாள். ஸீதா தேவி ஆரணயததினு போயிககொண்டிருந்ந பதியெ அனுஸரிச்சு அவன்றெ பின்ஞலே ஆரண்யததினு தானும புறப்படவே ஸ்ரீராமன் நீ ஆரண்யததினு வரவேணடா என்னும என்னெப் போலே நீயும் எந்தினு கஷ்டப்பெடவேணமென்னும் கேடடான்.

தமிழும் பழைய மலையாளமும் ஒன்றே என்று கூறலாம் என்றிருக்கத் தெலுங்கும் கன்னடமும் மிகவும விலகியுள்ளன என்று காட்ட அம்மொழிகளிலிருந்தும் எடுத்துக்காட்டுகள் மொழிபெயர்ததுக காட்டப்பட்டுள்ளன.

2. காலப் பகுதிகள்

14. மலைநாட்டில் கொடுந்தமிழாயிருந்த மொழி இப்போது நாம் பேசும் மலையாளமாய்ப் பரிணமித்ததற்குள்ள காரணங்களும், சூழ்நிலைகளும் விளககப்பட்டுவிட்டன. இனிப் பழங்கால நிலைகளும் தற்கால நிலைகளும் இடையில் இம்மொழிக்கு எந்த எந்த நிலைகள அல்லது கட்டங்கள் ஏற்பட்டன என்பதைச் சிந்திபபோம். ''ஒரு தேங்காயை மண்ணில குழிதோண்டி இட்டால் அது தென்னையாய்க காய்க்கு முன்பே அதற்குப் பல அவததைகளும உளவன்றே. குருத்து வெளிவந்து ஓலை வருவதுவரை ஒரு காலபபகுதி. ஓலை விரிந்து அடிமரம் வளர்வதுவரை இரண்டாம் காலப்பகுதி. மரம் ஆகிவிட்டால் காய்க்கத் தொடங்கும்; பின்னர் முறையே முதிர்ந்து வன்மை பெறும் என்றல்லாது பின்னர் இயற்கை மாறுபாடுகளைக கணககில் எடுக்க வேண்டியதில்லை. இந்த உவமையில் காண்பதைப் போன்று மலையாள மொழிககும் மூன்று பெருங்கால நிலைகளைக் கொளளலாம். கொல்லமாண்டின் தொடகக காலமாகிய கி. பி. 825-ககுப் பின்னர் மலையாளம் ஒரு சுதந்திர மொழியின் நிலையை எய்திற்று என்பது முன்னரே விளக்கப்பட்டுள்ளது. அதனல் கொல்லமாண்டிற்கு முன்னுள்ள காலத்தைத தாயாகிய தமிழின் அல்லது மூலததிராவிட மொழியின் கருவில்

வதிந்திருந்த காலமாகக் கணககிட்டால் போதும். அக்காலத்து எழுந் துள்ள பதிற்றுப்பத்து முதலிய நூற்களைத் தமிழ் நூற்களாகவன்றே இன்றும கருதிவருகின்றனர். அவ்வகை நூற்கள் கேரளத்தில் வாழ்ந்தவர்களால் இயற்றப்பட்டன எனினும் தமிழர்கள் நமக்கு அவைசளை விட்டுத்தருவதில்லை. அதனால் கொடுந்தமிழில் எழுதப் பட்டுள்ள நூற்களைப் பற்றி மலையாளமொழி வரலாற்றில் எதுவும் சொல்வதற்கு உரிமை இலை.

15. கேரள மொழி வரலாற்றை மூன்று காலகட்டங்களாகப் பகுக்கலாம்.

(1) முற்காலநிலை—குழந்தைநிலை—கருந்தமிழ்க்காலம், கொல்ல மாண்டு 1 முதல் 500 வரை, கி. பி. 825–1325.

(2) இடைககால நிலை — குமரிநிலை — மலையாண்மைக் காலம், கொலலமாண்டு 500–800 கி. பி. 1325–1625.

(3) தற்காலநிலை—யௌவனநிலை—மலையாளக் காலம், கொல்ல மாண்டு 800 முதல் இன்றுவரை கி. பி. 1625 முதல் இன்றுவரை.

கருந்தமிழாய்ப் பிறந்த கேரள மொழி 500 ஆண்டுக காலம் குழந்தைப் பருவத்திற்கு ஒத்த கருந்தமிழ் நிலையில் இருந்துவிட்டு, அதில் பாதிக்கு மேற்பட்ட காலம், குமரிப் பருவமாகிய ''மலை யாண்மை'' என்று கூறப்படும் நிலையில் வாழ்ந்து, யௌவனப் பருவத் தில் மலையாளம் என்ற பெயரைப் பெற்றிருகின்றது.

நமது மொழியைத தமிழிலிருந்து வேறுபடுத்திச் சுதந்திர மொழியாகசி விடுதற்கு உற்சாகம தந்தது ஆரியர்களின் சமஸ்கிருதம் எனினும, அதற்குக குழந்தைப் பருவததில் அதிக உரிமை பாராட்ட முடிந்ததிலலை. முன்கூறிய விதிகளில் இடவிகுதிகளைத் தவிர்த்தலும், மெல்லினமாக்கலும மாத்திரமே அககாலதது விரிவான முறையில் அமைய வழி காணப்படுகின்றது. குழந்தையாகிய கேரள மொழியின் காபபாளர் பதவி தமிழுகுகே இருந்தது. கருந்தமிழ் என்று தமிழ்ச் சொல் சோந்த பெயரை அகநிலைகு இட்டது அதனால்தான். சமஸ்கிரு தச் சொற்களை ஏற்றுக்கொள்ளாமலில்லை; ஆனால அவைகளெல்லாம் தற்பவங்களே தறசமங்கள அல்ல. அககாலதததில் தமிழோடுள்ள தொடர்பு முறையே தேயவும் ஸமஸ்கிருதத்தோடுள்ள தொடாபு பெரு கவும் செய்தன. வேறுபட்ட போகுகள் முதலில் விட்டு மொழியில் புகுந்து, முறையே இலகிய மொழியையும் பாதித்திருக்க வேண்டும். ஆனால் அககாலங்களில் இயற்றப்பட்டுள்ள நூறகள் மிகக குறை வாகவே நமகுகு கிடைத்திருக்கின்றன. கவிதைகளும் நூற்களும்

எழாதிருக்க வழியில்லை. அவ்வகைப் பண்டை நூற்களில் நாலைந் தேனும் வெளியிடப்படு முன்னர் வெறும் ஊகத்தால் அககால மொழி வரலாற்றை ஊகித்து இயற்றுவது வலிந்து கொளவது ஆகும். யாத்திராங்கத்திலே நான்கு அடிகள், பததிரகாளிப் பாட்டிலே சில பகுதிகள், சில பழைய கீர்த்தனங்கள் ஆகியவைகளெல்லாம் கருந் தமிழ்க் காலப்பகுதியின் தொடககத்தில் எழ இடமுண்டு. இராம சரிதம் அதன் இறுதியில் எழுந்த காவியமாக இருகக்லாம.

(2) மலையாண்மை என்ற காலப்பகுதியில் குமரிப்பருவத்திற்கு ஏற்ப உரிமையை மீறல காணப்படுகின்றது. தனகக்கிருந்த காப்பாளர் என்ற நிலையைத் தமிழ்நாளே விட்டுவிடவில்லை. ஆனல் சமஸ்கிருதம, அக்காப்பாளர் நிலை தனககுத்தானெனறு பலாதகாரமாகப் பாராட்டத தொடங்கியது. அககாலத்தில் விளையாட்டுக்காக இயற்றப்பட்ட தனிச் செய்யுட்களில் மாததிரமன்று,

"தாள்ப் புட்டயந்தி தகரா: கறி கொய்த சேஷா:
.....
மண்டந்தி பாந்தனிவஹா: படி பந்தபேட்யா;"
"கொட்டத் தேங்ஙா பிரப்பை....."

முதலியவை போன்று திராவிடச் சொற்பகுதிகளில் சமஸ்கிருத வேற் றுமைகளும் லகாரங்களும் சேர்ந்துள்ள வழகுகள் காணப்படுகின் றன. உண்ணுநீலி சகதேசம் முதலிய முகியமாகக் கருதப்படும் நூற்களிலும் இவ்வகைக் கோமாளி உருவங்கள் மிகுதியாய் உள்ளன.

"மாகந்தா நாம தணலில் மணலில் குஞ்சிபிஸ் சஞ்சலாகரை" 60
"அத்யாமோதால் புனரயி! ஸகே! பாலவும் பிங்நிடேதா:" 115
"மாடம்பீ நாமவிடே வஸதாம் தன்யமாகும் நிவாஸம்" 118
"சேடிவகதறம் புனரொரு கரம் கொண்டு தான்
பொத்தயித்வா." 139

முதலியவைகளை நோக்குக. இந்த உரிமை மீறல் நிலையிலிருந்துதான் மணிப்பிரவாளக கவிதைகள் தோன்றியிருகக வேண்டும. தமிழக் காப்பியங்களின் பிரசாரம குறைந்து, நாட்டுமொழி வேறுபட்டு வரவரச் செந்தமிழின் பொருளை உணர்வது பொதுமகளுககு முடியாமற் போகத தொடங்கியது. சமஸ்கிருதத்தின் புதுமையும பெருமையும் காவிய நயமுணர்வோரைக கவர்ந்தன. தலைமையும கல்வியுமுள்ள அரசர்களும், நமபூதிரிகளும் ஸமஸ்கிருதத்தை அல்லாது நாட்டு மொழியை ஆதரிகக்வில்லை. ஆனல் நாட்டுமொழியோடு தொடர் பில்லாது சமஸ்கிருதத்திலேயே கவிதை இயற்றினல் கேட்டு இன்புற

ஆட்கள் குறைவாகவே அமைவர். இங்கிலீயில் இரண்டும் கலந்த கவிதைக்காக ஒரு மொழியைச் செயற்கையாக உண்டாகக வேண்டியதைத் தவிர வேறு வழியில்லை. இதுதான் மணிப்பீரவாள மொழி.

இரண்டு மொழிகளைக் கலக்கும்போது ஸமஸ்கிருதச் சொல்லின் பகுதிகளோடு திராவிட வேற்றுமை உருபுகளையும பிற உருபுகளையும் சேர்ப்பது போன்று திராவிடச் சொல்லின் பகுதிகளோடு ஸமஸ்கிருத வேற்றுமை, லகாரம் முதலியவற்றைச் சேர்ப்பதில் தவறு என்ன? ''ஒன்று சரி; மற்றது பிழை'' என்று நமக்குத் தோன்றுமெனின் அது பழக்கததால் ஏற்பட்டுள்ள ஒரு தலைச்சாய்வு என்றே கூறமுடியும. ஆனால் நியாய அநியாயங்களைக் குறித்து நினைக்கவில்லை யெனினும் ஸமஸ்கிருத வேற்றுமை முதலிய உருபுகளைச் சேர்த்துத் திராவிடச் சொற்பகுதிகளிலிருந்து வடிவ வரிசைகளை உருப்படுத்துதல் என்ற ஏற்பாடு நடகக முடியாதது என்று நமது முன்னோரும் எளிதில் உணர்ந்து கொண்டனர். ஸமஸ்கிருதத்திலுள்ள சொற்களின் உருவ அமைப்பின் மரபு, புணர்ச்சியாலும், தோன்றல் திரிதல் முதலிய விகாரங்களாலும் பகுதிகளை வேறுபடுத்தியறிய முடியாத முறையில் பலவிடங்களிலும் மாறுபட்டுப் போய்விடும். முன் காட்டப்பட்ட எடுத்துகாட்டில் (உண்ணுநீலி சந்தேசம் 60) ''குஞ்சிபி'' என்ற மூன்றும் வேற்றுமைப் பன்மையில் பெரிய விகாரம் ஒன்றும் காணப்படவில்லை யெனினும், அதனுடைய ''குஞ்சய'' என்ற முதல் வேற்றுமைப் பன்மையையோ, ''குஞ்சே'' என்ற ஆரும் வேற்றுமை ஒருமையையோ ''குஞ்சௌ'' என்ற ஏழாம் வேற்றுமை ஒருமையையோ நோக்கினால் புணர்ச்சியால் ஏற்படும் உருமாற்றம தெளிவாகும். அது மட்டுமனறு. ''மகன்'' ''மகள்'' முதலிய பால் விகுதிகள் கொண்ட சொற்களோடு சமஸ்கிருத வேற்றுமையுருபு சிறிதும் பொருந்துவதில்லை. வினைசசொற்களின் நிலையோ இதனைவிடத் தொல்லை தருவது. மண்டநதி என்ற லிட் வினையை ஒருவிதம் சேர்த்துக்கொள்ளலாமெனினும, ''அமணடல்'' ''அமண்டன்'' முதலிய ''லங்'' வடிவங்கள் ஒருக்காலும் பொருநதுவனவல்ல. ''ஆத்மநேபதி'', ''பரஸ்மைபதி'', ''உபயபதி'', ''ஸேட்'', ''அனிட்'', ''வேட்'', ஸர்வதாதுகம, ஆர்த்த தாதுகம், அகுண்யம், அகுண்யம் முதலிய பேதோபாதிகளை எல்லாம் நோக்கி அறிநது அடிச் சொற்களின் வடிவங்களை நிர்ணயிப்பது வடமொழியிலேயே மிகவும் சிரமப்பட்டுத்தான் முடியும்; அவ்வாறென்றால் வேறொரு மொழியில் இவ்வகைச் செயற்கை வடிவங்களையெல்லாம் எவ்வாறு செயல்படுத்தமுடியும்? அதனால் ஸமஸ்கிருத இலக்கண முறையில் நாட்டுமொழிச் சொற்களுக்கு வடிவ வரிசை அமைப்பது முடியாதது என்று மணிப்பிரவாள முயற்சி செய்தவர்கள் அப்போதே

உணர்ந்தனர். அவ்வகை வழக்குகளை வீண் பெருமைகு வேண்டி இடையிடை சேர்த்திருக்கலாம் என்றல்லாது மிகுதியாக ஏற்றுக் கொண்டிருக்க வழியில்லை.

நேர்மாறுகச் ஸமஸ்கிருதச் சொல்லின் பகுதிகளை எடுத்து, நாட்டுமொழியிலக்கண முறையில் அவைகளுகு வடிவம் ஏற்படுததி வழங்கல் மிகுதியாகிவிட்டது. இடையிடையே ஸமஸ்கிருத வேற்றுமை உருபுகளையும வினைச்சொற்களையும, வேற்றுமை முதலியவைகளால் உருமாறுத சொற்களையும் வழங்கலாம் என்று விதி செய்யப் பட்டது. தெலுங்கு, கன்னடம் ஆகிய ஸ்வரஸ மொழிகளிலும் மணிப் பிரவாள நடை இவ்விதத்தில்தான் கருதப்பட்டது. தமிழர்களும் மணிப்பிரவாளத்தைச் சோதனை செய்து பாாக்கவில்லை என்பதில்லை. ஆனல் அது அம்மொழியில் வேரூன்ற முடியாமல நலிந்துவிட்டது. மணிப்பிரவாளத்தில் மணி, பிரவாளம் ஆகியவற்றின் கலப்பு இன்ன விதத்தில் அமையவேண்டும் என்பதற்குத் திட்டவட்டமான விதிகள் லீலாதிலகம் என்ற நூலில் காணப்படுவதால் இக்கலப்புமொழி மலையாள நாட்டில் மட்டுமல்ல திராவிடப் பூகண்ட முழுவதும் ஒரு காலத் தில் எவ்வளவு தூரம் பரந்திருநதது என்பதை ஊகிக்கலாம. வட மொழியிலுள்ள பெயர்ச் சொற்களையும், அடிசசொற்களையும் நாட்டு மொழியில் பயன்படுத்தினல அவைகளின் உருவ அமைப்புக்காக, அவைகளை வழங்குதற்கு வேண்டிய தற்பவ வினைகளும் இககாலத தில் நுழைந்தன. முகியமான ''சம்பு'' நூற்களெல்லாம் இக்காலக் கட்டத்தில எழுந்தவையாயிருகக வேண்டும்.

சமஸ்கிருதக் கவிஞர்களுகு மணிப்பிரவாளக் கவிதையியற்ற முடியுமன்றே. அதனல் தொடகக்கதில் மணிப்பிரவாள நூலாசிரியாகளெல்லாம் நம்பூதிரிகளாய் அமைந்தனர். அவர்கள் சமஸ்கிருத இலக்கணத்தைப் போன்று யாபபையும் நாட்டுமொழியில் தோற்றுவித்தனர். ''உண்ணுநீலி சந்தேசம்'', ''சந்திரோதசவம'', ''சம்புகள்'' ஆகியவை எல்லாம் சமஸ்கிருத யாப்பில் அமைந்த செய்யுட்களால் இயறறப்பட்டன. இவ்வகைக கவிதைகளில் வடமொழி சுலோகங்கள் முழுநிலையில் அமைவதும் சிறுபான்மையன்று. வடமொழியிலேயே சுலோகத்தை அமைத்துவிட்டு அங்குமிங்கும் ஒன்றிரண்டு நாட்டு மொழிச் சொற்களை வழங்கினல் சுலோகம் முழுவதும் மணிப்பிரவாளம் ஆய்விடும். ஆனல் ஒரு சாஸ்திர நூல் இயற்றுவது எனில் அதற்கு மலையாளத்தைச் சிறிது கலந்த மணிப்பிரவாளம் கூடப் போதாது என்றும், தூய வடமொழியே வேண்டும் என்பதும அவர்களது கருத்தாக இருந்தது. அதுதான் லீலாதிலகத்தை வடமொழியில் இயற்றக்

காரணமாயிற்று. இடைக்கால கட்டத்திலுள்ள மணிப்பிரவாளப் பிராமணக் கவிஞர்களில் ''செறுசேரி'' ஒருவர் மாத்திரமே சமஸ்கிருத வெறியில்லாது நாட்டுமொழியை ஆதரித்தார். ஏனைய வர்க்கத்தினரோ தமிழிற்கு இயல்பாயுள்ள முக்கியத்துவத்தை மறந்துவிடவில்லை. அவர்கள் தமிழ் யாப்பிலேயே கவி பாடினர். வசதிக்காக வடமொழிச் சொற்களையும், தொகைகளையும். அபூர்வமாக வேற்றுமை இறுதிகளையும் பயன்படுத்தினா என்பதே உளது இகுகூட்டத்தில் நிரணம் கவிஞர்களாகிய கண்ணச்சப்பணிகளரும், அயிப்பிள்ளை ஆசானும முகுகியமானவர்கள். இக்காலப் பகுதியிலும் ''தச்சொள்ளிப் பாட்டு'' முதலிய சில நூற்கள் சமஸ்கிருதத் தொடர்பு சிறிதும் இலலாது எழுந்தன நாட்டுமொழியின் உயர்வை நோகுகும்போது இகுகாலப் பகுதியில், முன்கூறபபட்ட ஆறு தனிநிலை விதிகளில ஒவ்வொன்றும வீடறி மொழியில் நிலைநிறுத்தப்பட்டதால் இலகுகிய மொழியிலும் முறையே அவை நுழைவது எல்லோராலும் ஒபபுக்கொள்ளப் பட்டது.

(3) இவ்வளவில் கேரளமொழி பருவம் நிறைந்து தனித்து நிற்கும் ஆற்றல பெற்றது. ஒரு காப்பாளரின்கீழ் அடங்கியிருக்கும தேவை இல்லாதாகியது. யௌவனப் பருவததை அடைந்த நிலையில் மேல்துணைகளு வேணடியவர் காபபாளர் அல்லர்; கணவனே வேணடும். குழந்தைப் பருவம் முதல் உள்ள பழகுகத்தால் மனதிற்குப் பொருநதிய ஒரு மணமகன் பகுகத்திலேயே இருந்தான். திராவிட குலப் பெண்ணுகிய திருவளர் செலவி கேரளமொழி ஆரியகுலத்திலக முதலவனுகிய சிரஞ்சீவி ஸமஸ்கிருத மணமகனது சுயம்வர மணப் பெண்ணுக அமைநது விளஙகினுள். இந்த மஙகல நிகழ்ச்சியை அல்லது திருமணததை வேணடியவாறு சிந்தித்து அழகுற நடத்தியவர் துஞ்சத்து ராமானுஜன் எழுதச்சன் என்ற பெருமகன் ஆவார். சமஸ்கிருதத்தின் மணப்பெண்ணுக மாறியமைந்த மலையாள மொழிக்குப் பழமையும, மங்கிய வணணமும் உள்ள தமிழ் நெடுஙகணகளு என்னும் கஞ்சுகம் (சட்டை) சிறிதுமு திருப்தி அளிகுகவில்லை. கேரளத் திருமண மரபில் ''உடை அளிததல்'' அன்றே ஒரு முகுகிய சடங்கு. மொழி களுக்கு உடையாக விளங்குவது நெடுஙகணகளே. அதனுல் மலையாள மொழி சமஸ்கிருதமாகிய ஆரிய எழுததுக்களை இகுகாலத்தில் ஏற்றுக கொண்டது. நெடுங்கணகளு மாறியதோடு மலையாளததின் புறவேடம முழுவதும வேறுபட்டுவிட்டது.

16. மணிப்பிரவாளததிற்குப் பண்டையோர் மிகவும் அக்கறை யோடு இலக்கணம் இயற்றியுள்ளனர். சமீபகாலத்தில் கிடைத்துள்ள ''லீலாதிலகம்'' என்ற நூல் மலையாள மொழியில் கவிதை தொடங்கிய

அக்காலத்திலேயே பெரியோர்கள் இயற்றிய விதிகளையெல்லாம் தெளிவாக விளக்கியுள்ளது. லீலாதிலகம் என்பது மணிப்பிரவாள கவிதையைப் பற்றிச சமஸ்கிருததில் இயற்றப்பட்டுள்ள ஒரு இலக்கண நூலாகும். இந்நூலில் 'சிறபம்' என்ற பெயருள்ள எட்டு பகுதிகள் உள்ளன. மணிப்பிரவாளத்தின் உருவதையும் இலக்கணத்தையும் முதற்சிற்பம விரிதுரைக்கின்றது. மணிப்பிரவாள உடல் அமைப்பு இரணடாம் சிற்பம். இதனுள் நாட்டுமொழியின் சொல் விளகமும் பெயர்வினை ஆகியவற்றின் உருவ அமைப்பு விளக்கமும் அடங்கியுள்ளன. மூன்ரும சிற்பம் புணரியலாகும். குற்றவிளக்கம் நான்காம் சிற்பத்திலும், குணங்களைப் பற்றிய ஆய்வு ஐநதாம் சிற்பத்திலும் அமைந்துளளன. அடுதத இரண்டு சிற்பங்களும சொல்லணி, பொருளணிகளை விளக்கும் அணியியல்கள். இறுதியிலுள்ள எட்டாம் சிற்பம் மெய்ப்பாடுகளை விளகுதற்காக வழங்கப்பட்டிருக்கின்றது. இம்முறையில் சொல்லிலகணமும் அணியிலகணமும் கலநத ஒன்ரு கும் லீலாதிலகம். நூலாசிரியரின் பெயரை அறியவழியிலலை. ''காசிகா விருதது'' ''காவியப்பிரகாசம'' முதலிய சமஸ்கிருத நூறகளைப் பின் பற்றி இநநூல் இயற்றப்பட்டுள்ளது. காசிகாவிருத்தி முதலியவற்றி லுள்ளது போன்று லீலாதிலக ஆசிரியரும் மூல பூதங்களாகச் சில நூற்பாகளுகு உரை எழுதி எடுததுகாடடுகள் காட்டுவதோடு அவற்றைத தொடர்ந்து சில ஆய்வுகளைத்தானே செய்கிறர். நூற் பாக்கள் அவரது படைப்புக்களல்ல, முன்னரே உள்ளவை என்றே கூறவேண்டும் ஏனெனில் சிலவிடங்களில், 'ச' என்ற சொல்லை முன் நூற்பாவினின்று தந்துரைக்க வேணடும் என்று கூறப்படுகின் றது. நூற்பாக்களும உரையும் ஒருவரால் இயற்றபபட்டனவெனில் இவ்வகைக குறிப்புகள் தேவையில்லை. இதனுல் நூறபாவை இயற்றி யவரா வேறொருவர் என்று கருதவேணடியுள்ளது. ஆனுல் அந்த ஆசாரியார் யாரென்பதை, லீலாதிலகம முழுவதையும் கவனததோடு படித்தும் என்னுல் காணமுடியவில்லை. லீலாதிலகம எழுதியவர் தமிழிலும் சமஸகிருதத்திலும் ஒதத புலமை எய்திய ஒரு பெரியார் என்று மாததிரம் ஐயமின்றிக கூறலாம். இதனுள் எடுததுகாட்டு களாகக காட்டப்படுபவை பெருமபாலும் அரிய பழஞ் செய்யுட்களா கும். ஆனுல் உண்ணுநீலி சந்தேசத்திலுள்ள சில செய்யுட்கள் எடுத துக்காட்டுகளாகக காணப்படுவதால் அந்த சந்தேச நூலின் பின்னர் லீலாதிலகம் இயற்றப்பட்டது. என்று ஊகிக்கலாம்.

17. லீலாதிலகம் மணிப்பிரவாளததின் சொல்லிலக்கணமும் அணியிலகணமும் ஆகும் என்று கூறப்பட்டதன்ரே. அவற்றுள் அணியிலகணக் கொள்கைகளில் கூறத்தக வேறுபாடொன்றும்

இதுவரைத் தோன்றவில்லை. சொல்லிலக்கண விதிகளிலோ சில வேறு பட்ட போக்குகள் நிகழ்ந்துள்ளன.

(1) ''பாஷா சமஸ்கிருத யோகோ மணிப்பிரவாளம்'' என்ற முதற் நூற்பாவின்படி, சமஸ்கிருதத்திலுள்ள வேற்றுமையுருபில் முடியும் பெயர்களும் வினைகளும் இடைக கலந்துள்ள நாட்டுமொழி வழககு மணிப்பிரவாளமாகும் நாம் இப்போது ''நாட்டுமொழி'' என்று கூறும மலையாளதிற்கு அன்று தமிழ் என்றே பெயா. இதனை ஏற்றுக கொண்டே ''நாட்டு மொழியிலுள்ள உரை'' என்ற சொல்லை இன்னும் நாம் பயன்படுத்தி வருகின்றோமென்று தோன்றுகின்றது. மணிபபிர வாளம் என்ற சொலலின் தோற்றமே பிறகாலததார் உரை கூறுவது போன்றதன்று. மணி என்பது மாணிகக்ம் என்று கூறப்படும் சிவந்த கல்லும பிரவாளம என்பது பவளமும் ஆகும். மணியின் இடததி லுள்ள திராவிடச் சொறகளும், பவளத்தின் இடத்திலமைந்த வேற றுமையுருபை இறுதியிலுள்ள ஸமஸ்கிருத பதங்களும் சேர்ந்த மொழியே மணிப்பிரவாளம. மாணிக்கததிற்கும பவளததிற்கும் நிறம ஒன்றுகையால் இணைந்து சேரும்போது இனவேறுபாடு தோன்றுதது போன்று மலையாளதையும புகழ் மிகக சமஸ்கிருதத்தையும இனிமை யாகக கலந்தால் மொழி வேறுபாடு தோன்றுவதில்லை என்பதுதான் பொருத்தம். இது ''வசந்த திலகம்'' முதலிய ஸமஸ்கிருத யாப்பில் கவிதை எழுதுதற்கு மாததிரம் பயன்படுத்த வேண்டிய மொழியாகும. தனிச் சொற்களையும் நீண்டதொகைச் சொற்களையும் அடிக்கடி சமஸ கிருததிலிருந்து கடன் வாங்கி வேறறுமை உருபு மாததிரம மலையாள இலககண முறைபில் ஒரு காதம் நீளத்தில் செய்யுட்கள் எழுதிக கட்டி னாலும் அது மணிப்பிரவாளமாவதிலலை. இதற்குத் தமிழ என்றே பெயா ''ராமாயணம் தமிழ்'' ''பாரதம் தமிழ்'' முதலிய பெயர்க ளுள்ள பல செய்யுள நூற்களும் சாககியர்களிடததில் இன்னும இருக் கின்றன. அவர்கள் ஏதோ ஒரு பக்தி மயகக்ததாலோ மனமின்மை யாலோ இவ்வகை நூற்களை வெளியிட்ட தயங்குகின்றனர். இந்நூற் களில் ''ராமாயணம் தமிழ்'' நூற்களில் ஒன்று என்னிடம் கிடைதததி லிருந்து ஒரு பகுதி இங்கு எடுததுககாட்டுவோம்.

''அதிபயங்கரமாயி த்ரிம்ஸத்யோ ஜனயதமாகின ஆதமஸரீ-ரத்தை சுருக்கி ஆர்ஜ்ஜிதமார்ஜ்ஜார மாதறகாதறனுயி கோபுரதவாராத் துங்கலகதது போகுவானுபகரமிக்குன்னவன் லங்காலஷ்மியால் பரி பூதனுயி லங்காலஷ்மியெ லங்கயில் நின்னும நிராகரிச்சு அதவாரேண உள்ள ப்ரவேஸமதறெ ஸதறுபவனத்திங்கல் விஹிதமாயிட்டுள்ளது என்னிங்ஙனெ லங்காலஷ்மியுடெ உபதேஸம் நிமித்தமாயி அவிடெ

நின்னும் பின்வாங்கி சூதிச்சு கடந்து இடத்துகால் அகத்து வெச்சு அகத்துபுக்கு நிங்கருளிச் செய்யுன்னேனே.'' ''எங்ஙனெ எப்ரதேசத்துங்கலோ ஆ உத்யானம் யாதொரேடத்து தேவி ஶிம்ஶபாஶ்ரிதயாயி அதிவஸிச்சருளுன்னு'' என்னு ஸம்பாதியால் அபிஹிதமாயி. என்னுல் எவிடத்துங்கலோ ஆ உதயானம், என்னருளிச் செய்து உத்யானுன் வேஷணதத்பரனுயி பெருமாறுன்னவன் அகம்பஸதனம், நிகும்ப பவனம், ஸுப்தகன பவனம், வஜ்ரதம்ஷ்டாலயம், மேகநாதஸதனம், என்னேவமாதி நிஶாசர பவனங்ஙளில் வைதேஹியெ அன்வேஷிச்சு சஞ்சரிக்குன்ன காலத்து விபீஷணபவனமகம் புககு அவனுடெ நாராயண ஸ்துதிகள் கேட்டு பரஸன்னஹ்ருதயனுயி கும்பகாணுலயத்தெ ப்ராபிசசு அவனுடெ மஹீத்தரஸமான மாகினஶரீரத்தினுடெ தர்ஶனத்தால் ஆஞ்சர்யோ பேதனுயி அவிடெ நின்னும் பின்னெயும விமானத்தின்மேல கரேறி நோகுன்ன காலத்து விவிதரத்நரசிதா நேகஸ்தம்ப ஸங்கீர்ணமாயி மௌகதிகமாலா மனோகரமாயி மணிதீபனிகர பரிஹ்ருத தமஸ்ஸஞ்சய மாயி கனக பண்டங்ஙளாகின வெண்கொற்றக் குடகள் தபனீயமயங்ஙளாகின தாலவ்ருந்தங்ஙள் சந்த்ரமரீசிதவளங்ஙளாகின சாமரங்ஙள் என்னேவமாதிகளோடும் கூடி மதுபான மத்தனுயி மண்டோதரி ஸஹிதனுயி கிடந்நுறங்குன்ன தஶகந்தரனுடெ ஶோபாதிஶயத்தெ கண்டு ஆஶ்சர்யோ பேதனுயி மண்டோதரியுடெ வைதவ்யலக்ஷ்ணத்தெககண்டு வைதேஹியல்லென்ன நிஞ்ஞு அவிடெ நின்னும் பின்னெயும் நானுதேசங்ஙளில் வைதேஹியெ அன்வேஷிச்சு சஞ்சரிக்குன்ன காலதது அனன்ய ஸாதாரணயாகின லங்காஸம்ருத்தியெகண்டு ஆஶ்சரியோபேதனுயி அருளிச் செய்யுன்னேனே.'' ''ஏனெ ஈ ராக்ஷஸ நகரியுடெ வரயாயிருந்ந லக்ஷ்மி இருந்நவாறெத்ரயும் ஆஶ்சர்யமத்ரே. அதர்ம்மா சாரநிரதனுயி பாபகர்ம்மதத்பரனுயி கோக்னனுயி ஸுராபனுயி ஸ்ரீராகவதர்ம்மதார சோரனுயிரிக்குன்ன ராக்ஷஸேஶ்வரனுடெ வரயாயிருந்ந லக்ஷ்மி இருந்நவாறெத்ரயும் ஆஶ்சர்யமதரே! லக்ஷ்மி, கலான்வேஷினியாயிரிப்பொருத்தி என்னதும் பரமார்கதமதரே – ஸதயமே ஈ தஶகரீவன் படஹபணவாதி வாதித்ரஸஹிதனுயி அதிபல பராக்ரமராகின நிஶாசர வீரன்மாரோடும கூடி த்ரிதஶநகரதெத ப்ராபிச்சு அமர்தயன்மாரெ ஆயோதனத்துங்கல் ஜயிச்சு அவருடெ அஶ்வரத்நம், கஜரதநம, வ்ருக்ஷரதநம், ஸ்ரீரத்நம் என்னுவேண்டா யாவசில வஸ்துககள் ஸ்வாக்கஸார பூதங்களாகினவ அவற்றகளெ ஒககெயும் பலாத்காரேண அபஹரிச்சுகொண்டு போந நான் போல்தஶக்ரீவன் என்னு கேட்டிருப்பூ; அதும பரமார்த்தமத்ரே'' என்னருளிச் செய்து பின்னெயும் உத்யானன்வேஷண தத்பரனுயி பெருமாறுன்னவன். உடனே த்ரகுண ஸம்ருததனுயி போந்நு

வீயுங்ந மநதமாருதனெக் கொண்டனுபவிச்சு ப்ரஸன்னஹ்ருதயனுயி அருளிச் செய்யுன்னேன். ''ஏனெ ஈ ம்ருதுபவனுகமனம் கொண்டு உத்யானம் முன்பாகத்துங்கலாவூ'' என்னு ஞான் கல்ப்பிக்குன்னு. எந்து என்னு அகஸ்த்யாராதனுர்த்தம் அவதீர்ண்ண மாராகின வித்யாதரஸ்த்ரீகளுடெ கம்பரீபாராவஸக்தகளாகின மந்தாரமாலக ளுடெ ஸௌரப்யத்தெ தடவி அளிபாளீகூஜிதநடவீஜலஶகலாவலீ ஸம்யோகஸுகஶீதளனுயி போந்நு வீயுன்ன வாயுபகவான் ''புதரா! ஹனுமானே இங்ஙிங்ஙு போரிக. இவிடெ புரோபாகத்திங்கல் அஶோக வனிகோத்யானம்! இந்தீவரலோசனனுடெ பார்ய இவிடெ அதிவஸிச் சருளுன்னு. என்னுல் வைதேஹியெக்கண்டு தேவீவ்ருத்தாந்தத்தெ தேவனோடறியிக்குக, நின்னுடெ ஸ்வாமியாகின ஸுக்ரீவனுடெ காரி யத்தேயும் ஸாதிக்குக. புத்ர! ஹனுமானே!'' ''என்னிங்ஙனெ ஸமுத்ர லங்கனபரிஶ்ரமதனுகின என்னெ ஆலிங்கனம் செய்து ஆஶ்வ ஸிப்பிகுன்னிதோ ஈன்னு தோன்னுமாறு வீயுன்னு. என்னுல் ஈ புரோ பாகதத்துங்கல் காணுகுன்னது அஶோகவனி கோத்யானம் என்னு வந்நுகூடும் என்னுல் இதுங்கலகத்து புக்கறிவு ஞானென்னருளிச் செய்து அகத்து புகு நோகுன்ன காலத்து காணுயீ உத்யானம்.''

(2) ''ஸந்தர்பே ஸம்ஸ்க்ருதீக்ருதா ச'' என்ற நூற்பாப்படி :

''புஷ்பிதரே பந்தலகதது சூகராஶ்
சுசூடிரே மால பறிச்சொரோர்த்தரே (ஒரோருத்தரெ)
ததல்லிரே தம்மிலதீவ கோரமாய்
மமண்டிரே கொண்டு மணுட்டி தன்னெயும்''

முதலியவைகளிலுள்ளது போன்று மலையாள அடிச் சொற்களுக்கு சமஸ்கிருத உருவம் கொடுத்தல் என்ற முரண்பட்ட மரபு அன்று வழககிலிருந்தது. உண்ணுநீலிசந்தேசதில ''மாடம்பிநாம'' ''பின்னி டேதா'' ''பொத்தயித்வா'' முதலிய எடுத்துகாட்டுகளில் விசித்திர வடிவங்களின் வழககு காணப்படுகின்றது.

(3) ''தரவிட ஸங்காதாக்ஷர நிபத்த மெதுகாமோன
வ்ருத்த விசேஷயுகதம் பாட்டு.''

இந்நூற்பாவின் கருத்தை இங்கு மொழி பெயர்ப்போம். சொற்களை சமஸ்கிருதத்திலிருந்து ஏற்றுகொண்டாலும், தமிழ் எழுதுகளையே பயன்படுத்தி, எதுகை என்று கூறப்பட்ட இரண்டாமெழுத்து ஒன்று தலையோ, மோனை என்று கூறப்பட்ட முத லெழுத்து ஒன்று தலையோ (இதன் தன்மை ஒரு அடியை இரண்டு பகுதியாகி முறிதது, இரண்டு பகுதிகளிலும் பிறப்பிடததால் ஒற்று மையுள்ள இன எழுத்துக்களை பயன்படுத்தல்) இரண்டையுமோ

சேர்த்துத் தமிழ் யாப்பில் அமைத்துள்ள செய்யுள்களுக்கு பாட்டு என்று பெயர். பாட்டிற்குக் கொடுத்துள்ள,

தரதலந்தானளந்த(ா) பிளந்த(ா) பொன்னன்
தனக செந்தார் விருந்தாமல் பாணன் தன்னெ
கரமரிந்த(ா) பொருந்தானவன்மாருடெ
கரளரிந்த(ா) புரானெ முராரீ கணு
ஒரு வரந்தா பரந்தாமமே நீ கனிகது
உரக சாயீ பிணிப்பவ்வம நீந்தாவண்ணம்
சிரதரந்தாள் பணிந்தேனய்யோ தாங்கென்னெ
திருவனந்த(ா) புரநதங்கு மானந்தனே.

என்ற எடுத்துககாட்டு இராமசரிதத்திலிருந்து எடுககப்பட்டிருக்கலாம் என்று ஊகிக்க வழி உணடு [1] இந்த ஊகம் சரியெனில் இராமசரித ஆசிரியராகிய வஞ்சி மன்னரின் பின்னரே லீலாதிலகத்தின் தோற்றம் என்பது தெளிவாகின்றது. ஆஞல் எதுகை (இரண்டாமெழுத்து ஒன்றுதல்) மணிப்பிரவாளத்தில் சில சமயம் பயன்படுத்தப்பட்டு வந தது என்பது ஏஜன எடுத்துக்காட்டுச் செய்யுட்களிலிருநது தெரிய வருகின்றது.

18. லீலாதிலகத்தில் காணப்படும் சான்றுகளினின்று நமக்குக் கிடைக்கும் மொழிவரலாற்றுண்மைகள் எவையெல்லாமென்று பார்ப் போம். பண்டைககாலத்தில் மலியாள நாட்டில் பேச்சு வழக்கிலிருந்த மொழியின் பெயர் தமிழ என்றே அமைந்திருந்தது. அசல் தமிழிற்குப் பாண்டித் தமிழ் என்றும் இநநாட்டு மொழிக்கு ''மலயாந்தமிழ்'' என் றும் வேறுபாடு அமைந்திருக்கலாம். மலயாந்தமிழ் என்பது ''மல யாண்ம'' என்று மருவியிருகக வேண்டும். நாடோடி மொழியிலிருந்து சிறிது உயர்ந்த ஒரு இலககிய மொழி தோன்றியிருந்தது. அது உரை நடை எழுதுவதற்குச் சிறுபான்மையாகவே பயன்பட்டு வந்தது. செய் யுள் இரண்டு விதத்திலும் இயற்றப்பட்டது. மோஜனையையோ, எதுகை யையோ (அந்தாதித தொடையையோ) விதிப்படி பயன்படுத்தித் தமிழ் யாப்பில் வடமொழி எழுததைப் பயன்படுத்தாது வட்டெழுத்தில எழுதியுள்ள பாட்டுகளே முதலாவது வகை. இரண்டாவது வகை வடமொழி வேற்றுமையிறுதிச் சொற்களைச சேர்த்து எதுகை மோஜன கட்டாயமில்லாது, மெய்ப்பாட்டிற்கு முதன்மையளித்து ''வசநத திலகம்'' முதலிய விருதத யாப்பில் இயற்றப்பட்ட மணிப்பிரவாள நெறி. சம்ஸ்கிருத முதன்மை காரணமாக மணிப்பிரவாள நூற்களை ஆரிய எழுத்தில்தான் எழுதவேண்டுமென்ற் கட்டாயம இருநதது.

1 இப்பாடல் இராமசரிதத்தில் காணப்படவிலலை.

இராமசரிதம் முதலியவை பாட்டிற்கும், உண்ணுநீலிசந்தேசம் முதலியவை மணிப்பிரவாளத்திற்கும் எடுத்துக்காட்டுகள். இராமசரிதத்தைப் பின்பற்றி அய்யிப்பிள்ள ஆசான், கண்ணசப்பணிக்கர் முதலியோர் முறையாகப் பாட்டு என்ற முதல்வகைச் செய்யுளை இயற்றினர். இவ்வகைப் பாடல்களின் இறுதிக் கட்டத்தில் ''கிருஷ்ணப்பாட்டு'' தோன்றியிருக்க வேண்டும். உண்ணுநீலிசந்தேசத்தின் மாதிரியிலும் பல நூற்கள் எழுந்திருக்க வேண்டும். ஆனால் தனிச் சுலோகங்களல்லாது நூற்கள் அதிகமாக வெளியிடப்படவில்லை. ''செல்லூர் மகாத்மியம்'' முதலிய சம்பு[1] பிரபந்தங்கள் இந்த வகையில் பின் எழுந்த நூற்களாகவிருக்கலாம்.

19. மேற்கூறிய விதத்தில் இடையில் தடைபட்டு, இரண்டு கிளைகளாகப் பிரிந்து கெடுகப் பாய்ந்துகொண்டிருந்த கேரளக் கவிதை என்னும் நதியினை மீண்டும் கூட்டிச்சேர்த்து ஒரே பேராறு ஆக ஆக்கிய பெருமகன் துஞ்சத்து ராமானுஜன் ஆவார். அவர் ஏற்படுத்திய விதிகளாவன.

(1) மணிப்பிரவாளத்தைப் போன்று பாட்டுகளிலும் தேவைக்கேற்றபடி அழகிய சமஸ்கிருத வேற்றுமை இறுதியைப் பயன்படுத்தலாம்.

(2) வேற்றுமையிறுதிகளாயினும் பகுதிகள் மாத்திரமெனினும் ஸம்ஸ்கிருதச் சொற்களை மிகுதியாகப் பயன்படுத்தும் நிலையில், அவற்றின் எழுத்துத் தெளிவுக்காக இலக்கியமெல்லாம் ஆரிய எழுத்தில் எழுதப்படவேண்டும்.

(3) இருமொழிக் கலப்பில் சமஸ்கிருதப் பெயர்களோடு மலையாள வேற்றுமை உருபுகளைச் சேர்த்து வழங்குதல் சரியான வழி. நேர்மாறாக மலையாளப் பெயர்களோடு ஸமஸ்கிருத வேற்றுமையுருபுகளைச் சேர்த்து ''மாடம்பிக்காம்'' ''பின்னிட்டேதா'' முதலியவை போன்று வழங்கும் முரண்பட்ட மரபு பிழை.

(4) சமஸ்கிருத யாப்பிலக்கணத்திலுள்ள வண்ண விதியையும் மாத்திரை விதியையும் தமிழ் விருத்தங்களில் நுழையச் செய்து புதிதாய்க் ''கிளிப்பாட்டு'' முதலிய மலையாள விருத்தங்களை வழக்கில் கொண்டு வந்தார்.

20. இவ் விதிகளின்படி தமிழும் ஸமஸ்கிருதமும் கலந்து உண்டாகிய மொழியே மலையாள நாட்டில் இன்றும் நடந்துவரும் இலக்கிய மொழி. இதனில் ஸமஸ்கிருத வேற்றுமையிறுதி காலப்போக்கில்

1 உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள

குறைந்து வருகின்றது. பச்சை மலையாளத்திலும் கவிஞர்கள் கை வைக்காதிருந்ததில்லை. ஆனால் அதற்குப் பிரசாரம் கிடைப்பது ஐயத் திற்குரியது. நாடோடியாகிய வீட்டுமொழியிலும் கற்றவர்களுக் கிடையில் ஸமஸ்கிருதச் சொல்வழங்கல் மெள்ள மெள்ளப் பெருகி வரு கின்றது. மலையாளம் தோன்றியது தமிழின் துணைமொழியாகவே என்ற காரியத்தில் இனி எந்தத் தருக்கத்திற்கும் இடமில்லை. லீலா திலக ஆசிரியர் இதனை எடுத்து முழங்கியதும் உண்டு. ''கேரளா நாம் த்ரவிடஸ்ப்த வாச்யதவாதபப்ரமேஹ தத பாஷா தமிழ் இத்யூச் யதே, சோள கேரள பாண்டயஷு த்ரவிட ஸ்ப்தஸ்ய வாப்ரஸித்ய ப்ரவ்ருத்தி கர்ண்ணாடாந்தராவபி தரவிடா விதி கேசித்; தன்ன தேஷாம் த்ரவிடா வேத விலக்ஷண பாஷா வத்த்வாத்; த்ரவிட ஸங்காத பாடாபாவாச்ச'' சோளம, கேரளம், பாண்டியம ஆகிய மூன்று நாடு களிலும வழங்கிய மொழி தமிழின் வகை வேறுபாடே. கன்னடத்தை யும் தெலுங்கையும் இதனில் உட்படுத்தலாமென்பது சிலரது கொள்கை ஆனால் அம்மொழிகள் திராவிட வேதமாகிய திருவாய் மொழியிலிருந்து வேறுபட்டதாகையால் அவைகளைத் தமிழில் உட் படுத்துவது சரியன்று. அமமொழிகளின் நெடுங்கணக்கும் வேருகும.

21. முதல் மலையாள இலக்கணம் லீலாதிலகமாகும். இலக்க ணத்தின் முக்கிய செய்திகளெல்லாம் அதனில் நன்னூலைப் போல இயற்றப்பட்டுள்ள நூற்பாக்களால் விளக்கப்பட்டிருக்கின்றன. நூற் பாக்கள் சமஸ்கிருதத்தில் எழுதப்பட்டனவே என்று அதிசயப்படுவ தற்கில்லை. தெலுங்கிலும் முதலில் எழுந்த இலக்கணமும் சமஸ்கிருத நூற்பா வடிவத்திலேயே அமைந்தது. தமிழிலே நன்னூலையும் தெலுங்கிலே ஆந்திரசப்த சிந்தாமணியையும் பார்த்து அவற்றின் முறையில் அன்று மணிப்பிரவாளம் என்று கூறப்பட்ட மலையாளத் திற்கு ஒரு இலகக்ணமாக லீலாதிலகம் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்பதில் ஐயம இல்லை. இந்த விலை மிகுந்த நூல் இதுவரை வெளி யிடப்படாததில்தான் அதிசயம் தோன்றுகிறது. எதுவாயினும் லீலா திலகம் கிடைத்ததோடு, சமீபகாலம்வரை ''மலையாளம் யாதொரு விதியுமில்லாத இழிந்த மொழியாயிருந்தது என்றும் மலையாளத்திற்கு முதன்முதலில் இலக்கணம இயற்றுதற்கு ஒரு ஐரோப்பியப் புலவரே அமைகதார்'' என்றும் ஏற்பட்டிருந்த இகழ்ச்சியும், மொழிப்பற்றின் மையும் நீங்கினவல்லவா என்று மகிழ்ச்சி கொள்ளலாம்.

22. ஒவ்வொரு காலககட்டதிலும் எழுந்த நூற்களிலிருந்து எடுத்துககாட்டாகச் சில பகுதிகள் கீழ்க்காட்டப்படுகின்றன.

முற்காலப்பகுதி — கருந்தமிழ்க்காலம்

(செய்யுள்)

குலச்சில் வந்தணயொல்லா யென்னும் கினவு கொண்டு மூவுலகு
வானுளார்
குலத்தெயும் கிரணபந்தியால் குறவெடுத்து காப்பதிவனே காணு
எலிக்கு மீது வருர்வாருணு சிவனு மீளனும் பின்னளகேளனும்
மலர்ப்பெண்ணன் பீலகம மாலும் நான்முகனும் மற்றுரப்பதுமிம்
மூர்தியே.

—ராமசரிதம்

(உரைநடை, கி. பி. 775 ஏப்ரல்—கொல்லமாண்டு தொடக்கத்தின் 50 ஆண்டுகளுக்கு முன்)

ஹரி ஸ்ரீ கணபதியே நம.

ஸ்ரீ பூபால நரபதி வீரகேரள சக்ரவாத்தி ஆதியாயி முற முறையே பல நூறுயிரத்தாணடு செங்கோலு நடத்தாயினின்ற ஸ்ரீ வீரராகவ சக்ரவர்த்தி திருவிராஜ்யம் செல்லாயின்ற மகரத்துள் வ்யா ழம மீனஞாயிற்று இருபத்தொன்று சென்ற சனிரோஹிணி நாள் பெரும் கோயிலகத்திருந்நருளெ மகோதைர் பட்டணத்து இரவிகோர்த் தனுய சேரமான் லோகப்பெரும் செட்டிக்கு மணிக்கிராம பட்டம் குடுத் தோம். விளாபாடயும், பவனத்தாங்கும், வெறுபேரும், கடத்து வளெஞ்சியமும் வளெஞ்சியத்தில் தனிச்செட்டும் மு(ன்)ச்சொல்லும், முன்னடயும், பஞ்சவா தியமும், சங்கும், பகல்விளக்கும், பாவாடயும், ஐநதோளமும், கொற்றக்குடயும், வடுகப்பறயும், இடுபிடித் தோரண மும் நாலு சேரிகளும் தரிச்செட்டும குடுத்தோம் வாணியரும் ஐங்கம் மாளரெயும் அடிமகளுடுத்தோம். நகரத்துக்கு கர்தாவாய இரவி கோர்த்தனுக்கு, பறகொண்டளந்து, நிறகொண்டு தூக்கி நூல் கொண்டு பாகியெண்ணின்றதிலும் எடுகின்றதிலும உபி(ப்பீ)னேடு சர்க்கரயோடு கஸ்தூரியோடு விளக்கெண்ணயோடு இடயில் உள்ளது எப்பேர்ப்பெட்ட தினும் தரகும் அதினடுத்த சுங்கமும கூட கொடுங்கல் லூர் அழிவழியோடு கோபுரததோடு விசேஷால் நாலு தளியும், தளிக கடுத்த கிராமத்தோடிடயில் நீர் முதலாயி செப்பேடு எழுதிக்குடுத தோம். சேரமான் லோகப் பெருச்செட்டியான இரவிகோததனுக்கு. இவன் மக்கள் மக்கள்கதே வழிவழியே வேருகக் குடுத்தோம். இததியும் பன்றியூர் கிராமமு(ம்) சோககிரிக் கிராமமும் அறியே குடுத்தோம். வேணுடும் ஓடுநாடும் அறியக் குடுத்தோம். ஏறநாடு வள்ளுவநாடுமறி யக குடுத்தோம சநதராதித்யகளுள்ள நாளெக்கு குடுத்தோம். இவர்க ளறிய செப்பேடெழுதிய சேரமான லோகப்பெருந்தட்டான் நம்பிச்செட யன் கையெழுத்து.

—கொச்சிராஜ்ய சரித்திரம்

இடைக்காலப்பகுதி — மணிப்பிரவாளமுறை

(செய்யுள்)

''ஆம்பல்ப் பிரியாபரண முண்கின காளகூடம்
கூம்பும் கரால் மிழி துளும்பின கங்கவெள்ளம்
சாம்போழுமென் மனஸி சாம்பலணிஞ்ஞ கோலம்
காம்போடுகூடி மருவிடுக மன்மதாரே.'' —லீலாதிலகம்

''தூகும் பூந்தேன் பரிமளபரம் நம்புதோறும் நடப்பான்
மேவும் காவும் பதியுழறி நீ திர்க்குறண்டிக்கு சென்று
தேவம் தஸ்மின் தொழுது வழிமேல் நின்று நேரே நடங்நால்
கூவிடபபால் பதி பனயனுர்காவு மங்கல்ய கீர்த்தே.''
—உண்ணுநீலிஸந்தேஶம்

(செய்யுள்—பாட்டுமுறை)

அரக்கர்குலம் வேரறுகக வேணமென்ற மரர்களும்
அலைகடலில் சென்று முறயிட்டதும
ஆழிவர்ண்ண னன்னருளிச் செய்ததும்
முனிவரன்றெ ஹோமகுண்டம் தன்னில் நின்னு
திவ்ய நாயகன் உதயஞ்செய்ததும்
தசரதன் மகிழ்ந்து வாங்கிக கொண்டதும்
கொண்டுடன் தன் பார்யமார்கு பாயஸம் கொடுத்ததும்
குவலயத்தில் மஙகமார் பூஜித்ததும்.
—ராமகதப்பாட்டு – அய்யிப்பிள்ள ஆசான்

முனிவொடஹங்காராதிகளெல்லா
முறற விசாரங கொண்டு களஞ்ஞே
கனிவொடு ஶமதம ஸந்தோஷாதிகள்
கைக்கொண்டாரன தத்பாராயே
அனுபமராகிய பூதேவன்மார்
அவரவரெ மம தைதவமென்ஞல்
மனஸி நினச்சதும செய்து முடிககாம்
மாயவரருளாலின்னினியெலலாம்.
—கண்ணச ராமாயணம்

(உரைநடை)

''அனிலானலேந்து புரந்தரோபேந்தரஸமான பராக்கிரமஞகிய ஸவித்ரகுல நாத தூதன் ஸ்ரீஹனுமான் ஸாயங்காலத்துங்கல் ஸகல கலா பரிபூர்ண்ணஞகின சந்த்ரதேவனுடெ சந்தரிகா ஸ்பர்ஸத்திஞல் அபனீதாத்வஶரமஞயி ஆலம்பஶிகரதின் மேல் நின்னிறங்கி.''
—சுந்தரகாண்டம் – தமிழ்

தற்காலப் பகுதி

(செய்யுள்)

''செறுப்ப காலங்களிலுள்ள ஶீலம்
மறக்குமோ மானுஷனுள்ள காலம்
காரஸ்கரத்தின் குரு பாலிலிட்டால
காலாந்தரே கய்ப்பு ஶமிப்பதுண்டோ ?''

''ஜலத்திலெப் போளகளென்ன போலே
சலம் மனுஷ்யர்கு ஸரீரபந்தம்
ஶூலம் பலம் புத்ர கனத்ர ஜாலம்
பலம் வரா மருதயவரும தஶாயாம்.''

—குஞ்சன் நம்பியார்

(பாட்டுமுறை)

ரகுகுல வரேஷ்ட தூதன் த்ரியாமாசர
ராஜ்யமெழுநூறு யோஜனயும கூஷ்ணல்
ஸரஸபஹு விபவயுத போஜனம் கல்கிஞன்
ஸந்துஷ்டனுயிது பாவகதேவனும். —எழுத்தச்சன்

(உரைநடை)

''அஸ்தபர்வத நிதமபத்தெ அபிமுகீகரிச்சு லம்பமான மாய அம்புஜ பந்துபிம்பத்தில் நின்னும அம்பரமததியத்தில் விஸ்ரு மரங்ங ளாயி பந்துக பந்துரங்களாய கிரணகந்தளங்ஙள் ஹிமாலய மஹா கிரியுடெ துங்கக்களாய ஶ்ருங்க பரம்பரகளுடேயும் பதரீநாத க்ஷேத்ரத் தின்றேயும் அதப்ரஶஸ்தப்ரகளாய ஹிமஸம்ஹதிகளில் பிரதிபிம்பிசசு பிரகாஶிச்சு. தாக்ஷிணத்யனுய ஒரு மந்தமாருதன் ஸானுப்ர தேஶங ஙளில் ஸம்ருத்தங்ஙளாயி வளர்ந்நிரிகுன்ன மஹீருஹங்ஙளில் ப்ரபா தால் பரபூதி விகஸ்வரங்ஙளாயி நில்கிகுன்ன ஸுரபிலதரங்ஙளாய குஸுமங்ஙளுடெ பரிமளதோரணியெ அதிதயகளிலேகு ப்ரஸரிப் பிசசு இப்ரகாரம் யாதொரு வ்யத்யாஸவும் ப்ரதிபந்தவும் இல்லாதெ ஸூர்யரஸ்மிகள் ஈ பாவதோ பரிபாகங்ஙளெ பரஸ்ஸகஸ்ரம் ஸம்வத் ஸரம் ஶோபிபிக்குகயும் ஈ புஷ்பங்ஙளுடெ ஸௌரப்யம் கிரிஸ்ருங்கங ஙளிலேக்கு உத்கமிகுகயும் செய்துகொண்டிருகவே, தூரதேஶங்ங ளில் ஜனங்கள் பரஸ்பரம் ஸ்பர்த்திசசு யுதங்ஙளில் ப்ரவர்த்திக்குகயும் ப்ரபலங்ஙளாய ராஜ்யங்ஙள் உத்பவிக்குகயும் க்ஷயிக்குகயும் புதிமான் மார் ஈ பரபஞ்சம் இப்ரகாரம் இரிகுன்னதின்றெ காரணதேயும உத தேஶ்யதேயும் அவதாரணம செய்யுன்னதினு நிஷ்ப்ரயோஜனமாயிப்ர யதனப்பெடுகயும செய்து வந்நு.''

—கேரளவர்மா (அக்பர்)

''எந்தாணு இங்ஙனெ ஆலோசிகுன்னது? பரமார்த்தம் பற யேண்டி வருன்னதாய ஸ்தலங்ஙளில் ஆளுகள் மனுஷ்யரில் கின் னுள்ள பீதி கொண்டோ காரியததில் வராவுள்ள கஷ்டங்ஙளெயோ நஷ்டங்ஙளெயோ ஓர்த்திட்டோ வ்யபிசரிச்சு பறஞ்ஞால் அதி லுள்ள தோஷம் இன்னதாணென்னு நல்ல அறிவுள்ள ஒராளாகயால் இங்ஙனெ மனஸ்ஸின்னு ஒரு வியத உண்டாகுன்னதானென்னு எனிக்கு நல்ல ஓர்ம்ம எப்போழும் உண்டு. ஈ ஒரு ஓர்ம்ம உண்டாகக கொண்டு தன்னெயாணு ஞான் இங்ஙோட்டு போரநதும்.''

—சந்துமேனோன் (சாரதா)

3. எழுத்துவரிசை

23. மலையாள எழுத்துவரிசையில் கீழ் காட்டப்படும எழுத்துக் கள் அடங்கியுள்ளன.

1. உயிர்

	சமான எழுத்து					சந்தி எழுத்து				தொகை
குறில்:	அ	இ	உ	஋	஌	எ	ஒ	—	—	7
நெடில்:	ஆ	ஈ	ஊ	ஏ	ஐ	எ	ஓ	ஐ	ஔ	9
								மொத்தம்		16

2. மெய்

	வல்லினம்	அதி வல்லினம்	மிருது	கோஷம்	மெல்லினம்	வர்க்கம்	
	1	2	3	4	5		
1	க	஖	஗	஘	ங	கவர்க்கம்	தலையெழுத்துகள் 25
2	ச	஛	ஜ	஝	ஞ	சவர்க்கம்	
3	ட	஠	ட	஢	ண	டவர்க்கம்	
4	த	஥	஦	ध	ந	தவர்க்கம்	
5	ப	஫	ப	஭	ம	பவர்க்கம்	
	ய	ர	ல	வ	இடையினம் – 4		
	ஶ	ஷ	ஸ		உடசொலி – 3		
	ஹ				கோஷி – 1		
	ள	ழ	ற		திராவிட இடையினம் – 3		
	ன				திராவிட மெல்லெழுத்து–1		
					மொத்தம்		31

24 மேல் காட்டப்பட்டுள்ள 53 ஒலிகளில் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வருணமாகும். முழுவதும் இவற்றை மாற்றியும் மறித்தும் சேர்ததால் மலையாளச் சொற்கள் உளவாகும். ''க'' முதல் ''ன''வரையுள்ளவற்றில் வசதிகாக 'அ' என்ற முதல் எழுத்தைச் சேர்த்து ஒலித்தல் மரபு.[1] அதனால் க், ஙு முதலியவற்றில் அகர ஒலி தவிர்த்த ஒலியே இங்கு உணர்ததப்படுகின்றது. '்' என்ற பிறையடையாளம் அகரததைத் தவிர்தது ஒலிக்கவேண்டுமென்று காட்டுகின்றது. மேல் காட்டப்பட்டுள்ள 53 எண்ணிக்கையுள்ள ஒலிகளுக்கு வர்ணம் என்று பெயர் கொடுக்கப்பட்டுள்ளது. அந்த ஒலிகளைக் குறிகும் அ, ஆ முதலிய அடையாளங்களுக்கோ எழுதது என்று பெயர். எழுத்தில் அல்லாது வர்ணங்களை எழுதிக்காட்ட வழியில்லை. ஒரே வர்ணத்தின் அடையாளமாக ஒவ்வொரு மொழியினரும ஒவ்வொருவிதமான எழுததினை ஓரொலிக்குப் பயன்படுத்துகின்றனர். எவ்வாறெனின் அ என்று இங்கு காட்டபபட்டுள்ள ஒலியைத தமிழில் அ என்றும் கிரநதத்தில் ச என்றும தெலுங்கில் ఌ என்றும் சமஸ்கிருததில் ऌ என்றும் ஆங்கிலதில் A என்றும இவவாறு பலவகை எழுததுகைள் ஏற்பட்டிருக்கின்றன. அதனால் சொற்பொருளே உணமையானது; அதனைக குறிகும் ஒலியே வர்ணம்; அநத வர்ணதைத நினைவுறுத்தும் எழுத்தே லிபி. ஒலிப்பதும் எழுதுவதும் பலவிதங்களிலாயினும ஆன, கஜம், எலிபெனற் ஆகியவையெல்லாம் துதிக்கையும் வாலும் பிறவுமுளள ஒரு பெரிய நான்குகால் பிராணியைத்தான் குறிகின்றன.

25 உயிர் எனவும் மெய் எனவும் ஒலிகளை இருபெரும் பகுதியாய்ப் பிரித்ததில், உயிர்களை மாததிரமே தனிதது ஒற்றையாக ஒலிக்க முடியும். மெய்களுககு, ஒலித்தகுதி வேண்டுமெனின் உயிரின் துணை தேவைப்படுகின்றது. மா, பலா முதலிய மரங்களைப் போன்று உயிர்கள் சுதந்திரம் உடையன. அவற்றில் முளைதது வளரும இத்திகள்[2] போன்று மெய்கள் பிற சார்புடையன. அ, இ, உ என்ற உயிர்கள் தனியே நிற்கும். மெய்களோ க, கி, கு என்று அந்த உயிர்களின் முன்னர் ஒலிகைப்படுகின்றன. க் என்று தனிதது ஒலிகக முடியாது. உலகு என்றும மற்றுமுள்ள சொற்களின் இறுதியில் க் தனித்து நிற்பதுபோலத தோன்றலாம். ஆனால் அங்கும குற்றியலுகரம் என்று கூறப்படும் ஒரு உயிர் உண்டென்பது மிக வெளிப்படை. ஏதேனும ஒரு ஒலிச்சாயை சேராது மெய்யை ஒலித்து நோகின் வெளியே ஒலி வருவதில்லை. இவ்விதம் மெய்களுக்கு உயிர்த்

1 மெய்யின இயக்கம அகரமொடு சிவணும். தொல். எழுத்து 46.

2 ஒட்டுணணி மரவகை.

துணை இன்றியமையாதது. ஆதலால் எல்லா மெய்களையும் அ சேர்த்து ஒலித்தல் வேண்டும் என்று விதி செய்யப்பட்டது.

26. வைசேஷிக மதத்தினர் "உலகின் பொருட்களெல்லாம் ஐம்பூதங்களால் இயன்றன" எனக் கூறுவதைப் போன்றே தற் கால வேதியியலார் "பொன் முதலிய உலோகங்களாலும் கந்தகம் முதலிய அலோகங்களாலும் நிறைந்தது உலகம்" எனக் கூறுவதைப் போன்றே மொழியைப் பிரித்தாய்வு செய்தால், அதன் மூலதத்துவம் உயிர், மெய் ஆகிய இரண்டுவித வர்ணமே என்பதில் ஐயமில்லை. ஆனால் வைசேஷிகருடைய பூமி முதலிய ஐம்பெரும் பூதங்களையோ, ரஸதந்திரகாரர்களின் பொன் முதலியவற்றையோ அல்ல நாம் தினசரிப் பயன்படுத்துவது. நாம் பயன்படுத்துவதும் பூமி முதலியவைகளும் பொன், கந்தகம் முதலியவைகளும் மற்றும் மூலதத்துவங்களோடு கலப்பதால் அவர்களது பாவையில், முழுவதும் கலப்புகளே. அதனைபோன்றே மொழியிலக்கணப்படி நாம் எழுதுவது மூலதத்துவமாகிய வர்ணத்தை அன்று, பல வர்ணங்கள் கலந்து உண்டாகும் எழுத்தையே.

ப், ஊ என்ற இரண்டு வர்ணங்கள் சேர்ந்தது பூ என்ற எழுத்து

ஷ், ர, ஈ ,, மூன்று ,, ,, ஸ்ரீ ,, ,,
ஸ், த, ர்+ஈ ,, நான்கு ,, ,, ஸ்ரீ ,, ,,

மேற்காட்டிய உத்திப்படி ஒலி வசதி நிமித்தம் வர்ணங்கள் சேர்ந்து உண்டாகும் எழுத்துகளுக்கு அடையாளமாக லிபிகளை ஏற்படுத்தியிருக்கிறோம். வர்ணங்களை மாத்திரம் காட்டும்போது க், வ் முதலியவை போன்று, அகரத்தைத் தவிர்ப்பதற்குத் தனியாக அடையாளம் சேர்த்து மெய்களை எழுதுகிறோம். உயிர் தானே ஒலித்தகுதியுள்ளது ஆதலால் அது ஒற்றை வர்ணமாகிய எழுத்தாகும் என்பது மாத்திரம் வேறுபாடு. தனியாக ஒலிக்கமுடியாத மெய்களை ஏதேனும் ஓர் உயிரோடு சேர்த்து ஒலிக்கவேண்டியிருப்பதால் ஒரே நிலையாயமைதலுக்காக எல்லாவற்றிலும் ஒன்றுபோலே "அ" என்ற உயிரைச் சேர்த்து ஒலித்தலே இங்குள்ள அமைப்பு. அதனால் நமது லிபிகளெல்லாம் எழுத்துவரிசையின் அடையாளங்கள்; வர்ண வரிசையின் அடையாளங்களல்ல.

ஏனைய இந்தியர்களும் நம்முடையதைப் போன்ற எழுத்துவரிசையை உடையவர்கள். ஐரோப்பாவில் வழங்கப்படுவதோ எழுத்துவரிசையன்று, வர்ணமாலையாகும். அதனால் ஐரோப்பிய மொழிகளைப் பயில்வதில் நமக்குச் சில வசதியின்மைகள் ஏறபடுகின்றன. மெய்களை உயிர்களின் துணையின்றி ஒலிக்க முடியாது என்று காட்டப்பட்ட

தன்றே. நாம் அதற்காக எல்லா மெய்களோடும் அகரத்தைச் சேர்த்துக் குறிப்பிடுகிறோம். ஐரோப்பியர்களுக்கு இந்த வரையறையில்லை.

க் என்ற மெய்யை ஆங்கிலத்தில் ''கே'' எனக் குறிப்பிடல்.

ஸ் ,, ,, ,, ''எஸ்'' ,, ,,

ப் ,, ,, ,, ''பி'' ,, ,,

நாம் எல்லா மெய்களோடும் அகரம் சேர்த்து க, ஸ, ப என்று ஒரே மாதிரி குறிப்பிடுவதால் ஒரு ஒழுங்கு அமைகின்றது. கே, எஸ், பி ஆகியவை ஆங்கிலத்தில் அததன் வர்ணங்களின் பெயர்கள். நமக்கு இன்ன எழுத்து என்று ஒரு பெயர் கொடுத்துக் குறிப்பிடும்போது அங்கும் நாம் ''அ'' என்ற உயிரையும் காரம் என்ற சாரியையும் சேர்த்து ககாரம், ஸகாரம், பகாரம் என்று ஒரேமாதிரிக் குறிப்பிடுகிறோம். நாம் எழுத்துகளை இவ்வாறு எழுதுவதால் ஆங்கிலத்தில் ஸ்பெல்லிங் என்று கூறப்படும் வர்ணவிதித்தடைகள் நமது மொழிகளில் இல்லை.

27. அட்சரத்திற்கு முதன்மையும், அட்சரத்தில் உயிர்க்கு முதன்மையும் உளளதால் லிபியிலும் உயிர்கு முதன்மை கொடுக்க வேண்டும் என்று நமகுத் தோன்றலாம். ஆனால் அது நேர்மாறுகவே அமைகின்றது சடமாகிய உடலை இயகுவது உயிர். ஆனால் நமக்குக கட்புலனுவது உடலே ''சேட்டை இல்லாதாகையால் உடலில் நின்றும் உயிர் வேறுபட்டுப் போயிற்று'' என்று நாம் ஊகிக்கததான் செய்கிறோம். உயிர் இன்ன இடத்தில் இருக்கிறது என்பதை யாரும் காண்பதிலலை. அதனைப்போன்று காட்சியில் முதன்மை மெய்களுக்காதலால் எழுதது வேறுபாட்டில் மெய்யை முதன்மையாககி, உயிர்களை அதில் ஒன்றிக்கலந்துள்ளதாகக் கருதுவது வழககம் இந்த உத்திப்படித் தமிழர்கள் ஒற்றுக்களுககு மெய் என்றும, ஸ்வரத்திற்கு உயிர் என்றும் பெயர்கள் கொடுத்திருகின்றனர். க என்ற எழுத்தில் முக்கியமாகக் காணப்படுவது 'க்' என்ற மெய்யேயெனினும் அதனுள் அகரம் ஒன்றியிருக்கின்றது. அகரததின் நீட்டல் எனில் 'கா' என்று நீட்டலடையாளம் சேர்ககப்படுகிறது. இகரமெனின் 'கி' என்று மேல் விலங்கு என்று கூறப்படும் 'ி' அடையாளம் சேர்ககவேண்டும். உகர மெனின் 'கு' என்று ஒரு கீழ்வளைவு, எகரமெனின் 'கெ' என்று இடது பககத்தில் ஒரு கொம்பாக 'ெ' என்ற அடையாளம் முதலியன. சமஸ்கிருத இடை எழுத்துகள் உயிர்ப்பகுதி சேர்ந்தவையாதலால் மெய்களையும் இவ்வடையாளங்களால் குறித்தல் வழக்கமாயிற்று.

கய = கை; க்ர = கு; க்ல = கூ; க்வ = கை; ர்க = ர்க.

எழுத்தில் உயிர முதன்மையின்மையால், மெய்யில் உயிர் சேர்த்தால்

அதனைக் கூட்டெழுத்தெனக் கூறுவதில்லை. 'க' என்பது க்+அ எனினும் அது ஒரு கூட்டெழுத்தன்று. க்ல, க்ஷி, ஸ்ம, ஶ்ர முதலிய மெய்யியிணைகள் மாத்திரம் கூட்டெழுத்து எனக் கூறப்படுகின்றன.

28. எழுத்தச்சனது காலம்வரை மலையாளிகள் வட்டெழுத்தைப் பயன்படுத்தி வந்தனர். சமீப காலம்வரை மலையாள நாட்டில் இந்த எழுத்துவழக்கில் இருந்து வந்தது. இன்றும் சில பழைய பிரமாணங்கள் இந்த எழுத்தில் எழுதப்பட்டிருப்பதை வீடுகளிலுள்ள ஆவணப் பெட்டிகளில் காணலாம். வட்டெழுத்து தமிழர்களின் எழுத்து வரிசையாக அமைந்திருந்ததால் அதில் தமிழ் எழுத்துக்கள் மாத்திரமே உள்ளன. ஸமஸ்கிருத ஒலிகளுக்கு எழுத்துக்கள் அதனில் இல்லை. சாசனங்களிலும் மற்றும் தேவைப்படும்போது ''ஸ்வஸ்தி ஸ்ரீ'' முதலியவை தமிழ் கிரந்த எழுத்துக்களிலிருந்து கடன்வாங்கிப் பயன்படுத்தப்பட்டன. இந்தக் குறையை நீக்குதற்கு எழுதச்சன் கிரந்த எழுத்துக்களின் தலையும் வாலும் முறிதது மேனியாககி மலையாளத்தில் இப்போது வழங்கும் எழுதது மாலையை அமைத்தார். ஆனால் மலையாள எழுத்து வரிசையை எழுதச்சன் இயற்றினார் என்று கூறவும் வழியில்லை. துளு மொழியினரும் இந்த எழுத்து மாலையையே பயன்படுத்தியிருந்தனர். எனவே ''துளு மலையாள எழுதது வரிசை'' என்று நமது எழுத்து வரிசைக்குப் பெயர் ஏற்பட்டிருந்தது.

29. எழுத்து வரிசையைப் பொறுத்த அளவில் தமிழுக்கும் வடமொழிக்கும் ஒற்றுமையில்லை என்று கூறப்பட்டதன்றே. அது கீழ் கூறப்படும் முறையிலமையும். உயிர்களில் இரு, இலு என்ற இரண்டும, தடையொலி என்று கூறப்படும் வர்க்க எழுத்துகளில் அதிவல்லினம், மிருது, கோஷம் ஆகிய இடை மூன்றெழுத்துக்களும் உரசொலிகளும், கோஷி என்ற பெயருள்ள ஹகாரமும் தமிழில் இல்லை. மெல்லினததில் ''ன'' என்ற ஒன்றும், இடையினத்தில் ற, ள, ழ என்ற மூன்றும் தமிழில் மிகுதியாய் உள்ளன. மலையாளத்திலோ தமிழிலும் சமஸ்கிருதத்திலும் உள்ள எல்லா எழுத்துக்களும் தேவைப்படுகின்றன. சமஸ்கிருதச சொற்களைச சரியாக எழுதுதற்காக சமஸ்கிருத எழுத்து வரிசையை ஏற்றுககொண்டு அதனோடு தமிழில் சிறப்பாக உள்ள நான்கெழுத்துகளையும் 'சேர்த்து மலையாள எழுதது வரிசை இயற்றப்பட்டது. தமிழில் எழுத்துப்பஞ்சம் உளதென்று கூறப்பட்டதன்றே. ஆனால் அது நாம் ஐயுறுகின்ற அளவில் இல்லை. உண்மையில் தமிழில் லிபிப்பஞ்சமே உள்ளது; ஒலிப் பஞ்சமன்று. இவ்வுண்மையை நிறுவத் தொடங்குமுன்னர் வர்ணங்களின் தோற்ற உருவம், அவைகளுககிடையிலுள்ள வேறுபாடுகள் முதலியவைகள் குறித்துச் சிறிது விளக்கவேண்டும். உயிர், மெய்

என்ற பெரும் பிரிவு, அவற்றுள் உயிர்களின் குறில் நெடில்கள், பொது தனி ஒலிகள் சந்தியக்கரங்கள் என்ற இரண்டுவகை உட்பிரிவு, வல்லினம், மிகுவல்லினம் ஆகிய வல்லின உட்பிரிவுகள் என்று எழுத்து வரிசைப்பட்டியலில் காட்டிப் பிரித்தவற்றிற்கெல்லாம அடிப்படை எது?

30. உயிர்ப்புக் கோசங்களிலிருந்து எழும் நிஸ்வாஸக் காற்று "glottis" என்று கூறப்படும் குரல்வளையில் நுழைந்து அங்கிருந்து கண்டம அண்ணம் முதலிய இடங்களில் தட்டி, வெளியிலே வருவது தான் வர்ணத்தைச் சேர்ந்த தொனி. அதனதன் இடங்களைத்தொடும் போது நாவின் அசைவுகளால் இத்தொனி வேறுபடும். வர்ணங்களுக்குப் பல மாதிரி சுருதி ஐந்துவகைக் காரணங்களால் ஏற்படுகின்றன.

(1) ஒலிவேறுபாட்டுக்காரணம்:- (உள்முயற்சி = Emission) உயிர்ப்பை வெளியில் விடுவதன் வகை வேறுபாடு என்பது இதன் பொருள். வெளிவிடும் காற்றை நாக்கின் நுனி, நுனியின் அடுத்துள்ள பாகம, இடை நா, அடி நா இரு பகுதிகள, ஆகியவைகளில் ஒன்றால் குரல்வளை முதலிய இடங்களில் தடைப்பட்டோ, தடைப்படாமலோ விடலாம. தடைபடுத்துவதிலும் சிறிதாகவோ, ஒரு பகுதி அளவோ தடுக்கலாம். தடைப்படுத்தாது விடும் உயிர்ப்பால் பிறப்பது முதல் வகை. சிறிது தடைப்படுத்துவதால் பிறப்பது இரண்டாம் வகை. ஒரு பகுதி தடைப்படுவதால் தோன்றுவது மூன்றும் வகை. முழுவதும் தடைப்படுததப்படுவது நான்காம வகை. இவ்வாறு ஒலிவேறுபாட்டுக காரணம் நான்கு வகைப்படும்[1]. உயிர்களின் ஒலிவேறுபாட்டுக் காரணம் முதல்வகை. அவைகளை ஒலிக்கும்போது காற்று சிறிதும தடைப்படுவதில்லை. நாவின் நுனி, நுனியை யடுத்த இடம், இடைநா, அடிநா, இரு புடைகள் ஆகிய கரணங்களில் ஒன்றால் குரல்வளை, அண்ணம், அண்பல், பல், உதடு என்ற இடங்களில் ஒன்றைத்தொடுவதால் பிறப்பது எனினும் உயிரொலியில் காற்றின் போக்கைச் சிறிதும் தடுப்பதில்லை. நேர்மாறுக வர்கக எழுத்துக்களை ஒலிக்கும்போது குரல்வளை முதலிய இடங்களில் நுனிநா முதலிய கரணங்கள் பலமாகத தொடுதலால் காற்று முழுவதும் தடைப்படுகின்றது. தடை நிற்கும்போது க முதல் ம வரையுள்ள வர்ணங்களின் தொனி உண்டாகின்றது. தொடுதல் மிகுதியாக அமைவதால் இந்த வர்ணங்களுக்கு "ஸ்பர்ஸம்" என்று பெயர் அமைக்கது. ஶ-ஷ-ஸ ஆகிய உரசொலிகளுகும் ஹ என்ற ஒலிகும் ஒலிவேறுபாட்டுக் காரணம்

1 முதல்வகை அஸ்ப்ருஷ்டம் எனவும், 2-ம் வகை ஈஷத் ஸ்ப்ருஷ்டம் எனவும் மூன்றும் வகை நேமஸ்ப்ருஷ்டம் எனவும் 4-ம வகை ஸ்ப்ருஷ்டம் எனவும் கூறப்படுகின்றன.

மூன்றும் வகை. இவற்றை உச்சரிக்கும்போது ஒலியிடங்களைக் கரணங்கள் புதுதியளவுதான் தொடுகின்றன. ய, வ, ர, ல, ழ, ற, ள என்ற இடையெழுத்துக்களின் ஒலிவேறுபாட்டுக்காரணம் இரண்டாவது வகை. இவற்றில் தொடுதல் சிறிதே உள்ளது. தொடுதல் மிகுந்தோறும் தடை மிகும். தடை மிகுந்தோறும் உயிர்ப்பு வெளிவராததால் ஒலியைத் தனியே உச்சரிப்பதிலுள்ள வசதி குறையும். சிறிதும் தொடுதல் இல்லாததால் உயிர்களைத் தனியே உச்சரிக்கலாம். தொடுதல் பலப்படுவதால் வர்க்க எழுத்துக்களை உயிர்த்துணையோடே உச்சரிகக முடியும். தொடுதல் குறைவதால இடையொலிகளை உயிர்களைச் சேர்க்காதும் ஒருவாறு உச்சரிக்கலாம. அதனால்தான் ய, வ, ர, ல, ழ, ற, ள ஆகியவை இடையெழுத்துக்கள் என்று பெயர் கொடுக்கப்பட்டன. உயிர்களுக்கும் மெய்களுக்கும் இடையில் கிற்பது இடையெழுத்து என்பது பொருட்பொருத்தம். ஆங்கிலத்தில் இவை Semivowel (அரை உயிர்) என்று பெயா இடபபட்டிருக்கின்றன. உரசொலிகள், ஹ ஆகியவைகள் மூன்றும்வகையைச் சார்ந்தனவாதலால் அவற்றிற்குப் பாதி மெய்த்தன்மையும் பாதி உயிர்த்தன்மையும் உள்ளன. ஐவர்க்க எழுத்துக்களைவிட அவற்றிற்குத் தனியே ஒலிக்கும் நிலை உண்டு.

உயிா, மெய், ஆகிய பெரும பிரிவு, மெய்களில் தடையொலிகள், இடையினம, உரசொலிகள், ஹகாரம் என்ற உட்பிரிவுகள் ஆகியவற்றின் பொருததம் இதனால் தெளிவாகும்.

(2) *ஒலி உறுப்புகளின் அசைவுகள் அல்லது புற முயற்சி. கரணம் என்பது உபகரணம்; தொனியை ஆக்குவதில் துணை செய்யும் உறுப்பு; அதாவது நாக்கு; அதன் விபரமம் (அசைவு வேறுபாடு); நாக்கால் குரல்வளையை அடைப்பதும் திறப்பதும் என்பது கருத்து. குரல்வளையைத் திறந்து உச்சரித்தால் தொனி முழுவதும் வேகமாக வெளியில் வரும், அப்போது உண்டாகும் ஓசை மென்மை இல்லாது கரகரப்பாக இருக்கும். குரல்வளையைச் சுருக்கித் துவாரத்தைச் சிறிதாககிவிட்டால் தொனி அடங்கி, உள் முழங்கிச் சிறிதாக, முறையே வெளிவரும். முதலில் கூறிய விதத்திலெனில் தொனி உயிர்ப்பு வடிவமாகும்; இரண்டாம் விதத்தில் அது நாத உருவம் ஆகும்; ஐ வருக்கங்களில் முதல் இரண்டும் உரசொலிகளும் உயிர்ப்புக்கள் ஆகும. ஏனைய வெல்லாம் அதாவது வருக்க எழுத்துக்களில் 3, 4, 5 வர்ணங்களும் உயிர்களும் இடை எழுத்துக்களுமம ஒலிப்புகள் ஆகும். 'கோஷி' என்று கூறப்படும் ஹகாரத்திற்கு உயிர்ப்பும் நாதமும் கலந்த தொனி

* இது கரண விப்ரமம எனக் குறிக்கப்பட்டிருக்கிறது.

உளது என்பது பிராதிசாககியர்களின் கொள்கை. இதனில் பல கருத்து வேறுபாடுகள் உள்ளன. உயிர்ப்பு ஒலிப்பு வேறுபாட்டிற்குக் காரணம் குரல்வளையை அடைத்தலும் திறத்தலும ஆகையால் புற முயற்சி என்ற இந்தத் தொனி வேறுபாட்டு உபாதியை விவாரம் ஸம்வாரம் என்றும், ஸ்வாசம் நாதம் என்றும் இரண்டாகப் பிரிக்கலாம்.

(3) ஸம்ஸர்க்கம் (சேர்க்கை): ஸம்ஸர்க்கம் என்ருல் ஒரு தொனியில் மற்ருரு தொனியைக் கூட்டிச் சேர்த்தல் ஆகும். செம்பையும் இரும்பையும் சேர்த்துருக்கி வெண்கலம் உண்டாக்குவதைப் போன்று இரண்டு ஒலிகளை, வேறுபாடு அறிய முடியாதவாறு, பொருததி இணைப்பது ஸம்ஸர்க்கம் ஆகும். ஸம்ஸர்ககதிற்குப் பயன் படுத்தும் ஒலி பெரும்பாலும் கோஷி என்று கூறிய ஹகாரமாகும். ஹகாரக் கலப்பால் வருக்க முதலாகிய வல்லெழுத்து அதிவல்லெழுத் தாகவும் மூன்ருவதாகிய மிருது கோஷமாகவும் மாறும்:

வர்க்கமுதலும் ஹகரமும் : க்+ஹ = ஖;[1] ட்+ஹ = ஠;[2] ப்+ஹ = ஫[3]

வர்க்கமிருதுவும் ஹகரமும் : ங்[4]+ஹ = ஗;[5] ண்[6]+ஹ = ஡;[7] ம்[8]+ஹ = ஭[9]

"வல்லினக்கை அதிவல்லெழுத்தாக்குவது ஹகாரமன்று; பொருத்தப் படி ச்ஶ = ஷ;[10] ட்ஷ = ஐ முதலியவையே" என்று ஒரு கருத்து வேறு பாடுள்ளது. ஹகாரதிற்கு உயிர்ப்பும், நாதமும ஆகிய இரண்டும் உள என்று கருதுவதற்கும் காரணம் இதுவே. வலலெழுத்தோடு சேரும்போது ஹகரம் உயிர்ப்புள்ளது. மிருதுவோடு சேரும்போது நாதமுள்ளது என்று கொண்டால் இரண்டுவகையிலும் சேர்வது ஹகரம்தான் என ஏற்றுக்கொள்ளலாம. புதிய கருத்துப்படி கலப்பு உள்ள இணைகளிலெல்லாம் இரண்டாம் மெய், ஹகரமே.

உயிர்ப்புள்ள ஐ வருக்கத்தின் முதலே வல்லெழுத்து. அதனேடு உயிர்ப்புள்ள ஹகரம சேரும்போது உண்டாகும் வருகக இரண்டா

---

1 இது வகரம் அனறு ககரத்தின் இரண்டாவது வருக்க எழுத்து.
2 டகரத்தின் இரண்டாவது வருக்க எழுத்து.
3 பகரத்தின் ,, ,, ,,
4 ககரத்தின் 3-ம் வருக்க ஒலி.
5 ,, 4-ம் ,, ,,
6 டகரத்தின் 3-ம் ,, ,,
7 ,, 4-ம் ,, ,,
8 பகரத்தின 3-ம் ,, ,,
9 ,, 4-ம ,, ,,
10 சகரத்தின 2-ம ,, ,,

மெழுத்து அதிவல்லெழுத்தாகும். நாதமுள்ள ஃ-ம் வருக்க எழுத்து மிருது; அதனோடு நாதமுள்ள ஹகாரம் சேரும்போது நாதமிகுதியால் முழக்கம் உண்டாவதால் வருகக நான்காமெழுத்து கோஷம் என்ற பெயரை எய்தியது. ஒலிக்கலப்புள்ள எழுத்துகளுக்கு உச்சரிப்பில் அதிக பலம் வேண்டிவருவதால் ஸம்ஸ்ருஷ்ட ஒலிகளாகிய ஐ வருக்கத்தில் இரண்டாவது, நான்காவது ஆகிய எழுத்துகளைப் பேருயிர்ப் பொலிகள் என்று கூறுவதுண்டு. ஒலிக்கலப்பு இல்லாதவை சிற்றுயிர்ப்பு ஒலிகள். வல்லெழுத்து சிற்றுயிர்ப்பொலி; அதிமல்லெழுதது அதன் பேருயிர்ப்பு; மிருது சிற்றுயிர்ப்பு; கோஷம் அதன் பேருயிர்ப்பு. ஸம்ஸாக்கம உயிர்களிலும் உண்டு.

அ + இ = எ
அ + உ = ஒ
அ + எ = ஐ
அ + ஒ = ஔ

ஆனால் எகர ஒகரங்களில் உள்ள ஒலிக்கலப்பு ஸம்ஸ்கிருதத்தில் உள்ளது போன்று மலையாளத்தில அவ்வளவு தெளிவாக இலலை. சமஸ்கிருதத்தில் உப + இந்த்ர = உபேந்த்ர; கங்கா + உதகம் = கங்கோதகம முதலிய புணர்ச்சிகளில் கலபபொலி தெளிவாவதைப போன்று மலையாளத்தில் தெளிவாகக் காணவழியில்லை. ஸம்ஸர்க்கத்தின் தளர்வில் தான் ஸமஸ்கிருததில் ஏகார ஓகாரங்களுகக குறில்கள் இல்லாமற் போயின. மலையாளத்திலோ ஒலிக்கலப்பின் செறிவால் இவைகளை ஒரே எழுத்தாகக கணகக்கிடுவதால் எகர உகரங்களுகக்கு குறிலநெடில் வேறுபாடும ஏற்பட்டது இவ்வுண்மையைக் கருதி எ, ஏ, ஒ, ஓ, ஐ, ஔ ஆகியவைகள் சந்தியக்கரம் என்றும், ஏனைய உயிர்கள் தனி உயிர்கள் என்றும் பெயரிடப்பட்டன.

(4) வழிவேறுபாடுகள் : வர்ணங்களாய் அமைவது உயிர்ப்புக் காற்றன்றே? குரல்வளை அளவு அது வந்ததன்பின் வெளிவர இரண்டு வழிகள் உள வாய் வழியோ, மூககின் வழியோ நமககு மூசசுவிடலாமன்றே? நாதமுளள ஒலிகளை உசசரிப்பது குரல்வளையை அமுக்கித், தொண்டையை இடுககிச் சிறிது சிறிதாகக காற்றை வெளிவிடுவதால் என்று கூறப்பட்டதன்றே? குரல்வளையைச சுருககிப் பின்னர் மூச்சுக் காற்றை மூககின்வழிப் போககிலல் வர்ணம் மெல்லெழுத்து ஆகும். வாயின் வழி வெளியிட்டால் மெல்லினமல்லாத சுதத ஒலிகளாகும். நாதம் உள்ள ஒலிகளுக்கே இநத வேறுபாடு நிகழும். மிருதுகளை மூக்குவழிக் காற்றை விடுவதே ஐ வருககத்து ஐந்தாம் எழுததுகளாகிய மெல்லினம். உயிர்களுககும் நாதம்

உண்டாவதால மெல்லினம், மெல்லினமல்லாத வேறுபாடு நிகழும். அவ்வேறுபாடு ஸமஸ்கிருதத்தில் காணப்படுகின்றது.

(5) பிறப்பிட வேறுபாடுகள் : வர்ணங்களின் உச்சரிப்பில் நிஸ்வாஸக்காற்றை நாக்கின் நுனி, நடு, முதல், ஓரம் ஆகியவற்றால் வாயின் உள் நோக்கி சில இடங்களில் தடைசெய்தன்றே வெளிவிடு கின்றோம். இந்த இடங்களே வர்ணங்களின் பிறப்பிடங்கள். இவை உள்நின்று புறதது முறையே கழுத்து, அண்ணம், இடையண்ணம் (மேல் அண்ணங்களுகிடையே வாயின் மேற்பகுதி) பல், மேல்வாய், அண்பல், உதடு என்ற ஐந்தும் ஆகும். இந்த முறையை அனுசரித்தே ஐவருக்க எழுத்துகளின் வரிசை அமைகபபட்டிருகின்றது.

வர்க்கம்	வல் லெழுதது	அதி	மிருது	கோஷம்	மெல் லெழுத்து	பிறப்பிடத்தால் உள்ள பிரிவு
கவர்ககம்	க	஖	க	஘	ங	கழுத்தில் பிறப்பது
சவர்ககம	ச	஛	ஜ	஝	ஞ	அண்ணதில் பிறப்பது
டவாகசம்	ட	஠	ड	ढ	ண	இடை அண்ண தில் பிறப்பது
தவாக்கம்	த	஥	द	ध	ந	அண்பல்லில் பிறப்பது
பவர்க்கம்	ப	஫	ब	भ	ம	இதழில் ,,

உயிர், இடை எழுத்துகள், உரசொலிகள் ஆகியவற்றின் வரிசை சிறிது பிழைபட்டிருக்கின்றது. உயிர்களின் வரிசை அ, இ, இறு, இலு, உ என்றுக்கினும் குரலவளை முதல் உதடுவரை என வரிசை சரி யாகும இடையெழுததில் குரலவளையொலி இல்லை இ, இறு, இலு, உ என்று மாறுபடுதிய உயிர்வரிசைக்கு ய, ர, ல, வ என்ற இடை யெழுதது வரிசை பொருந்தும. ஶ, ஷ, ஸ என்ற உரசொலிகள் அண் ணம, இடை அண்ணம், பல் என்ற முறையில் பொருந்தியமைகின்றன. குரல்வளை, உதடு என்ற இடங்களில் முதலிலும இறுதியிலும் பிறக்கும் எழுத்துக்களின் உரசொலிகள் இல்லையென்பதே உளது. ''கழுத்து இடததில் ஹகாரம் பிறகின்றது'' என்று கூறலாம். ஆனால் அது எல்லோராலும் ஒப்புக்கொள்ளபபட்டதன்று. ஹகாரத்திற்கு அதன் மேல் ஊர்ந்துவரும உயிரின் இடமே உள்ளது என்பது சிலர் கொள்கை. ஹகாரத்தின் சரியான ஒலி இன்னதென்று முடிவுகட்டாத தால் கருதது வேறுபாடுகள் உண்டாகினறன. வர்ணங்களின் பிறப் பிடங்களெல்லாம சேர்த்துக் கீழே காட்டப்படுகின்றன.

உயிர்	ஐவருக்கம்	இடையெழுத்து	உரசொலி
அ	க	—	ஹ (?)–குரல்வளையொலி
இ	ச	ய	ஃ—அண்ண ஒலி
இறு	ட	ர	ஷ—இடையண்ண ஒலி
இலு	த	ல	ஸ—அண்பல் ஒலி
உ	ப	வ	—— இதழ ஒலி
எ, ஐ	—	—	குரல்வளை அண்ண ஒலி
ஒ, ஔ	—	—	குரல்வளை இதழ் ஒலி

வசதிக்காக இதனை நூற்பாவாகக்குவோம் :

அ கவர்ககம் கண்டஜமாம்
இ சவர்ககம் யஞங்ஙள் தாலவ்யம்
உ பவர்கக வ ஓஷ்டஜமாம்
இறு டவர்கக ரஷங்ஙள மூதததன்யம். —

இலு தவர்கக லஸம் தநதயம
ஸநதயக்ஷரமொததபோல் த்வயஸ்தானம்
ர ஷ ள ழ மூதததன்யம தான்
ட ள வர்த்ஸ்யம தராவிடம் கிலீபூதம். —

(6) பரிமாணம் : பரிமாணம் என்றால் அளவு அல்லது மாத்திரையாகும் இது குறில் நெடில் வேறுபாடுகளின் இயல்பான உருவம். அ, இ, உ என ஒரு மாதத்திரையுள்ளன குறில்கள; ஆ, ஈ, ஊ என இரண்டு மாதத்திரையுள்ளன நெடில்; குறில், நெடில் வேறுபாடு உயிர்களில் வெளிப்படையாய்க் காணப்படுகின்றது. மெய்களிலும் இவ் வேறுபாடு நிகழும். ''அதில் நின்னு'' என்ற இடத்தில், ''ல்'' என்ற லகரம குறிலாகும். ''புல்குன்னு'' என்ற இடத்திலுள்ள ''ல்'' நெடிலாகும்.[1]

31. வர்ணங்களை வேறுபடுத்தும் உபாதிகளை ஒவ்வொன்றாக விவரித்துவிட்டோம் இனி இந்த உபாதிகளை அடிப்படையாகக் வர்ணங்களின் பிரிவுகளைத தனியாக எடுத்துக்காட்டுவோம். ஒலிக் காரண வேறுபாடுகளில் முதல்வகை, நான்காம் வகை ஆகியவற்றின் அடிப்படையில் வர்ணங்கள் உயிர், மெய் என்ற இருபெரும் பிரிவிற் படும். மெய்களுக்குள்ள முயற்சி வேறுபாடுகளை நோக்கி, தடையொலிகள் அல்லது ஐ வருகம், இடையினம் உரசொலிகள் ஹகாரம் என்ற உட்பிரிவுகள் அமையும்; ஐ வருக்க எழுததுகளில வல்-

1 மெய்களில் குறில நெடில (மகரக் குறுகம் தவிர) வேறுபாடு தமிழ இலக்கணத்தில் காணபபடவில்லை

லெழுத்து, அதிவல்லெழுத்து, மிருது, கோஷம், மெல்லினம் என்ற உட்பிரிவுகள் முயற்சி, ஒலிக்கலப்பு, வழிவேறுபாடு என்ற மூன்று உபாதிகளின் அடிப்படையிலமையும். வல்லினம், அதிவல்லினம் ஆகியவை உயிர்ப்பு வடிவங்கள்; மிருது, கோஷம், மெல்லினம் ஆகியவை. நாத வடிவங்கள். வல்லெழுததுகைகள் ஹகாரம் சேர்வதால் அதிவல்லெழுத்தாய் முடியும். மிருதுக்கள் அதனுல் கோஷங்கள் ஆகும்; சிற்றுயிர்ப்புக்களாகிய வல்லெழுத்தின் பேருயிர்ப்பு அதிவல்லெழுத்து; சிறறுயிர்ப்புகளாகிய மிருதுவின் பேருயிர்ப்பு கோஷம். மிருதுவை நாதமுள்ளதாக உச்சரிக்கும்போது நிஸ்வாஸக் காற்று குரல்வளையில் வளைந்து சென்று வாய்வழியே வெளிப்படுகின்றது. மெல்லினத்தை உச்சரிக்குமபோதோ மூக்கின்வழி வெளிப்படுகின்றது. என்று இந்த இரண்டுவகை வருணங்களுகும் காற்று வெளிவரும் வழியில்தான் வேறுபாடுகள். வருக்க எழுத்துக்களின் தன்மை இது வரைக கூறியதினின்று தெளிவாகின்றது. குரலவளையில் அடிநாவை அழுத்திக காறறுக குழாயைத திறந்து உச்சரித்தால் க என்ற வல்லெழுத்துத் தோன்றும. அதில் ஹகாரம சேர்ந்து அமைந்தால் ''வ'' என்ற அதிவல்லினம் தோன்றும். அதிவல்லின உச்சரிபபில் குரல்வளையைத் திறப்பதற்குப் பதில் நெக்கி நெருககித் தொண்டையைச் சுருக்கி உச்சரித்தால் ஗ என்ற மிருது தோன்றும. மிருதுவோடு ஹகார ஸம்ஸர்க்கம் அமைந்தால் ஷ என்ற கோஷம் தோன்றும். மிருதுவில் ஹகாரம் சேர்வதற்குப் பதில் காற்றுக குழாயை இடுககியதன் பின் நிஸ்வாசக் காற்றை வாய்வழி விடாது மூககின்வழி வெளியிட்டால் ங என்ற மெல்லெழுகுதுத தோன்றும.

32 எழுததுத் தோற்றதையும் எழுததின் பிரிவுகளையும் குறிதது விளககி முடித்த நிலையில் தமிழிலுள்ள எழுத்துப பஞ்சத்தைக குறித்துச சிகதிப்போம உண்மையில தமிழர்கள் சமஸ்கிருதத திலுள்ள ''ஹ'' ஒலியை மடடுமே தவிர்ததிருககின்றனர்! ஐ வருக கங்களில் க ஗ ங என்ற வல்லெழுத்து, மிருது, மெல்லினங்கள் தமிழில் உள்ளன. மிருதுகளுக்குத தனி எழுதது அமையவில்லையெனினும் அத்தொனி தமிழில் மிகுதியாக உள்ளது, எவ்வாறெனின்,

எழுதது	ஒலி
படி	பडி
குதிர	குडிர
பம்பரம்	பம்ப்ரம்

உரசொலிகளும் சிறிதும இல்லையென்று கூறமுடியாது. இரட்டாத போதெல்லாம் சகரத்திற்கு ஶகரததொனி உள்ளது.

எழுத்து	ஒலி
பசி	பசி
செய்	ஸெய்
வசவு	வஸவு

ஹகரம் இல்லாததால் அதிவல்லினம் கோஷம் ஆகிய இருவகை பேருயிர்ப்புகளும் இல்லாது போயின. அதனால் தமிழில் குறைந்து போகியவை தொனிகளல்ல, லிபிகள். இப்போது நாம் எழுதிவரும் மலையாளத்தில் நகரத்திற்கும் னகரதத்திற்கும் லிபி வேறுபாடு இல்லாததைப் போன்று தமிழில் வல்லெழுத்து மிருதுக்களுக்கு லிபி வேறுபாடுதான் இல்லையென்று கருதவேண்டும். நகயக்குந்து என்று எழுதினாலும் நாம் னகயக்குந்து என்று எவ்வாறு படிக்கின்றோமோ அவ்வாறே தமிழர்கள் அகரம என்று எழுதபபடுவதை அ஗ரம்[1] என்று படிக்கின்றனர். இரட்டாதபோது ந என்ற எழுததிற்கு மொழி முதலில் மாத்திரம் நகரததொனி; அல்லாத இடங்களிலெல்லாம் அதற்கு னகரத்தொனி என்பதே சாதாரணமாக நாம் கொள்ளும் விதி. அதனைப்போன்று தமிழிலும் விதி உள்ளது. க ட த ப ஆகிய வல்லினங்களுக்கு மொழி முதலில் வல்லெழுத்தொலி; மொழியிடையிலும் இரட்டினால் வல்லெழுததொலியே. அதனால் இரட்டித்த மிருது தொனி தமிழில் இல்லையென்பதே உளது. வல்லெழுததுகளில் சகரத்தைக்குறித்து மாத்திரம் கூறப்படவில்லையன்றோ? அதன் ஒலி மிருதுவாகிய ஜகரத்தினதன்று. உரசொலி ஆகிய ஶகரததின் ஒலியே அதன் தொனி. அதன் விதியிலும் சிறிது வேறுபாடு உளது. மொழி முதலிலோ மொழியிடையிலோ எங்கெனினும் சகரத்திற்குத் தனித்து வரும்போதெல்லாம் "ஶ" என்ற உரசொலியின் தொனியே உளது. இரட்டும்போது மாத்திரம் "ச" என்ற வல்லெழுத்தின் தொனி உளது. ஸகரத்திற்குப் பதில் சில இடங்களில் சகரம் பயன்படுத்தப்படும். ஸமயம்=சமயம், மொழி முதல் நிலை, மொழியிடை நிலை ஆகிய இடவேறுபாடுகளாலும், தனிநிலை, இரட்டல் ஆகிய நிலைவேறுபாடுகளாலும் எழுத்துக்களுக்கு ஒலிமாற்றம் ஏற்படுவது எல்லாத திராவிட மொழிகளுக்கும் வழக்கமான ஒரு முறையாயிருந்தது. இப்போது அது தமிழில் மட்டும் எஞ்சியது என்பதே உளது.

இனி சமஸ்கிருதத்தில் இல்லாது திராவிடத்திற்கே உரிய எழுத்துக்களைப் பற்றிச் சிந்திப்போம்.

33. ஒலிவேறுபாட்டுக் காரணத்தில் நான்காம் வகையைச் சார்ந்த வடமொழித் தடையொலிகளுக்கு வல்லெழுத்து, அதி-

1 Agaram.

வல்லெழுத்து, மிருது, கோஷம், மெல்லெழுதது என ஐந்துவித உட் பிரிவுகள உள்ளன. தமிழிலோ வல்லெழுதது, மிருது, மெல்லெழுத்து என்ற மூன்று பிரிவே உள்ளன. ஆனால் சமஸ்கிருதத்தில் ஒலிவேறு பாட்டுக்காரண இரண்டாம் வகையைச் சார்ந்த இடையினத்தில் உட் பிரிவு ஒன்றுமில்லை. தமிழில் ர, ல ஆகிய இரண்டு இடையெழுத் திற்கு உட்பிரிவுகள் உள்ளன. இப்பிரிவு ஐவர்க்கப் பிரிவு முறையை அனுசரித்ததன்று என்பதே வேறுபாடு.

முயற்சி என்று இரண்டாவது கூறி உபாதியை இன்னுமொரு முறை சிந்திகவேண்டியுள்ளது. குரல்வளையைச் சுருக்குவதாலும் பெருக்குவதாலும் வர்ணங்கள் ஸ்வாசமுள்ளவை என்றும் நாதமுள் ளவை என்றும் இரண்டாகப் பிரியும் என்ற பயன் மாததிரம் முன்னர் காட்டப்பட்டுள்ளது. அதனால் வேறுபல பயனும் எய்துகின்றன. குரல்வளை அண்ணம் முதலான பிறப்பிடங்களில் நாககின் நுனி தொட் டால் ஏற்படும் தொனி ஒரு விதம். நா நுனியையடுத்த இடமோ, இடை அடிப்பக்கங்களோ தொட்டால் வெவ்வேறு தொனிகள் தோன் றும். இடை அடிகளையே உப இடை, உப அடி முதலியவையென இன்னும் பாகுபடுத்தலாம். இதைததவிர, தடையொலிகளும பலவகை யிலாகும்; இடையிடாது தொடுதல் (ஸ்பாஸம்), விட்டுவிட்டுத தொடு தல் ஆகியவை. இரண்டாம வகைக்கு ஸ்புரிதம் என்று பெயர். முதல் வகை நிரந்தர ஸ்பர்ஸம; அல்லது சிறப்பாக எடுததுக்காட்டப்படாத நிலையிலும் பிறழ உணரப்பட இடையில்லாததால் வெறும் ஸ்பர்ஸம் என்றே கூறினால் போதும். ஏன் இன்னும் விரித்துரைக்க வேண்டும். ''பிடில்'' வாசிக்கும் ஒருவனுக்குக கமபிகளில் வில் ஓட்டுவதிலுள்ள ஏற்ற இறக்க வேறுபாடுகளால் இசையில் எத்தனைவிதம விநோதங்கள் காட்ட இயலுமோ, அதனில் பதின்மடங்கு விநோதங்கள் மனிதனுக் குக் குரல்வளை முதலிய இடங்களில் நாவசைவினால் வர்ண ஒலியில் எழுப்ப இயலும்.

அதனால் வர்ணங்கள் இத்தனைவகைப்படும் என வரையறைப் படுத்தல் முடியாததாகும். மிஸ்டர். எ. ஜெ. எல்லிஸ் என்ற மொழி யியல் விஞ்ஞானி 77 உயிர்களும 313 மெய்களுமாக 390 வர்ணங்கள் உள்ளன என்று ஒரு எழுததுவரிசையமைத்துள்ளார்.

34. ற, ழ, ள, ட, ன என்ற ஐந்து எழுத்துக்களல்லவோ, சமஸ் கிருதத்தில் இல்லாத திராவிட எழுததுககள். இவற்றையும் வர்க்கங் களாகப் பிரிகககலாம. ற, ழ ஆகியவை ரகரததோடு சார்புள்ளன ஆத லால் ர, ற, ழ என்பன ஒரு வர்ககம; அதற்கு ர வர்ககம் என்று பெயர்

இடலாம். ல, ள ஆகிய இரண்டும் ல வர்க்கமாகும். ட, ன இரண்டும் ட வர்க்கமாகும்.

35. ரகரத்தின் பேருயிர்ப்பு றகரம்; ஆனால் ஹகரத்தின் பேருயிர்ப்பு ஷகாரம் ஆவதுபோலன்று ரகரதத்தின் பேருயிர்ப்பு றகரமாவது; ஹகரம் ஹ சேர்ந்து ஷகாரம் ஆகும்; அதனைப் போன்றே, ரகரம் ஹ ஒலிச் சேர்ககையால் றகரமாகி அமையும் என ஏற்றுக்கொள்ள வழியில்லை. ரகரததை றகரமாகுவது ஒலிச்சேர்க்கையன்று; இடம், முயற்சி ஆகிய வேறிரணடு உபாதிகளாகும். ரகர றகரம் ஆகிய இரண்டும் இடையண்ண ஒலி எனினும் ரகர உச்சரிப்பில் வாயின் மேலண்ணத்தில் எப்பகுதியில் நாக்குத் தொடுகின்றதோ அதன் உள் சிறிது கடந்த பகுதியிலே றகர உச்சரிப்பில் தொடுகின்றது. நாக்குத் தொடுமி பகுதியும், தொடும் முறையும வேறுகும. ரகரததில் நாக்கின் நுனியும், றகரத்தில் நா நுனியை அடுத்த பகுதியும் தொடுதலை நிகழ்த்தும். ரகார ஒலிப்பில் தொடுதலும் ஸ்புரிதமாய் நிகழும். ரகாரததில் ஷகாரத்திற்கு நிகரான ஒரு உரசொலியின் சேர்க்கையால் ழகரம் பிறக்கின்றது. இதன் பிறப்பிடம் ரகரத்தின் பிறப்பிடத்தின் உள்நோக்கிய பின் பகுதி. மொத்ததில் ரகரம் மிருது. அதன் பேருயிர்ப்பு றகரம். உரசொலியின் சேர்க்கை ஆகிய கோஷம் ழகரம் என்பது, ரவர்ககத்தின் இயல்பு.

36. லகரம் அண்பல்லொலி; அதனை ஒலிக்கும்போது நுனி நாவை உயர்த்தி மூசசுக்காற்றைத் தடுதது, பின்னர் நா நுனியிலேயே ஒற்றினால் நாககின் இரு பகஙகளிலாகக காற்றை இடையிட்டுப் புறத்தில விடுதல் அதன் முயற்சி. இநத முயற்சியை அண்பல்லில் செய்வதற்குப்பதில் ''வர்த்ஸம்'' என்று கூறப்படும் வாயின் மேல் அண்ணத்தில் செய்தால், ளகாரம் பிறக்கும். அதனால் வர்த்ஸ்யம் ஆகிய லகரமே ளகரமாகும்.

37. ட, ன என்ற ட வருக்கமோ, க வருக்கம் ச வருக்கம் முதலியவை போன்று தடையொலிகளின் வருகமே. ட வல்லெழுத்து; ன மெல்லெழுதது. அதிவல்லெழுதது, மிருது, கோஷம் ஆகியவை தமிழில் இல்லையன்றே. அதனால் வல்லெழுத்தும் மெல்லெழுத்தும் மாத்திரமேயுள்ளன. இந்த வர்க்கதின் பிறப்பிடம் அண்பல்லிற்கும், இடையண்ணத்திற்கும் இடையிலுள்ள (பல்லின் ஈற்றினை அடுத்த) பின்பகுதியாகிய இடம். அதனால் இவ்வருககம் வர்த்ஸயமாகும். எழுத்துவரிசை உள்நின்று புறத்தை நோக்கியுள்ள இடைவரிசையில் அமைக்கப்பட்டுள்ளதால் வர்த்ஸயமாகிய ட வருககத்தை இடையண்ண ஒலியாகிய ட வருக்கதின் பின்னும், அண்பல்லொலியாகிய

த வருக்கத்தின் முன்னருமாக அமைக்கவேண்டும். தமிழ் இலக்கண ஆசிரியர்களோ ஸம்ஸ்கிருத எழுத்துக்களையெல்லாம் முறையே அமைத்ததன் பின்னர் ட, ன என்ற இந்த வருக்கத்தை எல்லாவற்றிற்கும் இறுதியில் அமைத்தனர் என்பதே உண்மை.

டகரத்திற்கு இப்போது எழுத்துவரிசையில் தனி எழுத்துக காணப்படவில்லை. ட, ற இரண்டிற்கும் 'ற' என்ற ஒரு அடையாளமே உளது. இவ்வாறு நிகழ்ந்ததன் காரணம் இதுவாயிருக்கலாம் என்ற பல ஊகங்கள் முன்னுரையில் முடிந்த அளவு விரித்துரைக்கப்பட்டிருக்கின்றன. அங்கு விளக்கப்படாத ஒரு செய்தி மட்டும் இங்கு சேர்க்கப்படுகின்றது. தமிழில பிறப்பிட வேறுபாடுகளால் எழுத்துகளுக்குள்ள ஒலிவேறுபாடு ஒப்புகொள்ளப்பட்டிருக்கின்றன. இரட்டாத போது வல்லினங்களுக்கு மொழியிடையில் மிருது ஒலி ஏற்படவேண்டும். சகரத்திற்கு மட்டும் இரட்டல் இல்லாதபோது எங்கும் ஶகர ஒலி ஏற்பட்டுள்ளது. இதனைப் போன்றே டகர றகரங்களுக்கும் ஏற்பட்டிருக்காதோ? னகரத்தின் பின்னர் வரினும், இரட்டினும் றகரதற்கு டகர ஒலியே உள்ளது. அல்லாத இடங்களில் றகர ஒலியே. இந்த விதியின் இயல்பைக் காலப்போகில் கல்லாதார் மறந்துவிட்டதோடு அதன் ஒலியைப் பல முறையில் சிதைக்கவும் செய்தனர். இப்போது ''சிற்றப்பா'' ''நூற்றொன்பது'' ''நீற்றுகிருன்'' முதலியவற்றைச், ''சித்தப்பா'' முதலியன போன்று ஒலிகுமிடத்தில் தகர ஒலியோடு மிகவும் பொருந்துமெனினும், டகர் ஒலியே மிகுதியாக உச்சரிக்கப்பட்டு வருகின்றது. ''சென்ற மாஸம'' முதலியவற்றிலும் டகர ஒலியையே பெரும்பாலும் தமிழர்கள ஒலிகின்றனர்; குற்றம, பன்றி முதலியவற்றிலோ அதிகம் ஒலிகக கேட்பது றகர ஒலியே.

திராவிட எழுத்துக்களைக் குறிதது லீலாதிலகத்தில் கீழக கூறப்படும் முறையில் விளக்கப்பட்டுள்ளது. ''இஹ பாஷயாம் ஸமஸ்கிருதேஸந்தி சதவார்யக்ஷராணி தருஶ்யந்தே = ன்ற, ற்ற, ழ, ற, இதி. யதா :

காற்றேற்றொட்டே களிததெளிதேன் கண்ணுநீருத்வஹந்தீ
மாத்வீ மாதயன்மதுப விருதம்கொண்ட வாமோக்தி நின்று
என்னெகக்கண்டிட்டதிகருணயா ஹந்த! பூந்தொத்து போலும்
கோடி, காணு குவலயதளா பாங்கி! கேழின்றவாறு.

இத்யதற—காற்றேற்று, நின்று, கேழின்றவாறு இதி; ததா கொண்டு, ஒட்டே, என்னே இதயத்த ஹ்ரஸ்வப்ருதே ஸந்த்யக்ஷரே ச ஸ்த: இதன்படி ற்ற, ன்ற, ற, ழ குறில்களாகிய எ, ஒ என்ற ஆறும் திராவிடச் சிறப்பு எழுத்துக்கள். ல என்பது ளகாரத்தின் ஒலி வேறுபாடு

என்று லீலாதிலக ஆசிரியர் விட்டுவிட்டார். னகரத்தை ஏழாம் சிறப் பெழுத்தாகப் பின்னர் எடுத்துக் கூறுகின்ருர். அதற்கு அகத்தியச் சூத்திரத்தைச் சான்ருக எடுத்துக்காட்டவும் செய்கின்ருர்.

எகர ஒகர ஆய்த ழகர
றகர னகரம் தமிழ்ப்பொது மற்றே.

என்பது அது இந்நூற்பாவில் எ, ஒ, ஃ, ழ, ற, ன என்ற ஆறெழுத் துக்களையே அகத்தியர் தமிழ்ச் சிறப்பெழுத்துக்களாகக் குறிப்பிடுகின் ருர் எனினும் ''மற்றே'' என்ற சொல்லில் ''ற்ற'' என்பதைப் பயன் படுத்தியதால், ''ற்ற'' என்பதும் சிறப்பொலி என்று நினைவுறுத்து கின்ருர் என்பது லீலாதிலக ஆசிரியரின் உரை. இதிலிருந்து ''ற்ற'' என்ற இரட்டிய டகர ஒலி திராவிடத்திலுளதென்று லீலாதிலக ஆசிரி யர் உடன்படுகின்ருர் என்பதைக் காண்க. ஆனல் தமிழில் இந்த அபூர்வ எழுத்தை அகத்தியர்கூடச் சுட்டிக்காட்டவில்லையென்பது தெளிவாகின்றது. லீலாதிலகத்தில் ''ற்ற'', ''ன்ற'' என்ற இரண்டை யும் தவிர றகரமும் தனியாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. இது நமது ஊகத்தை வலுப்படுத்துகின்றது ற்ற, ன்ற, ற என்ற மூன்று எழுத்துக்களிலும் ற என்ற அடையாளம் உள்ளதெனினும் அவற் றிற்கு ஒலி வேறுவேறென்பது தெளிவு. அல்லது ற என்ற ஒரு எழுத்தைச் சுட்டினுல் போதும்; அதனுல் ற என்பதற்கு ற்ற, ன்ற ஆகிய இரண்டு இணைகளிலும் டகர ஒலி உளதென்றும் தனித்த றகர ஒலியில் மட்டுமே சொந்த ஒலி உளதென்றும் லீலாதிலக ஆசிரியர் உடன்பட்டதாக அமையும இக்கருத்துக்களால், நமக்கு ஆகமப் பிர மாணமும் கிடைத்துள்ளது.

38 மலையாளிகளோ டகரத்திற்கு மாத்திரமன்று, னகரத்திற் கும் தனி எழுத்து வேண்டாம் எனத் தவிர்த்துவிட்டனர். இப்போது னகரத்தையும் குறிப்பது நகரத்தின் எழுத்தாலன்ருே. ந என்ற எழுத்து தனியாக வரும்போது மொழி முதலில் மட்டும் அதற்கு நகர ஒலி உளது; ஏனைய எல்லா இடங்களிலும் அதற்கு னகர ஒலியே உளது. 'ந்' என்ற உயிர்சேராத மெய்யின் அடையாளத்திற்கு எங்கும் னகர ஒலியே உளது. கூட்டெழுத்துக்களில் பின்னிணையாக நின்று உயிர்களோடு சேரும்போது அக்நி, ரதநம, ஸ்நானம் முதலியவை போல நகர ஒலி அமையும். முன் இணையாகி உயிரோடு சேராது நின் ருல் அன்வயம், அன்யாயம், நன்ம முதலியவை போன்று னகர ஒலி உளது. சந்தம், சந்தனம் முதலியவற்றில் அது இணையின் முன் எழுத்தாக வரினும் அதற்கு நகர ஒலி தவர்க்கச் சார்பால் வருகின்றது.

39. கர, கற ஆகியவையும் கரி, கறி ஆகியவையும் ஒன்றுகா மல் இருப்பதற்கு ரகர றகரங்கள் வேறுக்கப்பட்டனவெனினும உயிர் சேர்ந்து உயிர்மெய்யாகும் இடங்களில் இவ்வேறுபாடு அமைக்கப்படு கின்றது. கூட்டெழுத்துகளில் முன் இணையாகவோ பின் இணை யாகவோ நின்றால் இவ்வேறுபாடு இல்லை. எவ்வாறெனின்,

‍ = க்ற	‍ = த்ற	‍ = ற்க்க	‍ = ற்வ
‍ = க்ர	‍ = த்ர	‍ = ர்ய	‍ = ற்ஹ

கூட்டெழுத்தில் பின் இணையாயமைந்தால் ஸ, ஜ, ஷ, ஹ, ஸ்ர[1] ஆகிய மிருதுக்களில் மாத்திரம் ரகர ஒலி உள்ளது. முன் இணையாக அமைந் தால் யகரத்திலும் ஷ, ஸ ஆகிய உரசொலி, ஹகரம் ஆகியவை களிலும் ரகர ஒலி அமையும். ஏனைய இடங்களிலெல்லாம் றகர ஒலி அமையும் என்பது விதி. தமிழில் கூட்டெழுதுதுக்கள் அரியன. கூட்டெழுதது வருமிடங்களின் முன் இணையின்மேல் ஒரு புள்ளி யிட்டுவிட்டு பின் இணையை வேறுக எழுதுவதே அங்குள்ள முறை. அதனால் இம்மாதிரிக குழப்பத்திற்குத் தமிழில் இடமில்லை. மலையா ளத்திலோ சமஸ்கிருத மரபுப்படி கூட்டெழுத்துக்களை ஒன்றுகச் சேர்த்து எழுதுகின்றமையால் ரகர றகர வேறுபாடு செய்யவேண்டி வந்தது.

40. இரு, இலு என்ற இரண்டு உயிர்கள் திராவிட மொழிகளில் இல்லாத சமஸ்கிருத எழுத்துக்கள். இவற்றில் இலு சமஸ்கிருதத் திலும் செயற்கையாய் இயற்றப்பட்டதே வைதிக சமஸ்கிருதத்தில் ''இலு'' என்பதே இல்லை. லௌகீக சம்ஸ்கிருதத்திலும் ''க்லுப்'' என்ற அடிச்சொல்லின் இரண்டோ மூன்றோ உருவங்களில் இது ஏற் பட்டுள்ளது அடிச்சொல்லின் உருவத்தைப் பாணினி ''க்ருப்'' என்றே கணித்திருகிறார் பின்னரே அதற்கு ''க்ருபோ ரோ ல:'' என்று லகர வேறுபாடு விதிக்கப்பட்டது.

திராவிட மொழிகளிலும் இல்லாத உயிராகையால் தூய மலையா ளச் சொற்களில் ''இரு'' என்பதைக காண வழியில்லை. ஆனால் சமஸ் கிருதச் சொற்களின் தேவைகளுக்காக ''இரு'' என்பதை ஏற்றுகொண்ட பின்னர், அது சில மலையாள பதங்களிலும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

''த்ருப்பாதம், த்ருக்கேட்ட, அத்ருத்தி, முதருன்னு''

இவற்றில் 'த்ருப்பாதம்' முதலியவற்றிலுள்ள 'த்ர' என்பதை மாத் திரம் ஒப்புகொள்ளலாம். 'அதருத்தி', 'முத்ருன்னு' முதலியவற்றை

1 இவை முறையே க, ச, ட, த, ப ஆகியவற்றின் மூனரும வர்க்க ஒலி.

'அதிர்த்தி', 'முதிர்ன்னு' என முறையே எழுதவேண்டும். கை யெழுத்து என்பதைக் கய்யெழுத்து எனப் பிழையாக எழுதுவதைப் போன்றதே இது என்று க்ருத கியாயம் உளது.

4. எழுத்துவிகாரங்கள்

41. உயிர்கள், வாழ்கின்ற காலமெல்லாம் அவற்றின் உட லுறுப்புகளில் எப்போதும் மாற்றங்கள் நிகழ்ந்துகொண்டிருக்கின்றன. அதனைப்போன்றே மொழிகளுக்கும வாழ்கை நிலையில் அவற்றின் உடலாகிய எழுத்துக்களில் விகாரங்கள் ஏற்பட்டுக்கொண்டிருக்கின் றன. ''செய்கின்ற'', ''போகின்ற'' என்ற வடிவங்களை 'உண்ணு நீலி சந்தேச' ஆசிரியர் பயன்படுத்துகின்றார். நாம் இப்போது ''செய் யுன்ன'', ''போகுன்ன'' (போவுன்ன) என்று உச்சரிக்கிறோம். எழுத் துகளுக்குப் பல காரணங்களால் விகாரம் வரும்.

(1) அறியாதார அறிவின்மையால் எழுத்துக்களைச் சிதைக் கின்றனர் ''எந்திரு=ஏந்தொரு'', ''கத்தருகின்னது=கத்தியிரிக் குன்னது'' குறையறிவுடையார் திறமையைக காட்டுதற்கு எழுத்துக் களை மாற்றுவர். ''விம்மிஷ்டம்=வீம்மிஷ்ம்=விம்மிட்டம்'' அதுவே சமஸ்கிருத வெறியால் பெரும்பாலும் பிம்பிஷ்டம ஆகவும் மாற்றப்பட் டது என்றும் அமையலாம் ''விம்மிடுக=மூச்சு முட்டுக'' என்ற வினையடியின் பெயர் வடிவம் விம்மிட்டம் என்பதே உண்மை. 'பேஷ்கார்', 'டீப்பு', 'தீவட்டி' முதலியவையும் இதனைப போன்ற னவே.

(2) எல்லா மொழிகளுக்கும் பொதுவாய்ப் பொருந்துகின்ற சில எழுத்து விகாரங்கள் உள்ளன. உயர்குடி மககள் இவ்வகை விகாரங் களை ஒப்புககொள்கின்றனர். இவற்றின்மூலம் முறையே ''உதாசீன கியாயம்'' என்று ஒலி இலகக்கண ஆசிரியர் முழங்கும் ஒரு கொள்கை ஆகும். பெருமுயற்சியுடன் ஒலிக்க வேண்டிய ஒலிகளை முறையே எளிதாகுதலே இதன் இயல்பு.

(3) இனி வம்ச பாரம்பரிய முறையில் எய்தும சில எழுத்து விகாரங்கள் உள்ளன. அத்தகைய மூன்று விகாரங்கள் உள்ளதில் முதலிலுள்ளது எல்லோராலும் ஒப்புககொள்ளப்படாததால் அதனைக குறித்து விரித்துரைக்க வேண்டியதில்லை. இரண்டு, மூன்று ஆகிய வற்றை விவரிப்போம்.

---

1 டகரத்தின் 4-ம் வருக்க எழுத்து.

(1) அ-ஆ—மலையாளத்தில் உள்ள அ, இ, உ என்ற மூன்று தனி உயிர்களில் அகரத்தை ஒலிப்பதில் முயற்சி அதிகம். உகரத்தை ஒலிப்பதில் அதனினவிடக் குறைவு. இகர ஒலிப்பில் அதினிலும் குறையும. அதனால் அகரம் தீவிர முயற்சி; இகரம் மிருது முயற்சி; உகரம இடை முயற்சி. ஆனால் குற்றியலுகரம் என்று கூறப்படும் உகரத்திற்கு இகரத்தைக் காட்டிலும முயறசி குறையும். குற்றியலுகரம் ஒலி வசதிக்காக இறுதி மெய்யொடு சேர்த்து ஒலிகசப்படும் உயிரச் சாயையே ஆகும். அகரம் தீவிர முயற்சியதாகையால் அதன் ஒலி பல சொற்களிலும் சிதைநதுள்ளது. மலையாளத்தில் அகரத்தின் சிதைந்த ஒலி எகரத்தின் சாயையில் அமைந்தது. எவ்வாறெனின்,

கண்டம் = கெண்டம்	பந்து = பெந்து
ஜனம் = ஜெனம்	யஶஸ்ஸு = யெஶஸ்ஸு
டமபம் = டெம்பு	ரவி = ரெவி
தய = தெய	லஜ்ஜ = லெஜ்ஜ

இந்த எடுத்துககாட்டுக்களிலிருந்து வடமொழியின் மிருதுகளோடும் இடையெழுத்துகளோடும் சேர்ந்த அகரததை மலையாளிகள் எகரம் போல ஒலிகின்றனர் என்பது தெளிவாகும. வரம, வஸு முதலிய வைகளில் வகரததிற்கு மொழி முதலில் வெகர ஒலி காணப்படுவ தில்லை. எனினும் தேவகள் முதலியவைகளில் வெகர ஒலி உண்டு. மிருது, இடை முதலியவற்றின் முன்வரும் அகரம் எகரமாய் ஒலிகசப் படுதல் தமிழ, தெலுங்கு, கன்னடம ஆகிய ஏஜன்த திராவிட மொழி களுககும் பொதுவாகும். இவ்வாறு சிதைநத எகரச் சாயையில் வரும அகரததிற்கு அண்ண அகரம் என்று பெயர் கொடுகசலாம். சரியான அகரம் சுத்தம; சிதைந்தது அண்ண ஒலி.

சம்ஸ்கிருதத்தில் மொழியிறுதியில் நிற்கும் ஆகாரத்தைக் குறு கச் செய்து மலையாளததில் அண்ண அகர ஒலி ஆக்கப்படுகின்றது.

ஆஶா – ஆஶ; ரேகா – ரேக; கலா – கல; ப்ரபா – ப்ரப.

ஆஶ வர்த்திச்சு. ஆஶ வெய்ககுந்து என்பவற்றில் போன்று உருவ வேறுபாடு ஒன்றுமில்லாது நிற்கும்போது அகரம் அண்ண ஒலியெனத் தெளிவாவதில்லை. ஆனால ஆஶயால், ஆஶயுடெ, ஆஶயில, ஆஶய்ககு என்று வேற்றுமையுருபுகள் சேரும்போது அகரம் அண்ண ஒலி என்று அறியபபடும். ஆஶ + ஆல் = ஆஶயால் என்று புணர்ச்சியில் யகரம் துணை எழுத்தாக வருவது அண்ண ஒலித்தன்மையால் ஆகும். இந்த அகரம் தமிழில் ஐகாரமாகவும கன்னடததில் எகரமாகவும் மாறும்.

சமஸ்கிருதம்	தமிழ்	கன்னடம்	மலையாளம், தெலுங்கு
ஆஶா	ஆசை	ஆஸெ	ஆச
ரேகா	ரேகை	ரேகெ	ரேக
கலா	கலை	கலெ	கல
ப்ரபா	ப்ரபை	ப்ரபெ	ப்ரப

வேற்றுமை உருபுகளின் போக்கை நோக்கும்போது பெயர்களின் இறுதியில் வரும் அகரமெலலாம் அண்ண ஒலியே. தந்த, தள்ள, குட, தழ, இல, வில, குதிர, திர, புக, வக முதலிய பெயர்களைக் காண்க தந்தயும் தள்ளயும் என்று எழுதப்படினும் நாம் அவற்றைத் தந்தெயும், தள்ளெயும் என்பவைபோலப் படிக்கின்றோம். வினைச் சொற்களிலும் பாதிகளுமேல் இறுதி அகரம் அண்ண ஒலியே; அணயுக, பறயுக, திரயுக, வலயுக, கடயுக, வளயுக, தழய்கக, விறய்க்குக, கழய்கக, அறய்க்குக, சிலய்க்குக முதலியவை. துரக்குக, துறக்குக, மறக்குக, (நினைவை இழத்தல்) கிடகுக (உறங்குதல்) முதலிய சில காரித அடிச்சொற்களில் மட்டும அகரம அண்ண ஒலியாய்ச் சிதைவதில்லை முன் கூறிய அண்ண ஒலியாய்த் திரிதல் என்ற விதிப்படி அண்ண ஒலி இறுதிச் சொறகளுகு அணஞ்சு, பறஞ்சு, தழச்சு, விறச்சு ஆகிய இறந்த கால உருவங்கள் வரும். சுதத அகர இறுதிச் சொற்களோ துரந்து, மறந்து முதலிய அண்ண ஒலித்திரிபு இல்லாத உருவங்களாகவே அமையும் என்பதைக காண்க. அகரததின் தன்மைகேற்பச் சில சமயங்களில் அடிச்சொல்லிற்குப் பொருள் வேறுபாடு வருவதுண்டு.

சுத்தம்	அண்ண ஒலி
மறக்குக = நினைவின்மை	மறய்க்குக = காணுத முறையிலாக்குதல்
கிடக்குக = உறங்குதல்	கிடய்ககுக = எய்துதல்

மேறகாட்டிய எல்லாவகை எடுத்துககாட்டுகளிலும் அகரத்தை அண்ண ஒலியாகவே ஒலித்தல் வழககம். ஆனால் வரிவடிவததில் சுத்தமான அகரத்தினின்று அண்ண ஒலிகது எந்த மாற்றமும் செய்வதில்லை. சுத்தமான அகரம்தான் சரியாக உச்சரிககப்பட வேண்டுவது அண்ண ஒலியோ பொருட்படுத்தாமை நிமித்தம் உண்டாகும் ஒரு ஒலி வேறுபாடு என்பது பாவனை. ஆனால் உண்மை அஙனமன்று. ஒலிபபில் அணண ஒலிததன்மை காணுமிடங்களிலெல்லாம் ஏனைய இகர முதலிய அண்ண ஒலி உயிர்களின் சேர்ககையால் உண்டாகும் உருவ வேறுபாடுகளெல்லாம் இநத அகரததின் தொடர்பிலும் உண்டாகும் என்று காட்டப்பட்டதன்றே.

அதனுல் இலக்கணத்தையும் பாதிககும் இந்த எழுத்து வேறு பாடு துச்சம் என்று கலையத் தக்கதன்று. அண்ண ஒலியாகிய அகரத் தில் இறும் பெயர்களிலும் விஜைகளிலும் உயிரோ, இரட்டிய உருபு முதல் ககரமோ (க்கு) சேரும்போது யகரம் தோன்றும்.

ரேக	ரேகயுடெ	ரேகய்க்குட்
லத	லதயுடெ	லதய்க்குட்
சம	சமயுக	சமய்ககுக
அண	அணயுக	அணய்ககுக

ஆனுல் தலைச்சேரி முதலிய வட பகுதிகளில் ஒரு வேறுபாடு காணப் படுகின்றது. அங்நாட்டு மககள் ரேகெக்கு, லதெக்கு, சமெக்குக, அணைககுக என்று சரியாக எகாரம் சேர்த்தே எழுதுவதும் படிப்பதும் செய்கின்றனர். மங்கலாபுரத்தில் அச்சடிககப்பட்ட குண்டர்ட்டின் மலையாள நிகண்டிலேயே சமயுக, அணயுக என்ற வெறும் அடிச்சொல் வடிவங்களும சமெக்குக, அணைகுக என்ற பிறவிஜை வடிவங்களும் காணப்படுகின்றன சமீபகாலம்வரை திருச்சூரில் அச்சேறிய புதக கங்களிலும் இந்த ஒரு சிறபபு விதி காணபபடடிருந்தது. ஆனுல் திருச்சூர மக்களின் உச்சரிபபில் எகரதைவிட 'அய்' என்ற யகர ஒலியே அதிகம கேட்கப்படுகின்றது. அண்ண உயிர்களோடு உயிர் பின் வருமபோது மாத்திரம் யகரம சேர்த்தால் போதும். உருபு முதல் ககரம் பின்வரின் யகரம் சேர்ததல் வேண்டா என்று விதிவகுத்தால் அதற்கு அமைதி உளது உருபு முதல் ககரத்தின் முன் மாத்திரம் அண்ண ஒலிதன்மையைத் தெளிவாக்கி எகரம் சேர்தது எழுதவேண் டும் என்று சொல்வதில் ஒரு உத்தியும காணப்படவில்லை. இது தலைச்சேரி முதலிய இடங்களில் கன்னடத் தொடர்பால் உளதாகிய ஒரு வட்டார வேறுபாடாகும் என அமைதிகூற நியாயம் காணபபடு கின்றது. கன்னடர் மலையாளததிலுள்ள அண்ண ஒலி அகரத்தை எகரமாக்கியே எழுதவும் உச்சரிக்கவும செய்கின்றனர். என்று முன்பே குறிப்பிடப்பட்டதன்றே.

தமிழிலுள்ள அகரம் மலையாளததில் எகரமாகவும் சிலவிடங்க ளில் இகரமாகவும் மாற்றப்பட்டுள்ளது.

தமிழ்	மலையாளம்
பருமாற்றம்	பெருமாற்றம்
கட்டுகிருன்	கெட்டுன்னு
படுகிறது	பெடுன்னு
கனவு	கினவு
பலாவு	பிலாவு

முதலில் கனவு, கினவு ஆக மாறிப் பின்னர் இகரமும் கெட்டு க்னவு ஆகக் குறைகின்றது. ''உதாசீன நியாயத்தின்'' விலாஸம் இவ் வாறே.

அண்ண ஒலியாகச் சிதைவதைப் போன்றே இகரம் இதழொலி யாகவும் சிதைகின்றது. ஆனால் அது அபூர்வமாகவும் இலக்கணத் தைப் பாதிக்காத ஒரு ஒலி வேறுபாடாகவுமே அமைகின்றது. இதழொலி ஆக மாறிய அகரம் ஒகரச சாயையில் இருகும். காலப் போக்கில் இது இதழொலிச் சேர்க்கையால் அனுஸ்வாரம் என்று கூறப் படும் மகரத்தின் முன்பும் காணப்படுகின்றது.

இடவம	இடவொம்
கும்பம	கும்பொம்
கபம்	கபொம்
நம்மள்	நும்மள்
நாம	நோம

மலையாளத்தில் நெடிலிறுதிச் சொற்கள் குறுகும். எல்லாச் சொற்களும் குறிலில் முடிய வேண்டுமென்பது மொழி விதி. அதனு லேயே ஏனைய மொழிகளிலிருந்து எடுக்கப்படும் நெடிலிறுதிச் சொற் கள் மலையாளத்தில் குறுகுகப்படுகின்றன. நெடிலில்தான் ஒரு சொல் முடியவேண்டுமெனத் தேவைப்பட்டால் பொருந்துமிடத்தில் யகரமோ, வகரமோ ஒரு தாங்கொலியாகச் சேர்க்கப்படும். உயிர் அண்ண ஒலி யெனின் யகரமும, இதழ் ஒலியெனின் வகரமும் வருவது பொருந்தும். அகரம் அண்ண ஒலியாகவும, இதழொலியாகவும் வரும் என்று கூறி யதனால் மலையாளத்திலுள்ள உயிர்கள் அண்ண ஒலி, இதழொலி என இரு பிரிவின்பாற் படும்.

அ, இ, எ, ஐ = அண்ண ஒலி
அ, உ, ஒ, ஔ = இதழொலி

தாங்கொலியாகவன்றே நெடில்களின்பின் யகர வகரங்கள் சேர் கின்றன. ''டீகா டுகாமபேக்ஷிதே'' என்று கூறுவதைப்போன்று இந்த தாங்கொலிகளுக்கு வேறும் தாங்கொலி வேண்டிவருகின்றது. எதனாலெனின் மெய்யெழுத்து ஒரு உயிரின் துணையின்றி மொழி யிறுதியில் தனியே நிற்பதில்லை. அதற்காக யகர வகரங்களோடு குற்றியலுகரத்தைச் சேர்க்கவேண்டி வருகின்றது.

ஆயு், ஈயு், ஏயு், ஐயு்
ஆவு், ஊவு், ஓவு், ஔவு்

என நெடிலிறுதிச் சொற்களின் இறுதி அமைகின்றன.

கா = காயு	பிலா = பிலாவு
நீ = நீயு	பூ = பூவு
பே = பேயு	கோ = கோவு
கை = கையு	கௌ = கௌவு*

மெய்களை ஒலித்து நிறுத்தும்போது ஏற்படும் வசதியின்மையைத் தீர்ப்பதற்காகச் சேர்க்கப்படும் குற்றியலுகரம் இயல்பாகவே முழுவ தும் எளிய முயற்சியையுடையது. உயிரிற்கும், மெய்யிற்கும் இடை நிற்பதால் இடையெழுத்து என்று கூறப்படும் யகர வகரங்களோடு அதனைச் சேர்க்கும்போது அதனை ஒலிக்கும் முயற்சி மிக மிக எளிதா கின்றது காடு், மாடு் முதலியவைகளில் உள்ள குற்றியலுகரம் அரையுகரம் என்ரும் ராஜாவு், பூவு், காயு், கையு் முதலியவைகளின் உகரம் கால் உகரமென்று கூறவேண்டும். இவ்வளவு மென்மை காரணமாக இந்த உயிரெழுத்திற்குப் பலவித மாற்றங்கள் நேர்ந்த துண்டு சில திசைகளில் உள்ளவர்கள் குற்றியலுகரத்தை மீண்டும் மென்மைப்படுத்தி இகரமாகவும் அகரமாகவும் மாற்றுகின்றனர். மற்றும சிலர் குற்றியலுகரத்தை இன்னும மென்மைபடுத்தி நீகி விடுகின்றனர்.

கா	காய்	காயு்	காயி	காய
பா	பாய்	பாயு்	பாயி	பாய
கை	கைய்	கையு்	கய்யு்	—
பூ	பூவ்	பூவு்	—	—

என்று ஒவ்வொரு படியிலுமுள்ள உருவங்கள வட்டார வேறுபாட்டு வழகில வந்துள்ளன. யகரம் தோன்றுமளவுகு வகரம் தோன்றுவ தில்லை என்பதைக காண்க.

(2) இ, ஈ : மொழி முதலில் தனியாகவோ மெய்யோடு சேர்ந்தோ நிற்கும் இகரம் எகரமாக ஒலிக்கபபடுகின்றது இதுவும ஒரு ஒலிக்குற்றமே யாதலால் எழுத்தில் இகரம் அமைவதே வழககு.

இல – எல,	வில – வெல,	பிட – பெட
இட – எட,	விறகு் – வெறகு்,	நிலம் – நெலம்

சுத்தமாகிய அகரததையும். சுததம் ஆகிய இகரத்தையும் ஒலிப்பதை விட அகரமும், இகரமும் கலந்த எகரத்தை உசசரிப்பதில் அதிக வசதி உள்ளது. அதனாலேயே இரண்டிற்கும எகர ஒலி ஏற்பட்டுளது. நேர்மாறுகச சிலவிடங்களில எகரம் வரவேண்டிய இடததில் இகரம் ஒலிகபபடுகின்றது. எனிக்கு், இனிககு், செலவு் – சிலவு் இது

* கௌவு – கபபல

வெறும் மயக்கங் காரணமாக நிகழ்கின்றது. பிரளுக என்பதைப் புரளுக என்றும் பிறகே என்பதைப் புறகே என்றும் எழுதுவதைப் போன்று இகரத்தின் இடத்தில் சில சொற்களில் உகரம் பயன்படுத்தப் படுகின்றது.

ஒலித்து நிறுத்தும்போது ஈகார இறுதியோடு யகரம் சேரும். இது குறித்து முன்னரே விளக்கப்பட்டுள்ளது.

(3) உ, ஊ : இகரத்திற்கு எகர உச்சரிப்பு வருவதற்குக் காட்டப்பட்ட நிமித்தங்களிலெல்லாம உகரத்திற்கு ஒகர உச்சரிப்பு வரும். புக–பொக, குட–கொட முதலியன. இதனைப் போலவே கொல (கொலை) என்று அமையவேண்டியதைப் பிழையாகக் குல என்றுக்குவதும் உண்டு. ஊகார இறுதியில் வகரம் சேர்வது இகரத்தோடு யகரம் சேரும முறையிலேயே.

குறில் உகரத்தைத தவிர வேறு ஒரு உகரம் உளது. அதற்குக் குற்றியலுகரம் என்று பெயர். உ என்று மேல் பிறைச்சந்திர அடையாளம் அமைக்கபபட்டிருகிறது குணடர்ட் துரை இதற்கு அரை உகரம் என்று பெயர கொடுததிருக்கிறார். ஆனால் யாப்பிலகக்கணத்தில் இதறகு ஏனைய குறிலகளைப போன்று ஒரு மாத்திரையே விதித்திருப்பதால், அப்பெயர் இங்கு தவிர்க்கவேண்டி வருகின்றது.

''நாடு விட்டு நடந்திட்டு காடு புகுக வளிச்சிது''

என்ற செய்யுளடியில் எலலாச் சொற்களும குற்றியலுகர இறுதி எனினும் அவைகளுககு ஏனைய குறிலகளைவிட ஒரு சிறப்பும் காணப்படவிலலை. மாத்ரா விருத்தங்களில அரை உகரதத்திற்கு அரை மாதத்திரையே உளதென்று மயகக்ததிற்கு இடமளிக்காதும் இருகக்வேண்டுமன்றே. குற்றியலுகரம எல்லாத திராவிட மொழிகளிலும் உளது. மலையாளதத்தில் அது ஒரு உருவ அமைபபிற்கு உதவுகின்ற ஒரு இலக்கண காரியமாக அமைந்ததால் அதற்கு மிகவும் முகக்கியதுவம எய்தியிருக்கின்றது. மலையாளதத்தில் இறந்த காலதத்தைக குறிக்கும விகுதியின் உகரதத்தின் குற்றியல் முற்றியல் உகர வேறுபாடு, அது வினைமுற்றே, வினையெச்சமோ என்று முடிவு செய்கின்றது.

வினைமுற்று — பறஞ்ஞு, செய்து
வினையெச்சம் — பறஞ்ஞு, செய்து

தமிழில் முற்றியல், குற்றியலுகர வேறுபாடு, சமஸ்கிருதத்தில் அகரதத்தைப் போன்று ஒரு இலக்கணத்த தொடர்புமில்லாது வெறும ஒலி வேறுபாடேயாகும். மலையாளதத்திலோ குற்றியலுகரம் இலக்கணக

காரியத்தைப் பொறுத்த அளவில் ஒரு உயிராகவே கணக்கிடப்பட வில்லை.

தமிழ் — பற்றுசசீட்டு, ஆற்றுப்பாசி
மலையாளம் — பற்றுசீட்டு, ஆற்றுபாயல்

இங்கு வருமொழி முதலில் உயிர்ச்சில்லுகளின் பின் வருகின்ற வல் லெழுத்து இரட்டும் என்ற புணர்ச்சி நூற்பாவால் தமிழில் சகர பகரங் கள் இரட்டுவதுபோன்று மலையாளதில் அமைவதில்லை. அது குற்றியலுகரத்தை ஒரு உயிராகக் கருதாததனலாகும்.

மெய் தனித்து ஒலிகக்கூடியதன்று. ஆகவே ஒரு சொல் மெய் யிறுதியெனின் அதன் இறுதியெழுத்து உசசரிப்பில் தெளிவில்லாது போகும். சமஸ்கிருதம முதலிய ஆரியமொழிகளில் இறுதி மெய் வரு மொழியோடு சேர்க்காலேயே செவியால் உணரப்படுகின்றது. இறுதி யில் வரின் ஒலிததெளிவின்றி கிற்கும. ஒன்றிற்கு மேற்பட்ட மெய் களில் ஒரு சொல் இறுமெனின் இறுதி மெய் கெடுகப்படவேண்டு மென்று பாணினி விதிகின்ரூ. ''ஸமயோகாநதஸ்ய லோப'' (பா 8-2-23) ஆங்கிலம, ஜெர்மன போன்ற ஸம்யோகாந்த லோபம இல்லாத மொழிகளில் இறுதிமெய்க்குத தெளிவில்லா உச்சரிப்பு அனு பவததில் தெரிகின்றது. திராவிட மொழிகளிலோ இறுதி எழுத்து மெய்யெனினும் அதனைத் தெளிவாகவே உச்சரிக்க வேண்டுமென்பது விதி. அப்போது தனி மெய்யை உச்சரித்து முடிக்கவேண்டி வரு கின்றது. அவ்வாறு வரும்போது அதனேடு ஒரு உயிர்ப்பகுதி சேர்ந்து வராதே ஒலிகக முடிவதில்லை. அவ்வாறு தோன்றும் உயிரே குற்றிய லுகரம். திராவிடர் தங்கள் மொழிப் பயிற்சியால் ஆரிய மொழிச் சொற்களிலும குற்றியலுகரம் சேர்த்து உயிர் இறுதியாகுகின்றனர்.

வாக —வாகு் Record —றிக்கார்டு்
மனஸ்—மனஸ்ஸு் Chemist—கெமிஸ்டு்

மெய்யிறுதிச சொற்களிலெல்லாம் குறறியலுகரம் சேர்க்கவேண்டு மென்ற விதி தெலுங்கில் அதிகம். தெலுங்கில்,

பாகயவஶால் என்பதை பாகயவஶாது என்றும்,
தனம் என்பதை தனமு என்றும் ஒலிக்கின்றனர்.

மலையாளததில் குற்றியலுகரத்தை ஒரு உயிராகக் கணக்கிட வேண்டுமா? கணககிட்டால் அது ஒரு புதிய உயிரெழுத்தா? மற்றே ருயிரின் வகை வேறுபாடா? வகை வேறுபாடெனின் எதனது? முத லிய பல கருத்துவேறுபாடுகளும் ஏற்பட்டுள்ளன. 'வித்தியா விஞே தினி', 'ரஸிகரஞ்ஜினி' முதலிய பததிரிகைகளில் இதனைக குறித்துப்

பல விவாதங்களும் வெளிவந்துள்ளன. வட்டெழுத்து வழங்கி வந்த காலம்வரை தமிழ் முறைப்படி குற்றியலுகரத்திற்கு உகரமே எழுதி வரப்பட்டது. அதனை விட்டுவிட்டு ஆரிய எழுத்தை ஏற்றுக்கொண்ட போது எழுந்த குழப்பங்களில் ஒன்று குற்றியலுகர அடையாளம் இல் லாது உலக, நாட என்றெல்லாம் வெறும் அகரமிட்டு எழுதத் தொடங் கியதாகும். உலகு, நாடு என்று முற்றியலுகரமாய் எழுதுவது பாதிரி களின் மலையாளத்தில உள்ளது என்று வடகேரளத்திலுள்ளவர்கள் கூறும் ஒரு பெரிய தடையும் உளது உகரம் குற்றியலென்று காட்டு தற்கு உலகு, நாடு என்று பிறைச்சின்னம் இடுவதும் வடகேரளத்தி லுள்ளவர்களுக்கு விருப்பமில்லை. ''உலக'', ''நாட'' என்று உகர மில்லாது வேண்டுமெனில் எழுதிகொள்ளலாம் என்பது அவர்களுக்கு உடன்பாடு என்று தோன்றுகின்றது. ஆயின் ''உலகுகள்'' ''நாடு தோறும்'' முதலிய இடங்களில் உகரத்தையே எழுதக் கேரளத்தார் தயங்கவில்லை. அதனால் பன்மையிலுள்ள வடிவமே ஒருமையிலும் வேண்டுவது என்று அவர்களும ஒப்புகொண்டால் லிபி அமைப்பில் ஒரே வடிவம அமையும் அகரம், குற்றியலுகரம், முற்றியலுகரம ஆகிய மூன்றும் மலையாளததில் வினைச்சொற்களின் உருவங்களை வரையறைப்படுத்தும இலகுகண காரியங்கள் ஆவதால், இந்த மூன்று எழுத்துகளின் வேறுபாடு லிபி அமைப்பில் அவசியம் காட்டவேண்டு வதொன்று செய்து (வினைமுற்று); செய்து (வினையெச்சம); செய்த (பெயரெசசம்). உகரத்தின்மேல் அல்லாது அகரத்தின் மேலேயே பிறையிடடுச் ''செய்த்'' என்று குற்றியலுகரததைக் குறிப்பதில் இரு தடைகள் உள்ளன. குற்றியலுகரம அகரத்தின் வகை வேறுபாடு என்று எண்ண இடம் உண்டாகும். என்பது முதலாவது தடை,

''முன்னிட மத்யன்னத மாய்
பின்னிடமோ ஶ்ரோணீபாரஸன்னதமாய்''

முதலியவைகளில் உயிரோடு சேராத வெறும் மெய்களும் பிறையைப் பயன்படுத்துவது மயக்கத்திற்குக் காரணமாக முடியும் என்பது இரண் டாவது தடை. முற்றியலுகரம் ஒரு உயிரேயன்று என்றுள்ள கருத் துடையவர்களே உகர எழுததை எழுதி அதன்மேல் பிறை இட முடி யாதென்று பிடிவாதம் பிடிகின்றவராக வேண்டும. ஆனால் அவாகள் ஒரு செய்தியை நினைகவேண்டும. அப்போது,

''நாடு் விட்டு் நடந்நிட்டு் காடு் புகு் வளிச்சிது்''

என்று மேல்காட்டிய அனுஷ்டுப்புச்[1] செய்யுளடியில் பத்து எழுததுக களே உள்ளன என்று வரும.

1 ஒரு செய்யுள் வகை

தெளிவான உச்சரிப்பில் மெய்களுக்குத் தாங்கொலியாக வரும் உயிரன்றே குற்றியலுகரம். ஆனால எல்லா மெய்களும் ஒன்றுபோல் தாங்கொலியை வேண்டி நிற்பதில்லை. பெரும்பான்மை இடையெழுத்துக்களும் சில வல்லெழுத்துக்களும் இவற்றைச் சேர்ந்தவை எங்ஙனமெனின்,

நாய்	கரள்	கண்
நேர்	கீழ்	தேன்
பால்	வயற்	மரம்

இவற்றுள் யகரம் அரிதாகவே மொழியிறுதியில் வரும். பெரும் பான்மையிடங்களிலும் மொழியிறுதியகரம் நெடிலடுத்துத் தோன்றும் யகரமாகவே அமையும். மொழியிறுதியில் வரும் ரகரத்தை மெய்களின் முன் வலுப்படுத்தி, றகரமாக ஆக்கவேண்டும். அதனால் ரகர றகரங்களை மொழியிறுதியில் இரண்டாகத் (தனித்தனியாகக்) கணிப்பதில்லை.

தேர் + தட்டு = தேர்த்தட்டு
மலர் + பொடி = மலர்ப்பொடி

முதலியனவற்றில உயிர்முன் வரும்போது ரகர ஒலியே கேடகும்.

தேர் + ஓட்டம் = தேரோட்டம்
மலர் + அமபன் = மலரமபன்

ளகர ழகரங்களின் நிலையும் ஏறக்குறைய இதைப் போன்றதே. 'அப்போழ' என்ற ழகரத்திற்கும் 'அங்ஙாள்' என்ற ளகரத்திற்கும் உண்மையிலுள்ள ஒலி வேறுபாட்டைப் பொருட்படுத்தாது இரண்டையும் ஒன்றுபோல் ளகரமாகவே உச்சரித்தல் வழக்கம். உயிர்முன் வரும்போது கூட ''அப்போழாணு'' என்றன்றி ''அப்போளாணு'' என்றே எழுதவும படிக்கவும் செய்யபபடுகின்றது. மொழியிறுதியில் குற்றியலுகரம் சேராது நிற்கும் இம்மெய்களுகுச் சில்லுகள் என்று பெயர் கொடுகக்பட்டிருகின்றது. அவைகளுக்குத் தனி எழுத்துகளும அமைகக்பட்டுளளன.

ர், ற் = ர்; ள், ழ் = ள்; ண் = ண்; ன் = ன்; ம் = ம்; ல் = ல்

மகரத்திற்கும் லகரதத்திற்கும் உள்ள அடையாளங்கள் சமஸ்கிருத எழுத்து வரிசையை மலையாளம் ஏற்றுககொண்டபோது எழுந்த சிறப்பு விதிகள். சமஸ்கிருதத்தில் மொழியிறுதி மகரததின் விகாரமே அனுஸ்வாரம் என்று கூறப்படும் சிறியவட்டம். சமஸ்கிருதத்திலுள்ள தகரததை, உயிர்முன் வராதபோது லகரமாக மலையாளத்தில்

உச்சரித்தல் வழக்கம், அதனுலேயே லகரச்சில்லினது அடையாளம் தகரத்திலிருந்து எழுந்ததாகக காணப்படுகின்றது. இதனைப்போன்றே ல் என்ற ளகரச் சில்லினது தோற்றம் சமஸ்கிருத எழுத்திலிருந்தே தோன்றியிருக்கவேண்டும். ''ஸமராட்'' என்பதிலுள்ள டகரத்தை மலையாளிகள் ''ஸமராள்'' என்று உச்சரிக்கின்றனர். ட > ட் > ண் > ள் (ட் எனபது ள் என ஆகிய பரிணமம காட்டப்படுகின்றது. இடையிலுள்ளதே குறுக்கே மேல் நோகியுள்ள கோடு சில்லின் அடையாளமாகும்).

குற்றியலுகரத்தின் துணையில்லாது மொழியிறுதியில் தனியே நிற்கமுடியும் மெய்கள் சில்லுகள் என சில்லுகட்கு இலகுகணம் வகுக்கலாம். ய, ர, ற, ல, ள, ழ, ண, ன, ம என்ற ஒன்பது மெய்களே சில்லுகளாக வரும். நெட்டுயிர்களோடு தோன்றியோ 'ஆயி' 'போயி' என்ற இறந்தகால வடிவங்களின் இகரம் கெட்டோ மாததிரம் யகரம் சில்லாக வரும். அதனுல் அதனைச சில்லாகக கணிப்பதிலலை. ரகர றகரங்களுகும், ளகர ழகரங்களுகும் ஒலி ஒன்றே. அதனுல் ர், ல், ல், ண், ன் என்ற ஐந்துமே முககிய சிலலுகள். அனுஸ்வாரமும் சில்லேயாகும்.

சில்லாக வரும் மெய்களுக்குச் சில்லாகி நிற்கும்போது ஒலியில் சிறப்புத்தன்மை உளது கீழ்க்கொடுககப்படும எடுததுககாட்டுக்களை நோகுக.

நீர்மருது	— நர்மமத
அவள் யாசிசசு	— தாவள்யம்
வில்வலி	— வில்வம
கணவிலாஸம்	— கணவன்
ஸமயோகம	— ஸாமயம்

சில்லுகளில் ஒரு உயிரெழுததின் சகதி ஒன்றி உள்ளது. அதனுல் அவைதாமே தனிமீய ஒலிகளும எழுததுகளை ஆகின்றன. அதனுலேயே சிலலுகள் அடுதது வரும் மெயகளோடு சாதாரணச சுட்டெழுதைப் போனறு இரணடறக கலகாது, வேறுபட்டு நிற்கின்றன. குறறியலுகரம மிகவும மெல்லிய ஒரு உயிராகும். சில்லுகளோ ஏற்றுக் கொள்ளப்பட்ட மெயகளை ஆகும். சமஸ்கிருததில இரு, இலு ஆகியவை ரகர லகர ஒலி உடையனவனறே? அதனைப் போன்றே மலையாளத்தில் வேறு மெய்களும ஏற்றுகொளளப்படுகின்றன என்பதே உண்மை. ர், ல், ள் ஆகிய இடையெழுததுகளின் சிலலுகளுகு மலையாளத்திலும ஏறகுறைய இரு, இலு ஆகியவற்றின் ஒலியே அமைகின்றன. சில சொற்களில் இரு எழுதவும படுகின்றது.

ர்	ர்	எதிர்வசம்	எத்ருவசம்	திர்	= த்ரு
	ர்ூ	புணாதம்	புண்யதம்	ணர்	= ண்ய
	ாூ	நேர்வழி	நருவழி	நேர	= ந்ரு
	ற்ூ	காமேகம்	க்ருமேகம்	கார்	= க்ரு

ல்	ல்ூ	முகில்மால	முகலமால	கில்	= க்ல
	ல்ூ	அதிலகின்னு	அத்லுநின்னு	தில்	= தலு
	ல்ூ	பால்முதகு	ப்லூமுதக்கு	பால்	= ப்லூ

ள்	ழ்ூ	புகள்பொருநின	புகலபொருநின	கள்	= க்ல
	ளூ	தேள்விஷம்	தலூவிஷம	தேள்	= தலூ

இந்த எடுத்துகாட்டுகளில் சிலலிற்கும் அதன் முன்னருள்ள உயிரிற்கும் சேர்ந்து அவ்வுயிரின் மாதத்திரை (குறிலெனின் ஒன்று, நெடிலெனின் இரண்டு) அல்லாது தனியாக அளவு இல்லை. அதனால் முன் உயிர் இருவோ மூவோ வரின் உள்ள பயனே மாத்திரையைப் பொறுத்த அளவில் உள்ளது. சில்லின் மாதத்திரை முன் உயிரின் ஒன்றிப போவதால் இங்கு அதன் ஒலிககு ஒன்றிய ஒலி என்று பெயர். மற்றொன்றில் ஒன்றிவிடாது சில்லுகளுகு இயல்பாயுள்ள மாத்திரை, கேட்கத்தகக விதத்திலும் ஒலிககும அம்மாதிரி உச்சரிப்பிற்கு வெளிப்படையொலி என்று பெயர். அது எவ்வாறெனின் :

நல்குநு	நல்ல்குந்நு
புல்குநு	புல்ல்குந்நு
மார்கழி	மார்ர்கழி
வாள்க	வாளள்க
கொள்க	கொளள்க

இஙகு முன் உயிர் குறிலெனினும சில்லிற்கு மாதத்திரையுள்ளதனால் அநத உயிருகுகு குருவின் தன்மை எய்துகின்றது கூட்டெழுத்தின் முன்வரும உயிர் அககூட்டெழுதத்தின் இரட்டிய பலம பெறற உசசரிப்பு உண்டெனில் குருவாகும் ஒன்றிய ஒலி உடைய சில்லு அடுதத யெய்யோடு சேர்வதில லையாதலால அவற்றின் இணைபபு கூடடெழுத்தாவதில்லையென்று கருதலாம. குற்றியலுகரததின முன்வரும் கூட்டெழுத்திறகும இதுவே கதி. குறறியலுகரம புணர்ச்சி காரியததில் ஒரு உயிராகக் கணிககபபடாததால அதன் பினனர் வரும கூட்டெழுத்தின் முதல் மெய் இரடடுவதிலலை அதனால் குற்றியலுகரம் எப்போதும குரு ஆவதிலலை பாதாந்தஸ்தம் விகல்பேன'' என்ற இலக்கணப்படி குருத்தனமையை சில கவிஞர்கள் குற்றியலுகரத்திற்கும் ஏற்றிருப்பதிலலை. ஆனால் அது சிறிதும் அழகன்று.

இடையெழுத்துச் சில்லுகளுக்கு மட்டுமே ஒன்றிய தொனி உளது. மெல்லெழுத்துச் சில்லுகளுக்கு எங்குமே வெளிப்படை ஒலியே உளது. இடையெழுத்துச் சில்லுகளுக்குப் பின்வரும் மெய் இரட்டு மெனின் வெளிப்படை ஒலி அமையும். அன்றெனில் ஒன்றிய ஒலி உளது என்பது விதி

ஒலி	ர்	ல்	ள்
வெளிப்படையொலி	மலாபபொடி	அதில்கூடை	கவிள்த்தடம்
ஒன்றிய ஒலி	மலர்மாலை	அதில்ன்னு	கவிள்வார்ப்பு

ஒரெழுத்தொரு மொழியின் சில்லுகளுக்கு வெளிப்படையொலி எல்லா விடங்களிலும் வேண்டும். ஒருமாத்திரையுள்ளதாக ஒரு சொல்லும அமையக்கூடாதென்பது மலையாளத்திலுள்ள நியமம். அதனால் ஒரெழுத்தொரு மொழியிலுள்ள சில்லுகளுக்கு ஒன்றிய ஒலி அமைதல் முடியாததே இதற்குக் காரணமாகும்.

ஏனைய மெய்களிலுள்ளதைப்போன்று சில்லுகளிலும் குற்றியலுகரம் சேர்பதற்கு யாதொரு தடையும் இலலை. இவற்றைக் குற்றியலுகரம் சேர்க்காமலும் ஒலிகலாம எனபதே வேறுபாடு :

ய்	காயு்	காய்
ர்	தேரு்	தேர்
ற்	சோறு்	சோர்
ல்	பாலு்	பால்
ள	நாளு்	நாள்
ழ	தாழு்	தாள்
ன்	மானு்	மான்
ண்	கண்ணு்	கண்

மகரசசில்லிற்கு மடடும் மரம் (மரம) என்றல்லாது மரமு என்று குற்றியலுகரம் சேர்தத உருவமில்லை. தெலுங்கில் மரமு என்றே உருவம் உளது. குற்றியலுகரம் சேர்ப்பதெனின், அதனிறுதி 'த்' எனத திரியும.

கோரம்—கோரத்து; இடம்—இடதது

(4) இரு, இரூ : இவ்வுயிர்கள் சமஸ்கிருதத்திலேயே உள்ளன. தற்பவங்களில் இருவின் இடததில் அகரமும் இகரமும் பயன்படுத்தப்படுகின்றன.

கருஷ்ணன் = கண்ணன்; வ்ருஷபம் = இடவம்

சமஸ்கிருத அறிவு இல்லாதவர்கள் தற்சமங்களில் இரு என்பதை ''அர்'' என்று ஆக்குவதுண்டு : ப்ரவ்ருத்தி—ப்ரவர்ததி.

(5) எ, ஏ, ஐ—ஒ, ஓ, ஔ : இவைகளைக குறித்து மிகுதியாக கூறவேண்டுவதில்லை. ஐகாரத்தை எழுத்தில் ''அய்'' என மாற்றுவதுண்டு :

கையில் = கயயில், வையாகரணன் = வய்யாகரணன்

ஔகாரம் தூயதிராவிடச் சொறகளில் இல்லை. ஐகாரதத ''அய்'' என ஆகுதற்கு முரணுக ''அவ'' எனபதை ஔகாரமாக ஆக்குவதுண்டு : அவவண்ணம—ஔவணணம.

(6) கவர்ககம : வர்க்கங்களில முதலாவதும் இறுதியில் உள்ளதும் மட்டுமே திராவிட மொழிகளில் உள்ளன. ஏனைய (இடை) மூன்றும சமஸ்கிருததிலிருந்து எடுக்கப்பட்டவை. ஆதலால் அவை விகாரமடைய வழியில்லை. புணர்ச்சியில் இதழொலி உயிர்களுக்கு இறுதியில் தோன்றும் வகரததிற்குப்பதில், அடிச்சொற்களோடு சேர்த்துக ககரம பயன்படுததபபடுவதுண்டு.

அடிச்சொல்	நிகழ்காலம்	வ் > க
தட	தட + உந்து = தடவுநது	தடகுநது
சா	சா + உந்து = சாவுநது	சாகுந்து
கூ	கூ + உந்து = கூவுந்து	கூகுந்து
தொழு	தொழு + உநது = தொழுவுந்து	தொழுகுந்து
போ	போ + உநது = போவுநது	போகுநது

தமிழிலுள்ள ககரததின் இடத்தில தெலுங்கில் பல இடங்களிலும் வகரம் காணபபடுவதுண்டு. அதனால் மலையாளத்திலுள்ள இவ்வழக கம தெலுஙகைப பின்பறறி வநதிருககவேண்டும். ஆனால் அது புணர்ச்சி விகாரததை மட்டும் பாதிததததற்கு ஒரு காரணமும தெளிவாவதில்லை.

சில மெய்கள எளிதில் குன்றிவிடும். குன்றலின் விளைவாக அடுதத உயிர் நீளுதலும செய்யும. இதனுள் ககரமும அடங்கும்.

செய்துகொள்ளுந்து	செய்தாளுந்து
பகுதி	பாதி
எதறகணடு	எத்றேண்டு

ஙகரம் இரட்டியோ, இன வல்லெழுத்தாகிய ககரத்தின் முன்பிலோ மட்டும நிறகும. மெல்லினமாககல் நயப்படி இரட்டும்போது

சிலவிடங்களில் முன்னுயிர் அண்ணஒலியெனின் ஒரு அண்ண ஒலிச் சாயை அதற்கு உண்டாகும்.

வழுதனங்ஙா – வழுதனய்ங்ஙா;
உதளங்ஙா – உதளய்ங்ஙா

(7) ச வருக்கம்: மலையாளத்திலுள்ள ச வருகத்தின் ஒலி சமஸ்கிருதத்திலுள்ள ச வருக்கத்தின் ஒலியேயாகும். தமிழில் ஒலிக்கப்படும் ஶகரத்தை ஒத்த ஒலியன்று. தமிழிலுள்ள நகரத்திற்கு மலையாளத்தின் பல சொற்களிலும் ஞகரம் காணப்படுகின்றது.

நண்டு = ஞண்டு, நருக்கம் = ஞெருக்கம்
நான் = ஞான், ந்யாயம் = ஞாயம்.

(8) ட வருக்கம்: ட வருக்க எழுத்து எதுவும் மொழி முதலில் வருவதில்லை. டீக, டிண்டிமம், டக்க முதலியவை சமஸ்கிருதத் தற்சமங்கள். சமஸ்கிருதத்திலுள்ள தவர்க்கத்தின் இடத்தில் சில போது மலையாளத்தில் ட வருக்கம் காணப்படும்.

பத்தனம் = பட்டணம் வைதுர்யம் = வைடூர்யம்
தாடிமம் = டாடிமம ஶாதவலம் = ஶாட்வலம்

சமஸ்கிருத ஷகரத்தை மலையாளத்தில் ழகர ளகரங்களாக ஆக்குவ துண்டு.

நாடிக = நாழிக ஸமராட் = ஸம்ராள்

தமிழின் ணகரம், தெலுங்கு முறைப்படி பலவிடங்களிலும் னகரமாய் விடும்.

தமிழ்	தெலுங்கு	மலையாளம்
துணிகிறேன்	துனிதுன்னானு	துனியுன்னேன்
கண்ணு	கன்னு	கண்–கண்ணு

ஆனால் மாருக நினக்கு என்பதை நிணகு என மாற்றுதல் அரிதாக உளது.

(9) ட வர்க்கம்: டகரம் தனித்து நிற்காததாலும் இரட்டும் போது அதற்கு இரட்டிய ரகரத்தோடு ஒலி ஒற்றுமை வருவதாலும் அவ்வெழுத்து இன்று மறைந்துவிட்டது என்றும் அதன் இடத்தை இப்போது றகரம் ஆகிரமித்திருக்கின்றதென்றும் முன்னர் விளகப் பட்டுவிட்டது. னகரமோ தமிழிலும் மலையாளத்திலும இன்று நிலை நிற்கின்றதெனினும அதன் ஒலி தமிழில ஈகர ஒலிகுச சமமாகப் போய்விட்டது. மலையாளத்தில் அதன் ஒலி வேறுபாடு தெளிவாக

அமைகின்றது. ஆனால் எழுத்தில் நகர னகர வேறுபாடு காட்டப் படுவதில்லை. இரட்டிய டகரத்தின் இடத்தில் இரட்டித்த தகரமும், நேர்மாறுகவும், சிலவிடங்களில் காணப்படுகின்றன.

வில்து = விற்று; எல்லாத்திலும் = எல்லாற்றிலும

னகரம் வல்லினத்தின்முன் லகரமாய் மாறும். பொன் + குடம் = பொல் குடம்.

(10) தவர்க்கம்: அதன்முன் உயிரோ இடையினமோ வந் தால் மட்டுமே மலையாளத்தில் தவருக்கதற்கு சொந்த ஒலி உளது. தனித்து நிற்கிலோ, முழுமெய் பின்வரினோ லகர ஒலியாகும்.

வசாத் = வசால் உத்ஸவம் = உல்ஸவம்

தவர்கம் அணண ஒலித்திரிபால் பெருந்தியவாறு சவர்க்கமாக மாறு வது முன்னர் விளக்கபபட்டுள்ளது.

(11) பவர்க்கம்: காரித அடிச்சொற்களில் தோன்றும் ககரத் திற்குப்பதில் பகரம் விகற்பமாய்த் தோன்றும்.

கேள்—கேள்க்கான், கேள்ப்பான், கேள்க்கூ, கேள்ப்பூ

புணர்ச்சியில் தமிழிலுள்ள மகரம் மலையாளத்தில் வகரமாகும். சில பகுதிகளில் மாறுகவும் அமையும்:

தனம் + உம் = தனவும் சொல்லும் + ஆன் = சொல்லுவான்
வண்ணான் = மண்ணான் விழுங்குக = மிழுங்குக

(12) இடையெழுத்துக்கள்:

(அ) யகரத்திற்குப் பதில் நகரத்தைப் பலவிடங்களிலும் பயன் படுத்துவதுண்டு 'இ' என்ற இறந்தகால இடைநிலையின் பின்வரும் அ என்ற பெயரெச்ச வீகுதியோடுள்ள புணர்ச்சியில் இது பெரும்பான் மையாகக காணப்படுகின்றது:

ஆய—ஆன; சொல்லிய—சொல்லின; விலஸிய—விலஸின
யான்—நான்—ஞான்; யுகம்—நூகம்; யமன்—நமன்

சகரத்தின் ஆற்றலைக் குறைத்தால் அது யகரமாகவும் நேர் மாறுக யகரததின் ஆற்றலைக கூட்டினால் அது சகரமாகவும் முடியும்:

பஜ —பயு—பை கசப்பு—கயப்பு—கைப்பு
கசம்—கயம் பெசர்—பெயர்—பேர்
வியர்ப்பு—விசர்ப்பு வாயல்—வாசல்—வாதல்

(ஆ) இறுதி ரகரம் பலவிடங்களிலும் றகரமாக மாறும்:

(தாரில்த்தன்வீ—தார்த்தேன்மொழி) தார் = தார்; தேர் = தேர்; அவர் = அவர்; சிரிக்குக = சிறிக்குக.

(இ) ழகரத்தைச் சிலவிடங்களில் ளகரமாக்குவதுண்டு:

அபபோழ் = அப்போள் (பொழுது)

(ஈ) லகர ளகரங்கள் மெல்லின முன்வரின் பொருந்தும் விதத்தில் முறையே னகர ணகரங்களாகத் திரியும்:

நெல் + மணி = நென்மணி நல் + நூல் = நன்னூல்

வெள் + ம = வெண்ம வெள் + நீர் = வெண்ணீர்

ரகரமும் லகரமும் மொழிமுதலில் வரக்கூடாது என்பது தமிழில் விதி. பிறமொழிச் சொற்கள் இவ்வெழுத்துக்களில் தோன்றினால் அ, இ, உ என்ற அடிப்படை உயிர்களில் ஒன்றை முதலில் சேர்த்துக்கொள்க. இவ்வாறு எழுந்துள்ள தற்பவங்கள் மிகுதி:

ராஜாவு = அரசன் ரூபம் = உருவம்

லவங்கம் = இலவங்கம் லாக்ஷா = அரக்கு

லோகம் = உலகு லக்ஷ்யம் = இலாகசு

(13) உரசொலி மாற்றங்கள்: திராவிட மொழிகளில் இல்லாத இவ்வெழுதத்துக்களைக் காலப்போக்கில் மொழி முதலில் தடுக்கவும், மொழியிடையில் பொருந்துமிடத்து ச, ட, த, க என்ற வல்லினத்தை அவைகளினிடத்தில் பயன்படுதததவும் செய்துவந்தனர்:

ஸ்ராவணம் = ஓணம் ஸ்ரவிஷ்டா = அவிட்டம் ஈஸ்வரன் = ஈச்சரன்

ஜூஷ்கம் = சுக்கு க்ருஷ்ணன் = கண்ணன் ஸர்க்ஷி = சாட்சி

ஸந்த்யா = அந்தி மாஸம் = மாதம் மனஸ் = மனது

ஹித = இதம் ஹிரண்யம் = இரண்யம் மோஹம் = மோகம்

1. புணர்ச்சியதிகாரம்

புணரியல்

'ஸந்தி' என்ற சொல்லின் பொதுவான பொருள் சேர்க்கை என்பதன்றே. இரசதந்திர முறைப்படி சில பொருட்கள் ஒன்றோடொன்று சேரும்போது அவற்றின் நிறம் முதலிய குணங்கள் மாறும். சில ஒன்றோடொன்று சேரும்போது குணங்கள் மட்டுமல்ல, பொருளே மாறிவிடும். சில பொருட்களோடு வேறு பொருட்களை எவ்வளவு சேர்த்தாலும் எந்த அம்சத்திலும் மாற்றம் வருவதில்லை. அவை முன்னைய நிலையிலேயே இருக்கின்றன. இதனைப்போன்று எழுத்துக்கள் அல்லது இலக்கண நூற்படியுள்ள வர்ணங்கள் ஒன்றோடொன்று சேரும்போதும் ஒவ்வொரு முறையிலும் மாற்றங்கள் நேர்ந்தும் நேராமலும் வரும். அவ்வகைச் செய்திகளைப்பற்றி விளக்கும் பகுதி இலக்கணத்தில் 'புணரியல்' என்று கூறப்படுகின்றது.

ஒன்றோடொன்று சேரும் எழுத்துப் புணர்ச்சியின் இடவேறுபாடு பற்றி பாணினி முதலிய வடமொழி இலக்கண ஆசிரியர்கள் பகுத்தது போன்று, மலையாளத்திலும் பொதுப்புணர்ச்சியை, பத இடைப்புணர்ச்சி, மொழியிறுதிப்புணர்ச்சி, இருநிலைப்புணர்ச்சி என மூன்றுவகையாகப் பிரிக்கலாம் பகுதிகள், உருபுகள் ஆகியவை சேர்ந்தன்றே சொல் உண்டாகின்றது. அவ்வாறு ஒரு சொல்லில் கலந்துள்ள அவ்விரண்டு உறுப்புகள் சேருமபோது மாததிரம் உண்டாகும எழுத்து விகாரம் பதஇடைப புணர்ச்சியில் பேசப்படும் பொருள். இரண்டு சொற்கள் சேரும்போது மாதிரம் உண்டாகும் விகாரம் பத இறுதிப புணர்ச்சியில் பேசப்படும் பொருள். பதஇடைப் புணர்ச்சியிலும் பத இறுதிப் புணர்ச்சியிலும் அமைவது இருநிலைப் புணர்ச்சியில் பேசப்படும பொருள.

எ-டு:

பதஇடைப் புணர்ச்சி—மரத்தில = மரம் + இல
பதஇறுதிப் புணர்ச்சி—பொல்பூ = பொன் + பூ
இருநிலைப் புணர்ச்சி—மணியறையில் = மணி + அற + இல்

---

1. அலங்கரிப்பட்ட அறை.

இனிப் புணர்ச்சியில் சேரும் எழுத்துக்களின் உயிர், மெய் வேறு பாடுகளின் அடிப்படையில், உயிரொடு உயிர் புணரும்போது அமைவது உயிர்ப்புணர்ச்சி எனவும், உயிர் மெய்யோடு புணரும்போது அமைவது உயிர்மெய்ப் புணர்ச்சி எனவும், மெய் உயிரோடு புணரும் போது அமைவது மெய் உயிர்ப்புணர்ச்சி எனவும், மெய் மெய்யோடு புணரும்போது அமைவது மெய்ப்புணர்ச்சி எனவும் பொதுப்புணர்ச் சியை நான்குவகைபடுத்தலாம்:

எ-டு: உயிர்ப்புணர்ச்சி — மழ + அல்ல = மழயல்ல
உயிர்மெய்[1]ப்புணர்ச்சி — தாமர + குளம் = தாமரகுளம்
மெய்உயிர்ப்புணர்ச்சி — கண் + இல்ல = கண்ணிலல
மெய்ப்புணர்ச்சி — நெல் + மணி = நெண்மணி

புணர்ச்சியில் எழுதுதுகளின் விகாரங்களின் அடிப்படையில் நோக்கினால் கெடுதற்புணர்ச்சி, தோன்றற்புணர்ச்சி, இரட்டுதற் புணர்ச்சி, திரிதற்புணர்ச்சி என்று நான்காகவும் பொதுப்புணர்ச்சியை வகைப்படுதலாம்.

புணரும் எழுதுக்களில் ஒன்று இல்லாதாதல் கெடுதல் ஆகும். புணரும்போது மூன்றுவதாக ஒன்று வந்து சேர்வது 'தோன்றல்'; புணர்பவற்றில் ஏதாவதொன்று இரட்டுதல் 'இரட்டல்'; ஒன்று மற் றொன்றுருவது திரிதல்.

எ-டு: கெடுதல் — அதல்ல = அது + அல்ல
தோன்றல் — மழவில்ல = மழ + இல்ல
இரட்டல் — அவிடெப்போயி = அவிடெ + போயி
திரிதல் — எண்ணூறு = எண் + நூறு[2]

இவ்வாறு ஒவ்வொரு நிலவேறுபாடு பற்றிப் பலவகைப் பகுதிகளாகப் பிரிக்கலாம். எனினும், இறுதியில கூறிய பிரிவு, வசதிகாரணமாக இங்கு ஏற்றுகொள்ளப்படுகிறது. அவற்றுள் புணரும் எழுத்துக் களில் ஒன்று மாத்திரம தோன்றுதல் என்பது மட்டும்தான் தோன்றற் புணர்ச்சிகளும இரட்டலுகளும் உளள வேறுபாடு. நுணுகிப் பார்த்தால் இரட்டலையும் தோன்றலாகவே கருதவேண்டும.

புணர்ச்சியில் வரும் எல்லா எழுத்துவிகாரங்களுக்கும் ஒலி வசதியே அடிப்படை என்பதை அவ்வகை விகாரங்களின் வடிவை நோக்கினால் எளிதாக உணரலாம். மெய்யெழுத்துகளுக்கு உயிரோடு கூடியலலது தனிதது வெளிப்படையான ஒலி நிகழாததால் இரண்டு

1 உயிர்மெயயனறு; உயிரோடு மெய்புணரும் புணர்ச்சி.
2 எட்டு + நூறு = எண்ணூறு எனபது தொல. எழுத்து 460.

மெய்யெழுத்துகள் ஒன்றோடொன்று புணர்ந்தாலும் ஒரு எழுத்து மாத்திரமே வரும். ஒரு ஒலியிலேயேதான் அந்த இரண்டு மெய்களும் அடங்கி வருகின்றன என்பது பொருள். உயிர்களுக்கெல்லாம் தனியாகத தெளிவான ஒலி உள்ளதால் உயிர்ப்புணர்ச்சியில் எழுதது விகாரங்கள் மிகுதியாகத தேவைப்படுகின்றன. இவ்வகைத் தத்துவங்களையும் இங்கு உணரவேண்டும்.

1. கெடுதற் புணர்ச்சி

1. "ஸ்வரத்தில் முன்பு லோபிக்கும்
ஸம்வ்ருதம் வ்யர்த்தமாகயால்;
அதினெ ஸ்வரமாயிட்டே
வகவெய்க்கேண்ட ஸந்தியில்"

ஏதாவது ஒரு உயிர் முன்வந்தால் குற்றியலுகரம் கெடும்.[1] மெய்யை மாததிரம ஒலித்து நிறுததினுல் தெளிவான ஒலி ஏற்படாததால் "காடு", "நாடு" முதலிய சொறகளின் இறுதியில் காணப்படும குற்றியலுகரம் டகரததின் ஒலியைத தெளிவாகுவதற்கு மாததிரம் ஒலிககப்படுகின்றது. அங்கிலேயில் அவ்வகைக குற்றியலுகரத்தின் மேல ஒரு உயிர்வரின் அம் மெய்யோடு சேர்த்துகொண்டு ஒலித்தாலும டகரத்திற்குத் தெளிவுண்டாவதால் குற்றியலுகரததை அப்போது சேர்ககவேண்டிய தேவை வருவதில்லை. அதனுல் உயிர்முன் வருமிடததிலெல்லாம் குற்றியலுகரம் உள்ளதாகக்கூடக கருதவேண்டுவதுமில்லை.[2]

எ-டு: தணுப்பு + உண்டு = தணுப்புண்டு
காற்று + அடிகுன்னு = காற்றடிகுன்னு

2. செய்து செய்யுன்னு என்னுள்ளொர்
ஆக்யாதாந்த்யம் உகாரவும்
லோபிக்கும் ஸத்ருஶம் போலெ
ஸம்வ்ருதோபஜ்ஞும் ஆகயால்.

செய்து, செய்யுன்னு முதலிய வினைகளின் இறுதியிலுள்ள உகரத்தின் முன் உயிர் வருமபோது உகரம் கெடும். வினைகளின் இறுதியில் காணப்படும் இநத உகரததின் ஆதி வடிவம், மெய்யெழுத்துகளின்

1 உயிரவரின உகுறள மெயவிட்டோடும் நன. 164.

2 இகுகருத்தினையும உயிரேறுங்கால் குற்றுகரம் கெட்டுப்போக, நினற ஒற்றின் மேல உயிரேறிறறெனறு கொள்ளறற்க இரணடுமகூடி நின்றலது அப் பொருள உணாததலாகாமையின் எனற நசசினுர்கினியா கருத்தையும் (தொல். எழுதது 105) ஒபபுகோகுக

ஒலித்தெளிவிற்காகச் சேர்க்கப்படும் குற்றியலுகரமே. வினைகளெல்லாம் வாக்கியத்தின் இறுதியில வருவதால் வாககியத்தின் ஆற்றலுக்காக அகுற்றியலுகரம் முற்றியலுகரமாக்கி ஒலிகுப்பட்டு வருகின்றது. வினைசசொல்லைச் சிறப்பாக அழுத்தம் கொடுததுச சொல்லும் போது இததகைய முற்றுகர ஒலிகூடப போதாதாகி அதனை நீட்டி ஒலித்தலும் வழககம். ''வந்நூ[1] ஸரதஸமயம'' போலுள்ள வழகுகள் நோக்குக எநத இடஙகளிலெல்லாம வினைச்சொறகளோடு பொருட் சிறப்பைக காட்டுதற்குச சேர்குகும அரிய அடிசசொல்லுருவங்களோ, பால்விகுதிகளோ சேர்கபப்படுகின்றனவோ, அநத இடஙகளில் இநதக குற்றுகரம் வாககிய இறுதியன்ருதலால வாககிய பலத்திற்காக அதனை முற்றுகரமாககி ஒலிக்கவேண்டிய தேவை ஏற்படுவதில்லை. அவ்வாறுள்ள இடங்களில் குற்றியலுகரத்திற்குக் கெடுதலும வரும். இதனுல்தான் நூற்பாவில் ''ஸத்ருஸம போலெ'' என்று கூறப்பட்டுள்ளது. அரிய அடிசசொல் வடிவங்களோ, பால் விகுதிகளோ, முன் வரும்போது இககெடுதல் ஒருதலையாகவும், இடைச்சொற்கள் முன் வரும்போது விகறபமாகவும அமையும்.

எ-டு: கண்டு + இல்ல = கணடில்ல; காணுன் னு + உண்டு = காணுன் னுண்டு
கண்டு + ஆன் = கண்டான்; காணுன் னு + ஏன் = காணுன் னேன்
} ஒருதலையான கெடுதல்

கண்டு + ஓ = கண்டுவோ; கண்டோ — விகற்பம்

உரைநடையிலெல்லாம் வினைமுற்றுக்கள் வாக்கிய இறுதியில் வருவதால் மேற்கூறியவகைச சொற்களல்லாது பிறசொற்கள் வினைமுற்றுக்களின் பின் வருவதில்லை அதனுல் அங்குப் புணர்ச்சியே தேவைப்படுவதில்லை செய்யுளிலோ ''இது'' என்ற ஒன்றன்பால வடிவோடு ''செய்யுன்னிதீ வீரன்'' என்ற முறையில் வழஙகவேணடும். ''ஹநத நீந்துன்னவஹோ'' என்ற சில வழகுகளும் காணப்படுகின்றன.

3. அல்ல இல்லய்க்கு அந்த்ய லோபம் ஆயி போயிக்கும் ஒத்தபோல்.

அல்ல, இல்ல என்ற சொற்களின் இறுதி அகரமும் ஆயி, போயி ஆகியவற்றின் இறுதி இகரமும் முன்னர் உயிர் வரும்போது பொருந்துமிடத்துக கெடும.

எ-டு: அல்ல + என் னு = அல்லென் னு; இல்ல + என் னு = இல்லென் னு;

---

1 இசசானறில் வநநு (வந்தது) என்ற வினை முறறின இறுதி வநநூ என நீண்டு வருதலுக காண்க.

ஆயி +என்னு = ஆயென்னு; போயி + என்னு =
போயென்னு.

பெயரெச்சங்களின் இறுதியிலுள்ள அகரத்தைக் கெடுத்து ''பூணுன்னிக்யதி'' என்பதுபோல வழங்குதல் சரியன்று. அம்மாதிரி இடங்களில் ''பூணுன்னெருகயதி'' என்றமைய வேண்டும். அதனில் ஒரு என்பது ''அ'' என்ற பெயரெச்ச விகுதிக்குப் பதில் வருவதாகும்.

4. ப்ரார்த்தனார்த்த க்ரியாங்கத்தின்னு
அந்த்யாகாரவும் அங்ஙனெ.

''கிரியாங்கம்'' என்பது வினையெச்சம் அதன் வகைகளில் ஒன்றாகிய கடுவினையெசசதிற்கு வியங்கோள் பொருளுமுண்டு. அதன் இறுதி அகரமும் கெடும.

எ-டு: அறிக + அமரேஶ்வரா = அறிகமரேஶ்வரா
வரிக + எடோ = வரிகெடோ

5. அகாரம் லுப்தமாய்க் காணும்
வேறிட்டும் பலெடங்ஙளில்

வேறு பல இடங்களிலும் புணர்ச்சியில் அகரம் கெடும்.

எ-டு: பல + எடங்ஙளில் = பலெடங்ஙளில்.

6. அட்டெ, ஆதெ, உடெ, ஊடெ
இவயந்த்யம் களஞ்ஞுமாம்;
ஹ்ருஸ்வம் நீட்டாம் பலத்தின்னுய்
தள்ளாம் ப்ராதான்ய ஹானியில்.

வியங்கோள் விகுதியாக ''அட்டெ'', எதிர்மறை வினையெச்ச இறுதியாகிய ''ஆதெ'', ஆரும் வேற்றுமை உருபாகிய ''உடெ'', ''கதி'' யாகிய ''ஊடெ'' ஆகியவற்றின் இறுதி எகரம் உயிர் முன்வரும் போது விகற்பமாய்க் கெடும.

எ-டு: போட்டெ + அவன் = போட்டவன், போட்டெயவன்
வராதெ + இருன்னு = வராதிருன்னு, வராதெயிருன்னு
ஸாமியுடெ + அச்சன் = ஸாமியுடச்சன், ஸாமியுடெயசசன்
வாதிலிலூடெ + இறங்ஙுன்னு = வாதிலிலூடிறங்ஙுன்னு,
வாதிலிலூடெயிறங்ஙுன்னு.

இச்சொற்களின் இறுதியிலுள்ள குறிலாகிய எகரமும், முன் கூறியது போன்று, ''அழுததம'' கொடுகக்கவேண்டிய இடங்களில நீட்டி ஒலிக்கப்படுதலும், முகியதுவம இல்லாத இடங்களில முழுவதும்

ஒலிக்கப்படாதிருத்தலும் உண்டு. அதனுல் இது கெடுவதிலுள்ள பொருத்தமும் முன்கூறிய முறையிலேயே ஆகும்.

எ-டு: ஒட்டும் + ஏ = ஒட்டே, அட்டே
ஆது + ஏ = ஆதே
உடய = உடெ
ஊடு = (உள்ளு) + ஏ = ஊடே

இவற்றுள் உடய என்பதைத் தவிர உள்ள எல்லாவற்றிலும் 'ஏ' இடைச்சொல் ஆகும். அதனுல் இவைகளின் இறுதி கெடும்போது ஏ என்ற இடைசொல இல்லாது அதன் பயன் மட்டும உளது. உடய என்பது குறைந்து "உடெ" ஆவதின்பின் ஏகாரமும் கெடும்போது மூலச்சொல் மிகுதியும் உருமாறி வருகின்றது. "உடெ" என்று நீட்டுவதற்கு நியாயம் போதாது.

2. தோன்றற்புணர்ச்சி

7. வர்ஜ்ஜிப்பு ஸ்வரஸம்யோகம்
ய வ சேர்த்து யதாவலே;
பூர்வ்வம் தாலவ்யமாணெங்கில்
யகாரமதிலேய்க்கணம்;
பூர்வமோஷ்ட்யஸ்வரம் வந்நால்
வகாரம் சேர்த்துக் கொள்ளுக.

உயிர்களுக்குத் தனிநிலையில் ஒலி உள்ளதினுல் இரண்டு உயிர்களைச் சேர்த்து ஒலிப்பதில் வசதிக குறைவுண்டு. அதனுல் ஒலிப்பதில் உயிர்ப்புணர்ச்சி தவிர்க்கவேண்டியதாகின்றது. இரண்டு உயிர்கள் புணரும்போது யகரமோ, வகரமோ தகுதிநோக்கிச் சேர்த்து ஒலிக்க வேண்டும். நிலைமொழி ஈற்றுயிர் அண்ண ஒலி எனில் இடையில் யகரம் சேர்ப்பது பொருத்தம. அது இதழொலி ஆகிய உயிரெனின் இடையில் வகரம பொருந்தும். அண்ண ஒலிகளாகிய அ, ஆ, இ, ஈ, எ, ஏ, ஐ ஆகியவற்றின்முன் உயிர்வரின் இடையில் யகரமும், இதழ் ஒலிகளாகிய அ, ஆ, உ, ஊ, ஒ, ஓ, ஔ ஆகியவற்றின்முன் உயிர் வரும்போது இடையில் வகரமும் தோன்றும் என்பது பொருள்.

எ-டு:	அண்ண ஒலிகள் :		இதழொலிகள் :	
கர	+ உள்ள = கரயுள்ள		தட	+ உன்னு = தடவுன்னு
போரா	+ இது = போராயிது		சா	+ உன்னு = சாவுன்னு
வழி	+ ஆகும் = வழியாகும்		திரு	+ ஓணம் = திருவோணம்
தீ	+ ஆட்டு = தீயாட்டு		பூ	+ அம்பு = பூவம்பு

தன்னெ + அவன் = தன்னெ யவன் போ + உன்னு = போவுன்னு

சேர்ந்நே + உள்ளு = சேர்ந்நே யுள்ளு

கை + உண்டு = கையுண்டு

குறில் ஆகிய ஒகரத்திலும், ஔகாரதத்திலும் இறுகின்ற சொற்களோ பகுதிகளோ மலையாள மொழியில் மிக மிக அரியன. வசதிக்காகவே அவ்விரண்டு உயிர்களையும் சேர்த்து இதழொலி உயிர்கள் என்று விதியில் கூறப்பட்டிருக்கின்றது.

8. யாவின்னு ஞவும் வாவின்னு
காவும் க்ருதியில் வந்நிடாம்;
ஶ்ருதி மாதுர்யார்த்தமாயும்
ஞகமம் சிலெடங்ஙளில்

வினைமுற்றுகளில் அண்ண உயிரின்முன் உயிர் வரும்போது யகரத்தைப போல னகரமும தோன்றும். அம்முறையிலேயே இதழ் உயிரின்முன் உயிர்வரின் வகரதத்தைப்போல் ககரமும தோன்றும்.

எ-டு: காட்டி + ஏன் = காட்டினேன், காட்டியேன்
விலஸி + ஆன் = விலஸினான், விலஸியான்
போ + உன்னு = போகுன்னு, போவுன்னு
தட + உன்னு = தடகுன்னு, தடவுன்னு

இவற்றில் அண்ண ஒலிகளுக்கு முன்தோன்றும் னகரம் வினைமுற்று களைப் போலவே பெயரெசசங்களிலும் வரும்.

எ-டு: விலஸி + அ = விலஸின, விலஸிய
கருதி + அ = கருதின, கருதிய

மெல்லினப்பிரியர்களாகிய மலையாளிகள் சிலவிடங்களில் செவியின்பத் திற்காகவும் னகரத்தைச் சேர்ப்பதுண்டு.

எ-டு: கரி + புலி = கரிம்புலி, புளி + குரு = புளிங்குரு

இந்த எடுததுக்காட்டுகளில், கரிம்புலி என்பதில் மகரமும், புளிங்குரு என்பதில் ஙகரமும காணப்படினும் அவை இரண்டும் னகரத்தின் திரி பாகவே வரும் என்பது பின்னர் தெளிவாகக்கப்படும்.

9. வகாராகமமே சேரு
சுட்டெழுத்துக்கள் முன்னிலும்;
அறிவான் அறிவேன் என்ன
வகாரம் பாவி சிஷ்னமாம்.

அண்ண ஒலி ஆகிய உயிர்களின்முன் உயிர்வரின் இடையில் யகரம் தோன்றும் என்ற விதிக்குக் குற்றம் வருமோ என்று ஐயுற்று, அக்குற்றம் நேர்வதில்லை என்று இந்நூற்பாவின் முற்பகுதியில் அவ் ஐயம் அகற்றப்பட்டிருக்கிறது. அ, இ, எ என்ற சுட்டுப்பெயர்களுக குச் சுட்டெழுத்து என்று தமிழில பெயரிடப்பட்டிருக்கின்றது.* இவை மூன்றும் அண்ண ஒலி ஆகிய உயிர் எனினும் இவற்றின்முன் உயிர் வரும்போது வகரம் தோன்றுமே; யகரமன்று என்பது சிறப்பு விதி.

எ-டு: அ + அன் = அவன், இ + அன் = இவன், எ + அன் = எவன்

இந்தச் சுட்டுப்பெயர்களை உரிச்சொற்களாக்கி உபயோகிகும்போதும் வகரமே தோன்றுமே.

எ-டு: அ + இடம் = அவிடம், இ + இடம் = இவிடம், எ + இடம் = எவிடம்

பெயரெச்ச விகுதியாகிய அகரமும் சுட்டெழுத்தே ஆதலால் அதிலும் வகரமே தோன்றல் வேண்டும்.

எ-டு: செய்த + அன் = செய்தவன்
சொல்லார்ந்த + அயோத்ய = சொல்லார்ந்தவயோத்ய

ஆயின் தற்கால மலையாளத்தில் ''சொல்லார்ந்தவயோத்ய'' என்ற சிறப்பு விதிப்படியே வழக்கு காணப்படுகின்றது. இப்போது பத இடைப் புணர்ச்சியிலும் ''அவிடம்'', ''இவிடம்'' முதலிய தொகைக் குச் சமமாகிய சொல் வழக்குகளிலும் மட்டுமே வகரம் தோன்றல் பயன் படுத்தப்படுகின்றது

இனி வேறொரு வேறுபாட்டிற்கு அமைதி காட்டுவோம்:

அறி + ஆன், அறி + ஏன் என்ற பகுதி-விகுதிப் புணர்ச்சியிலும் இடையே வகரம தோன்றி 'அறிவான்' என்றும 'அறிவேன்' என்றும் காணப்படுகின்றது. அல்லாது அண்ண உயிரிற்குக கூறிய யகரம் தோன்றி அறியான் என்றும அறியேன் என்றும் ஆவதில்லை. அத னால் மேற்காட்டப்பட்ட யகரம் தோன்றல அண்ண உயிர்களில் நிலை யானதன்று என்ற ஐயம் தோன்றும. அச்சொற்களில் காணப்படும் வகரம் உயிர்ப்புணர்ச்சி விதிப்படி வந்ததன்று; எதிர்கால இடைநிலை யாகிய வகரமாகும். அதனால் மேற்கூறிய விதி நிலையானது என்று அமைதிகாண முடியும். அறிவான் என்பது பின் வினையெச்சம். அது எதிகாலத்தைக குறிகவும செய்யும் அறியும் + ஆன் = அறியுவான் என்ற எதிர்கால உருவதிலிருந்து அதனை ஆகலாம். ''உம்''

* எகரம சுடடெழுததனறு. விஞவெழுதது

என்ற எதிர்காலச் சொல்லைச் சேர்க்காதபோதும் எதிர்காலக் குறிப்பிற் காக வகரம் தோன்றியிருக்கின்றது. எதிர்கால அம்சம் எல்லாம் இல்லாதபோது அறி + ஆன் = அறியான் என்ற புறநடை உருவமும் ஆகலாம். நாடோடி மொழியில் இதுவே வழக்கு.

'அறிவேன்' என்பதை 'அறியேன்' என்றுக்கும் வழக்கம் ஒருக் காலும் இல்லை. அது செய்யுள் மொழியில் மட்டும் பயன்படும் வடி வாய்ப போனதும, ''அறியேன்'' என்பது எதிர்மறை உருவமயக்கம் உண்டாக்குவதும அதற்குரிய காரணங்கள் ஆகும்.

10. *யவாகமம் நிபாதத்தின்*
ஸ்வரத்திங்கல் அஸுந்தரம்.

இடைச்சொற்கள் என்ற வகைப்பட்ட சொற்களின் இறுதியில் வரும் உயிர்களுக்குமுன் உயிர்வரினும் இடையில் யகரமோ, வகரமோ தோன்றிச் சேர்ந்தொலிக்கப்படுவது நன்றன்று. வடமொழி இலக்கண ஆசிரியர்கள ''பிரக்ருஹ்யம்'' என்று பெயரிட்டுள்ள சொற்களை ஒலிப் பது போன்று, யாதொரு புணர்ச்சி விதியும் கூடாது ஒலித்தலே நன்று.*

எ-டு: எநதோ + அவன் = எநதோ அவன்
ஏதோ + ஒன்னு = ஏதோ ஒன்னு
அதா + ஒருவன் = அதா ஒருவன்

இவ்வாறன்றி ஏநதோவவன், ஏதோவொன்னு, அதாயொருவன் என் றெல்லாம் ஒலிப்பது மொழியின் தன்மைக்குப் பொருந்துவதன்று.

11. *தீர்க்கத்தின்னு அவஸானத்தில்*
பாஹீல்யேன யவாகமம்.

ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ என்ற நெடில் உயிர்களை இறுதியில் கொண்ட சொற்களுக்கு, அததன் பொருத்தம் போன்று நெடிலின்முன் யகரமோ வகரமோ தோன்றும். ஆனால் இவ்வகை யகர வகரத் தோற்றம் சில சொற்களில் மாத்திரமே அமையும். இன்ன இன்ன சொற்களில் தோன்றும என்று இலக்கண நூற்கள் நியமிக்கும ஒரு விதியும் இல்லை. அதனால்தான் ''பாகுல்யேன'' எனக் கூறியுள்ளது.

எ-டு: கா = காய்; பா = பாய; நா = நரவு; ரா = ராயு; தீ = தீயு; நீ = நீயு; பூ = பூவு; கோ = கோவு; கை = கையு.

---

* உடம்படுமெய கோடல் ஒருதலையன்று, கிளி + அரிது → கிளி அரிது, மூங்கா + இலலை → மூங்கா இலலை (இளமபூரணம).

பெரும்பான்மை ஆகையால் தீ, பூ, கை என்று ய, வ தோன்றுதும், குருவு, பருவு முதலிய குறிலின் பின் அவை தோன்றியும் வழக்கில் காணப்படுகின்றன.

12. *ப்ரத்யயாதித் ககாரத்தின்*
முன்பும் தாலவ்யாகமம்.

ஒரு உருபின் முதலிலுள்ள இரட்டிய ககரத்தின் முன்வரும் அண்ண உயிர்க்குப் பின்பும யகரம் தோன்றும்.

எ-டு: தல +க்கு = தலய்ககு, வல+க்குன்னு = வலய்க்குன்னு,
தல +க்கல் = தலய்க்கல், சிரி+க்குன்னு = சிரிய்க்குன்னு,
ஹரி+ககுன்னு = ஹரிய்க்குன்னு.

உருபு முதல் க அன்றெனின்,

சாடி+கடக்குன்னு = சாடிக்கடக்குன்னு
தடி +கஷணம் = தடிக்கஷணம்
அர +கல் = அரககல் (கல்லின் பாதி)

இவற்றில் ககரம் உருபு முதலில்லை. முன் வருவது அண்ண உயிர் அன்றெனின்,

குறு +க்குன்னு = குறுக்குன்னு
வெறு+ககுன்னு = வெறுக்குன்னு

இங்கு நிலையுயிர் இதழ் ஒலியாகையால் உருபு முதல் ககரம் எனினும், யகரம் தோன்றவில்லை

3. இரட்டற் புணர்ச்சி

13. *கராதி கரம் ஊஷ்டாவும்*
ம்ருது கோஷங்ஙளும் த்ருடம்;
பஞ்சமம் மத்யமம் ஹாவும்
ஸிதிலாபிதமாய் வரும்.
விஶேஷண விஶேஷ்யங்ஙள்
பூர்வ்வோத்தர பதங்ஙளாய்
ஸமாஸிச்சால் இரட்டிப்பு
த்ருடம் பரபதாதிகம்.

உயிர்கள் சுதந்திர ஒலி உடையனவாதலாலும், அவற்றின் ஒலி முற்றியல் தன்மையதாதலாலும் அவற்றை ஒலிக்கும்போது குரல்வளை முதலிய இடங்களில் நாக்கு (தொட்டு) தட்டி நின்று நீங்காததாலும், அவை மெய்களைப்போன்று கூடிச்சேர்ந்து கூட்டெழுத்து உண்டாவதில்லை. உயிர்கூட்டம் உண்டாகிலும் மெய்க்கூட்டம் போன்று

தெளிவானதன்று. மெய்கள் இரட்டித்த இடத்தில் உயிர்களுக்கு நீட்டல் நிகழும். கூட்டெழுத்தின் இடத்தில் சந்தியக்கரமும் தோன்றும். அதனால் இரட்டித்தலைப் பற்றியுள்ள விதிகளெல்லாம் மெய்களுக்கு மட்டுமேயாகும். அதிலும் மலையாளத்தின் ஏற்பாட்டில் ஆற்றலுடைய ஓசையுள்ள எழுத்துக்களுக்கு இரட்டித்தல் மிகுதியாகக் காணப்படுகின்றது. மென்மையான ஒலியுள்ள மெய்களுக்கு இரட்டித்தல் குறைந்து காணப்படும். அதனால் இரட்டலின் தேவைகளாக மெய்கள் இரணடு வகைகளாகப் பிரிக்கப்படுகின்றன. வல்லெழுத்து 6; மிகு வல்லினம் 5; மிருதுகள் 5; கோஷங்கள் 5; உரசொலிகள் 3; ஆகிய 24 மெய்கள் ஆற்றல் மிக்கன. மெல்லினம் 6; இடையினம் 6; ஹகாரம் 1 ஆகிய 13 மெய்கள் ஆற்றல் குறைந்தன. இனி இவற்றின் புணர்ச்சியை விளகுவோம்.

அடைமொழியாகிய நிலைமொழியும், அடையேற்கும் முதற்சொல் வருமொழியுமாகித தொகும்போது வருமொழி முதலிலுள்ள ஆற்றல் மிகக மெய்கள் இரட்டும். எ-டு:

தல + கெட்டு = தலகெட்டு
தாமர + குளம் = தாமரக்குளம்
உத்ஸவ + திறுதி = உத்ஸவத்திறுதி
தேங்ஙா + கூடு = தேங்ஙாக்கூடு
மாங்ஙா + புர = மாங்ஙாப்புர
மடி + ஶீல = மடிஶ்ஶீல
பணி + புர = பணிப்புர

தீ + கனல் = தீககனல்
புழு + கேடு = புழுக்கேடு

பசு + தானம் = பசுத்தானம்
பூ + தட்டம் = பூத்தட்டம்
மாத்று + கல்லு = மாத்றுகல்லு
கை + தொழில் = கைத்தொழில்
மயில் + குட்டி = மயில்ககுட்டி
கவிள் + தடம் = கவிள் த்தடம்
திங்கள் + கிடாவு = திங்கள்க் கிடாவு
மலர் + பொடி = மலர்ப்பொடி
தளிர் + கூட்டம் = தளிரக கூட்டம்

இவைவேற்றுமைத் தொகையில் இரட்டலுக்கு எடுத்துக்காட்டுகள். பண்புத்தொகையில் இரட்டலுககு எ-டு:

அர + பணி = அரப்பணி
பாதி + கும்பளங்ங = பாதிக்கும்பளங்ங
புது + கலம் = புதுககலம்

தள்ள + சக்கி = தள்ளச்சக்கி
பே + பட்டி = பேப்பட்டி
தரு + கை = தருக்கை

அன்மொழித்தொகைகளில் இரட்டலுக்கு எடுதத்துக்காட்டு:

தாமரக்கண்ணன், மைககண்ணி, சேனத்தலயன், நெற்றிப் பாண்டன்*

* இவை தமிழிலக்கணபபடி அன்மொழித்தொகைகளல்ல.

ஆகியன. உம்மைத்தொகை விசேடண விசேடியங்கள் சேர்ந்து தொகையாவதில்லையாகையால் இவ்விரட்டல் அத்தொகையில் வருவ தில்லை.

எ-டு: கை + கால் = கைகால்; ஆன + குதிரகள் = ஆனகுதிரகள்; ஈட்டி + குந்தங்ஙள் = ஈட்டி குந்தங்ஙள்; ராம + கிருஷ்ணன்-மார் = ராமகிருஷ்ணன்மார்.

கோஷங்களும் அதிவல்லினங்களும் இரட்டும்போது நிலைமொழி முன் முறையே மெல்லினமும் வல்லினமும் தோன்றும்.

எ-டு: ஆன + ப்ருந்து[1] = ஆனப்[2]ப்ருந்து
பாதி + [3]பலம் = பாதிப்பலம்

இரண்டும் விசேடியங்கள் ஆதலால் ''அலர்ஶரன்'' என்பதில் இரட்டல் இல்லை.

14. அலுப்தாக்ய ஸமாஸத்தில்
தாது பூர்வத்திலும் வரா.

நிலைமொழியிலுள்ள பால், எண், விகுதிகள் புணர்ச்சியால் கெடாத தொகைகளுக்கு ''விகுதி கெடாத தொகைகள்'' என்று பெயர். அதிலும் தன்வினைப் பகுதியே நிலைமொழியாய் வரும். தொகையிலும் இங்குக கூறப்பட்ட வருமொழி முதலில் ஆற்றல்மிக்க மெய்களுக்கு இரட்டல் அமைவதில்லை. எ-டு:

அண்டர் + கோன் = அண்டர்கோன் (எண், பால்விகுதி 'அர்' கெடவில்லை)
மலமகள் + சரணம் = மலமகள் சரணம் (அள், பெண்பால் விகுதி கெடவில்லை)
எரி + தீ = எரிதீ (எரி, தன்வினைப்பகுதி)
கட + கோல் = கடகோல் (கட, தன்வினைப்பகுதி)

விகுதி கெடாத தொகை வழக்கரிது; செய்யுளிலேயே காணப்படும்.

15. வினையெச்சங்ஙள் மூனெண்ணம்
முன்தன் பாட்சிக ஸஞ்சிதம்
ஆதாரிகாபாஸமாம் எ
ஆல் இல் கல் எ விபக்திகள்
இவய்க்கு பின் த்ருடத்தின்னு
த்வித்வம் வாக்யத்திலும் வரும்.

1, 2, 3. இவை முறையே பகரத்தின் நான்காவதும் மூன்றுவதும் இரண்டாவதும் ஆகிய வருக்க ஒலிகள்

முன்வினையெச்சம், தன்வினையெச்சம், கட்டளை வினையெச்சம், ஏழாம் வேற்றுமைப்பொருளுள்ள விபக்தியாபாஸ்[1] உருபாகிய ஏ என்பது ஆல், இல், கல், எ என்ற வேற்றுமையுருபுகள் ஆகியவற்றின் முன்வரும் ஆற்றல்மிக்க மெய்கள் தொகையல்லாத இடங்களிலும் இரட்டிக்கும். எ-டு:

முன்வினையெச்சம்	—சாடி + புறப்பெட்டு = சாடிப்புறப்பெட்டு
,,	போயி + பறஞ்ஞு = போயிப்பறஞ்ஞு
தன்வினையெச்சம்	—நிரிக்கெ + கண்டு = நிரிக்கெக்கண்டு
,,	கூடெ + போந்நு = கூடெப்போந்நு
,,	முறுகெ + பிடிச்சு = முறுகெப்பிடிச்சு
கட்டளை வினையெச்சம்	—காணுகில் + சொல்லாம் = காணுகில்ச் சொல்லாம்
,,	கண்டால் + தல்லாம் = கண்டால்த்[2] தல்லாம்
ஏழாம்வேற்றுமைப் போலி	—ஜலத்திலே + போளகள் = ஜலத்திலேப் போளகள்
,,	நெற்றியிலே + கண்ணு = நெற்றியிலேக கண்ணு
ஆல் (வேற்றுமை)	—மனஸ்ஸால் + கொடுத்து = மனஸ்ஸால்க் கொடுத்து
,,	வடியால் + தடுத்து = வடியால்த்தடுத்து
இல் (வேற்றுமை)	—அதில் + தன்னெ = அதில்த்தன்னெ
,,	கண்ணில் + கொண்டு = கண்ணில்கொண்டு
கல் (வேற்றுமை)	—தலய்க்கல் + பிடிச்சு = தலய்ககல்பபிடிச்சு
,,	படிய்க்கல் + சென்னு = படிய்க்கல்ச்சென்னு
எ (வேற்றுமை)	—நின்னெ + கண்டு = நின்னெக்கண்டு
,,	பாலனெ + பிடிச்சு = பாலனெப்பிடிச்சு

கட்டுப்பாடின்மை காரணமாகக் கவிஞர்கள் சில சமயம் இரட்டல் இல்லாமலும் வழங்குவது உண்டு. எ-டு:

''காமிக்காத்தவளெ பலேன தெரட்டுகூடா''—மன்னுடியார்
''நாலஞ்சுபேர்கூடி ஜவேனே சென்னூர்''—நம்பியார்

இவ்வாறு இரட்டாதிருத்தல் மிருதுக்களுகு மட்டுமே உண்டு. அதற்குக காரணப் பொருத்தமும் உண்டு. ஆற்றல்மிக்க மெய்களில்

1 விபக்தியாபாஸம்–எல்லாப் பெயரோடும் சேராதும் பொருளில் வேற்றுமைக்குச் சமமாகவும் வரும் உருபு இது வேற்றுமைப்போலி எனத் தமிழாக்கபபட்டிருக கிறது

2 ல்கக, ல்ச்ச், ல்த்த், லபப் என்ற இணைகள் தமிழில் இல்லை.

மிருதுக்களுக்கு ஏனையவற்றைக் காட்டிலும் ஆற்றல் குறையும். அதனால் அவற்றை மென்மையான ஒலிகளினின்றும் ஒதுக்குதற்கு நியாயம் உண்டு.

16. கூட்டக்ஷரம் இரட்டிக்க
பத மத்யத்தில் ஆவுகில்.

ஒரு சொல்லின் இடையில் வரும் கூட்டெழுத்தின் முதல் மெய் இரட்டும. எ-டு:

லக்ஷ்மி = லக்க்ஷ்மி
பஸ்மம் = பஸ்ஸ்மம்
வ்ருத்தன்[1] = வ்ருதத்தன்[2]

எழுதும்போது லக்ஷ்மி, பஸ்மம் என்றெல்லாம்தான் எழுதுதல் வழக்கம். ஆயினும் ஒலிக்கும்போது இரட்டித்தலோடுதான் ஒலிக்கவேண்டும். தனிச் சொல்லின் இடையில் அன்றெனின் இவ்விரட்டல் வேண்டாம். எ-டு:

பறஞ்ஞ+ப்ரகாரம் = பறஞ்ஞப்ரகாரம்
பார்ய +ப்ரஸவிச்சு = பார்யப்ரசவிச்சு
மேனி +க்ஷீணிசசு = மேனிக்ஷீணிச்சு
குரு +ப்ரமிச்சு = குருப்ரமிச்சு

''நல்லது க்ஷம என்ஞோர்தது வலிப்பின்''
''நாரீமணி மார்க்கென்னு ப்ரஸித்தம்''
''பூர்வ்வ பாபம்கொண்டு வ்யாதியும் தாரித்ரியவும்''

வடமொழியில் ''அனசி ச'' என்னும் நூற்பாவால் உயிர் முன்னும் இரட்டும். அதனால் மலையாள மொழியிலும் முன்பின் உள்ள சொற்கள் வடமொழியாயின் இரட்டல் வேண்டும். எ-டு:

''ஜாதிஶ் ஶ்ரேஷ்ட தயுள்ள ஜனத்தெ''
''உத்பக்ஷப்ப்ரகரங்ஙளாம் நயனயோரர்ததக்க்ரஹத்தெ[3]''

ஆயின்,

''முன்னம் மாரீசனெக் கரூரன்''
''மெல்லெஸ்ஸ்வப்நே வருன்னுண்டாரிகில்''

---

1 இதிலுள்ள ''த்த'' முறையே தகரத்தின் மூன்றுவதும் நான்காவதுமாகிய வருக்க ஒலிகள்.

2 இதிலுள்ள ''த்த்த்'' ஆகியவற்றில் முதல் இரண்டும் மூன்றும் தகர ஒலி. மூனறுவது 4-ம தகர ஒலி

3 இதிலுளள இரு ககரங்களும ககரத்தின் 3-ம வருக்க ஒலிகள.

முதலியவைகளில் மலையாள மொழியிலும் இரட்டல் காணப்படுவது 15-ஆம் நூற்பாவால் எய்தியதாகும். என்றாலும் செய்யுள் முதலிய வற்றில் புணர்ச்சியில் இரட்டல் இல்லாது,

''கழலிண பணியுன்ன ப்ராணிகள்க்கு அங்ங
அழகொடு பேடி கூடினேன பகனமாக்கி
கிரி ஸுதயொடு ப்ரேமமார்ந்நு வாழும்
ஹரனுடெ ஸ்ரீ சரணங்ஙள் கும்பிடுன்னேன்''

என்பதுபோல வழங்கினுல் அது வடமொழிப் புலவர்களுக்கு செவிக் கடுரமாகித் தோன்றும். ஆனுல் ''பணியுன்னப்ப்ராணிகள்'', ''பேடிக் கூடினேன'' முதலிய இரட்டல் உள்ள வழக்குகளே ஒரு மலையாளியும் பொறுப்பதும் இல்லை. இங்கிலையில் இவ்வாறு இடர்ப்படும் வழக்கு களுக்கு இடமே கொடுக்காது,

''கழலிண பணியும் ஜனத்தினெல்லாம்
அழகொடு பேடி ஜேவன் பகனமாககி
கிரி ஸுதயோடு ராகமார்ந்நு வாழும
ஹரனுடெத ருசசரணாங்ஙள் குமபிடுன்னேன்''

முதலிய முறையில் எலலோரும் ஒப்புக்கொள்ளும் மட்டில் வழங்கினுல் போதும் என்று உபதேசிக்கலாம என்றுல் அது இலக்கணக்காரர் களின் மதிப்புக்குறைவிற்கு வழிவகுக்கின்றது. அதனுல் எல்லாவற் றையும் சேர்த்துப் பார்க்கும்போது வடமொழி இலகணக்காரர்களின் குற்றசசாட்டைப் பொருட்படுத்தாது, நாட்டுமொழி நிலைக்குத் தக ஒற்று இரட்டல் இலலாது, முதலில் காட்டியுள்ள முறையில் செய்யுள் செய்வதில் யாதொரு நாணமும் நினைப்பதிற்கில்லை என்ற எனது கருத்தைப் பொதுமக்களும் ஒப்புக்கொள்வார்கள் என்று நம்புகிறேன். அதுமட்டுமன்று, பெரு முனிவர்களும், புராண கவிஞர்களும் பெரும் பான்மையாகவும,

''த்விதீயம் ஹேமப்ராகாரம் குர்வத் பிரிவ வானரை:''
''த்ததடிதி ப்ரவிஸ கேஹம் மா பஹிஸ்திஷ்ட பாலே!''

முதலியவைபோன்று பெருங் கவிஞர்கள் அரிதாகவும் வடமொழியி லேயே ஒற்றிரட்டலை விலக்கியுள்ளனர் என்றும், மஹாராஷ்டி, ஸௌர சேனி முதலிய பிராகிருதங்கள் இதனைக் கணக்காகவில்லையென்றும், 'அனசி ச' என்ற நூற்பாவை பட்டோஜி ப்ரபூதி புதியவர்கள் ''வா'' என்ற சொல்லை மீண்டும் கொண்டு விகல்ப்பிகின்றது என்றும், 'அசோ ரஹாப்யாம் த்வே', 'அனசி ச', 'நாதிந்யாக்ரோஸே புதரஸ்ய', 'ஸரோரிஹி', 'த்ரிப்ரபூதிஷு ஸாகடாயனஸ்ய', 'ஸர்வத்ர ஸாகல்யஸ்ய'

'தீர்க்காதாசார்யணும்' ஆகிய ஏழு நூற்பாக்களால் பாணினியே இரட்டும் விதிகளில் எத்தனையோ குழப்பங்கள் உண்டாக்கியிருக்கின்றார் என்றும் அவர்கள் நன்கு சிந்திக்கவேண்டியுள்ளது.

17. சுட்டெழுத்தினு பின்வந்நால்
மெய்யேதும் த்வித்வம் ஆர்ந்நிடும்
பரம் ஶ்ரீதில மாணெங்கில்
இதே தீர்க்கிக்கிலும் மதி.

சுட்டுப்பெயர்களாகிய அ, இ, எ ஆகியவற்றிற்குச் சுட்டெழுத்து என்று பெயர். சுட்டிக்காட்டிச் சொல்லும் சொற்களாகிய அவன், இவன், எவன் ஆகியவற்றின் பகுதிக்குச் சுட்டெழுத்து என்ற பெயர் பொருட்பொருத்தம் உடையதன்றோ? இவ்வகைச் சுட்டெழுத்துகளின் முன்வரும் எல்லா மெய்களும் இரட்டும். எ-டு:

அ + காலம்	= அக்காலம்	எ + நரகம்	= எந்நரகம்
அ + த்வாரம்	= அத்வாரம்	எ + மாதிரி	= எம்மாதிரி
இ + கண்ட	= இகண்ட	இ + நீ	= இந்நீ
இ + திக்கில்	= இத்திகில்	இ + வண்ணம்	= இவ்வண்ணம்
எ + கார்யம்	= எகார்யம்	அ + தரம்	= அத்தரம்
எ + தேவன்	= எத்தேவன்	அ + படி	= அப்படி

வருமொழி முதலில் வருவது ஆற்றல் குறைந்த மெய்யெழுத்து எனின் அவ்வகைச் சுட்டெழுத்துக்களே நீட்டினாலும் போதும்.

எ-டு: அ + மாதிரி = அம்மாதிரி, ஆமாதிரி
அ + விதம் = அவ்விதம், ஆவிதம்
இ + வண்ணம் = இவ்வண்ணம், ஈவண்ணம்
இ + ஆள் = இ + யாள் = இய்யாள்; ஈயாள், இயாள்
(வேறுபட்டது)

மலையாள மொழியில் ஒருமாத்திரை மாத்திரமுள்ள சொற்கள் வருவதில்லை. அதுவே சுட்டெழுத்துக்கள் நீளும் அல்லது இரட்டும் என்ற தன் தத்துவம். இதுவே காரிகையால் தெளிவாவது.

18. ஏகமாத்ர ப்ரக்ருத்யந்தே
நாஸோஷ்டம் ய ள லங்ஙளும்
இரட்டிச்சிட்டுதான் நில்க்கும்
பதமில் லொற்ற மாத்ரயில்.

ஒருமாத்திரை அளவுள்ள சொல்லின் இறுதியில் வரும் மெல்லின மெய்களும் ய ள ல ஆகியவையும் இரட்டித்தே நிற்கும். ஒருமாத்திரை மாததிரம் அள்வுள்ள சொற்கள் மலையாள மொழியில் இல்லை.

எ-டு: தங் + இ = தங்ஙி
பொங் + இ = பொங்ஙி
நெஞ் + உ = நெஞ்ஞு

பெண் + இன்றெ = பெண்ணின்றெ
எண் + ஆயிரம் = எண்ணாயிரம்
என் + எ = என்னெ
பொன் + உண்ட = பொன்னுண்ட

நம் + எ = நம்மெ
கம் + உன்னு = கம்முன்னு
செய் + உன்னு = செய்யுன்னு

நெய் + ஆறு = நெய்யாறு
தல் + உன்னு = தல்லுன்னு
கல் + உ = கல்லு, கல்
முள் + உ = முள்ளு, முள்
எள் + உ = எள்ளு, எள்

19. பதாந்த்தே வ்யஞ்ஜனம் வந்நால்
ஸம்வ்ருதம் சேர்த்து சொல்லுக
சில்லு மாத்ரம் ஸம்வ்ருதத்தின்
ஸாஹ்யம் கூடாதெயும் வரும்.

ஒரு சொல் மெய்யில் இறுமெனில் அம்மெய்யின் பின்னர் குற்றியலுகரம் சேர்ககவேணடும். ஆனல் சில்லுகளில் மட்டும் குற்றுகரம் சேர்க்கவேண்டும் என்ற கட்டாயம இல்லை.

வயஸ் = வயஸ்ஸு காம் = காஹு
வாக = வாககு உலக் = உலகு

சில் இறுதி எனில்,

கண் = கண், கண்ணு பால் = பால், பாலு
தேன் = தேன், தேனு தோள் = தோள், தோளு
நீர = நீர், நீரு கீள் = கீள், கீழ்

4. திரிதற் புணர்ச்சி

20. தவர்க்கத்தின் னடுத்துள்ள
டவர்க்கேண ஸவர்ண்ணனம்
சவர்க்கத்தோடும் அவ்வண்ணம்
டவர்க்கத்தோடும் அங்ஙனெ.

தவர்க்கம் டவர்க்கததோடு சேரும்போது டவர்க்கமாகவும், சவர்க்கத்தோடு சேரும்போது சவர்ககமாகவும், டவர்க்கத்தோடு சேரும்போது டவர்ககமாகவும் திரியும். எ-டு:

விண் + தலம் = விண்டலம் நின் + து = நின்டு (நின்னு)
தண் + தா = தண்டார் வலஞ் + து = வலஞ்சு (வலஞ்ஞு)
என் + து = என்டு (என்னு) பொரிஞ் + து = பொரிஞ்சு (பொரிஞ்ஞு)

என்டிடு, நின்டிடு ஆகிய இச்சொற்களை என்னு, நின்னு என்ற உருவத்தில் ஆக்கியது பிற்காலத்தில் அதனைப் போன்றே வலஞ்சு, பொரிஞ்சு முதலியவைகள் வலஞ்ஞு, பொரிஞ்ஞு என்றெல்லாம் பிற்காலத்துண்டாகிய மெல்லினமாதல் முதலியவற்றுல் ஆயின.

21. லகாரம் வர்த்ஸ்யமாய்த் தீரும்
தவர்க்கம் பரமாவுகில்;
ளகாரமெங்கில் மூர்த்தன்யம்;
விநாமக்ரிய யாணிது.

லகாரத்தின் முன் தவர்க்க எழுத்துக்கள்வரின் வர்த்ஸ்யம் என்ற டி வர்க்கமாய்த் திரியும். அதனைப் போன்றே ளகரத்தின்முன் தவருக்க எழுத்துக்கள்வரின் இடையண்ண ஒலியாகிய டவர்க்கமாய்த் திரியும். இத்திரிதலுக்கு 'விநாமம்' என்று பெயரிடலாம். ''இடம் தாழ்தல்'' என்பது இதன் பொருள்.

எ-டு: அகல் + துன்னு = அகடு + துன்னு = (அகற்றுன்னு)
வில் + து = விடு + து (விற்று)
வேள் + து = வேட் + து (வேட்டு)
கேள் + து = கேட் + து (கேட்டு)
நல் + நூல் = நன் + நூல் (நன்னூல்)
தொள் + நூறு = தொண் + நூறு (தொண்ணூறு)

''அகடு'', ''துன்னு'' என்றிருப்பதைப் பின்னர் அகற்றுன்னு என்றுக்குவது, முன் காரிகையில் விவரித்த விதிப்படி என்றறிந்து கொள்க.

22. விநாமம் ல ள கள்க் கோதாம்
வர்க்க்யம் ஏதின்றெ முன்பிலும்
எங்கிலும் மலியாளத்தில்
ப்ரத்யாதி தகாரமோ
நாஸோத்தமோ பரம்வேணம்
விநாமக்ரிய செய்திடான்.

ல, த, ந—அண்பல் மெய்கள், ள, ட, ண—வர்த்ஸ்யம், ர, ட, ண—இடையண்ண ஒலிகள் மேல் ஸ்தானத்திலுள்ள வர்ணம் கீழ் ஸ்தானத்திலுள்ள வர்ணமாகத திரிதல் விநாமம் ஆகும். எனவே விநாமத்தால் லகரம் ட, ணக்களில் ஒன்றுகவும், ளகரம் ட, ணக்களில் ஒன்றுகவும் திரியும். ட, ணக்களிலும், ட, ணக்களிலும் இன்ன எழுத்தாகத் திரியும் என்பதைப் பொருத்தத்தை வைத்துதான் முடிவு கட்ட வேண்டும். வருமொழி முதலில் வல்லெழுத்து வருமெனின் ட,

டக்களும், மெல்லினமெனின் ன, ணக்களும் ஆகும். லகர, ளகரங்களின் முன் வருக்க எழுத்துக்களில் எதுவரினும் முறையே ட, ணக்களாகவும், ட ணக்களாகவும் திரியும் என்பது திராவிட இலக்கண விதி. அவ்விதிப்படி தமிழில்,

விற்ககுக = விற்க்குக* விற்ப்பான் = விற்ப்பான்
தற்காலம் = தற்க்காலம் கேள்க்கிறன் = கேட்க்கிறன்

என விகாமம் வருதலுமுண்டு. ஆனால் மலையாளத்திலோ உருபுமுதல் தகரமோ மெல்லினமோ வந்தாலேயே விகாமம் வருதலுண்டு.

எ-டு: வில் + து = வீட் + து = விற்று அகல் + துன்னு = அகற்றுன்னு
நெல் + மணி = நென்மணி உள் + ம = உண்ம
கல் + மதம் = கன்மதம் நல் + நூல் = நன்னூல்

23. கரத்தின் முன்பு லாதேமம்
முன்பின் பொன் என்ன ஞவினு.

முன், பின், பொன் ஆகிய சொற்களின் இறுதி னகரத்தின்முன் வல்லினம் வரும்போது லகரமாய்த் திரியும்.

எ-டு: திருமுன் + காழ்ச்ச = திருமுல்ககாழ்ச்ச
பொன் + குடம் = பொல்க்குடம்
பின் + பாடு = பில்ப்பாடு

இது விகாமத்தின் முரணுகிய உன்னுமம்போல் தோன்றுகிறது. ஆனால் தமிழில் இங்கும் விகாமமே. பிற்ப்பாடு, பொற்க்குடம் என்பன தமிழ் வடிவங்கள.

24. அனுநாளிகம் ஆதேமம்
பின் ப்ரத்யய கரத்தினு;
கல்டாவுகள்க்கில்லிதத்ரே
அதிப்ரஸரம் என்னது.

ஒரு உருபின் முதலில் வரும் வல்லினம் மெல்லினமாய்த் திரியும். அவ்வுருபு கல் என்பதெனினும் உருபு முதலாகிய வல்லினம் டகரம் என்னும் மெல்லினமாய்த் திரிவதில்லை. இவ்விதிப்படிவரும் மெல்லினமாய்த் திரிதலுகு 'மெல்லினமாக்கல்' என்று பெயர் கொடுக்கப்பட்டிருக்கின்றது.

---

* றகர, டகர ஒற்றின்பின்னர் வல்லினம் இரட்டி வருதல் தமிழில் இல்லை.

எ-டு: பறஞ்சு = பறஞ்ஞு திங்து* = தின்னு
வலஞ்சு = வலஞ்ஞு குஞ்ஞுங்கள் = குஞ்ஞுங்ஙள்

'கல்' உருபு வருமெனின்,

தன் + கல் = தன்கல் (தங்ஙல் என்றன்று)
ராமன் + கல் = ராமங்கல் (ராமங்ஙல் என்று ஆவதில்லை)

உருபு டகர முதல் எனின்,

கண் + டு = கண்டு (கண்ணு அன்று)
உண் + டு = உண்டு (உண்ணு அன்று)

25. (a) மகாரம்தான் அனுஸ்வாரம்
ஸ்வரம் சேர்ந்நால் தெளிஞ்ஞிடும்.

(1) வர்க்க்யங்கள் பரமாய் வந்நால்
அதாதின் பஞ்சமம் வராம்.

(2) சமுச்சய நிபாதத்தில்
சேருந்நேரம் வகாரமாம்
பாவிப்ரத்யய மாவின்னும்
வகாரம் ப்ரத்யயே பரே.

(3) ப்ரத்யய ஸ்வரம் ஏல்க்கும்போள்
இரட்டிச்ச தகாரமாம்.

(4) த்தாதேஶத்தெ விகல்ப்பிக்காம்
ஒடென்னுள்ள விபக்தியில்.

அனுஸ்வாரம் என்று கூறப்படுவது சொல்லிறுதியில் வரும் மகரத்தையே. அதனோடு ஏதாவது உயிரைச சேர்த்து ஒலித்து நோக்கினால் அது மகரம என்பது தெளிவாகும் மரம் + அல்ல, மரம் + இல்ல என்பவையெல்லாம மரமல்ல, மரமில்ல என்றெல்லாமாவது வழக்கில் எய்துவதன்றே.

(1) இம்மகர உருவமாகிய அனுஸ்வாரத்தின்முன் வர்க்க எழுத்துக்கள்வரின் வரும் வல்லெழுத்தின் இனத்திற்பட்ட ஐந்தாம் எழுத்துத் தோன்றும். எ-டு:

வரும் + காலம் = வருங்காலம் சந்தம் + சேர்ந்த = சந்தஞ்சேர்ந்த
போகும் + தோறும் = போகுந் தோறும் பெரும் + பற = பெரும்பற

இதனை ஒருதலையாக இவ்வாறு எழுதல் வழகமன்று.

* தினறு என்றிருக்க வேண்டும்.

(2) இந்த அனுஸ்வாரத்தின்முன் எண்ணிடைச் சொல்லாகிய 'உம்' வரின் அது வகரமாய்த் திரியும். அதஜனப்போன்று 'உம்' என்ற எதிர்கால இடைச் சொல்லின் அனுஸ்வாரமும், வேறொரு விகுதி முன் வரின் வகரமாகும்.

எ-டு: தனம் +உம் = தனவும் கலம் +உம் = கலவும்
எல்லாம் +உம் = எல்லாவும் வாரம் +உம் = வாரவும்

இது மலையாளத்திலுள்ள ஒரு சிறப்பு ஆகும். தமிழில் தனமும், கலமும், எல்லாமும் என்பதே வடிவங்கள்.

எதிர்கால இடைநிலைக்கு எடுத்துக்காட்டு:

வரும் + அன் = வருவன் வரும் + என் = வருவென்
வரும் + அள் = வருவள் வரும் + இன் = வருவின்
வரும் + அர் = வருவர் வரும் + ஆன் = வருவான்
வரும் + ஓர் = வருவோர்

(3) உயிர்முதல் உருபுகளுள் ஏதாவது முன்வரும்போது இவ் வனுஸ்வாரம் இரு தகரமாகத் திரியும். அதாவது 'த்த்'[1] என்று மாறும்.

(4) ''ஓடு'' என்ற வேற்றுமை உருபு முன்வரின் ''த்த்'' எனத் திரிதல் விகற்பமாகும்[2] எ-டு:

துலாம் + இன்றெ = துலாதின்றெ தனம் + எ = தனத்தெ
தனம் + ஆல் = தனத்தால் தனம் + இல் = தனத்தில்
தனம் + ஓடு = தனத்தோடு (தனமோடு)

இத்திரிதல் வேறு சில இடத்தும் வரும்.

எ-டு: கவிகுலம் + அரசன் = கவிகுலத்தரசன்
ஆயிரம் + ஆணடு = ஆயிரத்தாண்டு

25. (b) *கள் ப்ரத்யயத்தின்று முன்பு ம னங்ஙள்க்கு ஸவர்ண்ணனம்.*

'கள்' என்ற பன்மை விகுதி முன்வரும்போது நிலைமொழியிறுதி மகர னகரங்களுக்கு ''ஔினமாதலால்'' ஙகரம் வரும்.

எ-டு: மரம் + கள் = மரங்கள் (மரங்ஙள்)
நின் + கள் = நிங்கள் (நிங்ஙள்)

---

1 த்த் என்பது தமிழில 'அத்து'சசாரியையாகக் கூறப்பட்டுள்ளது.
2 உடைமையும் இன்மையும் ஒடுவயின் ஒக்கும் (தொல். எழுத்து-133).

குளம்+கர=குளங்ஙர என்பது போன்று வேறு இடங்களிலும் இந்த ஓரினமாதல் காணப்படும். ஓரினமாதல் என்ருல் அடுத்துவரும் எழுத்துக்களில் ஒன்று பிறப்பிடம், முயற்சி ஆகியவற்றின் ஒற்றுமையால் அதற்குப் பொருந்திய எழுத்தாகத் திரிதல் என்பது ஆகும். நிலை மொழி இறுதியில், வருமொழியின் 'ஓரினமாதல்' வரின் அது பின் வரும் எழுத்திற்கேற்ப ஓரினமாதல் ஆகும். மாருக வருமொழி முதலில் நிலைமொழி இறுதியின் ஓரினமாதல் வரின் அது முன் எழுத்திற் கேற்ப ஓரினமாதல் ஆகும். இங்கு, ம-னக்களின் முன்வரும் ககரத்தின் ஓரினமாதலின் திரிபு ஆதலால் இது பின்வரும் எழுத்திற்கேற்ப ஓரினம் ஆகின்றது.

2. பதவியல்

வர்ணங்களே ஒவ்வொரு முறையில் கூட்டிச் சேர்க்கும்போது சொல் உண்டாகின்றது. அதன் தன்மை பின் விளக்கப்படுகின்றது.

26. அர்த்த யுக்தாட்சரம் ஸ்பதம்
அதே ப்ரக்ருதி என்னதும்.

ஒரு பொருளேக குறிப்பதற்காக வர்ணங்களேக் கூட்டிச் சேர்க்கும் எழுத்தின் கூட்டத்திற்குச் சொல் என்று பெயர். இச்சொல் பகுதி என்றும் வழங்கிவரப்படுகின்றது

எ-டு: கரிம்பு =க்+அ+ர்+இ+ம்+ப்+உ
செறுப்பம் =ச்+ஏ+ற்+உ+ப்+ப்+அ+ம்
புண்டரீகம் =ப்+உ+ண்+ட்+அ+ர்+ஈ+க்+அ+ம்

27. பதம் என்ருல் ப்ரயோகிப்பான்
ஸங்ஜ்ஞமாயுள்ள ஸ்பதமாம்.

உணவுப்பொருட்களில் சிலவற்றை நாம் வேகவைத்தும் சிலவற்றை வேகவைக்காமல் பச்சையாகவும் பயன்படுத்துவதைப் போன்று மொழியிலும் சில சொற்களே உருபு சேர்த்தல் முதலியவற்ருல் நாகரிகப்படுத்தியும், சிலவற்றை மாற்றம் இல்லாத இயற்கை நிலையிலும் வழங்குவதுண்டு. உருபு முதலியவை சேர்ந்தோ சேராமலோ வழங்குதற்கு ஏற்ற சொல்லிற்குப் ''பதம்'' என்று பெயர். எ-டு:

சொல்—	கரிம்பு	செறு	புண்டரீகம்	தர்	கிழவ
பதம்—	கரிம்பு	செறுப்பம்	புண்டரீகம்	தருன்னு தந்து தரும் தருக	கிழவன் கிழவி

28. வாசகம் த்யோகம் ரண்டு
விதமாம் ஶப்தம் ஒக்கவே.
த்ரவ்ய க்ரியா குணங்ஙள்க்கு
வாசகம் வாசகாபிதம்;
ஸம்பந்தத்தெ ஸ்புரிப்பிக்கும்
பதம் த்யோதகம் என்னது.

எல்லாச் சொற்களேயும் வாசகம், த்யோதகம்[1] என்று இரண்டு வகையில் அடக்கிவிடலாம். ஒரு பொருளேயோ, வினையையோ, குணத்தையோ நேரே சுட்டிக்காட்டுவன எல்லாம வாசகம். வெளிப் படையாக பொருள் உள்ளது வாசகம் என்பது பொருள். வெளிப் படையாக ஒரு பொருளைக் காட்டாது இரண்டு வெளிப்படைப் பொரு ளின் தொடர்பைக் குறித்தல் மாத்திரம் செய்வது த்யோதகம். குடம், விளக்கு, இரிக்குன்னு, திளங்ஙி, செறிய, வலிய முதலிய சொற்கள் கேட்கும்போது தனிப்பட்ட ஒரு பொருளின் தோற்றம் ஒன்று உண் டாகிறது. அதனுல் அம்மாதிரிச் சொற்களெல்லாம் வாசகங்களாகும். கொண்டு, உம், எங்கில், சே,[2] ஓ முதலிய சொற்களைக் கேட்கும்போது மனதில் தனிப்பட்ட ஒரு பொருளின் பிடி கிடைப்பதில்லை. வேறொரு பதத்தொடு கூட்டிச் சேர்த்து வழங்கும்போது மாத்திரமே இவ்வகை சொற்களிலிருந்து பொருட்சிறப்பு குறிப்பாய்த் தோன்றுகின்றது. அதனுல் அவ்வகைச் சொற்களெல்லாம் த்யோதகங்கள் எனப்படு கின்றன.

29. த்ரவ்யத்தின் வாசகம் நாமம்;
க்ரியா வாசகமாம் க்ருதி;
பேதகம் து குணக்யாயி
என்னு மூன்னிஹ வாசகம்.

வாசகம் என்ற வகையில்படும் சொற்களைப் பெயர், வினை, உரி என்று மூன்றுவகையாகப் பிரிக்கலாம். ஏதாவது ஒரு பொருளின் வாசகமாகிய சொல் பெயர் ஆகும். வினை வாசகமாக வருவது வினை. குணவாசகம் உரிச்சொல் உலகின் எல்லாப் பொருட்களும் பொருள், குணம், வினைகளில் ஏதேனும் ஒன்றில் அடங்கியிருக்கின்றதன்றே. அதனுல் வாசகசொற்கள் எல்லாம் பொருள் உருவ அடிப்படையில் பெயர் முதலிய மூன்றுவகைகளில் அடக்கப்படும் என்று பொருள்.

---

1 தயோதகம் = இடைசசொல்

2 இது சகரத்தின இரண்டாவது ஒலி

எ-டு: பெயர்—மனுஷ்யன், மரம், ம்ருகம், ராமன், க்ருஷ்ணன், எண்ண, வெள்ளம், ஞான், நீ, அவன், அவள், அது, ப்ராஹ்மணன், மாவு, புலி.

விஜ—போகுந்து, சாகுந்து, வரும், தரும், நின்னு, பறந்து.

உரி —கறுத்த, வெளுத்த, ஸுந்தரன், முண்டன், கூனன், கிழவன்.

30. ஸ்வாச்யமாய் வஸ்துவொன்னும்
குறிக்குன்னில்ல த்யோதகம்
விபக்த்யாதிகளேப் போலெ
யது ஸம்பந்த போதகம்.

இதன் பொருள் முன்னர் விளக்கப்பட்டுள்ளது.

31. நிபாத மவ்யயம் ரண்டு
வகயாம் த்யோதகம் பதம்
ஜாத்யா த்யோதக மாஜ்ஞத்யம்
பரம் ப்ரம்ஸிச்சு வந்நது.

த்யோதகம் என்றவகையில் அடங்கிய பதங்கள் நிபாதம், அவ்யயம் என்று இருவகைப்படும். அவற்றுள் நிபாதங்களெல்லாம் அவற்றின் தன்மையினுலேயே இடைச்சொற்களாகும். அவ்யயங்கள் பழங்காலத்தில் வாசகங்களாயிருந்த சில சொற்கள் காலப்போக்கில், எழுத்துக்குறைவு நிகழ்ந்தும், வேற்றுமையுருபு சேர்க்காது வழங்கி வந்தும், வாசகத தன்மையிழந்து இடைச்சொற்களாய்விட்டன. வாசகம் என்ற இனத்தினின்று தோன்றியவையெனினும் சில வேறுபாடு நேர்ந்ததால் அவ்வாசகத்தன்மைபோய் இடைச்சொல் இனத்தில் சேர்ந்த சொற்களே அவ்யயங்கள் என்பது சுருக்கம். பிராமண இனத்தில் பிறந்தவரெனினும் மாறுபாட்டால் சண்டாளனினத்தைச் சேர்ந்துள்ளவரைப் போன்றதே அவ்வியயங்களின் நிலே. எ-டு:

1. நிபாதம்—ராமனும் கிருஷ்ணனும் மிடுக்கன்மாராகுந்து.

இவ்வாக்கியத்தில் 'உம்' என்பது நிபாதம்; இந்த 'உம்' என்னும் சொல், ராமன், கிருஷ்ணன், மிடுக்கன் என்ற சொற்களேப்போன்று பொருள், விஜைத்தன்மைகளில்பட்ட ஒரு பொருளேக் குறிப்பதில்லே. ராமன், கிருஷ்ணன் என்ற சொற்களில் சேர்ந்து நின்றுகொண்டு எண்ணுப் பொருளேக் குறித்தல் மாத்திரமே செய்கின்றது. ''ராமனும் கிருஷ்ணனும்'' என்ற தொடரைக் கேட்கும்போது அவர்கட்கு ''மிடுகு'' என்ற பண்பில் தொடர்பு உண்டு என்று நாம் உணர்வது ''உம்'' என்பதன் ஆற்றலாலன்ரே. அதனுல் ''உம்'' என்பது

இடைச்சொல் என்பதை முடிவு செய்யலாம். இந்த உம் என்ற இடைச் சொல் ஆதியில் வாசகமாயிருந்த ஏதோ ஒரு சொல்லின் சிதைந்த வடிவம் என்று ஊகிப்பதற்கு ஒரு உத்தியும் காணப்படாததால் வழக்கு வசதிக்காக முதலிலேயே எண்ணுப்பொருளின் இடைச்சொல் என்ற நிலையில் தோன்றியதென்று நினைக்கவேண்டுவதால் தோற்றத்தி லேயே இடைசசொல்லாகிய நிபாதம் என்று முடிவு செய்யவேண்டும்.

2. அவ்வியம்—ராவணன் என்ன ராக்ஷஸன்.
மழ பெய்தில்ல; எங்கிலும் தணுப்புண்டு.

இச்சொற்றொடர்களில் என்ன, எங்கிலும் என்ற சொற்கள் ராவணன், ராக்ஷஸன், மழ, பெய்து, இல்ல, தணுப்பு, உண்டு ஆகிய சொற் களைப்போல ஒரு சுதந்திரப் பொருளைக் குறிக்காது, ராவணன், ராக்ஷ ஸன் என்ற சொற்பொருளை ஒட்டுவதையும் மழ பெய்தில்ல, தணுப் புண்டு என்ற வாக்கியப் பொருட்களின் வெளிப்பலடையாகிய சூழ்நிலை யில் ஒன்றுபடாமையையும் குறிப்பது மாத்திரம் செய்வதால் அவை தியோதகம் ஆகும். இச்சொற்களில் ''என்ன'' என்பது, செய்த, கேட்ட, பறஞ்ஞ முதலியவைகளைபோன்று ''என்'' என்ற ஒரு அடிச சொல்லின் பெயரெச்ச வடிவமென ஊகித்தற்குப் பெரிதும் வழிகள் காணப்படுகின்றன. ''என்னல'', ''என்னள்'' என்ற முறையில் உள்ள வினைவடிவங்கள் காணப்படுவதே இந்த ஊகத்தின் முக்கிய மான அடிப்படை. எனினும் ''அவன் செய்த தெற்று'', ''ராமன் பறஞ்ஞ கார்யம்'' என்றும் மற்றுமுள்ள இடங்களைப்போன்று ''என்ன'' என்பது ஒரு வினையைத தெளிவாகக் குறிப்பதில்லை. அத னல் பெயரெச்சதில் அடங்காத நிலை ஏற்பட்டுளது. அதனைப் போன்றே ''எங்கிலும்'' என்ற சொல்லும ''என்'' என்ற அடிச்சொல் லின் ஸம்பாவிக வினையெசச வடிவம் என்று ஊகிக்க வழியுளதெனி னும் ''செய்கில்'', ''வருகில்'' முதலிய ஏனைய வினையடிச் சொற்களின் வடிவம் போன்று ஒரு வினையைக் குறிக்காததால் அவ்வினையெச்சத்தி லடங்காத ஒரு நிலை ஏற்பட்டுள்ளது. இவ்வாறு அவ்விரண்டு சொற் களும் ''அவ்வியம்'' என்ற வகையில் அடங்குகின்றன.

32. விபக்தியெ விளக்குன்ன
த்யோதகம் கதி ஸம்ஞ்ஞிதம்
வாக்கியங்ஙளெக் க[1]டிப்பிக்கான்
உதகும் கடிகாபிதம்;
வ்யாக்ஷேபகங்ஙள் வாக்யார்த்தம்
போதிப்பிக்குமகண்டமாய்;
இது மூன்னும் கழிச்சுள்ளது
எல்லாம் கேவல ஸம்ஞ்ஞிதம்.

1 இந்த இரு ககரங்களும் முறையே ககரத்தின 3, 4-வது வருக ஒலிகள்.

தியோதகச் சொற்களை அவற்றின் வழக்கு அடிப்படையில் நோக்கின் கதி, கடகம், வியாட்சேபகம் என்ற மூன்றுவகைகளாகப் பிரிக்கலாம். ஏதேனும் ஒரு வேற்றுமையோடு சேர்ந்துநின்று அவ் வேற்றுமைப் பொருளைச் சீராதிருத்தும் தியோதகம் கதி எனப்படும். இரண்டு வாக்கியப் பொருட்களை ஒன்றோடொன்று இணைப்பது 'கடகம்'; மற்றெனறோடும் சேராது தானே ஒரு வாக்கியப் பொருளைக் குறிப்பாய் உணர்த்துவது வியாட்சேபகம். இந்த மூன்றிலும் உட்படாதது வெற்றிடைச்சொல். எடுத்துகாட்டுகள் :

1. கதி—கொண்டு, நின்னு, வெச்சு, ஊடெ முதலியன. ''வடி கொண்டு அடிக்குந்து'' என்ற வாக்கியத்தில ''கொண்டு'' என்பது தொகை வேற்றுமையாகிய ''வடியெ'' (வடியை) என்பதிலுள்ள இரண்டாம் வேற்றுமையோடு சேர்ந்து நின்று அடித்தல் என்ற வினையை நடத்துவதில் ''வடி'' கருவியாகின்றது என்ற பொருளை வெளிப்படுத்துவதால் அது கதியாகும். அதனைப்போன்றே ''மாளிக யில் நின்னு நோக்குன்னு'', ''ரிஷ்யரில் வெச்சு ராமனுன்னு ஸமர்த் தன்'', ''காட்டிலூடே போகுன்னு'' முதலிய வாக்கியங்களிலும் ''நின்னு'' முதலிய கதிகளின் வடிவங்களை அறிந்துகொள்க.

2. கடகம்—''ராமன்றேயும் கிருஷ்ணன்றேயும் கத'' எனச் சொல்லுமிடத்து ''உம்'' என்ற இடைச்சொல் ராமகிருட்டினர்களின் கதைகள் என்று கூறியிருப்பதையொத்து அவர்களை இணைக்கின்றது. அம்முறை பிலேயே ''ராமன்றேயோ கிருஷ்ணன்றேயோ கத'' என்ற வாகியத்தில் ''ஓ'' என்பது அவர்களுள் ஒருவரது என்ற விகற்பத தைக் காட்டுகின்றது. ''உம'', ''ஓ'' முதலியவை இவ்வாறு வாக்கி யத்திலுள்ள ஒரு சொல்லில் அன்வயித்து, முறையே வாக்கியப் பொருட்களுகு இணைப்பு விகற்பங்களைக் குறிப்பால் உணர்த்துத லால் அவை கடக*ங்களாகும்.

3. வியாட்சேபகம்—உவ்வு, அய்யோ முதலியவை. இவ்வகைச் சொற்கள் மற்றொரு சொல்லோடும் சேராது தனிப்பட்ட வாக்கியப் பொருளாக குறிகின்றன. எவ்வாறெனின்,

ஆசிரியர் : ராமா, நீ பாடம் படிச்சோ ?

ராமன் : உவ்வு ஞான் ராதரி முழுவனும் வாயிக்கயா யிருந்து.

---

* கடகம் = எணணிடைசசொல்.

இங்கு ''உவ்வு''[1] என்ற சொல் ''நான் பாடம படித்தேன்'' என்ற வாக்கியப்பொருளைக் குறிப்பால் உணர்த்துகிறது. அம்முறையிலேயே :

ஆசிரியர் : கள்ளம் பறயுன்னே? நின்னெ ஞான் இன்னலெ உத்ஸவ ஸ்தலத்து கண்டுவல்லோ.

ராமன் : அய்யோ, இன்னலெ ராதரி ஞான் வீட்டில் நின்னிறங்ஙிட்டில்ல.

இங்கு ''அய்யோ'' என்ற சொல் ''என்னை நேற்றுத் திருவிழா நிகழும் இடத்தில கண்டீர்கள்'' என்று கூறுவது எனக்கு மிகுந்த துன்பத்தைத தருவது என்ற வாககியப்பொருளை மொததமாகக் குறிப்பால் உணர்த்துகின்றது.

கதி, கடகம், வியாட்சேபகம் என்ற மூன்றுவகைகளிலும் உட்படாத சில சிறப்புப் பொருட்களைக குறிக்கும் தயோதகச் சொல் கேவலமாகும்.

எ-டு: ''ராமன் வன்னுவோ?'' இதனில் ''ஓ'' என்ற இடைச் சொல் வினுப்பொருளைக குறிகின்றது.

''ஈஸ்வரன் தன்னெ சரணம்'' இதனில் 'தன்னெ' என்பது தோற்றப் பொருளைக குறிப்பாலுணர்த்துகின்றது. இது 'தன்' என்ற பொதுப்பெயரின் வடிவமாதலால் அவ்வியமாகும்.

33. நாமாதியாம் விபாகத்தின்
எல்லாமர்த்தம் நியாமகம்.

இங்கு பெயர், வினை, உரி என்றெல்லாம் பிரித்தெடுப்பது அவ்வச் சொல்லின் பொருளின் தன்மையின் அடிப்படையிலாகும். அல்லாது இன்ன சொல்லை இன்ன பிரிவின்கண் அடகககலாம் என்ற பிரிவு வகை முறையிலன்று. அதனால் இலக்கணப் போககின் அடியொற்றி நோககினால் ஒரு சொல்லே சிலபோது பெயர் முதலிய பல வடிவங்களை முடையதாகக காணப்படும். எடுத்துககாட்டாக 'நல்' என்ற சொல்லை நோககுவோம். அதனெடு பலர்பால் விகுதியாகிய ''ஆர்'' என்பதைச் சேர்த்து ''நல்லார்'' எனப் பயன்படுத்தும்போது, அக ''நல்'' என்னும் சொல் பெண் என்னும் பொருளுடைய பெயராகும். ''ஊ'' என்ற எதிர்கால உருபு சேர்த்து ''நல்லூர'' என ஆகுமபோது ''நல்'' என்பது வினை.[2]

---

1 உவ்வு = ஆம.

2 தமிழில் ''நல'' வினையாவதிலலை.

34. நாமவும் க்ருதியும் தம்மில்
பேதம் ரூப நிபந்தனம்
பேதகம் க்ருதியும் தம்மில்
ரூப ஸாம்யவும் உண்டிஹ.

பெயர்ச்சொல், வேற்றுமைத் தொடர்பைக காட்டுதற்கு உருவம் மாறும. வினை காலம் குறிப்பதற்குக் கால உருபுகளை ஏற்று வினை முற்று, வினை எச்சங்கள் என்ற இரண்டு வழிகளில் உருவ வேறுபா டெய்தும. பெயர், வினை ஆகிய இரண்டும் வெவ்வேறு முறையின வாகையால் பெயர், வினை ஆகியவைகளுக்கு வடிவ வரிசையைப் பொறுத்த அளவில் ஒன்றற்கொன்று வேறுபாடுளது. உரிச்சொல் லிற்கோ வடிவ வேறுபாடு மிகுதியுமில்லை. சிறிது உளதெனின் அது வினையோடு ஒத்ததாகும். அதனால் வினைகும உரிச்சொல்லிற்கும் உருவத்திலும் ஒற்றுமை உளது. ''செறு'' என்ற பேதகப்பகுதியை ''செறுபயறு''* முதலியவைகளில் பயன்படுத்தலாம். வடிவ வேறு பாடு அமைக்கும்போது, மாறுக என்ற வினைககு மாறிய என்ற பெய ரெச்சம் அமைவது போன்று அது செறிய என மாறும்.

35. க்ருதி ஶப்தங்கள் தானேறும்;
நாமம் பின்னத பேதகம்;
ரண்டு மூன்னு நிபாதங்கள்
ஶேஷம் த்யோதகம் அவ்யயம்.

மேற்காட்டிய முறையிலமைந்த மூன்றுவித வாசகங்களில் மிக வும் அதிகமாயுள்ளன வினைசசொறகளே. அதனை அடுத்துப் பெயர்ச் சொற்கள், உரிச்சொற்கள் ஏனைய இரண்டுவகையிலுள்ளவற்றைவிட எண்ணிகையில் குறைந்தன. அதனைப் போன்றே தியோதகத்திலும் இரண்டோ, மூன்றோ சொற்கள் மட்டுமே நிபாதம் என்ற இனத்திற் படுமை ஏனையவெல்லாம் அவ்வியயங்களே.

36. ஸர்வத்தினும் நாமமாமய
நாமம்தான் ஸர்வ நாமமாம்.

எல்லாப் பொருட்களையும் ஒரொன்றுகவோ, எல்லாவற்றையும் சேர்த்தோ குறிப்பதற்குள்ள பெயரே ''ஸர்வநாமம்'' (பொதுப்பெயர்) என்று சொல்லப்பட்டு வருகின்றது. பொதுப்பெயர் என்பதும் பெயர் என்ற வகையில் உட்படுவதனால் இப்பொதுப் பிரிவில் அதனை வேரு கக கணககிட வேண்டியதில்லையென்பது பொருள.

* செறு – சிறு – செறுபயறு – சிறுபயறு

37. நாமாதி நாலினும் செய்யாம்
விபாகம் பல ஜாதியில்.

பெயர், வினை, பேதகம், நிபாதம் என்ற நான்குவகைச் சொற்களுக்கும் பலமுறைகளில் உட்பிரிவுகள் அமைக்கலாம். பெயர்கள் பொருட்பெயர், குணப்பெயர், வினைப்பெயர் என்ற மூன்று பிரிவிற் படும். பொருட்களைக் குறிக்கும் பெயர் பொருட்பெயர். ஆன, குதிர, ராமன், க்ருஷ்ணன், திரவியம முதலியன எடுத்துக்காட்டுகள். குணத்தைக் குறிப்பது குணபபெயர். அழகு, மிடுக்கு, நன்ம, வீட்டித்தம், குணம் முதலியவைகள் பேதகச சொற்கள் அவற்றின் பொருளுக்கு மற்றொரு சொற்பொருளின் குணத்தன்மையை (விசேடணமாகி நிற்கும் நிலையை)க் காட்டும். குணப் பெயர்கள் உலக சாதாரண புகழ் பெற்ற குணங்களை விசேடிய நிலையிலேயே குறிக்கும. இதுவே குணப்பெயர்களின் வேறுபாடு. வினையைக் குறிப்பது வினைப்பெயர். படிப்பு, களி, வரவு, உறக்கம் முதலியவைகள். இனிப் பொருட்பெயர்கள், சிறப்புப்பெயர். இனப் பொதுப்பெயர், பொதுப்பெயர், மேயப்பெயர் என நான்குவகைபபடும. ஒரு ஆளினை வேறுகக் குறிப்பிடுவது சிறப்புப்பெயர. இராமன், கிருஷ்ணன், கோவிந்தன், சங்கு, தாணு, லக்ஷ்மி, சிருதேவி முதலியன. ஒரு சாதியைக குறிப்பது சாதிப்பெயர். மனிதன், மிருகம், மரம், வள்ளி, பிராமணன், நாயர் முதலியவைகள். சாதியாட்களின் இலக்கணமோ,

ஒற்றயாய் பலதில் பற்றும் நித்யமாம் ஒன்னு ஜாதியாம்;
அதிலுள்ப்பெட்டதோரோன்னும் வெவ்வேறே வ்யக்தியாயது.

என்றுகும். முழுவதற்கும் பெயராய் வருவது பொதுப்பெயர். எல்லாம், ஒக்க, மற்று முதலியன. சாதி, தனியாள் என்ற வேறுபாடு கற்பிக்க வசதியில்லாது பொருட்களின் பெயராக வருவது மேயப்பெயர். நீர், மண், பொன், விண், காற்று முதலியவை. இவற்றில் ஸர்வநாமம் என்ற இனத்தில் சேர்ந்தவை எண்ணிக்கையில் குறைந்தவையே. மொத்தம் ஸர்வப்பெயர்கள் இத்துணை என்பது கீழ்காகாட்டப்படுகின்றது.

1 என்	தன்மைப்பொதுப்பெயர்	7 ஏ	வியாட்சேபகம்
2 நின்	முன்னிலைப் பொதுபபெயர்	8 யா	
3 அ	சுட்டெழுத்து அல்லது விவேசகப் பொதுப்பெயர்	9 ஏ	வினைப்பொதுப் பெயர்
4 இ		10 ஆர்	
5 உ		11 எது	
6 ஒரு		12 சில	நானாசர்வப்பெயர்
		13 பல	

14 இன்ன—விதந்துகூறி யுணர்த்தும் சொல்
15 எல்லா—முழுமையை யுணர்த்தும் சொல்
16 தன்—தன்மையை உணர்த்தும் சொல்
17 மிக்க—'அச்சவாசி'
18 மற்று—பிறிதையுணர்த்தும் சொல்
19 வல்ல—ஏதோவென்பதை உணர்த்தும் சொல்.

இனி வினைகளின் பாகுபாட்டு முறையைக காட்டுவோம். ஏதேனும் ஒரு பொருள் இன்னவிதத்திலிருக்கின்றதென்றே, இன்ன தொழிலைச் செய்கின்றதென்றே குறிக்கும் தொழிற்சொல்லன்றே வினை. இதனுள் ஒரு பொருள் ஒரு நிலையிலிருக்கின்றது என்ற வினைக்கு செயப்படுபொருள் இல்லாததால் அவ்வகை வினைகளெல்லாம் செயப்படுபொருள் குன்றிய வினைகளாகும். அதனுல் உறங்குதல், களித்தல், நிற்றல் முதலியவைகளெல்லாம செயப்படுபொருள் குன்றிய வினைகளாகும். ஒன்று ஒரு தொழிலைச் செய்கின்றது என்ற வினைக்குச செயப்படுபொருள் உள்ளதனுல் அவ்வகை வினைகள் செயப்படுபொருள் குன்ரு வினைகள். அதனுல் உண்ணுதல், குடித்தல். அடித்தல் முதலியவை செயபபடுபொருள் குன்ரு வினைகளாகும். இவ்வாறு பொருளடிபபடையில் செயப்படுபொருள் குன்ருவினை, குன்றியவினை என்றொரு வகைப் பிரிவு அமையும்.

(2) ஓடுதல, (ஓட்டுதல்), நிற்றல், நிறுத்துதல், காணுதல், (காட்டுதல்), தின்னல் தீற்று (ஊட்டுதல்) தல் என்ற அமைப்பிலுள்ள எல்லா வினைகளுகும் இரணடுவித வடிவங்கள் காணப்படுகின்றன. அவற்றுள் வேறு தூண்டுதல் இல்லாது கருத்தா தனியே தொழில் செய்யும் இடங்களில் முதல்வகை வடிவங்கள் பயன்படுதப்படுகின்றன. கருததா வேறொரு கட்டாயத்தினுல் தொழில் செய்யுமிடத்து இரண்டாம்வித வடிவங்கள் வரும். அவற்றில் ஓடுதல், நிற்றல் முதலிய வெறும் வினைகள் தன்வினைப் பகுதிகள். ஓட்டுதல், நிறுத்துதல் முதலிய தூண்டற்பொருள் சேர்ந்தவை பிறவினைப் பகுதிகள். இவ்வாறு பகுதிகளின் அடிபபடையில தனவினை அல்லது பிறவினை என அமைவது இரணடாம் பிரிவு.

(3) இனிச் சில வினைகள் பொருளோ நோக்கின் தன்வினைப் பகுதி என்றும், உருவததை நோகின் பிறவினைப் பகுதி என்றும் தோன்றும் வகையில் உள்ளன. பிறவினைப் பகுதியாகும்போது பெரும்பான்மை வினைகளுக்கு ''கு'' என்ற இடைநிலை சேர்க்க வேண்டுமென்பது முன்னருள்ள எடுத்துக்காட்டுகளினின்று தெளிவாகுமன்றே. அவ்வாறு பொருள் வேறுபாடில்லாது ''க்கு''

என்பதைச் சேர்க்கவேண்டிய தன்வினைப் பகுதியிலுள்ள வினைகளுக்குக் காரிதம் என்று பெயர். இச்சிறப்பு விதி இல்லாதவை அகாரிதங்கள்.

எ-டு: காரிதம் —கேள்க்குன்னு, நில்க்குன்னு, பிடிக்குன்னு, பறகுன்னு.

அகாரிதம்—அரயுன்னு, ஓலுன்னு, பிரியுன்னு, மறயுன்னு.

பிறவினை —அரப்பிக்குன்னு, ஒலிப்பிக்குன்னு, பிரிக்குன்னு, மறய்குன்னு.

இவற்றில் காரிதங்களிலும், பிறவினைப் பகுதிகளிலும் 'கக்' என்ற இடைநிலை இரண்டிலும் சோக்கப்பட்டிருகின்றது. ஆனால் காரிதங்களுகுப் பிறவினைப் பகுதிகளுக்குள்ளதைப்போன்று பிற தூண்டுதலால் செய்தது என்ற சிறப்புப் பொருளில்லை. இப்பிரிவு அதன் தன்மையின் அடிபபடையில் அமைந்தது.

(4) நான்காம் பிரிவு சிறபபினடிப்படையில் அமைந்தது. நமது உடம்பில் உடல் சிறப்புடையதும் ஏனைய கை, கால் முதலியவை அதன உறுபபுகளுமாகும் என்று பல்காலும் சொல்லப்படுவதுண்டன்ரோ. அதனைபபோன்றே வாக்கியங்களிலும் சில சொற்கள் சிறப்பும் வேறுசில சொற்கள் சிறப்பின்மையும் உடையனவாகும் என்று இலக்கண ஆசிரியர்கள் கூறுகின்றனர் பிரித்துப் பார்க்கும்போது வேறு சொற்களுகுச் சிறிதும் கீழடங்காத சொல் சிறப்புடையது. வேரொன்றிற்குக் கீழடங்குவது சிறப்பின்மை உடையது. இவ்வாறு சிறப்புள்ள வினைககு ''கரோதிகிருதி'' அல்லது முற்றுவினை என்று பெயர். சிறப்பின்மையுள்ள வினைகுக 'கர்வத்கிருதி' அல்லது பற்று வினை* என்று பெயர்.

எ-டு: முற்றுவினை—செய்யுந்து, உண்டு, போகுந்து, போகாவுந்து, போகணம்.

பற்றுவினை —செய்யுன்ன, உண்ட, போகுன்ன, போகாவுன்ன, போகேண்டும.

''ராமன் திருவனந்தபுரத்தேக்கு போகுநு'' என்ற வாக்கியத்தில் 'போகுந்து' என்ற வினை மற்றொரு சொல்லிற்கும் கீழடங்காது முகிய மானதாக நிற்கின்றது. அதனால் அது முற்றுவினை. ''திருவனந்தபுரத்தேகுகு போகுன்ன வள்ளம'' எனக கூறும்போது 'போகுன்ன' என்ற வினை வள்ளத்தின் அடையாகிக கீழடங்குவதால் பற்றுவினையாகும. இவ்வாறு சிறப்புடையன, சிறப்பில்லன ஆகிய வினைகளை அறிக

* எசசவினை.

இவற்றில் ஒவ்வொன்றிற்கும் உட்பிரிவுகள் உள. அவையெல்லாம் இங்கு விளக்கப்படவில்லை. எனினும் பற்றுவினைகளுக்குள் உள்ள உட்பிரிவு வேறுபாடுகளை இங்குக் கூறவேண்டும் ஒரு வினையின் கீழடங்கும் பற்றுவினை வினையெச்சமாகும்.

எ-டு: பறஞ்ஞு கேட்டு; தேசசு குளிச்சு;[1] முதலியன.

இங்கு பறஞ்ஞு என்பது கேட்டு என்ற மற்றொரு வினைக்கும் தேச்சு என்பது குளிச்சு என்ற வினைகளும் கீழடங்குவதால் வினையெச்சங்களாகும.

ஒரு பெயர்க்குக் கீழடங்கும் வினை பெயரெச்சம்.

எ-டு: பறஞ்ஞ கார்யம்; கொடுத்த வஸ்து.

இவற்றுள் பறஞ்ஞ, கொடுத்த ஆகிய வினைகள் முறையே கார்யம் வஸ்து ஆகிய பெயர்களுக்குக் கீழடங்குகின்றன என் அறிக.

பிற சொற்களின் பொருளில் வேறுபாடு உண்டாக்கும் சொல் பேதகம். பசு என்ற சொல்லால் அச்சாதியிலுள்ள ஒவ்வொரு பிராணியையும் உணரலாம். வெளுத்த பசு என்று ஒரு பேதகத்தைச் சேர்க்குமபோது, கரிய பசுவும், சிவந்த பசுவும் பிறவும் அச்சொற்றொடர்ப் பொருளில் உட்படாததால் அதன் பரப்பு சுருங்கிவிடுகின்றது. அதனால் வெளுத்த என்ற சொல் பசு என்ற பெயரோடு சேர்ந்து அதன் பொருளை வேறுபாடு செய்கின்றது என்பது தெளிவு. இம்முறையில் ஒரு சொல்லின் பொருளை வேறுபடுத்துதல் என்ற செயலுக்கும் விசேடித்தல் என்று இலகுகண ஆசிரியர்கள் பெயரிட்டிருக்கின்றனர். அதனால் பேதகத்திற்கு விசேடணம என்றும பெயர் கூறலாம். எனவே பெயரை விசேடிக்கும் சொல்லிற்குப் பெயர் விசேடணம் என்றும், வினையை விசேடிக்கும சொல்லிற்கு வினை விசேடணம் என்றும் அல்லது க்ருதிவிசேடணம் என்றும் பிறிதொரு பேதகத்தை விசேடிப்பதனைப் பேதகவிசேடணம் என்றும் இவை எல்லாவற்றிற்கும் பொதுவாக பேதகம் என்ற பெயர்கள் கொடுகக்பட்டிருகின்றன. பெயர் விசேடணதிற்கு எடுத்துகாடு முன்னே காட்டப்பட்டன. ஏனைய வற்றிற்கு,

முகம் செற்று வியர்த்து

இங்கு செற்று என்பது வியர்த்தல் என்ற வினையை விசேடிப்பதால் வினை விசேடணம்.

உடன் நடந்த ஸங்கதி

1 சொலலிககேட்டு, தேய்த்துக்குளித்து.

இதனில் ''உடன்'' என்பது ''நடந்த'' என்ற வினையின் விசேடணம்.

ஏற்றம் கறுத்த பசு; அல்பம் வளஞ்ஞ வடி

இவற்றில் 'ஏற்றம்' என்பது 'கறுத்த' என்ற பேதகத்தையும், 'அல்பம்' என்பது வளஞ்ஞ என்ற பேதகத்தையும் விசேடிப்பதால் 'பேதக விசேடணம்' ஆகும்.

பேதகங்களின் உட்பிரிவுகள் :

(1) தூயன : இது விகாரம் ஒன்றுமில்லாது நிற்கும் சொல் வடிவமே இதனைப் பெரும்பாலும் பெயரொடு தொகையாகச சேர்த்து வழங்கல் வழககம்

எ-டு: நல் -நன்முதது, திரு -திருமுகம், செம்-செநதாமர, வன்-வன்தேன், செறு-செறுபயறு.

(2) பொதுபபெயர் : தன்மையுடையது. இது பேதகமாய்ப் பயன்படுத்தும் பொதுப்பெயரே. இவற்றுள் ஆட்களை வேறுபடுத்திக் காட்டுதற்குப் பயன்படும் அ, இ என்ற ஒரெழுத்துகளுகுகு சுட்டெழுத்து எனறொரு சிறப்புப்பெயர் உண்டு. சுட்டிககாட்டும் எழுத்து சுட்டெழுத்து என்பது பொருள். ஆண்டு புறநாள்[1] என்பது மெல்லினம் மறைந்து ''ஆட்டப்புறந்நாள்'' என்றவது போல ''தூண்டெழுத்து'' என்பது ''சுட்டெழுத்''தாயிற்று.

எ-டு: அ-அவிடம் ஏ-ஏ மனுஷ்யன்
இ-இவிடம் எந்து-எந்து கார்யம்
ஒரு-ஒரு மனுஷ்யன் ஏது-ஏதுதிக்கு

(3) எண் : இது எண்களின் வடிவமுள்ள பேதகமே.

எ-டு: ஒரு-ஒரு பசு; இரு-ஈர்-இருபது, ஈரேழு; மு-மூன்னு-முககணணன், மூன்னுலோகம; நால்-நான்முகன்; ஐ-ஐயம்பன்.

(4) விபாகம் : இது ஒரு பொருளின் தன்மையை வருணிக்கும் பேதகமாம்.

எ-டு: ஸமர்தத — ஸமர்த்தனுய புருஷன்
,, — ஸமர்த்தயாய ஸ்திரீ
மிடுக்கு — மிடுகனுய புருஷன்
,, — மிடுகியாய ஸ்திரீ

---

1 ஆண்டுப்புறநாள் (வருடப் பிறநதநாள்) எனபது ஆட்டுபபுறந்நாள் என்றுகும்; மலையாளத்தில சூண்டுதல் எனபது சுட்டுதல்.

தடிய	—	தடியன்
,,	—	தடிச்சி
தோஷ	—	தோஷன்
,,	—	தோஷி
பொட்ட	—	பொட்டன்
,,	—	பொட்டி

இவ்வகைப் பெயர் விசேடணங்களுக்கு மட்டும் பால் வேறுபாடு உளது. இவை பெயர்களோடு நேராகச் சேர்வதில்லை. தொடர்பேற் படுத்துதற்கு இடையே 'ஆய' என்ற அவ்வியமும் பயன்படுத்த வேண்டியுளது. எடுத்துக்காட்டுகளில் இச்சிறப்பு காட்டப்பட்டிருப் பதை நோக்குக.

(5) அளவு : இது பரிமாணம என்று கூறப்படும் அளவைக் குறிக்கும் பேதகம்.

எ-டு: நாழியரி, இத்றநேரம், எத்றநெல்லு, ரண்டுதுடம் நெய்யு, ஒருபிடி எள்ளு, குறெ(றய) வெள்ளம்.

(6) பெயரெச்சத்தில் தோன்றியது : இது பெயரெச்சத்தையே பேதகமாய்ப் பயன்படுத்துவதாகும். எ-டு:

கெட்டிய பெண்	=	கெட்டுதல் என்ற வினையின் பெயரெச்சம்
பெற்றம்ம	=	பெறுதல் என்ற வினையின் பெயரெச்சம்
வெளுத்த பசு	=	வெளுத்தல் என்ற வினையின் பெயரெச்சம்
கறுத்த நூல்	=	கறுத்தல் என்ற வினையின் பெயரெச்சம்

(7) வினையெச்சத்தில் தோன்றியது : இது வினையெச்சத் தையே பேதகமாய்ப் பயன்படுத்துவது. இது மட்டும் வினையோடு முடிவதால் வினை விசேடணமாகவே வரும்.

எ-டு:	உறக்கெப் பாயுந்து	=	உறைத்தலின் வினையெச்சம்
	முறுகி கடக்குந்து	=	முறுகலின் வினையெச்சம்
	நீளெ ஓடுந்து	=	நீளுதலின் வினையெச்சம்
	கூடெப் போகுந்து	=	கூடுதலின் வினையெச்சம்

இப்பகுதியை முடிப்பதன் முன்னர் தமிழர்கள் சொற்களை எவ் விதம் பிரித்திருக்கின்றனர் என்பதை விளக்கல் பொருந்தும். பவணந்தி சொற்களுக்குப் பகுபதம், பகாப்பதம் என்ற பெரும் பிரிவு கள் அமைக்கிறார். பகுக்க முடிவது அதாவது விபாஜ்யம் அல்லது வ்யூத்பன்னம் பகுபதமாகும். பகுக்க முடியாதது அதாவது அவிபாஜ் யம் அல்லது அவ்யூத்பன்னம் 'பகாப்பத'மாகும். பகாப்பதங்கள்

பெயர், வினை, இடை, உரி(பேதகம்) என நான்கு வகையாக உள்ளன. பகுபதங்களைக் குறைந்தது இரண்டு பாகங்களாகவும், மிகுந்தது ஆறு பாகங்களாகவும் பகுக்கலாம். ஆறு உறுப்புக்களாவன :

1 பகுதி — பகுக்க முடியாத மூல தத்துவம்
2 விகுதி — உருபு, பகுதி இயல்புகளை விளக்கும் பாகம்
3 இடைநிலை — பகுதிக்கும விகுதிகளும் இடையே வருவது
4 சாரியை — இடைநிலையின் அங்கமாய்ச் சேர்வது
5 சந்தி — உறுப்புகள் சேரும்போது உளதாகும் சிறப்பு
6 விகாரம் — ஒலி வசதிகளாகச் செய்யப்படும வேறுபாடுகள்.

நடந்தனன் என்ற எடுத்துக்காட்டில்,

பகுதி—நட; விகுதி—அன்; இடைநிலை—த்; சாரியை—அன்;
சந்தி—த்; விகாரம்—தகரம நகரமாய்த திரிதல்.

நட + த் (ந) + த் + அன் + அன்.

இவற்றுள் சந்திக்கும விகாரத்திற்கும பெரிய வேறுபாடு இல்லாததால் அவ்விரண்டையும் ஒன்றாகவே வகுக்கலாம் அதனைப்போன்றே இடைநிலையின் பரிவாரமாதலால் சாரியை என்ற வேறொன்று தேவை இல்லை. இவ்வாறு நோக்கும்போது பகுதி, விகுதி, இடைநிலை என்ற மூன்றிலே இது முடியும். இவை மூன்றும் தம்முள் புணரும் போது உண்டாகும் மாறுபாடுகளெல்லாம் சந்தி. சொற்கள் புணரும் போதும் இது வருவதாதலால் தனியாகக் கூறவேண்டியதன்று. தமிழர்களின் பாகுபாட்டில் முக்கியமான ஸவாரஸ்யமின்மை கால உருபுகளை இடைநிலைகளாக்கிக் கலைய நேர்ந்ததாகும். சமஸ்கிருதத்திலுள்ள விகரண உருபுகளைப்போன்று உருத்தோற்ற வசதி தேடிக் கொடுத்தலே இடைநிலையின் சரியான செய்கை. ஆனால் தமிழில் பால் விகுதிகளின் முதன்மையால் கால உருபுகளை இடைநிலையோடு சேர்த்துக் கணக்கிடவேண்டி வந்தது. மலையாளத்தில் இவ்வசதியின்மை இல்லாததால் பகுதி உருபு இடைநிலை என மூன்றாகவே சொற்கள் பாகுபாடு செய்யப்படுகின்றன. சொற்பாகுபாட்டிலும் சிறிய சில வேறுபாடுகள் செய்யப்பட்டுள்ளன. பேதகத்தின் இடத்தில் வரும் உரிச்சொல்லிற்குத் தமிழர்களின் இலக்கணம முரண் ஆவதோடு, அவர்கள் அதற்குப் பொருள் தெளிவின்மையும் அமைதிருக்கின்றனர். இச்செய்தி பேதக அதிகாரத்தில் விரிதுரைகப்படும். தமிழர்கள் செந்தமிழாகே இலக்கணம் வகுத்திருகின்றனர். மலையாளமோ கொடுந்தமிழில் உட்பட்டதாதலால் மலையாள இலக்கண மரபு தமிழிலணக்கணத்திலிருந்து சில முகிய அம்சங்களில் வேறுபட்டே வர இடையுண்டு. இதனை தவிர்த தமிழர்களுக்கு ஐந்திர வியாகரணப்

பயிற்சியால் சம்ஸ்கிருதத்தைப் பின்பற்றிய குற்றம் சிலவிடங்களில் நிகழ்ந்துண்டு. நமக்கு முடிந்தவரை அக்குற்றம் நேராது பார்த்துக் கொள்ள வேண்டும். மேல்நாட்டினர் புதிதாக முயன்றுள்ள மொழி இலக்கணத்தின் ஆற்றலைப் பயன்படுத்தவும் வேண்டும்.

3. பகுதிவிகுதிகள்

38. *ப்ரத்யயத்தை ப்ரக்ருதியில்*
சேர்த்துண்டாகுன்னதாம் பதம்.
சிலப்போழிது ரண்டின்னும்
இடய்க்கு சில யக்ஷரம்
சேர்க்கேண்டதுண்டு இடநில
யென்னத்ரே பேரதின்னிஹ.
அதும் ப்ரக்ருதியும்கூடி
சேர்ந்நதின்னு அங்கமென்னு பேர்.

சொல்லின் உருவம் இங்கு விவரிக்கபபடுகின்றது. பகுதி என்ற சொற்பாகததில் உருபு சேர்ந்து சொல் உண்டாகின்றது. பகுதி, விகுதிகள் சேர்ந்த ஒலியுருவமே ''சொல்'' என்பது பொருள். இப் பகுதி விகுதிகள் தம்முள் சேருமிடத்துச் சில சொற்களில் பொருத்தத் தின் அழகிற்காக இடையில் சில எழுத்துக்களைச் சேர்த்து அழகு வரச் செய்யவேண்டி வரும். அவ்வகை மினுக்குப் பொடிகளாகிய எழுத்துக்களுக்கு ''இடைநிலை'' என்று பெயர். பகுதியும் இடை நிலையும் சேர்ந்துள்ள சொற்பாகத்திற்கு அங்கம் என்று பேர் கொடுக்க லாம். மரத்தின்றெ என்ற சொல்லில் மரம், இன், டெ என்ற மூன்று உறுப்புகள் உள. அவற்றுள் மரம் என்பது பகுதி; டெ என்பது உருபு. 'இன்' என்பது இடைநிலை. மரத்தின் என்ற பாகம் அங்கம். இவற்றின் உருவம இங்ஙனமாகும்.

39. *நாராய வேராம் ப்ரக்ருதி,*
தடியாம் அங்கம் என்னது;
ப்ரத்யயம் கவரம் போலெ
மேல்க்குமேல் உல்பவிப்பதும்.

பகுதிவிகுதிகள் அங்கம் ஆகியவற்றின் வடிவம் உவமைவழி விளகபபடுகின்றது. சொல்லை ஒரு மரமாகக கற்பனை செய்வதாயின், பகுதி என்பதை அம்மரத்தின் ஆணி வேராகக கணககிடலாம். அங்கம் என்பதை அம்மரத்தின் அடிமரமாகக கருதலாம். உருபுகள் ஒன்றின் மேல் ஒன்றுகச் சேர்ந்து நிற்கும் கிளைகளாகும்.

40. விபக்தி, லிங்கம், வசனம்
நாமங்ஙள்க்கு குறிக்கணம்;
க்ருதி காலாதியெக் காட்டான்
ரூப பேதங்ஙளேற்றிடும்;
நிபாத பேதங்ஙள்க்கு
ரூபபேதங்ஙள் வந்திடா.

பெயர்கள் என்ற இனத்திலடங்கிய சொற்களில் சேர்க்கப்படும் உருபுகள், பால் உருபு, எண் உருபு, வேற்றுமையுருபு என மூன்று வகையுள. அவ்வகை உருபுகள் சேர்ந்து பெயர்களுக்கு மரம், மரங்ஙள், மரங்ஙளெ முதலிய உருவ வேறுபாடுகள் உண்டாகின்றன. விஜனச்சொற்களில் காலம் முதலியவைகளைக் காட்டும் உருபுகள் சேர்ந்து வீணு, வீழுந்து, வீழும் முதலிய உருவ வேறுபாடுகள் உண்டாகின்றன. பேதங்களுககு இம்மாதிரி உருபுகள் சேர்ந்த வடிவ வேறுபாடுகளொன்றும் அமைவதில்லை.

2. பெயரதிகாரம்

1. பாலியல்

41. நாமார்த்த வஸ்துவின் னுள்ள
பும்ஸ்த்ரீ க்லீபங்ஙள் லிங்கமாம்
ஜடஜந்துக்களும் க்லீபம்
பும்ஸ்த்ரீ பேதம் விவக்ஷயால்.

ஆண், பெண், அலி என உலகில் நன்கறியப்படும் பாகுபாடே மொழியில் பால் எனக் கூறப்படுகின்றது. ஸமஸ்கிருதத்திலும் பிற வற்றிலும் பாலிற்கு வரையறை இல்லை. அறிவில் பொருட்களாகிய கிண்டி,[1] குடம் முதலியவை சமஸ்கிருதத்தில் அவள் எனவும் அவன் எனவும் பொருள்படும் ஸா, ஸ: என்ற சொற்களால் வழங்கப்படு கின்றன மலையாளத்தில் பாற்பாகுபாடு பொருளைப் பின்பற்றியதாத லால், மிகவும் பொருத்தமாயமைந்திருக்கிறது. பகுத்தறிவில்லாத விலங்குகள் தொடங்கிய உயிர்கள் கூடமலையாளத்தில் அலிப்பாலில டங்கும். ஆண், பெண் என்ற இரு பாகுபாடுகளைப் பகுத்தறிவு என்ற உணர்வு உள்ளவர்களில் முகியமாகக் கணிக்கவேண்டும் என்பதும், மனிதனைப் பொறுத்த அளவில் பகுத்தறிவற்ற உயிர்களையும் அஃறிணைப் பொருட்களாய்க் கணக்கிடுவதால், அவற்றில் ஆண், பெண் வேறுபாடு வகைவைப்பதில்லை என்பதும் அதன் உத்தியாகும்.

42. அகாராந்தத்தினே உள்ளு
லிங்கபேதம் ப்ரதானமாய்
அதும் தாலவ்யமாணெங்கில்
இல்ல பூஜயிலென்னியே
வேறெ ப்ரயோசனம் காணும்
மற்றுள்ளேடத்து சேர்க்குகில்.

அகர இறுதிச சொற்களில் மட்டுமே முக்கியமாகப் பால் விகுதி சேர்க்கவேண்டியதுளது. அகர இறுதியிலும அண்ண ஒலியாகிய அகர இறுதிச் சொற்களில், பால் வேறுபாடு இலலை. ஆனல் மரியா தையைக குறிகசக சிலவிடஙகளில் அவ்வகைச் சொற்களோடும் பால் விகுதி சேர்ப்பது உண்டு. ''தந்தயான்'', ''தள்ளயாள்'' முதலியவை

1 கிண்டி = கெண்டி

எடுத்துக்காட்டுகள். அகர இறுதி இல்லாத சொற்களில் பாலுருபு காணப்படுகின்ற இடத்திலெல்லாம் ஒலி வசதியோ வேறு ஏதேனுமோ ஒரு பயன் காணப்படும் வக்கீலன்மார், திருமுல்ப்பாடன்மார்[1] முதலிய சொற்களை வக்கீல்மார் திருமுல்ப்பாடுமார் என ஒலிப்பது இடர்ப்படுமாகலின் ''அன்'' என்ற ஆண்பால் விகுதி சேர்க்கப்படுகின்றது. சமஸ்கிருதத்திலும் அகரம், ஸகரம, தகரம் ஆகிய சில இறுதிச் சொற்களில் மட்டுமே முக்கியமாகப் பால் வேறுபாடு உளது. முனி–முனிவன், உச்சைஃச்ரவஸ் – உச்சைஃச்ரவஸன் முதலிய இகர ஸகர இறுதிப் பெயர்களில் பால் விகுதி பழைய நூற்களில் காணப்படுகின்றது அதன் பயன், முகியத்துவதைதக கணகிற்கொண்டதாகுமென அமைதி கொள்ளலாம். திருமுல்ப்பாடன்மார், வக்கீலன்மார் முதலியவற்றில் தனி ஆள் பற்றிய கருததும் உளது. திருமுல்ப்பாடு என்பது பதவிப் பெயர். பதவியை மட்டும் குறிக்கும்போது ஆள் பற்றிய குறிப்பு இல்லையாதலால் எண் வேண்டா பன்மையையும் காட்டவேண்டுமெனின் திருமுல்ப்பாடன் என ஒருமை விகுதி சேர்தது ஒரு ஆளைக குறிப்பிட்டு, அதன் மேல் பன்மையைக குறிப்பதற்கு மார் சேர்க்கப்படுகினறது. அங்கும் ஆண்களை மடடுமல்ல, பெண்களையும் சேர்தது இனத்தைக கூறவேண்டுமெனின் ''திருமுல்ப்பாடர்'' என்று ஆண் பெண் பாலற்ற பலர்பால் சேர்க்கப்படும். ஒருவனைக் கூறுவதெனினும், ''இவன் ஒரு திருமுல்பபாடனணு'' எனக் கூறலாம். அவ்வாறு கூறும்போது அந்த ஆளினைக் குறித்துப் புறக்கணிப்புத் தோன்றும். பால் எண் விகுதிகளின்றி பதவிப் பெயர் மட்டும் குறிப்பிட்டால் போதும் என்றிருகையில், ''அன்'' சேர்ப்பதால் இயல்பாகவே பதவிப்பெயர் உள்ள ஒரு ஆள் இவர் என்று பொருள் படுவதால் முதன்மை–ஆளுகைசேரும். அதிலிருந்து பதவிகை அவா தகுதியற்றவர் என்று தொனிகைகும். பால், எண் முதலிய உபாதிகளைக் காட்ட அடையாளம் இன்றியமையாத இடங்களில் மட்டும் போதும் என்பது திராவிட மொழிக் கொள்கை. இத் தத்துவம் ''பும்ஸ்த்ரீகள்கும் லிங்க பேதம் வேண்டு துர்வஜ்ஜமெங்கிலே'' என்ற நூற்பாவிலேயே வற்புறுத்தப்படும்.

43. அனியம் (அன்–இ–அம்) தனி நாமத்தில்
லிங்கப்ரத்யய மாவிது;
அனள்து (அன்–அள்–து) ஸர்வ்வ நாமத்தில்
பும்ஸ்த்ரீ சாதாரணத்திலும்.
ஆனுள்துவென்னு தீர்க்கிக்கும்
ஆக்யாதத்தில் தொடுக்குகில்.

1 திருமுலப்பாடு = கேரளத்திலுளள ஒரு கூத்திரிய சாதி.

இந் நூற்பாவில் பால் விகுதிகளுக்கு விதி வகுக்கப்படுகின்றது. தனிப்பெயர் = பொதுப்பெயர்களில்லாத பெயர், தனிப்பெயரில் ஆண் பாலிற்கு ''அன்'' என்றும் பெண்பாலிற்கு ''இ'' என்றும், அலிப் பாலிற்கு ''அம்'' என்றும் விகுதிகள் வரும். பொதுப்பெயர்களை வேறுபடுத்துவதற்குத் தனிநாமம் என விதந்து கூறப்பட்டது.

எ-டு: ஆண் —கேமன், கள்ளன், குமாரன், குட்டன்
பெண் —கேமி, கள்ளி, குமாரி, குட்டி
அலி —கேமம், கள்ளம்.

மூவீடப்பெயர்களில் ஆண்பாலிற்கு ''அன்'' என்றும், பெண்பாலிற்கு ''அள்'' என்றும், அலிகு ''து'' என்றும் விகுதிகள் வரும்.

எ-டு: அவன் அவள் அது இவன் இவள் இது
யாவன் யாவள் யாது ஏவன் ஏவள் ஏது

ஆண்-பெண்ணைக் குறிகும் சாதாரணச் சொற்களிலும் ''அன்'', ''அள்'' என்ற இரண்டுமே விகுதிகள்: மகன், மகள்.

வினைமுற்றுக்களின் இறுதியில் வரும்போது இந்த 'அன்', 'அள்' ஆகிய ஆண் பெண் விகுதிகள் நீண்டு 'ஆன்' எனவும் 'ஆள்' எனவும் ஆகும். அலிக்கு வேறுபாடின்றி ''து'' என்பதே விகுதி.

எ-டு: வநநான், போயான், சொல்லினான், இரிக்குன்னான்
வந்காள், போயாள், சொல்லினாள், இரிக்குன்னாள்
வந்நுது, போயிது.

44. ஆனுள் என்னுள்ள பும்ஸ்த்ரீகள்
சேர்க்காம் பூஜயிலேதிதும்;
பூஜாதிக்யத்தில் ஆர் என்னும்
வசனம் மாறி வந்நிடாம்.

மரியாதையைக் குறிகும் இடங்களில், எல்லாச் சொற்களிலும் ஆண்பாற் சொல்லில் 'ஆன்' எனறும பெண்பாற் சொல்லில் 'ஆள்' என்றும் விகுதி சேரும். மிகுந்த மரியாதையைக் குறிக்குமிடத்து இரணடு பாற்சொறகளும பலர்பால் விகுதி சேர்ககப்பட்டு 'ஆர்' என வரும். எ-டு:

தநதயான், தள்ளயாள், தந்தயார், தள்ளயார், ஸ்வாமியார், கம்பினியார், குட்டயான், தட்டான், மாரான், விட்டியான், மொட்டயான், ஆசான், வாத்யார், தம்புரான்.

45. அத்தி யென்னு சிலேடத்து
காரன் காரத்தி யென்ன போல்
தாலவ்யாதேஶவும் காண்க
தடியன்னு தடிச்சி போல்.

ஆரூன்னோள் என்னர்த்தமாய
ஶப்தம் தான் ஆட்டியாயது
புந்நபும்ஸகமாயிட்டும்
அன்தான் க்ருத்தத்திதங்களில்.

சில சொற்களில் பெண்பால் விகுதி ''த்தி'' என வரும்.

எ-டு: ஆண் —பணிக்காரன் பப்படகாரன் தைருகாரன்
பெண் —பணிக்காரத்தி பப்படக்காரத்தி தைருகாரத்தி

முன்னர் உள்ள எழுத்து அண்ண ஒலியெனின், இந்த ''த்தி'' என்பதில் உள்ள தகரம் அண்ண ஒலியாகி சகரமாகத்திரிந்து ''ச்சி'' என முடியும்.

எ-டு: ஆண் —தடியன் செட்டி மடியன்
பெண் —தடிசசி செட்டிச்சி மடிச்சி

தம்புராட்டி முதலிய சொற்களில் காணப்படும் ''ஆட்டி'' என்பதும் இந்த ''த்தி'' என்பது சேர்ந்து உண்டாகிய உருவமே. ''ஆள்'' என்பதற்கு ''ஆள்கின்ற'' என்பது பொருள். ஆள் + த்தி என்பதில் தகரம் இடையண்ண ஒலியாகத் திரிந்து ஆள் + ட்டி எனவும், பின்னர் ளகரமும் அண்ண ஒலியாய்த் திரிந்து ''ஆட்டி'' எனவும் முடிந்திருக்கின்றது.*

''க்ருத்'' இறுதிச் சொற்களிலும், தத்தித இறுதிச் சொற்களிலும் அலிப்பாலிற்கும் ''அன்'' என்ற பால் விகுதியே வரும். எ-டு:

தெக்கன்—மனுஷ்யன்; பாஷ
கோட்டாறன்—மனுஷ்யன்; சரககு
துவரன்—துவர்வது
துரப்பன்—துரப்பது

கூனன்—கூனலுள்ள மாடு
தடியன்—தடியுள்ள மரம்
வளவன்—வளையுள்ள கம்பு
ஊககன்—பலமுள்ள மதில்

46. நபும்ஸகம் அலிங்கம் தான்
அதின்னு குறி எந்தினு ?
பும்ஸ்த்ரீகள்க்கும் லிங்க பேதம்
வேண்டு துர்வ்வர்ஜ்ஜ மெங்கிலே.

---

* ததி என்பது 'ட்டி'யாகததிரியின் ளகரம கெடுதல வேண்டும். எனவே புணர்ச்சியில் ள + த்தி எனபது 'டடி' எனத திரிகினறது எனலாம.

அம்மென்னு சொன்னததினுல்
அங்கத்தின் குறியாய் வராம்
அனக்கமாட்டம் இத்யாதி
பாவருபங்ஙள் நோக்குக.

வீபக்த்யாபாஸம் ஆயிட்டும்
அத்து வொன்னினெ வெய்க்கணம்
அதினுலங்ஙு இடநில
ஆகுமின் போலெ அத்துவும்.

மேற்காட்டப்பட்ட பால் விகுதிகளின் வடிவங்கள் பற்றி இங்கு ஆய்வு செய்யப்படுகின்றது அவற்றுள் முதலிலேயே ''அம'' என்ற அலிப்பால் விகுதி குறித்துச் சிந்திக்கப்படுகின்றது. உலகில் பெண் எனவும் ஆண் எனவும உள்ள வேறுபாடனுசரித்து, ஆண், பெண் பால்கள் ரயதுகின்றன. இவை இரண்டுமல்லாதது அலிப்பால் எனக் கூறப்பட்டு வருகின்றது. எனவே பாற்பாகுபாடு இல்லாதது அலி என வகுதெய்தும் அகுகிலையில் பாற்பாகுபாடில்லாதனெக குறிப்பதற்கு ஒரு பால் விகுதியைச் சேர்க்கவேண்டிய அவசியமேயிலலை. பால் விகுதி ஒன்றுமே சோகுகப்படாதிருப்பதனுலேயே அலி என உணரவேண்டும் நுணுகி நோகுகும்போது ஆண, பெண்பால் விகுதிகளுக்கூட, பயன்படுததும சொல்லின் பொருள் ஆணை, பெண்ணை என்பது வேறுவிதததில் உணரமுடியுமிடததுச் சேர்ககவேண்டிய அவசியமில்லை: ஆண், பெண் முதலிய சொற்களே இதற்கு எடுத்துக் காட்டுகள் இவ்வாறு ''அம்'' என்ற ஒரு அலிப்பால் விகுதியை ஏற்றுகொள்ளவேண்டியதில்லையாதலால் மரம், பாலம், குடம முதலிய அலிப்பாற் சொற்களில் காணப்படும 'அம்' என்ற பாகம் ''அங்க விகுதி''* என்று கொளவது பொருந்தும்; அல்லாது பால் விகுதியன்று என்பது டாகடர் கால்டுவெலலின் கருதது. மரதனெ, மரத்தால் என்றும மற்றுமுள்ள இரண்டு முதலிய வேற்றுமைகள் சேர்ந்த சொற்களில் ''அம்'' உருபு காணுதிருப்பதும அது பால்விததி அல்லாதிருப்பதனுலாகும் ராமனெ, ராமனுல், மகளெ, மகளால் முதலிய ஆண், பெண்பாற் சொற்களில் பால்விகுதிகளின்பின் வேறறுமையுருபு சேர்ந்திருகும்போது அலிப் பெயரில் மடடும் அவ்வாறு இலலை எனக கூறப் பொருத்தமும் காணப்படவில்லை அனகுகம, ஆட்டம முதலிய தொழிற்பெயர்களில் ''அம்'' என்பது பால்விகுதியன்றென்பது தெளிவன்றே அவற்றில் காணப்படும் ''அம'' என்ற பாகம் 'அணங்குதல்' முதலிய வினைகளினின்று ''தொழிற்பெயர் விகுதி'' என்ற பெயர்

* பகுதிப பொருளவிகுதி.

உருகொள்வதற்குள்ள விகுதியாகும். மரத்தால் முதலிய சொற்களில் ''அத்து'' என்ற, உறுப்புணர்ச்சிக்காகச் சேர்க்கப்படும் இடைநிலை யாகும். மரத்தின்றெ, மரதினு முதலிய இடங்களில் ''இன்'' என் பது இடைநிலையாகுவதுபோன்று 'அத்து' என்பதும் இடைநிலையே. இவ்வாறு இடைநிலையாக 'அத்து' வரும் என்பதற்கு வேற்றுமைப் போலிகளில் வரும் காற்றத்து,[1] வெயிலத்து,[2] மழையத்து முதலிய சொற்களும் துணைசெய்கின்றன. காற்று, வெயில், மழ முதலிய சொற்களிலிருந்து ''அவையுள்ள இடத்தில்'' என்ற பொருளில் ஏழாம் வேற்றுமையின் இடத்தில் ''அத்து'' என்ற ஒரு உருபு வருகின்றது என்றன்றே கொள்ளவேண்டும். அதனைப் போன்றே மரத்தால், மரத்தின்றெ முதலிய இடங்களில் இடைநிலையாய் ஒரு ''அத்து'' வரு கின்றது என்று கொள்வது பொருத்தமாயிருக்கின்றது.

47. அம்ப்ரத்யயம் தந்த்யனுந்தம்
ஆயிருந்நெங்கில் நன்னஹோ
காராதேஶம் இரட்டிப்பும்
கொண்டு கார்யம் பலிச்சுபோம்.

அனுஸ்வாரம் மநங்ஙள்க்கு
கண்டிட்டுண்டு ஆர்யபாஷயில்
தத்ஸாம்யத்தால் அவிடெயும்
அன்தானம் என்னிருந்நிடாம்
தமிழில்த்தன்னெ கடமும்
கடனும் வந்நதெங்ஙனெ ?

மரம், பாலம் முதலிய அலிச் சொற்களிலுள்ள 'அம்' என்பது பால்விகுதியோ, அங்கப்பகுதியோ என்ற காரியத்தில் இந்நூலாசிரி யரின் கருத்து இதுவாகும். ''அம்'' என்பது பால் விகுதியேயாகும். மரத்தெ, மரத்தில் முதலிய இடங்களில் 'அம்' என்பதில் அனுஸ்வாரம் ''த்த்'' எனத திரிந்திருக்கின்றது. அதனால் பால்விகுதியின் பின்னரே அலிப்பாலிலும் வேற்றுமையுருபு வருகிறது. மரத்தின்றெ, மரத்தில் முதலியவற்றில் வேற்றுமையுருபின் முன் ''அத்'' என்பதைச் சேர்த்து அங்கம் உண்டாக்கப்பட்டிருக்கின்றது எனக் கூறுவதில் பொருத்த முளதெனினும், மரம் என்ற வேற்றுமையுருபில்லாத முதல் வேற்றுமை வடிவததின் இறுதியில் ஒரு உறுப்பு விகுதி வந்து சேர்ந்திருப்பதால்

1 வெயிலத்து, முதலியவைகளில் வரும் அத்து ஏழாம் வேற்றுமைப் பொருளுள்ளது ஆனால் எல்லாப் பெயர்களோடும் சேர்ந்து வருவதில்லை எனவே அது விபக்த்யா பாசம் வேற்றுமைப்போலி எனபபடுகினறது

2 தொல. எழுத்து:

ஒரு சிறப்பும் எய்துவதில்லை என்பது மாத்திரமன்று. இறுதியில் அங்க உருபு (இடைநிலை) வருவதற்கு ஒரு பொருத்தமும் காணப்பட வில்லை. ஆனால் அலிப்பால் விகுதியாய்க்க காணப்படும ''அம்'' என் பது ஆதிகாலத்தில் ''அந்ந'' ஆகவிருந்தது என்றும் பின்னர் நகரம் அனுஸ்வாரமாக மாறிவிட்டது என்றும கருதுவது பொருத்தமாய்த் தோன்றுகின்றது ''கூவளத்தின் வேர'' என்பதைக ''கூவளததும் வேர்'' எனக் கூறுவது சாதாரணமானதன்றே அதில் னகரத்திற்குப் பதில் அனுஸ்வாரம் ஒலிக்கும நிலைபோல், நகரத்திற்கும் அனுஸ்வார ஒலி ஏற்படவேண்டும. இவ்வாறு ஆதியில அலிபபால் விகுதி ''அந்'' ஆகியிருந்தது என்று ஆகும்போது, மரததை, மரததால் முதலியவை கள் ''அந்'' என்பதன் நகரம் அதன் வல்லொலியாய்த திரிந்து தகரம் ஆபிற்று என்றும் அததகரம் பின்னா இரட்டிற்று என்றும் கொண்டால போதும மெல்லெலி அதன் வல்லொலியாய்த திரிதல் என்பது தொகைச சொற்களில்கூட சாதாரணமாகக காணப்படுகின்றது. (ஆண்டு+பிறநாள்) ஆட்டபபிறந்நாள்;[1] செப்புக்குடம், செப்பேடு முதலியவை எடுத்துககாட்டுகள். இரட்டிய வல்லினமாய்த திரிதல் முக்கியத்துவமின்மையைக் குறிப்பாய் உணர்ததும். அதுவும் இங்கு பொருந்தும். முககிய காரணதைதக் குறிககும் முதல் வேற்றுமையில் 'தத' எனத் திரிவதில்லை. முககியதுவமிலலாத ஏனைய வேற்றுமை களில் இது வருகின்றது. இனி நகரத்திறகு அனுஸ்வாரம் ஒலி வேற்றுமையால் வருவதொன்றே என நோககினுல் அதுவும் நிகழ்வ தொன்றுயிருக்கின்றது. சமஸ்கிருதத்தில் மகரதைதப்போல நகரத் திற்கும் அனுஸ்வார ஒலி புணர்சசியிற்கூடக் காணப்படுகின்றது. தாந+தாந=தாம்ஸ்தாந். தனிச்சொல்லிலும் ரம்+ஸ்யதே=ரம்ஸ்யதே என்பது போன்று, மந்+ஸ்யதே=மம்ஸ்யதே என முடிகின்றது. அத னுல் சமஸ்கிருததைதப் போன்று மலையாளத்திலும் ''அந'' என்ற விகுதி ''அம்'' என்றுகியதென்று கொள்வதே பொருத்தம. இக் காரணத்தாலேயே மொழியிடையில் மகர[2] நகரஙகளுக்கு ஒலியொற் றுமை வருமென்பது வெளிப்படையன்றே. தமிழிலேயே கடம், பலம் முதலிய சொற்சளுககு கடன், பலன் முதலிய வடிவங்கள் நாட்டு வழக்கு மொழியிலும காணப்படுகின்றன. இதற்குக் காரணம் காட்டுவ தற்குப் பலனாதி[3] அலிப்பாலில் ''அம்'' எனவும் ''அன்'' எனவும் விகுதி வருமென விதிககின்றார். அதனுல் ஆதிகாலத்தில் அலிப்பாலில்

1 ஆட்டப்பிறநாள்—ஆண்டிலுள்ள பிறநத நாள் ஏழாம் வேற்றுமையுருபும் பய னும உடன் தொக்கத்தொகை செப்புகுடம், செப்பேடு முதலியன மூன்றனுரு பும் பயனும் உடன் தொக்கத்தொகை.

2 மகர, னகரப்போலி.

3 நன்னூல சூததிரம ?

''அங்'' என்பதே விகுதியாகவிருந்ததென்றும் அது காலப்போக்கில் ஆண்பாலினின்று வேறுபாட்டைத் தெளிவாக்குவதற்கு நகரம் அனுஸ்வாரமாய்த திரிந்து 'அம்' என ஆகுகப்பட்டதென்றும் பலன், கடன் முதலியவைகள் பழைய மரபின் எச்சங்களென்றும் ஊகிக்க நல்ல வழியுளது ஆனால் 'அந்' என நகரமாயினன்றே இரட்டித்த வல்லினமாய்த் திரிதலால் ''அத்து'' என்பது தோன்றும். கடன், பலன் என னகரமன்றே காணப்படுகின்றது என்ற வினவிற்கு விடை தரப்படுகின்றது.

48. பதாந்தத்தில் நனங்ஙள்க்கும்
ரறங்ஙள்க்கும் ஸமம் த்வனி.

தமிழில் கடன் என்பதில் இறுதி எழுத்து னகரமன்று, நகரமே.[1] மொழியிறுதியில் வரும ரகரததிற்கும், றகரததிறகுமு அவர், மகளர், சார், ஆர (தண்ணீர்) முதலியவைகளுகுகும் ஒலியொற்றுமையுள்ள தைப்போன்று னகர நகரங்களுகுகும மொழியிறுதியில் ஒலியொற் றுமை வந்துளது. மலரு, நீரு முதலிய சொற்கள் குற்றியலுகரம் சேர்ததுச் சொலலப்படும்போது ரகர இறுதிச சொற்களெனத தெளி வாகின்றதெனினும், குற்றியலுகரமில்லாது சில்லாக நிற்கும்போது மலர், நீர் என்றல்ல, மலற்.[2] நீற் என்றே உச்சரிக்கப்படுகின்றன. அகரத்தின் முன் அனுஸ்வாரம் வரின் அதனைத் தகரமாகவே கணிகக வேண்டுமென வேறு சான்றுகளினின்றும தெளிவாகும். துலாம்—துலாத்தில், ஸலாம்—ஸலாததின்றெ, எல்லாம்—எல்லாததிலும் முதலி யன. இதனுல் ''அம'' என்ற அனுஸ்வாரத்தில் பொருததமாகிய மிகுதல் யாதெனினும், அநத அனுஸ்வாரம் ''த்த'' எனத திரிந்து வருவதில் யாதொரு தடையுமில்லை. அதனுல் எங்ஙனமாகினும், ''அதது'' என்ற ஒரு அங்க விகுதியைத தனியாகக் கொள்ளவேண் டிய தேவையில்லை. இருட்டத்து, மழயத்து என்ற வேற்றுமைப் போலிகளில் காணபபடும் அத்து என்பதும 'அம்' என்பதிலிருந்தே தோன்றுகின்றது. அம் சேர்ககப்படுவதோ, ''அது உள்ள இடம'' என்ற பொருளாக குறிககவேண்டியே. மடியுள்ளவன் மடியன் என்ற ஆண்பாற் சொல்லின் அன் விகுதியைப் போன்று அலிப்பாலில் ''அம்'' விகுதி வரவேண்டிவது நியாயமன்றே. ''மழையுள்ள இடத் தில்'' என்பதே மழயத்து என்ற வேற்றுமைப போலியின் பொருள். ''சில்'' ஆகிய மகரததோடு குற்றியலுகரம் சேரும்போது ''தத்'' ஆகும் என்று சில்லுகளாக குறித்த ஆய்வில கூறியதையும் நோகுக.

1 பொருந, வெரிந ஆகிய இருமொழிகளிலேயே 'ந்' இறுதியில் வரும் (தொல. எழுத்து–79)

2 தமிழ இலக்கணப்படி இவை குற்றியலுகரங்களல்ல

அங்கும் ஹிதமொடு,[1] ஹிதத்தொடு என்ற விகற்ப வடிவம் காணப் படுவதால் அனுஸ்வாரம் 'த்த்' எனத் திரியும் என்ற விதி வலுப்பெறு கிறது.

இனி மேற்கூறிய பால்விகுதிகளின் தோற்றத்தைக் குறித்தும் சிறிது விளக்குவோம் ''ஆண்'' என்ற சொல் வடிவமே ''அன்'' என்ற ஆண் பால்விகுதியாக மாறியிருகின்றது ஆண் என்ற ஆண் பாற் சொல்லாகிய ஆதி திராவிடச் சொல், தமிழ் மலையாள மொழிக ளில் குறிலாகவும, ணகரம் னகரமாகத திரிந்தும (இது சிறிதும் அரி தன்று) ''அன்'' என்ற ஆண்பால விகுதியாய் விட்டது. தெலுங்கில் ''டு'' சேர்ந்து, (இதுவும அரிதன்று. வேண்—வேணடுன்னு, வேண் டும் முதலியவற்றை நோகுக) ''வாண்டு'' என்றாகியது தெலுங்கில் அவன் = வாண்டு, சின்னவன் = சின்ன வாண்டு. கன்னடத்தில் உகரம் சேர்ந்து ''அரு'' என்றாகியது கன்னடதில் அதர் (அவன் தரு) என்ற பாலற்ற பன்மையில் டகரத்தின் அம்சம் காணப்படுகின்றது. நகரத்திற்குப் பதில் மகரம் பெற்று ''அம்'' என்ற வடிவம கன்னடத் தில் அமைகின்றது. குறிலிலலாது ஆன் என்றே தமிழ் மலையாள மொழிகளில் காணபபடுகின்றது. ஆசான், வாத்யான் முதலியவற்றை நோக்குக. விஜ வடிவங்களிலோ செய்தான், செய்தாள் என முழுவ தும் நீண்டேயுளது. அம்முறையிலேயே ஆள் என்ற சொல் வடிவம் ''ஆள்'' என்ற பெண்பால் விகுதியாய் விட்டது. ஆள் என்பது இக் காலத்தில் ஆண், பெண் பொதுச் சொல்லாகிவிட்டதெனினும் ஆதி காலத்தில் அது பெண்ணைக் குறிகும் சொல்லாகவே இருநதது என ஊகிப்பதற்குப் பெண்ணைக் குறிக்கும சொற்களோடு சேர்ந்து கமனி யாள், சுந்தரியாள், அன்ன நடையாள் என்ற வழக்குகள் காணப்படுவ தும், ஆணைக் குறிகும் சொற்களோடு சேர்நது காணப்படாதிருப்ப தும், பொதுவாகப பொருததத்தைக காடடுகின்றது. தமிழில் அனு பவம் என்ற பொருளுடைய ''து'' என்ற அடிச்சொல்லே அலிப்பால் விகுதியாய் பரிகணித்திருகக வேண்டுமென்பது இந்நூலாசிரியரின் கருதது. தான் தனியே ஒன்றும் செய்ய இயலாது, அறிவுடைய உயிர்கள் செய்வதையெல்லாம அனுபவித்துகொண்டிருப்பதன்றே சடப்பொருளின் தன்மை. அதனால் அனுபவம் என்ற பொருளுடைய ''து'' என்ற அடிச்சொல்லிற்கு அலிப்பால் விகுதிததன்மை பொருந் தும். ''இ'' என்ற பெண்பால் விகுதியும் சமஸ்கிருததிலிருந்து வந்து எய்தியதாகவிருக்கலாம். சமஸ்கிருததில், ''கர்தரீ'' ''மனஸ்வினீ'' முதலியவற்றில் காணப்படும் ஈ என்ற பெண்பால் விகுதியை

1 மனமொடு, மனத்தொடு என வருவதைபபோன்று ''உடைமையும் இன்மையும் ஒடுவயின ஒக்கும்''. தொல. எழுத்து 133.

மலையாளப்படுத்தி ''இ'' என ஆக்கியதே வேறுபாடு போஷி, மிடுகி, கள்ளி, முட்டி முதலிய மலையாளப் பெயர்களிலும் ''இ'' விகுதி பயன்படுத்தப்படுகின்றதினும், பெரிதும் சமஸ்கிருத பெயர்களோடே அது வழங்கிவருகின்றது. தகரம சேர்ந்த ''தி'' என்ற பெண்பால் விகுதி திராவிடத்திலுள்ளதே. தெலுங்கில் இதுவே பெரும்பான்மை பெயர்களிலும் பெண்பால் விகுதி; ஆனல் தெலுங்கில் அலிப்பாலிற்கும் இதுவே விகுதி. ஒருவன், ஒருத்தி, குறவன், குறத்தி முதலியவற்றில் ''தி'' விகுதி இரட்டித்தலோடு தமிழ் மலையாள மொழிகளில் சாதாரணமாய்க காணப்படுகின்றது.

அன், அள், து ஆகிய மூன்றும் பாலைக் குறிப்பதோடு எண்ணையும் குறிக்கின்றன. ஒருமையைக் குறித்தற்கு வேறு விகுதியில்லை. கோமன், கோமன்மார், மகள், மகளிர். ஆனல் அன் என்று பெயருக்கும் மூவிடப் பொதுப் பெயருக்கும் பொதுவாய் அமையும்போது, அள், து ஆகிய இரண்டும் மூவிடப் பொதுப்பெயருக்கு மட்டுமே வரும். அள் என்பது மகள் என்ற ஒரு பெயரில் மாத்திரம் காணப்படுகின்றது. ''து'' அவ்வளவு கூட இல்லை பெயர்களில் முறையே அன், இ அல்லது தி, அம் என்பன பால்விகுதிகள். மூவிடப் பொதுப்பெயர்களுக்கு அன், அள், து ஆகியன பால்விகுதிகள். அன், அள் ஆகிய இரண்டிற்கும் பொதுவாக ''அர்'' என்ற பலர் பால்விகுதி ஒன்றே. ''து'' என்ற ஒன்றன்பாலிற்கு ''அ'' என்பது பன்மை விகுதி. எனவே,

அன் —ஆண்பால் ஒருமை எண் விகுதி
அள்—பெண்பால் ஒருமை எண் விகுதி
து —அலிபபால் ஒருமை எண் விகுதி

அர்—ஆண் பெண் பலர் பால் விகுதி
அ —அலிப்பால் பன்மை விகுதி

ஆனல் இப்போது அதுகள், இதுகள் என வழங்கத்தொடங்கிய நிலையில் பொதுப்பெயரிலும் கோமன்மார், கோமிகள் என்ற ஆண், பெண் பெயர்களைப் போன்று பால்விகுதியும் எண் விகுதியும் தனித்தனியே வரும் என்பதும் பெறப்படுகின்றது.

2. எண்ணியல்

நாம் ஏதேனும் ஒரு பொருளைக் குறித்துப் பேசும்போது அப் பொருள் ஒன்றோ அதிகமோ என்று காட்ட, அப்பொருளைக் குறிப்பிடும் சொல்லில் ஏற்படுத்தும் வடிவ வேறுபாடே எண் ஆகும். சமஸ்கிருதத்தில் ஒருமை, இருமை, பன்மை என மூன்று எண்கள் உள்ளன. திராவிட இன மொழிகளில் இருமை எண் இல்லை. ஒன்றைக் குறிப்பது

ஒருமையெண். அதனில் மிகுதியைக் குறிப்பது பன்மையெண். இதுவே எண்களின் இயல்பு.

49. ஸ்வம் ரூபம் ஏகவசனம்
ஸலிங்கா லிங்க பூஜகம்
என்னு மூன்னு பஹுத்வத்தில்
இரட்டிச்சிட்டு மாமிது.

சொல்லின் சுய உருவமே ஒருமையெண்ணாக காட்டுகின்றது. ஆனால் பால்விகுதி உள்ள இடத்தில் அவ்விகுதியோடுள்ள சுய வடிவமும், அது இல்லாத இடதது சொல்லின் சுய உருவமும் ஒருமை எண்ணாக குறிக்கின்றதென்பது பொருள். ஒருமையெண்ணாக குறிக்கத் தனியாக விகுதி இல்லை என்பது கருத்து.

எ-டு: ராமன், ஸீத, காடு.

பன்மையெண் மூன்றுவிதங்களில் உள்ளன. பால் வேறுபாடுள்ள பன்மை, பால் வேறுபாடற்ற பன்மை, மரியாதைப் பன்மை யென்பன அவை. ஒரே சொல்லிலேயே இப்பன்மை விகுதிகள் ஒன்றின் மேற்பட்டு வரலாம. ஆண், பெண், அலிகளில் ஏதாவது ஒன்றின் பன்மையை குறிப்பது பால் வேறுபாடுள்ள பன்மை. இரண்டும் கலந்து எழும் பன்மையைக் குறிப்பது பால் வேறுபாடற்ற பன்மை ஒரு ஆளிணை மரியாதைகாகாகப் பன்மையாகக குறிப்பது மரியாதைப் பன்மை.

இனி இப்பன்மை விகுதிகளைக் குறித்து விதிகள் அமைக்கப் படுகின்றன :

50. அர் என்ன லிங்க பும்ஸ்த்ரிகள்க்கு
அவய்க்கே மார் ஸலிங்கமாம்,
க்லீம்பத்தில் கள் சேர்ச்ச போலெ,
பூஜகத்தின்னு மூன்னுமாம்
அ என்ன ஸர்வ்வ நாமத்தில்
நபும்ஸக பஹுக்குறி.

ஆண்களும் பெண்களும் கலந்தெழும பன்மையைக் குறிக்கும் பால் வேறுபாடற்ற பன்மை விகுதி ''அர்'' என்பதாகும்.

எ-டு: மிடுக்கன் —மிடுகக்கன்மார்
மிடுக்கத்தி—மிடுக்கத்திமார் } மிடுக்கர்

சுத்ரன் —சுத்ரன்மார்
சுத்ரத்தி—சுத்ரத்திமார் } சுத்ரர்

வேலக்காரன் —வேலக்காரன்மார்
வேலக்காரத்தி—வேலக்காரத்திமார் } வேலக்காரர்

ஆண்களோ பெண்களோ தனிததனி சேர்ந்துண்டாகும் பன்மையைக் குறிக்கும பால் வேறுபாடுள்ள விகுதி பொதுவாக ''மார்'' என்பதாகும். எ-டு:

ராமன்—ராமன்மார், நம்பூரி—நம்பூரிமார், தட்டான்—தட்டான்மார்
அம்ம —அம்மமார், பார்ய—பார்யமார், தள்ள —தள்ளமார்

அலிப்பாற் பொருட்கள் ஒன்றிலதிகம் சேர்ந்துண்டாகும் பன்மையைக் ''கள்'' என்ற விகுதி குறிகும்.

எ-டு: மல—மலகள், ஆன—ஆனகள், மரம்—மரங்ஙள்

உண்ணிகள், குட்டிகள், வேலகாரத்திகள் முதலியவற்றில் 'கள்' என்ற விகுதி காணப்படுவதன் காரணம் பின்வருமாறு: இளமை முதலிய காரணங்களால் அறிவுடைமை முழுமையடையாத நிலையில் புறக்கணிப்பால் அலிப்பால் தன்மையாகிய சடத்தன்மையை குறிக்கும் வழக்காகும். மரியாதையைக் குறிக்க மேற்காட்டப்பெற்ற மூன்று பன்மை விகுதிகளையும் பொருந்துமிடத்துப் பயன்படுத்தலாம்.

எ-டு:	பட்டன்	பட்டர் (உயர்ந்த பட்டன்)
	நீ	நிங்ஙள்
	மாரான்	மாரார்
	தட்டான்	தட்டார்
	தம்புரான்	தம்புராக்கள்-தம்புராக்கன்மார்
	ராஜாவு்	ராஜாக்கள்-ராஜாக்கன்மார்
	பிதாவு்	பிதாககள்-பிதாக்கன்மார்

''அ'', ''இ'', ''எ'' முதலிய சுட்டுவினுப் பெயர்களின் பன்மை எண்ணிக குறிக்க ''அ'' விகுதி வரும.

எ-டு:
அ + அ = அவ
இ + அ = இவ
எ + அ = எவ
சில
பல

இனி எண் விகுதி சேரும்போது உண்டாகும் சிறப்பு விகுதிகள் காட்டப்படுகின்றன.

51. (1) ரலோபம் அர்-கள்-சேரும்போள்
காணும் ஶிஷ்யகள் என்ன போல்,

(2) பெங்ஙள் ஆங்ஙள யென்னெல்லாம்
ஏகத்தில் பஹுரூபமாம்

(3) ஓஷ்ட்ய ஸ்வரம் முன்பிருந்நால்
கள் ககாரம் இரட்டியாம்

(4) ஸங்க்யா விஶேஷணம் சேர்ந்நால்
க்லீம்பே வேண்ட பஹுக்குறி,
ஜடமப்ராணி என்னுள்ள
விஶேஷங்ஙளும் ஓர்க்கணம்.

(1) ''அர்'', ''கள்'' என்ற இரு விகுதிகள் சேர்க்து வரு மிடத்து, அர் என்பதிலுள்ள ரகரம் பழைய காலத்தில் குன்றிப் போயிருந்தது.

எ-டு:	பன்மையெண்	ரகரம குன்றிய வடிவம்
	ஶிஷ்யர்கள்	ஶிஷ்யகள்
	பட்டர்கள்	பட்டகள்

(2) பெங்ஙள்,[1] ஆங்ஙள் முதலிய சொற்கள் உடன்பிறந்தாள், உடன்பிறந்தான் ஆகிய ஒரு ஆளை மாத்திரம் குறிப்பனவும், ஒருமை எண் வேண்டியவிடத்து, அவற்றோடு தனிப் பன்மை விகுதி சேர்ததுப் பயன்படுத்தப்படுபவையுமாகிய சிறப்பு வடிவங்களாகும். இவ்வகைச் சொற்கள் பன்மையால் சிறப்பிகக்படுமபோது, 'பெங்ஙன்மார்', 'ஆங்ஙளமார்' என ''மார்'' விகுதி சேர்ந்தே வரும்.

(3) 'கள்' என்ற விகுதியின் முன் வரும் எழுத்து இதழுயிர் ஆகுமிடங்களிலெல்லாம 'கள்' என்பதன் ககரம இரட்டும்.

எ-டு: ப்ராதாகக்ள, ராஜாக்கள, குருகக்ள், பூக்கள், கோக்கள்.

(4) எண்ணிக குறிக்கும் ஒரு விசேடணம் உள்ள இடத்து அலிப்பாற் சொற்களில் பன்மையிலும பன்மை விகுதி சேர்ககவேண்டி யதில்லை.

எ-டு: 'பதது ரூபா'; 'ஆயிரம் தேங்ஙா'; 'எட்டுதிக்கு'.

இவ்வாறன்றி 'பத்து ரூபகள்', 'ஆயிரம் தேங்ஙகள்' என்றெல்லாம் வழங்குவது மொழியின் தன்மைகுப் பொருந்துவதன்று. அலிப்பா லன்றெனின் 'நாலு ப்ராமணர்', 'அஞசு ஸ்த்ரீகள்' என்று பன்மை

1 பெணகிளை, ஆணகிளை.

விகுதி சேர்ந்தே வரும். அலிப்பாவிலும் ஒவ்வொரு பொருளையும் தனித்தனி குறிகளுமிடங்களில்,

> ''ஶங்கம், சக்றம், கதா, பங்கஜம் இவ விலஸும் நாலு த்றுக் கைகளோடுய''

எனப் பன்மை விகுதி சேர்ந்த வழக்கு காணப்படுகின்றது. அதனைத் தவிர அலிப்பாலிலேயே பகுத்தறிவு இல்லாத மிருகங்களையும் மற்றும் குறிகளும் சொற்களுக்கும் உயிரில்லாத கல் முதலியவற்றைக் குறிக்கும் சொற்களுக்கும் இடையில் இதனில் வேறுபாடு உளது. உயிருடைப் பொருளெனில், 'பத்துப பசுகள்', 'ஆயிரம் தேனீச்சகள்' எனப் பன்மை விகுதி சேர்ப்பதற்கும், 'பத்துப் பசு', 'ஆயிரம் தேனீச்ச' எனச் சேர்க்காதிருப்பதற்கும் தடையில்லை. 'பத்து கல்லுகள்', 'நூறு நூலுகள்' என்பவை மொழிக்குச் சிறிதும் பொருந்துவனவல்ல.

இனி சர்வ நாமங்களுக்குச் சிறப்பு விதி கூறப்படுகின்றது.

> **52.** *என் ஏன் யான் நான் க்ரமால் ஞான் ஆய்;*
> *நீ, தான், தீர்க்கிச்சு வந்நதாம்;*
> *உத்தேஶிகா ப்ரத்யயத்தில்*
> *ஸ்வரயோகம் ஸுகார்த்தமாய்;*
> *தனிக்கு எனிக்கு இகாரத்தால்*
> *அகாரத்தால் நினக்கும் ஆய்.*

தன்மைப் பொதுப் பெயரின் விகுதி ''என்'' என்பதாகும். அது முதல் வேற்றுமையில் பலத்திற்காக நீண்டு முதலில் ''ஏன்'' என ஆயிற்று. இவ்வடிவம் இன்னும் திருத்தமடையாத மொழிகளில் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. பின்னர் உயிர் முதற் சொற்களோடு ''ய'' சேர்க்கும் தமிழ மரபுப்படி ஏன் என்பது யான் என மாறிற்று அதன் பின்னர் யகரத்தினிடத்தில் நகரம் (யமன் = நமன்) வருவது தமிழில் மிகுதியாதலால் யான் என்பது நான் என்ற உருவதைக் கொண்டது. தமிழில் இன்றும் வழங்குவது இதுவே. பின்னர் ''நெருக்கம்'' என்பது ''ஞெருக்கம'' ஆவதைப் போன்று ''நான்'' என்பது ''ஞான்'' எனவாயிற்று. என் = ஏன் = யான் = நான் = ஞான்.

முதல் வேற்றுமை தவிர உள்ள வேற்றுமைகளிலெல்லாம் 'என்' என்பதே ஒருமை எண் 'நின்' என்ற முன்னிலையும், தன்னை குறிக்கப் பயன்படுதலும் 'தன்' என்ற சொல்லும் முதல் வேற்றுமையில் நீ, தான் என நீண்டுள்ளன நான்காம் வேற்றுமையில் ஒலி வசதிக்காக என், தன் ஆகிய இரண்டோடு இகரமும, நின் என்பதோடு அகரமும் (உயிரும்) சேர்க்கப்படுகின்றன. ''எனிக்கு'', ''தனிக்கு'',

''நினக்கு''. இது மலையாளத்திற்குரிய சிறப்புச் செய்கைகள். தமிழில் எனக்கு, தனக்கு, நினக்கு என அகரமே மூன்றிலும் மிகுந்தது.

இவையெல்லாம் ஒருமை எண்ணைக் குறித்த செய்திகள். இனி இவற்றின் பன்மை எண்ணின் சிறப்புகளாவன :

(1) (அ) என் + கள் = எங்கள் = எங்கள் = எஙஙள்

(ஆ) ஞான் + கள் (குறில் வர) ஞங்கள் = ஞங்கள் = ஞங்ஙள்

இவையிரண்டிற்கும் பொருள் ஒன்றே அதாவது ''நானும் அவனும்'' என்ற தன்மைப் படர்க்கை சேர்ந்த பன்மை எண். இவற்றுள் எங்ஙள் என்பது இழி மொழி, ஞங்ஙள் என்பது உயர் மொழி என வழக்கில் வேறுபாடு உளது. இவை இரண்டிலும் ''ன்'' என்ற சில்லு ''அன்'' என்ற ஒருமை விகுதியின் எச்சமாகக கணிக்கப்பட்டிருகின்றது. இவ் மூவிடப் பொதுப்பெயர்களில் னகரம் ஒருமை எண்ணையும் மகரம் பன்மை எண்ணையும் குறிக்கும். அதனால் 'நான்' என்ற பழைய உருவத்திலிருந்து,

(இ) நாம் = நாஂ என்ற பன்மைச சொல் தோன்றும்

இது அதிகாரத்தையும் மற்றும் காட்டும் மரியாதைப் பன்மையாகும். இதனை ''நோம்'' எனவும் சில வட்டாரதினர் மாற்றுவதுண்டு. அங்க உருவத்தில் இது தங்ஙள் என்பதைப் போன்று குறில் பெற்று ''நம்ம்'' எனவாகும. நோம் என்பது அப்போது ''நுமம்'' என்று மாகும். நம்மை, நும்மை, நமுகது, நுமுகது (இவற்றில் உகரம் சேர்ந்துளது) நம்மில், நும்மில் முதலியன. இனி ''நமம'' என்பதில் ''கள்'' சேர்த்து ககரததை முன் ஒரினமாககல் செயது,

(ஈ) நம் + கள் = நம்மள் (இரு பனமை விகுதிகள்) என வரும்

இதில் ஞான், நீ. அவன் என்ற மூன்று இடங்ஙளும சேர்ந்தது என்ற பொருளில் சிறப்பு அமைகின்றது.

(2) ''தன்'' என்ற தன்னைச சுட்டும் சொல்லும், இதனைப் போன்றதே (அ) தங்ஙள், (ஆ) தாங்கள், (இ) தம்மள், (ஈ) தாம் (தோம்) என்ற உருவஙகள் அமையும. இவற்றுள் 'தாங்கள்' என்ற ஒரினமாககலில்லாத உருவம் புதியதும், முனனிலையைக் குறிககும் மரியாதைப பன்மையும் ஆகும். 'தாம' (தோம்) என்ற முதல் வேற்றுமை வடிவம் இபபோது வழககிலிலலை. ஏனையவெலலாம பரியாய வடிவஙகளே. பொருள் வேறுபாடில்லை.

(3) ''நீ'' என்ற முதல வேற்றுமை ஒருமைச சொல்லில் ''ன்'' என்ற ஒருமை விகுதி இலலையெனினும ஏனைய வேற்றுமைகளில்

எல்லாம் ''ன்'' சேர்ந்த நின்னெ, நின்னுல் முதலியவைகளே உருவங் கள். பன்மையில் நிங்ஙள் என்ற ஒரு சொல்லே வழக்கிலுளது. ஒரு மைச் சொல்லோடு ''கள்'' என்ற விகுதியைச் சோத்து (ஞங்ஙள் என் பதைப் போன்று) முறையே வந்த வடிவம் அது என்பது தெளிவு. 'நின்' என்ற ஒருமை விகுதியாகிய னகரததைப் பன்மை விகுதியாகிய மகரம் ஆகினும் அவ்வடிவம் சரியே. கன்னடத்தில் ''நீம்'' என்று, முறையே அமைந்த வடிவம் காணப்படுவதால் நிம்+கள் = நிங்ஙள் என்றே செய்கை கற்பிப்பது நன்று.

இமமூன்று இடப் பொதுப்பெயர்களும் எல்லா திராவிட மொழி களுகுமு பொதுச் சொத்தாகும் இவற்றின் சரியான பழைய வடிவம் இன்னதென்று இன்னும் முடிவு செய்யப்படவில்லை. ''என்'' என்ற வடிவமோ, ''யான்'' என்ற வடிவமோ வரலாற்றுப்படி பழைய வடிவ மாகவிருகுகலாம் என்று கால்டுவெல் பெரிதும் ஐயுறுகின்ரூர். இங்குக் காட்டப்படும் பரிணும வரிசை ''மலையாளத்தைப் பொறுத்த அளவில் சரியானது'' என்பதே உளது. அதற்குக் குண்டர்ட்டின் உடன்பாடும பெரிதும் உள்ளது. 'நீ', 'நான்' என்ற இரண்டிலுமுள்ள நகரம் விஜை முற்று வடிவங்களில் காணப்படாதலால், அது பகுதியின் அம்சமன்று. பின்னர் சேர்ந்ததென ஒரு ஊகம் உண்டு. எனவே ஆ, ஈ என்பன முறையே தன்மை முன்னிலைப் பொதுப்பெயர்களின் பகுதிகள் என வரும். அவ்வாறெனில் அவை சுட்டெழுத்துகளின் வேட வேறு பாடுகளெனத் தெளிவாகும். ஆனுல் 'ஆ' என்ற சுட்டெழுத்து சேய் மையையும், 'ஈ' என்பது அண்மையையும் சுட்டுகின்றன. நேர்மாறுக விருந்தாலே 'ஞான்', 'நீ' என்ற ஸர்வ நாமங்களின் பொருள் பொருந் தும். 'இஜ்ஜனம்', 'இய்யாள்' என்றெல்லாம் முன்னிலையாட்கள் குறிக்கப்படுகின்றனரன்ரே. அங்ஙு, அவிடுன்னு என்று அதைப போன்றே முன்னிலையைக் குறிப்பதுண்டு. அதனுல் இச்செய்தியில் முடிவு காணப்படவில்லை.

இவ்வியலை முடிப்பதன் முன் ஏனைய பொதுப்பெயர்களைப் பற் றியும் சிறிது கூறுவோம் :

(1) சுட்டெழுத்து : அ, இ, உ, எ என்ற அடிப்படை உயிர் களே சுட்டெழுத்துக்கள்.* சுட்டுகின்ற எழுத்து சுட்டெழுத்து என்ற பொருளைக் கருதி தமிழில் இவற்றிற்கு இப்பெயர் இடப்பட்டது. இவற்றுள் 'அ' சேய்மையிலிருப்பதனையும் 'இ' அடுத்திருபபதனையும் ''உ'' நடுவில இருப்பதனையும் குறிகின்றன. 'எ' வினுவைக் குறிக் கும். இவ்வாறு அடிப்படை உயிர்களையே பொருட்பொருததம் நோககி

* தமிழ இலகணப்படி எகரம் சுட்டெழுத்தன்று.

மூவிடப் பொதுப்பெயர்களாய் அமைத்ததன் நயம் சொல்லொணாதது. இவ்வளவு நயமும் வசதியும் அழகும் பொருத்தமும் எல்லாமுள்ள ஒரு அமைப்பு வேறு ஒரு மொழிகளிலும் இல்லையென்ற உண்மை, திராவிட இனத்திற்கு நியாயமான பெருமையுணர்விற்குக காரணமாகிய ஒரு பெரிய மேன்மையாகின்றது என்று எல்லா மொழியியலாரும் உடன்படுகின்றனர். இவற்றுள் ''உ'' தமிழில் அரிதாக வழங்கப்படுவது. மலையாளத்திலோ மறைந்துவிட்டது என்றே கூறலாம். மறைந்ததன் காரணமும் தேடிகாணவேண்டியதில்லை. அண்மையிலுள்ளதனையும சேய்மையிலுள்ளதனையும் போன்று நடுவிலுள்ளதனைப்பற்றிப் பேசும் தேவை வருவதில்லையன்றே. ''எ'' என்ற வினுப்பெயருகு ''ஏ'' என நீண்டும், யகரம் சேர்ந்து ''யா'' எனவும் இரண்டு வடிவங்கள் உள்ளன முதலிலுள்ளது ''யா'' எனவும், பின்னர் அது ''ஏ'' என்றும் ''எ'' என்றும் குறுகியது என்பது கால்டுவெல்லின் கருத்து. உருவம் மாறியதோடு பொருளிலும் சிறிது வேறுபாடு தோன்றியுள்ளது ஸமஸ்கிருதத்தின் அதிகாரம மலையாளத்தில் வலுப்பெற்றபோது அம்மொழியிலே ஒன்றிற்கொன்று தொடர்புடைய (Relative) சர்வநாமமாகிய ''ய'' என்ற சொல்லிற்கு மலையாளத்தில் மொழிபெயர்ப்பு இன்றியமையாததாயிற்று. அது முதல் ''எ'' எனவும் ''ய'' எனவும உள்ள வடிவங்கள் யகரச் சொல்லின் இடத்தை வகித்து ஒன்றிற்கொன்று தொடர்புடைய பொதுப்பெயராய் விட்டன.

(2) எந்து: இது ''எ'' என்ற சுட்டெழுததில் மெல்லினம் சேர்ந்த அலிபபால் வடிவம். எ(ன்)+து=எந்து. தமிழில் என்னது என்பதே பெயர்வடிவம எனினும, ''என்ன'' என்ற பேதக வடிவமும உளது. செய்து-செய்த என்பது போன்ற பெயரெச்சச் செய்கைவழி 'எநது' என்பது 'எந்த' என ஆயிற்று. எந்த என்பது போன்று தமிழில் அந்த, உந்த, இந்த என்று எல்லாச் சுட்டெழுத்துக்களினின்றும் பேதகவடிவங்கள் காணப்படுகின்றன. இவற்றைத் தவிரத் தமிழில் ''ஏன்'' என்றும தெலுங்கில் ''ஏமி'' எனவும், எநது என்ற பொருளில் சொல் வடிவங்கள் உள்ளன. இதிலிருந்து சுட்டெழுததோடு நகரமோ மகரமோ சேர்ந்து சில வடிவங்கள் தோன்றியுள்ளன என்பது தெளிவாகின்றது. இநநிலையில் அந், அம், என்ற பெயரிறுதிப் பால் எண் விகுதிகளும் இவ்விதம் தோன்றியவையே என்று கற்பிதக வழி கிடைக்கின்றது. பாலியலில் செய்யப்பட்ட ஆய்வையும் நோக்குக. இவ்விதம் கிடைக்கும் 'அந்', 'அம்' ஆகிய இரண்டிற்கும் பால்-எண்களாக குறிப்பதற்குள்ள பொருட்பொருத்தம் சிறிதும் போதாது. ''இன்'' என்ற அங்க விகுதியோ பொருளற்றதாதலால் இவ்விதம் தோன்றியது எனக் கொள்ள ஒரு தடையுமில்லை.

''அதுங்கல்'' ''கூவளத்தும் வேரு'' முதலியவைகளில் ''இன்'' என்பதற்குப் பதில், ''உன்'' என்பது வருகின்றது என்று உடன்படலாம். ஆனால் இகர உகரங்களுக்குக் கட்டுப்பாடு வழக்கமாதலால் இதனைத் தவிரவிம் அவைகட்கு வேறு முறையில் காரணம் கூறலாம். ''எந்து'' என்பது அலிப்பால் வடிவமாகவும் பேதக வடிவமாகவும் பயன்படுத்தப்படும்போது ''எந்து மனுஷ்யன் ?'' ''எந்து கள்ளி ?'' என ஆண் பெண் பெயர்களை விசேடிக்கும்.

(3) இன்ன : இதுவும் ''இ'' என்பதினின்றும் கோன்றியது. இ + இன் + அ = இன்ன. அலிப்பன்மை வடிவம் விஷேடணம் ஆகும் போது பன்மையைக குறிப்பதன்று.

(4) ஆர் : ஆண் பெண ஆகியவற்றிற்குப் பொதுவாகிய பால் வேறுபாடற்ற பன்மை வடிவம். வேறு வடிவங்களில் வழககில் இல்லாததால் அரியவழககு ஆகின்றது. ' இன்ன ' என்பதற்குக் காட்டியது போன்று ''பன்மை'' வடிவததில் மட்டுமே உளது. பொருளில் ஒருமையும் வரும. இவன் ஆர ?, இவள் ஆர் ?

(5) சில, பல : இவை இரண்டும் அலிப்பன்மை வடிவங்கள். ஆண், பெண் பால்களில் உள்ள பால் வேறுபாடறற பன்மையில் சிலர், பலர் என்பது சரியான வடிவங்கள். பொருட்டன்மையால் இவற்றில் ஒருமை எண்ணிற்கு உரிமையில்லை. விசேடணம் ஆகும் போது 'சில ஆளுகள்', 'பல ஜனங்ஙள்' என அலிச்சொல் வடிவத் தோடும் பயன்படுத்தப்படுகின்றன.

(6) வல்ல : சில, பல ஆகியவற்றைப் போன்றதே.

(7) எல்லா : 'எல்லாவும்', 'எல்லாம்' என 'உம்' சேர்ந்தே விசேடியமாகப் பயன்படுத்தப்படுகின்றது. விசேடணம் ஆகுமபோது ''எல்லா ஜனங்ஙள்'' என்பதே போதும்.

(8) ஒரு · இது ''ஒன்னு'' என்ற எண்ணுப் பெயரின் பகுதி எனினும் உருவப் போககிற்கும் வழங்கும் மரபிற்கும் முதன்மை கொடுத்தது பொதுப்பெயர்களோடு சேர்ககப்பட்டிருக்கின்றது. ஒன்ரு = ஒன்று = ஒன்னு. மலையாளத்தில் இதற்குச் சுட்டெழுத்தின் பொருளிலும் வழக்கு உளது. சென்ரொரு நேரத்து = சென்ன நேரத்து. இனி வழககில் இது பன்மைக்கும் விசேடணமாகும. ''மற்ரொரு பரிஷகள்''* என்று பாரதத்தில் வழங்குவதை நோககுக.

---

* பரிஷகள் = கூட்டம

இவவழககு தமிழில இல்லை.

(9) மிக்க, மற்ற : இவற்றையும் முன் கூறியது போன்று பொதுப்பெயர்களோடு சேர்ப்பதுண்டு. பெயரெச்சங்களாதலால் பொதுப்பெயரோடு ஒத்த வடிவ வரிசை இதற்கு இல்லையெனினும், உளதாகும்.

53. *லிங்கஸங்க் யாக்ருதம் பேதம்*
ஆத்யத்தில் சுட்டெழுத்தினு
ஜனிச்சிரிக்கணம் அதின்
வ்யாப்திதான் ஶேஷமுள்ளதில்.

பால் வேறுபாடு காட்டுகின்ற "அன்" முதலிய விகுதிகளும் எண் வேறுபாடு காட்டுகின்ற "அர்" முலலிய விகுதிகளும் ஆதிகாலத்தில் சுட்டெழுத்துக்களாகிய அ, இ, எ என்ற சொற்களோடு மட்டும் சேர்த்து வழங்கப்பட்டன என்றும், பிற்காலங்களில் இவ்வகை விகுதிகளே மற்ற சொற்களோடு ஏற்புழி சேர்த்து வழங்கப்பட்டனவென்றும் ஊகிக்க முடியும். எதனலெனின் முறைப்படியும், மேலுமேலும் இவ் விகுதிகள் சுட்டெழுத்துக்களோடே சேர்ந்துள்ள வடிவங்களில் மிகுதியும் காணப்படுகின்றன. அவ, அவற்ற, அவற்றகள் முதலிய சொற்களை நோக்குக.

அ + அ = அவ; அ + அ + அர் + அ = அவற்ற;
அ + அ + அர் + அ + கள் = அவற்றகள்.

இவற்றைத்தவிர வழக்கு மொழியில் மிகுதியும் மூவிடப் பொதுப்பெயர்களுக்கே பால் எண் வேறுபாடு காட்ட ஆற்றல் வந்துள்ளதென்பதும், அவ்வகைச் சொற்களிலேயே முதலில் பால் எண் விகுதிகள் சேர்ந்திருந்தன என்றும் ஊகிப்பதற்குப் போதிய காரணம ஆகின்றது.

இந்தோ ஐரோப்பிய மொழிகளில் பாலிற்குத் தனி உருபுகள் உள்ளன; வேற்றுமைகளில் "ஒவ்வொரு எண்ணிற்கும் வெவ்வேறு உருபுகள்" என உருபுகளின் எண்ணிகைகை தேவையற்ற முறையில் அதிகரித்துள்ளது. திராவிட மொழிகளிலோ, நேர்மாறுக இன்றியமையாத இடங்களிலேயே உருபு வழங்கப்படுகின்றன. பால், எண், வேற்றுமை என்ற முறையில் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு உருபு உளது. ஆனல் பின்னும் பின்னும் உருபுகள் வந்து உருவம் நீளுகின்றது. ஆனல் இதற்கும தடைவிதி இயற்றப்பட்டுளது. ஒருமை எண் சுயமாகவே எய்துவதால் அதற்கு விகுதி வேண்டாம் என்று சுருக்கிக் கூறலாம். அல்லது பால், எண் ஆகிய இரண்டையும் குறிக்க விகுதி ஒன்றே அமையும். திராவிட மொழிகளின் நடப்பு இவ்வாறும். இந்த உத்தியின்படி பெயர்களுகுப் பாலெண் விகுதிகள்

இன்றியமையாத தேவையில்லை. பெயரின் வாச்சியமாகிய பொருள் பெண்ணே, ஆணே, சடப்பொருளோ ஆகட்டும். அவ்வேறுபாட்டைக காட்டப் பெயர்ச்சொல்லில் வடிவ வேறுபாடு ஏன் செய்ய வேண்டும்? தள்ள, தந்த ஆகிய இரண்டும் வடிவத்தில் சமமே. பொருளால் ஆண் பெண் வேறுபாட்டை அறிந்துகொள்ளலாம். ஆணே, பெண்ணே என்று ஏன் நெற்றியில் எழுதி ஒட்டிக்கொள்ள வேண்டும்? மூவிடப் பொதுப்பெயரின் நிலை இவ்வாறன்று. பல பொருட்களைப்பற்றிப் பேசும்போது அவற்றில் ஒவ்வொன்றையும் குறிப்பதற்கே மூவிடப் பொதுப்பெயர்கள் பயன்படுத்தப்படுகின்றன. எனவே எல்லாவற்றையும் ஒரே வடிவச் சொல்லால் வழங்கிஞல் பிரித்தறிவது கடினம். ஆண், பெண் அலி வேறுபாட்டைக குறிக்க, வடிவத்தை வேறுபடுத்தினுலேயே வசதியுளது. எண்ணைப பொறுத்த அளவிலும் இதனைப் போன்றே அமைகின்றது. அதனுல் பால் எண் வேறுபாடு மூவிடப பொதுப்பெயர்களுக்குத் தேவைப்படுவதால் முதலில் ஏற்படடன. பின்னர் இப்பொதுப் பெயர்களை வாகியத்தின் முதலில் எழுவாயாக அமைப்பதற்குப் பதில் வினைமுற்றுக்களின் இறுதியில் சேர்க்கத தொடங்கியிருக்கவேண்டும். ''ஏன் (=ஞான்) வந்து'' என்று கூறுவதற்குப்பதில் ''வந்து ஏன்'' என மாற்றியமைக்கலாமன்ரே. 'வந்து' (வந்து) என்ற கருத்தை முதலில் கூறுதல். பின்னர் யார் வந்தார் என்று பிரித்தறிதல். ''வந்து'', ''ஏன்'' ஆகியவை சேர்ந்து ''வந்தேன்'' என ஆயின. பேச்சு மொழியில் ''நான் வந்தேன்'', ''நீ வந்தாய்'', ''அவன் வந்தான்'' என அமையும் எழுவாயாகிய பொதுபபெயர்களை மிகுதியும் வழங்க இடையில்லை.* ''எங்கே இருந்து வருகிறுய்?'' ''ஊரிலே இருந்து வருகிறேன்'' என்ற முறையிலன்ரே வினைவிடைகளின் போக்கு. பின்னர் வினைச்சொல் நீண்ட இடைவெளிக்குப் பின் இறுதியில் வருவது வரை எழுவாய் இது எனத தெளிவாக அறியாதிருக்கப் பொறுமையின்மை ஏற்பட்டு முதலிலேயே எழுவாயையும் எடுத்துக் கூறுதல் வழக்கில் வந்திருக்கவேண்டும்.

இவ்வாறு தொடக்கத்தில் நீண்ட வாக்கியங்களில் மட்டும் எழுவாயாகி வரும் இப் பொதுப்பெயர்களை முதலிலும், இறுதியில் வினைச் சொல்லுமாக ''இரண்டு தடவை வழங்குதல்'' என்ற மரபு பழகியபோது, அதிலுள்ள கூறியது கூறலென்ற குற்றத்தை ஆட்கள் பொருட்படுத்தவில்லை. மட்டுமல்ல அவ்வாறிருநதாலே எழுவாயும வினையும் தம்மில் பொருந்தும் என்றும் எண்ணினர். இதிலிருந்து

---

* சேனுவரையா நான வந்தேன் நீ வநதாய் என்பன உலக வழக்கில் மிகுதி என்கின்ரூர். (தொல-சொல-69)

''பொருத்தம்'' என்ற ஒரு உணர்வு தோன்றியிருக்க வேண்டும். ''பொருதம்'' என்ற புதிய வகைகக இலகணத்தில் நிலைபேறு தோன்றியதோடு ''நான் (ஏன்) வந்தேன்'' எனக கூறுதிருப்பின் பிழை என்று மக்கள் பாவனை செய்தனர்.

இவையெல்லாம் எனது ஊகங்களே. அதனால் அதன் அடிப் படைகளையும் இங்கு விவரித்தல் வேண்டும.

முதலாவது—திராவிட மொழிகளிலே உள்ள இடவிகுதிகள் ஆரிய மொழிகளைப்போல சிதைந்து போகவில்லை. ஸமஸ்கிருதத்தில் ''அஸ்மி'' என்பதில் ''மி'' என்ற இடவிகுதிக்கும் அஹம் என்ற தன் மைப் பொதுப்பெயர் ஒருமைக்கும் இடையில் ஒரு தொடர்புமில்லை. ''ம'' என்ற ஒரு தன்மை சர்வநாமப்பகுதி உண்டாயிருந்தது என்றும அதன் எச்சமே ''மி'' ஆகிவிட்டதென்றும் மொழியிலக்கண ஆசிரியன் கூறி அறிவித்தாலே ஒருவன் உணர முடியும். திராவிட மொழிகளில் அவ்வாறன்று எழுவாயிலும் பயனிலையிலும் காணப்படும் பொதுப் பெயர் ஒன்றே என்று இலகுகண அறிவில்லாதவனும் நன்கு உணர் வான். அதனால் பயனிலைக்கும் எழுவாய்க்கும் ஒரே சர்வநாமம் சேர்த்துப் பொருத்தம அமைத்தல் என்ற மரபு திராவிட மொழிகளில் ஆதிகாலம் முதலேயுள்ள அமைப்பன்று அவ்வாறெனின், ஆரிய மொழிகளைப்போன்று அச்சர்வ நாமங்கள் தேய்ந்து மறைந்து போகா மல் முழுமையாக இன்னும் வழங்குவது எவ்வாறு முடியும் ?

இரண்டாவது—திராவிட இனத்தில் முதன்மையின்மை சிறிதும் இல்லாத மலையாளத்தில் பாலிட விகுதி காணப்படாததன் காரணம் யாது ? இந்தோ ஐரோபபிய மொழிகளில் உட்படும் சமஸ்கிருதம் போன்று திராவிட மொழிகளில் மலையாளம பழைய குடும்பச சொத்துக களைப் பத்திரமாய்ப் பாதுகாக்கின்றதென்பது மிகுதியும உடன்பட்ட ஒன்று அவ்வாறுள்ள ஒரு மொழி சுதந்திரமாக பாலிட விகுதிகளை தியாகம் செய்தது என்பது நிகழ்ததகுகதோ ? பாலிட விகுதிகளுகுப் பொருத்தம் வேண்டுமென்பது இலகுகணத்தில் ஒரு எளிய செய்தி யன்று. அதனால் பாலிட விகுதிகளில் எழுவாய்குகும் வினைச்சொல் லிற்கும் பொருத்தம் வேண்டுமா என்ற அமைப்பு ஏற்படுமுன்னரே மலையாளம் தமிழில் இருந்து பிரிந்து தனி மொழியாகப் பரிணமித் திருக்க வேண்டுமென்றல்லவா கருதவேண்டும் ? ஆனால் மலையாளத்தி லும் இலக்கிய மொழியில் பழைய காலததில் பொருத்தம் ஒருதலையாகக் காணப்படுவதுளதன்றே எனத தடை கூறுதற்கில்லை. கொல்ல மாண்டிற்குப் பின்னரே மலையாளததில் நூற்கள் எழுந்துள்ளன. அதற்கு முன்னர் நூற்கள் இருந்தன எனின் அவை நமகுகுக்

கிடைக்கவில்லை. அவை தமிழ்ப் புலவர்களின் நூற்கள். அதனால் அவர்கள் தமிழ் முறைப்படிப் பொருத்தம் செய்து அமைத்தனர் எனவே எய்தும். கவிதைகளில் இப்பொருத்தம் வழக்கமாயிருந்தது என்று சொல்வதும் முழுவதற்கும பொருந்துவதன்று. நிகழ்காலப் படர்க்கை வினைகளில் 'வருன்னுன், செய்யுன்னுன்' எனவும் பிறவுமுள்ள வழக்குகள் எப்போதாவது ஏற்பட்டுளவோ என்பதும் ஐயமே

இனி எண்பற்றி எண்ணுவோம் சர்வநாம ரூபமாகிய எழுவாய்க்கும் பொருத்தம் வேண்டுமெனின் பெயரிற்தம் அது வேண்டுவதன்றே என்பது அடுத்தயுகதி பெயரிலும அது ஏற்படுத்தவேண்டும் என அமைந்தது ஆனால் பெயரில் பாலிட விகுதி இல்லையன்றே. அதற்கு என்ன செய்வது? அதனிலும் வலிந்தேற்றுதலே வேண்டும. சர்வநாமத்திலுள்ள விகுதியையோ அல்லது ('வனமதில்', 'ராமன் தன்னுடெ' முதலிய வேற்றுமை வடிவங்களைபோல) அவன், அவள், அது ஆகியவற்றின் முடிந்த உருவங்களையோ சேர்ப்பது என இப்பொழுது காணப்படும் அமைப்புத தோன்றியது. கள்ளன், குள்ளன் முதலியவற்றில் விதிமட்டும் உள்ளதையும், விண்ணவர், மன்னவன் முதலியவற்றில் முழு சர்வநாம உருவமுள்ளதையும் காணுக. ஆனால் ''அன்'' என்ற ஆண்பால் விகுதியைப் போன்று 'அள்', 'து' ஆகிய இரண்டும் பெருவழக்கில் வரவிலை அவற்றின் இடத்தில் ''இ'', ''த்தி'' என்பனவும் ''அம்'' என்பதும ஆகிய வேறு விகுதிகள் எழுந்தன. இவை இரண்டும் சமஸ்கிருததைப பின்பற்றி ஆகுகப்பட்டனவோ என்ற ஐயத்திற்கும் வழியுண்டு. பெயர்களின் பால் வேறுபாடு சமஸ்கிருதத்தில் முகியமாக அகர இறுதிச சொற்களுகளே உளது. மலையாளத்திலும் அவ்வாறே காணப்படுவதால் பால்வேறுபாடுகளைப் பொறுத்த அளவில் சமஸ்கிருதத் தொடர்பு மலையாளதைப் பாதித்திருக்கவேண்டும். கடன், பலன் முதலிய அலிப்பாற சொற்களிலும் சிலவிடங்களில் ''அன்'' காணப்படுவதால் முதலில் ஆண்பால் விகுதியே அலிப்பாலுக்கும் பயன்படுத்திவரப்பட்டது பின்னர் வேறுபாடு தெரிதற்காக ஒன்றை ''அம்'' என மாற்றியிருக்கலாம். பாலியல் ஆய்வை நோக்குக. கன்னடத்தில் ஆண்பாலிற்குள்ள ''அன்'' என்பதே ''அம்'' ஆகிவிட்டதென்பதும் நினைத்தற்குரியது. பெயரெச்ச விகுதி ''அ'' என்ற சுட்டெழுதாதலால் 'செய்யுன்னவன்', 'செய்யுன்னவள்', 'செய்யுன்னது' என்ற அவ்வகை வடிவங்களிலெல்லாம் சர்வநாமத்திலுள்ள பால்விகுதிகளையே முழுவதும் காணலாம்.

பால்விகுதிகளின் தோற்றம் குறித்துக் கூறியது போன்று எண்விகுதிகளின் தோற்றமை எவ்வாறென்றும் ஆய்வு நிகழ்த்தவேண்டுமன்றே. 'அர்', 'மார்' ஆகிய இரண்டும் ஆண் பெண் பால்களுக்கும்,

'அ', 'கள்' ஆகிய இரண்டும் அலிப்பாலுக்கும் விகுதிகளாகும். இவ் வாறு எண்விகுதிகள் நான்கு உள. இவற்றின் தோற்றம் இன்ன விதம் என்று அவைகளைப் பிரித்துநோக்கி இதுவரை கருததுக் கூறப் படவில்லை. இவை நான்கும் தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு ஆகிய முக்கிய மொழிகளில் மட்டுமல்ல, துளு, கோன்டா முதலிய சிறிய திராவிட மொழிகளிலும் பலவிதத தோற்ற வேறுபாடுகளோடு காணப்படுகின்றன. இவற்றுள் ''மார்'' என்பது ''ஆர்'' என்பதன் ஒரு மாற்று வேடமாயிருக்கவேண்டும். மார் என்பது பெயர்களோடு மடடும் வருகின்ற ஆண் பெண் பன்மையன்றே * பெயரிலும் பால் விகுதி சோகவேண்டும் என்ற தேவை வந்தபோது அவர் என்ற முழுச் சர்வநாமமே முதலில் பயன்படுத்தப்பட்டது. இன்றும் சில வட்டாரங்களில் 'அவர்' என்று மரியாதைப் பன்மையாகப் பெயர்க ளில் பயன்படுத்துதல் காணப்படுகின்றது. ''தேவியவர்'', ''நாணி யவர்'' முதலியன. காலப்போகக்கில் தெலுங்கில 'அவரு'' என்பது 'வாரு' என ஆகியதைப் போன்று, முதலிலுள்ள அகரத்தை வீலககி, அதற்குப் பதிலாக இரண்டாவது அகரத்தை நீட்டி 'அவர்' என்பது 'வார்' என ஆக்கப்பட்டது. இதன் பின்னா வகர மகரங்களுகுப் ''போலிவரையறை'' மிகுதியாதலால் 'வா' என்பது 'மார்' என அமைந்தது. கால்டுவெல் ஒரு படி மேலும் சென்று தமிழில் ''நீர்'' என்பதிலும் மற்றும் காணப்படும் ''ஈர்'' என்பது போன்று 'இவர்' என்பதிலிருந்து தோன்றியிருக்கலாம் என ஐயுறுகின்றார். இத் தோற்ற வரலாற்றின்படி 'மார்' முதலில் அன்போடு கூறுமிடத்துச் சேர்க்கப்படும் பன்மையாக இருந்தது. இப்பொழுதும் பெரும்பாலும் அவ்வாறேயெனினும் இலக்கணப்படி பால்விகுதியுள்ள பெயர்களில் எல்லாம், பன்மையைக் குறிக்க ''மார்'' வேண்டும் என்ற விதி ஏற்பட்டு விட்டது. அதனாலேயே பால்வேறுபாடுள்ள பன்மை எனப் பெயா கொடுகக்பட்டது. 'விட்டியான்மார்', 'கள்ளன்மார்', 'மண்டன் மார்' முதலியவைகளை நோக்குக 'அன்' அல்லது 'ஆன்' என்ற பால் விகுதியின் பின்னர் இது வருகின்றது. எனவே இவ்வடிவததில் 'அன்', 'ஆன்' ஆகிய இரண்டும் வெறும எண்விகுதி மாததிரமுமாய் முடிந்தன.

'கள்' அரிதாக ஆண், பெண்பாற் சொற்களிலும் காணப்படும். அகரம் சுட்டெழுததுக்களிலும், அவை சேர்ந்த பெயரெச்சப் பெயர்களி லும் மாத்திரம் உளது. இதனைத் தவிரச் 'சில', 'பல' முதலியவைகளில் காணப்படும் அகரமும் அலிப்பன்மையே. ஆனால் இவ்வரலாற்றை

* பண்டைத் தமிழில் இது விணை இறுதியாகவும் வரும் (மார்).

மறந்துவிட்டு இப்போது, ''சில பண்டிதன்மார்'', ''பலயாளுகள்'' என வும் மற்றும ஆண், பெண் பால்விகுதிகளாகவும் மிகுதியாகப் பயன் படுத்தப்படுகின்றன. அவ, இவ, எவ என்ற சரியான வடிவங்கள் மலையாளத்தில் மட்டுமே நிலைபெற்று நிற்கின்றன தமிழில் அவை, இவை எனச் சிதைந்து போயிருக்கின்றன. செய்தன, நடந்தன முத லிய வினைமுற்று வடிவங்களில் மட்டுமே தமிழில் சரியான வடிவம் காணப்படுகின்றது. ஆனால் பேச்சுத் தமிழில் அலிப்பால் வினை முற்றில் பால் இடவிகுதிப் பொருத்தம மறைந்துபோயிருக்கின்றது. இதன் காரணம் அலிப்பாலில் தனிப்பொருள் முக்கியத்துவம் கணிக காமை என்று முன்னரே விளகப்பட்டிருக்கிறது. ''ஸங்கயாவிஸே ஷணம் சேர்ந்நால் கலீபே வேண்ட பகுகுறி'' என்ற நூற்பாவின்[1] உரையை நோக்குக.

54. அங்கத்தில் நின்னும் வசனம்
குஞ்ஞுங்ஙள் முதலாயதில்

வெறும் பெயரிலிருந்தல்லாது அங்க விகுதி சேர்தததன் பின் னரும் எண்விகுதி சிலவிடத்தில் அரிதாகக காணப்படும். எடுத்துக் காட்டிற்குக் 'குஞ்ஞுங்ஙள்' முதலிய சொற்கள்.

குஞ்ஞு + உன் + கள் = குஞ்ஞுங்ஙள்
பெண் + உன் + கள் = பெண்ணுங்ஙள்
ஆண் + உன் + கள் = ஆணுங்ஙள்

''இன்'' என்பதைப்போல அங்க விகுதி ''உன்'' எனவும் ஆகும்.

3. வேற்றுமையியல்

ஏனைய சொற்களோடுள்ள தொடர்பைக் குறிப்பதற்குப் பெயர் களோடு சேர்க்கப்படும் உருபுகளுக்கு ''வேற்றுமை'' என்று பெயர். வேற்றுமைகள் ஏழாகும்.[2] வேற்றுமைகளுக்குப் பாணினி முதலிய சமஸ்கிருத இலகணக ஆசிரியர்கள் முதல், இரண்டாம், மூன்றும், நான்காம, ஐந்தாம், ஆறும், ஏழாம் வேற்றுமை என்றிவ்வாறு பெய ரிட்டுள்ளனர். இந்த சமஸ்கிருதப் பெயர்களைப் பின்பற்றி மலையாள வேற்றுமைகளுகும் முதல், இரண்டாம் என்ற முறையிலேயே பெயர் கள் ஏனைய மலையாள இலகணங்களில் காணப்படுகின்றன. ஆனால் அது திராவிட முறைக்குச் சிறிதும் பொருந்தாததனால், இந்நூலில்,

1 இந்நூலின 51-ம் நூறபா.
2 தொல் – சொல-63

வேற்றுமைகளின் பெயர்கள் மாற்றிக் கூறப்படுகின்றன. அதன் காரணம் கீழ்ச் சுருக்கமாகக் காட்டப்படுகின்றது.

''அதென்னு ப்ரதமய்ககு அர்த்தம் த்விதீயய்ககு அதினெப்புன:
சொலலேணம் அதிஞ்ஞெடு என்னும் தவிதீயய்க்கர்ததமாய் வரும்;

த்ருதீயா ஹேதுவாயிக் கொண்டாலோடுடே இதி க்ரமாத;
ஆயிககொண்டு சதுர்ததீ ச ஸர்வ்வத்ற பரிகிர்ததிதா.

அதிங்கல் ங்கின்னு பேரக்கெக்காள் ஹேதுவாயிட்டு பஞ்சமீ
இக்கு மின்னுமுடெ ஷஷ்டிககதினறே வெசசுமென்னபி

அதிங்கலதில் வெச்சென்னும் விஷயம் ஸப்தமீ மதா''

என்ற பாலப்ரபோதன வசனப்படி சமஸ்கிருததிற்கு முரணுக மலீல யாள வேற்றுமைகள உள்ளன; அவை

வேற்றுமை	உருபு	மலீயாள எ-டு:	சமஸ்கிருத எ-டு:
முதல—	சொல்வடிவம்	அது	தத்
இரண்டாம்—	எ	அதினெ	தத்
	ஒடு	அதிஞ்ஞெடு	
மூன்றும்—	ஹேது	அது ஹேதுவாயி	தேந
	ஆயி	அதாயி	
	கொண்டு	அதுகொண்டு	
	ஆல்	அதிஞல்	
	ஒடு	அதிஞ்ஞெடு	
	ஊடெ	அதிலூடெ	
நான்காம்—	ஆயிககொண்டு	அதிஞயிக்கொண்டு	தஸ்மை
ஐந்தாம்—	இல்நின்னு	அதில்நின்னு	தஸ்மாத்
	கல்நின்னு	அதிங்கல்நின்னு	
	இன்போககே	அதின்போககெ	
	காள்	அதினெககாள்	
	ஹேதுவாயிட்டு	அது ஹேதுவாயிட்டு	
ஆறும்—	க்கு —உ	அதினு	தஸ்ய
	உடெ—டெ	அதினுடெ-அதின்றெ	
	இல்வெச்சு	அதில்வெச்சு	
ஏழாம்—	இல்வெச்சு	அதில்வெச்சு	தஸ்மின்
	இல்	அதில்	
	இங்கல்	அதிங்கல்	
	விஷயமாய்	அது விஷயமாயி	

என்ற முறையிலமைகின்றன. சமஸ்கிருதத்தில் ஒரே வடிவம் பல பொருட்களைக் குறிக்கவே, மலையாளத்தில் ஒவ்வொரு பொருளுக்கும் உருபு வேறுபாடு உளதென்பது இப்பட்டியலால் தெளிவாகும். எடுத்துக்காட்டாக மூன்றாம வேற்றுமையை நோக்குக. ''தேந'' என்ற சமஸ்கிருதச் சொல்லிற்கு,

1	அது ஹேதுவாயிட்டு	என்று ஹேது	Causality	அமையும்
2	அதாயி	,, அபேதம்	Identity	,,
3	அதுகொண்டு	,, காரணம்	Instrumentality	,,
4	அதினால்	,, கருத்தா	Agency	,,
5	அதினோடு	,, ஸாஹித்யம்	Sociality	,,
6	அதிலூடே	,, த்வாரத	The sense of through	அமையும்

இவ்வாறு ஆறு பொருட்கள் உள்ளன. மலையாளத்தில் ஒவ்வொரு பொருளாக குறிக்கத் தனிததனி உருபுகள் உள்ளன. இங்கிலீஷில் இந்த ஆறு பொருட்களையும் சேர்த்து அவற்றிற்கெல்லாம மூன்றும் வேற்றுமை என ஒரு பெயரிடுவது ஏன்? சமஸ்கிருதத்தில் இவை ஒரு வடிவத்தின் பல பொருட்களாவதால் இப்பொருட்களைத் தனித்தனி பிரித்துக்கூற வழியில்லை. அதனால் இவ் 'ஆறு' பொருட்களையும் மூன்றும் வேற்றுமை என ஒரு பெயராலேயே குறிப்பிட வேண்டி வந்தது. மலையாளத்தில் பொருள் மாறுகின்ற முறையைப் பின்பற்றி உருபும் மாறுகின்ற நிலையில் இவற்றையெல்லாம் ஒன்றாகச் சேர்த்து ஒரு பெயரிடுவது சரியன்று. இதனால் சமஸ்கிருதத்திலுள்ள ஒரு வேற்றுமையுருபின் பொருளை மலையாளத்தில் பல உருபுகளைக் கொண்டு குறிப்பிட வேண்டும் என்பது தெளிவாகின்றது. நேர்மாறாக மலையாளத்தில் ஒரு உருபின் பொருள் சமஸ்கிருதத்தில் பல உருபுகளைக் கொண்டே குறித்தல் வேண்டும் எனவும் மேற்காட்டப்பட்ட பட்டியலில் நின்றும் தெளிவாகின்றது. அவற்றுள் ஓடு (அதினோடு) என்ற உருபு சமஸ்கிருதத்தில் இரண்டாம், மூன்றும் வேற்றுமைகளுக்குப் பதில் அமைகின்றது. அதனைப் போன்றே ''உ'' (அதினு) என்பது நான்காம் வேற்றுமைகளும், ஆறும் வேற்றுமைகளும நேராகக் காணப்படுகின்றது. எனவே ''அதினோடு'' என்ற வடிவதைச் சில சமயம் இரண்டாம வேற்றுமை என்றும, சில சமயம் மூன்றும் வேற்றுமை என்றும் கூறவேண்டும. ''அதினு'' என்பது சில சமயம் நான்காம் வேற்றுமையும் சில சமயம் ஆறும் வேற்றுமையும் ஆகும். இன்னது என முடிவுசெய்ய வேண்டுமெனின், சமஸ்கிருதத்தில் மொழி பெயர்த்துப் பாராததால் அம்மொழியில் எந்த வேற்றுமை வருமோ அதனைச் சொல்லுததல்லாது வேறு ஒரு வழியுமிலலை.

மலையாளம்	சமஸ்கிருதம்	வேற்றுமை
ராமனு புத்திரன் உண்டாயி	ராமஸ்ய புத்ரோ ஜாத:	ஆறும் வேற்றுமை
ராமனு தனம் கொடுத்து	ராமாய தனமதாத்	நான்காம் வேற்றுமை

இவ்வாறு சமஸ்கருதத்தின் வாலைபபிடிததுத தொங்குவதால் எந்தப் பேரரசு மலையாளத்திற்குக் கிடைககிறது ?

இவ்வளவு தாம இடையூறுகளெனினும் பொறுத்துககொள்ள லாம். இதனோடு நிற்பதில்லை அவை. சமஸ்கிருததிதில் வேற்றுமைக் குறிகளெல்லாம உருபுகளே. மலையாளதிதில் வேற்றுமை வடிவம் பல முறைகளில் தோன்றுகின்றன. மேறகாட்டபபெற்ற மூன்றும் வேற் றுமையையே எடுத்துப் பார்ப்போம்.

(1) ஆல்—அவனுல்
(2) ஓடு —அவனோடு
} இவை இரண்டும் உருபுகள்

(3) எ—கொண்டு— அவனெக்கொண்டு என இரண்டாம் உருபின் பின்னரும் 'கொண்டு' என்ற அவ்யசசொல் சேர்ககபபடுகின்றது.

(4) இல் ஊடெ—அவனிலூடெ என ஏழாம உருபின் பின்னர் 'ஊடெ' என்னும் அவ்யச்சொல சேர்ககப்படுகினறது.

(5) ஆயி—அவனுயி—என விணையெச்ச வடிவம்.

(6) ஹேது—அவன் ஹேதுவாயி—என வெறும தொகைச்சொல்.

இவற்றுள் உருபு சேர்ந்துண்டாகும் முதல் இரண்டு வடிவங்களை மட் டும் வேற்றுமை என்று கூற நியாயமுண்டு. மூன்றுவதுள்ளது இரண் டாம் வேற்றுமையிலும, நான்காவதாகிய ஏழாம் வேற்றுமையிலும் அவ்வியம் சேர்த்து ஆக்கப்பட்டதால் அவ்வேற்றுமைகள் என்ற அவைகளைக் கூறவேண்டும். அன்றெனின் மிகுந்த குழப்பங்கள் ஏற்படும. ''என்னெயும் நின்னெயும் கொண்டு'' என்பதில் எவ்வாறு வேற்றுமை கூறமுடியும? மொத்ததில் ''ஒரு சொல், மூன்றும் வேற் றுமை ஒருமை'' எனக கூறவேண்டி வருகின்றதன்றே? இனி என்னெ, நின்னெ ஆகிய இரண்டு சர்வநாமங்களோடு சில விசேட ணங்களைச் சோத்து நீட்டின் அவற்றை ஒற்றைச சொல் மூன்றும் வேற்றுமை ஒருமை எனக் கூற வேண்டிவரும். அதனல் அவனெக் கொண்டு என்ற வடிவதைச் சமஸ்கிருத முறைப்படி மூன்றும் வேற்று மையெனக கூறுவது சரியன்று 'அவனெ' என்ற இரண்டாம் வேற்று மைச் சொல்லோடு 'கொண்டு' என்ற அவவியம் சேரும்போது கரணப் பொருள் தோன்றுகின்றது என்பதே உளது. ''அவனெ'' என்பதும்

''கொண்டு'' என்பதும் வேறு வேறு சொற்களாகும். ''தம் அநு, தம் ப்ரதி'' முதலிய சமஸ்கிருத வழகுகளும், ''by him, with him'' முதலிய ஆங்கில வடிவங்களும் எவ்வாறு தனித்தனிச் சொற்களாக அமைந்து பொருட்சிறப்பு உண்டாக்கின்றனவோ அவ்வாறே மலையாளத்திலும், 'கொண்டு', 'நின்னு' முதலியவை புதிய பொருளைத் தோற்றுவிக்கின்றன சமஸ்கிருதத்தில் இவ்வகை அவ்வியங்களுக்குக் ''கர்ம்ம ப்ரவசனீயம்'' என்றும் ஆங்கிலத்தில் Preposition என்றும் பெயர் உள்ளது போன்று மலையாளத்திலும் இவ்வகை அவ்வியங்களுக்குக் ''கதி'' எனப் பெயர் கற்பிக்கப்படுகின்றது. கர்மமப்ரவசனீயம் சிறிது நீளமாக உள்ளதனால், ஏகதேசம் அதனோடொத்த 'கதி' என்ற பெயர் இங்கு கொள்ளப்படுகின்றது. ''ஆயி'' என்ற ஐந்தாம் வேற்றுமைப் பொருளும், 'ஹேது' என்ற ஆறாம்வேற்றுமைப் பொருளும் ஒரே வேற்றுமையைச் சார்ந்தன எனக கூறுவது சிறிதும் பொருந்தாததென்பது முதல நோக்கிலேயே தெளிவாதலால் சிறப்பாக விளகக வேண்டுவதில்லை.

இவ்வாறு நோக்கி வரும்போது உருபுகளை மட்டும் வேற்றுமை எனக் கணிக்கவேண்டிய உணர்வு தோன்றும். பகுதியிலிருந்து பிரித்து வழங்குதற்கு முடியாதவை மட்டுமே உருபுகள் என்று கூறக கூடாது. ''என்னெயும், நின்னெயும் கொண்டு'' என்பதில் 'கொண்டு' என்பதைப் பிரித்து வழங்கமுடியுமென்பதால், 'கொண்டு' என்பது உருபு அன்று. அதிலேயே ''என், உம், நின், உம், எ'' (என்னும நினனுமெ, அல்லது ''ஞானும் நீயுமெ'') எனப பிரித்துச் சேர்கக முடியாததால் 'எ' உருவாகும். வேற்றுமை உருபிற்கு இவ்விலககணத்தை ஏற்றுககொண்டு, முதலில் காட்டிய படடியலை நோக்கும்போது,

1	2	3		4	5	6
எ,	ஒடு	க்கு உ	}	ஆல்,	உடெ	இல் கல்	}

என்ற ஆறே இவற்றுள் உருபுகளாகக காணப்படுகின்றன. இவற்றோடு உருபொன்றுமில்லாத முதல் வேற்றுமையைச் சோக்கும்போது வேற்றுமையுருபுகள் ஏழு என அமைகின்றது. அங்ஙலையில் முதல் வேற்றுமை முதல் ஏழாம் வேற்றுமைவரையிலுள்ள சமஸ்கிருத வேற்றுமைப் பெயர்களே போதாதோ என்ற வினு பின்னும் எழுகின்றது. சரிதான். ஆனால் இருமொழிகளிலும் வேற்றுமைகளின் மொத்த எண் எதேச்சையாக ஒன்றுக வந்தாலும, பொருளைப் பொறுத்த அளவில் ஒன்றுககொன்று சிறிதும் பொருததமில்லாமலே இருக்கின்றது. சமஸ்கிருதத்திலுள்ள நான்காம் வேற்றுமை மலையாளத்தில் ஆறும்

வேற்றுமையாகும் என்றும், சமஸ்கிருதத்திலுள்ள ஐந்தாம் வேற்றுமைகுச் சரியாக மலையாளத்தில் ஒரு வேற்றுமை இல்லை என்றும் இடர்ப்பாடுகள் வந்து சேருகின்றன. எண்ணிக்கையின் அடிப்படையில் அமைந்த பெயர்களில் ஒன்றை விட்டுவிடுவது எங்ஙனம்? ஐந்தாம் வேற்றுமை மலையாளத்தில் இல்லாததனால் ஆறும் வேற்றுமையை ஐந்தாம வேற்றுமை ஆகவேண்டும். எனவே ஆறும் வேற்றுமை ஐந்தாவதாக ஆகுகப்பட்டது என்ற குறை தோன்றும். அதனைக் களைவதெனின் நாலிற்குமேல ஆறு என எண்ணிகைகை கூற வேண்டியது வரும். மட்டுமன்று, பொருளை விட்டுவிட்டுப் பெயரை மாத்திரம் கணிததால் சமஸ்கிருத வேற்றுமைகளையே மணிப்பிரவாளக கவிஞர்கள் மலையாள வேற்றுமைகளுக்குப்பதில் மிகுதியும் பயன்படுத்தும் நிலையில் பெரிய குழப்பங்களுகுகிடையாகும். அதனால் மலையாள வேற்றுமைகளுகுச் சமஸகிருத பெயர்களை நீக்கிவிட்டுப் புதிய பெயர்களை ஆகுகுதலதவிர வேறுவழியில்லை. இதற்கு மேல் விவரிதத காரணங்களே மீண்டும ஒரு தடவை வசதியாக நினைவு படுததற்பொருட்டு எணணிகைகையிட்டுக் கீழத்தரப்படுகின்றன.,

1. சமஸ்கிருதத்தில் ஒரு உருபே பல பொருட்களைக குறிக்கும் போது, மலையாளத்தில் பொருள் மாறுவதனுசரிதது உருபும் மாறுவதால் ஏதேனும் சில பொருட்களைச் சேர்தது ஒரு வேற்றுமை என அழைப்பதில் நியாயமில்லை.

2 சமஸ்கிருதத்தில் இரண்டு உருபுகள் வேண்டியவிடத்தில் மலையாளததில் ஒரு உருபே போதும். நேர்மாறுக மலையாளத்தில் இரண்டு உருபுகள் வேண்டியவிடததில் சமஸ்கிருததில் ஒரு உருபு போதும்.

3 சமஸ்கிருதத்தில் உருபுகளைச் சேர்த்தலால் மாத்திரமே வேற்றுமைகள் அமைகுகப்படுகின்றன. மலையாளத்தில் அப்பொருட்களைக குறிகக உருபுகள, கதிகள் என்று பெயருள்ள அவ்வியங்கள், தொகைச்சொல் ஆகிய மூன்றும் தேவைப்படுகின்றன.

4. வேற்றுமையுருபுகளின் எண்ணிகைகை இரண்டு மொழிகளிலும் ஏழேயெனினும் பொருளில் அவை பொருந்துவதில்லை.

இங்நிலையில் ஒரு செய்தியையும் இங்கு எடுத்துகுகாட்டவேண்டும். தமிழிலகுகண ஆசிரியர்களும் சமஸ்கிருதத்தை அனுசரித்து ஏழு வேற்றுமைகளைக் கூறினாகளேயொழிய, மேல விவரிதத குறைகளை முன்வைத்துப் புதிய பெயர்களை ஏற்படுததவில்லை. ஆனால் இது மலையாள இலகுகணததிலும் பழைய மரபையே வைதுக்கொண்டிருக்க வேண்டும் என்பதற்குத் துணையாவதில்லை. முன்னர்ச் சென்றவர்கள்

ஏதோ காரணத்தால் ஒரு குழியில் விழுந்தார்கள் என்பதால் பின் வருபவர்களும் அக்குழியில் விழுவதோ அல்லது தங்களுக்கு அவ் விபத்து நிகழாதபடி கருதுதலோ வேண்டுவது? யாருடையதாயினும் பிழையைப் படியெடுப்பது சரியன்று என்பதே என் கருத்து.

55. தன்ம நிர்தேஶிகா கர்த்தா;
ப்ரதிக்ராஹிக கர்ம்மமெ;
ஒடு ஸம்யோஜிகா ஸாகூஷி;
ஸ்வாமி உத்தேஶிகாக்கு, வு;
ஆல் ப்ரயோஜிகயாம் ஹேது;
உடெ ஸம்பந்திகா ஸ்வதா;
ஆதாரிகாதி கரணம்
இல், கல் ப்ரத்யயமாயவ.

நிர்த்தேசிகம் முதலிய வேற்றுமைகளும் அவை ஒவ்வொன்றின் பொருளும் உருபுகளும் முறையே இக்காரிகைகளில் காட்டப்படு கின்றன.

(1) முதலாம் வேற்றுமைக்கு ''நிர்த்தேசிக வேற்றுமை'' என்று பெயர். அதற்கு உருபுகள் ஒன்றும் இல்லை தன்மையே எனில் சொல்லின் சுயவடிவமே வரும். அவ்வேற்றுமை கருத்தாவைக் குறிக் கும். நிர்த்தேசிக என்ற பெயரால், ஏதேனும் ஒரு பெயரை நிர்தேசித தல் மாத்திரம் செய்யுமிடத்து இவ்வேற்றுமையே வரும் என்பது கொள்கை. எ-டு:

கர்த்தாவிற்கு—ராமன் காட்டில் தாமஸிச்சு, ராமன் ராவணனெ கொன்னு.

பெயரை நிர்த்தேசிததலுக்கு—தசரதன் என்ன ராஜாவு, ஸிம்ஹம் ஒரு ம்ருகமாகுன்னு.

(2) ''ப்ரதிக்ராஹிக'' என்ற வேற்றுமை செயப்படு பொருளைக் குறிக்கும். அதன் உருபு ''எ'' என்பது. எ-டு:

ராமன் க்ருஷ்ணனெ அடிச்சு; க்ருஷ்ணன் ராமனெப் பிடிச்சு.

(3) ஸம்யோஜிகா வேற்றுமைக்கு சாட்சி[1] என்ற காரகம் பொருளாகும். ஒடு என்பது உருபு. எ-டு:

சிவன் சக்தியோடு சேருந்நு.

1 உடனிகழ்ச்சி.

(4) உத்தேசிக வேற்றுமைக்கு ஸ்வாமி என்ற காரகம் பொருளாகும். க்கு என்பதோ, ககரம் கெட்டு எஞ்சும் உகரமோ அதன் உருபு. எ-டு:

அவள்க்கு புத்ரன் உண்டாயி; அவனு புத்ரன் உண்டாயி.

(5) பிரயோஜிகா வேற்றுமைக்கு ஏது என்ற காரகம் பொருளாகும். ஆல் என்பது உருபு. எ-டு:

பாகயத்தால் ஆகரஹம் ஸாதிச்சு.

(6) ஸம்பந்திகா வேற்றுமைககு உடைமை பொருளாகும். உடெ என்பது உருபு எ-டு:

ஜாணகியுடெ புஸ்தகம்.

(7) ஆதாரிகா வேற்றுமைககு அதிகரணம் என்ற காரகம் பொருளாகும். இல், கல் ஆகிய இரண்டு உருபுகள் உள்ளன. இவற்றை வழங்குவதில் சிறிது வேறுபாடு உளது.

எ-டு: மெத்தயில் கிடக்குன்னு, படிக்கல் நில்க்குன்னு.

வேற்றுமையுருபுகளின் மொத்த எண்ணிக்கை ஏழாதலால் முதல், இரண்டாம் முதலிய சமஸ்கிருதப் பெயர்களையும் ஒருவாறு பயன்படுத்தலாம். ஆனல் ஒவ்வொரு வேற்றுமைக்கும் சமஸ்கிருதத்திலுள்ள பொருட்களில் ஏதேனும் பாகம் மாததிரமே மலையாளத்தில் உளது என்பதை எப்போதும் நினைவிற் கொள்ளவேண்டும்.

இனிச் சாரியைகளின் உருவங்களைக காட்டுவோம்.

56. வ்யஞ்ஜனாந்தத்தில் இன் சேர்த்து
விபக்தியங்கம் சமய்க்கணம்.

மெய்யிறுதிச் சொற்களோடு, "இன்" என்பதைச் சோத்தால், வேற்றுமையுருபு சேருவதற்குரிய அங்கமாகும். எ-டு:

சொல்வடிவம்	சாரியை சேர்ந்தது	வேற்றுமை யுருபு	உருபு-சேர்ந்த வடிவம்
ராஜாவு	+ இன் = ராஜாவின்	+ எ	= ராஜாவினெ
ராஜாவு	+ இன் = ராஜாவின்	+ ஆல்	= ராஜாவினால்
மனஸ்ஸு	+ இன் = மனஸ்ஸின்	+ ஒடு	= மனஸ்ஸினோடு
கண்	+ இன் = கண்ணின்	+ உ	= கண்ணினு
ஆண்	+ இன் = ஆணின்	+ டெ	= ஆணின்றெ

இந்த 'இன்' என்ற சாரியை ஆறு, நாலு என்ற இரண்டு வேற்றுமைகளில் நித்தியமாகவும் ஏனையவற்றில் விகற்பமாகவும் வரும்.

எ-டு: இரண்டாம் வேற்றுமை— ராஜாவினை ராஜாவே
ஐந்தாம் வேற்றுமை — ராஜாவினுல் ராஜாவால்
மூன்றும் வேற்றுமை — ராஜாவினோடு ராஜாவோடு
நான்காம் வேற்றுமை — ராஜாவினு
ஆறும் வேற்றுமை — ராஜாவின்றெ

இன் என்ற இடைநிலை (சாரியை) பகுதியையும் உருபையும் புணர்ப்ப தற்காகச் சேர்க்கப்படுவதாதலால் ''இல்'' என்ற ஏழாம் வேற்றுமை யுருபிற்கு இன் சேர்ககவேண்டியதில்லை.

ராஜாவில், மனஸ்ஸில், கண்ணில், ஆணில்

என்பவைகளே வேற்றுமை சேர்ந்த சொற்கள்.

ஆனல் ''கல்'' உருபிற்கு இன் தோன்றுதலோ, இரட்டலோ தேவையென விதிக்கப்படுகின்றது.

57. அன் தான் இன் தான் சேர்ந்திடாதே
நில்க்கா கல் சேதனங்ஙளில்
ககாரத் தினிரட்டிப்பு
வேணம் மற்றுள்ளிடங்ஙளில்.

மெய்யிறுதி உயர்திணைப் பெயர்களில் அன் விகுதியெனில், அதுவே சாரியையின் இடத்தை வகித்துக் கொள்ளும். அல்லாத இடங்களிலெல்லாம் ''இன்'' சேர்க்கவேண்டும். அஃறிணையைக் குறிக்கும் பெயரெனின் ''கல்'' என்பதன் ககரம் இரட்டி, ககல் என ஆக்கல் வேண்டும். உயர்திணைப் பொருட்களில் ங்கல் என்றும், அஃறிணைப் பொருட்களில் ககல் என்றும் அல்லாது வெறும் ''கல்'' எனும் உருபு காணப்படுவதில்லை என்பது கருத்து. எ-டு:

ராமன் —ராமங்கல் குரு —குருவிங்கல் கர—கரய்க்கல்
லக்ஷ்மி —லக்ஷ்மியிங்கல், பார்ய—பார்யயிங்கல், படி—படிக்கல்

உயர்திணைப் பெயரிலும் பெரிதும் 'இன்' வழங்கப்படுகின்றது.

58. டாவும் ருவும் இரட்டிப்பு
நாமாந்தத்தில் யதோசிதம்.

''இன்'' சேர்ககப்படினும் இல்லெனினும் பெயரிலுள்ள டகர றகரங்களை நோக்கி இரட்டவேண்டும். எ-டு:

ஆறு —ஆற்றில், ஆற்றின்றெ, ஆறின்றெ
சோறு —சோற்றில், சோறில், சோறின்றெ
தோடு —தோட்டில், தோட்டின்றெ, தோடின்றெ
நாடு —நாட்டோடு, நாட்டோடு, நாடின்றெ, நாட்டின்றெ

59. ஞந்தாங்கத்தில் க லோபத்தால்
உ தான் உத்தேஶிகக் குறி;
ஸம்பந்திகயும் அவ்வண்ணம்
உடெ, டெ என்னு ரண்டுமாம்.

அன் என்ற பால் விகுதியோ, இன் என்ற சாரியையோ சேர்ந்து பல பெயர்களும் ''ன்'' என இறுமன்றே. அதனையே 'ன' கரத்திலிறும் அங்கம எனக் கூறியது நான்காம் வேற்றுமையின் ''க்கு'' என்பதன் ''கக'' கெட்டு, ''உ'' மட்டும் இதனோடு சேரும் உருபாகும். அவ்வணணமே 'ன' இறுதிச சொற்களில் ஆரும் வேற்றுமையுருபாகிய ''உடெ'' என்பதன் உகரம் கெட்டு, ''டெ'' என ஆகும். இரண்டாவது கூறிய கெடுதல் விகறபமாக வரும். ககரம கெடுதல் நிதியம். எ-டு:

ராமன் +ககு =ராமன் +உ =ராமனு, ராமன்னு
மரததின் +ககு =மரததின் +உ =மரததினு, மரததின்னு
ராமன் +உடெ =ராமனுடெ, ராமன்டெ, ராமன்டெ (ன்றெ)
மரதகின் +உடெ =மரதகினுடெ, மரத்தின்டெ, மரதகின்டெ (ன்றெ)

60. மேல்க்கு மேல் லிங்கவசன
விபக்திகள் முறயக்கிஹ.

முகற்பகுதியில் பால் எண் விகுதியிருந்தால் அதுவும், பின்னர் எண் விகுதியிருந்தால் அதுவும், இறுதியில் வேற்றுமையுருபும் என்ற முறையிலேயே பெயர்களில் வடிவம அமையும். ஸமஸ்கிருதம் முதலிய ஆரிய மொழிகளைப் போன்று ஒவ்வொரு எண்ணிற்கும் தனித்தனி வேற்றுமையுருபு திராவிட மொழிகளில் இல்லை. சிதியன் கிளையிலுட்படட மொழிகளிலெல்லாம் இதுவே மரபு.

61. ஸம்போதனயில் ஏ சேரும்
அந்த்யம் தீர்க்கிக்கிலும் மதி.

முன் கூறபபட்ட ஏழு வேற்றுமைகள் தவிர ஸம்போதன என்ற ஒரு வேற்றுமையும் உளது. அது முதல வேற்றுமையின் வகை வேறுபாடாக சமஸ்கிருதத்தில் கணிககப்பட்டிருகின்றது ஸம்போதன என்றால் கேட்பவனை முன்னிலைப்படுத்துதல். அப்பொருளைக் குறிகும் வேற்றுமை ஸமபோதன; அல்லது ஏனைய வேற்றுமைகளின் பெயர் அமைகத முறை அனுசரித்து ஸம்போதிக என்றுமாகும். அதனைக் குறிக்க பெயரோடு ஏ என்ற இடைச் சொல்லைச் சேர்க்க வேண்டும். உயிர் இறுதிப் பெயர் எனில் அவ்விறுதியை நீட்டினாலும் போதும்.

எ-டு: தேவியே!, ஶங்குவே!, ராமனே!, தேவீ!, ஶங்கூ!, ராமா!
"ஸம்பத்தே, கும்பிடுன்னேன் கழலிண வலயாதீஶ்வரீ!
விஶ்வநாதே!" (பா-கை.)

பெயர் வடிவ வரிசை

ஆண்பால்

		ஒருமை	பால்வேறுபாடுள்ள பன்மை	பால்வேறு பாடற்ற பன்மை
1-ம் வேற்றுமை		மகன்	மகன்மார்	மக்கள்
2-ம்	,,	மகனெ	மகன்மாரெ	மக்களெ
3-ம்	,,	மகனோடு	மகன்மாரோடு	மக்களோடு
4-ம்	,,	மகனு, மகன்னு	மகன்மார்கு	மக்கள்க்கு
5-ம்	,,	மகனால்	மகன்மாரால்	மக்களால்
6-ம்	,,	மகனுடெ, மகன்றெ	மகன்மாருடெ	மக்களுடெ
7-ம்	,,	மகனில், மகன்கல்	மகன்மாரில்	மக்களில்
வீளி	,,	மகனே!	மகன்மாரே!	மக்களே!

பெண்பால்

ஒருமை	பன்மை
மகள்	மகளர்
மகளெ	மகளரெ
மகளோடு	மகளரோடு
மகள்க்கு	மகளர்க்கு
மகளால்	மகளரால்
மகளுடெ	மகளருடெ
மகளில்	மகளரில்
மகளே!	மகளரே!

அலிப்பால்

ஒருமை	பன்மை
மரம்	மரங்ஙள்
மரத்தெ மரததினெ	மரங்ஙளெ
மரத்தோடு மரத்தினோடு	மரங்ஙளோடு
மரத்தினு	மரங்ஙள்க்கு

மரத்தால், மரத்திஞல்	மரங்ஙளால்
மரத்தின்றெ, மரத்தினுடெ	மரங்ஙளுடெ
மரத்தில், மரத்திங்கல்	மரங்ஙளில்
மரமே !	மரங்களே !

62. *கர்மார்த்தம் க்லீப நாமத்தில்*
ஸ்வயமே ஸித்தமாகயால்
கருதித்தான் ப்ரயோகிப்பு
ப்ரதிக்ராஹ்யகயாயதில்.

அறிவில் பொருட்களாகிய சடப்பொருள்களேக் குறிக்கும் அலிப் பாற் பெயர்களில் இரண்டாம் வேற்றுமை பயன்படுத்தாமலேயே அதன் பொருளாகிய செயப்படுபொருள் தொடர்பு வந்துகொள்ளும்.[1] அதஞல் மிக்க இடங்களிலும் இரண்டாம் வேற்றுமையை முதல் வேற்றுமை போன்று ஒரு உருபுமில்லாது வழங்கினுல் போதும். எ-டு:

வெள்ளம் குடிக்குன்னு, புஸ்தகம் வாயிக்குன்னு, சோறுண்ணுன்னு, காரியம் பறயுன்னு.

''கருதி'' எனக் கூறியதன் கருத்து, உயர்திணை எழுவாயாகவும், அஃறிணை செயப்படுபொருளாகவும் வருமிடத்து எழுவாய்த்தன்மை உயர்திணைக்கும், செயப்படுபொருட்டன்மை அஃறிணைக்கும் ஆதலால் வேற்றுமையுருபு இல்லாதும், எழுவாய் செயப்படுபொருட்களுகுத் தோற்றம் வருவதால் அம்மாதிரி இடங்களில் செயப்படுபொருட்கு இரண்டாம் வேற்றுமை உருபு வேண்டுவதில்லே என்பதாகும். நல்ல மலேயாளிகள் ஒருக்காலும் வேற்றுமை உருபு சேர்ப்பதில்லே. இரண்டும் அறிவில்பொருட்களாயின் சேர்த்தலே நன்று. எவ்வாறெனின்,

கோடாலி மரத்தெ முறிக்குன்னு. ராமஸ்வாமி மரம் முறிக்குன்னு.

''மிண்டாப் பூச்ச குடமுடய்க்கும'' முதலியவற்றில், குடத்தோடு ஒப்பிடும்போது பூணை அறிவுள்ள பொருளாததால் எழுவாய் செயப்படு பொருள் உணர்விற்கு வழியிருப்பதால் இரண்டாம் வேற்றுமைப் பொருளெய்திஞற் போதும்.

இந்தப் பிரேரணையிலிருந்து மலேயாள இலக்கணத்தில் பல இடங்களில் கைக்கொள்ள வேண்டிய ஒரு மொழி இலக்கணத்தன்மை வெளிப்படுகின்றது. அது எதுவெனில் குண, விருதி, ஸம்பிரசாரணம் முதலிய வர்ண வேறுபாடு, ஆகம உருபு முதலியவை சேர்தல்

1 உயர்திணை மருங்கின் ஒழியாது வருதலும், அஃறிணை விரவுப் பெயர்க்கு அவ்வியல நிலேயிலும் தொல்-எழுத்து 157.

முதலிய எல்லா இலக்கண உபாயங்களும் சொல்லின் எல்லாவிதத்தி லும் இயங்கும் பொருளைச் சுருக்கி ஒன்றிலேயே அடக்குதற்காகச் செய்யப்படுகின்றன. இந்த உபாயங்களைச் சாராதே தெளிவான பொருளிற்குத் தனியே கட்டாயமான தோற்றம் வருமிடத்து இயைபு படுத்தத் துணிவது, வீணபெருமைக் குற்றமும், வாளினுல் மந்திரம் ஜெபித்து வெட்டி முறிப்பது போன்று பரிகசித்தற்குக் காரணமும் ஆகும். இக்கொள்கையைச் சார்ந்தே, முதல் வேற்றுமை, ஒருமை எண் ஏவல் முன்னிலை ஒருமை, முதலியவைகளுக்கு உருபு கற்பிக்கவில்லை. விசேடங்களல்லாது பொதுவாயுள்ளவைகளுககு அடையாளம் வேண்டி வேண்டுவதில்லையன்றே. எல்லோருடைய வேட்டிக்கும் குறி யுளதெனின், எனது ஆடைக்குக் குறியின்மையே ஒரு குறியாயமை யும் என்பதே திராவிடரின் உக்தியாயிருக்க வேண்டும். ''பற்றி'', ''குறிச்சு'' முதலியவைகளின் முன் இரண்டாம் உருபு விரிந்தே வர வேண்டும் எனவும் மற்றும் சில விதிகள இலக்கிய நூற்களின் விஷய மாதலால் இங்கு அதில் நுழையவில்லை. ஸாஹித்திய ஸாஹியதில் விரித்துரைக்கப்படுகின்றது.

இனி வேற்றுமையுருபு ஒவ்வொன்றின் வரலாறு யாதென நோக்குவோம்.

இரண்டாம் வேற்றுமை—எ-இதன் தோற்றம் தெளிவானது. தமிழில் ஐ; மலையாளதில் எ; பழைய கன்னடத்தில் அம்; புதிய கன்னடத்தில் அன்னு, அன்ன, னு; தெலுங்கில் னு, னி என்பவை. பழைய கன்னடத்திலுள்ள அம் என்பதன் மெல்லினம் கெடுவதால் ''அ'' என்றாகியது மலையாளத்தில் எ என்றும், தமிழில் ஐ என்றும் மாறியிருக்க வேணடுமென்று கால்டுவெல் ஊகிகின்றார். அம என் பது சுட்டெழுததின் அலிப்பால் உருவமும் சாரியையுமாதலால் அதற்கு இரண்டாம் வேற்றுமையின் உருபாவதற்குத் தகுதி உண் டென்பது கால்டுவெல்லின் உததி. செயப்படுபொருள் தன்மை அஃறி ணைப் பொருளுக்கும் எழுவாய்த்தன்மை உயர்திணைப் பொருளுககும் உரிய தன்மையன்றே.

மூன்றும் வேற்றுமை—ஒடு-பழைய மலையாளத்தில் உடன் என் பது, இது ஒட்டுதல் என்ற வினை வடிவமே. உடன் ஒடன் என அமையவேண்டும் அன் என்ற சாரியை வீணே சோத்ததாகவிருகக வேண்டும். தெலுங்கில் ''தொடு'' என்ற வினைப் பயன்படுத்தப்படு கின்றது. அது ''தொ'' எனச சுருக்கப்பட்டுளது.

நான்காம் வேற்றுமை—கு-எல்லாத் திராவிட மொழிகளிலும் இது ஒன்றுபோலவே அமைகின்றது. அதன் உயிர் மட்டும் சில-

விடங்களில் ''எ'' எனவும், ''இ'' எனவும் வேறுபட்டு கெ, கி என மாறுபடுவதே உளது. இதன் வரலாறு இன்னும் சரியாகக் கண்டு பிடிக்கப்படவில்லை. கால்டுவெல்லின் ஐயம், ''கேள்க்கும்'' முதலிய வினை வடிவங்களில் காணப்படும் ''கு'' ஆகவீருகும் என்பது. மலையாளத்தின் னகர இறுதிச் சொற்களின் அங்கஙகளில் ககரம் குன்றிப் போகும். ன்கு-ன்னு என்றுகிவிட்டது எனவும் அமையலாம். பின்னர் இரட்டலும் இல்லாது ன், உ எனமட்டும் ஆகிவிட்டிருகக லாம். குண்டர்ட்டு இங்கும் ''இனது'' என்ற தமிழ் ஆறும் வேற்றுமை வடிவத்திலிருந்து ''இன்னு'' தோன்றியதெனத தொடர்பு படுத்து கின்றார். கால்டுவெல 'ன்றெ' என்பது மட்டுமே தமிழிலுள்ள ''அது'' என்பதிலிருந்து வந்ததாகக கருதுகின்றார். குண்டர்ட் இரண்டையும் மயகுகின்றார். அவருகுப பெயர்களை கு-வகை, னு வகை என இரண்டாகப பிரிகவேண்டிவந்தது. னு என்றும், ன்றெ என்று மன்றே பெயர்கள் முடிகின்றன. அவற்றின் னகரம பெயரில் உள்ளது என்பதை உணர்நதிருநதால் மேல்நாட்டினர்கு இத்தகைய பிழை நேராதிருந்திருகுகலாம். றகரத்தின் சரியான தொனி 'ட' என்பதை இதுவரை யாரும நிலைநிறுத்தியதில்லை. எனிகு, நினக்கு, தனிகு என்ற சாவநாமங்களின் அங்கம் சிறியதாதலால் அகரமோ இகரமோ சேர்க்கப்படுகின்றது ''இன்'' சோக்கப்படும் பெயர்கள் அங்கம் நீண்டனவாதலால் ககரம் குன்றுகின்றது. ககரம் பல இடங்களிலும் குன்றுகின்ற எழுத்தன்றே. குன்றலைப் பதில் நிறைவு செய்யவே முன் னகரம் இரட்டிககப்படுகின்றது. ஆனால் காலப்போக்கில் இரட்டலும் தேவையற்றதாகிவிட்டது.

ஐந்தாம் வேற்றுமை—ஆல்-இதன் வரலாறு இன்னது எனத் திட்டப்படுத்தப்படவில்லை கால்டுவெல் இதனை வாய்க்கால் முதலிய சொற்களில் காணப்படும் ''வழி' என்ற பொருளுடைய ''கால்'' என்பதிலிருந்து தோன்றியது என்கின்றார் ''அல்'' என்ற சுட்டெழுதின் உருவம நீண்டும் இது அமைநதிருகுகலாம் எனவும் ஐயுறுகின்றார். குண்டாட்டின் கருதில் ''ஆதல்'' என்ற வினையின் ''ஆகல'' என்ற தொழிற்பெயரிலிருநது ''ஆல்'' தோன்றியதென்பதாகும்.

ஆறும் வேற்றுமை : உடய, உடெ, டெ—''உடம'', ''உடய'' முதலிய வடிவங்களில் காணப்படும் ஸ்வாமி வாசகமாகிய ''உட'' என்ற வினையின பெயரெச்ச உருவமாகும இது. ''அவனுடய படஜ்ஜனம ச கோரம்'' முதலியவற்றிலுளளதைப் போன்று கவிஞர்கள் இவ் வடிவத்தைத் தனிச்சொல்லாகவும் வழங்குவதுண்டு. ஐரோப்பியர்களாகிய மலையாள இலகுகண ஆசிரியர்கள் ஆறும் வேற்றுமையுருபு

''அது'' என்ற சுட்டிலிருந்து வந்ததாகக கருதுகின்றனரெனவும அதனில் நியாயம் காணப்படவில்லையெனவும் முன்னரே கிலிகிறுத்தப்பட்டுளது. ஆரும் வேற்றுமைக்குத் தமிழிலுள்ள பல உருபுகளில் ஈதொன்றை மட்டுமே மலையாளம் ஏற்றுக்கொண்டுளது. இன், அத் ஆகிய சாரியைகளையே ஆரும் வேற்றுமையுருபுகளாகக் கால்டுவெல் கொள்கின்றார். ஆனால் அதற்குத் தேவையில்லை. ஆரும் வேற்றுமையிலும் ஏழாம் வேற்றுமையிலும் அங்கங்களுகளே அந்தந்த வேற்றுமைப் பொருளைக் காட்டும் ஆற்றலுண்டு எனக் கற்பித்தால் போதும். எல்லாச சாரியைகளுமே இவவேற்றுமைகளின் உருபுகள் என்பதும் அவ்வேற்றுமை இறுதியில் நின்று இரண்டு முதலிய வேற்றுமைகள் தோன்றுகின்றன என்பதும் பிறவும் மேனாட்டினா கொள்கை.

ஏழாம் வேற்றுமை : இல், கல்—வீடு என்ற பொருளுடைய இல்லம் என்ற சொல்லே 'இல்' உருபு ஆயிற்று என்பது தெளிவு. இச் சொல் தமிழிலும் மிகுதியாக வழங்கப்படுவது 'கல்' என்ற உருபு நன்னூலிற் கூறப்படும் கால்[1] என்பதன் குறுகிய வடிவமேயென்று மேனாட்டு இலக்கண ஆசிரியர்கள் கருதுகின்றனர். தமிழிலேயே உள்ள 'கண்' என்ற உருபின் மற்றொரு உருவமாயிருக்கவேண்டும் என்பதே பெரிதும நிகழத்தக்கதெனத் தோன்றுகின்றது. கண் என்பதற்கு இடம் எனவும் பொருளுண்டு. அப்பொருள் மலையாள வழகிற்கு நன்கு பொருநதும்.

விளியை ஒரு தனி வேற்றுமையாகக் கருதவேண்டியதில்லை. 'ஏ' என்ற இடைச்சொல்லைப் பல பெயர்களோடும் விளிப்பொருளைக் குறிக்கச் சேர்ப்பதுண்டு. உயிரிறுதிச் சொற்களில் உயிர் நீட்டப்பட வேண்டும்.

63. கதி சேர்ந்த விபக்த்யந்த
பதம் மிஶ்ர விபக்தியாம்
அதிலோ கர்த்தரு கர்ம்மாதிக்கு
ஒத்த போலெ விபக்திகள்.

பெயர்களுக்குப் பிற பெயர்களோடும் வினையோடும் உள்ள தொடர்பைக் காட்டுவதே வேற்றுமையின் வேலை. அவ்வகைத் தொடர்புகளே எழுவாய், செயப்படுபொருள் முதலிய காரகங்கள். ஆனால் பலவகையாயுள்ள தொடர்புகளையெல்லாம் வேற்றுமையுருபுகளைக்கொண்டு மாத்திரம் குறித்தல் இயலாது. அதனால் உருபுகளுக்குத் துணைசெய்ய அல்லது விளகக கதிகளைப் பயன்படுத்துவதுண்டு.

1 தொல் – சொல் 83; நன்-

அதனுல் கதியும் வேற்றுமையுருபும் சேர்ந்த வாக்கியம் வேற்றுமைக்குச் சமமாகும். அதனுல் கதி சேர்ந்த வேற்றுமையுருபிற்குக் ''கலப்பு வேற்றுமை'' என்று பெயர் கொடுக்கலாம். தமிழரும் பழைய மலையாள இலக்கண ஆசிரியர்களும் சமஸ்கிருததைப் பின்பற்றுதற்காகக் கதிகளைத் தனி இனமாகக் கொள்ளாது வேற்றுமையுருபுக்குள்ளேயே அடக்கினர். திராவிட மொழிகளில் உருபு தனித்து நின்றும், கதியாகச் சேர்ந்தும் இரண்டு முறையில் வேற்றுமை அமைகின்றது. இரண்டினையும் வேறுகக் காட்டுதற்கு இங்கு உருபுகளை மட்டும் வேற்றுமை என்றும், கதி சேர்ந்த வேற்றுமையைக் கலப்பு வேற்றுமையென்றும் விதிகபப்ட்டிருக்கின்றது.

கதியாகச் சேரும்போது வேற்றுமைகளை நிர்ணயிக்கும் விதியாதெனில், கதிகளின் தோற்றத்தின்படி எந்த வேற்றுமைகுத் தேவை வருகின்றதோ அதனோடு அந்த வேற்றுமையுருபைச் சேர்த்துக கொள்ளவேண்டும். செயப்படுபொருள் உளதெனில் இரண்டாம் வேற்றுமை ஆகும். இடப்பொருள் எனின் ஏழாம் வேற்றுமை ஆகும். இவ்வாறு முறையமையும். சில எடுத்துகாட்டுகள் காட்டப்படுகின்றன.

1. உப்புதொட்டு கர்ப்பூரம் வரெ. 2. புதரனோடு கூட வருன்னு.
3. மோட்சதினு வேண்டி தபஸ்ஸு செய்யுந்நு.
4. வ்ருக்ஷிததில் நின்னு வீழுன்னு.

1. ''வரெ'' என்பது தன்வினையெசமாதலால் அதற்கு எழுவாயின் தேவை உளது. அதனுல் 'கர்ப்பூரம் வரெ' என்பது முதல் வேற்றுமை. 'தொட்டு' என்ற செயப்படுபொருள் குன்றுவினையின் முன் வினையெச்சத்திற்குச் செயப்படுபொருள் வேண்டி நிற்பதால், 'உப்பினெத் தொட்டு' என இரண்டாம் வேற்றுமைத் (தொகை).

2. ''கூடுதல்'' சாட்சி தேவைப்படுதலால் மூன்றும் வேற்றுமை.

3. ''வேண்டி'' என்பதற்கு அடிசசொல் பொருளுளதாதலால் 'வேண்டி' என்பது சேருமபோது நான்காம் வேற்றுமையாகும்.

4. நிற்பது என்ற தொழிலில் இடம் முக்கியம் ஆதலால் ''விருட்சத்தில் நின்னு'' என்பது ஏழாம் வேற்றுமை.

64. மூலம் நிமித்தம் இத்யாதி
நாமத்தோடு ஸமாஸவும்.

உருபையும் கதியையும் தவிர, ''மூலம், நிமித்தம்'' முதலிய சொற்களோடு பெயர்களை தொகுதலும் வேற்றுமை அமைக்கப்படும்.

இவ்வாறு அமையும் உருவங்களுக்கு ''தொகை வேற்றுமைகள்'' எனப் பெயரும் இடலாம்.

எ-டு: அது மூலம், அது நிமித்தம், அதின் பேரில் முதலியன.

4. வேற்றுமைப் போலியியல்*

65. கிலம் லுப்தம் இரட்டிப்பும்
விபக்தியாபாஸ ஸம்ஜ்ஞமாம்.

வேற்றுமைக்கு மேலும் சில வேறுபட்ட இலக்கணங்கள் உள்ளன. அவையாவன: (1) கிலம்: சில உருபுகள் எல்லாப் பெயர்களோடும் சேர்ந்து காணப்படுவதிலீல. (2) தொகை: வேறு சில வேற்றுமை வடிவங்களில் உருபு தொக்கு 'அங்கம்' மாததிரம் எஞ்சிக் காணப்படுகின்றது. (3) இரட்டிப்பு: வேறு சில இடங்களில் ஒரு வேற்றுமையுருபின் மேல் மற்றொரு உருபும் சேர்ந்து காணப்படும. இந்த வேற்றுமையின் வேறுபட்ட இலக்கணங்களுக்கு ''விபக்தியாபாஸம்'' என்று பெயர். ஏழாம் வேற்றுமைகுக் சுயமே உள்ள ''இல்'' உருபுடன் சேர்த்துக கூறப்பட்ட ''கல்'' உருபை, பன்மைப் பெயர்களில் வழங்குவதில்லீ. ஒருமைப் பெயரிலும் எல்லாப் பெயர்களோடும் முழுநிலையில் காணப்படுவதில்லீ. அதனால் 'கல்' என்பது ''கிலம்'' ஆகும். அதனை இவ்வினத்திலேயே சேர்க்கலாம்.

மண்டபத்தும் வாதுக்கல், ஆற்றுங்க(ங்ங)ல், படிக்கல் என்பவை போன்ற கல் உருபு இறுதிகள் சிறப்புப் பெயர்களாகவும் அமைந்துள்ளன. தொக்கு நிற்றலுக்கு,

66. கால தேஸங்ஙளெச் சொல்லுன்
னேடத்தாதாரிகய்க்கிஹ
அத்துவும் த்வித்வவும் சேர்ந்நோர்
அங்கமோ ஸ்தமோ மதி.

காலத்தையும் இடத்தையும் குறிக்கும் பெயர்களில் ஏழாம் வேற்றுமை இல்லாது, ஏதேனும செய்கைகள் உண்டெனின், அதனை மட்டும் சேர்த்துப் பெயரைப் பயன்படுத்தினுற்போதும். அங்கத்தின் செய்கை: 'அம்' என முடிவதில் அனுஸ்வாரத்தை ''த்த்'' எனத்

* வேற்றுமைப போலி என்பது உரிய உருபின் இடத்தில் வருபவற்றைக குறிப்பிடுவது எனினும் இவ்வியலில் எல்லாப் பெயரொடும் வராத உருபுகள, உருபு தொகல், சாரியை சொல்லுருபுகள் முதலியன பேசப்படுகின்றன எனவே மூல நூலிலுள்ள விபக்தியாபாசம் என்பது வேற்றுமைப் போலி (வேற்றுமை உருபிற்குப் பதில வருவது) என மொழி பெயர்க்கப்பட்டிருகின்றது.

திரித்தல்; டகர, றகர இறுதிகள் இரட்டல்; மெய்யிறுதிப் பெயர்களுக்கு "இன்" இடைநிலை ஏழாம் வேற்றுமையில் மட்டுமில்லையென விதித்துள்ளதால் அது இங்கு கணிக்கப்படவில்லை. அங்கச் செய்கை ஒன்றும் இல்லையெனில் வெறும் சொல்லையே வழங்கலாம்.

எ-டு: நேரத்து, காலத்து, ஸமயத்து, அப்போள், அப்பொழுது, ஸ்தலத்து, இடத்து, அரிகத்து, தூரத்து, சாரத்து, அகத்து. 1092-ம் ஆண்டு கன்னி மாஸம் 27-ம் தியதி எழுதியது. கோழிகோட்டு சென்னு, வடயாற்றுபோயி, தஞ்சாவூர் தாமஸிச்சு.
"எண்டியும் மண்டினூர்".
"இடவலமுள்ளவர்", "ஸேனயெ நாலு திக்கும் அயச்சு".

'அந்நேரம்', 'இந்நேரம்' முதலியவை போன்று அங்கச் செய்கை உள்ள இடத்தும் அதனைச் செய்வதில்லை.

67. அத்து ஏதிலுமே சேரும்
கால தேஸவிவக்ஷியில்.

அது உள்ள இடம் என்றே காலம் என்றே ஏதேனும பொருளைக் குறித்தால் காலத்தையும் இடத்தையும் குறிப்பவைகளல்லாத, பெயர்களுக்கும் 'அத்து' என்ற சாரியை வேற்றுமைப் போலியாக வரும் (குற்றியலுகர இறுதியை அத்தாக ஆக்குவது உச்சரிப்பதற்காக) எ-டு:

காற்றத்து—காற்றுள்ள இடதது அல்லது காலத்து
மழயத்து[1]—மழையுள்ள இடத்து அலலது காலத்து.

68. இருட்டத்து நிலாவத்தென்னி
இத்யாதிக்கு அத்து தன்னெயோ
குறுப்பன்மாரிலெப் போலெ
கார்யார்த்தம் லிங்க யோகமோ
அதுள்ளதென்ன தத்வத்தில்
க்லீப மென்னும் க்ரஹிச்சிடாம்
ஆதாரிகயில் மாத்ரம் தான்
ப்ரயோகம் கிலமாகயால்.

"அத்து" என்ற ஒரு இடைநிலையைக கொள்ளும்போது, இருட்டத்து, நிலாவத்து என்ற உருவங்கள் சரியே. "அம்" என்ற பால் விகுதியின் அனுஸ்வாரப்திறகுத திரிதல் வரும்போதுள்ள உருவமே

1 தொல் – எழுத்து–85.

'அத்து' என முன்னர் நிலைநிறுத்தப்பட்டது. இக்கொள்கையில் இவ் வகை உருவ வேறுபாடுகளுக்குத் தோற்றம் எவ்வாறு என எழும் தடைக்கு இரண்டு விதத்தில் அமைதி கூறலாம். (1) 'கறுப்பு' என்ற ஒருமைச் சொல்லில் இல்லாத பால் விகுதி ''அன்'' என்பதை உருவ அழகிற்காகப் பலர் பாலிற் சேர்த்து ''கறுப்பன்மார்''[1] என்ற உரு வத்தை ஆக்கும் முறையனுசரித்து, காரியத்திற்காகப் பால் விகுதியா கிய ''அம்'' சேர்ககப்படுகின்றது (2) அது உள்ளது என்னும் பொருளில் தத்வத் உருபு என்று கூறப்படும் தத்தித இறுதியாக ''அம்'' விகுதி வருகின்றது என்பது இரண்டாவது அமைதி. தத்வத் உருபு எனில் எல்லா வேற்றுமைகளோடும் சேர்ந்துவரவேண்டுமே யென வினவின் இது கிலம் ஆதலால் 7-ஆம் வேற்றுமையில் மட்டும் வருகின்றதென அமைதி கூறலாம்.

69. இன்னங்கம் தனியே நில்க்காம்
ஸம்பந்திகயில் இங்ஙனெ;
அங்கமன், தன்னென்னு மாவாம்
ஸமாஸங்களில் ஆவுகில்.

ஆரும் வேற்றுமைப் பொருளாக குறிக்க ''இன்'' என்னும் இடை நிலையை வேற்றுமைப் போலியாக உபயோகிகலாம. அரியதாக 'இன்' என்பதன் இடத்தில் ''அன்'' என்ற இடைநிலை வருதலுண்டு. 'தன்' என்ற படர்க்கைப் பொதுப்பெயரையும் இதனைப் போன்று இடைநிலையாகப் பயன்படுததலாம். இவையெல்லாம் தொகையிலேயே வருவன என்பது சிறப்பு விதி. ஆரும் வேற்றுமைப் போலிக்கும் அதன் விசேடியத்திற்குமிடையில வேறு சொற்களை வழங்கக கூடா தென்பது கருதது. எ-டு:

குன்னின் மகள்—குன்னின்றெ மகள் பனன் குல—பனயுடெ குல
பாடத்தின்கர —பாடத்தின்றெ கர வழுதனங்ஙா—வழுதன யுடெ கா(ய்)
குலன் கொம்பு —குலயுடெ கொம்பு ஸுதன் தன் வாக்கு கேட்டு.

இனி இரட்டிப்பு.

70. அதிலுள்ளதினைக் காட்டும்
"எ" சேர்ந்த ஆதாரிகா பதம்
ஸம்பந்திகாந்தவும் இதும்
தத்திதம் லிங்க யோஜனே.

---

1 கறுப்பன்மார் – இச்சொல்லில அன் என்பது சொல்லின் உருவ அழகிற்கன்று. தோழிமார் என்பது போன்று விகுதிமேல் விகுதிப்பேறுகும்.

ஏழாம் வேற்றுமையிறுதியோ அதன் பொருளிலுள்ள வேற்றுமைப் போலியோ ஆகிய சொல்லில், ஏ என்பதைச் சேர்த்தால் ''அதிலுள்ள'' என்ற பொருளாக குறிக்கும். இந்த வேற்றுமைப் போலியிலும் ஆறும் வேற்றுமையிறுதியிலும் பால் விகுதிகளைச் சேர்த்து தத்திதப் பெயர்களை ஆக்கலாம். எ-டு:

காட்டிலே ஆன, த்ருஷ்ரேததேவர், கொல்லத்தேக் காயல்,
காற்றதேத் தோணீ, ஈ மாஸத்தெ ம்பளம்.

முன் ஆண்டத்தேப பதிவு, இன்னததே ஸ்திதி, நாளத்தெத் தபால் முதலியவைகளில், ''கார்யார்ததம் லிங்கயோஜனம்'' என்ற விதிப்படி 'அம்' என்ற பால் விகுதியும வருகின்றது என்பது சிறப்பு.

ததிதத்திற்கு எடுத்துக்காட்டு :

என்றேது; என்றேவள்; என்றேவன்[1]; ராஜாவின்றே[2]—வன், -வள், -து. காட்டிலே—வன், -வள், -து; வீட்டிலே—வன், -வள், -து.

71. ஆதாரிகோத் தேஸிகளள்
உபயார்த்த விவக்ஷியில்
மேல்க்குமேல் சேர்ந்நுத்பவிக்காம்
த்வி விபக்திக ரூபவும்.

விஜனகு ஆதாரமாகிய இடங காலம் முதலியவைகளை ஏழாம் வேற்றுமை குறிகின்றது; அதன் அடையாளமாகிய ''இல்'' உருபிற்கு இடம் (வீடு) என்பது பொருள். நான்காம் வேற்றுமை எழுவாயின் கருத்தைக் குறிகும். இப்பொருளிரண்டும் ஒரு இடத்தில் சேர்ந்தும் வரும் அவ்வாறுள்ள இடததில் இரண்டு வேற்றுமைகளும் ஒன்றின்மேல் மற்றைபது என்னும் முறையில் சேர்கலாம். ''வெள்ளத்திலேகிறங்நுன்னு'' முதலியவைகள் எடுத்துகாட்டுகள். இங்கு வெளளதில் என்ற ஏழாம வேறறுமைகு வெள்ளதின்றெ உள்ளு (ஆழம்) என்பது பொருள். அதனக கருதியே இறங்குதல் என்பது தொடர்கின்றது. ஆனல் ''வெளளதிலகு'' என்ற உருவமே போதும் ''ஏ'' அழகுகாக மட்டும சேர்கபபட்டது. பழைய மலையாள வழகுகளில் ஏ சோபபது வழகமன்று. ''அதில்க்கு'' என்று ராமசரிததிலும அடவியல்க்கு எனக் கேரளவர்ம ராமாயணத்திலும் காணப்படுகின்றன.

---

1 எனனுடையது, எனனுடையவள், என்னுடையவன்.

2 ஏழாம் வேறறுமை பெயாகொண்டு முடிதலுகுச் சான்றுகள் இவை. விஜன கொண்டு முடிதலையும் இதனையும வேறுபடுத்தறகு 'ஏ' சேர்க்கப்பட்டிருகலாம்.

72. அதாது உபாதி காட்டான் தான்
குறி ஒரோன்னு சேர்ப்பது
அதினு லெந்திரட்டிக்கில்
ஆக்யாதம் தான் விபக்தி தான்.
ராவிலத்தேது என்னிடத்து
ஶப்தம் ஆதாரிகாந்தமாம்
ரண்டாம் விபக்திக்கு அங்கம் தான்
லிங்கம் தானத்து வென்னது.

ஸமஸ்கிருதம் முதலிய ஆரிய மொழிகளில் உருபு எனக் கூறப் படுவது சிதைந்து மறைந்த ஒரு எழுத்தோ வர்ணமோ ஆகும். பகுதியி னின்று வேறுபடுத்தினுல் அதற்குத தனியே பொருளில்லை. ஒட்டுநிலை அமைப்புள்ள திராவிட மொழிகளின் நிலை இதனைப் போன்றதன்று. இவற்றில் சொற்களுக்கு முகியத்துவம் உருபுகளை ஒத்து உளது. ஓரிடத்தில் பகுதியாக நிற்கும சொல் வேறோரிடதது உருபினிடத்தை வகிக்கின்றது எனவும் வரும் ''உடம'' என்பதில் 'உட' என்பது பகுதியாக அமைய, அவருடெ என்பதில் ''உட'' உருபாக அமை கின்றது. அதனுல் சமஸ்கிருதத்திலுள்ள தொகைகளைப் போல சில விடங்களில் பகுதி-உருபு சேர்கையை கணிக்கவேண்டும். ஒவ்வொரு சிறப்புப பொருளையும் காட்டுதற்குப் பகுதியோடு ஒவ்வொரு அடை யாளம் அல்லது உருபு சேர்க்கப்படுகின்றது. பொருளின் எண் ணிகை பெருகுந்தோறும், அடையாளங்களின் எண்ணிக்கையும் பெருகும். இவ்வாறு ஒட்டுநிலை மொழிகளில் சொற்கள் மிக நீண்டு அமையும். வைகருத மொழிகளின் நிலையும் இதுவே. 'அகாம்யந்த' என்ற சமஸ்கிருதச் சொல்லையும், Amabantur என்ற லத்தீன் சொல்லை யும் நோக்குக:

அகாம்யந்த =		Amabantur =	
அ	—இறந்தகாலகுறி	Am	—அடிச்சொல்
		a	—சாரியை
காம்	—அடிச்சொல்	ba	—இறந்தகாலக்குறி
ய	—செயப்பாட்டு விகரணம்	nt	—ப்ர, பு, ப, வ.
அந்த	—ப்ர, பு, ப, வ.	u	—சந்தி எழுதது
		r	—செயப்பாட்டுருபு.

ஆனுல் ஆரிய மொழிகளில் அடையாளங்கள் உருபுகளாதலால் ஒரெ முத்தின் மிகுந்து நீள்வதில்லை என்ற வேறுபாடு மட்டும் உளது. அத னுல் திராவிட மொழிகளின் இயல்பை நோக்கும்போது வேற்றுமையின் மேல் வேற்றுமையோ, வினைமுற்றின்மேல் வினைமுற்றோ இரட்டி வரு-

வதற்கு ஏது தடையுமில்லை. ''ராவிலேத்தது'' என்ற சொல்லை நோக்குக. இங்கு ராவு-பகுதி; அதனோடு ''இல்'' ஏழாம் வேற்றுமை உருபு சேர்த்து ''ராவில்'' என வந்த உருவதனை வேற்றுமையிறுதி எனக் கூறிக்காது, ராவு-இல் எனப் பகுதிகளின் தொகை போன்று கணக்கிட்டால், அது சமஸ்கிருதத்தில் ''ராதரி காலம்'' என்ற தொகைச் சொல்லிற்கு நிகராகி, இரவுள்ள காலம். (முழுவதும் முடியாத இரவுக் காலம் அதாவது விடியல) என்ற பொருளுடைய ஒரு பெயராய் முடியும். பின்னர் இதனோடு ஏழாம் வேற்றுமைப் போலியைச் சேர்த்தால் ''ராவிலத்தே'' என்ற உருவமாகும் அதனைப் பின்னர்த ததிதம் ஆக்கும்போது ''ராவிலத்தேது'' என உருவெய்தும். இங்கு ''ஏ'' என்ற வேற்றுமைப் போலியின் பகுதி 'ராவில்'' என்ற ஏழாம் வேற்றுமை இறுதியாகும். ''அத்து'' என்பதைக் குறித்துக் கூறப்பட்ட இரண்டு கருத்துகளில் எதனைக கொண்டாலும் இங்கு வேற்றுமைப் போலியின் பகுதி ''ராவில்'' என்ற ஏழாம் வேறறுமையிறுதியாகும்.

சரியான வினைமுற்றையே பெயராக்கிக கற்பிதது, அதனோடு பெயரைப் போன்று வேற்றுமையுருபுகளைச் சேர்ததல் தமிழில் வழக்கம். கிடந்தேன் என்ற இறந்தகாலத தன்மை ஒருமைச் சொல்லோடு ''ஏ'' என்ற இரண்டாம் வேற்றுமை உருபைச் சேர்த்துக் ''கிடநதேனப்* (கிடந்த என்னை) பார்த்தான்'' என வழங்கலாம். இதனைப் போன்றே ''கிருப அடைந்தேன்'' என்ற வாகியததிலும் வினைமுற்றோடு நான்காம் வேற்றுமையுருபைச் சேர்தது ''கிருப அடைந்தேற்கு'' என்ற உருவத்தை ஆகலாம். இன்னும் 'கருப்புச்சிலை வளைத்தான் (அது) கழல் போற்றி' (வளைத்தவனது கழல்) முதலிய வழகுகள் தமிழ்க கவிதைகளில் அரியனவல்ல மலையாளததில் 'வளச்சவன்றெ' என்பது போன்று பெயரெசசதினின்று தோன்றிய வினைமுற்றுப் பெயர்களையே இவ்வாறு பயன்படுத்துவதுண்டு. ஆண்பால் சர்வ நாமங்களுகும், ஆண்பால் விகுதிகளுக்கும உருவத்தில் பெரிய வேறுபாடு இல்லாததால் அஃறிணைப் படர்க்கையிலும் மற்றும் வினைமுற்றையும், வினைமுற்றுப் பெயர்களையும் பொருளகொண்டு வேறுபிரித்தறிய முடியும். சமஸ்கிருததில ''பாவப்ரதானம் ஆக்யாதம்'' எனற இலகுகண விதியால் இவவகை வடிவங்களின் தொடர்பே வருவதில்லை.

73. வெள்ளத்திலோட்டு தாழத்தோட்டு
என்னு ஸம்யோஜி காந்தவும்
ஆதாரிகய்க்குமேல் காணும்;
ட த்வித்வம் தான் விஶேஷமாம்.

* வினையாலணையும் பெயர்.

வெள்ளத்திலோட்டு, தாழத்தோட்டு முதலிய வடிவங்களை ஏழாம் வேற்றுமையுருபின் மேல், மூன்றும் வேற்றுமை வருவதாகக் கணக்காக்கலாம். ஒடு என்ற மூன்றும் வேற்றுமையுருபின் டகரம் இரட்டியது என்பதே வேறுபாடு. ''படுதல்'' என்ற அடிச்சொல்லின் முன் வினையெச்சமாகிய ''பெட்டு'' என்ற வடிவத்தையும் இப்பொருளில் அவ்வியமாகப் பயன்படுத்தலுண்டு. கீழ்ப்பெட்டு – கீழோட்டு; மேல்ப்பெட்டு–மேலோட்டு. அதனால் வெள்ளத்திலோட்டு என்பதும் வெள்ளத்தில் பெட்டு என்பதன் சுருக்கம் என ஆகலாம்.

வேற்றுமைப் போலிகளில் (விபக்தியாபாஸங்களில்) சிலவிடத்து உருபைத் தவிர அங்கங்களையே உருபிறுதி போன்று வழங்குவதன் உத்தியைக காட்டுவோம்.

74. *ஸ்வதந்த்ரஸ்ய கர்த்தாவின்*
கீழில் தான் மற்று காரகம்;
பராஶ்ரயத்தைக் காணிக்கு
மின்த்வித்வாத்யங்க ஸம்ஸ்க்ரிய.

அடுத்துக் காரகங்களை விரித்துரைப்போம். எல்லாக் காரகங்களிலும் முதன்மையுடையது கருத்தாவாகும. கருத்தா சுதந்திரமுடையதாக நின்றுகொண்டு ஏனைய காரகங்களின் துணையோடு வினை நடத்துகின்றது. அதனால் அத்தகைய கருத்தாவைக் குறிக்கும் முதல் வேற்றுமை, வேற்றுமைகளில் முதன்மையாகின்றது. முதல் வேற்றுமைக்கு ஏனையன கீழடங்குவன என்று காட்டவே ஏனைய வேற்றுமைகளில் இடைநிலை சேர்த்தல் முதலிய விகாரங்கள் செய்யப்படுகின்றன. எனவே விகாரங்களால் ஒரு பெயர் மற்றொரு பெயருக்கோ வினைகளோ அடை ஆய்விடுகின்றது. வேற்றுமைப்போலி உருவங்கள் இவ்வளவு மாத்திரம் காட்டுகின்றன. அங்கத்தோடு வேற்றுமையுருபைச சேர்த்தால் அவ்வுருபின் பொருளும பெயரில் சேரும். 'காற்று', 'மகன்' இரண்டும் சமநிலையில் முதன்மையுடைய பெயர்கள். ''காற்றின் மகன்'' என்று கூறும்போது காற்று மகனது விசேடணமாகுமென்பது தெளிவாகும். காற்றின்றெ மகன் என்றுகும்போது காற்றிற்குப் பிறந்த என்ற ஆரும் வேற்றுமைப் பொருளும் தெளிவாகும். இத்தகு உத்தியை நோக்கும்போது 'காட்டான', 'ஆயிரதாண்டு', 'செப்புக் குடம்' முதலியவைகளில் 'காட்டு', 'ஆயிரத்து', 'செப்பு' முதலிய பெயர்ச் சொற்களையும் வேற்றுமைப் போலியில் சேர்க்கலாம். சார்ந்து வரும் அடையாளங்களைச் சேர்த்த பகுதியை நோக்குக.*

---

* கேரள பாணினீயம் 108–ஆம் நூற்பா.

5. காரகவியல்

75. நாமவும் க்ரியயும் தம்மில்
உள்ள யோஜன காரகம்.

பெயர்களுக்கு வினையோடுள்ள தொடர்பே காரகமாகும். எவையெல்லாம் சேர்ந்து ஒரு வினையைத் தோன்றச் செய்கின்றனவோ அவையெல்லாம் அவ்வினையின் காரகமாகும். ''தந்தையின் ஆணையால் பதினொன்று ஆண்டுகள் ராமன் காட்டில் வதிந்தான்'' என்ற எடுத்துக்காட்டில் 'இராமன்', 'ஆணை', 'ஆண்டு', 'காடு' இவையெல்லாம் உளவெனிலே ''வதிந்தான்'' என்ற வினை முழுமை அடைகின்றது. இவற்றுள் ஒன்று குறைந்தால் உப்பு, மிளகு, புளி ஆகியவை வேண்டிய காளன் என்ற கறிக்கு அசசுவைகளுள் ஒன்று குறைவதனால் ஏற்படுவது போன்ற ஒரு சுவையின்மை அமைகின்றது. இவ்வாறு ஒரு சொல்லின் பொருள நிறைவுக்கு பிற சொற்களின் தேவை வருவதற்கு ''ஆகாம்க்ஷி'' என்று பெயர். அதனால் ஒரு வினையின் ஆகாம்க்ஷியை நிறைவு செய்வதே ''காரகம'' என்று கருத்து எய்துகின்றது.

76. பலானுகூலம் வ்யாபாரம்
க்ரியயின் பொருளாயது.

வினை என்பது செய்கை. எந்தச் செய்கைக்கும் ஒரு பயன் காணப்படும். அதனால் பயனுக்குத் துணைநிற்கும் இயக்கமே வினை என்று வினைக்கு இலக்கணம் கூறலாம். ''போதல்'' என்ற வினையில், சலனம் இயக்கமும, பிற இடத்தைச் சேர்தல் பயனும் ஆகும். உறங்குதலில் கண்மூடி மனதை இந்திரியங்களினின்று பின் இழுத்தல் இயக்கம்; அதனாலுண்டாகும் ஆன்மா தன்னை மறத்தல் பயனுகும். இவ்வாறு எல்லா வினைகளின் பயனையும், இயக்கங்களையும் பிரிக்கலாம். எழுவாய் செயப்படுபொருள்களுக்கு இலக்கணம் கூறுதற்கு வினையை இவ்வாறு பிரித்தால் மிகவும் வசதி ஏற்படும்.

77. ப்ரதான காரகம் கர்த்தா;
வ்யாபார ஆஶ்ரயமாணவன்;
வ்யாபாரம் ஒன்னில் மற்றொன்னில்
பலம் என்னிரு பாகவும்
பிரிஞ்ஞீடில் பலத்தின்றெ
ஆஶ்ரயம் கர்ம்ம காரகம்.

பிற காரகங்களுக்கெல்லாம் தலைவனுவான் கருததா. இயக்கமென்றும் பயன் என்றும் வினைகளை இரண்டு பகுதியாகப் பிரித்தால், இயக்கத்தைச் சார்ந்து கருத்தாவும் பயனைச் சார்ந்து செயப்படு

பொருளும் அமையும். சிலபோது இயக்கமும் பயனும் ஒரு பொருளி லேயே அமையலாம். அத்தகைய வினைகளுக்குச் செயப்படுபொருள் இல்லை. இயக்கம் ஒரு பொருளிலும் பயன் மற்றொரு பொருளிலும் என இரண்டு அம்சமும் பிரிந்துவரினே, வினைக்குச் செயப்படுபொருள் உளது. ''மணியுடை கூலி அஞ்சு மின்னிட்டு நடந்து'' என நாம் விவரிப்பதுண்டு இதிலிருந்து நமக்கு உளதாகும் உணர்வு யாதெனின் கொஞ்ச நேரத்திற்கு முன்னரே 12-ஆம் வரையில் நின்ற நீண்ட முள் முறையே நீங்கி நீங்கி இப்போது 1-ஆம் வரையை அடைந்திருக்கின்றது என்பதாகும். அதனால் ''நட'' என்ற அடிச்சொல்லிற்குச் அசைவு இயக்கமும், பிறவிடத்தை அடைதல் பயனும் ஆகும். இங்கு அசைவும், பிற இடத்தை அடைதலும் முள் ஒன்றினையே சார்ந்து சமானாதிகரணமாகவிருப்பதால் இவ்வடிசசொல் செயப்படுபொருள் குன்றிய வினையாகும். ''ஆசான் சூரல்கொண்டு பிள்ளரை அடிச்சு''[2] என்ற வாக்கியத்தில் 'அடிததல' என்ற வினை செயப்படுபொருள் குன்றுவினையாகும் இதனில் இயககம ஒரு பொருளை மற்றொரு பொரு ளோடு இணைகின்றது. அந்த இணைப்பிலிருந்து தோன்றிய அடித் தலே பயன். அந்த அடித்தலாகிய பயன் பிள்ளைகளிலும், கம்பிலும் ஒன்றுபோலப் பரக்கின்றது. எனினும் கருததாவாகிய ஆசானின் கருத்து ''பிள்ளைகளில் வேதனை'' எனச் சாதாரணமாகக கூறப்படும் அந்த அடித்தலை உண்டாக்கவேண்டும என்பது மட்டுமாதலால் பிள்ளைகள் செயப்படுபொருளாய்விடுகின்றனர். கம்பு அடித்தலுகுகுக காரணமாக நிற்கின்றது. ஆசானுக்கு, நேரமாறுக அடித்தல் கம்பில் தோன்றவேண்டும் என்பது கருத்தெனின் ''ஆசான் பிள்ளரெக் கொண்டு வடியே அடிச்சு''[3] என வழங்க வேண்டிவரும். ஆனால் இவ் வாறுள்ள சந்தர்ப்பம் மிகுதியும் நேரிடாததால் இம்மாதிரி வழக்குக ளுகுகு உரிமையுல்லை என்பதே உளது. முக்கியததுவம் விவட்சாதீன மாதலால காரகங்களும், விருபபம் போன்று வரும் என்று முன்னர் நூற்பாவும் அமைக்கப்படுகின்றது. பயனை ஏற்றுக்கொள்ளுதலால் இவ்வேற்றுமைக்குப் 'ப்பிரதிக்ராஹிக' எனப் பெயர் கொடுகக ப பட்டுளது.

78. ஸாக்ஷியென்னுல் க்ரியயதில்
கர்த்தாவின் ப்ரதியோகியாம்.

வினையை நடத்துவதில கருத்தா தனக்கு எதிராகத் தேவைப் படும் துணை, ''சாட்சி''யாகும.

---

1 கடிகாரத்தின முள் ஐநது நிமிடம் நடநதது.

2 ஆசிரியர் பிரம்பால் பிளளைகளை அடித்தார்

3 ஆசிரியர் பிள்ளைகளால பிரம்பை அடித்தார்.

எ-டு: ஶிவன் ஶக்தியோடு சேருங்நு.

இங்கு ''சேருதல்'' என்ற வினையை நடத்துவதில் கருத்தாவிற்கு ஒரு எதிராளியின் துணை தேவைப்படுகின்றது. அது சக்தியாதலால், சக்தியோடு என மூன்றும் வேற்றுமை உருபு வருகின்றது. கருத்தா விற்குப் பிரதித்வந்த்வியாதலால் சாட்சியைக் கருத்தாவே ஆக்குதலும் செய்யலாம் ''ஶிவன் ஶக்தியுமாயிச் சேருங்நு'' சிவன், தானும் சக்தி யும் ஒன்றுபடும் விதத்தில் சோகிருன் என்பது பொருள். ''ஆயி'' என்ற இடைச்சொல் இமமாதிரிச் சொற்ருெடர் முறையைக குறிக் கின்றது. இவ்வண்ணமே ''மஹர்ஷி, ஶிஷ்யகளுமாயி வந்நு'', ''அப் பம், வட, எள்ளுருண்டையுமாயி ஸதய கழிச்சு'' முதலியனவைகளில் ''சிஷ்யகளோடு கூடி'', ''அப்பம், வட, எள்ளுண்டகளோடு கூடி'' முதலிய பொருளை ஊகித்துக கொள்க. வேறு எடுத்துக்காட்டுகள் :

''குந்தம் நெஞ்சோடு இடபெட்டு'' இராமசரிதம்.
''கணணேடு கொள்ளுன்னது புரிகத்தோடாயி'' ப-சொ.
''கொல்லம் துடங்நி வேணுட்டோடு (உள்ள) இடயில்'' கே-உ.
''முலயோடு முலயிடயில் (=முலையோடு முலைகளுள்ள இடையில்) நோவும்'' வை-ஶ.
''திருமலரடியோடு திருமுடியோடிட திருவுடல்'' ஹ-கீ.
''இவ்வண்ணமென்நேடு நின்நேடு சொல்லுவான் அவர் பறஞ்ஞயச்சு'' ந-ச.
''அவரோடு கதயெ தரிப்பிசசு'' ந-ச.
''போத்தோடு வேதமோதி'' ப-சொ.
''மூவடியெ மாபலியோடிரங்நு'' ரா-ச.
''ஸௌமித்ரியோடு வில்லு வாங்நி'' ஸி-வி.
''அவனேடு நாடு பிடிசசடக்கி'' கே-உ.
''ஶாஸ்த்ரம் அவனேடு படிச்சு'' ம-பா.
''நிங்நளோடொரு தோஷம் செய்து'' ந-ச.
''சாபல்யம் என்நேடு காட்டுன்னு'' சி-பு.
''ஞங்நளோடிங்நனெ தீச்சொரிஞ்ஞாலும்'' கி-கா.
''என்நேடு காருண்யமில்ல'' கே-ரா.
''நிங்நள் தேவகளோடு யோஜிக்குகயில்ல'' ம-பா.
''அகல்ச்ச மௌர்யனேடு சாணககியனுண்டு'' சாண.

79. எவன்னு கர்ம்மம் உதகும்
அவன் தான் ஸ்வாமியாயது.

தனது இயகக்ததிலிருந்து உண்டாகும் பயனைச் செயப்படுபொரு ளோடு கருத்தா சோப்பது, அசசெயபபடுபொருள் யாருக்கு உபகார-

மாய் அமையவேண்டுமென்று கருதப்படுகின்றதோ அது சுவாமியாகும். நூற்பாவில் "அவன்னு, அவன்" என்ற ஆண்பால் ஏஜனப்பாலியும் குறிக்கும். எ-டு:

தார்ம்மிகன் பராஹ்மணனு பசுவினெக் கொடுக்குன்னு.
வெய்ப்புகாரன் கறிக்கு உப்பு சேர்க்குன்னு.
கல்லன் பித்திக்கு வெள்ள தேக்குன்னு.
வேலக்காரன் ஆலினு தடமெடுக்குன்னு.
ரோகி தலய்க்கு எண்ண தேக்குன்னு.
தோட்டக்காரன் க்ருஷிக்கு வளம் இடுன்னு.

80. அஸமாஞதி கரண
விதிக்கு உத்தேஶ்யமாயதும்.

நாம் எதனைக் குறித்துப் பேசுகின்றோமோ அது உத்தேசியம். அதற்கு எது உண்டாகின்றது என்று கூறுகின்றோமோ அது விதேயம். இதுவே உத்தேச விதேய பாவம. "காகக கறுதததா குன்னு" எனக கூறும்போது நாம் காககையைப் பற்றிப் பேசுகின்றோம். அதனுல் காக்கை உத்தேசியம். அவ்வண்ணமே காக்கையைக குறித்துப் பேசப்படும் "கறுத்ததாகுன்னு" என்பது விதேயம். இவ்வாக்கியத்தில் உத்தேசியமாகிய காகமும் விதேயமாகிய கறுப்பும் ஒரே வேற்றுமையில் (முதல் வேற்றுமை) ஆதலால் இது ஸமாஞதிகரணமாகிய ஒரு விதியாகும். இவ்வாறன்றி "காக்கைய்க்கு கறுப்புண்டு" எனக் கூறுவது வியதிகரண விதி அதனில் உத்தேசியமாக நிற்கும் காரகம் சுவாமியாகின்றது. எ-டு:

ராமனு புத்ரனுண்டாயி; புரய்க்கு தீ பிடிக்குன்னு; பழத்தினு பாகம் வருன்னு.

81. க்ரியோப கரணம் தன்னெ
கரணம்; ஹேது காரணம்.

ஒரு விஜனயைச செய்வதில் கருத்தாவிற்கு உபகரணமாய் உதவும் காரகம் கரணம் ஆகும. தருக்க சாததிரத்தில் கூறப்படும் ஏது என்பதே காரணம். கரணமும் காரணமும ஐந்தாம் வேற்றுமையின் பொருளாகும். எ-டு:

வடியால் அடிக்குன்னு		கரணப்பொருள்
கத்தி காவினுல் நக்கி	(கே-ரா.)	,,
போஜ்யங்ஙளால் பிட்ச நல்கி	(ம-பா.)	,,

தூதன்றெ சொல்லாலே போயி (க்ரு-கா.) காரணப்பொருள்
இராகவனுல் இவனு முடிவுண்டு (ரா-ச.) ,,
இவராலுண்டு உபத்ரவம் நாட்டில் (கே-ரா.) ,,
அதினுல் உண்டு உபதரவம் நாட்டில் — ,,

'கொண்டு' என்ற இடைச்சொல்லும் இப்பொருளிலேயே வழங்கப்படு கின்றது. நுணுகி நோக்கின் 'ஆல்' உருபிற்கு ஏதுவும, ''கொண்டு'' என்ற கதிகளுக கரணமும் உரிய பொருள்களாகும் என்று தோன்று கின்றது. அதனுல் காரணம் என்ற பொருளில் ''ஆல்'' என்பதையும் கரணப்பொருளில் 'கொண்டு' என்பதையும மாத்திரம் பயன்படுத்து தல் என்றொரு விதியமைத்தால் நன்றுகவிருகும்.

செயப்பாட்டு வழககில் கருததாவிற்கு ஐந்தாம் வேற்றுமை வரும் எனச் சொல்வதுண்டு. ஆனுல் உண்மையில் அஙகும் காரணம் என்ற பொருளிலேயே மலையாள இலகணப்படி ஐநதாம் வேற்றுமை வருவது. மலையாளததிற்குச் சொந்தமாகச் செயப்பாடடு வழக்கு இல்லை. இப்பொழுது உபயோகிதது வருவது சமஸ்கிருததிற் கொத்த மொழிபெயர்ப்பிற்காக இடைகாலததில் செயற்கையாக ஏற் படுத்திய ஒரு வழககமாகும் இதற்குச் சான்றுகள்; முதலாவது ஸமஸ்கிருதம் அறியாதா செயப்பாட்டு வழககை ஒருகாலும் ஆதரிப் பதில்லை. பேச்சு வழககு மொழியில செயவினை வழககே கேட்கின் றோம்

பழைய நூற்களில் மட்டுமல்ல, எழுத்தச்சன் முதலியோரின் நூற்களிலும் சமஸ்கிருதத் தொடர்பில்லாதவிடங்களில் செயப்பாட்டு வழககு இல்லை என்பதே யான் கண்டது. ''ரகுவம்ஶம் காளிதாஸனுல் உண்டாககப்பெட்டதாணு'' என்பதற்குப் பதில் ''ரகுவம்ஶம் காளி தாஸன் உணடாககியதாணு'' எனக கூறின், போதாது எனக கூறச் சிறிதும் இடமில்லை என்பது மட்டுமன்று இந்த முறையே மலையாளத் தின் சொநத விருப்பமாக உள்ளது எனவும தோன்றுகின்றது. இரண்டாவது சமஸ்கிருதம் முதலியவறறைப் போனறு மலையாளத் தில் ஒரு அடிச்சொலலைச செயபபாட்டு வழககில் ஆககுதற்குச் சில உருபு வகைகளோ, உருவ விதிகளோ இலலை. ''பெடுதல்'' என்பதைச் சேர்த்தல் என்பது மலையாளததில் பெயர்களிலிருந்து வினைகளை உண் டாககுதற்குரிய ஒரு உபாயமேயாகும. அகப்படுக, வெளிப்படுக, உள்ப்படுக, தீர்சசபபடுக, பணிப்படுக முதலிய அடிச்சொற்கள் எடுத்துககாட்டுகள். அதனுல் ''கிராதேந மருகோ ஹன்யதே'' என்ப தற்குச சரியாக, ''கிராதனுல் மிருகம் கொலலபபடுன்னு'' என்றுள்ள மலையாள வழககிலி நந்து தோன்றும் உணர்வு இமமுறையிலுள்ளது.

கிராதனுல் (=கிராதன் ஏதுவாக) மிருகம் (கருத்தா) கொல்லப் பெடுன்னு (=கொல்லுதலுகுப் படுகின்றது, பொறுத்துகொள்கின் றது) 'அகப்பெடுக' என்பதற்கு 'அகத்துப்படுதல்' என்றும் 'பிடி பெடுக' என்பதற்குப் 'பிடியிற்படுதல்' என்றும். பொருள் வருதல் போன்று 'பறயப்பெடுக' என்பதற்குச் 'சொல்லுதலிற் படுதல்' என்றே பொருளமையும். இவ்விதம் விஞ்ஞான முறையில் உறுதியோடு சிந் தித்தால் மலையாளத்தில் செயப்பாட்டு வழக்கு இயற்கையான முறை யிலமையவில்லையென்பதை எளிதில் உணரலாம். அதனுல் உண்மை யில் ''என்றெ வாக்கால் அவன் பயப்பெட்டு'' என்ற செயப்படு பொருள் குன்றிய வாக்கியத்தில் ''வாக்கால்'' என ஏதுப்பொருளில் ஐந்தாம் வேற்றுமை வருதல் போன்றே, ''என்னுல் ஈ வாக்கு சொல்லப் பெட்டு'' (நான் நிமித்தம் இவ்வாகுகள் சொல்லிற்பட்டன, பதிநதன) என்ற செயப்படுபொருள் குன்ரு வாக்கியங்களிலும் வருகின்றது என் பது வெளிப்படை.

''நதியால் ஶோபிதம்'', ''பாம்பினுல் தஷ்டம்'' முதலிய சமஸ் கிருத வழகுகளில் எழுவாய் சமஸ்கிருத ரீதி அனுசரித்து ஐந்தாம் வேற்றுமையே.

82. ஆதாரமாம் காரகம் தான்
இஹாதி கரணபிதம்.

எழுவாயை வினைககு ஆதாரமாகக் கற்பிகும் காரகம் அதிகரண மாகும். ஆதாரம் மூன்றுவிதத்திலமையும்: 'பகுதி ஆதாரமாதல்', 'முழுவதும் ஆதாரமாதல்', 'வைஷயிசம' என்பன அவை. ஆதார ஆதேயங்கள் ஏதேனும் சில பாகங்களில் மட்டும் தொடுவது பகுதி ஆதாரமாதல். ஆதாரம் முழுவதிலும ஆதேயம் பரந்திருப்பது முழு தும் ஆதாரமாதல் அமூர்த்தங்களாகிய பொருட்களுக்குப் புத்தியால் ஆதார உணர்வு கற்பிததல் 'வைஷயிகம்' எ-டு:

பாயில் இரிக்குன்னு—பகுதி ஆதாரமாதல்.
எள்ளில் எண்ண இரிகுன்னு—முழுதும் ஆதாரமாதல்.
சுகத்தில் இச்சிக்குன்னு—வைஷயிகம்.

கழுத்தில் கரேறி—பகுதி-ஆதாரம்		—இ-கா.
ரண்டும் இடங்தோளில் வச்சுகொண்டு போயி—மு. ஆ.		—கே-ரா.
ப்ரயுத நரன்மாரில் சுமங்நிட்டுள்ள பொன்னு—	,,	—ம-பா.
நெறுகயில் சும்பிச்சு—	ப. ஆ.	—உ-ரா.
தீய்ககல் வச்ச பால்—	,,	—கி-கா.
ஸத்தியத்தில் பிழசசு—	வை.	—ம-பா.
தர்மததில் பிழயாய்வான்—	,,	— ,,

நாதங்கல் அடுத்து—	ப. ஆ	—கே-ரா.
கதவிங்கல் நில்க்குன்னு—	,,	— ,,
வ்ருட்சமொன்னில் மறஞ்ஞு நின்னெய்து—	,,	— ,,
நீதிஶாஸ்த்ரத்தில் மறுகர கண்டவன்—	வை.	—ப-த.
தேனிலரச்சு பாலில் புழுங்ஙி—	மு. ஆ.	
மோரில் குடிபபிச்சு—	,,	
சங்ஙாதிக்கையில் தன்கையும் சேர்த்து—	ப. ஆ.	—கி-கா.

பெயர்களின் இடையிலுள்ள தொடர்பு ஆறும் வேற்றுமையின் பொருள். ஸ்வஸ்வாமி பாவம், குருசீடபாவம், பிறப்பு இடப்பொருள் பாவம் முதலிய பலவகைப்படும். எ-டு:

ராஜாவின்றெ ஆள்	நீலகண்டன்றெ பக்தன்
இதின்றெ காரணம்	மரத்தின்றெ காய்
வஸிஷ்டன்றெ ஶிஷ்யன்	ஸுர்யன்றெ வம்ஶம்
நின்னுடெ வர்த்தமானம்	மகாமேருவின்றெ தெக்கே பாகம்
தஶரதன்றெ புத்ரன்	

முதலியவை. ஒரு அடிச்சொல்லோடு பண்பு உருபு (தொழிற்பெயர்) சேர்ந்து பெயராய்விட்டால் அதன் கருத்தா, செயப்படுபொருள் ஆகிய காரகங்களோடு ஆறும் வேற்றுமையுருபே சேரும். எ-டு:

ராஜாவின்றெ எழுந்நள்ளது = ராஜா எழுந்தருளல்	கருத்தா
பாண்டவன்மாருடெ நகரப்ரவேஶம் = பாண்டவர் நகரத்தில் பிரவேசித்தல்	,,
ஸகிகளுடெ கூட்டம் = ஸகிகள் கூடுதல்	,,
ராவணன்றெ வதம் = ராவணனை வதித்தல்	செயப்படுபொருள்
நின்னுடெ வியோகம = நின்னைப் பிரிந்திருத்தல்	,,

இறப்போ, எதிர்வோ, நிகழ்வோ எவ்விதமாயினும் ஒரு வினை எது வரை, ஒன்று கழிந்து ஒன்று என்ற முறையில் பல இயகங்களின் விசீதரங்க நியாயப்படி (Undulatory motion) உள்ள பிரவாகமாக நமது அறிவுகுகுத தோன்றுகின்றதோ அதுவரைத்தான் அதனை வினை யென்று இலக்கண ஆசிரியர்கள் விவரிக்கின்றனர் வினை சித்தமா யின் பெயரே; சாத்திய அவததை நிலையில் மாத்திரமே வினைத்தன்மை உளது. ''நமிக்குன்னது = வேற்றுமையைப் பொருள்களோடு நேரா கப் பழகுவது'' என்று இலக்கண ஆசிரியர்கள் நாமம் என்ற சொல்லின் வரலாறு குறிததுக கூறுகின்றனர். இங்கு ஒரு தொகைச் சூத்திரம் அமைப்போம்.

ஸித்தம் தானங்ஙளித்தம்தான் ஸாத்யமாகுமெதேவரே!
அதேவரே கரமாதமாவாம கரிய; பின்னீடு நாமமாம.

83. அகர்ம்மக்ரியகளில்
அதாதின் க்ரிதிக்ருத்துகள்
கர்ம்ம ஸ்தானம் வஹிச்சீடும்
சாட்டம் சாடுக யென்ன போல்.

செயப்படுபொருள் குன்றிய அடிச்சொல்லிற்கும் அவ்வடிச் சொல்லின் தொழிற்பெயர், (பாவரூபம் என்றும் சொல்லப்படும் விஜனப் பெயர்களின் வடிவம்) செயப்படுபொருளின் இடத்தில் வரும். எ-டு:

சாட்டம் சாடுக, ஓட்டம் ஓடுக, வீழ்ச்ச வீழுக. முதலியவை.

84. ரண்டு கர்ம்மம் சிலேடத்து
விசிஷ்டக்ரிய மூலமாய்.

சில விஜனகளுக்கு இரண்டு செயப்படுபொருள் வருவதுண்டு. விஜனகளே ஒற்றை விஜனயைப் போன்று கருதுவது அதற்குக் காரணம். 'பறயுக' என்ற விஜனக்குக் குற்றம் என்ற செயப்படுபொருள் பொருந்தும். அதன் பின்னரும குற்றம் பறயுக என்ற செயப்படு பொருளால் விசேடிக்கப்பட்ட விஜனயைப் ''பழிக்குக'' என்ற ஒரு சொல்-விஜன போன்று கருதினால் யாரைப் பழிக்குன்னு என்று இன்னும் ஒரு செயப்படுபொருள் தேவைப்படும். எனவே ''பாரீயயெக் குற்றம் பறயுன்னு'' என்பதில் செயப்படுபொருள் இரண்டாயிற்று. ஆனால் ''குற்றம் பறயுக'' என்ற விசிஷ்ட விஜனயைத் தொகை என்று கற்பிக்கக்கூடாது. ''பார்யயைக் குற்றமலலாதெ பறகயில்ல'' என்று விரித்தும் வழங்குவதுண்டு. வேறு தேவைகளுக்காக ''சிதிலத் தொகை'' என்று ஒருவகைத் தொகையைக் கொண்டால் இவ்வகை வழகுகளே அதனில் உட்படுத்தத் தடையில்லை. எ-டு:

'என்னெச் சில தூவ்வசனங்ஙள் சொன்ஞன்' ம-பா.
'ஏழம்பு ஸுதனெ எய்தான்' உ-ரா.

சமஸ்கிருத முறையைப் பின்பற்றிக் கவிஞர்கள் சில இரு செயப்படு பொருள் வழக்குகளே வழங்குகின்றனர்.

''அபிமதங்ஙளெ வஸிஷ்டனெ பரார்த்திச்சு'' கே-ரா.

இதில் வசிட்டனெ என்பது 'வசிஷ்டனோடு' என்றிருக்க வேண்டும்.

85. கேவல க்ரியயில் கர்த்தா
கர்ம்மமாகும் ப்ரயோஜகே
பலோபபோக்தா வல்லெங்கில்
கரணம் தான் ஸகர்ம்மகே.

ஒருவன் வினை செய்கின்றான். அவனை மற்றொருவன் அதற்கு ஏவுகின்றான். இவ்வாறு பிற வினையிலே, வினைக்கு இரண்டு எழு வாய்கள் வந்து சேர்கின்றன. வெறும் பகுதியிலமையும் அடிச்சொல் குறிக்கும் வினையின் கருத்தாவாகிய சாட்சாத் கருத்தாவை இயற்று தற் கருத்தா என்றும் ஏவுகின்றவனை ஏவுதற் கருத்தா என்றும பெயர் கொடுப்பதுண்டு.

கேவல வினையின் கருத்தா (இயற்றுதற் கருத்தா) பிறவினை யில் செயப்படுபொருளாய் அமையும். ஆனால் வினை செயப்படுபொருள் குன்றுததாயின் கரணமாகவும் வரும் கிரியோபபோகம் நோக்கியே செயப்படுபொருளோ, கரணமோ என முடிவு கட்டவேண்டும. வினை யின் லௌகீகமாகிய பயன்—அதாவது வினையினுலுள்ள பயன் இயற்றுபவனுக்கு எனில் அவன் செயப்படுபொருளே. அல்லாது ஏவுதற் கருத்தாவிற்கெனில் கரணம். இது கருமம், கரணம் ஆகிய வற்றின் இலக்கணங்களாலேயே தெளிவாகும். ''வடிகொண்டு அடிக் குன்னு'' என்றவிடத்தில் வடிகை அடித்தல் என்ற வினையை நடத்து வதில் எவ்வளவு முயற்சியுளதோ அவ்வளவே இயற்றுபவனுக்கும் வரவேண்டும் என்பது விருப்பம் எனில், இயற்றுதற் கருத்தா செயப்படுபொருளாக வரும். ''ஆசான் சிஷ்யரை புஸ்தகம் வாயிப் பிக்குன்னு'' எனச் சீடரைச் செயப்படுபொருளாக்கினுல், ஆசானுக் குப் புத்தகம் வாசிப்பதின் பயன் சீடர்க்குண்டாக வேண்டும் என்ப தில் விருப்பம் ''சிஷ்யரெக் கொண்டு வாயிப்பிகுன்னு'' என்றுகில், ஆசான் தான் புதகம் வாசிப்பதற்குப் பதில் அவ்வேலையைச் செய்யச் சீடரிடம் ஆணையிட்டான் என்று மாததிரமே பொருள். வாசித்தலா லுள்ள பயன் ஆசானுக்கே. எ-டு:

செயப்படுபொருளாவதற்கு,

குதிரக்காரன் குதிரயெ ஓடிக்குன்னு—செயப்படுபொருள் குன்றியவினை
வண்டிக்காரன் வண்டி நிறுத்துன்னு— ,, ,,
பிதாவு புத்ரனெ உதஸவம் காணிகுன்னு—ஸகர்ம்மகம்
ரஜகனெ முண்டு தொடுவிக்குன்னு— ,,
தேவகளெ விஷ்ணு அம்ருதம் குடிப்பிச்சு— ,,
துஷ்யந்தனெ சகுந்தள மோதிரஸ் ஸங்கதி
ஓர்ம்மிப்பிசசு— ,,
பாலனெ காமினிவேஷம சமயிச்சு— ,,
ஸுதன்மாரெ கருஷ்ணனெ பரமேல்பபிசசு— ,,

இறுதியிலுள்ள எடுத்துக்காட்டு மூன்று செயப்படுபொருளுள்ளது போல் தோன்றும். ஆனால் இங்கு பரம் ஏற்பித்தல் என்பது விசிஷ்ட வினையாகும்.

இயற்றுதற் கருத்தா கரணமாவதற்கு எ-டு:

வககீலினெக் கொண்டு வ்யவஹரிப்பிக்குன்னு.
கூலிக்காரெக் கொண்டு சுமடு எடுப்பிக்குன்னு.
அவரெக கொண்டு தண்டு எடுப்பீச்சு. பா-க.
அவனெ பாம்பினுல் கடிபெடுத்து. ம-பா.

86. கர்த்த்ருவியாபாரமென்யே தான்
ஸ்வயம் க்ரிய நடக்குகில்
நிகீர்ண்ண கர்த்த்ருகம் தாது
வேண் கிட்டுகயு மென்ன போல்;
அதின்றெ கர்த்த்ரு ஸ்தானத்தெ
உத்தேஶிக வஹிச்சிடும்.

ஒரு வினையைப்பற்றிப் பேசும்போது அதை நடத்தும் ஒரு கருத்தாவைப்பற்றிய அறிவு நமக்குச் சாதாரணமாகத் தோன்றும். அதனால் வினையை பலம், வியாபாரம் என இரண்டு அங்கமாகப் பிரிதது, கருத்தா, செயப்படுபொருட்களுக்கு இலக்கணம் வகுக்கப்பட்டது. ஆனால் அபூர்வமாகச் சில வினைகளில் கருத்தாவின் முயற்சி தேவைப் படுவதில்லை. வினை தானே வந்து நடந்துகொள்ளும். அவ்வாறுள்ள வினைகளுக்கு ''நிகீர்ண கர்த்ருகம்'' என்று பெயர். கருத்தாவையோ, கர்த்தரு வியாபாரத்தையோ நிகிரணம செய்கின்ற (உள்ளடககம் செய்கின்ற) வினை என்பது பொருள். வேண், கிட்டுக ஆகியவை இரண்டும் எடுத்துகாட்டுகள். இவ்வாறு கருத்தாவில்லாது வரும் வினைகளின் எழுவாயிடத்தில் நான்காம் வேற்றுமையை வழங்கவேண்டும். இவ்வகை வினைகளின் வழக்கு, ஏழாம் வேற்றுமைச் சிறப்பு விதியை ஒத்தது ஆதலால், இவற்றின் உதாசீனஞகிய கருத்தா ஸ்வாமிகாரிய மாக முடிவதால் அங்கு வரவேண்டுவது நான்காம் வேற்றுமையாகும்.

எ-டு: எனிக்கு ஒரு ஶிஷ்யனெக் கிட்டிட்டுண்டு; அவனு உண்டால் உறங்ஙணம்; உறங்ஙியால் உண்ணணம்

இங்கு சீடனைத் தேடுதற்குக் கருதாவாகிய நான் ஒரு வினையையும் செய்வதில்லை. சீடன் தானே வந்துசேருகிறான். அதனால் வினை ''நிகீர்ண கர்தருகம்''. கருத்தாவினிடத்தில் ''எனிக்கு'' என்ற நான்காம் வேற்றுமை வந்திருககின்றது. 'உண்ணணம்', 'உறங்ஙணம்' என்ற வினைகளில் உண்ணுதல், உறங்குதல் என்ற கருத்தா

அடங்கியிருக்கின்றன என்றேனும கூறலாம். ''கிட்டீட்டுண்டு'' என்பதில் அதுபோலும் இல்லை.

அவனு ஒரு பார்யயெ வேணம். நினகு வேதனிச்சோ ?
குட்டிகள்கு விஷகுன்னு. எனிக்கு முஷியுன்னு.

முதலியவைகள் வேறு எடுத்துகாட்டுகள்.

87. உத்தேஶிகார்த்தம் திக்தேஶ–
காலஸங்க்யாவ்ய வஸ்துகள்,
காலதேஶ பரிச்சேதம்,
தாதர்த்யாதிகளும் ததா.

நான்காம் வேற்றுமைகு, ''ஸ்வாமி'' என்ற காரகம் பொருளென்று கூறப்பட்டதன்றே அதனைத் தவிர வேறு சில பொருட்களும் அதற்குளவென்று இந்நூற்பாவில அதன் இலக்கணம் முழுமையாககப்பட்டிருகின்றது. திகு, தேசம், காலம், எண் முதலியவற்றின் விவத்தை (அவதி) யைத் திட்டவட்டப்படுத்துதல், இன்ன காலம், இன்ன இடம் என வரையறுத்துக் கூறுதல், இன்னதற்காக என்ற பொருள், முதலிய என்ற சொல்லாலும் வேறும், பொருத்தம், ஆற்றல், மிடுகு முதலிய பொருளுள்ள சொற்களோடும் சேர்தலை உணரவேண்டும் எ-டு:

ஹிமவானு தெக்கு விந்த்யனு வடகு	–திக்கு விவத்தை
கள்ளனெ கழுதினு பிடிக்குன்னு	–தேசம ,,
பதது திவஸததினகம	–காலம ,,
ப்ரஹ்மாவினு முப்பததேழாமன் தஶரதன்	–எண் ,,
பத்துமணிகு தபால வருன்னு	–காலவரையறை
முண்டு முழுதினு வெச்சு முறிகுன்னு	–தேச ,,
ஊணினு காததிருகுனனு	–தாதாய்ததியம்
ஸீத ராமனு சோநவள் ஆகுன்னு	–தகுதிப பொருளில் வழங்கல்
ராமன் யுத்ததினு ஶக்தன்	–சக்திப் ,, ,,
பித்தத்தினு நல்லது	– ,, ,, ,,

முதலியன

88. ப்ரயோஜிகாதாரிகள்
கொள்ளாம் நிர்த்தாரணத்தினு.

பிரிநிலை ஒரு கூட்டமாகிய இனத்திலிருந்து ஏதேனும் பகுதியை வேறுபிரிப்பதாகும. அப்பொருளில் 7-ம், 5-ம வேற்றுமைகள் வரும்.

எ-டு:

தூவலாலொன்னு பறிச்சு	–ம. பா.	தூவலிலொன்னு பறிச்சு.
ப்ரஹ்மஸ்வத்தால் ஒரோஹரி	–உ. உ.	ப்ரஹ்மஸ்வதத்தில் ஒரோஹரி.
ரண்டாலொன்னு		ரண்டிலொன்னு.

89. ஆதாரிகய்க்கர்த்தமாகும்
தாரதம்ய விவேகவும்.

உறழ்வுப் பொருளிலும் ஏழாம் வேற்றுமை வரும். எ-டு:

அதில் ஶதகுணம் நன்னு	சி–பு.
க்ருஷ்ணனில் மூன்னு மாஸம மூத்தது பலபத்ரன்	மா–பா.
என்னிலும் ப்ரியம் பூமியோ வல்லப!	கே–ரா.

காரகங்களின் பொருள் விவரிக்கப்பட்டுவிட்டது. அவற்றில் அடங்காத சில வேற்றுமைப் பொருடகளின் மாதிரிக்காகச் சில எடுத்துகாட்டப்பட்டன. இதனைவிட அதிகமாக இச்செய்தியை விவரிக்கக கருதவில்லை வேற்றுமைப் பொருட்களையெல்லாம் தனித்தனியே எடுததுக்காட்டல் என்பது இயலாதது. மிகுதியான தொடர்புகளும் காரகங்களில் அடங்கும. எஞ்சிய சிறப்பு வழக்குகளெல்லாம பயிற்சியால் நோக்கி அறியவேண்டியவை. இனி இவ்வியலை முடிக்கும் முன் காரகங்களையே எவ்வாறு நிர்ணயிக்கவேண்டும் என்பது கூறப்படுகினறது.

90. விவக்ஷிபோல் மாறி மாறி
வரும் காரக ஜாதிகள்.

இரத்தத் தொடர்பு முதலிய லௌகீகத் தொடர்புகளைப் போன்று, காரகம் முதலிய இலக்கணத் தொடர்புகளும் விருப்பைப் பொறுத்தமையும். நாம் நின்று நோககும் நிலையின் போக்குப் போன்றே தொடர்பின் போக்கும் அமையும். ஒரு நிலையில் நின்று நோக்கும்போது ஒரு விதமாய்த் தோன்றும் தொடர்பு வேறொரு நிலையில் நின்று நோக்கும்போது வேறொரு விதமாக மாறித் தோன்றும். (1) கை(யினை) அடிச்சு, (2) கையில் அடிச்சு, (3) கைக்கு அடிச்சு, என்று மூன்று விதததில் வழங்கலாம். 1-ல் அடியின் பயனை வேதனையைத் தாங்குவது என்ற நிலையில் கை செயபபடுபொருள்; 2-ல் அடி இன்ன இடத்தில் பட்டது எனக காட்டுவதில் கவனம் நிற்பதால் அதிகரணம்; 3-ல் அடிபட்ட ஆளின் உடற்பகுதியைச சுட்டிககாட்ட நான்காம் வேற்றுமை உபயோகப்படுத்தப்படுகிறது.

6. தத்திதவியல்

சமஸ்கிருத இலக்கண ஆசிரியர்கள் கருத்துப்படி, பெயர்களினின்றும் பேதகங்களினின்றும உற்பத்தியாகும் சொற்கள் தத்திதம் என்றும், விஜனப்பகுதிகளாகிய அடிச்சொற்களினின்றும் தோன்றுவது ''கிருத்து'' என்றும், பெயரிடப்படுகின்றன. சமஸ்கிருதத்தில் கிருத்துக்களும் தத்திதங்களும பலவிதம் உள்ளன.

தத்திதங்கள்

(1)	தசரதன்றெ புத்ரன்	—	தாசரதி
(2)	ஸ்வர்ணணம் கொண்டுண்டாககியது	—	ஸ்வர்ண்ணமயம்
(3)	வர்ஷததில் பவிக்குன்னது	—	வார்ஷிகம்
(4)	புததியுள்ளவன்	—	புத்திமான்
(5)	ம்ருதுவாயிரிகுன்னது	—	ம்ருதுத்வம்
(6)	வ்யாகரணமறியுந்நவன்	—	வையாகரணன்

முதலியவை.

கிருத்துகள்

(1)	தர்ஶிக்கப்பெடாவுன்னது	—	த்ருஶ்யம்
(2)	தர்ஶிக்குந்நவன்	—	த்ருஷ்டாவு
(3)	எதுகொண்டு தர்ஶிக்குன்ஞுவோ அது	—	தர்ஶனம்
(4)	தர்ஶிகதுன்ன க்ரிய	—	த்ருஷ்டி
(5)	தர்ஶிகுக ஶீலமுள்ளவன்	—	தர்ஶி

முதலியன.

கிருத்துக்களும் தத்திதங்களும் மலையாளத்தில் மிகவும் குறைவே. இல்லாததற்கெல்லாம சமஸ்கிருதத்திலிருந்து கடன் வாங்குதல் வழககம. அதனல் ஸமஸ்கிருதமுறை மலையாளத்திலும் அனுசரிகவேண்டிவருகின்றது ஆனல் பாணினி தததிதங்களில், இறுதியோடு பொருடகளையும் உருபுகளையும் விதித்து, பெரிய குழப்பத்தை ஆகியிருகின்ருர். ''தததித மூடாவையாகரணே:'' என்றொரு பழமொழியும் கூறுவதுண்டு. குழப்பதைத் தீர்ப்பதற்குத் தத்திதங்களை ஒருவாறு வகைபிரிததுப் பெயர்களும் கொடுதது, மலையாளத்தில் அமைகின்ற அளவில் அவற்றின் எணணிக்கை இங்கு கூறப்படுகின்றது.

(1) தன்மாத்திரை உருபுகள்

பல பண்புகளின் இருபபிடமாகிய ஒரு பொருளிலிருந்து ஒரு பண்பில் உட்பட்ட அங்கங்களைத் தெரிநதெடுத்து, இனத்திலிருந்து

வேறுபடுத்தித் தனியாகக் காட்டுவதற்குத் 'தன்மாத்திரம்' எனப் பெயர். அதுமாத்ரம் = தன்மாத்திரம், என்ற பெயரும் பொருட் பொருத்தமுடையது. இராமன் சுந்தரன் என வைத்துக்கொள் வோம். அவனது உறுப்புகளின் அமைப்பிலுள்ள சில சிறப்புகளால் அவனைச் சுந்தரன் என விளிக்கின்றோம். இச்சிறப்புகளின் மொத்த எண்ணைத் தொகுதியால் அது சௌந்தரியம் என்ற சொல்லின் பொருளே. எனவே அழகு என்றால் சுந்தரன் ஆவதற்கு வேண்டிய எல்லா வகைகளும் ஒன்றிச சேர்ந்தது என்று பொருள்படும். ஆனால் இந்த எண்ணிகைகளை மாதத்திரம் ஒரிடத்தும் காணல் அரிது. ஒரு பொருளில் மற்றைய பண்புகளோடு சேர்ந்தே இவைகளும் நிற்கும் கதி யுளது. அதனால் சௌந்தர்யம என்ற சொல், சுந்தரனில் பருமை, நீளம், நிறம, உயரம் முதலிய உபாதிகளாக கவனிக்காது, ''சுந்தரம்'' என்ற சொல்லின் செயற்காரணமாகிய ஒரு தன்மையை மாத்திரம் சுட்டிகாட்டுகின்றது இவ்வாறு சௌந்தரியம ஒரு தன்மாத்திர தத்திதமாய் முடிகின்றது. சுந்தரன் - பண்புடைப்பொருள். சௌந் தர்யம் - பணபு இவை குணி, குணம் என்றும் விவரிகபப்படுகின்றன. இவ்வகைத் தத்திதங்கள் சமஸ்கிருததில் பெரும்பான்மையாக உள் ளன. ஒவ்வொரு பண்புடைப் பொருளுக்கும் அதன் பண்புச் சொல் அல்லது தன்மாதிதிர உருபுகள் உள்ளன. கடதுவம், படத்துவம் என்பன மாதிதிரமல்ல, கடத்துவதுவம், படத்துவத்துவம் ஆகிய வற்றையும் தர்க்கவாதிகள் கொள்கின்றனர் என்பது மட்டுமன்று, மலையாளத்தில் பண்புடைப் பொருளுக்கொத்த பண்போ, பண்பிற் கொத்த பண்பியோ இல்லை என அமைவது அபூர்வமன்று.

எ-டு:	பகுதி	பண்பு	பண்பி
	புது	புதும	புதிய
	—	அழகு	அழகிய
	—	வடிவு	—

91. பேதகார்த்த ப்ரக்ருதியில்
"ம" தன்மாத்ரக்யதத்திதம்;
ஶேஷத்தில் த்தம் யதாயோகம்;
பின்னெத் தனதராதியும்.

பேதகங்கள் குணங்களாக குறிகும் சொற்களன்றோ. அத்த கைய பகுதிகளில் ''தன்மாத்திரம்'' என்ற பொருளைக் குறிப்பதற்கு ''ழ'' என்ற உருபைச் சேர்க்கலாம். பேதகஙகளில் ''சுத்தம்'' எனப் பெயரிடப்பட்ட வகை பகுதிச் சொல் வடிவங்களாதலால் அவற்றில்

எல்லாவற்றிலும் ''ம''[1] என்ற விகுதி வரும். இதைத் தவிரப் பெயர்களிலும் அடிச்சொற்களிலும சிலவற்றைக குணமுக்கியமுள்ளதாகக் கருதி ''ம'' என்பதைச சேர்ப்பதுண்டு. இககருததுத் தோன்றவே நூற்பாவில் ''பேதகார்த்தப்ரக்ருதி'' எனக் கூறபபட்டுளளது. ஏனைய பேதகங்களுககு ''த்தம்'' என்பது விகுதி. இது சமஸ்கிருத ''த்வ'' என்ற உருபின் தற்பவமாகும. அதனை ''தவம்'' எனத் தற்சமமாக மலையாளச் சொற்களில் பயன்படுத்துவது சரியன்று. பிற மொழிகளினின்று பகுதிகளை அல்லாது உருபுகளைக் கடன் வாங்குதல சாதாரணமாக வழகமன்று.[2] மலையாளததில் ''தவ'' உருபைக் கடன்வாங்கியது, தன்மாத்திரை உருபுகளின் வறுமையாலும், மலையாளிகளின் வடமொழி வேட்கையின் ஆதிக்கததாலுமாகும. தமிழர்கள் இவை இல்லாமலே காரியம் சாதிப்பதில்லையா? கடன்வாங்கத் தொடங்கியவனும், பணமாகப் பெற்றுத் தனது தேவைகளை நிகழ்த்துதலன்றே பெருமை. அதனுல் தற்சமத்தைக் காட்டிலும் தற்பவமே தகுதியுடையது. அது மட்டுமன்று, ''மமண்டிரே'', 'பொததயிதவா'', ''மாடம்பீநாம்'' என்ற அளவில் மலையாளப் பகுதிகளோடு சமஸ்கிருத உருபு சேர்த்தல் கூடாது என்பதே தற்போதைய ஏற்பாடு. அதனுல ''விட்டிதவம'', ''போஷதவம'' என்றெழுதுவது அறிவின்மையேயாகும். விகுதிப் பஞ்சத்தால் தரம், தனம் என்ற சொற்களைத தொகையாகச் சோததும் தன்மாதிர ததிதததின் பயனை விளகுகலாம். தமிழின் முறையாகும் இது. எ-டு:

புது – புதுமை, வெழு[3] – வெண்மை, நேர் – நேர்மை, செறு – செறுமை, ஆண் – ஆண்மை, பழ – பழமை, தெளி – தெளிமை, வன் – வன்மை, அடி – அடிமை, கோன் – கோன்மை.

மடயன் — மடயத்தம	சண்டி — சண்டித்தம்
மண்டன் — மண்டத்தம்	பொண்ணன் — பொண்ணதத்தம்
கள்ளன் — கள்ளத்தனம்	முடடாளன் — முட்டாளத்தரம
வேண்டா — வேண்டாதனம்	தண்டுதப்பி — தண்டுதப்பித்தரம்

சமஸ்கிருதச சொறகளில் சமஸ்கிருத உருபுகளையே பயன்படுத்தலாம்.

ம்ருது — ம்ருதுதவம, மார்த்தவம், மருதுத, மருதிம. ஸுந்தர — ஸௌநதர்யம, ஸுநதரத்வம. ரமணீயம் — ராமணீயகம், ரமணீயத.
விதவான் — வைதுஷ்யம், விதவதவம்.

---

1 தமிழின் மைவிகுதி

2 மணிப்பிரவாள நடைககு எதிரான கருத்து. மலையாளிகளின் வடமொழி வேட்கை குறைகூறப்படுகின்றது.

3 வெளு எனறிருக்கவேண்டும்

''கிருதிகிருத்து'' எனக் கூறப்படும் மூலப்பொருட்பெயர் உருபும் தன்மாத்திர உருபின் பொருளைக்கொண்டு சமமாய் நடக்கும்.

வெளு—வெளுக்குன்னு, வெளுப்பு. கறு—கறுக்குன்னு, கறுபபு.
வலு — — வலுப்பம். பொங்—பொங்குன்னு, பொக்கம்.
நீள் —நீளுன்னு, நீளம்.

''கிருதிகிருத்து'' வினை முக்கியத்துவமுடையதும், தன்மாத்திர தத்தி தம் குணமுகியத்துவமுடையதுமாதலால் உண்மையில் இவற்றி டையே சிறிது பொருள் வேறுபாட்டையும் கூறவேண்டும். என்ருலும் மலையாளதில அடிச்சொல வினைசசொல்லாக இருக்கவேண்டுமென்ற கட்டாயம் இல்லையாதலால் பலவிடங்களிலும் இவற்றிற்குப் பொருள் ஒற்றுமை வருகின்றது. சமஸ்கிருதத்திலும் தைர்க்யம், ஆயாமம் என்ற சொற்களிலுள்ளது போன்று சிலவிடங்களில் வினைத்தத்திதங் களுக்குப் பரியாயத தன்மை காணப்படுகின்றது. ஒரே பொருளில் இரண்டு சொற்கள் அமைந்தால் அவற்றை வழக்கத்தில் பொருள் பகுத்துணர்த்துவது மொழியின் ஒரு கடமையாதலால், கீழ்க்காட்டப் படும் எடுத்துக்காட்டுகளில் பொருள் தாரதம்மியத்தை ஊகித்துக் கொள்க.

1. நல்—நன்ம / நலம்
2. வெள்—வெண்ம / வெளுப்பு
3. வலு—வன்ம / வலுப்பம் / வன்பு
4. செம்—செம்ம / செபபு / செமப்பு / செம்பு
5. இள—இளம / இளப்பம்
6. பழ—பழம / பழக்கம்

92. அதுள்ள தித்யாத்யர்த்தத்தில்
அன் தத்வத்தென்ன தத்திதம்.

அதுள்ளது, அதனில் உள்ளது, அங்கிருந்து வருவது, அங்குத் தோன்றியது முதலிய பொருட்களுக்குப பொதுவாக ''தத்வததததி தம்'' என்று பெயர். அதனைக குறிப்பதற்கு ''அன்'' என்ற விகுதி வரும். எ-டு:

மூப்பு (உள்ளவன்) = மூப்பன் நர (உள்ளவன்) = நரயன்
கூனு ,, = கூனன் புல ,, = புலயன்
மடி ,, = மடியன் தெறி ,, = தெறியன்

இந்த ''அன்'' என்பது பால் விகுதியாகவே இருகவேண்டும். தமிழில் ''ஆன்'' என்பதும இந்த இடததில் காணப்படுகின்றது. உத்ராடத் தில் பிறந்தவன் = உததிராடததான், ஆதிரையில் பிறந்தவன் = ஆதி ரையான். பெண்பாலில் இவற்றிற்குக கூனி, மடிச்சி, மூப்பத்தி,

புலச்சி என்ற பெண்பால் வடிவங்களே. ஆனல் அஃறிணையில் உருவ வேறுபாடு இல்லை; ஆன் பாலுருவமே.

கோட்டாறன் —சரக்கு[1]	கிழக்கன்—காற்று
ஆலங்காடன் —ஸர்கரை	தெகைகன்—பாஷி
நாலுகாதன் —சரக்கு	கரயன்—முண்டு
பருந்துவாலன்—ஓடி (வள்ளம்)	ஆனக்கொம்பன்—அரி

தனி, தனவான், தனிகன் முதலியவை சமஸ்கிருதத்திலே தத்வத்துகள். அல்பியஸ், அல்பிஷ்டம், மருதுதரம், ம்ருதுதமம் என்ற ''அதிசாயன தததிதம்'' மலையாளதத்தில் இல்லை. அடுத்துக கூறப்படும் ''நாம நிர்மாயி'' என்பது சமஸ்கிருதத்திலுமில்லை.

93. அன் அள் து என்ன லிங்கம்தான்
நாமநிர்மாயிதத்திதம்
நாமாங்காதாரிகாபாஸ
ஸம்பந்திகள் மூன்னினும்.

அன், அள், து என்ற பால் விகுதிகளே பெயரெச்சம், ஏழாம் வேற்றுமை, ஆரும் வேற்றுமை ஆகியவற்றோடு சேர்ந்து அவற்றைப் பெயர்களாக்கும். இந்தத் தத்திதத்திற்கு ''நாமநிர்மாயி'' எனப் பெயர். பெயரெச்சங்களில் அ + அன் = அவன்; அ + அள் = அவள் என்ற வடிவங்களைப் பல இடங்களிலும், 'ஒன்' 'ஒள்' என மாற்றுவதுண்டு. எ-டு:

இறந்தகாலப் பெயரெசசம்—கண்டு	கண்டவன்	—	கண்டோன்[2]
	கண்டவள்	—	கண்டோள்
	கண்டவர்	—	கண்டோர்
	கண்டது	—	——
எதிர்காலம் பெயரெச்சம்—காண்மூ	காண்மவன்	—	காண்மோன்
	காண்மவள	—	காண்மோள்
	காண்மவர்	—	காண்மோர
	காண்மது	—	——
,, இரிப்பூ	இரிப்பவன்	—	இரிப்போன்
	இரிபபவள்	—	இரிபபோள்
	இரிப்பவர்	—	இரிப்போர்
	இரிப்பது	—	——

1 இவறறுள அன் புணர்ச்சியால வந்த சாரியை.

2 கண்டோன முதலியன செயயுள வழகசு (தொல். சொல்-211) இவை களபரியில அருகியும் பிறசங்க நூறகளில பெருகியும் காணப்படுகின்றன. கண்டவன் முதலியன நோமாறுக அமைகின்றன.

எதிர்காலப் பெய ரெச்சம்—சொல்லும்	சொல்லுவவன்	—	சொல்லுவோன்
	சொல்லுவவள்	—	சொல்லுவோள்
	சொல்லுவவர்	—	சொல்லுவோர்
	சொல்லுவது	—	——
நிகழ்காலப் பெய ரெச்சம்—காணுன்ன	காணுன்னவன்	—	காணுன்னோன்
	காணுன்னவள்	—	காணுன்னோள்
	காணுன்னவர்	—	காணுன்னோர்
	காணுன்னது	—	——
புதிய—ஸ்வார்த்ததம	புதியவன்	—	புதியோன்
	புதியவள்	—	புதியோள்
	புதியவர்	—	புதியோர்
	புதியது	—	——

ஆரும் வேற்றுமை— என்றெ என்றேவன், வள், து
ஏழாம் வேற்றுமைப்போலி—இன்னததெ, இன்னத்தேவன், வள், து

94. ஸங்க்யா நாமத்திலாமென்னு
வரும் பூரணித்தித்திதம்.

எண்ணுச் சொற்களாகிய பெயர்களில் ''அதஜனப் பூரிப்பிக்கும்'' என்ற பொருளில் ''ஆம்'' விகுதி வரும் இதற்குப ''பூரணி'' என்பது பெயர். எ-டு:

ஒன்னு—ஒன்னும், ரண்டு—ரண்டாம், நூறு—நூரும்.

இந்த ''ஆம்'' என்பது ''ஆகும'' என்ற எதிர்காலப் பெயரெச்சத்தின் சிதைந்த உருவமே என்பது வெளிபபடை. ஆண்பால் குறிக்க இத னோடு ''அன்'' விகுதியைச் சேர்த்து ''ஒன்னுமன்'', ''ரண்டாமன்'' என்ற உருவங்களை அமைக்கலாம். ஆனல் பெண்பாலில் ஒன்னுமி, ரண்டாமி என வருவதில்லை. அத்து+எ என்ற ஏழாம் வேற்றுமைப் போலியைச் சேர்த்து ''ஒன்னுமதெ'' என்ற வடிவம் அமைத்து அத னோடு முன் காட்டிய நாமகிர்மாயி தத்திதத்தால், ஒன்னுமத்தேவன், வள், து என்று சுற்றிவளைத்துண்டாக்கும் வடிவம மட்டுமே பெண் பாலில் பயன்படுத்தப்படுகின்றது.

இனிச் சுட்டெழுத்துக்களுக்குத தனியேயுள்ள சில ததித வடி வங்கள் காட்டப்படுகின்றன.

95. தேஸ காலப்ரமாணார்த்தம்
காட்டான-இ-எ மூன்னிலும்
வரும் தத்தித ரூபங்கள்
அங்ஙன்னத்ற கணக்கினு.

அ, இ, எ என்ற சர்வ நாமங்களுக்கு இடப்பொருளில் ''ங்ங்'' என்பதும், காலப்பொருளில் ''ன்னு'' என்பதும், பிரமாண்ப் (அளவு) பொருளில் ''த்ர'' என்பதும் தத்திதங்கள்.

அங்ங்ங், அன்னு, அத்ர, இங்ங்ங், இன்னு, இத்ர, எங்ங்ங், என்னு, எத்ர.

''கு'' விகுதியில் மெல்லெழுத்து சேர்ந்து அங்கு = அங்ங்ங் என்றும், 'று' விகுதியில் மெல்லெழுத்து சேர்ந்து அன்று = அன்னு என்றும், திர (= மாத்திரை) என்ற சொல் சிதைந்து அத்ர என்றும் வடிவங்கள் அமைகின்றன. பழைய மலையாளத்தில் அத்திர, இத்திர, எத்திர என்ற வடிவங்களே வழங்கிவந்தன.

ஙனம் (= பிரகாரம்) என்ற தமிழ்ச் சொல்லில் ''எ'' என்ற இடைச்சொல்லைச் சேர்த்து, அங்ஙனை, இங்ஙனை, எங்ஙனை என்ற வடிவங்கள் எழுந்தன பொழுது (= காலம்) என்ற சொல்லில் ''து'' கெடும்போது, அப்போள், இப்போள், எப்போள் என்ற வடிவங்கள் எய்தும்.

3. வினையடிச் சொல்லதிகாரம்

''தாது'' என்பது வினையைக் குறிக்கும் சொல் அல்லது பகுதி என்று விளக்கப்பட்டுளது. வினையின் இயல்பும் காரக அதிகாரத்தில் தொடர்ந்து விரிதலுரைக்கப்பட்டுளது. இனி அடிச்சொல்லிற்கு ஏற்படும் உருவ வேறுபாடுகளே இங்கு சிந்திகக்படவேண்டும். வினையை எப்போதும் சேர்ந்து நிற்கும் ஒவ்வொரு உபாதியையும் குறிபபதற்காக அததன் வாசகமாகிய தாதுவில் ஒவ்வொரு விகாரம் அமைக்கப்படும். இவ்விகாரஙகளே தாதுவில் வடிவங்கள். உபாதி களை முதலில் சிந்தித்து ஒவ்வொன்றின் இயல்பையும் விவரிப்போம். உபாதிகளாவன.

1. பகுதி, 2. இயல்பு, 3. காலம், 4. முறை, 5. பயன், 6. இடம், 7. பால், 8. எண்.

''ராஜாவு மந்தரியெக்கொண்டு ராஜ்யம் பரிப்பிக்குன்னு''* என்று கூறும்போது உண்மையில ராச்சியபாரம் செய்வது அமைச் சனே எனினும் அவனுக்கு இவ்வினையிலுள்ள தொழில், நாம் உண் ணும்போது நமது கைக்குச் சோற்றைவாரி வாயிலிடுதல் என்ற வினை யிலுள்ளது போன்று முகியமற்றதாகும். அரசனின் ஏவுதல் இல்லை எனின் அமைச்சனுல இததொழிலை ஒருகக லும் நடத்துதல் இயலா தாகும. அதனுல் முகியததுவத்தை நோக்குமபோது அரசனே இங்கு கருத்தா ஆவான். இவ்வெடுத்துகாட்டிலுள்ள அரசனைப் போன்று கருத்தாவை வினையில் செயறபடுத்துபவனை பிறவினைக கருத்தாவென் றும், மந்திரியைப் போன்று அந்தத் தொழிலையே செய்பவனைத் தன் வினைக் கருத்தாவென்றும் பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன. தனது சொந்தமான பொருளை ஒழித்துத் தூண்டுதல் முதலிய பிறவினை வியா பாரம் என்ற ஒரு அம்சததையும காட்டும் தாதுகளை பிறவினைப் பகுதி யிலும, இச்சிறபபுப பொருளில்லாத சாதாரண தாதுகளை தன்வினைப் பகுதியிலும உளளன என்பது விவத்தை. இவ்வாறு தாதுக்கள் பகுதி வேறுபாட்டால் இருவிதப்படுகின்றன. அதனுல் ''பரிகுன்னு'' என்பது தன்வினைப் பகுதியும், ''பரிப்பிகுன்னு'' என்பது பிறவினைப் பகுதியும் ஆகும.

---

* பரிததல் = ஆட்சி செய்தல.

பிறவினைப் பகுதிகளின் பொருள் தெளிவாகக் காணப்படவில்லை எனினும், சில தன்வினைத் தாதுக்களில் பிறவினைப் பகுதிகளின் வடிவம் காணப்படுவதுண்டு. இவ்வாறுள்ள தாதுகளுக்கு இவ்விலக்கணத்தில் "காரிதம்" எனப் பெயர் கொடுக்கப்பட்டுளது. அத்தகையனவல்லாதன "அகாரிதம்" என விளக்கப்பட்டுளன. அதனால் காரித தாது என்றால் சொந்தப் பொருளில் பிறவினை வடிவம் வரும் தாது என்பது எய்தும். பாணினி இலக்கணத்தில் "ஸ்வார்த்தணீ ஜந்தங்ஙள்" எனக் கூறப்படும் சுராதிகணத்திலுள்ள தாதுக்கள் இவற்றிற்குச் சமமாக இருக்கும் காரிதம என்று இவற்றிற்குக கொடுக்கப்பட்ட பெயரும், சமஸ்கிருததிலே பழைய இலக்கண ஆசிரியர்கள் ஆளும் பிறவினைப் பகுதிகளின் பெயரே ஆகும் ஒரு தாது காரிதமோ அகாரிதமோ என்பது தாதுபாடதிலிருந்தே அறியவேண்டுவதாகும். இவ் வேறுபாடு உயிரிலோ சில்லிலோ இறுகின்ற தாதுக்களுக்கு மாத்திரமே உளது என்றொரு நியதியுண்டு நமது ஜர்மானிய இலககண ஆசிரியர் (டாகடர். குண்டர்ட) காரித அகாரிதங்களுகு "பல அபலக் கிரியைகள்" என முறையே பெயர்கொடுத்திருக்கிறார். Strong verbs and weak verbs என்ற பிரிவு ஆங்கில இலககண ஆசிரியர்களாலேயே அனுசிதம் என்று கணிகபபட்டுளளதாலும், இப்பிரிவுகளின் பல் வேறு நிலைகள் இரண்டு மொழிகளிலும் வேறுபட்டனவாதலாலும் ஆங்கில மொழிபெயர்ப்பாகிய இபபெயர்கள் சிறிதும் பொருந்தவில்லை.

1. காலவியல்

காலம் ஒரு வினை நிகழும் சமயததைக குறிக்கும் கழிந்தது இறப்பு; நடக்கின்றது நிகழ்வு; வர இருபபது எதிர்காலம் எனக் காலம் மூன்று.

96. காலத்தின்னியுமூன்னு (இ, உம், உன்னு)க்கள் பூத பாவி பவத்க்ரமால்.

இறப்பு, எதிர்வு, நிகழவு என மூன்று காலங்களைக் குறிப்பதால் இ, உம், உன்னு என மூன்று விகுதிகள் முறையே வரும். எ-டு:

தாது		இறபபு	எதிர்வு	நிகழ்வு
இளகு	= அசைதல்	இளகி	இளகும	இளகுன்னு
மின்	= ஒளிர்தல்	மின்னி	மின்னும்	மின்னுன்னு
தட்டு	= இணைததல்	தடடி	தட்டும	தட்டுன்னு
சிந்த்	= சிதறுதல்	சிநதி	சிநதும்	சிந்துன்னு
கம்ம	= ஒன்றுகக் கடித்துத் தின்னுதல்	கம்மி	கமமும்	கம்முன்னு

ஏ்	= பற்றுதல், ஏற்றல்	ஏஞ்	ஏஞும்	ஏஞன்னு
விலஸ்	= விளங்குதல்	விலஸி	விலஸும்	விலஸன்னு

97. தாத்வந்தம் ஸ்வரமோ சில்லோ
வந்நால் பூதம் துகாரமாம்.

உயிரிலோ, சில்லிலோ முடியும் அடிச்சொற்கள் இறந்த காலத்தில் இகரத்தின் இடத்தில் 'து' விகுதியை ஏற்கும். எ-டு:

தொழு	— தொழுது.	
கண்	— கண்து = கண்டு	(நூற்பா 20)
உண்	— உண்து = உண்டு	(,, 20)
தின்	— தின்து = தின்னு (மென்மை மிகுதி)	(,, 24)
தோல்	— தோல்து = தோற்று (ஒலிப்பிடம் கீழ்நோக்கி மாறுதல்)	(,, 21)
கேள்	— கேள்து = கேட்டு (,,)	(,, 21)
வேள்	— வேள்து = வேட்டு (,,)	(,, 21)

மெய்யிறுதியெனின், கால் இடைநிலைக்கெடுத்துக்காட்டு:

இளக் - இளகி; பூ் - பூஞி.

98. (1) து தகாரம் இரட்டிக்கும்
தாது காரிதம் ஆவுகில்;

(2) (அ) நகாரம் சேரும் அல்லெங்கில்
(ஆ) அவ்விலெக் காரிதத்திலும்;

(3) தாது தாலவ்யாந்தமாயால்
தாலவ்யாதேஶம் ஓர்க்கணம்
அனுநாஸிகம் உள்ளேடத்து
அதிப்ரஸரவும் ததா.

(4) துகாரம் ஹ்ரத்தமாய்க் காட்டும்
உகாராந்தம் அகாரிதம்.

காரித அடிச்சொற்களில் ''து'' இடைநிலையின் தகரத்தை இரட்டித்து ''த்து'' என ஆக்கவேண்டும். 'அடிச்சொல் காரிதமன்று; அகாரிதம்' எனில் நகரத்தைச் சேர்த்து 'ந்து' என்று ஆக்கவேண்டும். இதழொலி ஆகிய அகரத்தால் முடியும் அடிச்சொல் அகாரிதமாயினும் ''ந்து'' என்பதே விகுதியாகச சேரும் என்பது சிறப்பு. அடிச்சொல் ஒரு அண்ண உயிரிலிறுமெனின் 'த்து', 'ந்து', ஆகிய இருவித து விகுதிக்கும், தவர்க்கம் அண்ணஒலித்திரிபால் முறையே ச்சு, ஞ்ஞு என்ற வடிவம் அமையும். அண்ண ஒலியாய்த் திரிதல் என்றும்,

மெல்லினமாதல் என்றும் முகவுரையிற் கூறிய இரு தன்மைகளையும் நோக்குக. இவ்வாறு இரட்டியும, நகரஞ் சேர்ந்தும், அண்ண ஒலியாய்த் திரிந்தும மெய்யீறுதி அடிச்சொற்களில, அவ்வவற்றின் மெய்கள் நேராகவோ ஒத்த இனம் வந்து, நிலைமாறியோ, சேர்ந்தும் ''து'' விகுதிக்குப் பலமாதிரி விகாரம வரும்போது, ஒரு விகாரமும் இல்லாது (தனியாக) சுத்தமாகிய ''து'' விகுதி உகர இறுதி அகாரித அடிச் சொற்களிலேயே காணப்படும். அகாரித தாதுகளுக்குப் பொதுவாக விதிக்கப்பட்ட நகர மிகுதல் உகர இறுதி அடிசசொற்களுக்கு மாத்திரமிலலை. யகர இறுதிச் சொற்களில் விகாரமில்லாது காணப்படும்.

எ-டு:

(1) கொடு—கொடுத்து; உர—உரதது; மண—மணதது; ஓர்—ஓர்த்து; கேள்—கேள்த்து = கேட்டு (ஓரினமாதல் நூற்பா 20); ஏல்—ஏத்து = ஏற்று (விகாமவினை, நூற்பா 21).

(2) (அ) சோ = சேர்ந்து = சேர்நது; இயல — இயலந்து = இயந்து; கரள் = கரள்நது = கரண்டு.

(ஆ) கட — கடந்து = கடந்து; நட — நடந்து = நடந்து; பர — பரநது = பரநது

(3) அலி — அலிஞசு = அலிஞ்ஞு; கர — கரஞ்சு = கரஞ்ஞு; தே* — தேஞ்சு = தேஞ்ஞு; அடி — அடிச்சு; கிட — கிடச்சு; வை — வைத்து = (வெச்சு, வச்சு).

(4) தொழு—தொழுது, பிழு—பிழுது; பொரு—பொருது.

''து'' விகுதிக்கு இன்னொரு சிறப்புளது. அது யாதெனின்,

99. ஏக மாத்ரகமாயுள்ள
க ற டாந்தத்தினும் து தான்;
அந்திய வர்ண்ணத்திலொட்டீட்டு
காட்டும் த்வத்வபலத்தையும்.

ஒருமாத்திரையுள்ளது, அதவாது தனிக்குறிலுயிர் மாத்திர முள்ள ஒரு அடிச்சொல் ககரத்திலோ, றகரதத்திலோ, டகரத்திலோ இறுமெனின் அதனோடும் ''து'' விகுதியே சேரும். அந்தத் ''து'' விகுதியின் தகரம் க ற டக்களில இரண்டாகக் கலநது, அவை இரட்டிய பயனைத் தரும் என்பது சிறப்பு நிலை. எ-டு:

புக் + து = புக்கு	பெற் + து = பெற்று	இட் + து = இட்டு
மிக் + து = மிகு	அற் + து = அற்று	விட் + து = விட்டு
தக் + து = தக்கு	தற் + து = தற்று	சுட் + து = சுட்டு.

* தேய் என்பதன சிதைநத வடிவம்.

ஒருமாத்திரையுள்ளதன்றெனில்,

இளக்=இளகி; தேக்=தேகி; தேற்=தேறி; மாற்=மாறி; ஓட்=ஓடி; தேட்=தேடி முதலியவற்றில் முறையே ''இ'' என்ற விகுதி வரும்.

இச்சான்றுகளில் றகரம் சில்லாததால், அதனோடு ''து'' விகுதி யன்றோ வரவேண்டியதென ஐயுறல் வேண்டா. அதற்கு அமைதி கூறுவோம்.

100. ருவு சில்லல்ல காலத்தில்
யாவு சில்லென்னும் ஓர்க்கணம்;
ராவும் ளாவும் சிலேடத்து
சில்லல்லாத்தது போலெயாம்.

முன்னுரையில் சில்லுகளின் இயல்பு விரித்துவைக்கப்பட்ட தன்றோ. அங்கு யகரத்தைச் சில்லாகக் கணக்கிடவேண்டிய தேவை குறைவு எனக் கூறப்பட்டுளது. ஆனால் இறந்தகாலத்துகரத்தைப் பொறுத்த அளவில, யகரமும் சில்லே. அதனைப் போன்றே றகரம் சிலவிடங்களில சில்லுகளைச் சேர்ந்ததெனினும் கால விகுதியைச் சேர்க்கும்போது அதனைச் சிலலாகக் கணிக்கவேண்டியதில்லை. இப் போது நாம் ''ற'' என்று எழுதவும ஒலிக்கவும் செய்யும் எழுத்து, பண்டு இடையினத்தில் வன்மையான ஒலியுள்ள ரகரத்திற்கும், வல்லி னத்தில் அண்ண ஒலியாகிய டகரத்திற்கும ஒருப்போல அடையாள மாய்விட்டது என முன்னுரையில் கிறுவப்பட்டுளது. அதில் வல்லெ ழுத்தாகிய ற அதாவது டி சில்லாவதில்லை; ரகரத்தின் வன்மை ஒலி யாகிய றகரம் 'சில்'தான். றகரத்தைச சில்லாகவும் அல்லாததாகவும் கணக்கிடவேண்டிய உதாதி இதுவாயிருக்கலாம். ரகர ளகரங்களையும இதனைப் போன்று காலவிகுதிகளில் ''கதியை'' நோக்கும்போது சில லென்றும் அல்லவென்றும் கூறவேண்டிவருகின்றது. சில்லோடு 'து' விகுதியும் மெய்யிறுதியோடு 'இ' விகுதியுமல்லவோ வரவேண்டும். ரகர ளகர இறுதியடிசசொல்லோடு இருவித விகுதிகளும் வருகின்றன. வாரி, கோரி ஆகியவற்றில் இகரமும், சேர்ந்து, சோர்ந்து ஆகியவற் றில் துகரமும் வருகின்றன. அதனைப் போன்றே அருளி என்பதில் இகரமும், உருண்டு என்பதில் துகரமும வருகின்றன. றகரத்திற்குக கூறியதைப் போன்று இதற்குப் போதுமான உத்தி காணப்படவில்லை எனினும், உயிரமசம் உண்டெனிலே சில்லு சில்லாகும என விவாதித தலை நோக்குக. வேறு உத்திகளும சொல்வரலாற்றியலில் விளக்கப் படும்.

எ-டு:

ற்—	மாற்	—மாறி	ய்—செய்	—செய்து
	கூற்	—கூறி	பெய்	—பெய்து
	அமற்	—அமறி	நெய்	—நெய்து
ர்—சில்லு—	சேர்	—சேர்ந்து	ர்—மெய்	வார் —வாரி
,,	நிவர்	—நிவர்ந்து	,,	கோர் —கோரி
,,	கவர்	—கவர்ந்து	,,	ஊர் —ஊரி
ள்—சில்லு—	உருள்	—உருண்டு	ள்—மெய்	மூள் —மூளி
,,	புரள்	—புரண்டு	,,	அருள் —அருளி
,,	வரள்	—வரண்டு	,,	காள் —காளி

ரகர ளகரத்தில் இருநியதி பெரும்பாலும் காணப்படுகின்றது என்பதால் நூற்பாவில் அவ்வெழுத்துக்கள் எடுத்துகாட்டப்பட்டுள்ளன. இம் மாதிரி வேறுபாட்டால் லகர இறுதியில சிலவற்றில் ஒரு அடிச்சொல் லிற்கே இருவித வடிவங்களும உள்ளன. எவ்வாறு?—வெல்—வென்னு—(வெல்லி); சொல்—சொன்னு—(சொல்லி) இதனை வேறு பாடுகளில் ஒன்றுகக் கற்பிக்கலாம் எனக் கூறப்படுகின்றது.

101. ஆயி போய் சத்துவென்னெல்லாம்
வ்யத்யஸ்;நம் பலதுண்டிஹ.

மேல் மூன்று, நான்கு நூற்பாக்களால் 'து' விகுதி வரவேண்டிய இடங்களும அதில் வரும விகாரங்களும் கூறப்பட்டவற்றில், ஒன்றி லும அடங்காத சில வேறுபாடுகள் காணப்படுகின்றன. எவ்வா றெனில்,

ஆ—ஆயி; போ—போயி; சா—சத்து.

எனச் சில எடுத்துக்காட்டுகள் காட்டப்பட்டுள்ளன. இவற்றைப் போன்று வேறும் கண்டுகொள்க.

இனி வேற்றுமைக்குக கூறப்பட்டது போன்று வினைமுற்றிற் கும் சில அங்கமாற்றங்கள் உளளன. அவற்றை எடுததுக்காட்டு வோம்.

102, காரிதத்தில் க்கு சேர்ந்நங்கம்
ஸ்வராதி ப்ரத்யயங்களில்;
நித்யமாம் விதி மார்க்கத்தில்;
நிஷ்டிதத்தில் விகல்பவும்.

காரித அடிசசொற்களில் எந்த விகுதியைச் சேர்ப்பதெனினும் அது உயிர் முதலெனின் ''க்கு'' என்ற இடைநிலை சேர்த்து அங்கத்தை

மாறுதல் செய்யவேண்டும். இது கால இடைநிலைக்கு மாத்திரமுள்ள தன்று. எல்லாவற்றிற்கும் பொதுவான விதியாகும். எ-டு:

இரி —இரிக்குன்னு	இரிக்கும்	இரிக்கின்	இரிக்கான்	இரிக்க
கேள்—கேள்க்குன்னு	கேள்க்கும்	கேள்க்கின்	கேள்க்கான்	கேள்க்க
நட —நடக்குன்னு	நடக்கும்	நடக்கின்	நடக்கான்	நடக்க
ஏல் —ஏல்க்குன்னு	ஏல்க்கும்	ஏல்க்கின்	ஏல்க்கான்	ஏல்க்க

பொதுவாக வாக்கியங்கள் இருவகைப்படும். ''உண்டு'' என்று கூறப்படும் விதிமார்க்கம் (உடன்பாடு) ''இல்ல'' என்று கூறப்படும் எதிர்மறை மார்க்கம் ஆகியன சமஸ்கிருதம் முதலிய ஆரிய மொழிகளில் விதியும் எதிர்மறையும் காட்டுதற்கு மார்கவேறுபாடு இல்லை. உடன்பாடெனினும் மறையெனினும் வாக்கியம் ஒன்றுபோலவே அமைக்கப்படுகின்றது. விதி வாக்கியத்தில் ''ந'', ''ம'' முதலிய எதிர்மறைப் பொருளுள்ள இடைச் சொறகளைச் சேர்த்தால் மறைப்பொருள் உண்டாகின்றது. ''ஸதயம் வதது'' என்பது உடன்பாடு. ''அஸத்யம் மா வதது'' என்பது எதிர்மறை ''ஶ்ரேயோ பவிஷ்யதி'' என்பது உடன்பாடு ''ஶ்ரேயோ ந பவிஷ்யதி'' என்பது எதிர்மறை மலையாளததிலோ ''ஸதயம பறயட்டெ'', ''அஸத்யம் பறயாதிரிக்கட்டெ'', ''ஶ்ரேயஸ்ஸு வரும்'' ''ஶ்ரேயஸ்ஸு வரா'' என வினைமுற்றிலேயே வடிவ வேறுபாடு வருகின்றது அதனால் உடன்பாட்டு வடிவமும் எதிர்மறை வடிவமும் வினைமுற்றிற்குத தனித்தனி உள்ளன. அதன் காரணமாக வாக்கியத்திறகும் விதிமார்க்கம், எதிர்மறை மார்கம் என மார்கக வேறுபாடு என்ற புதிய உபாதியைக கொள்ளவேண்டியிருகின்றது. பேச்சு மலையாளதததில் இபபோது வருன்னு, வருன்னில்ல, வந்து, வந்நில்ல, வரும், வருவில்ல, வரில்ல, வரிகயில்ல என்ற அளவில், சமஸ்கிருதத்தோடு ஒதத மரபு வழக்கில் வந்திருக்கின்றது இவ்வகை வழகுகளில் ''இல்ல'' என்பது, சமஸ்கிருததததில் ''ந'' என்ற இடைச்சொல்லின் இடத்தை வகிக்கிறது. 'வந்து, வராஞ்ஞு; வரும், வரா; வந்நிட்டு', வராதெ' என்ற அளவில் அடிச்சொல் வடிவங்களுக்குப் பெரும்பான்மை இடங்களிலும் விதி வடிவமும் மறை வடிவமும் வேறு வேறு உள்ளன. இவ்வுண்மை எதிர்மறை இயலில் விளக்கப்படும். எதிர்மறை வடிவதததில் ''க்க'' என்ற அங்க உருபு விகற்பமாகவே வரும். எ-டு:

கேள்—கேளாஞ்ஞு, கேள்ககாஞ்ஞு; கேளாதே, கேள்க்காதெ
நட —நடவாஞ்ஞு, நடக்காஞ்ஞு, நடவாதெ, நடகாதெ

''க்க'' என்ற இடைநிலையின் காரியத்தில் வேறு ஒருவகை விகற்பம் உளது. அதுவருமாறு:

103. பாவ்யர்த்தஸ்பர்ஶ யோகத்தால்
உ ஆன் இன் ஆதியில் "ப்பு" வும்
அகாரிதத்தில் இஸ்தானத்து
அதுபோலெ வகாரவும்
அனுநாஸிக யோகத்தில்
முமான்மின் என்னு வந்நிடும்.

எதிர்காலத்திற்கு "உ" என்பது மாதிரம் வடிவம் என்பது இனிக் கூறப்படும் அதுவும், "ஆன்" என்ற பின்வினையெச்சம், "இன்" என்ற முன்னிலைபன்மை முதலிய சில வடிவங்களில் "க்க" என்பதற்குப் பதில் "பு" என்ற இடைநிலை வரலாம். இது எதிர் காலத்தில் தடையொலி வருமிடததே உளது. எதனாலெனின் உண்மையில் "ப்பு" அங்க உருபன்று; எதிர்காலத்தைக குறிப்பது. காரிதத்திற்கு "ப்பு" என்பதைக் கூறியது போன்று, அகாரிததிற்கு வகர இடைநிலை வரலாம். எனவே வினையடி மெல்லெழுத்தில் இறு மெனில், வு, வான், வின் ஆகிய வகர முதல விகுதிகள் வருவதில்லை. மு, மான், மின் என்ற மகரமே வரும் என்ற ஒரு சிறபபு நிலையுளது. மகர இடைநிலை தமிழில் காணுததால், தமிழிலுள்ள வகரததிற்கு, (வண்ணுன் = மண்ணுன்) மலையாளததில் மகரததிரிபு வருததாகக் கருதவேண்டியிருகிறது ப, வ ஆகிய இரண்டும் எதிர்காலததைக் காட்டும் இடைநிலையாகத தமிழ் இலகண ஆசிரியர்கள் விதிததுள்ளனர். நடவாய், நடபபாய் எனவெலலாம் தமிழில் இவற்றிற்கு வழக்குகளும் மிகுதியாயுள்ளன. மலையாளத்தில் இலக்கிய மொழியில் மாத்திரமே ப்ப், வ் என்ற இடைநிலைகள் வழகிலுள்ளன. அதனால் வசதியை நோக்கி, இநதத திரிபுகள் அங்க உருபுகளோடு சேர்க்கப் பட்டிருகின்றன. சரியான 'உ' எதிர்காலத்தைக குறிகக வழஙகுதல் நேரே இலலை எனினும், பால் விகுதி சேர்கும்போது வருவேன்; வருவான், —ள, —ர்; நடப்பேன்; நடப்பன், —ள், —ர் என்ற வழகுகள் வருகின்றன. எ-டு:

உ	ஆன்	இன்
நட —நடப்பூ, நடகக்கூ;	நடப்பான், நடககான்	நடப்பின், நடககின்
செய் —செய்வூ, செய்யூ;	செய்வான், செய்யான்	செய்வின், செய்யின்
காண்—காண்மூ, காணூ;	காண்மான், காணுன்	காண்மின், காணின்
இரி —இரிப்பூ, இரிகக்கூ;	இரிப்பான், இரிககான்	இரிப்பின், இரிககின்
பற —பறவூ, பறயூ;	பறவான், பறயான்	பறவின், பறயின்
தின் —தின்மூ, தின்னூ;	தின்மான், தின்னுன்	தின்மின், தின்னின்

காணுவான், காணுவின், தின்னுவான், தின்னுவின் என்ற வடிவங்கள் காணும் + ஆன் = காணுவான்; காணும் + இன் = காணுவின் என எதிர்கால வடிவத்திலிருந்து விஜையெச்ச விகுதியும், முன்னிலைப் பன்மை விகுதியும் சேர்ந்து அமைகின்றன. இங்கு அனுஸ்வாரத்திற்கு மகரதிரிபு புணர்ச்சியில் கூறப்பட்டுளது.

104. ஸார்வ்வகாலிக மாயிட்டும்
பாவிதான் த்ராவிடங்ஙளில்;
அவதாரக யோகத்தில்
உபதேஶாதியிங்கலும்
பிந்துகூடா துகாரம் தான்
அப்போள் தீர்கவும் ஒத்தபோல்.

இறப்பு, எதிர்வு, நிகழவு என்ற பிரிவில்லாது எல்லாக் காலங்களுக்கும் பொதுவான சில செய்திகளையும் கூறவேண்டும். இவவாறு எல்லாக காலத்திற்குமுரிய செய்திகளைக் காட்டுதற்கு ஆரியமொழிகள் நிகழ்காலததைப் பயன்படுத்துகின்றன.[1] திராவிட மொழிகளிலோ இவ்விடத்தில எதிர்காலமே பயன்படுததப்படுகின்றது. அதனால் எதிர்காலததிற்குப், பயிற்சி (வழக்கம்) முதலிய பொருளிலும் வழகுகள் அமையும். அவற்றுள் ஓரிரு பொருட்களுகு மாததிரம், வடிவ வேறுபாடு உளது. அதாவது "உம" என்பதில் புள்ளி (அனுஸ்வாரம்) என்பதனை நீக்குதல். அவ்வாறு செய்யும்போது முறையே அனுஸ்வாரம் கெட்டதன் பயனுக உகர உயிர், ஊ என நீள்வதுண்டு. ஊ என்ற வடிவம, முககியததுவத்தால தேற்றப் பொருளுடைய "ஏ" என்ற இடைச்சொல் சேரும்போதும், உபதேசப் பொருளாக குறிகும் போதும் வரும். எ-டு:

ராமனே ராவணனெக கொல்லு
தர்ம்ம புதறர் ஸதயமே பறயூ
ஸர்ப்பம் வளஞ்ஞே நடகூ
துஷ்டன் பரனெ த்ரோஹிக்கயே செய்யூ
"ப்ராஹ்மணர் ப்ரதிட்சிணம் செய்து கொள்வூ" (கே. உ.)

"கூட்டேணம் களவு பின்னெ ஶேஷம் வாங்கூ பவேல் ஸுகால்" (பரல்பேறு) சீலம முதலிய பொருளுகு எ-டு:

இடவப்பாதிகு மழ துடங்கும்; பாபம் செய்யுநவர் துக்கிக்கும;
வெள்ளததேக்காள் எண்ணய்க்கு கனம் குறயும்.

ஆரிய மொழிகளைப் பின்பற்றி இபபோது முக்காலத்தையும் குறிப்பவற்றிற்கு நிகழ்காலம் பயன்படுததப்படுவதுண்டு.

1 தொல்–சொல்– நன–

பத்து மணிக்கு தபால் வருந்து.

மீனம் 15-ம் தியதி பள்ளிக்கூடம் அடய்க்குன்னு. ('அடய்க்கப் பெடுன்னு' என்ருயின் மீண்டும் திருத்தம் பெறும்).

உம் என்ற வடிவத்திற்குச் சீலப்பொருளில் வழக்குப் பெரும்பான்மை யாதலால் அதற்குச் "சீல எதிர்காலம்" என்றும, ஏனையதற்கு "அவ தாரிக எதிர்காலம்" என்றும் பெயரிடலாம்.

காலம் முதலியவை பற்றிய பொதுவிதிகள்

கால விகுதிகளை விதித்து, அவற்றின் வடிவ வேறுபாடுகளை யும், முக்கியப் பொருள் வேறுபாடுகளையும் விவரித்தோமன்ரே. இனிக் காலம், இடம, பால், எண் முதலிய உபாதிகளைக குறித்த கொள்கைகளை ஆராய்வோம்.

105. காலவாசி ப்ரத்யயாந்தம்
தனியே வினயெச்சமாம்
புருஷ ப்ரத்யயம் மீதே
சேர்த்தால் ஆக்யாதமாய் வரும்
இதத்றே ரூபநிஷ்பத்தின்
நயம் த்ராவிட பாஷையில்.

'வினைகளைக குறிககும் சொல்' என்ற பொருளில் "கருதி" என்று நாம் இங்கு பெயர் கொடுததிருககும சொற்பிரிவுககு "வினை" என்று தமிழில் பெயர் உள்ளது. வினைககு உருவ அமைபபு முறை இரண்டு விதத்தில் அமையும். (1) முற்றுவின, (2) பற்றுவின. முற்றிய (பரிபூர்ணமாகிய) முதன்மையாய்—விசேடியமாய் நிற்கும் வினை—முற்றுவினை; நேர்மாருகப் பற்றும் (பொருள் முழுமைபெற மற்ருென்றினைச் சார்தலால் அபூரணமாகிய) நிலையில் சிறப்புக் குறைந்து—விசேடணமாக நிற்கும் வினை—பற்றுவினை. தமிழிலுள்ள பெயர்களுக குப் பதில் சமஸ்கிருதப பெயர்கள் வேண்டுமென்று நினைததால் முற்று வினைக்கு, அங்கிகரிய (அல்லது பூர்ணகரிய) என்றும், பற்று வினைக்கு அங்கக்ரிய (அல்லது அபூர்ணகரிய) என்றும பெயர் இடலாம். பற்றுவினை ஒரு பெயரில அலலது வினையில் பற்றும அல்லது அங்கமாய்ச் சேரும். அதனால் பற்றுவினையில் பேரெச்சம் அல்லது நாமாங்கம் என்றும், வினையெசசம் அல்லது க்ரியாங்கம் என்று இரு பிரிவுகள் உள. "அவன் பறஞ்ஞு வாககு கேட்டு எல்லாவரும் விஸ்மயிச்சு" என்ற வாக்கியத்தில் "விஸ்மயிசசு" என்பது முறறுவினை; அல்லது அங்கிகரியா அல்லது பயனிலை. 'கேட்டு' என்பது பற்று வினை—வினையெச்சம் அல்லது க்ரியாங்கம். 'பறஞ்ஞு' என்பது

பற்றுவினையில் பேரெச்சம் அல்லது நாமாங்கம். ஒவ்வொரு பெயருக்கும் பரியாயங்கள் பல உள்ளனவாதலால் அவையெல்லாம கீழ்வரும் பட்டியலில் காட்டப்பட்டிருகின்றன.

முற்றுவினை —Finite Verb, ஆகயாதம், அங்கிக்ரிய, பூர்ண்ணக்ரிய, கரோதி.

பற்றுவினை —Participle, ஆக்கியாதகம், அங்கக்ரிய, அபூர்ண்ணக்ரிய, கர்வத்து.

வினையெச்சம்—Verbal or Adverbial Participle, கரியாங்கம்.

பேரெச்சம் —Relative or Adjectival Participle, நாமாங்கம்.

இவற்றில் சரியான தமிழ்ச் சொற்களோடு, ஆகயாதம், அங்கிகரிய, அங்ககரிய, கரியாங்கம், நாமாங்கம ஆகிய பெயர்களும் இந்நூலில் பயன்படுத்தபபட்டுள்ளன.

காரித அகாரித வேறுபாட்டின்படி அங்க உருபைச் சோததோ சேர்க்காமலோ சரிப்படுத்தப்பட்டுள்ள அடிசசொல்லில் கால இடை நிலையைப் பொருத்திஞல் எழும் வடிவம வினையெச்சமாக இருகும். அது காலபபரிசசேததைத் தடுகூடிய வினையைக குறிகும். இதனேடு சேர்ந்து வாக்கியததிற்கு அன்வய நிறைவு வருகினறது எனக கருதி ஞல், இதற்குப் பயனிலையாக நிற்பதற்கும் சுய உருவத தகுதி வேண்டு மளவு உளது. நிறைவுகுத் தனியே அடையாளம் ஒன்றும செய்யப் படவில்லை என்பதே உண்மை. இடங்காட்டும விகுதியே நிறைவு பெறுதலைக் காடடும தனிச் சின்னம் அதனுல கால இடைநிலையிறுதியில் அதனையும் சேர்த்தால் ''வினைமுற்று'' எனக் கூறபபடும் பூரணக் கிரியை உளவாகும். வினைமுற்றிலே இடம் காட்டும் விகுதி, கருதா வாகிய முதனிலையேயாதலால், பொருளதத்தால் இரண்டும் ஒன்றே என்ற ஐகிய உணர்வு வழியாக, வாகியதிற்கு அன்வய நிறைவு வருமென்பது உதாரண ஞான சென்னேன்; அவன சென்னன; அவா சென்னா முதலிய சான்றுகளில ஞான்—ஏன்; ஆன்—அவன்; ஆர்—அவர் என எழுவாயும வினையும தமமில் கலந்து வாகியம் நிறைவு பெறுகின்றது ''சென்னு'' என்று மாத்திரம் நின்றால் கருத்தாவைப் பற்றி ஒரு அறிவும் அதிலிருந்து எழாததால், பொருள முடிவு எவ்வாறு அமையும? ''ஞான் சென்னு காரியம் ஸாதிச்சேன'' என வேறொரு வினையில் அன்வயிப்பதற்கு மாதிரமே அதற்கு ஆற்றலுண்டு. அதனில் சென்னு என்ற வடிவம வினையெசசமும் சென்னேன் முதலியவை முற்றுவினையாகிய பயனிலையும் ஆகும். இடம காட்டும விகுதியைப் பயன்படுத்துவதில் திராவிட மொழிகளின் கொள்கை இதுவே.

106. மலயாளத்திலாகட்டெ
புருஷாபேட்சயென்னியே
வினையெச்சமுறப்பிச்சால்
ஆக்யாதம் அது தன்னெயாம்.

மலையாளமோ, இடம் காட்டும் விகுதிகளின் துணையில்லாமலே வினைமுற்றுகளை ஆக்கிக்கொள்கின்றது. அதன் உதாரணமாவது : வினையெச்ச வடிவத்திலேயே காலப்பிரிவும் உளளதால், முற்றுவினையாக நிற்கலாமன்றே. அது வேறொன்றின் அங்கமாகும் என்று ஏன் கற்பிக்கவேண்டும்? மேல் வேறொரு வினையையும் சேர்க்காது, வினையெச்சத்தாலேயே வாக்கியம் முடிந்தால் அதுவே வினைமுற்று, எழுவாயிலும் வினைச்சொல்லிலும் ஒரே பாலினைக் காட்டிப் பொருத்தம் மூலமாகவே பொருள்முடிவு நிறைவுபெற வேண்டுமென்பதில்லையன்றே. இவ்வாறு அமையும்போது வினையெச்சம் விசேடணமும் முற்றுவினை விசேடியமும் ஆகும் என்ற அங்க அங்கித்தன்மை எவ்வாறு உரைப்படும் என்ற குறை எழும் அதற்குப பரிகாரம் காண வினையெச்ச வடிவத்தை அழுத்தி உரைத்தால் வினைமுற்று; அழுத்தி ஒலிக்காவிட்டால் வெறும வினையெச்சமே என்றொரு ஏற்பாடு செய்தால் போதும். அழுத்தி ஒலிக்கும்போது முக்கியத்துவத்தால அன்வயம முடிவுற்று வினைக்கு நிறைவு வந்துகொள்ளும் அழுத்தம் கொடுக்காது விட்டுவிட்டால், முக்கியத்துவமின்மையால் மேல்வரும் மற்றொரு வினையொடு முடிந்து அதன் அங்கமாக நின்று வெறும் வினையெச்சமாக முடிந்துகொள்ளும் அழுத்தம் கொடுத்தற்குரிய உபாயம் எது?

107. விவ்ருதம் தீர்க யோக்யத்வம்
ப்ராதான்யத்தினு லக்ஷணம்
ஸம்வ்ருதம் த்வித்வ ஹ்ரஸ்துத்வம்
அப்ரதானத்வ போதகம்.

உயிரை முற்றுயிராக ஒலிக்கவும், பொருளின் செறிவிற்கும் பலத்திற்கும் மற்றும் உசிதம் போன்று நீட்டும் நிலையில் ஆக்கவும் செய்தால், முக்கியத்துவத்தின் குறிப்பு உண்டாகும். இதற்கு நேர்மாறாக உயிரைக குற்றியலுயிராக உச்சரிக்கவும், வாக்கியத்தில் அடுத்துவரும் வல்லெழுத்தின் இரட்டலுக்கு அந்த உயிரெழுத்து காரணமாக வரவும செய்தால், சிறப்பின் மையின் குறிப்பு உண்டாகும். எடுத்துக்காட்டாக இறந்தகால விகுதிகளை நோக்குவோம். அவ்விகுதிகள் து, இ ஆகியவையன்றே. அவற்றுள் ''து'' என்பதில் உகரம் உள்ளதால், அதனை முற்றியலுகரமாக ஒலித்தால் காலவிகுதியிறுதியுள்ள வினைமுற்று; குற்றியலுகரமாக்கினால் வினையெச்சம். 'இ'

என்பது இறுதியிலாயின் நீட்டலாம். வாக்கியத்தின் இடையிலாயின், பின்வரும் வல்லெழுத்தை இரட்டலாம். எ-டு:

1) அவன் இவிடெ வந்நு பத்துநாள் தாமஸிச்சு.
2) அவன் அவிடெ போயிக் கார்யம் நடத்தி.

முதல் எடுத்துக்காட்டில் 'வநநு' என்று குற்றியலுகரம் காணப் படுவது விஜனயெச்சம். 'தாமஸிச்சு' என முடிவது விஜனமுற்று. இரண்டாம் எடுத்துக்காட்டில் 'கார்யம்' என்பதன் ககரம் இரட்டலால் ''போயி'' என்பது விஜனயெச்சமென்றும், நடத்தி என்பது இறுதியில் வருவதால் விஜனமுற்றென்பதும தெளிவாகும்.

''வந்நு ஶரத்ஸமயமம்புதமொன்னகன்னூ''
''பனிமதி மறவாயி ஶங்கநாதம் முழங்ஙீ''

முதலியவைகள் நீட்டல் அமைநததன் எடுத்துக்காட்டுகள். ''மறவா யிஶ்ஶங்க நாதம்'' என்று, இரட்டல் கண்டால் விஜனயெச்சமென்றும், நீட்டல் கண்டால் விஜனமுற்று என்றும் எளிதில் உணரலாம்.

இந்த முறை முற்றுவிஜனக்கும் விஜனயெச்சத்திற்கும் மாத்திர மல்ல, பொதுவாவமையும் ஒரு கொள்கையாகும. புணர்ச்சியில் விதித் துள்ள இரட்டலுக்கெல்லாம் இந்த முறையே அடிப்படை. ஒவ்வொரு இலக்கணப் பகுதியிலும் இம்முறையைப் பயன்படுத்துவதை நோக்குக. விசேடணமாகிய சொல்லே பின்வரும் வல்லொலியின் இரட்டலுக்கு நிமித்தமாகக் காணப்படுகின்றது. குற்றியலுகரம் மாத்திரம் ஓரிடத திலும் இரட்டலுக்கு நிமித்தமாவதில்லை. 'ஒத்தது கூறல்' காரண மாக இம்முறையோடு ஏறக்குறையப் பொருந்தும் மற்றொரு விதியை யும் இங்கேயே விளகுவோம்.

108. அனுநாஸிக ஸம்ஸர்க்கம்
ஸ்வார்த்தவிஶ்ராந்தி ஸூசகம்;
கராதேஶம் இரட்டிப்பும்
பரஸங்க்ராந்தி சிஹ்னமாம்.

சொல்லிறுதி மெய்களோடு மெல்லினத்தைச் சேர்த்தால், அச் சொல்லின் பொருள் அதனோடே சேருமேயன்றி மற்றொரு சொல்லிற்கு விரிவதில்லை என்பதைக காட்டும். நேர்மாறுகச் சொல்லிறுதி எழுத்தை இரட்டிகவும், அது மெல்லினமாயின் வல்லினத் திரிபாககி இரட்டிக்கவும் செய்வது, அச்சொல்லின் பொருள் தன் நிலையின் முடி யாது, மற்றொரு சொல்லிற்கு விரிகின்றது என்பதைக குறிக்கும். இவற்றுள் முதல் விதியை மெல்லினஞ் சேரல் என்றும், இரண்டாவ தில் இரட்டல் மாத்திரம் உளதெனில் ''இரட்டல் விதி'' அல்லது

வல்லெழுத்தாகத் திரியும் முறை என்றும், வழங்கும் வசதிக்காக இப் பெயர்கள் இருக்கட்டும். ஒரு சொல்லின் பொருள் தன்னளவில் நிறைவுபெறும்போது அதற்குப் பிற சார்பு இல்லாததால் அதற்குச் சிறப்பு எய்துகின்றது. அதனுல் மெல்லினஞ் சேர்தலே உரிச்சொற் களையும்[1] வினைகளையும் பெயராகுதற்குப பயன்படுத்தலாம். மாறுக இரட்டல், வல்லெழுத்தாகத திரிதல் ஆகியவை பெயர்களிலிருந்து பேதகங்களை ஆக்குதற்குப் பொருந்தும். பெயரை வினையாக மாற்று தற்கு இது அவ்வளவு பொருந்துவதில்லை. அதற்கு வேறு வழியுளது. அதனுல் செயப்படுபொருள் குன்றிய வினைகளைச் செயப்படுபொருள் குன்றுவினையாக்குதற்கு இரட்டல், வல்லினதிரிபு ஆகியவை உத வும். வினை செயப்படுபொருள் குன்றியதாக இருக்கும்போது அதன் பொருளாகிய பயன்வகைகள் கருதாவிலேயே முடிந்து நிற்கும். செயப்படுபொருள் குன்றுததாகும்போது பயனுகிய அம்சம் செயப்படு பொருளோடு நன்றுவிடுகின்றது. அதனுல் செயப்படுபொருள் குன்று வினைக்கு வேறென்றோடு சேர்தல் உண்டு. பெயர்கள் கருத்தாவாக முதல் வேற்றுமையிலிருகுமபோது தன்னிலையில பொருள் நிறைவன. செயப்படுபொருள் முதலிய காரகப் பொருள் குறிப்பதற்கு, இரண்டு முதலிய வேற்றுமைகளில் வருமபோது, தன்பொருளை மற்றொரு சொல் லோடு இணைகின்றன. ''டாவும் ருவும் இரட்டிப்பு நாமாந்தத்தில் யதோசிதம்'' (நூற்பா 58) என்ற விதியின் உத்தி இதுவே என்பதை இப்போது உணரலாம். நாட்டு கார்யம், ஆற்றுவெள்ளம், ஆயிரத் தாண்டு முதலிய தொகைகளில் காணப்படும் இரட்டலும் இவ்விதியா லேயே விளகுகம பெறுகின்றது. மறறும் சில எடுத்துகாட்டுகள் :

1) ஒரு—பேதகம். மெல்லினஞ் சேர்தலால், ஒன்று = ஒன்று என்பது தமிழ்; மெல்லினமாக்குதலால் மலையாளதில் ஒன்னு என்ற பெயர் உண்டாயிற்று பின்னர் பெயரெச்சக் குறியாகிய அகரத்தைச் சேர்த்துப் பெயரை மீண்டும் பேதகமாகுமபோது, வல்லெழுத்தாகத திரிததால் 'ஒற்ற' எனபது எயதியது

2) குறுகுன்னு, குறுகி ஆகிய வினையின் அடிச்சொல் ''குறு'' என்பது அதில் மெல்லினஞ் சேர்தலால் 'குன்று' என்ற பெயர் அமைகின்றது. குறுகிய மலையே குன்று. அது மலையாளத்தில் மெலலினமாக்குதலால குன்னு ஆயிற்று.

3) இளகுதல்—செயப்படுபொருளை குன்றியவினை. இளக்குதல் என்ற இரட்டலில் செயப்படுபொருள் குன்றுவினை அமைகின்றது.

4) பொங்குதல்—செயப்படுபொருள் குன்றியவினை. பொக்கு தல் என்ற வல்லெழுத்திரட்டலால் செயப்படுபொருள் குன்றுவினை அமைகின்றது.

5) காணுதல்—செயப்படுபொருள் குன்றுவினை. 'காட்டுக' என வல்லெழுத்தாகத் திரிதலால், இரு செயப்படுபொருள் உள்ளவினை அமைகின்றது.

6) ஆண்டு—பெயர். ஆட்டவெலி என்று வல்லெழுத்தாகத் திரிதலால், பேதகம் அமைகின்றது.

7) செம்பு—பெயர். செப்புக்குடம், என்று வல்லெழுத்தாகத் திரிதலால் பேதகம் அமைகின்றது.

மிகுந்த பயனைக் கருதாது, அழகிற்காகவும் தமிழ் மலையாள மொழிகளில் மெல்லினஞ் சேர்தல் அமைகக்கப்படுகின்றது. தெலுங்கில் ''மூடு'' என்றும், கன்னடத்தில் ''மூரு'' என்றும வரும் மூன்றுகிய எண்ணிகைகையைக் குறிக்கும் சொல் தமிழில் ''மூன்று'' எனவும், மலையாளத்தில் அம்முறைப்படி ''மூன்னு'' என மெல்லினம் வந்திருப்பதையும் நோக்குக.

கொள்கை ஆய்வை நிறுத்திவிட்டு, இனி அதன் இயல்பை நோக்குவோம். அடிச்சொல்லோடு கால விகுதியைச் சேர்த்தால் அது வினையெச்சமாகும. வினையெச்சத்தில் இடங்காட்டும் விகுதிகளைச் சேர்த்துத திராவிட மொழிகளில் முற்றுவினைகள் அமைகக்படுகின்றன. மலையாளத்தில் மாத்திரம் இடவிகுதியைச் சேர்த்தல் வேண்டா: வினையெச்சத்தையே பொருளும் முறையில் அழுத்தம் கொடுத்தால் போதும் என்றன்றே இங்கு நிறுவப்பட்டது. ஆனால் இறந்தகாலத்தைப் பொறுத்த அளவிலதான் இது சரியாக அமைகின்றது. மலையாளத்தில் எதிர்காலவினை பெயரெச்ச வடிவத்திலமைகின்றது; வினையெச்ச வடிவத்திலன்று. நிகழ்காலத்திலோ சரியான ஒரு வினையெச்ச வடிவமே காணப்படுவதில்லை. 'வரும' என்பது எதிர்கால வினை முற்று ''வருங்காலம்'' முதலியவற்றில் 'வரும்' என்பது பெயரெச்சம். 'வருன்னு' என்பது நிகழ்கால வினைமுற்று. ''வர'' என்பது நடுவினையெச்சம என்று கூறப்படும நிகழ்கால வினையெச்சம். எதிர்காலத்திற்குக் கூறியதைப் போன்று, வேண்டுமாயின், 'வருன்ன' என்ற பெயரெச்ச வடிவததோடு வினைமுற்றிற்கு ஒப்புமை உண்டென்று கருத முடியும். இந்த ஊகங்களுக்கு எவ்வாறு அமைதி காண்பது? வினையெச்சமே வினைமுற்றாய் முடிந்தது என்ற கருத்தின் குறையன்று இது; மலையாளத்தில் சில வேறுபாடுகள் நிகழ்ந்துள்ளதே இந்த இடையூறுகளுகெல்லாம் காரணம்.

எதிர்கால வினைமுற்றுக்களின் பொருளும் வடிவமும், திராவிட மொழிகளில் பொதுவாக இன்னவிதம் என்று திட்டவட்டமாகப் பிரித்துக கூறும விதத்தில் காணப்படவில்லை. எதிர்காலச் சொல்லிற்குச்

சீலம், உபதேசம், தத்துவம உரைத்தல் முதலிய பொருட்களும் உள வெனக் காட்டப்பட்டதன்றே எனவே இச்சிறப்புப் பொருளைக் குறிக்கவில்லையெனின், எதிர்கால வடிவம் எதிர்காலத்தைக் குறிக்கும் என்பதே உண்மை அதன் வடிவங்கள் மலையாளதத்தில் உம், உ ஆகிய இரண்டுவகைகள். இரண்டு விதிகளுகும் பொருளிலும் வழக் கிலும் சில வேறுபாடுகள் உள்ளதால் அவைகள் பரியாயங்களல்ல. ஆனுல் இன்ன பொருட்சிறப்பில் இன்ன விகுதி வரும், ஏனைய் இடங் களில் மற்றையது வரும் என நியதி வகுபபதற்கு நன்கு சாத்தியமு மில்லை.

''உம்'' என்ற மலையாள எதிர்கால விகுதியே பழைய கன்னடத் தில் எதிர்கால இடைநிலையாகக் (அல்லது திட்டவட்டமாகக் கூறின் சீல எதிர்கால விகுதியாக) காணப்படுகிறது மலையாளததைப் போன்றே அதில் பால் வேறுபாடும் இல்லை. அவன், அவள், அது, அவர் கேயுகம் (=செய்யும்) என வழங்கலாம். தமிழிலும் ''செய்கு'' என்று அனுஸ்வாரமில்லாத தன்மை ஒருமையிலும், ''செய்கும்'' என்று அனுஸ்வாரமுள்ள தன்மைபன்மையிலும், சொல்வடிவங்கள் காணப் படுகின்றன நான் செய்த=ஞான் செய்யும்; நாங்கள் செய்கும்=ஞங் ஙள் செய்யும்; செய்கும் வந்தோம=செய்யான் வந்நோம் என்று உம்மீற் றுச் சொல்லே விணையெச்சமாகவும் பழைய செந்தமிழில் அரிய வழக்குகள் காணப்படுகின்றன அதனுல ஒரு காலத்தில் 'உம்' என் பது தமிழில் எதிர்கால விணைமுற்று, எதிர்கால விணையெசம் ஆகிய வற்றின் விகுதியாய் வழங்கிற்று என்பது தெளிவாகின்றது. இவற் ருல் தமிழைப் பொறுத்த அளவில், நமது முடிவில் பிழையில்லை என் பதூ தெளிவாகின்றது. மலையாளத்தைப் போன்றே பழந்தமிழில் பால் விகுதி கணிக்கப்படவில்லை என்ற ஒரு அனுகூலமும் கிடைத்து விட்டது. கன்னடதிலும் தெலுங்கிலும் எதிர்கால விணையெச்சமே இல்லை. அதனுல் அவ்விரண்டு மொழிகளையும் பற்றி இங்கு ஆராய வேண்டியதில்லை

''உம்'' என்ற அனுஸ்வாரமில்லாத எதிர்காலச் சொல், பால் விகுதியில்லாத வடிவில் மலையாளததைத் தவிரச் செந்தமிழிலும் தெலுங்கிலும காணப்படுகின்றது.

உம், உ இரண்டும் சீல எதிர்காலச் சொற்கள். இவற்றைத் தவிரத தமிழில்,

	ஒருமை	பன்மை	ஒருமை	பன்மை
தன்மை	செய்வேன்	செய்வோம	நடப்பேன்	நடப்போம்
முன்னிலை	செய்வாய்	செய்வீர	நடபபாய்	நடப்பீர்

படர்க்கை ஆண்	செய்வன்	செய்வர்	நடப்பன்	நடப்பர்
படர்க்கை பெண்	செய்வள்		நடப்பள்	
படர்க்கை அஃறிணை	செய்வது	செய்வ	நடப்பது	நடப்ப
	செய்யும்	செய்யும்	நடக்கும்	நடக்கும்

என்று பால் விகுதிகளோடு சுத்த எதிர்காலமும் உண்டு. இதில் அஃறிணையில் மாததிரம் பால் விகுதியின்றிச் செய்யும், நடக்கும் எனச் சீல எதிர்கால வடிவத்தையே கவிஞர்கள் வழங்குவதுண்டு. எனவே சுத்த எதிர்காலம், சீல எதிர்காலம் என்ற வேறுபாடு ஆண்பெண் பாற்களிலேயே பொருட்படுத்தப்படுகின்றது, அஃறிணையிலன்று என எய்துகின்றது. மேற்காட்டப்பட்ட சான்றுகளில் 'செய்' என்பது அகாரிதமும், 'நட' என்பது காரிதமும் ஆகும். அவற்றில் அடிச் சொல்லையும பாலவிகுதியையும் நீக்கினால் எஞ்சிய பகுதி முறையே வ், ப்ப் என்பனவே. அதனால் சுத்த எதிர்காலச் சொற்களில் அகாரி தங்களில் ''வ்'' என்றும், காரிதங்களில் ''ப்ப்'' என்றும் அமையும் என நிச்சயிக்கலாம். ப, வ இரண்டும் எதிர்காலததைக குறிக்கும் இடை நிலைகள் என நன்னூலிலும[1] கூறப்பட்டுள்ளது. ஆனால் வகர பகரங்கள் முறையே அகாரித காரிதங்களில் வருவதால் அவைகள் ''கசு'' போன்று அங்க உருபுகளாகும் என்று கற்பிக்கப பெரிதும் நியாயம் உளது. கால்டுவெல்லும் அவ்வாறே கருதுகின்றார். ஆனால் அவர் ஒரு படி கூடச் சென்று, ''அறிவு'' ''படிப்பு'' முதலிய தொழிறபெயர் களோடு பால்விகுதிகளைச் சோத்துச் சுத்த எதிர்கால வினைமுற்றுக் கள் ஆக்கப்பட்டுள்ளன, (அறிவு+ஏன்=அறிவேன்; படிப்பு+அர்= படிப்பர்) என நிறுவுகின்றார். இதற்கு வேண்டிய உத்திகளும் உள் ளன. இச் சுதத எதிர்காலத்திற்கு நேராக ஒரு பெயரெச்சமுமில்லை. ''உம்'' என்ற சீல எதிர்காலச் சொல்லே பெயரெச்சத்திற்கும் அமை யும். எ-டு: ''வருங்காலம்''. எதிர்கால வடிவததிலும் பொருளிலும் நிச்சயமின்மையும், திட்டவட்டமின்மையும் வருவதற்குரிய காரணமும் இதன் தோற்றத்தன்மையாக இருக்கவேண்டும். தொழிற்பெயரைப் போய் வினைமுற்றுக்கினால், அதற்குப் பொருளில எவ்வாறு நிசசயமும் திட்டவட்டமும் வரும? அதனை பகுத்தால் காலததைக் குறிக்க ஒரு சொல்லும் இல்லையன்றே. கால்டுவெல் துரையின் மனோபாவம் இவ் வாறு எல்லாம் சென்றிருக்கலாம். அவர் கண்ட முடிவில் எனக்கு மிக வும் பெருமையும் மதிப்பும் உளவெனினும், இதில் அவர் கருத்தோடு பொருந்த எனககு மனம் வரவில்லை. முதலாவது தொழிற் பெயரின் வடிவங்கள் பலவிதமாக அமைவதால் கால்டுவெல் நினைககும் அள வுககு அதன் உருவ அமைப்பு இலகுவன்று. இரண்டாவது அங்க-

1 நன்னூல்–144

உருபாகுமெனில் காரிததில் வழக்கமாய் வருவது "க்க" அன்றே. "ப்ப்" என்பது எதற்கு? அதனைப் போன்றே அகாரிதங்களுக்கு அங்கத்திருத்தமாக அண்ண ஒலிக்கு யகரமும், உதட்டொலிக்கு வகரமும் வருவதன்றே வழக்கம எல்லாவிடத்தும் வேறுபாடின்றி வகரம் வர நியாயமுளதோ? மூன்றுவது சீல எதிர்காலததிற்கு இவ்வித உருவ அமைப்பு கூறலாமெனில திட்டமில்லாது பொருளிருபபது பொருந்தும். சுத்த எதிகாலத்தின் பொருள் திட்டவட்டமான தன்றே. நான்காவது, இறுதியில், சுத்த எதிர்காலத்திற்கு நேரான பெயரெசசம் இல்லை யென்றும் கூறமுடியாது. "செய்வ, நடப்ப" என்ற பெயரெச்சங்கள் செநதமிழில் அரிதாகவேனும் உள்ளன.[1] அறிவோன், இரிப்போன் என்ற பெயரெசசப் பெயர்கள் வழககிலில் லையா? மலையாளததில் சிறப்பாக "ஸர்வஞானியாயிரிப்போரு ஶங்கராச்சார்யர்" முதலியவற்றில் 'இரிபபோரு' (இரிப்ப+ஒரு) என்பது சரியான பெயரெசசமே. அதனுல் எனது எளிய கருததில், செய்வு, நடப்பு என்ற அனுஸ்வாரம் இல்லாத நிர்ணய எதிர்காலச் சொலலோடு முறையே பாலவிகுதியை வேண்டிய இடத்துச் சேர்த்து, செய்வேன், செய்வாய் முதலிய சுதத எதிகால வழகுகுள அமைந்தன எனக் கற்பிததல்ல பொருதும் நியாயமும இயலபுமாகும். வரு, இரிப்பு என மலையாளத்தில் நீளும் உகரம் வெறும குற்றியலுகரம் போன்று கெடுவது சரியன்று என எணணுவதறகிலலை. இறந்தகால துகரததின் நிலையும் இதுபோலன்றே. தொழுது+ஏன்=தொழுதேன் என்பதைப் போன்றே, இரிப்பு+ஏன்=இரிப்பேன் என்றும் இரண்டிலும் உகரத்தைத் தேற்றததிற்காக நீட்டியதே உளது.

இந்த ஆய்வால் எய்தியனயாவையெனில்—(1) (வு, பு என்ற) உ, (2) உம ஆகிய இரண்டே தமிழிலும் எதிர்கால இடைநிலைகள். இடவிகுதிகளைச் சேர்குமபோது உகரம கெடுப்போவதனுல் தமிழ் இலக்கண ஆசிரியர்கள் வகர பகரங்களை மாத்திரம் எதிர்காலச் சினனங்களாகக் கணசகிட்டனர். நாமோ 'உ' என்ற உயிரை உருபாக்கிவிட்டு, வகர பகரஙகளை எதிகாலஙகாட்டும் தனி இடைநிலைகளாகக் கற்பிததோம் என்பதே வேறுபாடு. "உம்"[2] தமிழில் அஃறிணைகு மாத்திரமே வழங்குகின்றது. அதனோடு எண் வேறுபாடு சேர்கவேண்டா பால் இட எண வேறுபாடுகளை விரும்பாத மலையாளம், எண் வேறுபாடில்லாத இநத 'உம்' விகுதியை முக்கியமான எதிர்கால விகுதியாக ஏற்றுகொண்டது. சில சிறப்புப் பொருட்களில்

1 இவை தமிழில பெயரெச்சமல்ல; பெயரெசசப் பெயர்கள எனில் பொருந்தும்.

2 பழந்தமிழில் 'உம்' ஈற்று வினைமுறறு ஆண, பெண, ஒன்று பல ஆகிய நான்கு பாலிற்கும் வருகினறது.

'உ' விகுதியையும் பால் வேறுபாட்டு விகுதியில்லாது வழங்குவது உண்டு. பால் வேறுபாட்டைக் குறிப்பதெனில் தமிழிலுள்ளதைப் போன்று அவ்வகை விகுதிகளை "உ" உருபிறுதியோடே சேர்க்க வேண்டும். அறிவு + ஏன் = அறிவேன்; நடப்பு + அர் = நடப்பர்; அறியும் + ஏன் = அறியுவேன்; நடக்கும் + அர் = நடக்குவர் என 'உம்' உருபிறுதியோடு பால் வேறுபாட்டு விகுதிகளைச் சேர்ப்பது ஆதிகாலத்தில் இருந்ததாகக் காணப்படவில்லை. இப்போது அம்முறையிலும் வழக்கு அமைந்துள்ளது. வினையெச்சத்தை ஆக்கும் முறையோ இரண்டுவகை வினைமுற்றுக்களில ஏதேனும் ஒன்றோடு "ஆன்" என்பதைச் சேர்ப்பதாகும். அறிவு + ஆன் = அறிவான்; அறியும் + ஆன் = அறியுவான். வெறும அடிச்சொல்லிலிருந்து அறி + ஆன் = அறியான்[1] என்ற உருவமும் இப்போது ஏற்பட்டுளது. நடப்பு + ஆன் = நடப்பான்; நடக்கும் + ஆன் = நடக்குவான்; நட + ஆன் (க்கு என்ற இடைநிலை சேர்ந்து) = நடகான் என்றிவ்வாறு உருவ அமைப்பு ஏற்பட்டிருக்கும் நிலையை நோக்குமபோது இறந்தகால முறைக்கு முரணாக எதிர்காலத்தில் வினைமுற்றிலிருந்து வினையெச்சத்தின் தோற்றம் வந்தது என உடன்படவேண்டியிருக்கின்றது.

இந்த "ஆன்" என்பதன் தோற்றம் எவ்வாறு? பவணந்தி 'வான்—பான்' என்பவற்றை வினையெச்ச விகுதியாகக் கணிதத்துள்ளார். கால்டுவெல்லின் கருத்தில், இது 'பலன்', 'கடன்' முதலியவற்றில், 'அம்' எனவும் 'அது' எனவும் உள்ள அஃறிணை ஒருமை விகுதியின் இடத்தில் காணப்படும் 'அன்' என்பதன் நீட்டமாகும். அதுவே 'ஆன்' என நீளும் என்பதற்கு அவர் இருபது + எட்டு = இருபத்தெட்டு என்பதற்குப் பதில் "இருபானெட்டு" என்ற தமிழ்ப் புலவர்கள் வழங்கும் வழக்கையும் சான்று காட்டுகின்றார்.

நிகழ்காலத்தைக் குறிக்கும் வினையெச்சங்கள் தெலுங்கிலும் கன்னடத்திலும் மாத்திரமே உள்ளன. அம்மொழிகளில் வினையெச்ச வடிவத்திலிருந்தே வினைமுற்றுக்கள் உண்டாகின்றன. எவ்வாறெனின்,

மலையாளம்	வினையெச்சம்	வினைமுற்று
தெலுங்கு	சேஸ்து	சேஸ்தானு
கன்னடம	மாடுதத	மாடுத்தேனே (தற்காலம்)

இறப்பு, எதிர்காலங்களைப் போன்று, இந் நிகழகாலத்தைக குறிக்கும் வினையெச்சத்தை இம்மொழிகளிரண்டும் மிகுதியாக வழங்குவதுண்டு.

1 இது தமிழில் எதிர்மறை வினை

எ-டு:

1. தெலுங்கு : ஆயன போஜனமு சேஸ்து ஆ ஸங்கதினி குரிம்சி நாதோ மாட்லாடினாடு.
2. கன்னடம் : அவனு போஜன மாடுத்த ஆ ஸங்கதியன்னு குறித்து நன்ன புத்திர மாதாடிதனு.
3. மலையாளம் : அவன் போஜனம் செய்து கொண்டு (இரிக கவே) ஆ ஸங்கதியெக் குறிச்சு என்னோடு ஸமஸாரிச்சு.
4. சமஸ்கிருதம் : ஸ போஜனம் கர்வன் தமர்த்தமதி க்ருத்ய மாமபாஷிஷ்ட.

இவற்றுள் நிகழ்கால வினையெச்ச வழக்கு சரியென்பது சமஸ்கிருத மொழிபெயர்ப்பை நோக்கினால் தெளிவாகும். மலையாளத்தில் இவ் வினையெச்சம் இல்லாததால், குறிக்கும பொருள் வரச செய்வதற்குக் ''கொள்'' என்ற மற்றொரு அடிச்சொல்லைப் பின் சேர்த்து வழங்குவ தோடு, முன்வினையெச்சத்தையுமே பயன்படுத்தவேண்டி வந்திருக் கின்றது. தமிழிலும் இதுவே கதி.

தமிழிலும் மலையாளத்திலும் நிகழ்காலத்தைக் குறிகும் வினை யெச்சம் இல்லாது போனது ஏதனால்? முடிக்கும் வினைக்கு முன் நடந்த வினையை முன்வினையெச்சமும், பின் வரப்போவதனை பின்வினையெச்ச மும் காட்டுகின்றன எனவே நடுவினையெச்சம் (நிகழ்கால வினையெச் சம்) முடிக்கும் வினையின் சமகாலவினையையே காட்டவேண்டும். ஒரே காலத்தில் இரண்டு வினைகள் நடத்தல் என்பது அபூர்வமாகும். ஸமஸ் கிருதத்தின் நிலையும் இதனைப் போன்றதே. முன்வினையெச்சத்தின் இடத்தில் ''கத்வா'' என்பதும், பின்வினையெச்சத்தின் இடத்தில் ''துமுன்'' என்பதும் உள்ளன. நடுவினையெச்சத்தின் இடத்தில் ஏதுவுமில்லை ''லாதேசங்களாகிய ஸதருஸானச்சு''களுக்கோ திராவிட மொழிகளிலுள்ள பெயரெச்சத்தின் நிலையே ''போஜனம் கர்வன்'' என முன் காட்டப்பட்ட சான்றில் ''ஸதரு'' உருபு இறுதி தற்கால விசேடணமாக வழங்கப்பட்ட பெயரெச்சமே. திராவிடமொழிகளில் வினையெச்சம் வினைகும், பெயரெச்சம் பெயராகும் விசேடணம் ஆக வேண்டும்; நோமாறுக வரகூடாது. தமிழ் மலையாள மொழிகளில் சரியான நடுவினையெச்சம் இல்லாது போனது இம்முறையிலாயிருக்க லாம்.

ஆனால் தமிழிலும் மலையாளத்திலும் நிகழ்காலப் பொருளுடைய ஒரு வினையெச்சம இல்லையென்று வரையறுத்துச் சொல்ல எனக்கு உடன்பாடு தோன்றவில்லை.

ஈ க்ரந்தம் மேல் போகப் போக லளிதமாணு்.
ஸுகுமாரம் இரிக்கயிரிக்க குணம் கூடுன்ன ஒரு க்ருதமாணு்.
வர வர மாமனுர் கழுத போலெ.

இச்சான்றுகளில் காணப்படும் வினையெச்சம் வினைமுற்றுக்களின் சம கால வினைகளைக் குறிக்கவில்லையா? இது தமிழிலக்கணப்படி நடு வினையெச்ச வடிவங்களாகும். ஆனால் இதற்கெதிராகவும் இதினின்று தோன்றியதாகவும் ஒரு வினைமுற்று காணப்படவில்லை. எனவே ஒரு வித வினையெச்சமுண்டென்று உடன்பட்டாலும், அதற்கெதிரான வினைமுற்று இல்லாததற்கு என்ன செய்வது? அதுவும் உளது என்று நான் கூறுகின்றேன்.

என்னு! க்ஷேமம் தானு? இருக்கேன்.
ஏன்? தேமேன் இருக்காய்? இல்லை; கார்யம் இருக்கு.

தமிழிலுள்ள இவ்வுரையாடல் மொழியை நோக்குக. இதனில் "இருக்கேன், இருக்காய், இருக்கு" என்ற வடிவங்கள் எந்தக் காலத்தைக் குறிப்பன? இவை குறிக்கும் காலம் இறப்புமன்று; எதிர்வுமன்று; நிகழ்வுமன்று. முக்காலத்திற்கும் பொதுவானதோ[1] அல்லது கால உபாதி இல்லாததோ ஆகிய ஒரு முற்றுவினையாகும் இது. இந்த வினைமுற்றின் வினையெச்சம் வர, போக, இரிக்க என்று முன் காட்டப் பட்ட மூன்று வடிவங்கள். எனவே இருக்க+ஏன் = இருக்கேன் என வினையெச்சத்தின் அகரம் கெடச் செய்து, இடவிகுதியைச் சேர்த்தால் வினைமுற்று உண்டாகும். இம்மாதிரி வினைமுற்றுக்கள் ஆண், பெண் பால்களில் மிகுதியும் அபூர்வமெனினும் அஃறிணையில் சில சமயங்களில் வீட்டுமொழியில் பயன்படுத்தப்படுவதுண்டு. இதற்குக் "கால மற்ற வினைமுற்று" என்றேனும், "வரையறையற்ற காலங்குறிக்கும் வினைமுற்று" என்றேனும், தமிழில் "நடுவினைமுற்று" என்றேனும் பெயரிடலாம். இந்த உத்திப்படி நடுவினையெச்சத்திற்கு எதிராக ஒரு நடுவினைமுற்றும் கிடைத்துவிட்டது. வினையெச்சம் இல்லாதது நிகழ்காலத்திற்காகும்.

இனி நிகழ்கால வினைமுற்றின் வரலாற்றை ஆராய்ந்து நோக்குவோம். போகிறுன்–போகின்றுன்; நடக்கிறுன்–நடக்கின்றுன்[2] எனத தமிழில் இப்போது காணப்படும் நிகழ்கால வடிவங்கள் செந்தமிழ்ப் பாடல்களில் மிகுதியும் அபூர்வம் என்றும் கல்வெட்டுக்களிலும் செம்புப்

1 இருக்கேன், இருக்காய், இருகு ஆகியன முறையே இருக்கிறேன், இருக்கிறாய், இருக்கிறது ஆகியவற்றின் பேச்சுவழகு வடிவங்கள்; இவ்வாறே இருக்கான், இருக்காள், இருக்கார் முதலியனவும் உள்ளன. எனினும் நிகழ்காலச் சொல் முக் காலத்தையும் உணர்த்துவதால் இது பொருந்தும்.

2 சங்க இலக்கியங்களில் இவ்வடிவங்கள் அரியன.

பட்டயங்களிலும் ஒரிடத்தும் காணப்படவில்லையென்றும் கால்டுவெல் கூறுகிறார். இன்றையப் பேச்சுவழக்கில் ''கிறு'' சேர்ந்த வடிவங்கள் மிகுதி. எனினும், ''வேவுகிறது'' எனச் சொல்லுதற்குப் பதில் ''வேகுது'' என்பது சாதாரண மக்கள் பயன்படுத்துதும் பேச்சு வழக்கு. அதனால் 'கிறு' சேர்ந்த வடிவம் இன்னும் தமிழில் திடமாய் வேரூன்றி விடவில்லை என்றும் அவர் ஊகிக்கிறார். 'கின்று' என்பதன் தோற்றத்தைப் பற்றிய ஆய்வில் டாக்டர் கால்டுவெல் சொந்தமாக ஒரு வடிவைக் காணுது, கிரால், குண்டர்ட்டு ஆகிய இரு டாக்டர்களின் கருத்தை ஒப்புக்கொள்கிறார். அவர்களுடைய கருதுதையே கால்டுவெல்லும் கூறுகிறார். (Dravidian Grammar, 2nd Edn., p. 385) அது மொழிபெயர்த்து இங்கு தரப்படுகின்றது. ''தமிழிற்குப் பரம்பரைச் சொத்தாக ஒரு நிகழ்கால வடிவம் இல்லாதிருந்ததென்றும், தமிழில் அது புதிதாக உண்டாகிய ஒரு முக்கியமில்லாத வடிவமாகுமென்றும் அதன் தோற்றம் எதிர்காலதோடு ஒரு நிகழ்காலச் சின்னத்தைச் சேர்த்ததாகுமென்றும், டாக்டர் கிரால் கருதுகிறார் என்று தோன்றுகின்றது. கின்று+க+இன்று ('க்' பண்டைச் செந்தமிழில் உள்ள ஒரு எதிர்காலச் சின்னம்; இன்று+இன்னு=இந்த நாள்). இந்தக் கருத்தையே குண்டர்ட்டு ஏற்றுக்கொள்ளவோ, சொந்தமாகத்தான் செய்த ஆய்வுகளிலிருந்து பரிணமித்ததாக விவரிக்கவோ செய்திருக்கிறார் எனத் தோன்றுகிறது''. எனவே ஐரோப்பியர்களாகிய திராவிட மொழிப் பண்டிதர்களின் கருத்து, சமஸ்கிருதத்தில் புராபவதி (பண்டு தோன்றுகின்றது) = பவிஷ்யதி = (தோன்றும்) என நிகழ்காலத்தை எதிர்காலமாக்குவதைப்போன்று தமிழ் மலையாள மொழிகளில் எதிர்காலச் சொல்லோடு நிகழகாலப் பொருளுள்ள அவ்வியத்தைச் சேர்த்து நிகழ்காலம் ஆக்கப்படுகின்றது என்பதாகும். தமிழிலுள்ள 'இன்று' மலையாளத்தில் 'உன்னு' ஆவதைப் பற்றி ஒரு ஐயதிற்கும் இடமில்லை. 'பன்றி' என்பது 'பன்னி' என ஆவதைப் போன்று, மெல்லினமாக்கலால் 'இன்று' என்பதும் 'இன்னு' ஆகின்றது. இகர உகரங்களின் போலித்தன்மை மிகுதியாதலின் 'இன்னு' என்பது எளிதில் 'உன்னு' ஆகின்றது. திராவிட மொழிகளில் வழகமாயுள்ள (Harmonic sequence of Vowels) உயிர்களை உடன்படுத்தலுக்கு மலையாள மொழியில் அதிக பயிற்சியில்லை எனினும் அதுவும் இங்கு துணைசெய்யலாம். லீலாதிலகம் முதலிய பழைய மலையாள நூற்களில் ''போகின்றது'' எனவும் மற்றும இகரம் காணப்படுகின்றது; உகரமன்று. ''வராயின்னு'' என்ற எதிர்மறை வடிவததில் ''இன்னு'' என்பதல்லாது ''உன்னு'' என்பது எப்போதாவது பயன்படுதப் பட்டதோ என்பது ஐயமே. அதனால் தமிழில் ''இன்று'' என்பதன்

தோற்றம் எதுவோ, அதுவே மலையாளத்திலுள்ள ''உன்னு'' என்பதற்கும் வரலாறு என்பது நிச்சயம்.

தமிழிலுள்ள ''கின்று'' என்பதைப் பற்றி மேனூட்டறிஞர்கள் அமைத்திருக்கும் கருத்து அறிவுக்குப் பொருத்தமானது என்பதில் ஐயமில்லை. ஆனால் அவர்களோடு முழுவதும் கருத்தொருமைப்படுதற்கு இந்நூலாசிரியருக்குத் தயக்கமே. 'போகின்ருன்' எனவும் 'போகிருன்' எனவும் தமிழில் இரு வடிவங்கள் உள. அவற்றுள் 'போகிருன்' என்ற மெல்லினமில்லாத வடிவமே பேச்சுத்தமிழில் வழங்குகின்றது. எனவே ''கின்று'' என்பது னகரம் கெடுதலால் 'கிறு' ஆயிற்று என்பதை ஏற்றுக்கொள்ளவேண்டும். ஆனால் தமிழில் வழக்கமாய் நிகழ்வது மெல்லின மிகுதலே கெடுதலன்று. அதனால் 'கிறு' 'கின்ருய்' முடிவதுதான் நியாயம். 'குறு' என்பது 'குன்று' ஆயிற்றென்பதும், மூரு என்பது மூன்று ஆயிற்றென்பதும் எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்படுகின்றன. இந்த ஐயம் கால்டுவெல்லிற்கும் எழாதிருக்கவில்லை. ஆனால் அவர் கிராலினுேடு ஒத்துச்செல்ல வேண்டி, இயல்பாக மெல்லின மிகுதலாயிருக்கலாம் என்பதை ஒப்புக் கொண்டுவிட்டார். ''இன்று'' என்ற பெயர்ச்சொல்லிற்குக் கால உருபின் இடததைக கொடுப்பதிலும் ஏதோ ஒரு விருப்பமின்மை தோன்றுகின்றது. போதாததற்கு அதனுக ''க்'' என்ற சரியான எதிர்கால இடைநிலையின் பின் நிறுத்தி வைக்கவும் வேண்டும். அதன் பின்வரும் அன், ஆன் முதலிய பால்விகுதிகளைச் சேர்க்கும்போது எத்தகைய விகடவடிவம் எய்துகின்றது? அடிச்சொல்லிற்கும் பால்விகுதிக்கும் எத்தகைய தொடர்பும் இல்லை. போகேன் இன்று என்று இடமாற்றம் செய்தாலே சரியாயிருந்திருக்கும். அதனால் ''கிறு'' என்பதன் தோற்றத்திற்கு வேறு ஏதேனும வழி அமையுமோ என்று நோகுவோம்.

தமிழில் ''இற'' என்றெரு அடிச்சொல்லுளது. அதற்குக் 'காலத்தின் போககு' என்பது பொருள். To pass time, to proceed எனத் தமிழ்-ஆங்கில அகராதியில் பொருள் கொடுக்கப்பட்டிருக கின்றது. சமஸ்கிருதத்திலுள்ள ''வ்ருத'' அடிச்சொல்லின் பொருளே இதற்கு. சமஸ்கிருத இலக்கண ஆசிரியர்கள் ''பவத்'' காலத்திற்கு ''வர்த்தமானம'' எனப் பெயரிட்டிருபபதைப் போன்று, தமிழர் கழிந்த காலத்திற்கு ''இறந்தகாலம்'' எனப் பெயரிட்டிருக்கின்றனர். இறந்தது கழிந்த காலமெனின் இறககின்றது நிகழ்காலம ஆகவேண்டுமன்ரே. அதனால் தமிழில் நிகழ்காலததைக குறிப்பதற்கு நிகழ்காலப் பொருளுள்ள ''இற'' என்ற சொல்லினைப் பின் சோத்து வழங்கினர். ''க'' என்ரே ''ககு'' என்ரே உள்ள பகுதி ஒரு இடைநிலையேயாகும்.

கிறு = க் + இறு என்பதை ஐரோப்பிய ஆசிரியர்களும் உடன்படுகின்றனரன்றே டாக்டர் கிரால் ''க்'' என்பது எதிர்காலச் சின்னமாகும் எனக் கூறுகின்றார். நாம் அதனை இடைநிலை அல்லது அங்கப்பிரத்யயம் ஆகும் எனக் கூறுவதே வேறுபாடு. கால்டுவெல்லும், போகும்-போக்கும் என்ற எதிர்காலத்திலும், போக-போக்க என்ற நடுவினையெச்சத்திலும் க், க்க ஆகியவை முறையே செயப்படுபொருள் குன்றியது, செயப்படுபொருள் குன்றாதது ஆகியவற்றின் வேறுபாட்டைக குறிக்கும் அடிச்சொல் வேறுபாட்டு உருபு என ஏற்றுக்கொள்கின்றார். இனிச் சான்று காட்டுவோம்.

செய்—செய்+க் +இற+ஏன் = (அகரம் கெட) செய்கிறேன்
போ —போ +க் +இற+ஆன் = ,, போகிறான்
நட —நட +கக்+இற+ஆய் = ,, நடக்கிறாய்.

இவைபோன்ற வினைத்தொகை அல்லது கலப்புவினை ஒரு அபூர்வ வழக்காகுமென்று ஐயுறவேண்டியதுமில்லை. செய்திலேன் என்ற எதிர்மறை வடிவம் இவ்வாறு இயற்றப்பட்டதன்றே. செயவேண்டும், செயப்பெறும் முதலியவைகளிலுள்ள துணைவினை வழககு வினையெச்ச வடிவம் என்ற வேறுபாடே உள்ளது. இங்கும் செய்க, போக ஆகிய வினையெச்சங்களோடு ''இற'' என்பது சேர்க்கப்பட்டது எனக கருதுவதிலும் முரணில்லை ''இற'' என்பது உயிர் முதலாததால், வினையெச்சதின் அகரம் கெடுகின்றது. வேண்டும் என்பது இடையின மெய்முதலாதலால் விகாரமெதுவும் ஏற்படவில்லை. ''பெடுக'' என்பது வல்லினமுதலாதலால் அவ்வல்லெழுத்து இரட்டுகின்றது. இவையெல்லாம திராவிட மொழிகளின் எழுதது விகார முறைக்குப் பொருந்துவன ஆகும்.

இவ்வளவும் சரிப்பட்டுவிட்டால், இனியுள்ளதெல்லாம் எளிது. மெல்லின மிகுதலால் 'இற' என்பது 'இன்ற' ஆய் முடிகின்றது. மலையாளததில் ''இன்னு'' என்று உகரத்தில் முடிவதற்கு மாத்திரம் வழி காணவேண்டும். அதற்கு நிர்ணய எதிர்கால எழுததாகிய ''உ'' என்ற உருபின் உதவி போதும். அவதாரக எதிர்காலத்தில் எதிர்காலத்தின் அம்சம் சிறிதும் இல்லையன்றே. அதனுல அது ''இற'' என்பதன் மேல் வருதற்கு ஙன்கு பொருந்தும. ''உண்டு'' என்பதிலுள்ள ''உள்'' என்ற அடிச்சொல்லின் நிகழ்காலத்தில காணப்படும் ''உ''கரம் இந்த வழக்கத்தைக் குறிக்கும் எதிர்காலம் ஆகுமென்று குண்டர்ட்டு முதலியவர்களும உடன்பட்டுள்ளனர். மூலமொழியாகிய தமிழிலேயே* 'இற' என்ற அடிச்சொல்லோடு வழக்க எதிர்காலச்

* தமிழ் மூலமொழி என்ற கருத்து இங்கு வெளியிடப்படுகிறது.

சொல்லைச் சேர்த்து "இறு" என ஆக்கிச் சேர்ப்பதிலும் முரணில்லை. செய்வென், செய்வன் முதலிய சுத்த எதிர்கால வடிவங்களிலும் செய்வு + ஏன் = செய்வேன்; செய்வு + அன் = செய்வன் என்று அவதாரக எதிர்கால உருபு சேர்ந்து உண்டாயிருக்கவேண்டுமென்று இதன் முன்னர் நாம் செய்த ஆய்விற்கு இது துணைசெய்கின்றது. தெலுங்கின் நிலையை நோக்குக. அம்மொழியில் நிகழ்காலத்தைக் குறிக்க அவதாரக எதிர்கால உருவமே பயன்படுத்தப்படுகின்றது. எ-டு:

மீரு ப்ரதிரோஜு ஏன்னி கண்டலகு போஜனமு சேஸ்தாரு?–நிகழ்காலம்
நீங்கள் தினந்தோறும் எத்தனை மணிக்கு உணவருந்துவீர்கள்? ,,
மீரு ரேவி மா ஈட்லோ போஜனமு சேஸ்தாரா ? எதிர்காலம்
நீங்கள் நாளை எங்கள் இல்லத்தில் உணவருந்துவீர்களா ? ,,

"சேஸ்துன்னாரு" என்றுள்ள நிகழ்கால வடிவம் அனுபந்தி நிகழ்கால மாகும்.

இவையெல்லாம் தமிழ் மலையாளங்களில், நிகழ்காலச் சின்னம் "இற" என்ற அடிச்சொல்லாகும் என்று கூறுதற்குப் போதிய சான்றுகள். இனி இம்மொழிகள் இரண்டிலுமுள்ள வேறு ஒரு நிகழ்கால வடிவத்தின் நிலை எவ்வாறு என்பதை நோக்குக.

தமிழ் —செய்யாநின்றான், நடக்காநின்றான்.
மலையாளம் —செய்யாநின்னு, நடக்காநின்னு.

இவற்றில் நின்றான்–நின்னு ஆகியவை நிற்குக என்ற அடிச்சொல்லின் இறந்தகாலமென்பதில் ஐயமில்லை. சிறியன் கிறித்தவர் கைவசமுள்ள செப்பேட்டிலும் மற்றும் "ஆயிநின்ற" என்ற வடிவம் காணப்படுவதால் "ஆ" என்ற பகுதி "ஆகுதல்" என்ற ஆக்கவினையின் இறந்தகால வடிவம் என்பது தெளிவாகின்றது. "ஆய்நிற்றல்" என்பதற்கு "ஒரே தரத்திலேயே இருத்தல்" என்ற பொருள் வழி, வினையின் பிற்பகுதியில் சேர்க்கப்படும் நிகழ்காலத்தின் கருத்து எய்துகின்றது. எனவே இவ்வடிவம் 'ஆகுதல்', 'நிற்றல்' என்ற இரு வினைகளைச் சேர்த்துப் பயன்படுத்தலால் கிடைப்பதாகும். இவ்வடிவத்திற்கு ஏனையவற்றைவிடச் சுற்றிவளைத்துக்கொள்ளும் சிதைந்த வடிவமும் இருப்பதால், இதன் வழக்குக் காலப்போக்கில் குறைந்து போய்விட்டது. இவ்வாறு திட்டவட்ட நியாயமும் இயல்பான ஊகத்தை நிலை பெறுமாறே செய்கின்றது. அதனால் தமிழ் மலையாளங்களில் நிகழ்கால வடிவம், சொற்களைச் சேர்த்து ஆக்கப்படுகின்றன என்ற ஒரு கொள்கையைப் படைப்பதில் நான் தயங்கவில்லை.

இக்கொள்கையின்படி திராவிட மொழிகளில் காலப்பகுதி கீழ்க் காட்டப்படும் உத்திப்படி அமைந்திருக்கவேண்டும். இறப்பு, எதிர்வு

என்ற இரண்டு காலங்களே உள்ளன. இவை இரண்டிற்கும் இடை நிற்கும் நிகழ்காலம் வெறும் செயற்கையே. வடிவகணிதத்தில் புள்ளிக்குள்ள இடத்தைப் போன்று, அதற்கு அறிவாலுணரும் ஒரு நிலை மாத்திரம் உள்ளது இறப்பு எதிர்வுகளை வேறுபடுத்தும் எல்லைக் கோடு நிகழ்காலம். உலக வழக்குகளில் "இது எனது நிலம்; அது அவனது நிலம்; இடையிலுள்ள வரப்போ? யாருடையதுமன்று, அல்லது இருவருக்குமுரியது." அதனைப் போன்று இலக்கணத்திலும் இறப்பு எதிர்வுகள் வரையறைப்பட்டு நிற்பதுண்டு வரையறைப் படுத்தும் மத்தியரேகையாகிய நிகழ்காலத்தை வகையில் சேர்ப்பதற் கில்லை. இரண்டு நிலங்களிலும் பயிர் செய்வது போன்று, இறப்பு நிகழ்வுகளில் வடிவ வரிசை அமையவேண்டும். வரப்பு இரண்டு நிலத் தினுள்ளும் செல்லுவதற்கு உதவுவது போன்று அவசியப்படும்போது மாத்திரம் நிகழ்கால வடிவங்கள் வேண்டும்.

இருந்தேன், இருக்கேன், இருப்பேன்

என்று மூன்று காலததிற்குமுரிய வடிவங்களில், இடையிலுள்ள எல்லை ரேகையின் இடததிலுள்ள நிகழ்காலம் தேவைகுறைவால் பேச்சு மொழியில் மாததிரம அரிதாக நிலைநிற்கின்றது. கவிதைகளில் அதன்மேலுள்ள ஆர்வம் குறைவதால் அது காணப்படுவதில்லை. ஆனால மனிதனின் வாழ்வுகாலம், ஆண்டுதோறும மீண்டுவரும் பெரும் பொழுதுகள், ஒரு காலததும் மாற்றமில்லாத இயற்கைத் ததுவங்கள் ஆகியவை குறித்தெல்லாம் கூறுதறகு ஒரு வழி தேவைப் படுமன்றே. எனின் அதற்குத் திராவிடர்கள் எதிர்காலத்தைப் பயன் படுததி வந்தனர். அதுவே இபபொழுது காணப்படும சில எதிர் காலம். அதனால் உண்மையில் திராவிட மொழிகளில் காணப்படும் வரையறையுள்ள காலமாக இறபபு ஒன்றுமே உள்ளது. இதுவே உத்திகுப பொருந்தும. வடிவத தோற்றததில் காணபபடும் முறை களை இதனால் விளககவும் முடியும். பின்னர் சமஸ்கிருத மொழியாளர்க ளாகிய ஆரியர்களது தொடர்பு ஏற்பட்டபோது ஆரியமொழிகளில் காணப்படும் 'ஒருகணம நிற்பது' அல்லாத, இணைப்புச சொற்களால் உணர்த்தப்படும ஒரு நிகழகாலததின் தேவை திராவிடர்களுகுப் புலப்பட்டிருகவேண்டும் அப்போதுதான் அவர்கள் செயபபாட்டு வினை வடிவததையும் பிறவற்றையும் போன்று, இணைப்புச் சொல் கொண்டு நிகழகாலத்தையும் ஆக்கத் தொடங்கினர். செயற்கையாகப் படைத்ததால் தான் இரணடு வடிவங்கள் காணப்படுகின்றன. அவற்றுள் ஒன்று மிக வலிந்துகொள்ளப்பட்டதாகையால் மறைந்து விட்டது. மற்றொன்று நிலை நிற்கின்றது.

துணைப் பிரிவுகளால் வளைந்தும் நீண்டும் வளர்ந்த இந்த ஆய்வினை, அதினின்று எய்தும் தத்துவங்களைச் சுருக்கிக் கூறுவோம். (அ) திராவிட மொழிகளில் உபாதிகள் ஒவ்வொன்றையும் குறிப்பதற்குத் தனித்தனி உருபுகள் உளவன்றே. அவற்றுள் வினைகளைப் பொறுத்த அளவில், அவற்றின் பகுதிகளாகிய அடிச்சொல்லோடு காலத்தைக் குறிக்கும் விகுதியைச் சேர்த்தால் முறையே வினையெச்சம் ஆகும். அதாவது வேறொரு வினையில் கலந்து சேர்ந்து பொருள் முடிவு பெறவேண்டிய ஒரு வினை உருவம் ஆகும். அம் முற்றியல் முக்கியத்துவம் காட்டுதற்கு மலையாளம் தவிர ஏனைய திராவிட மொழிகளிலெல்லாம் பால் விகுதிகள் சேர்க்கப்படுகின்றன. மலையாளம் மாத்திரம், நீட்டல், முற்றுகர ஒலி, பின் வரும் வல்லினத்தோடு இரட்டாதிருத்தல் முதலிய உபாயங்களால் பயனிலைத் தன்மையை அடைந்து, பால் விகுதிகளைத் தவிர்த்திருக்கின்றது. இதனின்று எய்தியன இத்துணைச் செய்திகளே.

மலையாளம் பால்விகுதிகளை நிரந்தரமாக விலக்கிவிடவில்லை. அவைகளைக கவிஞர்கள் பெரிதும் பயன்படுத்துவதுண்டு. சிலரேனும் இன்றும் பயன்படுத்துகின்றனர். அதனால் அவ்விகுதிகளை எடுத்துக் கூறவேண்டியது தேவை.

109. ஆன் ஆள் து ஆய் ஏன் ஏகத்தில்
ஆர் ஈர் ஓம் பஹுவிங்கலும்
ஆக்யாதத்தின்னு புருஷ
ப்ரத்யங்ஙள் முறய்க்கில.

	படர்க்கை	முன்னிலை	தன்மை
ஒருமை:	ஆன்–ஆண் ஆள்–பெண் து –அஃறிணை	ஆய்	ஏன்
பன்மை:	ஆர்	ஈர்	ஓம்

ஆகியவை படர்க்கை முதலியவற்றில் ஒருமைப்பன்மை விகுதிகள். பால்வேறுபாடு படர்க்கையில் மாத்திரமே உள்ளது. தமிழில் பல வகையாக உள்ளன,

படர்க்கை		முன்னிலை		தன்மை	
ஒருமை	பன்மை	ஒருமை	பன்மை	ஒருமை	பன்மை
ஆண், அன், ஆன் பெண், அள், ஆள்	அர் ஆர்	ஐ ஆய்	இர் ஈர்	குடுது	கும், டும், தும் று, அல் றும், அம், ஆம்

அஃறிணை து, று, டு; அ, ஆ; இன்; மின், உம்; என், ஏன்; எம், ஏம், ஓம்.

முக்கியமான விகுதிகளும், மலையாள மொழியில் பயன்படுத்தப்படும் விகுதிகளுமே மேற்காட்டப்பட்டுள்ளன. எ-டு:

மதுர ஶரீரம் அவன் தரிச்சு நின்னுன்	கிரு. ச.
தரணி பகவதீ விரிஞ்ச லோகே	,,
விரவொடு சென்னு வணங்ஙி நின்னு சொன்னுள்	,,
கண்டாயோ கனிவொடு ஸுதவ்ருட்சமே நீ	,,
முரரிபு சரிதம் ஸ்துதிச்சு சொன்னுர்	,,
கொண்டீரோ,—இருந்நோம்,—புககோம்	இரா. ச.

பால்விகுதிகளுக்கு வழக்கருமை வந்ததோடு, அவற்றைப பயன் படுத்துவதிலும் அவற்றின் பொருளிலும் முறைகேடுகளுக்கிடனுண் டாயிற்று. சிலவிடங்களில் முன்னிலை தன்மை ஆகியவற்றின் இடத் தில் படர்க்கை விகுதிகளின் வழககு காணபபடுகின்றது. பிற இடங் களில் எதிர்காலததில் கால இடைநிலை இல்லாது தன்மை விகுதி மாத் திரம் சேர்த்து வழங்கப்படுகிறது முன்னிலை விகுதி முற்றிலும் மறைந்துவிட்டது என்றே கூறலாம். இறப்பு எதிர்வுகளில் படர்க்கை விகுதிகளும, தன்மை ஒருமை விகுதிகளும மாத்திரமே பொதுவாக நூற்களில் பயன்படுத்தப்படுகின்றன. சிலா ''பாவிச்சோர்'' எனவும் மற்றுமுள்ள பெயரெச்சப பெயர்களின் வேறுபாடு உணராது மாற்றி வழங்குகினறனா. எ-டு:

நீ செய்தான்—ம பா.; நீ சொன்னுன்—ரா. ச.
ஞான் அங்கீகரிசசீடினுன்—கே. ரா.
ஞான் கேட்டீடினுன்—நள. ச ; நாம் வாணுன்—சாண.

இவ்வியலை முடிககும் முன் மலையாளத்தில் பேச்சுமொழியில் பால்விகுதிகள் காணுமை ஒரு நாளும் அவை வழககில் இல்லாதிருந்த தாலா, ஒரு காலதததில வழஙகபபட்டவை காலப்போக்கில விலக்கப் பட்டதாலா என்றும் ஆராய்வது முறை ஆகும். பால், எண் ஆகிய வற்றின் சின்னங்கள் இடவிதிகளின் வேறுபாடுகளாதலால் அவை களை தனியாக எடுததுக கூறவில்லை. அதனால இங்கு இடவிகுதி யெனக் கூறபபடுவதில் பால், எண்களும கலகபபடுகின்றன. முன் னுல இருநதவை அழிந்து போயின என்ற இரணடாய கருத்தைக் கொண்டவர்கள் கால்டுவெல் முதலியோர் டாக்டா கிரால் மட்டும் முன்னைய கருதததைக கொணடவர். அவா தனது தமிழிலக்கணத்தில் (Outlines of Tamil Grammar பக 42 கால்டுவெல் குறிப்பிடுவதன்படி) இவ்வாறு கூறியிருக்கிறர்.

''து'' என முடியும் அடிச்சொல் வடிவம் (எ-டு: செய்து = செய்- அது; செய் என்னும முதனிலையின் வாககியார்த்தம் சேர்ந்த ஒரு

பொருள் என்றல் வினை நிகழ்த்தும் ஒரு பொருள்) முற்றுவினையின் எல்லா ஒருமைகளுக்கும் பயன்படுத்தப்பட்டிருந்ததாகத் தோன்றுகின்றது. (ஞான் செய்து, ஞான் செய்க, நீ செய்து, நீ செய்க முதலியவை) அதனைப் போன்றே ''செய்தும்'' (செய்து+உம்) என்பது, பழைய தமிழில் பன்மைப் பொருளில் பயன்படுததியதை இப்போதும் காணலாம். (நாம் செய்தும், நிங்ஙள் செய்தும் முதலியன) அதனால் செய்து = ஞான் செய்து, செய்தும் = ஞங்ஙள் செய்து என வழங்குதல் அக்காலத்தில் (வினைகொண்டு மட்டும் ஒருமையும் பன்மையும் குறித்தல்) வழக்கமாயிருந்தது. செய்து+ஏன் = செய்தேன் = ஞான் செய்து என இடவிகுதியைப பின்னரே சேர்ததிருகவேண்டும். மலையாளத்தில் இடவிகுதிகள் உரைநடையில் இன்றும் வழகில வரவில்லை.

தனது கொள்கையை நிறுவுவதற்கு கிரால் எடுத்துக்காட்டும் வடிவங்கள் தமிழில் வேறுபட்ட வருகங்களில் உள்ளவை என்பது விவாதத்திற்குரியதன்று. அவற்றில் தோற்றம் இன்னவிதத்திலுள்ளது என்பதைக குறிதது இதுவரை எல்லோரும் ஒப்புக்கொள்ளும் முறையில் ஒரு முடிவு தோன்றவில்லை. எனினும இவ்வியலின் தொடக்கத்தில் நாம நிறுவ முயன்றுள்ள கொளகையின் நயமும் கிராவின் கொள்கைகுத துணை செய்கினறது. வேறு இயல்களிலும் இந்நூலில் விளக்கம் அமையும். அங்கு இப்பொருள் பற்றி ஆராய்ந்துள்ளவற்றையும் சேர்தது நோககுக.

இட வேறுபாடு திராவிடமொழிகளில் இடைக்காலத்தில் தோன்றியதே என்ற கருத்து கால்டுவெல்லிற்கும் உடன்பாடே. (1) தெலுங்கில் இறந்தகாலப் படர்கை வினையில பால இட எண் விகுதிகள மாத்திரம் அல்ல, கால இடைநிலைகூட இல்லை; எதிர்கால வினைகளிலும் அதனைப் போன்றே வெறும் கால உருபு மாததிரம் காணப்படுகின்றது. (2) தெலுங்கிலுள்ள இவ்வழககம் செந்தமிழிலும் காணப்படுவதுண்டு. சிறப்பாக எதிர்மறை வடிவங்களில் எண் வேறுபாடு அஃறிணையில் அரிதாகவே காணப்படுகின்றது. (3) பழைய கன்னடத்தில் ''கும்'' என்ற எதிர்கால விகுதி மூன்று இடங்களுகும் சமமாக வழங்கப்படுவதுண்டு இக்காரணங்களால் திராவிட மொழிகளின் வினைமுற்றுகளில் தொடகக காலத்தில் இட உருவ வேறுபாடு இல்லாதிருநதது என்பது தெளிவாகின்றது. இவைகள் இடவேறுபாட்டு விகுதிகளை அதிகச் சிரமம் இல்லாது தவிர்ப்பதில் மலையாளத்திற்கு மிகவும் உதவியிருக்கவேண்டும் கால்டுவெல் கூறுவது இவ்வாறே. திராவிட மொழியில் இட வேறுபாட்டு விகுதிகள் இல்லாதிருந்த காலம், அது தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம் முதலிய சுதநதிர மொழிகளாகப் பிரிவதன் நெடுங்காலததிற்கு முன்னராகவிருக்க வேண்டும் என்ற

கருத்து காரணமாக, கால்டுவெல்லிற்கு மலையாளத்திலும் இடவேறு பாட்டு விகுதிகள் முதலில் ஏற்பட்டிருந்து பின்னர் மறைந்துவிட்டன என்று ஏற்றுகொள்ளவேண்டி வந்தது. மிகப் பழையசொல் வடிவங்களும் ஒலிகளும் மலையாளத்தில் காப்பாற்றப்பட்டு நிலைநிற்பதால் இடவேறுபாட்டு விகுதிகள் தோன்றுதற்கு முன்னரே அது தமிழினின்று வேறு திரிந்தது, என்று கற்பிப்பதில் அவருக்கு என்ன பொருத்தமின்மை தோன்றிற்று என்பதை அறிய முடியவில்லை.

கால உருபுகளின் தோற்றம்

உருவத் தோற்றம், பொருள் ஆகியவற்றின் முறைகளை நோக்கும்போது இறந்தகாலத்திற்கு எய்திய உருவநிலைபபு ஏனைய இரண்டு காலங்களுகுகும் திராவிட மொழிகளில் காணப்படவில்லை என்பது முன்னரே ஆராயப்பட்டதன்றே இ து ஆகிய இரண்டு உருபுகளே எல்லா முக்கிய திராவிட மொழிகளிலும இறந்த காலத்தைக குறிக்கின்றன.

	தமிழ்	மலையாளம்	தெலுங்கு	கன்னடம்
செய்—	செய்தேன்	செய்தேன்	சேஸிதினி	செய்தேம்

இவற்றுள் முறையே என், ஏன், இனி, எம் என்ற தன்மை ஒருமை விகுதிகளைப் பிரித்தால் 'து' என்ற இறந்த கால உருபு வெளிப்படையாய்க காணபபடுகின்றது.

ஆட்—ஆடினென், ஆடினென், ஆடிதினி, ஆடிதெனு
(ஆடி+ன்+என்) (ஆடி+ன்+ஏன்) (ஆடி+தி+னி) (ஆடி+து+எனு)

இவை ''இ'' என்ற இறந்த கால இடைநிலைக்கு எடுத்துக்காட்டுகள். இ, து என்ற இரண்டு உருபுகளை வழங்கும் விதிகளும் நான்கு மொழிகளிலும் ஏறதாழ ஒரு நிலையிலேயே அமைகின்றன. உயிரிறுதிகளுகும் சிலலிறுதிகளுகும் 'து' என்பது வரும். நிறை மெய்யிறுதிகளுக்கு 'இ' என்பதும் அமையும. மலையாளதிற்குக் கூறிய இவ்விதி தமிழிலும கன்னடதில் சிறுசிறு வேறுபாடுகளோடு காணப்படுகின்றது தெலுங்கிற்கு மாத்திரம சிறப்பாக, வேறுபாடு உளது. அமமொழியில் காலபபோககில் இகரமே எல்லா அடிச்சொற்களோடும் இறந்தகால உருபாகச சேர்ககபபடுகின்றது என்பது முதற்பார்வையில் தோன்றலாம. ஆனால் ''சேஸிதினி'' என மேற்காட்டப்பட்டதைப் போன்ற பல சொல் வடிவங்களும் தன்மை முன்னிலைகளில் ''தி'' என்பது உருமாற்றததோடு ''து'' என வெளிப்படுகின்றது.

இ, து ஆகியவை இப்போது சுதந்திர உருபுகளாக இயல்கின்றன. ஆனால் தெலுங்கிலும் கன்னடத்திலும் உள்ள வடிவங்களை நோக்கும்போது இகரம் சேர்கின்ற இடத்திலும் 'து' என்பதன் எச்சமிச்சம் இருக்கின்றதன்றே எனத தோன்றுகின்றது 'ஆடிதினி', 'ஆடிதெனு' என இங்கு காட்டப்பட்ட எடுதத்துகாட்டுகளின் அமைப்பு 'ஆட்+இது+இனி', 'ஆட்+இது+எனு' என அமையக் கூடாதோ? தமிழ் மலையாள மொழிகளிலும் இதனைப் போன்றே 'ஆடினேன்' என்ற வடிவம் 'ஆட்+இன்+ஏன்' என, ''இன்'' சேர்ந்ததாக அமையுமன்றே. எனவே தகரதத்தின் இடத்தில் அதன் மெல்லினமாகிய நகரம் வந்துள்ளது என்பதே வேறுபாடு. மெல்லினமயகம் தமிழர்களுகும் மலையாளிகளுகும் இயல்பாதலால் இதற்கு நல்ல அமைதியும் உளது. இவ்வகை உதாதிகளை நோக்கும்போது திராவிட மொழிகளில் இறந்தகால உருபின் இடத்தை வகிப்பது ''இது'' என்ற அஃறிணை ஒருமைச் சுட்டின் வடிவம் ஆக இருக்கலாம என்று ஊகிக்கப் பெரிதும் இடமுளது. இங்கு காட்டப்பட்டவற்றோடு மேலும் சான்றுகள் சோத்து, முழுவதும் இவ் வழக்கை விசாரணை செய்தபின், பிஷப் கால்டுவெல் அவர்கள் ஒரு சாரமற்ற சான்றைக் காட்டி எதிராகத தீர்ப்பளித்துவிட்டார்.

இத் தீர்ப்பு மேல்விசாரணை செய்தால், மாற்றப்பட்டு விடுமா என நாம் முயன்று நோகுவோம. அ, இ, உ ஆகிய சுட்டெழுத்துக்களைக் கால உருபாக்குவதில நல்ல நியாயமும நயமும் உள்ளன. ஆனால் அவ்வாறு ஆக்கின், இது என்ற அண்மைச் சுட்டு நிகழ்காலத்தையும், 'அது' என்ற சேய்மைச் சுட்டு இறந்தகாலத்தையும, 'உது' என்ற நடுநிலைச் சுட்டு எதிர்காலதத்தையும் காட்டவேண்டும். இந் நியாயதத்திற்கு எதிராக, 'இது' என்பது இறநதகால உருபாகவே நமது விசாரணையில் காணப்படுகின்றது. அதனால் இவ்வாதம் செல்லாதென்று நீதிபதி வழக்கைத தள்ளிவிட்டார். இறநதகால வடிவங்களில் எங்கேனும் இகரத்தின் இடத்தில் அகரம் காணப்படுமெனில் அனுகூலமாகத் தீர்ப்பு அளிக்கலாம் என அவர் இரக்கப்படவும் செய்கின்றார். இவ்வளவு இரக்கமுள்ள நீதிபதியின் தீர்ப்பை நமக்குத் துணையாயமைப்பது மிகவும் எளிதாகும்.

திராவிடர்கள் நிகழ்காலத்தை ஒரு திட்டவட்டமான காலமாகக் கணித்ததிலலை. ஆரியமொழிகளில் நிகழ்காலத்தைப் பயன்படுத்துமிடங்களில், திராவிட மொழிகள் எதிர்காலத்தை உபயோகிக்கின்றன. சரியான நிகழ்கால வினை முற்று திராவிட மொழிகளில் இடைகாலதத தெழுநததே இப்போது காணப்படும் நிகழ்கால வடிவமும் ''கர்வன்னஸ்மி'' I am doing என்பதைப் போன்று தொடர்சசியாகிய நிகழ்-

காலத்தையே குறிக்கின்றது. இத்தொடர்ச்சி நிகழ்காலப் பொருள் தமிழ் மலையாள மொழிகளில் ''இற'' என்ற அடிச்சொல், தெலுங்கில் ''உல்'' என்ற அடிச்சொல் ஆகியவற்றை இணைத்து வழங்குவதால் அமைகின்றது. செய்கிறுன், செய்யுன்னு, செஸ்மன்ஞனு என்பன எடுத்துக்காட்டுகள். கன்னடத்திலுள்ள கெய்தபேம் என்பதில் 'தப' என்பதற்கு மாத்திரமே விளக்கம் கிடைக்கவில்லை. அதற்கும் கிரால் ஒருவாறு காரணம் அமைக்கிறார். அதனால் நிகழ்காலம இல்லாத காரணத்தால் அண்மைச்சுட்டாகிய பொதுப்பெயரை அக்காலத்தைக் குறித்ததற்கு உபயோகப்படுத்தப்படவில்லை. திராவிடர்களின் பார்வையில் இறந்தகாலமொன்றுமே, முடிந்ததும், திட்டவட்டமானதும், நிச்சயமாகக காணப்படுவதும் ஆகும். அதனால் அவர்கள் இறந்த காலத்தை ''இது'' எனக் குறித்தனர். சேய்மையில் காணப்படும் எதிர்காலத்தை ''உது'' என்பதால் விளக்கினர். எல்லோரேகை ஆகிய நிகழ்காலதத 'அது' என்ற சேய்மைச் சுட்டுப் பெயரின் பொருளாக அமைத்துவிட்டனர். ''உ'' என்ற சுட்டெழுத்து தமிழ் மலையாள மொழிகளில் எதிர்கால 'உ', 'உம்' ஆகிய வடிவங்களில் காணப்படுகின்றது தெலுங்கில் ''சேயுதுனு'' (சேஸ்துனு) என்பதில் ''உது'' என்பதே காணப்படுகின்றது செய்கம, மாடுததேன முதலிய கன்னட வடிவங்களில் ''உ'' பலவேடத்தில் வெளிப்படுகின்றது. கெய்வேம் என்ற சாதாரணக் கன்னட வடிவமே ''கெய்யுவெம்'' என்பதினின்று சிதைந்தது என்று அமையலாம். ''செய்ய'' (=செய்+அ) என நான்கு மொழிகளிலும ஒருப்போலக் காணபபடும், நடுவினையெச்ச விகுதியாகிய 'அ' சேய்மைசுட்டுப்பெயராகும. நடுவினையெச்சத்திலிருந்து வினைமுற்று உண்டாவதில்லை என்றே இருகக்கட்டும். என்றாலும் பொருளில் யாதொரு பங்கும இல்லாதலால் அவ்வினையெச்ச வடிவத்தையே வினைமுற்றுக் பயன்படுத்தலாம் என்பது மட்டுமன்று, பெயராக்கிவிட்டு அதனோடு வேற்றுமையுருபுகளைச் சேர்க்கலாம் நடுவினையெச்சத்தின் இததகைய இலக்கண மாறுதல்களையெல்லாம் வினையெச்ச இயலில் விவரிப்போம்.

கால உருபுகளின் தோற்றம் மேற்காட்டப்பெற்ற முறையிலே இருக்கலாம் எனக் கொள்ளும்போது, தமிழிலும் பழைய கன்னடத்திலும் காணபபடும் வேறுபட்ட வடிவங்களுக்குச் சரியான தோற்ற விளககம் உண்டாகும். செந்தமிழிலுள்ள செய்து—செய்தும் எனவரும் எதிர்கால வடிவங்கள் செயுது—செய்தும் என்பவற்றில் உகரம் கெட்டு வந்தன என அமைதிப்படலாம். கன்னடத்தில் உள்ள ''கும்'' என்பது வேறுபட்டதன்று; சரியான பழைய வடிவத்தின் எச்சமிச்சம் என்பதே சுருக்கம்.

2. வினைச்சொற்பாகுபாட்டியல்

110. தாது அர்த்தம் குறிக்குன்ன
ப்ரகாரம் தான் ப்ரகாரமாம்.

பிரகாரம் என்றால் ''மட்டு'' என்பது பொருள். ஒரு அடிச்சொல் தனது பொருளை எந்த அளவில் வெளியிடுகின்றதோ அதுவே பிரகாரம். 'நீ இவிடெ வா', 'அவன் அங்ஙோட்டு போகட்டெ', 'எல்லா வரும் ஸத்யம் பறயணம்' என்ற சொற்களைக கேட்கும்போது, 'வருதல்', 'போதல்', 'பறயுதல்' ஆகிய வினைகளின் பொருளைத் தவிர முறையே ஆணை, வியங்கோள், கட்டளை என ஒவ்வொரு சிறப்புப் பொருளும தோன்றுகின்றது அதனால் ''வா'' என்ற வடிவம், 'வருதல்' என்ற வினையை ஆணைப்பொருள் கொடுக்கும் விதத்தில் குறிக்கின்றது. அதனைப் போன்றே ''போகட்டெ'' என்பது வியங்கோளைக் குறிக்கும் தரத்திலும், பறயணம் என்பது ஆணைப்பொருள் அளவிலும் அமைகின்றன. இதுவே வினை வடிவங்களில் பிரகாரம் என்ற நிலை.

111. நியோஜகம் நியோகத்தில்;
விதிமட்டில் விதாயகம்;
அனுஜ்ஞாரூபமாய் காட்டும்
அனுஜ்ஞாயாயகம் என்னது;
நிர்த்தேசகம் குறிக்குன்னு
தாத்வர்த்தம் பரிஹத்தமாய்.

ஏவுகின்ற நிலையில் வினையடிப் பொருளைக் குறிக்கும் முறை நியோஜகம விதி என்று கூறப்படும் கட்டளையின் தரத்தில் உள்ளது 'விதாயகம்'; அனுஜ்ஞ என கூறப்படும் உடன்படுதலின் தரத்தில் உள்ளது 'அனுஜ்ஞாயகம்'; இவ்வகைச் சிறப்பு விதி ஒன்றுமில்லாது அடிசசொற்பொருளைத் தனியே காட்டுவது 'நிர்த்தேசகம்'; இவ்வாறு பிரகாரம நான்கு வகைப்படும்.

இனி இப்பிரகாரங்களை ஆக்குதற்குள்ள வழிகள் கூறப்படுகின்றன :

112. அட்டே நியோஜகத்திங்கல்;
அணம் என்னு விதாயகே;
ஆம் அனுஜ்ஞாயகத்தின்னும்;
ப்ரத்யயம் பாவிரூபஜம்.

வியங்கோள் முறைககு 'அட்டே' என்பதும், கட்டளைககு 'அணம' என்பதும், உடன்படுதலுககு 'ஆம்' என்பதும் உருபுகள் ஆகும். இவ்வுருபுகள் மூன்றும் வேறு சில அடிசசொற்களின்

எதிர்கால வடிவச் சிதைவுகள் என்று அவற்றின் தோற்றம் குறித்துக் கூறப்பட்டிருக்கின்றது. அப்பகுதியைப் பின்னர் விளக்குவோம். நிர்த்தேசக முறைக்குத் தனிபபொருள் இல்லாததால், தனிவ்டிவமும் இல்லை. முன்கூறிய காலங்குறிக்கும் வடிவங்களே நிர்த்தேசிக முறையில் வரும். எ-டு:

நிர்த்தேசகம் : பாலன்மார் குளிகுன்னு; ராமன் ராவணனெக் கொனனு; கல்ககி அவதரிக்கும்.

வியங்கோள் : பற-பறயட்டெ; களி-களிக்கட்டெ; இளக-இளகட்டெ; வர்-வரட்டெ.

ஆணை : பற-பறயணம்; களி-களிகணம்; இளக-இளகணம்; வர்-வரணம்.

உடன்பாடு : பற-பறயாம்; களி-களிக்காம்; இளக்-இளகாம்; வர்-வராம்.

வியங்கோளில் மாத்திரம் இட-எண் வேறுபாடு அமைந்திருக கின்றது. ''அட்டே'' எனக் கூறபபட்ட உருபு படர்க்கை, தன்மை ஆகியவைகளுககு மாத்திரமே வரும்; அங்கு எண் வேறுபாடும் இல்லை. அவன் போகட்டெ, அவர் போகட்டெ, ஞான் போகட்டெ, ஞங்ஙள் போகட்டெ என வடிவம் ஒன்றே. முன்னிலையில் மாத்திரம் வேறொரு நிலை; அதாவது அடிச்சொல் வடிவமே ஒருமையாகும. பன்மைககு அடிச்சொல்லோடு அல்லது எதிர்கால வடிவத்தோடு 'இன்' என்ற உருபைச் சேர்க்கவேண்டும். இப்பொருள் நூற்பாவில் சுருக்கிக் கூறப்படுகின்றது.

113. *நியோஜக ப்ரகாரத்தில்*
தாது தான் மத்யமைகமாம்;
இன் ப்ரத்யயம் பஹுத்வத்தில்;
பாவி சேர்ந்நிட்டுமாமிது.

எ-டு:

அவன், அவள், அவா, ஞான், ஞங்ஙள் — போக்-போகட்டெ; கேள்-கேள்ககட்டெ

நீ— போக-போ

நிங்ஙள்— போக்-போகின், போகுவின், போவின்.
கேள்-கேள்ககின், கேள்பபின், கேள்க்குவின்.

எதிர்காலத் தொடர்புடைய ''க்கு'' என்பதற்குப்பதில் ''ப்பு'' வரும் எனக் கூறியுள்ளதையும் நோக்குக. அடிச்சொல் வடிவமே முன்னிலை

யொருமை எனக் கூறியதில், அடிச்சொல் உருத திருத்தியும் திரித்தா தும் வழங்கப்படும். கேள் என்பது தனி அடிச்சொல் வடிவம்; கேள்க்கு என்பது உருத்திருத்தம் செய்யப்பட்ட வடிவம்.

பிரகார உருவங்களெல்லாம் திராவிடச் சொல்லிலிருந்துண்டா னவை என்று கூறப்பட்டதன்றே. அது எவ்வாறு என்பதை ஆராய் வோம. பொருந்தல் என்ற பொருளுடைய ஒட்டுக என்ற அடிச்சொல் லின் சில எதிர்கால வடிவம் ஒட்டும் என்பது. போக, வர, இரிக்க, நில்க்க முதலியவை போன்று, அடிச்சொல்லோடு 'அ' என்ற வீகுதி யைச் சேர்த்தால் நடுவினையெச்ச வடிவமுண்டாகும். அதனை வினைச் சொல் போன்றும் பெயர்ச்சொல் போன்றும் வழங்கலாம். பெயராகும் போது 'போதல்' என்ற செயலே அதன் பொருள். இதனையெல்லாம் வினையெச்ச இயலில் விளகுவோம். ஒரு அடிச்சொல்லோடு மற்றொரு அடிச்சொல்லைச் சேர்த்துத் தொகைபோன்று பயன்படுத்துவது வழகக மென்று நிகழ்காலத் தோற்ற ஆய்வில் கூறப்பட்டிருக்கிறது. அவ் வாறு அடிச்சொறகளைத் தொகையாகசி சேர்க்கும்போது முதல் அடிச் சொல்லிற்கு துணைவினைவழக்கு என்றும் இரண்டாவதற்குத் ''தொடர் வழககு'' என்றும் பெயர்கள் உள்ளன. எந்த அடிச்சொல்லில் நடுவினையெச்சத்தோடும், ''ஒட்டும'' என்ற எதிர்காலவடிவத்தை இணைத்து வழங்கினுல், நியோஜக முறை உண்டாகும். செய்ய + ஒட்டும் = (அகரம்கெட) செய்யொட்டும. இவ்வடிவம் நாடோடித் தமிழில் பெரிதும் உண்டு. மலையாளத்தில் இவ்வடிவத்தில் 'ஏ' என்ற இடைச்சொல்லும் சேர்ந்து, முதலில் ''செய்யொட்டுமே'' என்றும், பின்னர் முறையே சிதைந்து 'செய்யட்டெ' என ஆயிற்று. 'ஒட்டுக' என்பதன் ஒகரம் அகரம் ஆகியது மயக்கத்தாலாகியிருக்கலாம். ''ட்டுமே'' என்பது ''ட்டே'' என ('ட்டெ' என்றும்) ஆகியது சிதைவா லாகும்.

விதாயகத்தில் ''வேணும்'' என்ற சில எதிர்காலச் சொல் இணைத்து வழங்கப்படும். வேண்டுன்னு, வேண்டி, வேண்டும் என்று டகரம் சேர்ந்தே 'வேண்டுதல்' என்ற அடிச்சொல்லின் வடிவங்கள் அமையும். அவற்றுள் 'வேண்டும்' என்ற சில எதிர்காலச் சொல்லின் டகரம் நீககி, 'வேணும்' என்றும், பின்னர் உகரத்தை அகரமாக்கி 'வேணம்' எனவும், அதன்பின் முதல் வகரத்தைக் கெடச்செய்து 'ஏணம்' என்றும், பின்னர் குறுக்கி 'எணம்' எனவும் அமைத்ததின் பின் எகரத்தை மயக்கதால் அகரமாக்கி முடித்ததே ''அணம்'' என்னும் விதாயக உருபு. நியோஜகத்தில் கூறியதைப் போன்று ''அ'' என்ற நடுவினையெச்ச விகுதியே இதிலும் துணைவினைச் சொல் வடிவம். விதாயகத்தின் தோற்றம் இவ்வாறு என்பதற்குப்

புலவர்களின், 'செய்யேணம்', 'செய்யவேண்டும்' என்ற பழைய வடிவங்களை வழங்குவதும் தமிழில் ''செய்யவேண்டும்''[1] என்ற மூலபூத மாகிய வடிவமே பயன்படுத்தி வருவதும் சான்றுகள், வேண்டுதல்= அவசியப்படுதல்; செய்யணம்=செய்தல் தேவை என்பது பொருட் பொருததம்.

அனுஜ்ஞாயகத்தில் இதனைப் போன்று ஆகுக என்ற அடிச் சொல்லின் சில எதிர்காலம் இணைவழக்குச் சொல்லாய் முடிந்தது. 'ஆகும்' (கு கெட்டு) ஆம் என்றுயிற்று. செய்யாம=செய்ய ஆம்= செய்ய ஆகும்=செய்தல் சம்மதிக்கபபட்டிருகிறது என்பது பொருள். தமிழில நடுவினையெசகதிலிருந்தல்லாது போகலாம், வரலாம எனவும் மற்றும் தொழிற் பெயரோடு சேர்ந்து வழங்கலே பெரிதும் வழக்கம் என்று மட்டும் வேறுபாடு உளது.

இவ்வாறு நியோஜகம, விதாயகம், அனுஜ்ஞாயகம் என்று மூன்று பிரகாரங்கள் கூறப்பட்டவற்றுள் நியோஜகத்தில் இட எண் வேறுபாடு உளது என்று கூறப்பட்டதன்றே. வேறும் இதற்குத் தனித்தன்மைகள் உள.

114. பிரிச்சிட்டும் ப்ரயோகிக்காம்
வித்யனுஜ்ஞார்த்தகங்ஙளெ.

விதாயகானுஜ்ஞாயகங்களில் இணைத்து வழங்கும் அடிச் சொல்லை தனிவினை வழக்கு அடிச்சொலலினின்று வேறுபடுத்துத் தனியாகவும் வழங்கலாம. நியோஜகததில் அவ்வாறு வழங்கல் வழக்க மன்று. போகவேணம, போக ஆம என வழங்கலாம். போக ஒட்டும் என வழங்கல் கூடாது. நியோஜகம போன்று ஏனைய இரண்டு பிரகா ரங்களும் வீறுக மொழியில் வேரூன்றவில்லை. பகுதியோடு சேரும்போது மாத்திரம் பொருள் உள்ளதும், வேறுபிரித்தால தனகெனப் பொரு ளில்லாததும ஆகிய எழுததுக்கள் உருபு என கூறப்படுகின்றன. இபபோது நாம் உருபாகக் காணும் பல இடைச சொற்களும பண்டைக காலத்தில் சுதந்திர வடிவங்களாக அமைந்திருக்கவேண்டும். காலப் போக்கில் தேய்ந்து தனிநிலை வழக்கு இல்லாததாகி அவை உருபுநிலை யில் வந்து பரிணமித்துளளன. இவற்றுள் விதாயகனுஜ்ஞாயகங்கள் செய்யவேணம், செய்ய ஆம என சில சமயங்களில் சுதந்திரமாக நிற்க வும், சில சமயங்களில் செய்யணம், செயயாம என உருபிறுதிகளாகிய ஒற்றை வடிவமாக நடகவும செய்கின்றன இனி ஒரு காலத்தில் பிரிந்த வழக்கு இலலாதாகி, இவைகளும வியங்கோள் போன்று

1 'வேண்டும' எனபதை நச்சினார்கினியர் வியங்கோள் எனக குறிப்பிடுவது இங்கு நினைத்தறகுரியது. *(தொல-சொல்-226)*

முதிர்ந்தும் நிலைபெற்ற உருபிறுதிகளாகவே முடியலாம். இன்னும் பிரிதது வழங்குதலைக் கவிஞர்களே செய்கின்றனர். இவ்வகை அவ்ய வத்தைகளை கருதியே, மலையாளம இபபோது ஒட்டுநிலை, பிரிநிலை ஆகியவற்றின் வாசற்படியில வளர்கிறது எனக கூறபபடுகிறது.

115. அனுப்ரயோக தாத்வர்த்தம்
வேர்திரிச்சு நிறுத்துகில்
நிகீர்ண்ண கர்த்ருகம் ரூபம்
வித்யனுஜ்ஞகள் ரண்டிலும்.

இனி இந்த ''ஆ'' என்பதன் தன்மை யாது எனச் சிந்திப்பதற் குள்ளது. இது ஒரு இணைவழகு அடிச்சொலலா, இடைநிலையா, உருபா? அடிச்சொலலெனில் 'இல்ல', 'அல்ல' என்ற வடிவம் எய்து வது பொருந்தாது; ஒரு உருபும இல்லாது இரண்டு அடிசசொற்கள் மாத்திரம ஒன்றுகச சேர்வது வழகமில்லையன்றே. ''இடைநிலை'' என்பது அங்கத்திருத்தமாதலால் அது சுதந்திரமாக நிற்பது நியாய மன்று. உருபிறகும பகுதிகும் இடையில் நிறபதன்றே இடைநிலை. எனவே ''ஆ'' என்பது மூன்றுவது கூறப்பட்ட உருபு எனவே கொள்ளவேண்டும். ''இ'' எனற பிறவினை உருபு போன்று, ''ஆ'' என்ற எதிர்மறை உருபு அமைவதில் தடையிலலையன்றே. 'இல்லா', 'அலலா' ஆகியவை இரண்டும இணைவழகுகள் இவற்றைத்தவிர கூடா, வஹ்யா (வையா), ஒலலா, அருது என்ற சொற்களுக்கும் இணைவழகுகளின் நிலையே. இலலா, அல்லா ஆகிய இரண்டிலும் ''ஆ'' என்பது பகுதிபபொருள் விகுதி; ஏனைய மூன்றிலும எதிர்மறைப் பொருளைக குறிக்கினறது. கூடா = பொருந்துவதிலலை; வஹ்யா = இயலவில்லை; ஒல்லா (= வல்ல) = சரியன்று. ''செய்துகூடா'' என்பதில் 'கூடா' என்பதற்குத துணைசெய்யப்படும் வினை இறந்தகாலதைதக குறிததல் வழககம். இது ஒரு மரபுச் சொறறொடர் எனவே கூறுதற் குள்ளது. செய்யவய்யா, செய்யொல்லா (செய்யவல்லா), செய்ய + அருது = செய்யருது என்ற மூன்று சான்றுகளிலும் துணைசெய்யப்படும வினை கடுவினையெச்சமாக அமைவது நியாயமே. ''அருது'' என்பதில் எதிர்மறைப் பொருளில் ''ஆ'' என்பது சேரவில்லை. அபூர்வம், அசாத்தியம் என்ற பொருள்கொண்ட ''அரு'' என்ற பேதகப் பகுதி யிலிருந்துண்டாகிய அஃறிணை வடிவமே ''அருது'' என்பது. அத னால் அதற்கு வாக்கியப்பொருளாக எதிர்மறை இல்லை. சமஸ்கிருததி லுள்ள ''துஸ்ஸாதயம்'' முதலியவைகளில் 'துர்' என்ற உபசருகதி திற்கும் ஆங்கிலத்தில் hardly possible முதலியவற்றிலுள்ள hardly என்ற வினை அடைகும் அமைவதைப் போன்று வியங்கியப்பொரு ளாக எதிர்மறைப் பொருள் ''அருது'' என்பதற்கும் அமைகின்றது.

வரலாற்றுப்படி நோககும்போது ஏனைய திராவிடமொழிகளின் நிலையும் இதுவே. எல்லாத திராவிடமொழிகளும ஆதிகாலததில் ''ஆ'' என்ற உருபைச் சேர்த்து எதிர்மறைப்பகுதியை ஆகிகொண் டிருந்தன. இல். அல் ஆகியவற்றின் துணைவழகுப பின்னர் உண் டாகியதே. காலவேறுபாடு மலையாளததில் மட்டுமே தெளிவாயுள் ளது தமிழ், தெலுங்கு, கன்னடம மூன்றிலும் பெரும்பாலும் சில எதிர் கால எதிர்மறையே மூன்றுகாலத்திலும் வேறுபாடில்லாது பயன்படுக் தப்பட்டிருகின்றது. பால் எண் வேறுபாடும் சில எதிர்கால எதிர் மறையில் மாததிரமே காணப்படுகின்றது.

சீல எதிர்கால எதிர்மறை (எல்லாக் காலங்களையும் குறிப்பது)

	தமிழ்	மலையாளம்			தெலுங்கு	கனடம
		பணடைய-வடிவம்	இடைக்கால-வடிவம	தறகால-வடிவம்		
			ஒருமை			
படர்கை ஆண்	செய்யான்	செய்யான்	செய்யான்	செய்யில்ல	சேயண்டு	கெய்யம்
,, ப்பெண்	செய்யாள்	செய்யாள்	செய்யாள்	செய்யிலல	சேயது	கெய்யள்
,, அஃறிணை	செய்யாது / செய்யா	செய்யாது / செய்யா	செய்யாது / செயயா	செய்யாதது / செய்யா	சேயது	கெய்யது
முன்னிலை	செய்யாய்	—	—	செய்யா	சேயவு	கெய்யய்
தன்மை	செய்யேன்	செய்யேன்	செய்யா	செய்யில்ல	சேயனு	கெய்யம்
			பன்மை எண்			
படர்க்கை ஆண் ,, ப்பெண்	செய்யார்	செய்யார்	செய்யா	செய்யில்ல	சேயரு	கெய்யர்
,, அஃறிணை	செய்யாவன	செய்யா	,,	,,	சேயவு	கெய்யவு
முன்னிலை	செய்யீர்	செய்யா	,,	,,	சேயரு	கெய்யிர்
தன்மை	செய்யோம்	,,	,,	,,	சேயமு	கெயயவ
			இறந்தகால எதிர்மறை			
படர்கை ஆண்	செய்திலான்	செய்யாஞ்ஞான் / செய்யாஞ்ஞாள்	செய்யாஞ்ஞு	செய்யாஞ்ஞு செய்திலல	—	—
,, ப்பெண்	செய்திலாள்					
முன்னிலை	செய்திலாய்	செய்யாஞ்ஞாய	,,	,,	—	—
தன்மை	செய்திலேன், செய்தேனிலேன்	செய்யாஞ்ஞேன்	,,	,,	—	—
			நிகழ்கால எதிர்மறை			
படர்கை ஆண்	செய்கின்றிலான்	செய்யாயுன்ஞன் / செய்யாயுன்ஞள்	செய்யா-யுன்னு	செய்யுன்-னில்ல	—	—
,, ப்பெண்	செய்கின்றிலாள்					
முன்னிலை	செய்கின்றிலாய்	செய்யாயுன்ஞய்	,,	,,	—	—
தன்மை	செய்கின்றிலேன்	செய்யாயுன்னேன்	,,	,,	—	—

	தமிழ்	மலையாளம்			தெலுங்கு	கன்னடம்
		பண்டைக்-காலம்	இடைக-காலம்	தற்-காலம்		
அவதாரக எதிர்காலம்						
தன்மை	செய்ய-லேன்	செய்-யாயு	செய்-யாயு	—	—	—
ஏவல் முன்னிலைப் பன்மை						
முன்னிலை	செய்யா-ய்வின்	செய்யா-ய்வின்	செய்யா-ய்வின்	செய்யா-ய்வின்	சேய-குண்டு	—
வினையெச்சம்						
முன்வினை யெச்சம்	செய்யா செய்-யாமல்	செய்யா	செய்-யாது	செய்யா-தெ,செய்-யாஞ்ஞு	சே-யக	கெய்-யதே
பின்வினை யெச்சம	—	—	—	செய்யா-ய்வான்	—	—
நடுவினை யெச்சம்	செய்-யார்க	செய்யா-ழ்க	செய்-யாய்க	செய்-யாய்க	சேயக	—
பெயரெச்சம்						
இறந்த காலம்	செய்யா செய்யாத	செய்யா	செய்யா	செய்யா	—	—
எதிர்காலம்	—	செய்யா செய்யா	செய்யா-ஞ்ஞு, செய்யாத	செய்யர-ஞ்ஞா,செய்யாதத	சேயனி	கெய்-யத
நிகழ்காலம்	—	செய்யா	செய்-யாத	செய்-யாத்த	—	—

மேற்காட்டப்பட்ட பட்டியலில் முதலாவது நமது கவனததை இழுப்பன தமிழில் பால்வேறு பாடுள்ள சீல எதிர்கால வடிவங்களா கும. அவற்றுள் ஒன்றிலும் "ஆ" இடைநிலை காணப்படவில்லை, இடையில் ஒரு உருபையும் சேர்க்காது பால் விகுதிகள் நேரே அடிச் சொல்லோடு சேர்க்கபபட்டிருக்கின்றன. ஆகவே அவற்றில் எதிர் மறைப் பொருளைக் குறிகக சின்னம் ஒன்றும் இல்லையா? ஒரு சின்ன மும இல்லாதிருப்பதுதான் எதிர்மறையின் சின்னம் என்பது தமிழர் களது உத்தியாயிருகுமா? செய்தேன், செய்வேன், செய்கிறேன் என உடன்பாட்டு வடிவத்தில் ஒவ்வொரு காலத்தையும் குறிப்பதற்கு வெவ்வேறு உருபுகளுள்ள நிலையில் ஒரு உருபும் இல்லாதிருப்பின்

அது எதிர்மறையைக் காட்டும் வழியாகுமன்றே. முதல் வேற்றுமை, ஏவல் முன்னிலை, ஒருமை ஆகியவற்றிற்கு வாசகமாக உருவ விகாரம் ஒன்றும் வேண்டா என்ற அமைப்பு உள்ள திராவிட மொழிகளின் இலக்கண ரீதியை நோக்கும்போது இவ்விதம் நிகழ்வது பொருத்தமே. ஆனால் பால் வேறுபாடுகளைத் தவிர்க்குமபோது ''ஆ'' என்ற எதிர் மறையைச் சேர்ப்பது எதற்கு என்றொரு உததிக்குறை இங்கு வருகின் றது. அதனால் எண்விகுதி சேர்ந்த செய்யேன், செய்யாய் முதலியவை களிலும் ''ஆ'' என்பதன் இருகை அமைந்திருப்பதே நியாயம். அத னையே தவத்திரு. கால்டுவெல்லும் கருதுகிறார். ஏன், ஆய், ஆன் முத லிய விகுதிகளில் முதலுயிர்கள் உடன்பாட்டு வடிவங்களிலெல்லாம் நீளும், குறிலாகவும நிற்குமென்றமையவே, எதிர்மறை வடிவங்க ளில் முழுவதும நீண்ட உயிராக மாததிரம காணப்படுகினறது. அத னால எதிர்மறை உருபாகிய ''ஆ'' இநதப பாலவிகுதிகளில் முதலுயி ரோடு கலந்து அவற்றை நீட்டியிருகவேண்டும் என்ற கால்டுவெல் லின் உததி இதயம் கவர்வதாக அமைகின்றது.

பண்டைக்காலம், இடைகாலம், தற்காலம் என மலையாளத்தில் பிரித்துக்காட்டியதைப் போன்று, காலபபோகில் ஏற்பட்டுள்ள வேறுபாடுகள் ஏனைய திராவிடமொழிகளையும் பாதிததிருகின்றன. அவற்றை மலையாள இலகணததில விரிததுரைக்க வேண்டியது அவசியமில்லை என்று தவிரகபபடடுளளது. அம்மொழிகளிலும் மலை யாளத்திலுள்ளதைப் போன்று காலப்போகில் இணைவழகிற்கு முதன்மை வநது சேர்நதுளளது. அதனாலேயே எதிரமறையை இணை வழக்குகளில் பகுதியாகச சோக்கலாம எனச் சிலவிடங்களில் கூறப்பட் டது. பொருள் நிலையை நோக்குவதாயின் பகுதி என்ற உறுப்பில் எதிர்மறையை உட்படுத்தவேண்டும. ''இ'' என்ற உருபைச் சேர்ப் பின் பிறவினைப்பகுதி உணடாவதைப்போன்று ''ஆ'' என்ற உருபைச் சேர்த்தால் எதிர்மறைப்பகுதி அமையும. தன்வினைப்பகுதியோடு பொருள் வேறுபாடு குறிக்க எந்த எந்த உருபுகள சோகபபடுகின்ற னவோ அவையெல்லாம் பிறவினைப்பகுதியோடும், எதிர்மறைப் பகுதி யோடும் ஒன்றுபோலச சோகின்றன. பழைய நிலையை நோக்கும்போது பகுதி என்ற உறுப்பிலும், இப்போதுள்ள நிலையை நோககும்போது இணைவழகிலும எதிரமறையை அடககவேண்டி வந்ததால் இரண் டையும் தவிர்த்து ''மார்க்கபேதம்'' என்ற ஒரு புதிய உபாதியைக் கொள்ளவேண்டி வந்தது.

இனி எதிர்மறை மார்கத்தில் எய்தும் உருவங்களைத் தொகுத்து நூற்பாக்களாக அமைப்போம்:

135. ஆ நிஷேத ப்ரத்யயமாம்;
ஶீலபாவிக்கு அதே மதி;
வராம் பூதம் அதின் மீதே;
வர்த்தமானம் விலுப்தமாய்.

அடிச்சொல்லோடு ''ஆ'' என்ற உருபைச் சேர்த்தால் அது எதிர்மறைப் பொருள் குறிக்கும் உருபாய்விடும். பின்னர் இப்பகுதியோடு முறையே கால உருபுகளைச் சேர்க்கலாம். ஆனால் ''உம்'' என்ற வீகுதியில்லாதே சில எதிர்காலததை வழங்கலாம். ''செய்யாயும்'' என்பதற்குப்பதில் 'செய்யா' எனவே வடிவம் அமைத்தால் போதும். இறந்தகாலத்தில் ஆராஞ்ஞு என அகர இறுதி அடிச்சொல்லின் முறையில், செய்யாஞ்ஞு என்பது எதிர்மறை வடிவம். செய்யாயுன்னு என்ற நிகழ்கால எதிர்மறை தற்கால மலையாளத்தில் வழக்குக் குறைந்து போயிற்று. 'இன்னு' என்ற நிகழ்கால வடிவததை ''உன்னு'' என மாறுவதற்கு முன்பே, இவ்வழக்குக் குறைதல் நிகழ்ந்திருப்பதால் 'செய்யாயுன்னு' என தற்கால முறையிலமைந்த வடிவம் மிகவும் அபூர்வமாக மலையாள இலக்கியத்தில் காணப்படுகின்றது. இககாலததிலோ ''ஆ'' சேர்ந்த வடிவமே பேச்சு வழக்கில் அதிகம் வழங்கவில்லை. இணைவழக்கால் எதிர்மறை குறித்தல் வழககம்.

136. இல்ல அல்ல கள் சேர்ந்நிட்டும்
உண்டாம் கால நிஷேதனம்.

உடன்பாட்டு வடிவததோடு 'இல்ல' என்பதையோ 'அல்ல' என்பதையோ இணைத்து வழங்கினும் அது எதிர்மறை வடிவமாகும். காலங்களை எதிர்மறையாக்குதற்கு இந்த மரபே இப்போது வழக்கிலுள்ளது எ-டு:

செய்யுன்னு, செய்யுன்னில்ல; செய்து, செய்தில்ல; செய்யும், செய்யுவில்ல.

137. பாவியில் ப்ராக் ப்ரயோகத்தில்
எச்சமோ தாதுவோ வராம்.

இறந்தகாலத்திலும் நிகழ்காலத்திலும் உடன்பாட்டு வடிவமன்றே துணைசெய்யப்படும் வினை. அதனைப்போன்று எதிர்கால எதிர்மறையிலும் எதிர்கால உடன்பாட்டு வினையைப் பயன்படுத்துவதைததவிர, நடுவினையெசசததையோ தன்வினை அடிசசொல்லையோ பயன்படுதததினும் போதும். எ-டு:

செய்யுவில்ல, செய்கயில்ல, செய்யில்ல.

அல்ல, இல்ல ஆகியவைகளுக்குப் பொருள் ஒன்றேயெனினும் வழக்கு வேறுபாடு உளது. 'அல்ல' என்பது பெயரோடே சேரும். அது, ''ஆவதில்லை'' என்பதற்குச் சமம். வினையோடு சேராததால் அதற்குக் கால வேறுபாடு வருவதில்லை. 'இல்ல' என்பது வினையோடே சேரும. அது ''உண்டாவதில்லை'' என்பதற்குச் சமம். வினையோடு சேர்வதால் அதற்குக காலவேறுபாடு காணப்படுகின்றது. தர்க்கவாதிகளின் சங்கேத மொழியில், 'அல்ல' என்பது ஒன்று பிறிது அல்லாமையையும், 'இல்ல' என்பது முழு இலலாமையையும் குறிக்கின்றன எனக கூறலாம். எ-டு:

> ஆனய்ககு கொம்புண்டு', குதிரய்க்கு கொம்பில்ல, முல்ல ஒரு வள்ளியாணு', வ்ருக்ஷமல்ல, செய்யுன்னிலல, செய்தில்ல, செய்யுவில்ல, செய்யுன்னதல்ல, செயததல்ல, செய்வதல்ல.

இல்ல என்பதைக கவிஞர்கள் 'ஈல' என ஆகுவதுண்டு. எ-டு:

> திரியுன்னீல ததஸ்து மானஸமேமே— (சாகுந்தளம்)

இல்ல-அல்ல ஆகியவை எதிர்மறை அடிச்சொற்களாதலால் அவற்றையே 'உண்டாகுன்னில்ல', 'ஆகுன்னில்ல' என்பவற்றிற்குப் பதில் சுதந்திரமாகவும வழங்கலாம்

பிரகாரங்கள் இணைவழகுகளால் ஏற்படுவன ஆதலால் இணை வழகுகடிச் சொற்களின் எதிர்மறை வடிவதைதப் பயன்படுத்தலே நியாயம். விதாயகத்தில அதன் பிரகாரமே வழங்கப்படுகின்றது. ஏவல், அனுஜ்ஞாயகத்தில் இணைவழகுகளாகூட மாற்றுவதுண்டு. அனுஜ்ஞாயகதத்தில் ''ஆவுக'' என்ற அடிச்சொல்லின் எதிர்மறை இணை வழகு வடிவமாகிய ''ஆகா'' என்பது ஒருவாறு பொருந்தாமலில்லை. ஏவலின் இணைவழகு மிகவும செயற்கையாய்ப் போவதால் சிறிதும் பொருந்துவதில்லை.

138. *விதாயகத்தில் வேணின்றெ*
ஶிலபாவி ஶரிப்பெடுப்;
நீயோகானுஜ்ஞகள்க்கில்ல
ஶரியாய நிஷேதகம்.
வய்யா கூடா அருது ஒலா
இதிலொன்னு யதோசிதம்.

வியங்கோள், அனுஜ்ஞாயகம (கட்டளை) ஆகியவற்றில் சொந்த இணைவழகு எதிரமறைக்குப் பொருந்தாததால், வய்யா, கூடா, அருது, ஒலா ஆகிய நான்கு எதிர்மறை வடிவங்களில் ஒன்று பொருந்தும் இடத்துப் பயன்பட்டு வருகின்றது.

(வய்யா = வஹியா = சரியன்று. அருது = சிரமமான து = செய்யக் கூடாதது. கூடா = கூடுக, (சாத்தியப்படுவது) இல்லை. ஒலா = வல்லா = முடியாதது, உசிதமற்றது.) எ-டு:

வியங்கோள்: செய்யட்டெ = செய்துகூடா, செய்யியாலா, செய்யாதிரிக்கட்டெ.

அனுஜ்ஞாயகம்: செய்யாம் = செய்யவய்யா, செய்யருது.

செய்யாதிரிகடட்டெ என்ற வாக்கியத்துக் கட்டிய வடிவே வியங்கோளில் பெரிதும் வழங்கப்படுவது. செய்யேண்ட என விதாயக எதிர்மறையையும் சில சமயம் பயன்படுத்துவதுண்டு.

139. ஸிலார்த்த க்ரீப ரூபத்தால்
பேரெச்சம் வினயெச்சவும்.

'செய்யா' என்ற சீல எதிர்காலத்தோடு[1] ''து'' என்ற அஃறிணை விகுதியைச சேர்த்த வடிவதில் முறையே அகரத்தைச் சேர்ததால் எதிர்மறைப் பெயரெச்சமாகும ''ஏ'' என்ற இடைச்சொல்லைச் சேர்ப்பின் எதிர்மறை வினையெச்சமாகும். செய்யாது–செய்யாத என்பது பெயரெசசம், செய்யாதெ என்பது வினையெசசம் கூலீப வடிவத்திலிருந்து தோன்றுகின்றன என்பதே இங்குள்ள வேறுபாடு சீல எதிர்காலமே[2] பெயரெச்சதில் நிகழ்காலம குறிக்கப் பயன்படுத்தப்படுகின்றது. முறையே வரவேண்டிய செய்யாயுன்னு என்ற வடிவத்தை வழங்குவதில்லை. தகரம் இரட்டி, ஆத என்பது ஆத்த என வருவது மாத்திரம் தனிச் சிறபபு. வினையெசச எதிர்மறையில் இறநதகாலத்திற்கு செய்யாஞ்ஞு என்று முறையே உள்ள வடிவம் உளதெனினும் ''ஆதெ'' என்ற சீல எதிர்காலமே இறநதகாலதத்திற்கும் உதவும். 'அறிஞ்ஞும் அறியாதெயும்' முதலிய சான்றுகளை நோகதக.

140. ஸேஷம் ஆகாராந்தமாய
தாதுவில் ரூபமாலதான்.

வேறுபாடுகள் எடுத்துக கூறப்பட்டனவன்றே. ஏனையவெல்லாம் எதிர்மறைப் பகுதியில் ''ஆ'' என்பது சேர்ந்து, பகுதி ஆகார இறுதி ஆவதால், தன்வினைப்பகுதியில் ஆகார இறுதியுடைய உருவங்களே. அதனால் பின்வினையெச்சம் செய்யாய்வான் என்பது நடுவினையெச்சம் 'செய்யாய்க' என்பது. ஏவற்பன்மை 'செய்யாய்வின்' என்பது. இறந்தகால எதிர்மறைப் பெயரெச்சம் 'செய்யாதத' என்பது.

இங்கு விரிதது ரைதத முறையில் மலையாளத்தில் எதிர்மறை வாக்கியம அமைப்பதற்கு இரு வழிகள் உள்ளன. நிர்தேசகங்களோடு 'அல்ல–இல்ல' ஆகியவற்றையும, ஏவல், விதாயகம் ஆகியவற்றோடு

1 எதிர்மறை மும்மையும் ஏறகும் நன–145

2 நிகழ்காலத்துப் .. பொதுசசொல் தொல், சொல்–240:

'ஒலா-அரு' ஆகியவற்றையும், அனுஜ்ஞாயகத்தோடு 'வஹியா' என்பதையும் இணைத்து வழங்குவது ஒன்று. ''ஆ'' என்ற உருபைச் சோதது அமைப்பது இரண்டாவது. இவற்றிடையே பொருள்வேறுபாடு சில இடங்களில் தோன்றுவதுண்டு. எவ்வாறெனில்,

ராமன் வந்து —வந்நில்ல, வராஞ்ஞு.
ராமன் வந்நிருந்து—வந்நிருந்நில்ல, வராதெயிருந்து.

இவற்றுள் வராஞ்ஞு என்பதும் வராதேயிருந்து என்பதும் நுண்மையாகப் பார்க்கும்போது பரியாயங்கள் ஆகும்.

பல அடிச்சொற்களாகிய வினைமுற்றுகளை எதிர்மறையாக்கும் போது துணைசெயயப்படும அடிசசொல் வழககிற்கோ, இணைவழக்கிற்கோ விருபபமபோல எதிரமறை சேர்பபதனாலும், எதிர்மறைகளே இருவழிகள் உளவாதலாலும் அவ்வகை இடங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட எதிர்மறை வடிவங்கள தோன்ற இடமுணடு. இதுதகைய ஒரு இடம் நேரும்போது துணைசெய்யப்படும் வினையோடு ''ஆ'' என்பதையே சோககவேண்டும. இணைவழககில் 'இல்ல' முதலிய இணைவழக்குகளை சேரககவேணடும் என்பது பண்டைய முறைப்படி ஏற்பட்ட வழக்கம. எதிரமறை சேர்வதறகுத தககமுறையில் பொருளும் சிறிது வேறுபடும் எ-டு:

உடன்பாடு	எதிர்மறை
காரியம் நடந்துபோயி	காரியம் நடகாதெபோயி. காரியம் நடநநுபோயில்ல.

9. சமுச்சயம்

''சமுச்சயம்'' என்றால் ஒரே இனத்தைச் சார்ந்தவைகள் (ஒரே இடத்துக் கூடும் கூடல்) ஆகும் சமஸ்கிருதம முதலிய ஆரியமொழிகளில இலக்கண ஆசிரியனுக்குச் சமுசசயதைப்பற்றி ஒரு தனிச் சிறப்பும் சுட்டிககாட்ட வேண்டுவதில்லை. மலையாளதில வினைச் சமுச்சயத்தில மாத்திரம் வேறுபாடு உளது.

சம்ஸ்கிருதம்—ராமோ தண்டகாயாமுவாஸா, ஸமுதரே ஸேதும் பபந்த ராவணுதீன் ஜகான ச

மலையாளம் —ராமன் தண்டகயில் வஸிகுகுயும், ஸமுதரத்தில் ஸேது கெட்டுகயும் ராவணுதிகளை கொல்லுகயும் செய்து.

இவற்றுள் சமஸ்கிருதம், காலம் முதலிய சிறப்புகொண்ட வினைமுற்றுகளையே தொகுதிப்படுத்துகின்றது மலையாளமோ அடிச்-

சொற்களுக்கு நடுவினையெச்சம் தந்து, காலம் முதலிய விசேடணங்களில் நின்றும வேறுபடுத்தி, எண்ணுப்பொருளுள்ள ''உம்'' என்ற இடைச்சொல்லைத் தனித்தனி ஒவ்வொன்றோடும் சேர்த்து, இறுதியில் 'செய்யுக' என்ற பொதுவினையோடு இணைத்தால் காலம் முதலிய விசேடணங்களெல்லாவற்றையும் அது குறிக்கின்றது. அதனால் மலையாளத்தில் சமுச்சயத்திற்கும் இணைவழக்குத் தேவைப்பட்டிருக்கிறது. தொகுதிப்படுத்தும்போது சமுச்சய வினைகளை நடுவினையெச்சத்திலுள்ள துணைசெய்யப்படும் வழக்கு அடிச்சொல்லாக்கிச் 'செய்யுக' என்பதை இணைத்து வழங்கவேண்டும் இச்செய்தியைக் கூர்மையாய்ச் சிந்தித்தால், மலையாள முறையே எளிதானதும பொருத்தமுள்ளதும ஆகும். துணைவழக்குகள் இயல்பிலேயே உள்ளவிடத்தில் இம்முயற்சி தேவைப்படுவதில்லை. எ-டு:

கண்டிட்டும் கேட்டிட்டுமில்ல, ஸ்புடீகரிச்சுமில்லிங்ங மறச்சு மிலலவள்—(சாகுந்தளம்)

அனுஜ்ஞாயக விதாயகங்களில் ஆவுக-வேண் ஆகியவை இணைவழக்குகளாதலால் அந்தப் பிரகாரங்களில் தொகுதிபபடுதது தற்கு வசதியுளளது.

களிக்கயும் உண்ணுகயும் வேணம்; களிககயும் உண்ணுகயும் ஆம.

10. அங்கக்கிரியை

'குதிர ஓடி' என்று கூறுமிடத்து 'ஓடி' என்ற வினை கழிந்ததெனினும் அது நிகழ்கின்ற நிலையிலேயே நமது அறிவில் படுகின்றது. ''ஓடி'' என்பதைக் கேட்கும்போது, குதிரை வேகமாகக கால்களை நீட்டி வைததும், முறையே இடம நீங்கி நீங்கி முன்பு நின்ற இடத்திலிருந்து தூரததே சென்று சேர்ந்ததும் எல்லாம முடிந்த நிலையிலே நாம் உணர்கிறோம். இறந்தகால உருபின் செய்கை நாம் சொல்லும் கருத்து முன்பொருக்கால் நிகழ்ந்தது என நினைவுறுததல் மாத்திரமே. இவ்வாறுள்ள வினைகளுககு ஸாத்தியக்கிரியை என்பது பெயர். இனி ''ஞான் குதிரயுடெ ஓடடம கண்டு'' எனக கூறுவதெனில் 'ஓடுக' என்ற அடிசசொல்லின் வடிவத்திலிருநதெழும் அறிவில் மிகவும் வேறுபாடு உளது. இங்கு 'ஓடுதல்' ஒரு நிகழ்ந்த செய்தியாகும. நாம் அதனை ஸித்தவல்கரித்துககொண்டு (நடந்தது என ஒப்புக்கொண்டு) அதனைப்பறறி மேல் விசாரணை செய்யத் தொடங்குகின்றோம். ஏவம்ச, இத, 'கண்டு' என வேறொரு வினையின் செயப்படுபொருளாகிவிடுகின்றது. இவ்வாறுள்ள வினை சித்தக்கிரியையாகும். ஒரு செயல் கொள்சையாய்விட்டால், பின் அதனை வினையென்று அழைத்தலே

சரியன்று என நிறுவப்பட்டதை நோகக்க. அதனால் சிதத்தக்கிரியை என்றல் தொழிலிலிருந்து பிறந்த பெயர் என்பது வந்தெய்துகின்றது. சித்தக்கிரியைகளைக் குறிக்கும் வடிவங்களுக்கு 'க்ருத்துக்கள்' என்பது பெயர்.

சாத்தியக்கிரியை 'அங்கி' எனவும் 'அங்கம்' எனவும் இரு வகைப்படும். விசேடியமாகவும் முதன்மையாகவும் நிற்பது அங்கி. விசேடணமாகவும் முதன்மையின்றியும் நிற்பது அங்கம். ''ப்ரஹ்மாவு கும்பகர்ண்ணனு வரம கொடுத்து: அது உறகக்கவும் ஆயிருந்து'' என்ற வாக்கியத்தில் கொடுத்தது என்ற வினை வேறொன்றிற்கும் விசேடணமாகாதுதானே முதன்மையாக நிற்பதனால் இச்சாத்தியக்கிரியை அங்கியே. இனி 'ப்ரஹ்மாவு கும்பகர்ண்ணனு கொடுத்த வரம் உறகக்கமாயிருந்து' என்பது வாக்கியமெனில், இங்கு 'கொடுத்த' என்பது வரத்திற்கு விசேடணமாகி முதன்மை குன்றி நிற்கின்றது. 'ப்ரஹ்மாவு கொடுத்த வரம்' என்பது உண்மையில் பிரம்மா எதனைக் கொடுத்தாரோ அந்த வரம என்பதற்குச் சமம் ஆதலால் 'கொடுத்தல்' இங்கு சாத்தியக்கிரியையே. ஆனால் அது வரம் என்ற பெயரின் கீழ் அடங்கி விட்டது. வினைக்கு முழுமை வருவது அங்கி சாத்தியக்கிரியையில் ஆவதால் அதனைக் குறிக்கின்ற அடிச்சொல வடிவத்திற்குக் 'கரோதி' எனப் பெயரிடப்படுகிறது. அங்க சாத்தியக்கிரியையைக் குறிப்பவை 'கர்வத்துக்கள்' என அழைக்கப்படுகின்றன. வினையின் வகைகளும், அவற்றை அனுசரித்து ஒரு வினையைக் குறிக்கும் அடிச்சொல் வடிவங்கள் அமையும் வகைகளும் கீழ்வரும் பட்டிகையில் விரித்துரைக்கப் படுகின்றன.

வினை

1. சாத்தியம் { 1. அங்கி, 2 அங்கம் } 2. ஸித்தம

அடிச்சொல் வடிவம்

1. வினைச்சொல்
- 1. வினைமுற்று அல்லது கரோதி
  - 1. நிகழ்காலம் (நடுவினைமுற்று)
  - 2 இறந்தகாலம் (முன்வினை ,,)
  - 3. எதிர்காலம் (பின்வினை ,,)
- 2. எச்சவினை அல்லது கர்வத்து
  - 1. பெயரெச்சம் அல்லது நாமங்கள்
    - நிகழ்காலம்
    - இறந்தகாலம்
    - எதிர்காலம்
  - 2. வினையெச்சம்
    - 1. முன்வினையெச்சம்
    - 2. நடுவினையெச்சம்
    - 3. பின்வினையெச்சம்

2. ஸித்தபரம் = பெயர்
- 1. காரகப்பெயர்
- 2. தொழிற்பெயர்

மேற்காட்டியவற்றுள் ஸாத்தியககிரியையின் அங்கிப்பகுதி யைக் குறிககும் வினைச்சொற்கள் பற்றி இதுவரை விளக்கப்பட்டது. இனி அதன் அங்கப்பகுதியைக் குறிக்கும் கர்வத்துகளை விளக்க எடுத் துக்கொள்ளப்படுகின்றது. பெயருகளோ வேறெருரு வினைகளோ ஒரு வினை அங்கமாகி அமையும. பெயரின் அங்கமாவது நாமாங்கம் அல்லது பெயரெச்சம். வினையின் அங்கமாவது கிரியாங்கம் அல்லது வினையெச்சம்.

141. *பேரின்னு கீழடங்குன்ன*
வின பேரெச்சமாயது;
வினய்க்கு கீழடங்குன்ன
வினதான் வினயெச்சம்.

நாம் இங்கு 'நாமாங்கம்' எனப் பெயரிட்டதைப் பேரெச்சம் என வும், கிரியாங்கம எனப் பெயரிட்டதை வினையெச்சமென்றும் அகதிய முனிவர் அழைககிறார். பாணினி மாமுனிவர் படைதத்துள்ள பெயர்க ளில்—''நிஷ்டா, ஸத், கவஸ்'' ஆகியவைகளும 'க்த்வால்யப்து முன்னு' ஆகியவை இவைககு எதிராக வரும். கார்தவெற்று துரை நாமாங்கத் திற்கு 'ஸப்த ம்யூனம' எனவும் கிரியாங்கத்திற்கு 'கரியா ம்யூனம்' எனவும் ெ யர் அமைதிருககின்ரர். நன்னூல் வழங்கும் பெயர்களின் ஒருவகை மொழிபெயர்ப்பு எனினும், துரையவர்களின் பெயர்கள் அவ் வளவு பொருததமுள்ளனவல்ல எனத் தோன்றுதலால் அவற்றிற்குப் புதிய பெயர்கள் படைககவேண்டி வந்தது. திராவிடமொழிகளில் பிறந்திருககும மலியாளத்தின் இலக்கணதில் நன்னூல் வழியுள்ள பெயர்களையும் மொழிபெயர்ப்புகளையும் முடிந்த அளவிற்குப் பயன் படுத்தவேண்டும என்பது விவாதத்திறகிடமில்லாதது. ஆனால் மணிப்பிரவாளக் கவிதை வழககில வந்த நாள் முதல் மலியாளிகளுக் குத தமிழோடு ஒரு கடினமான வெறுப்பும் சமஸ்கிருதததோடு காரண மற்ற ஒரு தலைச்சாய்வும் நாளுக்குநாள் வளர்ந்து வருதிருப்பதால் தமிழ்ச் சொறகளைத் தாராளமாக உபயோகிக்கத தொடங்கினால், பெரும்பான்மையோர்கும சுவையின்மைக்கு இடமளிககும். ''அடிக் கின்ற போககில் போகவிலலையெனில் போகின்ற வழியில் அடிதது க் கொள்ளுதல்'' என்ற அமைதியின் பெயரால் இலக்கணத்திற்குத் தேவைப்பட்ட சாஸ்த்ரீயச் சொற்களைப் படைப்பதில் இதுவரை சமஸ் கிருதமே ஒரே அபயமாக வைததுக்கொண்டு வரப்பட்டது எனினும் வினையெச்சங்களும பெயரெசசங்களும் திராவிடமொழிகளில் விலட்சண வடிவங்களாதலால் அவ்வுண்மையை நினைவுபடுத்துகற்கு இந்தத் தமிழப் பெயர்களே அதிகமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. அது மட்டுமன்று; நடுவினையெசசம், முன்வினையெச்சம், பின்வினையெச்சம்

என வினையெச்சங்களின் இதயம் கவரும் வேறுபாடுகளை நீக்கிவிட்டு, அனவச்சேதகம், பௌர்வகாலிகம், தாதர்த்திகம் என (முறையே) புதிய பெயர்களைப் படைப்பது வெறும் பண்டித க்கர்வ விளையாட்டே என்று பெரியோர்களுக்குத் தோன்றும்.

கர்வத்துகளின் லவலட்ண்யமோ, "அது" என்ற சுட்டுப்பெயரை உருபைப்போன்று சேர்த்தால் எல்லா வினைச்சொற்களும் பெயரெச்சங்களாகி பெயர்களை விசேடிப்பிக்கின்றன என்பது. எவ்வாறெனில்,

வினைச்சொல்—	பெயரெச்சம—	வகைவேறுபாடுகள்—	
காணுன்னு	காணுன்ன	நிகழ்காலம்	நிர்தேஸகம்
கண்டு	கண்ட	இறந்தகாலம	
காணும்	காணும, காணும்	நிகழ்காலம	
காணும்	காணும	எதிர்காலம்	அனுஜ்ஞாயகம்
காணுவுன்னு	காணும	நிகழகாலம்	
காணுயி	காணுய	இறந்தகாலம்	
காணணம்	காணேண்டும்	எதிர்காலம்	விதாயகம்
காணேண்டுன்னு	காணேணடுன்ன	நிகழகாலம்	
(காணேணடி)	காணேணடிய	இறந்தகாலம்	

இவற்றை ஒத்த வடமொழிச்சொற்கள்

ஈக்ஷிதே	ஈக்ஷமாண	நிகழகாலம்	நிர்தேசம்
ஐக்ஷிஷ்ட	ஈக்ஷிதவத	இறந்தகாலம்	
ஈக்ஷிஷ்யதே	ஈக்ஷிஷ்யமாண	எதிர்காலம்	
ஈக்ஷித	ஈக்ஷிதவ்ய	முககாலமும்	விதாயகம்.

1. சமஸகிருதத்தில பெயரெச்சங்களை வேற்றுமை சேர்த்துப் பயன்படுத்தக்கூடாது. மலையாளத்தில் பெயர்த்தன்மை குறிக்கும் போதே இவற்றில் பால்விகுதியும் வேற்றுமையும் சேர்க்கப்படும்.

2. சமஸ்கிருதத்தில் இவை கருத்தாவிலோ, செயப்படுபொருளிலோ மாத்திரம வழங்கப்படும். மலையாளத்தில் இவற்றை எல்லாக காரகங்களிலும் இதனைப்போன்று வழங்கலாம். சமஸ்கிருதத்திலுள்ளதைப்போன்று வழககு வேறுபாட்டை அனுசரித்து உருவவேறுபாடில்லை. எவ்வாறெனில்,

சம்ஸ்கிருதம	மலையாளம்
ஈக்ஷமாண:—செய்வினை வழக்கு	கடிகுன்ன பட்டி —கருத்தா
ஈக்ஷ்யமாண:—செயப்பாட்டு வினை வழககு	உண்ணுன்ன சோறு —செயப்படு பொருள்
	ஞான் எழுதுன்ன பேனு —கருவி
	ஞான் வழிசோதிச்சபையன்—சாட்சி
	ஞான் கடம்கொடுத்தபுள்ளி —ஸ்வாமி
	நாம் இரிகுள்ள வீடு —இடம்
	நெய்யு எடுத்த தயிர் —நீக்கம்

3. மலையாளத்தில் பெயரெச்சம் ஒரு விசேடண வாககியதின் விஜேச்சொல்லேயாகும. சமஸ்கிருததில் ஒரு அடிக்சொல்லினின்று பிறந்த பெயர் விசேடணமேயாகும். எவ்வாறெனில்,

மலையாளம்—வைசம்பாயனன் ஜனமேஜயனோடு பறஞ்ஞ கத.
சமஸ்கிருதம—வைசம்பாயனேன ஜயமேஜனய ப்ரோகதா கதா.

மலையாளம்—நின்னெ { காணுன்னது / கண்டது / காணுவது } கொண்டு ஞான் ஸந்தோஷிகுன்னு

சமஸ்கிருதம—தவ தர்சநாத ஸந்துஷ்யாமி.

4. மலையாளத்தில் நடுவிஜையெச்சம் விஜேச்சொல், பெயர், கிரியாங்கம் முதலியவைபோன்றும நிற்கலாம். சமஸ்கிருதத்தில் ல்யூட் இறுதி எதிர்காலத் தொழிற்பெயராகிய ஒரு பெயரே. எவ்வாறெனில்,

மலையாளம்	சமஸ்கிருதம்
ஆர்யே! வேஷம் தரிசசுகழிஞ்ஞால் இங்ஙோட்டு வரிகதன்னெ -பா.சா. (விஜேச்சொல்)	ஆர்யே! யதினேபத்யவிதான-மவஸிதம் தர்ஹீதஸ்தாவதாகம்யதாம்.
கள்ளம் பறக ஞியல்ல — (பெயர்)	அஸத்யஸ்ய பாஷணம் ந யுகதம்.
கேள்க்கத்தக்க ஞங்கதி — (கிரியாங்கம் அல்லது விஜேயெச்சம்)	ஶ்ரோதுமர்ஹோ அர்த்த:

5. முன் விஜேயெச்சம் சமஸ்கிருதத்தில் சமானகர்த்ருகம் ஆயிருக்க வேண்டும. மலையாளத்தில் அங்நியமமில்லை. எவ்வாறெனில்,

மலையாளம்	சமஸ்கிருதம்
பாரதம் ஜனமேஜயன் சோதிச்சிட்டு	பாரதம ஜனமேஜயனே ப்ருஷ்டேன
வைசம்பாயனன் அருளிச்செய்த கதயாகுன்னு.	வைசம்பயேனேன ப்ரோக்தா கதர பவதி.

இவைபோன்றவற்றை இயல்பாக ஊகிகுக. இந்தக் கர்வத்துக்களிலிருந்து மலையாளத்திற்கு எய்திய பல வசதிகளை வேறொரிடத்தில் விரித்துரைப்போம்.

1. பெயரெச்சம்

142. அ என்னு முற்றுவிஜையில் சேர்த்தால் பேரெச்சமாமது.

பெயரெச்சம் ஆகுதற்கு விஜேமுற்றோடு "அ" என்ற உருபைச் சேர்க்க வேண்டும். அகரத்தைச் சேர்குகும்போது உன்னு, து ஆகிய

கால விகுதிகளின் இறுதி உகரம் கெடும். அவற்றிலுள்ள உகரம் தோன்றுமுறையில் குற்றுகரமாக இருக்கவேண்டுமென முன்னர்ச் செய்த ஊகதை இகுகேடு உறுதிபபடுத்துகின்றது. ''இ'' என்ற இறந்தகால விகுதி கெடுவதில்லை. அது புணர்ச்சி காரியமாகிய யகரமோ னகரமோ சேர்ந்து 'இய', 'இன' என்ற உருவத்தை அடைகின்றது. எ-டு:

செய்யுன்னு—செய்யுன்ன; செய்து—செய்த; நல்கி—நல்கிய; நல்கின.

143. குறிகூடாதெ தான் ஶில
பாவி பேரெச்சமாய் வரும்.

சில எதிர்காலத்திற்கு ''அ'' என்ற பெயரெசச விகுதி தேவையில்லை. இயல்பாக நிற்கும் உருவத்தையே பெயரெச்சமாகவும் பயன்படுத்தலாம எ-டு:

வினைமுற்று—கால்ம் வரும்; பெயரெசசம்—வரும் காலம்.

எதிர்காலப் பெயரெச்சம் பேச்சு மொழியில் அதிகம் வழங்குவதில்லை.

144. ஒரு என்னுள்ளதும் கொள்ளாம்
பேரெச்ச ப்ரத்யயத்தினு.

பெயரெச்ச விகுதியாகக கூறப்பட்டது ''அ'' என்பதன்றே. முக்கிய திராவிடமொழிகளில் எல்லாம் காணப்படுவது அதுதான். ஆனால் மலையாளத்தில் ஒரு என்பதும் பெயரெசச உருபின் இடத்தை வகிகின்றது. இது செய்யுளில் மாத்திரம ஏற்பட்டுள்ள ஒரு சிறப்பு நிலையும் ஆகும். பெயரெச்சத்தின் சின்னமாகிய ''அ'' என்பதன் தோற்றதை நோககும்போது ஆரும் வேற்றுமை என நிறுவுதற்குக கால்டுவெல் மிகவும் முயல்கிறார். இதற்காக அவர் சிதியன் மொழியின் கிளைகள் ஒவ்வொன்றிலும் உள்ள பெயரெச்ச வடிவ அமைப்பை விரிவாக ஆராய்கிறார். டாகடர் குண்டர்ட் இநத அகர உருபு சுட்டெழுத்தே என அழுத்தமாகக கருத்துக்கொண்டதையும் மறுததுவிட்டு இதனை ஆரும் வேற்றுமை உருபோடு இணைக்கவேணடுமெனக் கால்டுவெல் பிடிவாதம் பிடிபபதன் கருதது தெளிவாக உணர முடியவில்லை. ''ஆ'' என்ற எதிமறை உருபைககூட சுட்டெழுததில் நின்று வந்ததாக ஆகுதற்குச் சிரமிக்கும் கால்டுவெல்லிற்குப் பொருள் வடிவப் பொருத்தம் நோககும்போது, பெயரெச்சத்தில் மிகவும் தெளிவாய்க காணப்படும் சுட்டெழுத்தில் நின்று வரும் உற்பத்தியை மறுக்க வேண்டுமென்று தோன்றியது ஆச்சரியமே. பெயரெச்சத்தின் அகரம் சுட்டெழுத்தாகுமென ஒரு திராவிட இலக்கண ஆசிரியர் ஐயுறுவார்

என்று இந்நூலாசிரியன் நினைத்துக்கூட இருந்ததில்லை. அதனால் கேரளபாணினியத்தின் முதற்பதிப்பில் ''நாமத்தினு கீழடங்கும் வாக்கியத்தில் கிரியாபதத்தில் சுட்டெழுத்து சேரும் பரத்யயம் போலெயது பேரெச்சமத்ரே'' என்று சொனதக்கருதது அறைகூவவும் செய்யப்பட்டது மலையாளத்தின் இலக்கணப் போக்கைத் தனியாகக் கூர்ந்து நோகும்போது இககருத்து உறுதிபபடாதிருக்கவும் வழியில்லை. ''அ'' என்ற சுட்டெழுததிற்குப்பதில ''ஒரு'' எனத் தகரத்திற்கு ஒப்பான மற்றொரு சர்வ நாமமும் கவிகள் பயன்படுததுகின்றனர் அவதாரக எதிர்காலத்தில் ''ஒரு'' என்பது மாத்திரமே பயன்படுத்துவதுண்டு. எ-டு:

இரிப்பு + ஒரு = இரிப்பொரு;

''ஒரு'' என்பதை ''ஒரு'' எனவும் ஆக்குவதுணடு. எ-டு:

இரிப்போரு.

பொருட்பொருத்தமும் தெளிவானதே. ''நீ புஸ்தகம் வாயிச்சோ?'' என்பது வினு; எநதப் புத்தகம் என்பதைத் திட்டப்படுத்துதற்கு ''ஞான் தந்நு'' என்ற ஒரு வாககியமும் புத்தகததை விசேடிப்பதற்கு (அடையாளப்படுததுதற்கு) வழஙகப்படுகின்றது. ஆகவே வாக்கியம் ''ஞான் தந்நு; ஆ புஸ்தகம நீ வாயிச்சோ?'' என்ற இரண்டு சுதந்திர வாக்கியங்கள் சேர்ந்து ஒரு பெரிய வாக்கியமாய் முடிநதது. வாக்கியங்கள் இரண்டும் இப்போது இலக்கணநோககில் சுதந்திரமாக நிற்கின்றனவெனினும், பொருள் நோக்கில் 'ஞான் தந்நு'' என்ற வாககியம் புத்தகத்தை விசேடிக்கின்றது. அந்த விசேடண விசேடியத் தன்மையைத் தோற்றுவித்தற் பொருட்டு ''அ'' என்ற சுட்டெழுத்து 'தந்நு' என்ற வினையோடே சேர்க்கப்படுகின்றது. ஆகவே 'ஞான் தந்ந புஸ்தகம் நீ வாயிச்சோ?' என்ற பெரிய வாக்கியம் கலவை வாக்கியமாய் முடிகின்றது. இதனுள் ''தந்ந'' என்பது விசேடண வாக்கியத்திலுள்ள முற்றுவினையே அது முககிய வாக்கியததில் புத்தகத்தை விசேடிக்கவும் செய்கின்றது. இந்தத் தொடர்நிலைமுறை ஆங்கிலதில் Did you read the book I gave you? என Relative pronoun இல்லாதுள்ள வழககத்தைவிடச் சிறிதும் தெளிவற்றதன்று. கால்டுவெல் 6-ம் வேற்றுமைப் பொருளைப் பெயரெச்சத்தில் இணைப்பதற்காகச் சேர்த்துச் செய்கின்ற கோட்டிகள் ஒன்றும் இங்கு தேவையில்லை.

பெயரெச்சம் வினைமுற்றிலிருந்து தோன்றுவதாதலால் வினை முற்றின் வேறுபாடுகளெல்லாம் பெயரெச்சத்திற்கும் வரும. எவ்வாறெனில்,

நிர்தேசகம்	விதாயகம்
பறயுன்னு—பறயுன்ன—நிகழ்.	(பறயேண்டுன்னு)—பறயேண்டுன்ன—நிகழ்.
பறஞ்ஞு—பறஞ்ஞு—இறந்த.	(பறயேண்டி)—பறயேண்டிய—இறந்த.
பறயும்—பறயும—எதிர்காலம்	(பறயணம்)—பறயேண்டும்—எதிர்.

எதிர்மறைவிதாயகம்	எதிர்மறை அனுஜ்ஞாயகம்
பறயேண்டாத்து—பறயேண்டாத்த—நிகழ்.	(பறயாவுன்னு)—பறயாவுன்ன—நிகழ்.
பறயேண்டாஞ்ஞு—பறயேண்டாஞ்ஞு—இறந்த.	(பறயாயி)—பறயாய—இறப்பு.
பறயெண்டா—பறயண்டா—எதிர்.	(பறயாம்)—பறயாம—எதிர்.

பறயாதது —பறயாதத —நிகழ்காலம்
பறயாஞ்ஞு—பறயாஞ்ஞு—இறந்தகாலம்
பறயா —பறயா —எதிர்காலம்
} எதிர்மறை நிர்தேசகம்

பறயுன்னில்ல—பறயுன்னில்லாத்த—நிகழ்கால-எதிர்மறை நிர்தேசகம்.
பறயருது—பறயருதாத்த—எதிர்மறை விதாயகம்.
பறயவஹியா(து)—பறயவஹியாத்த—எதிர்மறை அனுஜ்ஞாயகம்.
பறயொலா(து)—பறயொலாதத—எதிர்மறை விதாயகம்.

பெயரெச்சம் ஒரு வாககியத்தின் வினைச்சொல்லின் பெயர் விசேடணமாதலால் அது எலலாத் தொடர்புகளையும் குறிகின்றது. எவ்வாறெனில்,

கடிகுன்ன பட்டி—கருதாதா	ஞான் கடம் கொடுத்த புள்ளி—ஸ்வாமி
உண்ணுன்ன சோறு—செயப்படுபொருள்	இரிக்குன்ன வீடு—அதிகரணம்
எழுதுன்ன பேன—கரணம்	தவாதஶி நோற்ற பலம்—ஏது-ஏதுமதபாவ சம்பந்தம்
ஞான் வழிசோதிச்ச பய்யன்—சாட்சி	அடிகொண்ட வேதன— ,,

சமஸ்கிருதத்தில் ''யத'' எனவும் ஆங்கிலததில் 'Who, which' எனவு முள்ள வியபேட்சக சர்வ நாமம் செய்யும செய்கையை மலையாளத்தில் பெயரெச்சங்களாககொண்டு செய்து முடிக்கலாம். எவ்வாறெனில்,

மலையாளம்—தேவிதன் சொல்லெல்லாம் நெஞ்சகம் பூகின கஞ்சன்—கிரு. கா.

சம்ஸ்கிருதம்—கம்ஸோ யஸ்ய ஹ்ருதயம் தேவ்யா: ஸர்வா வாச: ப்ராவிக்ஷின்

ஆங்கிலம்—Kancha into Whose heart the queen's words had entered.

வியங்கோள் பிரகாரத்திலிருந்து மாத்திரம் பெயரெச்சம் பிறப்பதில்லை. இப்பிரகாரதத்திற்கு வேறும் இலக்கணங்கள் உள. அனுஜ்ஞாயகம், விதாயகம் ஆகியவற்றில் உள்ளது போன்று இதனில் இணவழகு வெளிப்படை இல்லை. இதனில் பால் எண் பகுதி உருபிலேயே காணப்படுகின்றன. இதற்குக் காலவேறுபாடு அமைவதில்லை. வியங்கோள் பிரகாரத்தின் இவ்வகை இலக்கணங்களின் நிமித்தம் உண்மையில் பிரகாரம் என்ற உபாதியைக் கொள்ளவேண்டி வந்தது. அல்லது அனுஜ்ஞாயகம், விதாயகம் ஆகியவற்றை இணவழக்குகளில் சேர்த்துக்கொண்டால், பிரகாரம் என்ற இனத்திற்கு உரிமையே வருவதில்லை.

145. வெறும் பேதகமாயிட்டும்
பேரெச்சம் சிலெடங்களில்.

பெயரெச்சம் விசேடண வாக்கியத்தில் விணைமுற்று ஆதலால் அதற்கு ஒரு கருததாவும், இயல்பாக மற்று காரகங்களும் ஒவ்வொன்றிற்கும் பிரசசேதங்களும் வேண்டும். ஆனல் சிலவிடங்களில் இவ்வகை வாக்கிய பரிவாரங்கள் ஒன்றுமில்லாது ஒரு வெறும் பேதகத்தின் நிலையிலும் பெயரெச்சம் காணப்படும். எ-டு:

வெளுதத பஹு, நீண்ட வடி, பெருங்காயம்.

இங்கு எது வெண்மையானதோ அந்தப் பசு, எது நீண்டதோ அந்த வடி (கைத்தடி), எது பெரியதோ அந்தக் காயம் என்றுள்ள வாககியங்களை எடுத்துக்காட்டவில்லை என்பது மட்டும் வேறுபாடு என்ற உத்தியைக்கூறி அமைதி காணலாம். உண்மையில் பேதகப் பகுதிகளுக்கும் உருவம் எய்துதல் விணைப்பகுதிகளாகிய அடிச்சொற்களை ஒததாதலால், பெயரெச்ச வடிவம் வெளுத்த, நீண்ட (இறக்த காலம்), பெரும் (பெருகுக என்பதன் சீல எதிர்காலம) என அமைந்தன. வெளுத்த, நீண்ட என்பவற்றில் வெளுக்குன்னு—வெளுத்து—வெளுத்த, நீளுன்னு—நீண்டு—நீண்ட என்ற இறந்தகாலப் பொருள் குறிப்பிடப்படுவதில்லை. வெண்மையுள்ள, நீளமுள்ள என்ற பொருளையே நாம் உணர்கிறோம். இவ்வகை பேதகங்கள் நாமாங்கம் எனப் பெயர் இடப்பட்ட பெயரெச்சமாகப் பிறப்பதால் அவற்றிற்கு 'நாமாங்கம்' எனச் சிறப்புப் பெயர் கொடுக்கப்பட்டுளது. பேர்—பெரிய—பெரும்; செறு—செறிய; நற்—நறும்; செம்—செவந்த; கூறு—குறும்; வன்(ல்)—வலிய; கொடு—கொடிய; கொடும் முதலிய பல பேதகங்களும் இவ்விதம் உண்டாகியவையே. பேராலு, செறுபுன்ன, நறுநண்டி, செம்பருத்தி, குறுமொழி, வன்தேன், கொடுவேலி என்றவாறு பகுதிகளைப் பயன்படுததுவதிலும் தடையில்லை. எனினும் பகுதிகள்

பெயர்களோடு சேர்ந்து தொகையாக நிற்கின்றன. பெயரெச்ச உருபைச் சோத்தால் சுதந்திரச் சொற்களாகும் என்ற வசதி எய்தும்.

146. பேரெச்சம் லிங்கயோகத்தால்
வரும் ஆக்யாத நாமமாய்.

பெயரெசசம் பெயரை விசேடிபபதால் அது ஒரு பேதகத்தின் இடத்தையன்ரே வகிக்கின்றது. அதனுல் பெயரெசசதோடு பால் விகுதியைச் சேர்த்தால் அது பிற பேதகங்சளைப்போன்று பெயராய் அமையும் அவ்வாறமையும் பெயர்களுக்கு 'ஆகயாதநாமம்' என்பது பெயர். பெயரெசசப் பெயரென்ரே, கிரியாங்கப் பெயரென்ரே டெய நிடுவதிலும தடையில்லை ஒரு வினைமுற்று பெயரால் அமைவதும், அதனேடு சாதாரணப் பெயர்களைப்போன்று வேற்றுமைகள் சேர்வதும் ஆரியமொழிகளில் ஒருக்காலும நிகழவதில்லை. ''அவன் பறஞ்ஞது ஞான் கேட்டு; அவன் பறஞ்ஞதினுல் ஞான் அக்கார்யம் ஸம்மதிச்சு; அவன் பறஞ்ஞதில் வாஸ்தவம் உணடு'' முதலிய வழக்குகள் திராவிடமொழிகளில் சாதாரணமாக அமையும். ஆரியமொழிகளிலோ இவையெல்லாம் ''யத்'', ''தத்'' என்ற வியபேட்சக சர்வ நாமங்களின் துணையில்லாது முடிவதில்லை. ' ஸ யதவோசத் ததஹமஸ்ரௌஷம்; ஸ யதவோசத்தேநாஹம தமர்த்தமங்யாகார்ஷம்; ஸ யதவோசததத ரூஸ்தி வாஸ்தவம்'' என்ரே அல்லது செயப்பாடு வழக்கைப் பயன்படுத்தி ' தேனேகதமஹமஸ்ரௌஷம; தேனேகதத்வாத்தமர்த்தமங்ய கார்ஷம்; தேனேகதே அஸ்தி வாஸ்தவம்'' என்ரே கூறவேண்டும். ஒரு வாககியத்தின் வினைமுற்றாக நின்று எழுவாய், செயப்படுபொருள் முதலிய காரகங்களோடு சேரவும பெயர்த்தன்மை எய்துதலால எல்லா வேற்றுமைகளிலும் வழஙகவும் அதனுல முடியும என்ற உண்மையை நினைவுறுதத வேண்டியே ''ஆக்கியாதநாமம்'' எனப் பெயர் கொடுககப்பட்டது. அன், அள், அர, து என்ற பால்விகுதிகள் முன்னரே விரித்துரைககப்பட்டனவன்ரே. புணர்ச்சியில வகரம் தோன்ற, பெயரெச்ச உருபாகிய 'அ' என்பது அவன், அவள், அவர், அது என அமைகிறது அவன், அவள், அவர் என்பவற்றை ஒன், ஒள், ஓர் எனவும் திரிப்பதுண்டு. எ-டு:

அறியுன்னவன்–அறியுன்னோன் அறியுன்னவள்–அறியுன்னோள் அறியுன்னது—	நிகழ்காலம்	அறிஞ்ஞவன்–அறிஞ்ஞோன் அறிஞ்ஞவள்–அறிஞ்ஞோள் அறிஞ்ஞது—	இறந்தகாலம்
அறியுவவன்(உம்) அறியுவோன்(லுப்தம்) அறிவவன், அறிவோன் அறியுவவள் அறியுவோள் அறிவோள் அறியுவது அறியூது			எதிர்காலம்

அனுஜ்ஞாயக நிகழ்காலம	விதாயக நிகழ்காலம்
அறியாவுன்னவன், —வுன்னோன்	அறியேண்டுன்னவன், —ன்னோன்
அறியாவுன்னவள், —வுன்னோள்	அறியேண்டுன்னவள், —ன்னோள்
அறியாவுன்னது	அறியேண்டுன்னது

அறியாத்தவன், அறியாத்தவள், அறியாத்தது–நிகழகாலம்
அறியாஞ்ஞவன், அறியாஞ்ஞவள், அறியாஞ்ஞது–இறந்தகாலம்
அறியாயவன், அறியாயவள, அறியாயது–எதிர்காலம்

பெய ரரசசத்தில் 'அறியும்' என்ற எதிர்கால வடிவமல்லாது 'அறியும' என்று சரியாக வரவேண்டிய வடிவம் காணப்படவில்லையெனினும் அறியுவவன், அறியுவோன் எனப் பெயர்ததன்மையோடு உருவ அமைபபு காணப்படுவதால பெயரெசசத்தில் ''அ'' என்ற உருபி டததை வகிகின்ற சுடடெழுதது கெடுதல் அடைந்துள்ளது என்பது தெளிவாகின்றது.

கருததா கடடளை இடுபவனை, பழகாமில்லாதவனை ஆகிய இடததில ஆண் பெண வேறுபாடு குறிககபபடாததால் வெறும் வினைபபொருளில அஃறிணைப பெயரெசசப பெயாசள உபயோகிபப துண்டு. எவ்வாறெனில்,

வந்து பர்த்தாவென்னறிஞ்ஞு—வந்ததன் = கருத்தா = வந்த ஆள்

சிலவிடங்களில் பெயரெச்சப் பெயர்களை வினைமுற்றுமை சுட்டெழுததுமாகப் பிரிதத பின்னரே தொடர்கிலை உணர்வு உணடாகின்றது. எ-டு:

அங்ஙாடியில் தோற்றதினு அமமயோடு—தோற்று—அதினு.
ஆங்கிலத்தில் What என்ற சர்வ நாமத்தின் வழககு இங்கிலையிலாகும.

சிலவிடங்களில் பெயரெசசங்கள் தற்கால விசேடணங்களாகவி உபயோகிககப்படுகின்றன. எ-டு:

வீரனை வருன்ன கண்டு = வீரனை வருகின்றவனைக காணல்.
இவ்வண்ணம் தஹிகுன்ன கண்டு—சி. பு. (தகிகின்றதாகக் காணல்.)

ஆனால—வீரனை வநநது கண்டு—நாதனை போகுன்னது கண்டில்லலலோ என்ற கிருஷ்ணகாதைச் சான்றுகளில் பொதுநிலை தேடித் தருவது வழககே. ஒருத்தனை போகக்கண்டு (கே. ரா.) முதலிய வழக்கு தமிழைப் பின்பற்றி வந்தனவாகும்.

ஒரு வஸ்து மேடிச்சது நாயினைத்தன்னை ஆயிரிக்கும்.

என்பது ''நாய்தன்னை'' என வரவேண்டியது. அது ஒரு மரபுச் சொற்றொடர்ச் சிறப்பு என அமைதி கொள்ளலாம். ''வாங்கியது நாய்தன்னை'' என்றுகில் ''வந்தது பர்த்தாவென்னறிஞ்ஞு'' என முன் காட்டிய எடுத்துகாட்டிலுள்ளது போன்று 'வாங்கிய ஆள் நாய்' எனத தோன்றிவிடும. அவ்வாறு எய்தாதிருக்க ''நாயினை'' என்று செயப்படு பொருளாக்கப்பட்டது. செயபபாட்டு வழககு உண்டாயிருந்ததெனில் ''வாங்கப்பெட்டது'' ''நாயாபிரிக்கும்'' என வழங்கிச் சரியாக்கியிருக்கலாம். செயப்பாட்டு வடிவம் இல்லாததால், செயப்படுபொருள் வேற்றுமையையே தகுந்ததாகப் பயன்படுத்தவேண்டி வந்தது.

''கண்டிது குமாரன்மார்'' எனவும் மற்றும இதன் நிர்தேச வழக்கு அடியை முழுமையாகதற்கெனக் கூறலாம். பெயர்களில் இதனைப் போன்ற வழக்கு முன்கூறப்பட்டது.

2. வினையெச்சம்

147. வினையெச்சங்கள் அஞ்சு அத்தே;
முள், பின், தன், நடு, பாகழிகம்.[1]

முன்வினையெச்சம், பின்வினையெச்சம், தன்வினையெச்சம், நடுவினையெசசம், பாட்சிக வினையெசசம என வினையெச்சம் ஐந்துவகைபபடும். இவறறுள் முன்வினையெச்சம இறநதகாலவினை விசேடணவினையையும், பின்வினையெச்சம எதிர்காலததிலுள்ளதையும காட்டுகின்றன. இம்முறையில் நடுவினையெச்சம் இறப்பு நிகழவு ஆகியவற்றின் நடுவிலுள்ள நிகழ்காலததைக குறிகக வேண்டுவது நியாயம. ஆனல் சிறிது தனித்தன்மை உளது. திராவிடமொழிகளில் சரியான நிகழ்காலததின் இருப்பிடமே ஆதிகாலத்தில் உதிககவில்லை என்பது ஊகம் என முன்னர் நிறுவப்பட்டுளது முக்காலத்திற்கும் ஒன்றுபோலவே நடுவினையெச்சம் சேரும்.[2] அதாவது காலநேககு இல்லாதது. நடுவினையெசசத்திற்கு வேறும் சில இலககணங்கள் உள்ளன என்பது இதனின்று தெளிவாகும். பாட்சிக வினையெச்சம் ''ஒரு விதததில் நிகழ்நதால்'' என்ற காட்சியைக காட்டுகின்றது. தனியே நிற்கும் ஆற்றலுள்ள நடுவினையெச்சமே, தன்வினையெச்சம் எனபபட்டது. இனி ஒவ்வொன்றிற்கும் எய்தும வடிவததைக் காண்போம்.

148. துர்பலம் பூதரூபம் தான்
ஸ்வயம் முன்வினையெச்சமாம்.

---

1 பாட்சிக வினையெச்சம் = கடட்ஸ வினையெசசம்

2 அகரம் மூன்று காலமும் பற்றிவரும் (தொல், சொல், சேனை-228).

இறந்தகால வினைமுற்றின் வடிவதனைப் பலமை இழக்கச் செய்தால் (படுத்தலோசைபடுத்தினால்) அது முன்வினையெச்சம். தூர்பலபடுத்துதற்கும் பிரபலப்படுத்துதற்கும் உள்ள வழி முன்னர் குறிக்கப்பட்டுள்ளது. இறந்தகால உருபு சேர்ந்த அடிச்சொல்லே முன்வினையெசம. அதனை உறைப்பித்ததால் (எடுத்தலோசைபடக் கூறினால்) அது வினைமுற்று. எடுத்தலோசை இல்லாது கூறினால் எச்சவினையாகிய வினையெச்சம். எ-டு:

ஞங்ஙள இவிடெ வநது சோநது. } குற்றுகரத்தால் பலமிழந்தால்
ஞங்ஙள இவிடெ சோந்து வநது. } எ ச ச வி னை. முற்றுகரத்தால்
கூறின் வினைமுற்று.

அவன் மதிலில் சாடிககேறி } பின்வரும வல்லின இரட்டலால்
அவன் மதிலில் கேறிசசாடி } பலமிழந்தது வினை எச்சம். இறுதியில் பலப்படுத்தப்படுவது
வினைமுற்று.

பறந்து சென்னங்ஙு கரேறி கூட்டில்—இதனில 'கரேறி' என்பது வினைமுற்றாதலால் 'கரேறிக கூட்டில்' என்று வல்லெழுத்து இரட்டல் இல்லை.

149. சேர்ப்பு பின்வினையெச்சத்தின்னு
ஆன் நேரே, பாவியிங்கலோ.

பின்வினையெச்சதனைப் படைபபதறகு நேரே அடிசசொல்லோடோ, எதிர்கால உருவத்திலோ "ஆன்" உருபைச் சேர்க்கவேண்டும். எ-டு:

போக்—போகான், போகுவான்.
இரி —இரிக்கான், இரிப்பான், இரிக்குவான்.
உண் —உண்ணான், உண்மான், உண்ணுவான்.
வர் —வரான், வருவான்.

உண்ணான்போயி; களிககான் வந்து; காணான் சென்னு

தமிழில் "ஆன்" உருபு அபூர்வம். "குளிககும் வந்தேம்" என்ற எதிர்கால வினைமுற்றையே செந்தமிழில் வினையெச்சமாக வழங்கலாம், நாடோடி "வழகதமொழியில்" "குளிக்கவந்தான்" என நடவினையெச்சதனை வழங்குதல் வழக்கம் ஆனால் 'வான், பான், பாக்கு' என நன்னூலில் பின்வினையெசச உருபுகளைப் பரிகணிப்பதால் ஆதிகாலத்தில் தமிழிலும் இவற்றிற்குப் பிரசாரம் இருந்ததென எய்தும்.[1]

150. அனுபாதி க்ரிய நடு
வினையெச்சம் உரப்பது;
அகாரம் தான், ககாரம் தான்
உகதான் ஆயதின் குறி.

1 நன் 342

காலம், பிரகாரம், இடம் முதலிய உபாதிகள் ஒன்றுமில்லாது வெறும் வினையைதான் நடுவினையெச்சம் குறிக்கின்றது. அதற்கு அ, க, உக என்ற இம்மூன்றில் ஒன்று உருபாகும். ''செய்தேன்'' எனக கூறும்போது வினையில் நான் என்ற தன்மையிடம், ஒருமை எண் ஆகியவையும இறந்தகாலமும் உட்படுகின்றன 'செய்யணம்' என்பதில் 'ஆணை' என்ற ஒரு அம்சமும் அதிகமாவதுண்டு ' செய்க'' என்ற நடுவினையெசசதில இவ்வகை உபாதி ஒன்றுமில்லை. செய்கின்ற ஆள் ஆரென்றோ, செயல் நிகழ்ச்சி எபபோதென்றோ, இவ்வகை அவயவ உபாதிக்கும தோற்றம் உண்டாவதில்லை பரப்பிரமத்தைப் போன்று அது உபாதிகளற்ற வெறும வினையையே குறிக்கின்றது. அதனால் அதனை வினைமுற்றுகவும் கருத்தாவாகவும் பயன்படுத்தலாம். ''வ்யாஜ்யம் பறக சரியல்ல'' என்றவிடத்தில் ''பறக'' என்பது பெயர் போன்று கருததாவாக நிற்கின்றது. ''ஸுகமாய் வாழ்க'' என்றவிடத்தில் பயனிலையின் (வாழ்ததல் பிரகாரம) இடததை வகிக்கின்றது. நடுவினையெச்சதின் இததகைய வழக்குகளை நோக்குமபோது அதனை வினையெசசத்தில் உட்படுத்துவதே சரியன்று. ஆனால் பெயராகவும் முற்றுவினையாகவுமுள்ள உபயோகம இதற்குக் காலபபோகில் ஏறபட்டதாயிருக்க வேண்டும். வாழு, வாழாம், வாழணம், வாழட்டே ஆகிய வடிவங்களில அதது காலப் பிரகாரங்களின் பொருள் நோககு வரும். அவையொன்றுமில்லாது வெறும் வினை மட்டுமாகிய 'வாழ்க' என்ற உருவத்தை வினையின் இடத்தில் பயன்படுத்தப்படும்போது ஆதரம், வாழ்த்து முதலிய பொருள் வியங்கியமாக விளங்கும் என்றல்லாது சொல்லின் வாச்சியப் பொருளாக வருவதில்லை. அமமுறையிலேயே ''கோனேன்'' = நான் அரசன் ஆகிறேன்; ''அடியேன்'' = நான் அடியான் ஆகிறேன் முதலிய வழகுகளில் (தமிழ், வினைபபெயர) பெயர்கள் எண்பால் வீகுதிகளால் நேரே பயனிலை அங்கமாய் அமைகின்றன. அதனைபபோன்று 'வாழகயால்' முதலிய வினையெச்சங்கள் நேராகவே பெயராய் அமைகின்றன அதுமட்டுமன்று, செய்யுன்னது, செய்யுன்னதினை, செய்யுன்னதினுல், செய்யுன்னதினு, செய்யுன்னதின்றை, செய்யுன்னதில் என்ற வினைமுற்றுப் பெயர்களைப போன்று நடுவினையெச்ச வடிவத்தை எல்லா மேற்றுமைகளிலும் வழங்குவதில்லை. செய்க, செய்கயால், செய்கில் என மூன்று வேற்றுமைகளில் மாததிரமே இதற்கு வழக்கு உள்ளது. செய்கய்க்கு என்றோ, செய்கயுடை என்றோ யாரும் வழங்குவதில்லை. செய்யவேணம, செய்ய ஆம், செய்யப்படுக, செய்யததக முதலிய துணைவினையோடு வழங்கப்படுதலே நடுவினையெசசத்தின் சரியான வழககு. இவற்றில அதன் வினை விசேடணத்தன்மை தெளிவாகக காணப்படுகின்றது. நன்னூல் ஆசிரியரும் இவ்வடிவததை நிகழ்கால வினையெச்சமாகக கணிததிருகின்றார்.

நிகழ்கால நோகசு ஒரிடததிலும தெளிவாகக் காணப்படாததால் நடு வினையெச்சம எனப பெயர் வேறுபடுத தப்பட்டுளது இறப்பு, எதிர்வு ஆகியவறறின நடுவிலுளளது எனவும், வினைகும் பெயரிற்கும இடை யிலுளளதெனவும் நடுவினையெச்சம் என்ற பெயரின் பொருளை விளக்க லாம். இவ்வகை அஸ்வாரஸயங்களைத் தீர்பபதற்கு இதற்கு ''அனவச் சேதகம்'' எனவும் பெயா இடப்பட்டுளது கூறபபடட அ, க உக என்ற மூன்று உருபுகளில் அ என்பது பழமையான தும் தூணைவினை வழககில் காணப்படுவதும் ஆகும். க, உக ஆகிய இரண்டும் அகரததை விகாரபபடுததி இடைக்காலதத்தில வழககில் வந்தவை. எ-டு:

செய்—செய்ய, செய்க, செய்யுக கேள்—கேள்க்க, கேள்க்குக.
அறி—அறிய, அறிக, அறியுக. ஓட் —ஓட, ஓடுக.

முழு மெய்யிறுதிகள் ''க'' பொருந்தாததால் ''உக'' மாத்திரமே உள்ளது.

151. இல் கில் உகில் ப்ரத்யயங்ஙள்
பூர்வ்வவல் பாக்ஷிகத்தினு.

நடுவினையெச்சதிற்கு அ, க உக என்பவற்றைக் கூறியது போன்று பாட்சிக வினையெசசத்திற்கு இல், கில், உகில் ஆகிய உருபுகளை முறையே சேர்கவேண்டும். எ-டு:

செய் —செய்யில்,	செய்கில்,	செய்யுகில்.
அறி —அறியில்,	அறிகில்,	அறியுகில்.
கேள்— —	கேள்ககில்,	கேள்க்குகில்.
ஓட் —ஓடில்,	ஓடுகில்,	—

''என்'' என்ற சிதைவுற்ற அரிய அடிச்சொல், ''ஆவுக'' என்பது ஆகியவற்றின் பாட்சிக வினையெச்சங்களாகிய ''என்கில்'', ''ஆகில்'' ஆகிய உருவங்கள் இடைச்சொற்களாகிவிட்டன. இவற்றை வினை முற்றோடு சோத்தாலும் சம்பாவனைப் பொருள் எய்தும. எவ்வாறெனில்,

வர்—வரில், வருகில், வருன்னெங்கில், வருன்னுவெங்கில், வநநெங்கில், வந்நுவெங்கில், வருமெங்கில், வராமெங்கில், வரட்டெஎங்கில், வரணமெங்கில், வராஎங்கில், வராஞ்ஞெங்கில், வராஞ்ஞுவெங்கில், வருன்ஞுகில், வருமாகில், வங்ஙாகில்—முதலியன.

152. பூதகாலத்தில் ஆல் சேர்த்தும்
உண்டாம் பாட்சிகம் என்னது.

இறந்தகாலத்தில் ''ஆல்'' என்ற உருபைச் சேர்த்தும் பாட்சிக வினையெச்சம் படைக்கலாம். செய்-செய்தால்; அறி-அறிஞ்ஞால்; கேள்-கேட்டால்; ஓட்-ஓடியால் என்பன. இந்த ''ஆல்'' உருபு சமஸ்கிருதத்திலுள்ள காலச்சொல்லே ஆகியிருக்கலாம். தமிழில் இவ்வடிவம் ''செய்தக்கால்'' எனக் ககரம் சேர்ந்தது. அதனால் மலையாளத்திலும் இறந்தகாலப் பெயரெச்சத்தோடே ''ஆல்'' உருபு சேர்கின்றது. பெயரெச்ச உருபாகிய அசரமும பாட்சிக வினையெச்ச உருபின் முதலெழுத்தாகிய ககரமும் கெடுகின்றன. இந்த இரு எழுத்துகளும் பிற பல இடங்களிலும் கெடுதலுண்டு பொருட்பொருத்தமும் நன்கு அமைந்துளது வங்ஙகாலம=வங்ஙபட்சம். தமிழில் ஒருகால்=ஒரு பட்சே என வேறு இடங்களிலும் காலச் சொல்லிற்கு சம்பாவனைப் பொருளில் வழககு காணப்படுகின்றது. ஏழாம் வேற்றுமை உருபாகிய கல் (கால்) என்பதன் ககரம் கெட்டு அதறகுப்பதில் முன் உயிரிலுள்ள நீட்சியை இழக்காது ''ஆல்'' என முடிந்தது எனவும் அமையலாம். கால் என்ற ஏழாம வேற்றுமை உருபிற்கு இடம் என்பது பொருள். அதற்கும் சம்பாவனைப் பொருள் எளிதில் பொருந்தும.

153. ஏதான், அவேதான் தன்வின
எச்சத்தின் குறியாயது.

ஏ என்பதையோ, அதனை நீட்டுவித்த 'அவே' என்பதையோ அடிச்சொல்லோடு உருபினிடததில் சேர்ததால் தன்வினையெச்சம் உண்டாகும். 'எ, அவெ' எனக குறிலும் அமையலாம். எ-டு:

செய்—செய்யெ, செய்யவே; கேள்க்கெ, கேள்ககவே.

''ஜ்யேஷ்டன் இரிக்கெகருவம்ஶதில் ஶ்ரேஷ்டன் ஞான் என்ன வனுடெ பாவம''

வேறுள்ள வினையெச்சங்களைப் போன்று இதுவும் வினையை விசேடிக்கின்றதெனினும் விசேடணத தன்மையால் கீழடங்கலுக்குக குறைவு வருவதால் சுதந்திரம் அதிகமுள்ளதென்ற கருததால் தன்வினையெச்சம் எனப் பெயர் கொடுகபபட்டது. தனியே நிற்கத்தகக சுதந்திரமுள்ளது தன்வினையெச்சம். தேச்சு குளி, வரான் போகுன்ன கார்யம முதலியவற்றில் 'தேச்சு', 'வரான்' ஆகிய முன்-பின் வினையெச்சங்கள் எந்த அளவிற்கு விசேடியங்களுக்குக் கீழடங்குகின்றனவோ அந்த அளவிற்கு ''ஜ்யேஷ்டனிரிகெ.'' என்பதில் இரிக்கெ ''என்பது பாவனை'' என்ற விசேடியததிற்குக கீழடங்குவதிலலை என்ற பொருள் அனுபவததால் எய்துவதன்றே. உருவ அமைப்பை நோககும்போது

நடுவினையெசசததோடு எகரம் சேர்க்கப்பட்டது என்பதே உளது. தமிழில தன்வினையெச்சத்தின் இடததில நடுவினையெச்சமே பயன்படுதத்படுகின்றது. ''செய்யவேணடும'' என்ற இனைவழகுச் சேர்நத தமிழ வடிவம மலையாளத்தில ''செய்யணம'' என விதாயகப் பிரகாரம் என்ற ஒரு புதிய இனமாகியதைப்போன்று, நடுவினையெச்சம் ''எ'' என்ற இடைச்சொல் சேர்நது தன்வினையெச்சம் என வேறு ஒரு வினையெசசமாக முடிநதது.

சொல் வரலாற்றை மீண்டும் கூாமையாக நோக்குமபோது பாட்சிக வினையெச்சமும் தன்வினையெச்சததைப்போன்று நடுவினையெச்சத்தின் வேறறுமை ஏற்ற வடிவமே ஆக இருககவேண்டுமெனத தோன்றுகின்றது நடுவினையெச்சததில் பெயர்களைபோன்று பெரும்பான்மையும் மிகக வேற்றுமைகளையும சோகக முடிகின்ற விவரம முன்குறிதது காட்டபபட்டதன்றே அதனுல் பாடசிக வினையெச்சம் தொடக்க கலததில வநக + இல = வருகயில = வருகில் (அகரக்கேட்டால்) = வரும் நிலையில் = வருன்னபட்சம, என இவவாறு ஏழாம வேற்றுமையிலுள்ள வடிவமும் அதன் வணணம் தன்வினையெச்சம் ''எ'' என்ற வேற்றுமைப போலியிலுள்ள வடிவமாக முடிநதிருக்கவேண்டும்.

இனி வினையெசசங்களின் வழக்குச் சிறப்பைப் பற்றிச் சிறிது ஆராய்வோம்—முன்-பின-நடுவினையெச்சங்கள் அததன் பெயரிற் கேற்ற வடிவமாகச், சிறட்பு வினையின் முன்னரும், பின்னரும, சம காலததிலுமுள்ள வினைகளைக் குறிகின்றன முன்னர், பின்னர் உள்ள காலங்கள் மிகவும் அண்மையிலோ சேய்மையிலோ ஆகலாம. ''மனுஷ்யர் ஜனிசசு, வளாந்து, மரிகுன்னு'' என்ற எடுததுக்காட்டில் பிறபபு, வளாச்சி, சாவு இவ்ற்றிடையில் மிகப்பெரிய கால வேறுபாடு இருககலாம. நேர்மாறுக ''கொண்டு வருக'', ''பறஞ்ஞு அயய்க்குக'' முதலியவற்றில் கொள்ளுதல், வருதல் ஆகியவற்றிற்கும், 'சொல்லுதல்', 'அனுப்புதல்' ஆகியவற்றிற்கும், அண்மையே உளது. துணைசெய்யப்படும் வினையாகி வரும் முன்வினையெச்சஙகளில் எல்லாம் இந்த அண்மை காணப்படும ''க்ருஷ்ணன் பூதனையையும, சாணூபாலனையும் கொலலான் அவதரிசசு'' என்பதில இரண்டுபோர்களையும் கொல்வதில் மிகவும் காலவேறுபாடு உளது. ''இடு'' என்பதன் இனைவழக்கு முன்வினையெச்சததையும், ''ஆயிட்டு'' என்ற இடைசசொல் பின்வினையெச்சததையும் துலகி மினுக்குவது போன்று விளஙகச செய்யும். இந்த உபாயத்தால் முகியதது வத்தையும் காலவேறுபாடுகளையும் தோன்றச செய்வதில் வசதியுளது எவ்வாறெனில்,

	முக்கியத்துவம்		உறழ்வு
1.	ராமஸ்வாமி இவிடெ தாம ஸிச்சு படிச்சு.	1	ராமஸ்வாமி வந்நுகுளிச்சு உண்டு.
	ராமஸ்வாமி இவிடெ தாம ஸிச்சிட்டு படிச்சு.		ராமஸ்வாமி வந்நு குளிச் சிடடு உண்டு.
2.	ராமஸ்வாமி உண்ணுன் போயி.	2.	ராமஸ்வாமி படிக்கான் வரான் பாவமுண்டு.[1]
	ராமஸ்வாமி உண்ணுனு யிட்டு போயி.		ராமஸ்வாமி படிகாளுயிட்டு வரான் பாவமுண்டு [2]

துணைவினைவழக்கில் விவேசனம்

ராமஸ்வாமி போயிரிகுன்னு. ராமஸ்வாமி போயிட்டிரிக்குன்னு.
ராமஸ்வாமிக்கு பறயான் தகாகார்யமில்ல.
ராமஸ்வாமிக்கு பறயாளுயிடடு தகாகார்யமில்ல.

ஆனல்—'பறயத்தக்க காரணம், பறயான் தக்க காரணம்' முதலிய வினையெச்சங்களில் ஒன்றையொன்று பரிமாற்றம் செய்யும் இடங்களில் நுண்மையான பொருள் வேறுபாடு சாதாரண நிலையில் கவனிக்கப்படுவதில்லை. அபூர்வமாகச சிலவிடங்களில் நடுவினையெச்சத்திற் குப்பதில் பின்வினையெச்சத்தை வழங்குவதுண்டு. எவ்வாறெனில்,

''மனுஷ்யர் ஆயால் இவ ரண்டில் ஒன்னு நினச்சு வேணம் ஸமயம் கழிப்பான்.''

இங்கு கழிப்பான் என்பது 'வேணும்' என்பதன் கருத்தாவாகும். காலம் கழிப்பது இவை இரண்டில் ஒன்றை நினைத்த பின்னரே பயன் படுத்தவேண்டும்.

பெரும்பான்மை இடங்களிலும் வழக்கிற்கும் தோற்றத்திற்கும் தக முன்வினையெச்சத்திற்கு இறந்தகால வினையும், பின்வினையெச்சத் திற்கு வினைப்பொருள் வினையும் பொருளாகும். அவற்றில் நின்று, முன்வினையெச்சத்திற்கு ''அதன் பின்னர்'' எனவும், ஏனையதற்கு ''அதனிக் கருதிவிட்டு'' எனவும் பொருள் மிகுதியும் உண்டாயிற்று. எவ்வாறெனில்,

யுததம் கழிஞ்ஞு புரம் ப்ரவேசிசு (ஶி. பு.) = கழிந்ததன் பின்னர்.
ராமன் ஜனிச்சிட்டு ஏழு வர்ஷமாயி = பிறந்ததன் பின்னர்.
ராமனு புத்ரனுண்டாகான் அனுகரஹிக குன்னு = பிறகுகவேண்டு மெனக் கருதி.

இத்தகைய இடங்களில் இரண்டு வினையெச்சங்களும மாறுபட்டவை களாக அமைந்துவிடுகின்றன. எவ்வாறெனில்,

1, 2. இது B என்ற ஒலி.

முனிமார் சோதிச்சிட்டு ஸுதன் பறஞ்ஞு கத.
ராமஸ்வாமி உண்டாகான் அயாளுடெ அச்சன் நேர்ந்ந வழிபாடு.

கருத்தா, செயப்படுபொருள் முதலிய பரிச்சதங்கள் (attributes) எல்லாம் வேறு வேறு உள்ளதனால், ஒன்றிற்கு மற்றொன்றிலுள்ள அங்கபாவத்திற்கு ஏதம் வருகின்றதென்று ஐயுற வேண்டியதில்லை. இங்கும் அயல் அரசன் பேரரசனுக்குக் கீழடங்குவதுபோல் அங்கத்திற்கு இறுதியில் அங்கியொடு நேரே சாய்வது என்பது இல்லாமலில்லை. இவ்வாறு பொருள்தொடர்பு நிலைபெற்றதோடு முன்வினையெச்சத்திற்கு அத்தொடர்பினைத் தொட்ட காரியகாரணத் தன்மை, நிமித்தச் சிறப்புத்தன்மை முதலிய எல்லாப் பொருளிலும் இயக்கம் வந்தது. எ-டு:

அவன்னு ஆபரணம் விற்றிட்டு ஒரு லாபம் வேணமோ — சாண.
மன்னவன் அயச்சு இங்ங்ங வருன்ன ஞங்ஙள் — கே. ரா.
பீமன்றெ தல்லு துடமேல் கொண்டு சாக — பார.
பறஞ்ஞே ஸுகம் வரு — நள.
கொன்னுதன்னே ஶமம் வரு — ப. த.

முன்வினையெச்சம் ஆசை – ஆற்றல் – திறமை – மனநிறைவுத் தன்மை முதலிய பொருளுள்ள அடிச்சொற்களோடு பெரிதும் வழங்குகின்றது. இவையே நான்காம் வேற்றுமைக்குப் பொருள் ஆதலால் பெயரெச்சப் பெயர்களின் நான்காம் வேற்றுமையும் பெயரெச்சமும் பரியாயங்களாக வரும். எ-டு:

குளிப்பான் போகுன்னு = குளிப்பதற்குப் போதல்.
குளிப்பாண் இச்சிக்குன்னு = குளிப்பதற்கு இசைசை.
பறவான் கழியும் = சொல்வதற்கு முடியும்.
பறவான் பாவிகுன்னு = சொல்வதற்குப் பாவித்தல்.

முன்வினையெச்சமும் பின்வினையெச்சமும் வரத்தக்க வினையைக் குறித்தும் செயற்படும். எவ்வாறெனின்,

அவனோடு பறஞ்ஞிட்டெந்து கார்யம்
உண்ணுன் நேரத்து உறங்ஙருது.

தோட்டங்களின் இடையிலுள்ள தடங்கள் ஏதேனும் காரணத்தால் ஆள் நடமாட்டமில்லாது போனால், இருபகுதிகளிலுமுள்ள குடியானவர்கள் தங்கள் தோட்டத்தின் எல்லை வேலியை நீக்கி நீக்கி வழித்தடங்களை மிகுதியும் சேர்த்துக்கொள்வதைப் போன்று முன்னிலும் பின்னிலும் உள்ள வினையெச்சங்கள் நடுவிலுள்ள தன் மிக்க

பொருளையும் சிறிது சிறிதாக ஆகுகிரமித்துக் கொள்கின்றன. நடுவினையெச்சத்தின் அதிகாரம் அதன் பகுதியாகிய சிறப்பு வினையும் விசேடணவினையும் சமகாலங்களாக வருகின்ற இடங்களிலன்றே அமைவது? சிறிதும் முன்னர்ப் பின்னர் இல்லாது இரண்டு வினைகள் ஒரேகாலத்தில் நடப்பது அரிதாகும். அதனால் ''சொல்லத்துடங்கினான்'' என்ற தமிழைப் பின்பற்றியுள்ள பண்டைய வழக்கின் இடத்தில் தற்காலத்தார் ''சொல்லான் துடங்கினான்'' என்றே, ''சொல்லித் துடங்கினான்'' என்றே வழங்குவர். ''குரு அருளிக்கேட்ட கத'' என்ற வழக்கில், பொருள் குரு அருளிய உருவத்தில் கேட்ட கதை என்பதாதலால் அருளியதும் கேட்டதும் ஒரேகாலத்தில் நிகழ்வன எனினும், அருளலுக்கும் கேட்டலுக்கும இயல்பாக உள்ள காரண காரியத் தன்மையை ஒட்டி, குத்தகதபெளர்வா பரியதவாரா, அருளலுக்குக கேட்பதைவிடப் பழமையைக்கொண்டு, அது முன்வினையெச்சம் ஆக்கப்பட்டிருக்கின்றது. இம்முறையிலேயே பிற இடங்களிலும் அமைதியை நுண்ணுணர்விலேடு ஊகித்துகொள்க

இவ்வாறு நடுவினையெச்சத்தின் வழக்குக் குறைந்ததோடு, மற்றொரு முறையில் அதன் வழக்கு பெருகிற்று. நாம் உண்மையில், துவர்ந்ததன் பிறகே நனைக்கின்றோம். எனினும் 'தோரத் தோர[1] நனய்க்குன்னு' எனப் பெரிதும் வழங்குவதுண்டு. ''தோர'' என்ற நடுவினையெச்சச் சொல்லின் பொருள் அறிவின்படி துவர்வதும் நனைப்பதும் ஒரே காலத்து நிகழவேண்டும். அது அசம்பாவிதமாகும். இத்தன்மையிலிருந்து சொல் இலக்கணத்தில் இரு கொள்கைகள் வெளிப்படுகின்றன. (1) பொருட்படுத்தாமை நியாயம், (2) வெளிப்படைத் தோற்ற நியாயம். முதலிலுள்ளதில் ''சொல்லத்துடங்கி'', ''சொல்லான் துடங்கி'' என்பன போன்றுள்ள இடங்களில் அமையும் வேறுபாடு உற்சாகமின்மை மூலம் கவனிக்கப்படாதிருக்கின்றது. இரண்டாவதன் தன்மை ''தோரெ தோரெ நனய்க்குன்னு'' முதலியவற்றிலுள்ளதைப் போன்று குறிக்கப்படும் பொருளை முடிந்த அளவுக்கு வெளிப்படையாக்கவேண்டுமென்ற கருத்தில், இல்லாத பொருளைப் படைத்தலாகும். ஒன்றுக்கொன்று முரணுகிய இவ்விரண்டு நியாயங்கள் இவற்றின் பிரபலமாகிய ஒப்புமை நியாயம் அல்லது உபசார நியாயம் ஆகியவற்றின் விலாசத்தால் சொற்களுக்கு உருவத்திலும் பொருளிலும் நாளுக்குநாள் தோன்றிவரும் வேறுபாடுகளைச் சிறிது விளக்குவோம். எனினும் இயல்பும் தொடரியல்பும் உள்ள இலக்கணக கொள்கை ஆய்வு இங்கு நிற்க.

---

1 தோர = துவர.

இத்தகைய பொருட்சிதைவு வந்ததனால், நடுவினையெச்சம் ''எ'' என்ற இடைச்சொல்லின் உதவியோடு வினைத்தொடர்ச்சி, வினையிலக்கணம் முதலியவற்றைப் பொருளாகக்கொண்டு தன்வினையெச்சம் என்ற புதிய வகையாக முடிந்தது. பாட்சிகவினையெச்சம் நடுவினையெச்சத்தின் வகை வேறுபாடே ஆகும் என்பது முன்னரே விளக்கப்பட்டுள்ளதன்றே. அதனால் முக்கியமாக வினையெச்சம் மூன்றே உள்ளன என்று கூறலாம்

உபாதிகளற்ற வினையைக் குறிக்கும் நடுவினையெச்சத்திற்குச் சொந்தமாய் எய்திய அங்கத்தன்மை கவனிக்கப்படாததால் முக்கிய வினையின் இடத்திலும் வினைத்தன்மையின் கவனமின்மை மூலம் பெயரின் நிலையிலும் பயன்படுவது வழக்கமாயிற்று மதிப்பு, பக்தி, வினயம் முதலியவை குறிக்கப்படும்போது ஏவல், ஆணை, விதி முதலிய சிறப்புப் பொருள்களைத் தொடும் வியங்கோள் முதலிய பிரகாரங்களோடு பொருத்தமின்மைப்பட்டுப் பதமாகிய நடுவினையெச்சம் வினைமுற்றுக வழங்கத்தொடங்கப்பட்டது. எவ்வாறெனில்,

ஆர்யே! வேஷம் தரிச்சு கழிஞ்ஞால் இங்ஙோட்டு வரிக
தன்னே—பா. சா.
வ்ருத்தாந்தம் எந்தென்னு உர செய்து —நள.
நரபதி வேட்டய்க்கு வரிகயோ —கே. ரா.

பெயர் வேறுபாடுகளைப்போன்று ஒரு வாக்கியமே ஒரு வினைகருத்தாவோ செயப்படுபொருளோ ஏனைய காரகமோ ஆகும் இடங்களில் அவ்வாகியத்தின் வினைச்சொல்லின் நடுவினையெச்சம் அதனின் பெயர்களைப்போன்று வேறுபாடு இல்லாது வேற்றுமைகள் சேர்க்கப்படுகின்றன. எவ்வாறெனில்,

தூதரெக் கொலசெய்க ஶாஸ்த்ரத்தில் விதியல்ல (1-ம் வேற்.)
கே. ரா.
நீ துணயாகயால் ஜயம் வருன்னு (3-ம் வேற்.) பார.
அவனு கேள்க்கயில் ஆக்ரஹம் உண்டு (7-ம் வேற்.) பார.
த்யஜிக்கயெக் காட்டில் நல்லது (5-ம் வேற்) நள.

காலம் முதலிய உபாதிகளையும் குறிக்கத் தயங்கவில்லையெனில் 'தூதரெக் கொல செய்யுன்னது, செய்தது, செய்யுவது (செய்வது என்றே) விதியல்ல' என்றும வழங்கலாம்.

''ஆதெ'' என்ற எதிர்மறை வினையெச்சத்திலுள்ள விசேட உருவத்தை எல்லா வினையெச்சங்களையும் போன்று வழங்குவதுண்டு. எவ்வாறெனில,

அறிஞ்ஞும் அறியாதெயும செய்த தெற்றுகள் — (முன். வி. எ.)
உருண்டு போகாதெ (போகாய்வான்) பிடிச்சு — (பீன். ,,)
ஶிலம் அறியாதெ (அறியாஞ்ஞால்) களிகருது—(பாட்சிக. ,,)

அடிச்சொல்லில் கால உருபைச் சேர்ததால் எய்தும் உருவம் வினையெச்சம். அதன்மேல் பால்விகுதியைச் சேர்ததால் வினைமுற்ரு கும் என்பது திராவிடமொழிகளின் பொதுவான விதி என (நூற்பா-105) கால இயலில் கூறப்பட்ட தன்ரே. அஙகேயே அதனைப பற்றி ஆய்வும செய்யப்பட்டது. எனினும் அங்கு செய்த ஆய்வு பல செய்தி களையும் முடிவு செய்யவேண்டியிருநததால் மிக நீண்ட சிறிது இடை யூறு உள்ளதும் ஆயிற்று. அதனுல் வினையெச்சங்களைப் பற்றியுள்ள இவ்வியலை முடிக்கு முன்னர் அச்செய்தியைக குறித்து ஒரிரண்டு கருத்துகளைக குறிததல் பொருநதும். முன்வினையெசசமே இறந்த கால வினைமுற்று என்பதில் ஐயததிற்கு இடமிலலை. சரியான நிகழ காலம் ஆதிகாலதததில் அமையவில்லை. அதனுலேயே இப்போதுள்ள நிகழ்கால வினைமுற்றினை ஒத்த ஒரு வினையெச்சம் தமிழ் மலையாள மொழிகளில் காணப்படவில்லை. நிகழ்காலத்தின் இடத்திலுள்ள நடு வினையெச்சததை ஒத்த வினைமுற்று நன்னூலில் குறிப்பிடப்படவில்லை யெனினும் பேச்சுமொழியில் அதனை அபூர்வமாகப் பயன்படுததுவ துண்டு அதனுல் பின்வினையெச்சம் பற்றிய கருத்துகளில் ஐயங்கள் தீரவில்லை. (1) பின்வினையெச்சம, 'செய்வான்', 'நடப்பான்' என ஆண்விகுதி ஈறுள்ளது இதனுல் பால்விகுதி சேர்ந்து ஒரு எதிர்கால வினைமுற்று வடிவம் அமைவதில்லை. (2) எதிர்கால உருபு உ என் பதோ உம் என்பதோ ஆகும். அதற்குப பொருததமான ஒரு வினை யெச்சம் காணப்படவில்லை. இவ்வாறு இரண்டு செய்திகளை முடிவு செய்யவேண்டும். கால இயலிலோ எதிர்காலதததின் பொருளும உருவ மும் இன்னவிதததில் உள்ளவையென அறுதியிட்டு முடிவு செய்யப படவில்லை என்றும் ''செய்கும் வந்தோம்'' முதலிய சில வேறுபட்ட வழகுகளில் பொருத்த நயப்படி தேவைப்பட்ட வடிவம் காணப்படு கின்றது என்றும் மாததிரம் அமைதி கூறி, அவ்விசாரணை நீக்கப்பட் டது அதனுல் இங்கு அவ்வழக்கு மறுபடி விசாரணைகு எடுத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது.

''காலம்'' குறிகும் உருபிறுதி தனியே (நின்ரால்) வினையெச்ச மாகும்'' என்று மாத்திரம் நூற்பாவில் கூறப்பட்டுளது ஆன் ஒரு கால உருபன்று. அதனுலேயே அதற்குப் பொருததமான ஒரு வினை முற்று காணப்படவில்லை. ''இதனுல் இல் வழகின் முதல் கருதது தள்ளப்படுகின்றது. ஆனல இந்த ஆன் எங்கிருந்து குதித்து வந்து வீழ்ந்தது என்பதை அறிய விருபபமும் வருகின்றது. ''அ'' என்ற

நடுவீனயெச்சத்தை நீட்டிப் படைத்துளதே ஆன். கன்னடத்தில் இது ''அல'' என அமையும். இறுதியில் உகரம் சேர்த்து ''அலு'' எனவும் ஆக்குவதுண்டு. ஆனல் ''அ'' என்பது மாத்திரமுள்ள வடிவ மும் மிகுதியாக வழங்குகின்றது. கேசவன் என்ற கன்னட இலக்கண ஆசிரியர் இங்கு லகரக்கேட்டை விதிகின்ருரெனினும் ஏனைய திரா விட மொழிகளோடு தாரதம்மியப்படுத்தி நோக்கும்போது ''அ'' கரத் தின் நீட்சியே ''அல்'' என்பதல்லாது 'அ' என்பதில் லகரக்கேடு இல்லை என்பது தெளிவாகின்றது. தெலுங்கில் பின்வினையெச்சமும் முக்கிய மாக அகரமே. உயிர்வரின் அது 'ன்' சேர்ந்து 'அன்' என ஆகும். எ-டு:

கன்னடம் —அவனு ஆ கெலஸ மாடலாரம் பிஸிதனு.
தெலுங்கு —அதடு ஆ பனி சேயனேரம் பிசிவாடு.
மலையாளம்—அவன் ஆ பணி செய்யான் ஆரம்பிச்சான்.

தெலுங்கில் மலையாளத்திலுள்ளது போன்றே ஆய = ஆயி(ட்டு) என்ற அவ்வியமும் சேர்த்து பலப்படுத்தலும் வழககம்.

தெலுங்கு —வாடு ஆ பனி செய்யனய உன்னாடு.
மலையாளம்—அவன் ஆ பணி செய்யானையிட்டு தய்யாராயான்.

''ஆன்'' என்பதன் தோற்றம இவ்வாருயிருகக வேண்டுமெனத் தோன்றுகின்றது. புணர்ச்சி காரியம் மாத்திரமாதலால் பொருளற்ற இது காலப்போகில் பகுதிப் பொருள் விகுதியுள்ள ஒரு உருபாக அமைந்தது. தெலுங்கரும் கன்னடரும் இதன் தோற்றத்திற்குத்தக இதனை நடுவினையெச்சத்தின் ஒரு நீட்டலாக மாததிரமே பயன்படுத்தி யுள்ளனர். தமிழர்கள் இதனை எதிர்கால வினையெசசமாகிய பின்வினை யெச்சததில் சேர்த்தனர். அகற்குள்ள சான்று நன்னூலாசிரியர் வான், பான் என்ற வடிவததில் பின்வினையெச்ச விகுதிகளைக் கூறியதாகும். வான் = வ் + ஆன்; பான் = ப் + ஆன். பகரவகரங்கள் முறையே காரிதம் அகாரிதம் ஆகியவற்றின் எதிர்காலச் சின்னங்கள் ஆகும். 'உ' என அமைந்திருந்த எதிர்கால உருபு வகரபகரங்களாகப் பரிணமிகத காரணம் விளககப்படும். மலையாளிகளோ ''ஆன்'' என் பதை மிகவும விரும்பினர் அவர்கள் அதனைப பெயராக வழங்குகின்ற னர். (''அனவச சேதகம்'' எனப பெயரிட்டுள்ள) நடுவினையெச்சத் தோடு சேர்த்துவிட்டனர். ''மனுஷ்ய...ஸமயம் கழிப்பான்'' (239-ஆம் பக்கம்) என்ற சான்றை நோகுக. இவ்வாறு 'ஆன்' என்பது அழைக் காது வநது நுழைநத விருந்தினனுகும். அதனை அடித்து வெளியேற் றினுல் எதிர்கால உருபிறுதியே பின்வினையெச்சமாகத தெளிந்து காணப்படும.

இவ்வழக்கின் முதல கருததை முடிவு செய்ததோடு இரண்டாம் கருத்திற்கும் தீர்ப்பளிக்கப்பட்டது. காரியத்தில் இரண்டு கருத்துக் களும ஒரே உண்மையை மாற்றிப் புரட்டி அமைக்கப்பட்டனவன்ரே. பாசியை நீக்கிக் கலைந்து பார்த்தபோது குளம் குளமே என உணரப் பட்டது; அவ்வளவே உள்ளது. எதிர்கால உருபிறுதியாகிய 'வரு' 'இரிகு' என்பனவே பின்வினையெச்சங்கள். 'வருவான்' 'இரிக்கு வான்' என்பனவற்றிலுள்ள ஆன் பாசியைப் போன்று இயல்பாக வநது சேர்நததே. ''தொண்டு முதிர்ந்து ஆளத தொடங்கியதால்'' ஆன் உரிமையுடைய உகரத்தை நீகாக கலைந்துவிட்டு இபபோது சுதந்திரமாக முடிந்திருகின்றது இப்போதுள்ள மலையாளதில் 'வரான்' 'இரிகான்' என்ற வடிவங்கள் மாத்திரமே அமைநதிருந்தால் போதும். தமிழில் ''ஆன்'' என்பதன் அதிகாரம் இந்த அளவுகு வளரவில்லை. அதனோடு வான், பான் என வகரபகரங்கள் சேர்ந்தே நிறக முடிகின்றது. அதுமட்டுமன்று. தமிழில் இவ்வடிவங்களே வேறுபட்ட கிளையில சேர்ந்துவிட்டன. அதனால் ''வருவான்'' என் பதே சரியான வடிவம்; வரான் என்பது அதனைச் சிதைததுப் படைத தே. ஆனால் வருக, இரிகுக என்ற வடிவங்களின் செயதியில, உண்மை நேர்மாருனதாகும். வர, இரிக என்பவற்றின் நீட்டலே அவ்வடிவங்கள்.

அ, க, உக எனக கூறப்பட்ட மூன்று உருபுகளில் சரியான வினையெச்சம் எது என்பதைச் சிந்திப்போம். வருவான் (=வரு+ஆன்), வருவின் (வரு+இன்) எனப் பிற வடிவங்களில் காணப்படுவதைப் போன்று இதிலும் உகரம் எதிர்காலச் சின்னமோ என்ற ஐயம் தோன்றுகின்றது இவ்வையதததைத் தீர்ப்பதற்கு முதலில் எதிர்கால உருபே உகரமோ உம் என்பதோ என்பதை முடிவு செய்யவேண்டி யிருக்கின்றது. அதனால் முதலில் இதனை விசாரணைகு எடுத்துக் கொள்வோம்.

பண்டைத் தமிழில் இறந்தகால ஒருமைகு மூன்று இடங்களி லும் ஒருப்போல ''செய்து'' எனவும், பன்மைக்குச் ''செய்தும்'' எனவும் வடிவங்கள் அமைநதிருந்தன. அதனைப்போன்றே எதிர்காலத்திலும் தன்மையில் மாததிரம் 'செய்கு' என ஒருமையும 'செய்கும்' எனப் பன் மையும் அமைநதிருந்தன. ''நம்மள்'', ''தம்மள்'', ''மா'' முதலிய பெயர் வடிவங்களில் மகரம் பன்மைச் சின்னமாகக காணப்படுகின்றது. அதனால் இவ்வினை வடிவங்களிலும மகரம் பன்மைச் சின்னமாகவே இருக்கவேண்டும். கால்டுவெல், 'செய்தும்', 'செய்கும்' ஆகிய வடிவங் கள் ''உம'' என்ற இடைசசொல் சேர்நதவை என்று கூறுவதை

ஏற்றுக்கொள்வதற்கில்லை. அவர் வேண்டாதவற்றையெல்லாம் அப்பாவியாகிய இவ்விடைச்சொல்லின் தலையில் கட்டிவைக்கும் கருத்துகளில் இதுவும் ஒன்று. எனவே ''உ'' என்பதே எதிர்கால உருபு. ஆதிகாலத்தில் வினைமுற்றுகளுக்கு இப்போதைய மலையாளத்தைப் போன்று பால் இட எண் வேறுபாடுகள் இல்லாதிருந்தன என்பது முன்னரே நிறுவப்பட்டதன்றே முதலில உருவ வேறுபாடு ''எண்'' என்ற உபாதியில் தொடங்கியிருக்கலாம் என ஊகிக்கவேண்டும் காலப்போக்கில் இட வேறுபாடும் ஏற்பட்டபோது அந்த உருபிலேயே எண்ணும் உட்பட்டுப போவதால் ''உம்'' என்ற மகரம் சேர்ந்த உருவம் தேவையில்லாததாகிவிட்டது. ஆனால் ஒரு சமயத்தில் வழக்கில் வந்துவிட்ட வடிவம் உடனேயே அழிந்து போதல் என்பது எளிதன்று. அதனால் ஆளிணைக குறிததல் தேவையிலலாததால் எண்ணைப் பொறுதத அளவில் சகதியற்ற அ.ஃறிணையில் இரண்டு எண்ணிலும் வேறுபாடில்லாது பயன்படுததத தொடங்கியிருக்கவேண்டும. இவ்வாறு ''உ'' எனவும ''உம'' எனவும் இரண்டு எதிர்கால உருபுகள் உண்டாயவிட்டன.

''உ'' உருபோடு இடவிகுதிகள் சேருமபோது அமையும் வடிவப் போக்கையும காடடுவோம. பாடு+ஏன் =பாடுவேன், துங்கு+ஏன் = தூங்குவேன் முதலிய காரித அகாரித வேறுபாடில்லாத மெய்யிறுதிகளில புணர்ச்சி விதிப்படியே உருவம் சரிப்பட்டுவிடுகின்றது. அறி+உ+ஏன் =அறியுவேன் என அமைவதறகுப்பதில் ''அறிவேன்'' எனவும் நட+உ+ஏன்=நடகுவேன் என்பதற்குப்பதில் ''நடப்பேன்'' எனவும் உருவங்கள் எவ்வாறு வநதன? இங்கு உகரம் கெடுகின்றது. உகரம் பெரும்பான்மை இடங்களிலும் கெடுகின்ற உயிரன்றே ஆனால் முறையாக வரும் கேடு இங்கு கருதவேண்டியதில்லை. 'அறியுவேன்' என்பது ''அறிவேன்'' எனச சிதைகின்றது எனக் கணக்கிட்டால் போதும். ஆகவே அடிசசொல அண்ண ஒலி இறுதியாயினும் புணர்ச்சியில் யகரம் தோன்றுதற்குப்பதில் வகரத் தோற்றம் வந்த பயனையிற்று. அகாரிதத்திற்குப் புணர்ச்சியில் வரும் இடைநிலை வகரமெனில், காரிதததிற்கு அதன் இரட்டிய வல்லினமாகிய ''ப்ப'' வேண்டும். இவ்வாறு ''நடப்பேன்'' என்ற வடிவமும் எய்துகின்றது. வ, ப ஆகிய இரண்டும் எதிர்காலத்தைக குறிககும் இடைநிலைகள் என நன்னூலாசிரியர் கூறிய உததியும் இதுவே ஆகியிருகக வேண்டும். எதிர்காலத்திலுள்ள வினையெசசமாக அவர் வான், பான் என வகரபகரங்களைச சேர்த்துக் கூறியதும் தனியாக நமது கவனத்தைக் கவர்கின்றது. எதிர்கால வடிவம் எய்துவதன் குழப்பங்களெல்லாம் இப்போது தீர்ந்துவிட்டன.

அகரம் மாத்திரமே நடுவினையெச்ச உருபாக உள்ளது. வினையெச்சமும் வினையின் அம்சமாதலால் அது ஒரு வினையின் விசேடணமாயிருக்கவேண்டும் வினைவிசேடணமாக வழங்குவதில் எல்லாம் ''அ'' மாத்திரம் காணப்படுகின்றது.

சொல்லததுடங்கினன்; பறயததக்க; நடத்தவேண்டும்;
செய்யப்பெட்ட; வர; இரிக்க(=வரை, இரிக்கே—தன்வினையெச்சம்).

''வியங்கோள்'' எனத் தமிழர்கள் கூறும் வாழ்த்துபபிரகாரமாகவும் பெயராகவும் உள்ள வழக்கில் க, உக ஆகியவை காணப்படுகின்றன. முதலிலுள்ளது வினைமுற்றுகிய வினைவடிவமும், இரண்டாவது பெயரும் ஆகிவிடுவதால் அது வினையெச்சமே அன்று என்பது பொருளால் தெளிவாகின்றது. ஆனால் அவை இரண்டும நடுவினையெச்சதில் ஏன் உட்படுத்தப்பட்டன என்ற வினு எழுகின்றது. அதற்கு விடை கூறுவோம். வினையெச்ச வகைகளில் இதனைச் சேர்க்காவிட்டால கால்டுவெல் செய்தது போன்று தொழிற்பெயரின் வகையில் இதனைச் சேர்க்கவேண்டும். தொழிற்பெயர் பெயராக அமைந்துவிடுவதால் அதன் கருத்தாவையும், செயப்படுபொருளையும் குறிபபதற்கு ஆரும் வேற்றுமையல்லாது முறையான முதல் வேற்றுமையும் ஐந்தாம் வேற்றுமையும் வருதலில்லை. தொழிற்பெயராகும் போது ''தட்டான்றெ பணி'', ''மோதிரத்தின்றெ கெட்டு'' என்பதே வழக்க ''உக'' உருபிறுதியாதலால ''தட்டான் பணியுக'' ''மோதிரம்''(த்தை) கெட்டுக என கருத்தா செயப்படுபொருட்களை முறைப்படிக காட்டலாம. வினைததன்மை நீங்காததால் இது தொழிற்பெயரன்று வேறொன்றின் விசேடணமன்றுதலால் எசசவினையின் வகைகளில் இதற்கு இடம் கொடுக்கக்கூடாது. தானே முற்றுவினை அன்றுதால் வினைமுறறிலும் சேர்வதில்லை. காலம் முதலிய உபாதிகளொன்றும் இல்லாததால் பரப்பிரமததைப் போன்றதென முன்பு விளகியது இப்போது தெளிவாகிவிட்டது. சமஸ்கிருதத்தில் இதனை ஒத்த வடிவமில்லை. ஆங்கிலத்தில் Infinitive என்பதன் இடத்திலுள்ளது ஆங்கில இலக்கண ஆசிரியாகள் Mood எனக் கூறும பிரகாரம் என்ற வகையில் இதனைச் சேர்த்தனர். ஆனால் பிரகாரஙகள் (Moods) எல்லாம் வினைமுற்றுகள் (Finite Verbs) ஆகும்; இது எச்சமும் ஆகும். (How can infinitive be finite?) அதனால் பிரகாரத்தில் சேர்ப்பதற்கும் நியாயம் போதாது. வியங்கோளாக உள்ள வழக்கில் இது வினைமுற்றுய்விடுவதால் பிரகார வகைகளில் வாழ்த்துப்பிரகாரம் என்ற இடம் இதற்குக கொடுகக்பட்டுளது. போதாதற்குத் திராவிடமொழிகளில் சரியான பிரகாரங்களே இல்லை. உள்ளவற்றில் பெரும்பாலும இனை வழக்கால் எய்துவனவாகும். அதனால் அவ்வகைகளில் இதற்கு இடம்

ஒருபோதும் அனுமதிகக்க் கூடாது. இந்த இடையூருன சூழ்நிலையில் யாருகுமு வேணடாத ஒன்றிற்கு ஏதேனும் ஓரிடத்தில் ஓரிடம் கொடுகக்வேணடுமன்ரே என்று கருதி இதற்கு நடுவினையெச்ச வகையில் இடம் கொடுகக்ப்பட்டது இதனையெல்லாம் கருதியே முற்று வினைகளும் எசசவினைகளும் நடுவே உள்ளது நடுவினையெச்சம் என்ற ஒரு விளக்கமும் முன்னரே கொடுதததும், அனவச்சேதம என்ரொரு புதிய பெயர் படைததுமாகும்.

அனவச்சேதகத்திற்கு உருபு ''க'' என்பது போதும். மெய் யிறுதி அடிச்சொற்களில் அது குற்றியலுகரம சேர்ந்து ''உக'' என ஆகிவிடும். இரிக்குக, சேர்குக என்ற உயிரிறுதிச் சொற்களிலும் சில்லிறுதிகளிலும் ''உ'' சேர்ககப்படுவது தேவையற்றதாகும். அண்மைக் காலதததில் தொடங்கிய நீட்டலே அது. போகுவான், போகுவின் என்ற வடிவஙகளிலுள்ளது போன்று எதிர்கால உருபோடு இதில் பொருடபொருதததம் சிறிதுமிலலை. அவ்வடிவங்களைப பின்பற்றி இதிலும் வறிதே நீட்டல் தொடஙகியிருக்கவேண்டுமு. இந்த அனவச்சேதகத்திலிருநது பாட்சிக வினையெச்சம் தோன்றியது. அது எதிர்காலத் தன்மைக்கு உரியது ஆதலால் ''இரிக்குகில்'' என விரித்தாலும் பொருத்தமின்மை இல்லை. தமிழில் நிகழ்காலம் ''இற'' என்ற அடிச் சொல்லின் இணைவழகக்ால் அமைவதென்று நிறுவப்பட்டதன்ரே. இங்கு துணைவினைவழக்கு இந்த அனவசசேதகம் ஆகும். அதன் குறியாகிய ''க'' உருபிலுள்ள அகரம் கெடடு ''இற'' என்பதோடு சேர்ந்து ''கிற'' உண்டாகின்றது. செய்கிருன், வருகிருன் எனக் ககர ஒலி கேட்பது அதனாலேயே. அது மலையாளத்தில் விதாயகப் பிரகாரத்தின் இணைவழக்காகிய ''வேண்டும்'' என்பது ''அணம்'' என ஆகியதைப் போன்று ''உன்னு'' என்ற உருபாய்விட்டதால் ககர ஒலி இல்லாது, செய்யுன்னு, வருன்னு என்ற வடிவம் கொள்கின்றது. உருபின் இடம் கிடைப்பதால் காரிதங்களில் ''க்க'' இடைநிலை சேரும்போது ''இரிக்குன்னு'', ''கேள்க்குன்னு'' என ககரம் சேர்ந்த வடிவங்களும் அமைகின்றன.

மேல்குறித்துக் காட்டிய கொள்கைப்படி வினையெச்சங்களின் வகை கீழ்காட்டப்படும் பட்டியலின் முறையிலாகும்.

பெயர்	விகுதி	எடுத்துக்காட்டு
முன்வினை யெசசம	து, இ (மென்மையாக்கப்பட்ட இறப்பு உருபுகள்)	செய்து, ஓடிப்போயி
பின்வினை யெச்சம	உ (எதிர்கால உருபும் அதனோடு ஆனும்)	செய்யுவான், செய்வான்

	பெயர்	விகுதி	எடுத்துகாட்டு
நடுவினை யெச்சம்	கேவலம்	அ	செய்ய (வேணம்)
	தன்வினை	எ, அவெ	செய்யெ, செயயவெ
	யெச்சம்	க (உக)	செய்க, செய்யுக.
	அனவச்சேதகம்	இல் (கில்,	செய்யில், செயகில்,
	பாட்சிகம்	உகில்)	செய்யுகில்.

பாட்சிகவினையெச்சத்தில் ''உம்'' என்ற எண்ணிடைசசொல்லைச் சேர்த்தால் அங்கீகாரப் பொருள் அமையும்.

''ரண்டு ப்ரகாரம் கிருபிச்சாலும் தண்டார்மிழியெ நமுககிஹ வேண்டா'' முதலியன சான்றுகள். இது உருவத்தோடு ஒருவிதததிலும் தொடர் பில்லாத ஒரு பொருட் சிறப்பாகும். அதனால் இலக்கணத்தில் இதனைக் கணிக்கவேண்டியதில்லை. டாகடர் குண்டர்ட் இதற்கு ''அனுவாதகம்'' எனப் பெயரிட்டு வினையெச்சங்களில் உட்பிரிவாகச் சேர்த்தது ஆங்கிலத்தில் இது ''yet'' என்ற இணைப்பு இடைச்சொல்லின் இடத்தை வகிப்பதனால் ஆயிருக்கவேண்டும்.

வினைப்பெயர்கள்

அங்கியாகவும் அங்கமாகவும் உள்ள ஸாத்திய வினைகளை விவரித்ததன் பின்னர் இனி எஞ்சியுள்ள ஸித்தவினைகள் விளக்கப்படுகின்றன. இததகைய வினைகளைக் குறிக்கும உருபுகள் கிறுத்துகள் என முன்னரே பெயர் கொடுக்கப்பட்டனவன்றே. உண்மையில் ஸாத்திய நிலையில் இருக்கும் வினையே வினையாக உள்ளது என நிறுவியதால் ஸித்தவினைகளெல்லாம் வினையினின்றும் பிறந்த பெயர்களாகும். பெயரினின்று கிடைக்கும் பெயர் விகுதிகளுக்குத் தத்திதம் என்று பெயரிட்டதைப்போன்று, வினையினின்று பிறககும் பெயர் உருபுகளுக்குக் ''கறுத் உருபுகள்'' எனப் பெயர் கொடுககப்பட்டிருகின்றது. 'தொழிற்பெயர்கள்', 'காரகப் பெயர்கள்' என ''க்ருத்'' இரு வகைப்படும். முதலிலுள்ளது வெறும் வினவடிவத்தைக் குறிக்கும். இரண்டாவதில் வினையை நடத்தும் காரகங்களிலொன்று உருபின் வாச்சியப் பொருளாக நிற்கும்.

11. தொழிற்பெயர் விகுதிகள்

154. அல், தல், ப்பு, வு, ச, தி, த்து, த்தம்,
அ, இ, அம், ம, வி, இல், படி,
தல, மானம், டு, ம்பு, வாரம்
இத்யாதி க்ருதி க்ருத்துகள்.

தொழிற்பெயர்களைக் குறிப்பதற்கு அல், தல், ப்பு, வு, ச, தி, த்து, த்தம முதலிய இருபது உருபுகள் உள்ளன. இவற்றை பொருத்தம்போல அடிச்சொற்களில் சேர்க்கவேண்டும். வேறுபாடுகள் மிகுதிப்படுவதால் இன்ன அடிச்சொல்லிற்கு இன்ன உருபு என வரயறை செய்வது சிறிது கடினம. நீக்கற்குமேல் அபவாதம், அபவாதத்திற்கு மேல் அபவாதம், மீண்டும் பதில் தோற்றம் முதலிய பலமுறைகளிலும் வலிந்துகொள்ளும் அமைப்புகள் ஏற்படுவதோடு அஸாத்தியமும் ஆதலால் இவ்விதத்தில் உருபுகளுக்கு நிர்ணயம் செய்யவேண்டிவந்தது என்றறிக. என்றாலும் வழகிலுள்ள சில நியமங்கள் கீழே குறிகப்படுகின்றன.

1. அல்: துப்பு—துப்பல்; செய்—செய்யல்.
2. தல்: கெடு—கெடுதல்; பா—பாச்சல்=(அண்ண ஒலித்திரிபு); தூறு—தூற்றல்; மறி—மறிச்சல்.
3. ப்பு: தே—தேப்பு; கிட—கிடப்பு; பார்—பார்ப்பு.
4. வு: அறி—அறிவு; நோ—நோவு; நின—நினவு; அள—அளவு.
5. ச: சேர்—சேர்ச்ச; வீழ்—வீழ்ச; அகல்—அகல்ச; அருள்—அருள்ச.
6. தி: அறு—அறுதி; பொறு—பொறுதி.
7. த்து: நெய்ய்—நெய்தது; கொய்ய்—கொய்த்து; ஊது—ஊத்து; ஓத்—ஓத்து; பூ—பூசசு (அண்ண ஒலிததிரிபு); பாடு—பாட்டு (புணர்ச்சி); கூடு—கூட்டு; மாற்—மாற்று.
8. த்தம்: பிடி—பிடித்தம்; வெளி—வெளிச்சம, வெட்டம; பாடு—பாட்டம்; கோடு—கோட்டம்; ஏறு—ஏற்றம்.
9. அ: கொடு—கொட; நில்—நில; படு—பட.
10. இ: கேள்—கேளி; தோல்—தோலி.
11. அம்: நீள்—நீளம்; ஆழ்—ஆழம்; கள்—கள்ளம்; எண்—எண்ணம.
12. ம: ஓர்—ஓர்ம்ம; கூர்—கூர்ம்ம; தாழ்—தாழ்ம.
13. வி: மற—மறவி; பிற—பிறவி; தோல்—தோல்வி.
14. இல்: வேவ்—வெயில்; து—துயில் (துயிர்).
15. படி: நட—நடபடி.
16. தல: நடு—நடுதல; மறு—மறுதல.
17. மானம்: தே—தேமானம்; வரு—வருமானம்; தீர்—தீருமானம்.
18. டு: சும—சுமடு.
19. ம்பு: கெடு—கெடும்பு.
20. வாரம்: (அரம்-அலம்)—தங்—தங்ஙாரம்; நொ—நொம்பலம்(ரம்).

155. பஹுலம் ப்ரக்ரியா கார்யம்
கராதேஶாதி சொன்னது.

இங்கு கூறப்பட்ட இருபது தொழிற்பெயர் விகுதிகளை அடிச் சொல்லோடு சேர்க்கும்போது பல மாற்றங்களும் வேண்டிவரும். அவற்றை வரையறை செய்வது கடினமாகும். முன் ஒற்றின் ஒரின மாதல், அண்ண ஒலித்திரிபு, காரிதங்களில ககரம், பகரம முதலியன தோன்றல் முதலியவை இங்கு பெரும்பாலும் தகுதிகளேற்பச் செய்யப் படவேண்டும். விதிக்கப்படாத சில சிறப்பு நிலைகளும் சிலவிடத்தில் காணப்படலாம்.

முழங் + அம் = முழக்கம் (வல்லினமாகத் திரிதலும் இரட்டலும்)
கோண் + அம் = கோடடம (,, ,,)
கா + அல் = காவல் (புணர்ச்சி நிலையில் வா தோன்றல்)
கர + தல் = கரச்சல் (இரட்டலும் அண்ண ஒலித்திரிபும்).

156. (அ)[1] ம நிஷேத ப்ரக்ருதியில்;
(ஆ) அல் கொள்ளாம் மிக்க திக்கிலும்;
(இ) ப்பு சேரும் காரிதங்களுக்கு;
(ஈ) ச ரேப ல ள ழங்களில்.

இருபது உருபுகள் கணக்கிடப்பட்டனவே ஒழிய இன்ன அடிச் சொல்லிற்கு இன்ன உருபு என கூறப்படவில்லை. கூறுவது அவ் வளவு எளிதுமன்று. எனினும் வழிகாட்டலுக்கு வேண்டி சில நிய மங்கள் இந்நூற்பாவில் கொடுக்கப்பட்டிருகின்றன. எதிர்மறை அடிச்சொல்லோடு மாவிகுதி வரும். எந்த அடிச்சொல்லோடும் 'ஆ' சேர்த்து எதிர்மறைப் பகுதி ஆக்கிவிட்டு நேராக அதனோடு 'ம' என்ப தைச் சேர்ததால் தொழிற்பெயர் வடிவமாகும். ''அல்'' விகுதியை பெரும்பான்மை அடிசசொல்லோடும் சேர்க்கலாம். வேறு ஒரு விகுதி யும் பொருந்தவில்லை என்றால் எந்த அடிச்சொல்லோடும் இதனைச் சேர்க்கலாம். தமிழிலும் முகியமான தொழிற்பெயர் விகுதி இதுவே. 'ப்பு' என்பது மிகுதியும் காரிதங்களில் பயன்படும். குற்றியலுகரமே இங்கு உருபு. அதனோடு சேரும்போது காரிதங்களோடு 'ப்பு' ஆகிய இடைநிலை வருகின்றது என இங்கு மாற்றம் கூறலாம். அங்க வடிவமே தொழிற்பெயராக இருக்கின்றது என்ற உத்தியையும் கொள் ளலாம். இதனைப் போன்றே வேறு இடங்களிலும உள்ள மாற்றங்களை ஊகித்துக்கொள்க. பெரும்பாலும ர, ல, ள, ழ என்ற எழுததுக்களை இறுதியில் கொண்ட அடிச்சொற்களோடு ச விகுதி வரும்.

1 A, B, C, D ஆகியன முறையே அ, ஆ, இ, ா என எழுதப்பட்டிருக்கின்றன.

(அ) ம—இல்லா: இல்லாய்ம; வல்ல—வல்லாய்ம; அருது—அருதாய்ம; வரா—வராய்ம; கொள்—கொள்ளாய்ம.

(ஆ) அல்: தோன்னு—தோன்னல்; போற்—போறல்.

(இ) ப்பு: இரி—இரிப்பு; தே—தேப்பு; நில்—நில்ப்பு.

(ஈ) ச: தளர்—தளர்ச்ச; கவர்—கவர்ச்ச; உணர்—உணர்ச்ச; வளர்—வளர்ச்ச; அகல்—அகல்ச்ச; நிகல்—நிகல்ச்ச; அனல்—அனல்ச்ச; விரள்—விரள்ச்ச; உருள்—உருள்ச்ச (உருளிசச); தாள்—தாழ்ச; வேள்—வேழ்ச; காண்—காழ்ச; வீள்—வீழ்ச.

157. த்வித்வம் கரத்வவும் சேர்ந்நிட்டு
அம் பற்றும் ஙாந்த தாதுவில்.

இரட்டல் வல்லினததிரிபு ஆகியவற்ரோடு 'அம்' உருபையும் ஙகர இறுதி அடிச்சொற்களுக்குக் கொள்ளவேண்டும். எ-டு:

பிணங்—பிணக்கம். இணங்—இணக்கம்.
அடங்—அடக்கம். உறங்—உறக்கம்.

158. தாது ரூபம் சிலேடத்து
போரும் க்ருத்துகள் ரண்டிலும்.

தொழிற்பெயர் காரகப் பெயர் ஆகிய இருவகைப் பெயர்களுக்கும் சில சமயத்தில் அடிச்சொல் உருவமே போதியதாகும். உருபின் தேவையில்லை. தொழிற்பெயருக்கு எடுத்துக்காட்டு.

களி, குளி, வித, பொடி, நோவு, வேவு, பணி, வீளம்பு.

காரகத்திற்கு எடுத்துகாட்டு. வள, பிடி, உருள், சுருள், உருக்கு.

159. சிலேடத்து உபதாதீர்கம்,
விஶேஷ ப்ரத்யயங்ஙளும்.

வேறு சிலவிடங்களில் ஈற்றயல் நீட்டல் காணப்படும். ''உபத'' எனில் உபாந்த்யம்=ஈற்றயல் எழுதது". வேறு சிலவிடங்களில் முன் எண்ணப்பட்ட 20 விகுதிகளோத்தவிர, சிறப்பு விகுதிகளும் காணப்படும். எ-டு:

ஈற்றயல் நீட்சிக்கு: பெட்-பட்-பாடு"; தின்-தீனு; உண்-ஊண்; சுடு"-சூடு"; கெடு-கேடு" எறு-ஏறு; பொரு-போரு; நடு-நாடு".

வேறு விகுதிகள்: புது-புத்தன்; ஒடுங்-ஒடுவு; மிக்-மிச்சம்.

160. ரூபத்திஞெத்து பொருளும்
அல்பால்பம் மாறி வந்நிடும்.

தொழிற்பெயர்களைக் கூர்ந்து நோக்கும்போது பொருள் ஒன்றே எனினும், ஒவ்வொரு விகுதிக்கும் ஒவ்வொரு சிறப்பு உபயோகம் வந்திருப்பதனால் உருவ வேறுபாட்டின் தொடர்ச்சியாகப் பொருள் வேறுபாடும் காணப்படும். ஒரே அடிச்சொல்லிலேயே விகுதிகளில் ஒவ்வொன்றை மாறிமாறிச் சேர்த்தால் பொருளும் மாறிவிடும் என்பது கருத்து. எ-டு:

தீர் = தீர்ச்ச, தீர்வ, தீருவ, தீர்ப்பு, தீருமானம், தீர்வு.
பகர் = பகர்ப்பு, பகர்ச்ச, பகரம். வேள் = வேள்ச்ச, வேளி.

12. காரகப்பெயர்கள்

காரகப்பெயர்கள் வினையை விசேடணமாக்கி, முகியத்துவத்தைக குறைத்து அவ்வினை எய்துவதில் காரண பூதங்களாகிய காரகங்களில் ஒன்றை விசேடியமாக்கி முக்கியப் போக்கில் காட்டுகின்றன. காரகங்களில் முக்கியமானது கருத்தாவாதலாலும், ஏனைய காரகங்களையெல்லாம் குறிப்புக்குததகக கருத்தா ஆக்க முடிவதாலும் கருத்தாவாகிய ஒன்று மாத்திரமே காரகப்பெயரின் பொருளையுடையது என வாதிக்கலாம். எனினும் எளிமைகாக எல்லாக் காரகங்களின் பொருளிலும் காரகப்பெயர் வருகின்றதென இங்கு அங்கீகரிகக்பட்டுள்ளது.

161; அகாரம்தான் இகாரம்தான்
குறி காரகக்குத்தினு.

காரகப்பெயரில் அ, இ ஆகிய இரண்டு விதிகள் வரும். அவற்றையும் வசதிக்கேற்பச் சேர்க்கவேண்டும். மாற்றங்கள் அவ்வியநிலையில் செயயப்படும். எ-டு:

நொண-நொணய = நொணயன், நொணச்சி.
சதி-சதிய = சதியன் (வன்), சதிச்சி.
கோடு-கோட = கோடன் (ஆண், அஃறிணைச் சமம்)
உருள்-உருள = உருளன் (,,)
துவர்-துவர = துவரன் (,,)
தெண்டு-தெண்டி (,,)
மொண்டு-மொண்டி (,,)

இவை கருத்தாப் பொருளுடையவற்றிற்கு எடுத்துக்காட்டுகள். இனி செயப்படுபொருள் முதலியவற்றிற்கு எடுத்துக்காட்டுகள்.

அரி-அரிப்பன் (முதற்காரணத்தில்); அட-அடப்பன் (செயப்படு பொருளில்);

தாங்கு-கால்தாங்கி (இடப்பொருளில்).

இவ்வுருபு தொகையாகவே பெரிதும் காணப்படுகின்றது.

மரம சாடி	= மரத்தில் குதிக்கின்ற	பொருள்	ஆள்
காடோடி	= காட்டில் ஓடுகின்ற	,,	,,
மீன்கொல்லி	= மீனை கொல்கின்ற	,,	,,
காற்றுடி	= காற்றில் ஆடுகின்ற	,,	,,
வாயாடி	= வாய்கொண்டு ஆடுகின்ற	,,	,,
நிலம் தல்லி	= நிலத்தில் தல்லுகின்ற	,,	,,
பாக்குவெட்டி	= பாகினை வெட்டுகின்ற	,,	,,
தீ தோண்டி	= தீயைத்தோண்டுகின்ற	,,	,,
கழுவேறி	= கழுவில் ஏற்றவேண்டிய	,,	,,
அடிச்சுதளி	= அடித்துத் தெளிக்கின்ற	,,	,,
ஆனப்பாற்றி	= ஆனையைக் காக்கின்ற	,,	,,
நாணம்குணுங்கி	= நாணத்தால் அசைகின்ற	,,	,,

162. காரகார்த்தம் பலேடத்தும் காணிக்கும் க்ருதிக்ருத்துகள்.

தொழிற்பெயரின் உருவமும் காரகப்பெயரின் பொருளும் சேர்ந்த கலப்பு மரபிலும் வழங்கப்படுவதுண்டு. இது எல்லா மொழிகளின் இயல்பே. ''கருதபிஹிதோ பாவோ த்ரவ்யவத் ப்ரகாசதே'' என்ற சமஸ்கிருத விதியை நோக்குக. இலக்கண வளர்ச்சியால் உண்டாகும் பொருள் விரிவுகளே இவை என்றும் கருதலாம்.

4. பேதகச் சொல்லதிகாரம்[1]

தமிழ் இலக்கண ஆசிரியர்கள் பேதகச் சொற்களைத் தனிவகையாகக் கணிக்கவில்லை. அவர்களுடைய கொள்கையில் பேதகங்கள் பண்பைக் குறிக்கும் பெயர்களாகும். 'செமம, செறும'[2] எனப் பண்பைக குறிகும் பெயர்களாக அல்லாது, செம், செறு என வெறும் குளிவாசகமாகச் சொற்களில்லை என்பது அவர்களது வாதம். 'செங்கனல், செறுபயறு' முதலிய வழக்குகளில் செம்ம, செறும ஆகியவற்றின் "ம" என்ற விகுதி கெட்டிருக்கின்றது என அவர்கள் கொள்கின்றனர்.[3] ஒரு நிலையில் பார்த்தால் இந்த வாதத்தில் உததி இல்லாமலில்லை. செம், செறு முதலியவை பேதகப்பகுதிகளாகும். அவற்றை ஒரு பெயரின் முன்னுல தொகையாயன்றி வழங்கக்கூடாது. இங்கிலையில் சமஸ்கிருதத்திலுள்ள பொருள் விரிகக முடியாத தொகைகளின் முதனிலை மொழிகளுக்கு இவை சமமாகும். சுதந்திரமாய் வழங்குதற்கு முடியாத சொல் எவ்வாறு பதமாகும்? உருபுகளைவிட அவற்றிற்கு என்ன சிறப்பு உளது? செம்ம, செறும என்ற தன்மாத்திரத் தததிதம அவற்றினின்று உண்டாகின்றன. "தொகையில் முதனிலை மொழியாக நின்று ஒரு பண்பியைக குறிப்பதுண்டன்றே?" என வினவின், தொழிற்பெயர்களுக்கும இமமாதிரி வழக்கு வருவதுண்டு. எனவே அவற்றையும் "பேதகம்" எனக் கூறவேண்டிவரும் என்ற குறை வருகின்றது "நிறகுடம", "பொன்மல"[4] ஆகிய தொகைகளில் முதனிலை மொழிகள் முறையே விஜையும் பெயருமன்றே. அவை முதனிலை மொழியாக நின்று, பின்னிலை மொழியாகிய பெயரை விசேடிபபதைப் போன்றல்லாது, 'செங்கனல்', 'செறுபயறு' முதலியவைகளுக்கு என்ன வேறுபாடு உளது? "செவந்கனல், செறியபயறு என்பவைகளில் அவைகளுக்குச் சுதந்திர வழக்கும் உளதன்றே" என வினவின், அதற்கு வேறு அமைதி உளது. 'செவகங', 'செறிய'[5] என்பவை பெயரெச்ச வடிவங்களாகும. அதனுல் அவை விஜைகள் ஆகிவிட்டன.

ஆனுல் இவையெல்லாம் வெறும் முட்டுவாதங்களே. சுதந்திரமாயின் என்ன? பிறவற்றைச் சார்ந்துவரின் என்ன? செம், செறு முதலியவை குணிவாசகங்களல்லவா? சுதந்திர வழக்கு என்ற தகுதியைச் சொலலிலக்கணத்தில உட்படுத்தவேணடுமென்றுண்டா?

---

1. உரிச்சொல 2. செம்மை, சிறுமை. 3. ஈறுபோதல், நன்னூல்-136.
4. நிறைகுடம், பொன்மலை. 5. சிறிய-குறிப்புப பெயரெச்சம.

அன்றிச் சுதந்திர வடிவத்தைத் திட்டவட்டமாக நோககின், தொழிற் பெயர்களுக்கும வாக்கிய விரிவில் சுதந்திர வடிவம் உளதோ என வினவலாம். பெயரெச்ச வடிவில் வருவதால் செவந்ந, செறிய முதலி யவை ஒருக்காலும் விஜைகளாவதும் இல்லை. விஜைப்பகுதியாகிய அடிச்சொல்லோடு பெயரெச்சததில் சேர்க்கப்படும் உருபும், மாற்றங் களுமே பேதகப்பகுதிகளிலும சேர்க்கப்படுகின்றன என ஆகாதோ? வேண்டுமெனில் ஒருபடிகூடக கடந்து பெயரெசசமே விஜைகளினின்று பிறக்கின்ற பேதகமாகும் என எதிராக வாதிகக்லாம. உண்மையில் பெயரெசசம் பெயரை விசேடிககும் விஜையன்ரே. விசேடிப்பது குண வழி அன்றி விஜை வழியில் என்பது மாத்திரமே வேறுபாடு உளது. குணம என்ற அம்சததை பேதகத்தின் இலக்கணத்தில் கலப்பதன் தேவையுமிலலை. விசேடிபபது குணதத்திற்கோ, விஜைககோ தலைமை கொடுதது அமையலாம் என்பதே உளது. பண்பையும், விஜைகளையும் ஒன்ருகச் சேர்த்து உணரப்படுவதற்குத் ''தாமம'' என்ற சொல்லை வேண்டுமாயின் பயன்படுததவும் செய்யலாம். பெயரெசசம் பெயரிற் கும் விஜையெச்சம் விஜைக்கும ஆகும என்பதை உடன்பட்டே ஆக வேண்டும். விசேடணம் ஆகின்ற நிலையிலும் அவை தங்களுடைய விஜைததன்மையைத் துறபபதில்லை என்பதே வேறுபாடு. வேரொன் றிற்குக கீழடங்கிப் போயிற்று என்பதால், சொந்தத்தன்மையைவிட்டு விட வேண்டும என்பதில்லையன்ரே. பேரரசனுக்கு அடங்கிய சிற்றர சன், தனது நாட்டிற்கு அரசனேயன்ரே. அதனைப்போன்றே எச்ச விஜைகள் விசேடண வாககியத்தில் விஜைமுற்றுக்களே. பேரரசனை நோககும்போது சிற்றரசன் சுதந்திரமுடையவனல்லன் என்பதைப் போன்று, எச்சவிஜைகளும் பெரிய வாககியத்தில் பிறிதைச் சாராந்து வருபவையாகும. அதனால் சொல்வகைகளில் 'பேதகம்' என்ற வகை தேவையே.

163. பேதகத்தில் ப்ரக்ருதி தான்
நாமாதிக்கு விஶேஷணம்;
பேரெச்ச ரூபவும் கொள்ளாம்
தாதுவில் சொன்ன மட்டிலே,
வினயெச்சத்திலே ரூபம்
க்ரியாகுண விஶேஷணம்
அந்த்ய த்வித்வம் க்ஸீபரூபம்
இத்யாதிகளும் அங்ஙனெ.

பெயர் விசேடணம, விஜை விசேடணம், பண்புவிசேடணம் என மூன்றுவகைப் பேதகங்கள் வரலாமன்ரே. அவற்றுள் பகுதியே ஒவ்வொன்றிலும் விசேடணமாக நிறகும. தொழிற்பெயர்களுக்குக்

கூறியதைப் போன்று, உருவத்தோற்றம் கூறவேண்டிய தேவை யில்லை பகுதியின் நிலையிலே நிற்கும் காரணத்தால பெயர் விசேடண மாக வரும்போது விசேடியங்களாகிய பெயர்களினின்று பிரித்து வழங்குவது வழக்கமன்று; பிரித்து வழங்கவேண்டும் என்று குறிப்பிட் டால் பெயரெச்சம் படைத்தற்கு வினைகளில் சேர்க்கும் உருபும் மாற்றங் களுமே இவற்றோடும் சேர்க்கவேணடுமெ. சம நியாயப்படி வினையெச்சங் களுக்கு உள்ளவை வினைவிசேடணங்களுக்கும் அமையும். எச்சவினை களின் உருவ அமைப்புப் பொருந்துகின்ற இடத்தில் இறுதிமெய் இரட் டலும், பெயரெனில அதன் அஃறிணை ஒருமை வடிவம் ஆதலும் பேத கங்களைச் சுதந்திர வழக்கிற்குத் தகுதி உடையனவாக ஆக்கும். எ-டு:

செறு: செறுபயறு — பகுதிவடிவம்-தொகையாகப்-
பெயர்விசேடணம்

செறிய: செறிய மரர்— பெயரெச்சம்—சுதந்திரமாக ,,

செற்று: முகம் செற்று வியர்த்து—
இறுதியிரட்டல் ,, வினைவிசேடணம்

செறுது: முகம செறுது வியாதது—
அஃறிணை வடிவம் ,, ,,

மெல்: மெல்லெ—முகம மெல்லெ வியர்த்து } நடுவினை யெச்சம் ,, ,,

ஒட்டு: (1) ஒட்டுநேரம்: பெயர்விசேடணம்
(2) ஒட்டு நன்னு: குணவிசேடணம்
(3) ஒட்டு பலிச்ச காரியம்: வினைவிசேடணம்

164. ஆய-ஆயி-கள் கூடாதெ
யோஜிக்கில்ல விபாவகம்.

முன்னைய நூற்பாவில பேதகங்களின் வகைகளாகிய தனிநிலை யின, பெயரெசசவடிவினெ, வினையெச்சவடிவின ஆகியவை குறித்துக் கூறப்பட்டது. இநநூற்பா ''விபாவகம்'' என்ற வகைபற்றி நுவல் கின்றது. விபாவக (பண்பு) பேதகம் பால் வேறுபாட்டையும் காட்டுவ தால் அது ஒருவாறு பெயரை ஒத்ததாகும். இலகுகண நோக்கில் விபாவகம் பெயரின் வகை வேறுபாடு ஆகவேண்டும். குணவழிப் பெயர்களையும வினைகளையும வேறுபடுத்துவதால் பேதக இலகுகணத் தில் பொருளை ஒட்டி இது அதனுள் அடங்குகின்றது. தனிவடிவின வற்றிற்கு எந்த அளவு பிற சார்பு உளதோ அந்த அளவிற்கு விபாவ கத்திற்குச் சுதந்திரம் உண்டு. இசசுதந்திரம் காரணமாக அது விசேடி யதோடு நேராகப் பொருந்துவதில்லை. அதனால் ''ஆவுக'' என்ற அடிச்சொல்லின் எச்சவினைகளாகிய ஆய, ஆயி ஆகியவற்றின் உதவி

இதற்குத் தேவைப்படுகின்றது. பெயரை விசேடிக்கும்போது ''ஆய'' என்ற பெயரெச்சமும், பண்பு, வினை ஆகியவற்றை விசேடிக்கும்போது ''ஆயி'' என்ற வினையெச்சமும் இடையில் வழங்கவேண்டும். எ-டு:

கேமமாய ஸத்ய —பெயரை விசேடித்தல்
ஸத்ய கேமமாயி, நடந்து —வினை விசேடணம்
ஸுகமாய உறக்கம் —பெயரை விசேடித்தல்
உறக்கம் ஸுகமாயி வருந்து—வினை விசேடணம்

165. ஸாங்க்யம் முறய்க்கு ஒரு இரு மு
நால் ஐ அறு எழு எண்பது.

எணணுப் பேதகங்கள் முறையே இந்நூற்பாவில் பரிகணிக்கப் படுகின்றன

1. ஒரு	3. மு	5. ஐ	7. எழு	10. பது
2. இரு	4. நால்	6. அறு	8. எண்	

எ-டு: ஒரு குதிர, முக்கண்ணன், ஐயம்பன், எழுபது, பது(இன்) ஆயிரம்
இருபாகம், நாலுதிகுகள், அறுநூறு, எண்திசை

பொருள்முடிவைக் குறிப்பாய் உணர்த்தும் மெல்லினமாதல், கு, டு, து, று ஆகிய உருபுகள் சேர்தல், இறுதி இரட்டல் முதலிய மாற்றங் களால் இநத எண்ணுப் பேதகங்கள் எண்ணுப்பெயர்கள் ஆகின்றன. எ-டு:

ஒரு: ஒன்று = ஒன்று = ஒன்னு மெல்லினமாதல்
இரு: இர் + அன் + து = இரண்டு = ரண்டு ,, ,, து உருபு.
மு: மூறு = மூறு = மூன்று = மூன்னு ,, ,, து உருபு.
நால்: நால் + கு(லகரததிற்கு மெல்லெ-
முதது) = நாங்கு ,, ,, கு உருபு.
ஐ: ஐந்து = ஐஞ்சு = அஞ்சு மெல்லின-
மாதலும் து உருபும்.
அறு: (நீட்டல்) ஆறு
எழு: (நீட்டல்) ஏழு
எண்: எட்டு
பது: (இரட்டல்) பதது.

''இரு'' என்பதன் இறுதி உகரம் குற்றியலுகரமாகும். அதனால் சொல் லின் வடிவம் ''இர்'' என்பதே. ஒரு மாத்திரை உள்ளதாகச் சொல் அமையகூடாது என்ற கொள்கைபடி அதில் குற்றியலுகரம சேர்க் கப்படுகின்றது. இப்பயனை வரவழைப்பதற்கு முதலுயிரை நீட்டினும்

அமையும். அதனுல் ''ஈர்'' எனவும் வடிவம் உளது. அறு. எழு என்பவற்றை நோகுகும்போது 'மு' என்பது 'மூரு' எனவே ஆயிருக்க வேண்டுமென ஊகிப்பதற்கு வழியுளது கன்னடத்திலுள்ள உருவ மும் அவ்வாறே தமிழ் மலையாள மொழிகளில் ''ரு'' என்பது கெடுத லால் இல்லாது போயிருக்கும். ''நாகு'' என்ற சரியான பெயர் வடி வதை மலையாளத்தில் ''பதினுங்கு'' என்ற எண்ணுப் பெயரிலும ''இரு நாங்கு எட்டு'' முதலிய எண்சுவடிகளிலும் மாத்திரமே வழங்கு வதுண்டு. ஏனைய இடங்களில் ''நால்'' என்ற பேதக வடிவமே வழங்கி வந்துளது. ஐம்பது, ஐஞ்ஞூறு முதலியவற்றில் பேதக வடிவ நிலையிலும் மெல்லெழுத்து தோன்றி அமைகின்றது. ஐந்து என்ற தமிழ் வடிவத்தின் ஐகாரம், அஞ்சு என்பதிலேயே அகரமாகத் திரிந்த தால் அன்பது, அஞ்ஞூறு என எழுத்தில் நிலைமாறிப் போயிற்று. ''தொண்ணூறு'', ''தொள்ளாயிரம்'' ஆகிய இரண்டு பெயர்களின் சாயையை நோக்குமபோது ஒன்பது என்பது 'தொண்பது' ஆக இருகவேண்டுமென்பது தெளிவாகின்றது. தெலுங்கில் ''தொம்மிதி'' எனத் தகரம் முதலில் காணப்படுகின்றது. ''தொள்'' என்ற பகுதிகு ''முன்'' என்பது பொருள். ஆகவே பதத்தின் முன்னர் உளளது = தொண்பது(= ஒன்பது) எனப் பொருளும் பொருந்துகின்றது. 'பது' என்பது ஈறு இரட்டலால் எளிதில் ''பத்து'' ஆகிவிடுகின்றது. பதினென்னு, பதிமூன்று, பதின்னலு முதலியவைகளில் இன் என்ற அங்கத் திருத்தம் (சாரியை) வருகின்றது. இருபது, முப்பது முதலிய வைகளில், தொகையால் சொல் பெருகுவதால் ''இருபத்து'' என்ற இறுதியிரட்டலின் தேவையில்லை. பந்தரண்டில் ''பது'' என்பதற்குப் பதில் 'பந்து' என்பது பகுதி. இது ''இருபானேழ்'' (27) எனச் செந்தமிழில் காணப்படுகின்ற ''பான்'' என்பதில் பலத்திற்காக தகரம் சேர்த்துப் படைக்கப்பட்டதாகவிருகவேண்டும். இதன் தமிழ வடி வமே ''பந்திரண்டு''[1] என்பதன்றே.

ஒன்னு (லத்தீன்—உனஸ்), அஞ்சு (சமஸ்கிருதம்—பஞ்ச), எட்டு (சமஸ்கிருதம்—அஷ்ட), பதது (சமஸ்கிருதம்—பங்கதி) ஆகிய பெயர்களுகு ஆரியமொழிச் சொற்களோடு ஒப்புமை காணப்படுகிறது. அதனுல் இச்சொறகளை ஒன்று மற்றென்றிலிருந்து கடன் வாங்கப் பட்டவையெனப பலரும ஐயுற்றதுண்டு. வறியவன் செலவனிட மிருந்தன்றே கடன் வாங்குவது வழககம். ஆகவே திராவிடமொழிகள் ஆரியமொழிகளினின்று கடன் வாங்கின என எய்தவேண்டும். ஆனல் இக்கருத்தை வேண்டுமளவுகு விசாரணை செய்துவிட்டு, ஒலி

1 பதது என்பதன மெலித்தல் விகாரம்.

ஒற்றுமை காணப்படுவது வெறும் தற்செயலே என டாக்டர் கால்டு வெல முடிவு செய்துள்ளார். ''பதிரண்டு'' என்ற மலையாள வடிவத் தில் ''பங்கதி'' என்பது தெளிவாகக காணப்படுவதுண்டு எனக குண்டர்ட்டு வன்மையாக வாதிடுகின்றார். ஆனால் கடனக வாங்கி னால், இந்தோ-ஐரோப்பிய மொழிகளுகுப் பொதுவாயுள்ள ''தம்'' என்ற சொல்லை விட்டுவிட்டு அதிகம் பரவாத ''பங்க்தி'' என்ற சொல்லைக் கடன் கொண்ட காரணம் எது என்பது தெளிவாகவில்லை. சமஸ்கிருதத்தில் விம்ஸதி, ஸப்ததி, நவதி முதலியவைகளிலுள்ள ''தி'' என்பது ''பங்க்தி'' என்பதன் மிச்சம் என நிறுவுவதெனில் குண்டர்ட்டின் கருத்துக்கு ஆற்றல் மிகும். ஆயிரம முதல மேலுள்ள கூடிய எண்ணிகைகளின் பெயர்கள் சமஸ்கிருததிலிருந்து திரா விடர்கள் கொண்டவையே என்பதில் யாருகும் எதிர்கருதது இல்லை. ''ஸகஸ்ரம'' உரசொலியை இழப்பதால் எளிதில் ஆயிரமாகும. கன்ன டத்தில் ''ஸாவிர'' என ஸகரததோடே இப்பெயர் ஒலிகின்றது. லட்சம், கோடி ஆகியவை தற்சமங்களே.

சரியான எண்ணுப் பேதகங்கள் தொகையாகவே வழங்கப்படு கின்றன. வாக்கியததில் எண்ணுப்பெயர்கள் பேதகமாக உபயோகப் பட்டு வருகின்றன. ''ஒரு'' என்பதற்கு மாததிரம வாககியத்திலும் உபயோகம் உளது. ''ஒன்னு'' என்பதை ஒருகாலும் பேதகமாக வழங்குவதில்லை. ''ஆம்'' என்ற சில எதிர்காலப் பெயரெச்சத்தைச் சேர்ப்பதால் எணணுப பெயர்களிலிருந்து பூரணிகள் உண்டாவது தததித இயலில் விரிததுரைகபபட்டுளது.

166. விபக்த்யாபாஸ ரூபங்ஙள்
எல்லாம் தான் பேதங்ஙளாம்.

வேற்றுமைப்போலி வடிவங்களைப் பெயர்ச் சொற்களாகிய பேதகங்களாகக கணிக்கலாம். முதல் வேற்றுமை ஒழிந்த வேற்றுமை களெல்லாம் வினையையோ பெயரையோ விசேடிக்கின்றன. எனினும் வேற்றுமைகள் பெயர் வடிவங்கள் எனவே படும். வேற்றுமைப் போலியோ வேற்றுமையைப் போன்று முழுமை பெருததால் அவற் றைப் பெயர் வடிவங்களாகக் கருத வகையில்லை. எ-டு:

அன்னு, இன்னு, அங்ஙு, இங்ஙு, அவிடெ, இவிடெ
(வினையைவிசேடிப்பன)
காட்டிலெ, வீட்டிலெ, அத்ற, இத்ற (பெயரை விசேடிப்பன)

5. இடைச்சொல்லதிகாரம்

வாசகசசொற்களாகிய பெயர், வினை, உரி ஆகியவை தனித் தனியாக விளக்கப்பட்டுவிட்டன. இனி இடைச்சொற்களாகிய நிபாத அவ்வியங்களைப் பற்றிச் சிந்திப்போம். இடைச்சொற்களுக்கு உருவ வேறுபாடுகள் இல்லாததால், அவை குறிதது மிகுதியாக விளகக வேண்டுவதில்லை

பண்டைக் காலத்தில் பெயர், வினை, உரி என மூன்றுவகை வாசகச்சொற்களோடு, நிபாதம் என்ற இடைச்சொல் மட்டுமே மலையாளத்தில் அமைந்திருந்தன. பின்னர் பல புதிய தொடர்புச் சிறப்புக்களையும் காட்டவேண்டி வந்தபோது, பெயர், வினைவடிவங்களில் சில இடைச்சொற்களாக வழங்கத தொடங்கப்பட்டன. இவ்வாறு அவை அவ்வியங்களாகிவிட்டன. அதனால் சில பெயர் வடிவங்களும் வினை வடிவங்களும் இரண்டுவிதத்திலும்[1] வழங்கபபடுவதைக காணகிறோம். ''விவரம் குறிச்சு வெய்கநுன்னு''[2] என்பதில் ''குறிச்சு'' என்பது ''குறித்தல்'' என்ற வினையின் முன்வினையெச்ச வடிவமாயிருக்க, 'ஆ சங்கதியெக் குறிச்சு எனக்கறிவில்ல' என்ற வாக்கியத்தில் ''குறிச்சு'' என்பது இடைச்சொல் ஆதலால் அவ்வியமாக அமைந்து விடுகின்றது. அவ்வியத்திற்கும் நிபாததிற்கும் செய்கை ஒன்றேயாதலால் அவற்றின் வகைகளும் ஒததனவே. நிபாதமாகினும், அவ்வியம் ஆகினும், அவற்றைக் கதி,[3] கடகம்,[4] தனி உருபுடையன, கேவலம் எனப் பகுக்கலாம்.

பெயருக்கும் வினைக்குமன்றே உருவ வேறுபாடுகள் உள்ளன. இவை இரண்டிற்குமுள்ள வாச்சியப்பொருளைவிட்டு, இடைச்சொல்லாகச் சிதைவதால் அவ்வியங்களில் அவை சேர்க்கப்படுகின்றன. அவற்றின் பொது இலக்கணங்களை முடிந்த அளவுக்கு வகுகக முயல்வோம்.

167. *என் நிரூபகமாம் தாது,*
ஸம்பத்திக்ரிய யாவுக;
இவ ரண்டின் பற்றுவின
ரூபம் அவ்யயமாய் வரும்.

---

1 பெயர், வினையாகவும் இடைசசொலலாகவும

2 விவரம் குறித்து வைத்தல்

3 கதி – எள், ஆகினற வினையடி இடைச்சொற்கள.

4 கடகம் – 'உம்' போன்று இணைப்பவை.

'என்' என்ற சிதைவுற்ற அடிச்சொல்லிற்கு ஒரு பொருள் அல்லது காரியத்தின் சுயவடிவத்தை நிரூபணம் செய்த பொருள் உள தாதலால் அதற்கு நிரூபகவினை என்று பெயர். அதனைப் போன்ற ஒன்று ஒருவிதமாய் அமைகின்றது என்று காட்டுகின்ற ''ஆதல்'' என்ற அடிச்சொல்லிற்கு ''சம்பத்திவினை'' என்று பெயர். இவை இரண்டின் எச்சவினைகளில் அதாவது பெயரெச்ச வினையெச்சங்களில் உள்ள பெரும்பான்மை வடிவங்களும் அவ்வியங்களாக வருபவை. இவற்றுள் பெயரெச்ச வடிவங்கள் 'கதிகள்'' என்ற வகையிலும் வினை யெச்ச வடிவங்கள் ''கடகம்'' என்ற வகையிலும் படும்.

என்—என்ன, என்னு, எனெ, எங்கில, என்ஞல்.
ஆ —ஆய, ஆகுன்ன, ஆகும, ஆம, ஆயி, ஆயிட்டு, ஆய், ஆகெ, ஆகில், ஆயால்.

இவற்றுள் ''எனெ'' (தன்வினையெச்சம) விலங்ஙனெ, பதுக கனெ முதலியவைகளில் அரிதாய் வழங்கும்

168. வினையெச்சம் துஷிச்சுள்ளோர்
அவ்யம் கதி மிக்கதும்.

''கதிகள்'' என்ற வகையில் பெரும்பான்மையும் வினையெச்சம் சிதைந்து உண்டாயினவாதலால் அவ்வியமாக இருகும்.

முன்வினையெச்சம்: கொண்டு, குறிச்சு, பற்றி—முதலியன.
கட்டளை ,, காணில், காட்டில், காயில்—முதலியன.
தன்வினை ,, வரெ, காணெ —முதலியன.

இடைசசொற்கள் எண்ணிகையில் மிகவும் குறைந்தவை. முகியமானவை கீழ்காட்டப்பட்டுள்ளன.

1. உம்: எண்ணிடைச்சொல்—எண், முன் அறிவரையறை முதலியன பொருள்.
2. ஓ: விகல்ப இடைச்சொல்—விகற்பம், விஞ ,, ,,
3. ஏ: அவதாரண ,, —தோற்றம், பிரிநிலை, வினி, பிர காரம், மார்க்கம் முதலியன பொருள்.
4. ஆ: அதா, இதா என்பவற்றில் காணப்படுகின்றது— சுட்டுபபொருள்.
5. ஆன்: ஆரான், எந்துவான் என்பவற்றில் காணப் படுகின்றது—முன் அறிவரையறை.
6 ஈ: 'அல்லீ'* என்பதில் காணப்படுகின்றது—அலங்காரமா கிய வினுப்பொருள்.

* அலலே (அலலவா) எனபதன இனனொரு வடிவம்

இவற்றுள் ஆ, ஈ, உம் ஆகியவை சுட்டெழுத்துக்களினின்று பிறந்தவை என ஊகிக்கலாம். ஆல் "ஆயில்" (=ஆகில்) என்ற பழைய கட்டளை வினையெச்சத்தின் விகற்ப வடிவமாகலாம்.

இடைச்சொற்களின் பொருள்வகைகளும், வழக்கு மாறுபாடுகளும் இலக்கணத்தில் கூறவேண்டிய செய்திகள் அல்ல. எனினும் சமுச்சய விகற்பங்களைப் பற்றிச் சிறிது கூறவேண்டியதுளது.

169. சமுச்சய விகல்பங்ஙள்.
ஸஜாதீயத்தினே வரூ.

எண்ணிடைச்சொல்லாவது 'உம்' என்பது; விகற்ப இடைச்சொல் 'ஒ' என்பது. இவையிரண்டும ஒரே இனததிலும[1] ஒரே காரகம் முதலிய தொடர்பிலுமே உளள சொற்களே மாததிரம ஒன்றுக இணைகுமு; வேறுபடுததவும் செய்யுமு. எ-டு:

ராமனும் க்ருஷ்ணனும் கோவிந்தனும் மற்றும் வந்து.
செறுப்பகாரனும் மிடுககனும் ஆய ராமன்
"ராமன் ராவிலெ எழுந்நேலகயும, பள்ளிக்கூடத்தில் ஸமயத்தினெத்துகயும், ஶ்ரததிச்சு படிகயும செய்யுன்னு"

வேறொரு தனி எடுததுகாட்டு: "லேலத்தில் விளி கேள்ககுன்னதினு மனஸ்ஸுள்ள ஆளுகள் அவதி திவஸம ஹாஜராயிக் கொளளுவானுள்ளதும், ஈய்யமண்ணினெ விலக்கு வாங்ஙிகுன்னவர் அதினெ .. ராஜபோகம் கொடுத்து கொண்டு போகுவானுள்ளதாகயால் ஆ விவரவும் இதிஞல் பரஸ்யம் செய்திரிசகுன்னு." திரு கஸெட். பக். 1683—தனு—6—69

இதனில் "கொள்ளுவானுள்ளது" என்பதும, 'ஆ விவரம்' என்பதும ஒரினமல்லாததனுல் அவற்றை "உம்" என்பதால் சமுச்சயம் செய்தது சரியன்று. இவ்வாக்கியததை இருமுறைகளில் திருததலாம்:

(1) மனஸ்ஸுள்ள ஆளுகள் அவதி திவஸம ஹாஜராயிக கொள்ளேண்டதாணென்னும்.....கொண்டுபோகுவானுள்ளதாணென்னும் (உள்ள) விவரம் இதிஞல் பரஸ்யம் செய்திரிக்குன்னு.

(2) மனஸ்ஸுள்ளவர்..... ஹாஜராயிக்கொள்ளுவானுள்ளதும் ஈய்யமண்ணினெ .. ..கொண்டுபோகுவானுள்ளதும் ஆகயால் விவரம் இதிஞல் பரஸ்யம செய்திரிகுன்னு.

இத்தகைய அன்வயமில்லாத வாக்கியங்கள் அரசாங்க எழுத்துக்களிலும் மற்றும் சிறிதும் அருகியவையல்ல. எவ்வளவுதாண்

1 எண் என்ரு உறழ என்ரு ஆயிரண்டும் இனன் ஒன்றல் வேண்டும் என்பது இலக்கணம் (தொல், சொல்-சேனா: 45.)

கலப்புக்கள் இருந்தாலும், ஒரு செய்தியை ஒரு வாக்கியத்திலேயே விவரித்தால் தான் திறமையுள்ளது என்ற மயக்கத்தால் அரசாங்கம் இவ்விதம் தொடர்பற்ற வாக்கியங்களை எழுதிச் சேர்க்கின்றது. ஒன்றுக்கொன்று பொருந்தாத பல தரத்திலுள்ள வாககியத் துண்டுகளை நெருககிததைத்துப் படைக்கின்ற பெரிய வாக்கியங்கள் கோமாளியின் குப்பாயத்தைப்போன்று விசித்திரமாகவிருக்கும் என்பதில் ஐயமில்லை. அதனுல் ஒரின எண்ணுதலைக்கூட இரண்டு மூன்று போகுகுகளில் ஒரே வாககியததில் வழங்கலும் அழகற்றதே எ-டு:

> அங்ஙனெ ஹாஜராகுன்ன ஆளுகள் லேலததில் சேர்ந்து விளி கேள்க்குன்னதினு மும்பு பேரொன்னினு 15 ரூபாவீதம் ரெடி மணி (i) கெட்டி வய்க்கயும் லேலம் ஸ்திரப்பெட்டு கூடும்போள் நாலிலொரு பாகம் (1) உடனேயும் ஶேஷம ஒரு (2) வாரத்தினக வும் ஒடுக்கி ஸாமானம் கைவஶப்பெடுத்திக் (ii) கொண்டுபோக யும் (அ) செய்யேண்டதும் லேலம் விளிகேள்க்காத்த ஆளுக ளுடெ ரெடிமணி உடன் திரிகெ (ஆ) கொடுககுன்னது மாகுன்னு. தி க [1] பக். 1673. தனு. 6-69.

இவ்வாககியத்தில் ஆங்காங்கு எண்ணிக்கையிட்டுக காட்டிய படி மூன்றுவிதத் துணைவாக்கியங்களை சமுச்சயப்படுததுதற்கு ''உம்'' பயன்படுதத்பட்டுளது. இம்மாதிரி வாக்கியங்களை அன்வயப்படுத்து வதில் ஆங்கிலம், சமஸ்கிருதம முதலிய மொழிகளில் பயிற்சியுள்ள மலையாளிகளுக்கே எநத அளவுககு இடையூறு நேரிடுகின்றது என்ப தற்கு அனுபவமே சாட்சியாகும். எவ்வளவுதான் தடைகோர்த்தாலும் இதனைச் சிறிது வேறுபடுத்தாது பொருளுடையதாகுவது அரிது. கீழ்ககாட்டப்படும முறையில் துண்டிததால் வாககியம் சரியாயிருககும்:

> அங்ஙனெ ஹாஜராகுன்ன ஆளுகள்.. ரெடிமணி கெட்டிவய்க் கேண்டதும், லேலம் ஸ்திரப்பெட்டு கூடும்போள்.. ஸாமானம் கைவஶப்பெடுத்திக்கொண்டு போகேண்டதுமாகுன்னு. லேலம் விளி.. கொடுக்கப்பெடுகயும் செய்யும்.

சமுச்சயப்படுத்தவேண்டிய சொற்களை வகைப்படுத்த, ஒவ் வொன்றிலும் சமமாகிய வாக்கியப் பகுதிகளைச் சேர்த்து, ஒவ்வொரு சுதந்திர வாக்கியமாககி அமைககும்போது, பொருந்தி வந்தால் ''உம்'' என்பதன் வழககு சரியானது என நிச்சயிக்கலாம். ''ஓ'' என்ற விகற் பப் பொருளுள்ள இடைச்சொல்லின் வழககிலும் இவ்வாறே ஊகித்துக் கொள்க.

---

1 திருவிதாங்கூர் கெஸட்.

6. தொடர்மொழியதிகாரம்

1. வாக்கிய இயல்

தாணை-மகள் தொடர்பு போன்று விணைக்குக காரகங்களோடும் காரகங்களுகு வினையோடும், விசேடியத்திற்கு விசேடணதோடும், விசேடணத்திற்கு விசேடியததோடும, கதிககு வேற்றுமையோடும், வேற்றுமைக்குக் கதியோடும் உள்ள வேறுபிரிகக முடியாத தொடர் பிற்கு ''ஆகாமக்ஷி'' என்று பெயர். பொருள் நோக்கிற்கெல்லாம முழுமை வரும் விதத்தில் சேர்த்து ஒரு செய்தியை முழுமையாகசி விவ ரிக்கும் சொற்கூட்டமே வாக்கியம். வாகசியதிற்கு எழுவாய், பய னிலை என இரு தளங்களைக் கொள்ளலாம். நானுவகைப்பட்ட பல சொற்களைக்கொண்டு இயற்றிப் படைக்கும் ஒரு வாகசியத்தைப் பிரித்து நோக்கினால் முழு அடிப்படையாக இரண்டு பாகங்கள் காணப் படுகின்றன. (1) நாம் எதனைபபற்றிப பேசுகின்றோமோ அப்பொருள். இவ்வாறுள்ள ஒரு பொருள் உலகத்து உண்டோ இலலையோ என்ப தில் நமககு விவாதம் இலலை. இது எய்தியதே என ஏற்றுகொண்டு அதன்மேல் விசாரணை செய்வதே சொல்பவனின் கருத்து. அவ்வாறு விசாரணை செய்வதற்குச் சங்கற்பிக்கப்பட்டதாகிய அது கூறு பவனால் அனுவதிகசப்படுகின்றது (எடுததுககாட்டப்படுகின்றது). (2) அப்பொருளைபபறறி நாம எதைக கூறுகின்றோமோ அக்கருத்து. இகசருததே கூறுபவனுககு வாகசியததை வழஙகலவழி சாதிகக வேண்டுவது. இதனால் கூறுபவன் கேட்பவனுககு உண்மையில் முன் அறியப்படாததோ, அவ்வாறே எனக கற்பிக்கபபட்டதோ ஆகிய ஒரு சங்கதியின் தொடர்பு அப்பொருளில் குறிக்கப்படுகின்றது. இவ்வாறு எழும் இரு பாகங்களில் முதலிலுள்ளது எழுவாய். இரண்டாவதுள ளது பயனிலை. இவை சேர்வதால் வாக்கியம் அமைகின்றது. எ-டு:

(1) விவாஹம் கழிஞ்ஞு நகரத்திலேக்கு மடங்ஙி வநு ராமன்.
(2) அச்சன்றெ நியோகததால் வனவாஸததினு போயி.

இங்கு நாம் பேசுவது இராமனைக குறிதது. அவ்வாறு ஒருவன் உளன் என ஏற்றுகொண்டு, ''வனததிற்குச் சென்றான்'' என்ற அவன் செய்த செயலைக் குறிப்பதற்கு இவ்வாக்கியம் வழங்கப்படுகின்றது. இச்செய்தி கேட்பவனுக்கு முன் அறியப்படாமலே அது இராமனின் செயல் ஆக விதிக்கப்படுகின்றது. இதனால் இவவாகசியத்தில் (1)

என்ற அடையாளமிட்ட பகுதி எழுவாய். (2) என்ற எண்ணமிட்ட பகுதி பயனிலை எனத் தெளிவாகின்றது.

இவ்வாறு வாக்கியங்களின் அமைப்பைப் பிரித்து, முக்கியப் பகுதி என அமைக்கும் செயலை "அபோத்தாரம்" என இலக்கண ஆசிரியர்கள் விளக்குகின்றனர். எழுவாய் என்றும் பயனிலை என்றும் உள்ள இப்பிரிவு தருக்க சாததிரத்தின்படி செய்யப்பட்டது. இதனை இனி இலக்கண நிலைகளோடு பொருத்துவோம்.

பெயரோ, பொதுபபெயரோ, நாமவாக்கியமோ எழுவாயாக வரலாம்; வினைமுற்றே பயனிலை. நடுவினையெச்சம் எழுவாயாகவும் பயனிலையாகவும வரலாம. வினையெச்சவியலை நோக்குக.

ஆன கரிமபு தின்னுன்னு; நீ அதினெ ஓடிச்சு களக.
வ்யாஜம் பறக ஶரியல்ல; ஆ ஶீலம் அருது.

என்பன எடுத்துக்காட்டுகள். இச்செய்திகளை நூற்பாவால் சுருக்கி உரைப்போம்.

170. அன்யோன்யாபேக்ஷயாகாம்க்ஷ
ஸாகாம்க்ஷ பத ஸஞ்சயம்
ஏகார்த்தபோதகம் வாக்யம்
ஆக்யாக்யாததளான்விதம்
ஆக்ய ஸித்தானுவாதாம்ஶம்
ஸாத்ய வித்யம்ஶமன்யவும்.

இத்துணைக கருத்துகளால் 'கருத்தாவும் வினைச்சொல்லும் சேர்ந்தது வாகியம்' என்ற பொருள் தோன்றும. ஆகவே வாகியங்கள் நீண்டு நீண்டு செல்வது எவ்வாறெனில்,

171. ஆக்யாதத்தினும் ஆக்யய்க்கும்
யதாயோகம் பரிச்சதம்.

எழுவாய்க்கும் பயனிலைக்கும் பொருந்தும் முறையில் பரிச்சதங்கள் ஏற்படுததலாம். பரிச்சதம் என்ருல் பரிவாரம என்பது பொருள். எழுவாய்த் தொடர்களுகுத தனி விசேடணங்கள், அவ்விசேடணங்களில் அன்வயிகும் வேறு சொற்கள் முதலிய பரிச்சதகங்கள் மிக நீண்டு வரலாம. முன்காட்டப்பட்ட எடுத்துக்காட்டில "மடங்ஙி வந்ந" என்ற பெயரெசசம், ராமன் என்ற எழுவாயின் விசேடணம. "விவாஹம் கழிஞ்ஞு" என்ற வினையெச்சமும, "நகரதிலேய்கு" என்ற வேற்றுமைப்போலியும் அதில் அன்வயிகின்றன. அதனால் "விவாஹம் கழி . வந்ந" என்ற பகுதி இங்கு கருததாப் பரிசசதம. அவ்வாறே "அச்சன்றெ...வாஸதினு" என்ற பகுதி வினப்பரிச்சதம்.

இவ்வாறு விசேடணங்களையெல்லாம் ஒருமித்துச் சேர்ப்பதற்கே பரிச்சதம் என்று பெயர்.

ஆகவே கருத்தாவும் கருத்தாவின் பரிச்சதங்களும் கூடிச் சேர்ந்த பகுதி எழுவாய். வினைச்சொல்லும் அதன் பரிச்சதங்களும் சேர்ந்தது பயனிலை.

பெயரெச்சமும் வினையெச்சமும் முறையே பெயருக்கும் வினைக்கும் விசேடணங்கள் என்பதை அவற்றின் பெயரே வெளிப்படுத்துகின்றது. காரகங்களைக் குறிக்கின்ற வேற்றுமைகள் எல்லாம் வினை விசேடணங்களாகும் 6-ம் வேற்றுமை மாத்திரம் பெயருக்கு விசேடணமாகும். பெயரெச்சம் விசேடணவாகியத்தில் வினைச்சொல்லாதலால் கருத்தாவாகவும் செயப்படுபொருளாகவும் மற்றும் வரும் பெயர்களை விசேடிப்பதற்குப் பெயரெச்சங்களைப பயன்படுத்தும்போது, அவற்றுள் ஒவ்வொன்றிற்கும் புதிய கருத்தா, செயப்படுபொருள் முதலியன சேர்ந்து வாக்கியம் மிக நீண்டு வரலாம். இதனைத்தவிர ஒவ்வொரு சொல்லிற்கும் பதில் வாக்கியங்களைக் கருத்தா செயப்படுபொருளாகவும் உபயோகிக்கலாம்.

ஒவ்வொருவகை வினைகளுக்கும் ஒவ்வொருவகைக் காரகம் முக்கியமாகவிருக்கும்—செயப்படுபொருள் குன்றுவினைக்குச் செயப்படுபொருள் இன்றியமையாதது. ''இருத்தல்'' முதலியவற்றிற்கு இடமும், சேறுதல் முதலியவற்றிற்கு சாட்சி முதலியனவும் முக்கியமானவை. எந்தச்சொல் எந்தச்சொல்லை அவாவி நிற்கின்றதோ, அவ்வினையோடு அந்தக் காரகம் சேர்ந்தால தொடர்நிலை தோன்றும். பிறகாரகங்களை வேண்டுமாயின் சேர்க்கலாம என்பதே உளது. இவற்றில் ''ஆதல'' என்ற வினைக்கு, எல்லாவினைகளுக்கும் வேண்டிய கருத்தா ஒழிய தனியே இன்ன காரகத்தை அவாவி நிற்கின்றது எனபதிலலை. அதனால் ஆதல் என்பதன் பரிச்சதமாக எலலாக காரகங்களும் எல்லா வேற்றுமைகளும் காணப்படும். சிலவிடங்களில் கருத்தா ஒரு வாக்கிய மெனில் அவ்வாக்கியத்திலுள்ள வினைச்சொல்லின் காரகத்தை ஆதல் என்பதன் பொருள் முற்றுப்பெற அவாய் நிற்கும். ஆதல என்ற வினை அத்துவிதவாதிகளின் பிரபஞ்சத்தைபபோன்று உபாதிகளற்றது. அதற்கு ஏதேனும் உபாதிகள் சேர்ந்தாலே பொருள் முழுமை வருகின்றது. ஏதேனும் உபாதி அதனோடு சேரவும் செயயும். எ-டு:

ஸிம்ஹம் ம்ருகம் ஆகுன்னு—விதேயம் கருத்தா—முதல்வேற்றுமை
தமயந்தி வரிச்சது நளனை ஆணு, இந்த்ராதிகளை அல்ல—
கருத்தாவாகிய வாக்கியத்திலுள்ள வினையின் செயப்படுபொருள்.

சோதிச்சது நின்னேடு ஆகுன்னு	—வினையின் சாட்சி.
ஶ்ரமம் எனிகு ஆகுன்னு	—நான்காம் வேற்றுமை
தணுப்பு மழயால் ஆகுன்னு	—ஏது 3-ம் வேற்றுமை
கரஹம் ராமன்றெ ஆகுன்னு	—6-ம் வேற்றுமை
நாயாட்டு காட்டிலாகுன்னு	—இடம்

ஆதல் என்பதன் நிகழ்காலமாகிய ''ஆகுன்னு'' என்பதை (அ) ஆணு என விருப்பம் போன்று குறைப்பதுண்டு. சில சமயம் அதன் இடத்தில் (ஆ) அத்றே, (இ) தன்னெ என்ற சொற்களையும் பயன்படுத்துவதுண்டு. வேறு சில இடங்களில் நிகழ்காலத்தை மாததிரமன்று (ஈ) எல்லாச் சொற்களையும் தவிர்த்தல் காணப்படும். எ-டு:

(அ) என்றெ வாக்கு ஸத்யமாணு. (ஆ) பரஸ்வம் அதறே குலகன்யகாஜனம்.

(இ) அது ஶரிதன்னெ. (ஈ) இதெந்தொராஶ்சர்யம்.

எதிர்மறை வழியில் ''அல்ல'' என்பது ஆகுன்னில்ல என்பதற்கும, இல்ல என்பது உண்டு, இல்ல என்பதற்கும் சமமாகின்றன.

சொல்வரிசை

172. கர்த்தா, கர்ம்மம், க்ரிய—இதே
வாக்கியத்துங்கல் பதக்ரமம்;
இது மாறி ப்ரதானத்தெ
முன்னில் ஆக்காம் விவக்ஷிபோல்.

முதலில் கருத்தா, அதன் பின்னர்ச் செயப்படுபொருளுண்டெனில் அது, இறுதியில் வினைச்சொல் என்பது வாககியத்தில் சொற்கள் அடுக்கப்படுதற்குப பொதுவாக ஏற்படுத்தப்பட்ட வரிசை. ஆனால் இம்முறை மாற்றப்படுத்துதற்குத் தடையில்லை. எதற்கு முதன்மை கொடுகக்படுகின்றதோ அது அங்கீகரிக்கபபடும். எ-டு:

''வந்நூ ஶரத் ஸமயம் அமபுதம் ஒன்னு அகன்னு'' –க்ரு ச.
''நின்னேடு கூடீட்டு போருன்னு ஞானும்'' –இருபத்திநாலு விருத்தம்
''கண்டேன் ஞான் ஸீதயெ'' – ,,
''தம்போதரிகதமதே! மதோத்கட! தொடுன்னுகில் விடா கின்னெ ஞான்'' –ம. ஶர.

173. விஶேஷண விஶேஷ்யங்ஙள்
முன்பின்பாயிட்டு நில்க்கணம்.

விசேடணம் எம்முறையிலிருப்பினும், தான் விசேடிக்கின்ற விசேடியத்தின் முன்னர் நிற்கவேண்டுமென்பது மரபின் வழக்கம்.

எ-டு: கறுத்த பஹு; ஸுந்தரனுய ராமன்; புலியுடெ துகலு; வேகம் நடக்குன்னு; ஏற்றம ஸமர்த்தன்—முதலியன.

174. கதிதான் தான் விளக்குன்ன
விபக்திக்கு பரம் வரும்.

எந்த வேற்றுமையின் பொருளாக கதி விளகுகின்றதோ அவ் வேற்றுமையின் பின்னரே அதனை வழங்கவேண்டும். எ-டு:

கைகொண்டு அடிககுன்னு; மாளிகயில் நின்னு வீழுன்னு.

ஆனல் வேற்றுமை கதியோடு சேர்ந்து தொகையாவதில்லை; சொல் இரண்டும் வேருகவே நிற்கும். அதனல் ஒரே வேறறுமையிலுள்ள பல் சொற்களுகு ஒரே கதியையே சேர்ககவேண்டி வருகின்ற இடங்களில் வேற்றுமைகளை ''உம்'' என்ற சொலலால் சமுச்சயப்படுத்தி விட்டுத் தேவைப்பட்ட கதியை இறுதியில சேர்ககலாம. எ-டு:

என்னெயும் நின்னெயும் குறிச்சு; காற்றும் மழயும் கொண்டு.

பொருத்தம்

175. கர்த்து க்ரியா பதங்ஙள்க்கு
பொருத்தம் லுப்தமாயி போல்.

கருத்தாவிற்கும் வினைச்சொல்லாகிய வினைமுற்றிற்கும் பால் இட எண்களில் பொருததம் அனுசரிப்பது ஏனைய திராவிடமொழிகளில் எலலாம் இன்னும அமைந்து வருவதால் மலையாளத்தில் அப் பொருத்தம் தொகைப்பிரசாரமாகப் போய்விட்டது எனச் சொல்ல வேண்டியிருகின்றது. அவை வழங்காததற்குள்ள காரணங்களை முன்னரே விரிததுரைகக்பட்டுவிட்டது.

176. விஶேஷண விஶேஷ்யங்ஙள்
லிங்கத்தில் வசனத்திலும்
பொருந்தணம் ஸமாஞதி
கரணுன்வயம் ஆவுகில்.

விபாவக பேதத்திற்கு மாததிரமே பால் எண்களின் ஆற்றலுள்ளது. அது சமாஞதி கரணமாக ஒரு பெயரை விசேடிகுமபோது பாலிலும் எண்ணிலும பெயரோடு பொருந்த வேணடும. எ-டு:

வயஸ்ஸன் ப்ராஹ்மணன்; ஒரு கிழவி ஸ்திரீ; மிடுகராய மககள்.

இறுதி எடுத்துக்காட்டிலுள்ளதைப் போன்று, சமான அதிகரணத் தொடர்பைக காட்டுதற்கு 'ஆதல்' என்ற வினையின் பெயரெச்சமாகிய ''ஆய'' என்பதை அவ்வியமாகப் பயன்படுத்தவேண்டும். ''ஆகுன்ன''

என்ற நிகழ்காலப் பெயரெச்சம் வேறுபாடின்மைத் தொடர்பைக் குறிக்கிறது. இதனைப் பயன்படுத்தும்போது பொருத்தம் கட்டாயமன்று. எடுத்துக்காட்டு: முகம் ஆகுன்ன சந்த்ரன் என்பது சமஸ்கிருதத்தில் விசேடணங்களுக்கு வேற்றுமைப் பொருத்தமும் வேண்டும் என உள்ளது. ''ஸுந்தரஸ்ய ராமஸ்ய; நீலான்யுத் பலானி'' இதனைக் கண்டு மயங்கிய மணிப்பிரவாளக் கவிஞர்கள் அண்மைக காலத்திலும்,

''நேர்ச்சகளும மம விபலானி'' —நள. ச.
''உத ஹரிணிகளோடு வாழுமாரே ஸததமியம் மதிரேக்ஷண ப்ரியாபி:'' —ம. ரா.

என்பன போன்று வேற்றுமைப் பொருத்தம் வழங்கியுள்ளனர்.

ஆனால் தூய மலையாளத்தின் போகில் பால் எண்ணின் பொருததம் தேவைப்பட்டாலே அமையவேண்டும.

177. நபும்ஸகத்தில் வசனப்
பொருத்தம் செய்வது இச்சபோல்.

அ:றிணை விசேடணங்களில் எண் பொருத்தம் வரவேண்டு மென்பது ஒருதலையன்று. எ-டு:

தக்கதாய காரணங்ஙள் —தக்கவயாய என வேண்டா.
அன்யாயமாய ப்ரவர்ததிகள்—அன்யாயங்ஙளாய என வேண்டா.

அ:றிணைப்பன்மைப் பாலில், எண்ணப்படும் பொருட்கள் ஒவ்வொன் றினையும தனிததனியே கணக்கிடுவதிலை; அனைதையும சேர்த்து ஒரு கூட்டமாகவே கணிகபபடுகிறது. வேற்றுமையின் முதன்மை ஆண பெண்பால் எண்களில் மாததிரமே பொருடபடுததவேணடிய தில்லை.

''ரண்டு குதிரகெட்டிய வண்டியில் நாலு படன்மார் கயறிவந்து''

என்றன்றே நாம் கூறுவோம். இநத ஆள் முக்கியத் தன்மையே அ:றிணையில் விசேடணஙகளுககு எண் பொருத்தம் வேண்டுவதில்லை எனக கூறுவதன் உத்தி ஆகும. இது மட்டுமன்று,

178. அர்த்தம்தான் ப்ரத்யயத்தெக்காள்
வசனத்தில் நியாமகம்.

எண் திடப்படுத்தப்படுவது எண் உருபை நோககியன்று. பெயரின் பொருளை நோககியே ஆகும். பெயர் ஒரு குழுவைக் குறிப்ப தென்றால் பன்மை உருபின்றியே பன்மையைக் காட்டும். அதனைப் போன்றே பன்மை உருபு இருப்பினும் வேற்றுமை குறிப்பிடப்படா திருந்தால் பெயர் ஒருமைதன்மையே பெறும். எ-டு:

வீரராய படஜ்ஜனத்தினு நூறு ரூப ஸம்பாவன கிட்டி;
அதுகொண்டு அவர் ஸந்தோஷிகயும் செய்து.

சமஸ்கிருதத்தில் :

வீரஸ்ய படஜனஸ்ய ஶதம் ரூபிகா: ஸம்பாவனுலப்தா;
தயா ஸ பரிதுஷ்டஶ்ச.

எனச் சொல் முறைப்படி பாலும் எண்ணும் சேர்க்கப்படவேண்டும். வேறு எடுத்துக்காட்டுகள்.

ரண்டு பரிஷயும் ஸன்னத்தராயார் —ம. மா.
நாரீஜனம் மிகதும பரவஶமார் —ம. பா.
ஸைன்யம் திரிசு மண்டினுர் —ம மா.
துஷ்டராம் ஶத்ருக்கூட்டம் —கே. ரா

179. லிங்கம் ஸம்ஸ்க்ருத நாமங்ஙள்க்கு
இஹ பாஷானு ரூபமாம்;
என்னுல் ஸ்த்ரீலிங்க மாத்ரத்தில்
ஸம்ஸ்க்ருதத்தின் வ்யவஸ்தயெ
மணிப்ரவாள கவிகள்
பக்த்யா மானிச்சிருந்நுதே.

சமஸ்கிருதச் சொற்களே மலையாளத்தில் வாங்கிப் பயன்படுத்தும் போது அச்சொற்களுக்கு அமமொழியிலுள்ள பால நியமங்களைக் கவனிக்க வேண்டியதில்லை. ஏதனுலெனில் சமஸ்கிருதத்தில, மலையாளத்தின் நேர் முரணுக, பெயர்களின் பால் பொருளை அனுசரித்தது அமைவதில்லை. ஒரு பயனும இல்லாது செயற்கையாகப் பாற்பாகுபாடிலலாத வற்றிற்குகூட இவையெல்லாம் பெண், இவையெல்லாம் ஆண என விதி செய்யப்பட்டிருகிறது. சமஸ்கிருததிலிருந்து சொற்களைக் கடன் வாங்கும மலையாளம் அவற்றிற்குப் பெண வேடமோ ஆண் வேடமோ தரித்தல் வழக்கம் என்று அறிந்த பின்னர்த் தனது தேவைக்கு அவைகளைப் பயன்படுத்தவேண்டும் என்ற கட்டாயத்தால் படனில்லையன்றே. அதனுல் சொல் சமஸ்கிருதமாயினும், மலையாளத்தில் பயன்படுத்தும்போது அதற்கு மலையாளத்தின் உருவமாகிய பால் போதும். எ-டு:

உன்னதமாய வ்ருக்ஷம் = உன்னதோ வ்ருக்ஷ:.
மதுரமாய வாக்கு = மதுரா வாக்.

ஆனுல் பெண்பாலில் மாத்திரம் மணிப்பிரவாளத்திற்கு முக்கியத்துவமிருந்த காலம்வரை கவிகள் உரைநடையிற்கூட சமஸ்கிருத பால் நிலையை ஏதோ ஒரு மூட நம்பிக்கையால் அனுசரித்து வந்தனர்.

எ-டு: மதுரயாய வாக்கு ஶோசனீயயாய அவஸ்த
ஸரஸயாய கத மனோகரயாய க்ருதி
மஹதியாய ஆபத்து புண்யயாய நதி

இவ்வாறு வடமொழிப் பால் நிலையைப் பயன்படுத்தியவர்களும் மூவிடப் பெயர்களால் குறிக்கும்போது ''அவள்'' என்ற பெண்பாலை ஒருக்காலும வழங்குவதில்லை. அதனால் இவர்களுக்கும் சம்ஸ்கிருத நிலையை எப்பொழுதும் பின்பற்ற வேண்டுமென்ற கட்டாயம் இல்லை என்பது தெளிவாகின்றது. அவர்களின் சார்பு இந்த அளவுகு இருக்கலாம். சமஸ்கிருததிலுள்ள அகர இறுதிச் சொற்களை மலையாளத்தில பயன்படுத்துமபோது ஆண்பாலோ அஃறிணைப்பாலோ ஆக்குதற்கு ஏதாவது (அன், அம) ஒரு உருபைச் சேர்க்கவேண்டிய முயறசி உளது. பெண்பாலின் விகுதி ''அ'' என்பதே ஆதலால் அவ்வாறே வழங்கினால் போதும். அதனால் மூககை உடைததும், சகுனம பிழைத்துள்ள முறையில் அஃறிணை உருபை ஆக்கிச் சமஸ்கிருத பண்டிதர்களுக்குச் செவிகின்பமில்லாத ஒரு வழககை ஏன் ஆக்குகின்றோமென்ற உதாசீனமே இதன் காரணம் எனத் தோன்றுகின்றது.

காவியப் பண்பிற்காக அஃறிணையிலும் உயர்திணைப் பண்பைக் கற்பிக்கும் இடங்களில் பொருந்தும நிலையில் அஃறிணைப் பொருள்களைப் பெண்பாலாகவோ ஆண்பாலாகவோ ஆக்குதல் மிகுதியும் வழக்கம். அவ்வாறு உள்ள இடங்களில் சமஸ்கிருததின் நிலையையே பின்பற்றுகின்றனர். ''அம'' என்ற அஃறிணை விகுதியோடு ''ஆன்'' என்பதைச் சேர்த்து ''நாகத்தான்'', ''வானரத்தான்'', ''வண்டத்தான்'' என்பன போன்ற ஆண்பாற் சொற்களைப் படைக்கலாம். அவை பொருந்தாத இடங்களில் ''தென்னலிவன்'' என்பது போன்று சுட்டுப்பெயரைச் சேர்ததுப் பால் தன்மை வரச்செய்யலாம்.

கூகீடனுர் மாநதளிர் தின்னு கன்னுய்த்–
தெளிஞ்ஞு கண்டத்தொடு கோகிலங்ஙள் —கு. ஸம்.
(மதுஸ்ரீ) மினுக்கினுள் மாநதளிராகுமோஷ்டம் —கு. ஸம்.

என்பன போன்று விணை முற்றில் பால எண் விகுதிகள் சேர்த்து ஆரோபதததைத் தெளிவாகக்கலாம்.

180. நாமத்தை வேறே நாமத்தால்
விவரிக்கும் இடங்ஙளில்
விபக்தி ரண்டாம் நாமத்தில்
வேணம்; சேர்க்காம் இரண்டிலும்.

ஒரு பெயரை வேரொரு பெயரால் விளக்கும் இடங்களில் இரண்டாவது பெயரோடு வேற்றுமையுருபைச் சேர்க்கவேண்டும். இரண்டிலும்

உருபைச் சேர்ப்பதில் தடையில்லை. விவரிக்கும் பெயர் (1) 'எல்லாம்' என்ற பொதுப்பெயரோ (2) ஒருவன், இருவர் முதலிய எண்ணுப் பேதங்களின் பெயர் வடிவங்களோ (3) பேர், ஆள் என்ற பெயர்களோ அமையலாம். எ-டு:

ஜனங்ஙளுடெ எல்லாவருடேயும் ஸம்மதம்.
ஜனங்ஙள் ,, ,,
அயல்வாசிகளெ(ள்) ஞாலுபேரெ விளிச்சு.
நமமுடெ(ங்மள்) இருவருடேயும் ஸ்நேஹிதன்.
என்னெ ஒராளெகொண்டு இக்கார்யம் ஸாதிக்கயில்ல

''ராதாகாந்தன் தேவனெ ஶரணம் பராபிக்குன்னு'' முதலியவைகளில் ராதாகாந்தனுகிய தேவனெ என ஆய என்பதன் பொருள எய்துகின்றது.

2. தொகையியல்

181. விபக்திக்குறி கூடாதே
பதயோகம் ஸமாஸமாம்.

வேறறுமை உருபுகளின் துணையில்லாது, சொற்களைச் சேர்ப்பதால் மட்டுமே அவற்றிற்கிடையிலுள்ள தொடர்பைக குறிததல் தொகையின் இயல்பாகும். ''தலயிலே வேதன''* எனக கூறுதற்குப் பதில் ''தலவேதன'' என்று சொற்களை ஒருங்கு சேர்த்துக கூறுவது தொகையாகும். இங்குத தொகையாகச சோந்திருகும் இரு சொற்களுக்கும் இடையிலுள்ள பொருள் தொடர்பைக குறிப்பதற்குத தொகை (கூடிச்சேர்தல்) அல்லாது, உருபு முதலிய காரியங்கள் ஒன்றும் வருவதில்லை. தொகையில் முன்னருள்ள சொல்லிற்கு நிலைமொழி (பூர்வபதம்) எனவும், பின்னருள்ள சொல்லிற்கு வருமொழி (உதரபதம்) எனவும் பெயர்.

தாமரை இரண்டுவகை உளது. அவற்றை வகைப்படுத்துதற்கு ''வெளுத்த தாமர'', ''செமந்த தாமர'' எனத தனிதனிச் சொல்லாகக காட்டுதற்குச சோமபலுற்று, வசதிக்காகப் பேதகப பகுதிகளையே பெயரோடு, உருபைப் போன்று, சோத்து ''வெண்தாமர, செந்தாமர'' எனச் சொற்கூட்டங்கள் அமைகக்படுகின்றன. அவறறோடு 'செந்தாமரையின் பூ' என்பதற்குப்பதில் அச்சொற்களைக கூட்டிச சேர்த்துச் செந்தாமரப்பூ என்றும், பின்னர் அப்பூவின் மணததைச் ''செந்தாமரப்பூ மணம்'' என்றும், அதன்மேலும மணம் செழிகக உளதெனின் ''செந்தாமரப்பூ மணககொழுபபு'' எனவும இயைபின்மை நீகக்யதோ,

* பெயர்கொண்டு முடியும் ஏழாம் வேற்றுமை

பிறிதின் இயைபு நீக்கியதோ ஆகிய விசேடணவிசேடியங்களைச் சேர்க்குந்தோறும் சொற்கூட்டம் நீண்டு நீண்டு வரலாம். இவ்வாறு வசதிக்காக வாசகத்தின் இடததில் சொற்களை மேன்மேல் கூடச் சேர்ப்பதே தொகை. தொகையாகச் சேர்க்கப்படும் பெயர்களில், நிலைமொழி விசேடணம எனக காட்டுதற்குப் பொருதுமிடங்களில் பரஸங்கரார்திக குறிப்புகளாகிய இரட்டல், வல்லினமாகத்திரிதல் முதலிய உபாயங்களைப் பயன்படுததுதலும் செய்யலாம். ''காட்டுபோத்து'', ''செப்புகுடம்'', ''கூவளததின வேர்'' முதலிய சான்றுகளில் நிலைமொழி விசேடணம் என்பது வடிவததாலேயே தெளிவாகின்றது.

வேறு சில சான்றுகளில் ஆண், பெண் பாலற்ற பெயாகளோடு பால் விகுதி சேர்ந்து காணபபடுவதால் தொகை உறுபபுக்களாகிய சொற்களுகுச சொந்தப பொருளில நிலைபேறு வருவதில்லை. பிறசொற்பொருளில் அவை பயன்படுத்தப்பட்டிருக்கின்றன என்பது தெளிவாகும். ஆகவே பொருட்பொருததத்திற்குத் தகவண்ணம் அவ்வகைச சொற்களைப் பிற பொருளில் நாம அன்வயிக்கின்றோம். ''நான்முகன்'', ''ஆனகொம்பன்'', ''பேடக்கண்ணி'', ''அன்ன நடயாள்'' முதலியவைகளை நோகுக. நான்கு முகங்கள் என்பதே குறிப்பிடபபடின் ''அன்'' என்ற ஆண்பால் விகுதியைச் சோக்கக்கூடாது. அதனால ''நாலு'', ''முகம'' ஆகிய இருசொற்களும ஒரு ஆணைக் குறிகக வேணடும். ஆகவே அன்வயம் ஆக்குதற்கு நாலுமுகம் உள்ளவன் என்ற பொருளை தொகைக்குக கொள்கின்றோம் ஆனைகொம்பைப் போல உள்ளது ''ஆனகொம்பன்''; பேடையின் கண்ணைப் போன்று கணகள் உள்ளவள் ''பேடக்கண்ணி''; அன்னத்தைப் போல நடையுள்ளவள் ''அன்ன நடயாள்'' இவ்வாறு அன்மொழிப் பொருள் நிலையிலுள்ள தொகைகுப ''பஹுவ்ரீஹி'' எனவும், முன்கூறிய சான்றுகளிலுள்ளதைப போன்று நிலைமொழிபபொருள் முதன்மையுள்ள தொகைகுத் ''தத்புருஷன்'' எனவும, இனிக் கூறப்போகும் இருமொழிப் பொருள் முதன்மையுடைய தொகைக்குத் ''த்விந்தன்'' எனவும் பெயர்கள் கூறப்படும்.

ஒரு பொருளுக்கே பன்மை காட்டுதற்குப்பதில் இரண்டு பொருட்களைக் கூட்டிச்சேர்ததுப் பன்மை ஆக்கினால், ''அதுவும் இதுவும'' என்ற பொருள் கிட்டுமன்றோ. ''அச்சனும அம்மையும்'' எனக கூறுதற்குப் பதில் அச்சனம்மமார் என இரு விசேடியச சொற்களைச் சேர்த்துத் தொகை படைகக்லாம.

தொகையின் தோற்றம் இவ்வாறாகும். திராவிடமொழிகளில் இரண்டோ மூன்றோ சொற்கள் சேர்ந்த சிறிய தொகைகளே உள்ளன.

அவற்றுள்ளும் நிலைமொழியின் விசேடத்தன்மையைக காட்டுதற்கு இரட்டல், வல்லினமாய்த்திரிதல் ஆகியவையோ அங்க ரூபமோ பெரும் பாலும் பயன்படுத்தப்படுகின்றன. அதனைப் போன்றே அன்மொழித தொகையில பால் விகுதிகள் காணப்படுகின்றன. அதனால் தொகைகளின் வகைகளை வேறுபடுத்தது அறிதற்கும், ''விகரகம'' எனக் கூறப்படுவதும, தொகையின் பொருளை விவரிப்பதும் ஆகிய வாசகத்தை நிர்ணயிப்பதற்கும் சிறிதும சிரமம் இல்லை. ஆனால் சமஸ்கிருதத்தின் செல்வாக்கு மலையாளத்தில் முழுமை பெற்றதோடு, அம்மொழியைப் பின்பற்றி மிக நீண்ட தனித்தொகைகளை மாத்திரமல்ல, கலப்புத் தொகைகளையும மலையாளக கவிஞர்கள் பயன்படுத்தத் தொடங்கியுள்ளனர்.

''கந்தவ்யா தே வஸதிரளகா நாம யக்ஷேஸ்வராஜ்ஞம
பாஹ்யோத்யானஸ்திதஹரஸிரஸ்சந்திரிகாதௌதஹர்ம்மயா''.

என்ற மேக சந்தேசச் செய்யுளின் மொழிபெயர்ப்பில் மூல பாடத்தை அனுசரித்தும் பின்பற்றியும்,

''என் தோழர்க்கயல் வாழி சங்கரமுடித்திங்கள்க்கிடாவின் நிலா
வாடும் மேடகளோடு மேவுமளகய்க்காணங்ங போகண்டதும்''

என நீண்ட தொகை அமைந்திருப்பதை நோக்குக.

தொகையில் அமையும சொற்களின் வகை வேறுபாட்டு அடிப்படையில தொகைகளைக கீழ் விவரிக்கும் முறையில் பிரிக்கலாம்.

1. எச்சவினை வினையோடு — கொண்டாடுக, ரக்ஷிசசுகொள்க.
2. பெயர வினையோடு — வெடியுக, பேதமாவுக, நிலநிலகருக.
3. பெயரெசசம் பெயரோடு — பெற்றமம.
4. பெயர் பெயரெசசத்தோடு — தேனூலும் வாணி.
5. பெயர் பெயரோடு — பொல்க்குடம், ராமனுட்டம்.
6. பேதகம் நாமத்தோடு — வெண்சாமரம, செம்பரத்தி.

தொகையில் வரும் சொற்களின் முக்கியத்துவத்தின் அடிப்படையில் தொகைகள் மூன்றாகப் பிரிக்கப்படுகின்றன. எவ்வாறெனில்,

1. தல்புருஷன் —நிலைமொழிப்பொருள் முதன்மை—தலவேதன.
2. பஹுவ்ரீஹி—அல் மொழி ,, ,, —தாமரக்கண்ணன்.
3. த்வந்தவன் —எல்லா மொழி ,, ,, —அச்சனம்மமார்.

அவ்யயீபாவமும், த்விக்ரமும் மலையாளத்தில் இல்லாததால் இங்கு பரிகணிகக்படவில்லை.

182. விசேஷண விசேஷ்யங்ஙள்
பூர்வ்வோத்தர பதங்ஙளாய்
ஸமாஸிச்சால் தல்புருஷன்
உளவாம் பல ஜாதியில்.

விசேடணம் விசேடியத்தோடு தொகையாவது தற்புருடன் ஆகும். விசேடணம் இயைபின்மை நீகுவதாகவோ, பிறிதின் இயைபு நீக்குவதாகவோ அமையலாம். சொற்கள் பெயர், வினை, பேதகங்களில் ஏதேனும் அமையலாம். எனவே தற்புருடன் பல முறைகளில் அமையலாம். (விசேடணம் பிறிதின் இயைபு நீகுவதாயின் அதனை உருத்திரிபு செய்து 'கர்மதாரயன்' எனச் சிறப்பு பெயரால் வடமொழியாசிரியர் வழங்குகின்றனர்.) எ-டு:

	வேற்றுமைப்பொருள்	தொகை	விரி
1.	முதல் வேற்றுமை	பேதமாவுக	பேதம் ஆவுக[1]
	,, கர்மதாரயன்	கொன்னத்-தெங்ங	கொன்னயாய தெங்ங்[2]
2.	இரண்டாம் வேற்றுமை	பாக்குவெட்டி	பாகினெ வெட்டுன்னது[3]
3.	மூன்றும் ,,	பந்தொகும்	பந்தோடு ஒகுன்ன[3]
4.	நான்காம் ,,	ஹோமப்புர	ஹோமத்தினுள்ள புர[4]
5.	ஐந்தாம் ,,	மாங்ஙாக்கறி	மாங்ஙயால் கறி[3]
6.	ஆறும் ,,	மரப்பொடி	மரத்தின்றெ பொடி[3]
7.	ஏழாம் ,,	தோள்வள	தோளிலே வள[3]
8.	நின்னு	நாடுநீங்ஙி	நாட்டில்நின்னு நீங்ஙி[5]
9.	குறிச்சு	ஆனபராந்து	ஆனயெக் குறிச்சுள்ள ப்ராந்து[6]

விசேடியங்களுக்கும் வேறுபாடின்மைப் பொருளில தத்புருஷத் தொகை வரலாம். அதற்கு உருவகத்தொகை என்பது பெயர் எ-டு:

அடி மலர்—அடி ஆகுன்ன மலர். மனகுருங்ஙு—மனமாகுன்ன குருங்ஙு.

பலரறி தன்மையால், சொல்லே வழங்காமலே, பொருள் நோகசைத் தரும் "இடையிலுள்ள சொல்" தத்புருஷனில் தொக்கு வரலாம். இவ்வகைத் தொகைகளுக்கு "மதயமபதலோபி" என்பது பெயர். எ-டு:

---

1 தமிழிலக்கணப்படி தொகையல்ல 2 பண்புத்தொகை. 3 வேற்றுமைத் தொகை 4 வேற்றுமை உருபும் பொருளும் உடன்தொக்க தொகை.

5, 6 இவை முறையே ஐந்தாம் வேற்றுமையாகவும் இரண்டாம வேற்றுமை உருபும் பொருளும் உடன்தொக்க தொகையாகவும் தமிழில் கருதப்படுகின்றன.

வெண்ணைக்ருஷ்ணன் — வெண்ணைப்பிரியனுய கருஷ்ணன்
தீவண்டி — தீயால் ஓடிகுப்பெடுன்ன வண்டி
மஞ்ஞுதொப்பி — மஞ்ஞினெ தடுக்குன்ன தொப்பி

காரகங்கள் அடிச்சொல்லோடு தொகையாகச் சேர்வது காரக தத்புருஷன். எ-டு:

தபஸ்ஸிரிகுக கூட்டிரிப்பு நாடுவாழுன்னு
வேளிகழிகக அம்மானயாடுக பீடிகூடுக

இங்கு கூறியதைப்போன்று பல பிரிவுகளையும் காட்டத் தொடங்கின், அதற்கு முடிவு இல்லை. வேற்றுமைப பொருளில் வரும் தத்புருஷனுக்கு அந்த வேற்றுமை அல்லது அதன் பொருளாகிய காரகத்தின் பெயரைச சேர்த்து, மூன்றும் வேற்றுமைதத்தொகை என்றோ. கரண தத்புருஷன் என்றோ இம்முறையில் பெயரிடலாம. சமஸ்கிருதத்திலுள்ள பலவகைத தொகை வேறுபாடுகளில, மலையாளத்தில் வருபவை இங்கு விவரிகுகப்பட்டன. சமஸ்கிருதத்தில் தொகை முகுகிய மாகப் பெயர்களுகுகிடையில் மாத்திரம் தொகுவனவாதலால் ''தேச்சு குளி'', ''பிடிச்சுபறி'' முதலிய மலையாளத தொகைகளுகுகு சமஸ்கிருதத்தில் பெயர்கள் காணப்படவில்லை. தொகையின் பெயர்களின் எண்ணிகுகையைப் பெருகச செய்வது தேவையில்லையென்று கருதி இங்கு புதிய பெயர்களைப படைகுகத் தொடங்கவில்லை.

183. விசேஷணம் விசேஷ்யத்தோடு
அதுள்ளோன் என்னு காட்டுவான்
ஸமாஸிச்சால் பஹுவ்ரீஹி;
அதும் பலவிதம் வராம்.

விசேடணச் சிறப்பாகிய விசேடியத்தையே தத்புருஷன் முக்கியமாகுக காட்டுகின்றது. அன்மொழித தொகையோ ஒரு படி கடந்து விசேடணச் சிறப்பு ஆகிய விசேடியம் யாருகுகுண்டோ அவனையே குறிக்கின்றது. ஆண்பால் குறிப்பின்று. எ-டு:

மதுரமொழி — மதுரமாகிய மொழியுள்ள (வன், வள், து)
நெடுங்கண்ணி — நெடிய கண் உள்ளவள்
நான்முகன் — நாலுமுகமுள்ளவன
முகுகண்ணன் — மூன்று கண்ணுள்ளவன்.

பஹுவ்ரீஹியின் வகை வேறுபாடுகள் :

1. உவமைச்சொல் இடையிற்கொண்ட உவமைக் கருப்பம்.
எ-டு: கஞ்சநேர்மிழி = கஞ்சத்தோடு நேராய மிழியுள்ளவள்.

2. உவமைச் சொற்பொருள் மாத்திரம் வந்துள்ள உவமைதத்தொகை.
எ-டு: மதிமுகி = மதியைப் போலுள்ள முகமுள்ளவள்.

3. உவமானம் தொக்கு வரும் உவமானத்தொகை. எ-டு:
பேடக்கண்ணி = பேடியுடெ கண்ணுபோலுள்ள கண்ணுள்ளவள்.

184. த்வந்த்வன் ஸமுச்சயார்த்தத்தில்
விஶேஷ்யங்ஙள்க்கு தங்ஙளில்;
ஸங்க்யா நாமங்ஙளாணெங்கில்
விகல்பார்த்தத்தில் வந்நீடும்.

எ-டு: அசனம்மமார் = அச்சனும் அம்மயும்;
அஞ்சாறு = அஞ்சோ, ஆறோ
கைகாலுகள் = கையும் காலும்
பதுபதினஞ்சு = பத்தோ பதினஞ்சோ

தனிததன்மையைக குறிக்காது கூட்டத்திற்கு முக்கியதுவம் கொடுத்தால், அஃறிணை உம்மைத தொகைகக ஒருமை அமையும. எ-டு:

ஜ்ஞானர விபூஷணம்; கை காலு.

185. விஶேஷணீபாவ சிஹ்னம்
லிங்கஸங்க்யாத்ய லோபவும்
ஜ்ஞத்தபாஷா ஸமாஸத்தில்
காணும் பூர்வ்வபதத்தினு.

ததபுருஷன், பஹுவ்ரீஹி ஆகியவை விசேடண விசேடியங்களின் தொகைகளல்லவா? அவறறில வரும் சொறகள் தூய மலையாளச் சொற்கள் எனில, நீலமொழி விசேடணமென்பதைக காட்டுதற்குரிய புணாச்சிச் செயகைகள ஆற்றலுள்ள இடங்களிலெல்லாம் காணப்படும். அதனபோன்று பால எண விகுதிகள் தொககு நிற்காதே வெளிப்படையாய்த தோனறவும் செய்யும. விசேடணத்தன்மைச் சின்னங்கள் அவ்விடங்களில் விளகக்பபட்டுள்ளன. எ-டு:

உம்பாகோன் – எண்விகுதி தொககு நிற்கவிலலை
கருஷ்ணன் திருவடி – பால் ,, ,,
தேவகள், தேவன், காலன், ஊர், ராமன் ஆட்டம், மரம்கயற்றம் முதலியன.
தான்தோன்னி, பொல்ப்பூவில் மானினி, தனிக்கு தான் போங்ஙவன் – வேற்றுமைத தொககு நிற்கவில்லை.
ஆயிரததாணடு, கபிகுலத்தரசன் — அங்கரூபம் — அத்து
காட்டுபோதது, ஆற்றுமணல் — ,, — இரட்டல்
குன்னின் மகள், பாககின்தோடு — ,, — இடைநிலை
செப்புகுடம், ஆட்டவெலி — ,, — வல்லினமாதல்
வள்ளிகுடில, புலிததோல் — ,, — வருமொழி முதலி ரட்டல்

பால், எண்விகுதிகள், வேற்றுமைகள் முதலியவை தொக்கு நிற்காத தொகைகளுக்குத் ''தொகாத்தொகை'' எனப் பெயர் கொடுக்கலாம். சமஸ்கிருதத்தைப் பின்பற்றுதல் காரணமாகத் தொகாத்தொகை இப்போது அரியதாய்விட்டது அதிலும் சிறப்பாக, வேற்றுமை யுருபு வராதுள்ளவை மிகக் குறையும் ஆனால் சமஸ்கிருததிலும் ஸரஸிஜம், வனேசரன், தேவாஞ்மப்ரியன் முதலியவைபோன்று தொகாத்திதாகைகள் கிடைக்காதவையல்ல. அங்கச் சொற்களில ''இன்'' இடைநிலை பெறுவது மெய்யிறுதிச் சொற்களிலன்றே. அது ஆரும் வேற்றுமைத தத்புருஷனில பெரும்பாலும காணப்படுகின்றது. ''காயாம்பூ'', ''மாங்ங'' முதலியவை ''காயாவின் பூ'', ''மாவின் கா'' முதலியவைகளின் சிதைந்த வடிவங்களாக இருக்கவேண்டும்.

186. ஸமாஸத்தில் பராதீனப்
பெட்டுபோய பதங்ஙளில்
தாஸதாஸந்யாயரீத்யா
சேரா பாஹ்ய விசேஷணம்.

தொகைகளில் தொகாது நிற்கின்ற பால் எண்விகுதிகள் முதலிய வற்றின் பொருள் தொகையாற்றலால் தோன்றுகின்றன. அதனால் இரண்டு சொற்கள் தொகையாகும்போது, அவற்றிற்குத் தனியே நிற்கும்போதுள்ள சுதந்திரம் அழிந்துபோகும். குழுவில் அல்லாது, அங்கங்களுக்குத் தனியாக ஒரு அதிகாரமும் இல்லை. தனிசொலலில் அமையும் எழுத்துகளின் நிலையோ தொகைகளில் அமையும சொற்களுகும் உளது. அதனால் தொகையில் வரும் சொற்களுக்கு வெளியிலிருந்து விசேடணம் சேர்ப்பதற்கு நியாயமில்லை. அதிலும் குறிப்பாகத் தொகையிலேயே முக்கியமில்லாது நிற்கும் சொல்லிறகு விசேடணம் சேர்த்தல் கூடவேகூடாது. இயற்கையாக அடிமை ஆகியவனுக்கு, ஒரு அடிமை கொள்ளுதல் எவ்வாறு பொருந்தும? பேடை மானின் விழிபோலுள்ள விழியுள்ளவள் ''பேடமான்மிழி'' எனத் தொகை ஆக்கியதன் பின்னர், அப்பேடைமானிற்குப் ''பயப்பட்ட'' என்ற விசேடணத்தைச் சேர்த்து ''பயப்பெட்ட பேடமான்மிழி'' என வழங்கல் கூடாது. ''பீதமாய மருகம்'' = பீதம்ருகம; அதனைப்போன்ற கண் உடையவள். ''பீதம்ருகாட்சி'' எனத தொகையின் மேல்தொகை அமைப்பதில் தடையில்லை. ஆகவே விசேடணம் பிற்பகுதி ஆவதில்லை. தொகாத்தொகைகளிலோ இந்த அளவுக்குக கட்டுப்பாடு தேவையில்லை. கீழே காட்டப்படும் பண்டை வழக்குகள் அனுகரணத் தகுதியுடையனவல்ல.

சண்டராம் ராக்ஷஸநிக்ரஹம் — கே. ரா.
நந்தன ஸமமாமுத்யானபங்கம் செய்தான் — ,,
ஶோகஸாதனமாய ஸம்ஸாரமோக்ஷம் — பாக.

மூன் நூற்பாவில் அமைத்த கட்டாயம் முழுவதும் நீக்கப்படுகின்றது.

187. ப்ரதீதிக் குறவு இல்லெங்கில்
பிரிஞ்ஞாலும் ஸமாஸமாம்.

சேர்க்கபபடும் சொற்கூட்டத்திற்கு ஒரு பொருள் நோக்கு அமைபபதற்குத தொகைகள் படைக்கப்படுகின்றன. அந்நோக்கிற்கு ஊறு வராதெனில், தொகையில் அமையும் சொற்களைப் பிரிதது சேய்மையில் வழங்கினும அச்சொற்கள் தொகைகளே. எ-டு:

''கார்யம் பவானறிவு ஏறெயில்லேதுமே''

என்ற சாணக்கிய நீதியிலுள்ள சொல்வழக்கில், காரியத்தின்றெ அறிவு = கார்யமறிவு என்றோ, அறிவிற்கு விஷயம் ஆவதில்லை = அறிவில்ல என்றோ தொகை நிலையை ஏற்றுக்கொண்டாலே அன்வயம் பொருந்தும். ஆனல் இச்சொற்கள் இடைப்பிற வந்து அகன்று நிற்கின்றன. எனினும் பொருள் நோககு சரியாக வருகின்றது. அதனல் இம்மாதிரித தொகைகளை ''வ்யவஹிதஸமாஸம்'' எனப் பெயரிட்டு ஏறறுகொள்ளலாம்.

7. சொற்களின் தோற்றம்

இலக்கணம் மொழியின் உபயோகததை வரையறைப்படுத்துகின்ற சாத்திரமன்ரே. மொழி என்பது மனவிருததிகளை வெளிப்படுத்துதற்குள்ள உபாயமாகும். மனவிருத்திகள் பிரபஞ்சத்தைக் குறித்துச் செயற்படுகின்றன. பொருள், வினை, குணம—என மூன்று தத்துவங்களால பிரபஞ்சம படைகக்பட்டதென்று கருதலாம்.

ஏதாவது ஒரு சித்தவிருத்தியைத் தனியே பிரித்துக காட்டுவது ஒரு வாக்கியம். ஒரு வாக்கியததைக் கேடுவராத விதததில் பிரித்துப் பார்த்தால், கயிற்றினின்று சவரிகார் வருவது போன்று சொற்கள் கிடைக்கும். அதனுல் மொழியின் ஆணிவேர் சொல்லாகும்.

''பொருள், வினை, குணம் ஆகியவற்றின் சேர்ககை பிரபஞசம்'' என முன் கூறியதை மொத்தமாகச சிநதிகக்கும்போது, இப்பொருள் வினை குணம் ஆகிய மூன்றில் ஒன்று சொற்பொருளாக வேண்டுமென்பது புலப்படும். ஆனுல் முன்காட்டிய உவமையிலுள்ள சவரிகாரிற்கு, வேதாநதிகள் பஞசபூதச் சேர்க்கை என்றும், ரசதந்திரககாரர்கள் சில உலோகங்கள், அலோகங்கள் ஆகியவற்றின் பரிணாம என்றும் பிரிப்பது போன்று, நிருகதம் (வேதநிகண்டு) பயின்றவர்கள் சிறுவர்களுக்குச் சொல்லியல்பில் சொற்களின் வரலாற்றை அமைகக்ச் சொற்களுக்கு மூலகாரணமாகப் பகுதி என்ற ஒன்றைக கறபீக்கின்றனர். பொருள்-வினை-குணங்கள் ஆகிய பொருட்களும இப்பகுதியில் தரப்படுகின்றன. அதனுல் பொருள், வினை, குணம ஆகிய மூன்று தத்துவங்களுக்கெதிராக மொழியில் முறையே சத்துவம், தர்ம்மி, தாது என்ற மூன்று பகுதிகள் உளவாகின்றன. இப்பகுதிகளிலிருந்து பின்னர் முறையே பெயர், வினை, பேதகம் என்ற சொற்கள் பிறக்கின்றன. அதனுல் பெயர் முதலிய சொற்களின் தோற்றம், கீழ் விவரிக்கும் மரபுத்தோற்றப்பட்டியலின்படி அமையும்.



படிப்பவர்களுக்கு மயக்கம் ஏற்பட இடம் கொடுக்காதிருப்பதற்காகவே, சொற்பொருளுக்கும் சொற்பகுதிகளுக்கும் இவ்வாறு தனித் தனிப் பெயர்கள் இடப்பட்டிருக்கின்றன. இந்நூலின் தொடக்கத்தில் அமைக்கப்பட்டுள்ள சொல்வகைகளில் ''நிபாதம்'' என்ற வகையைக் கொண்டதனை நிருகத நிகண்டுவழிப் பார்க்கும்போது, வகைவைக்க வேண்டியதில்லை. இவை தனித்து நின்றால் ஒரு பொருளையும் குறிக்க ஆற்றலற்றவை ஆதலால் அவற்றை உருபுகளின் இனத்தில் கணிக்க வேணடும. உருபு பகுதியோடு சேருகின்றது; நிபாதம் விகுதியோடு (செய்யுளில்) சேர்கின்றது என்பதே வேறுபாடு இதனாலேயே இவற்றிற்குத் தியோதகம் என்றும், பெயர் முதலியவைகளுக்கு வாசகம் எனவும பெயர்கள் எய்தின. ஸாவநாமம் பெயரின் வகைவேறுபாடே. அவ்வியமோ பெயர் முதலியவற்றினின்று உண்டாகின்றதென்பது தெளிவாகின்றது. அதனால் சொற்பகுதிகளைச் சத்துவம், அடிச்சொல், தர்ம்மி ஆகியவையென்று நிறுவியது சரியே என எளிதில் உணரப் படும. சிறிது வலிந்து கொண்டால் இவற்றிலும் ''தர்ம்மி'' என்ற மூன்றும் வகையைத தாது என்ற இரண்டாம் வகையினுள் அடகி விடலாம. பேதகங்களுக்குச் சுதந்திர வழக்கு குறைந்துவிட்டதும், தாதுகளைப் போன்றுள்ள வடிவ அமைப்பும் (எ-டு: நல், நல்ல) இவ் வடக்கலில் நமக்குத துணைசெய்கின்றன. சமஸ்கிருத நிகண்டு வல்லுநர்களோ ஒரு படி முன்னர்க் கடந்து பெயர்களையும் அடிச்சொற்களினின்றும் தோன்றியவை என வாதித்து எல்லாச சொற்களுக்கும் சமஸ்கிருததில தாது என்ற வகையே மூலப்பகுதி எனப் பிடிவாதம் கொள்கின்றனர். ஆனால் இடையூறுள்ள இப்பிடிவாதம் மயக்க காரணமென ஸாகபூாணி முதலியோர் அன்றே எதிர்க்கருத்தும் வன்மையாகத தோற்றுவித்துள்ளனர். லௌகீக காரியங்களில் இவ்வாறு அத்துவிதசிததாநதம் நிறுவத்தொடங்குவது பெருந்தடையும் முரட்டு வாதமும ஆகுமென ''யாஸ்கநிருத்தம்'', ''உணாதிசூத்திரம்'' முதலிய நூற்களினின்று நமக்குத் தெளிவாகின்றது. மகாஞகிய பாணினிக்கு இவ்வாதம உடன்பாடு அன்று என்பதற்கு ''உணாதயோபஹாலம்'' முதலாகப் பல சான்றுகள உள. இநத இடைப்பிறவரல இவ்வாறு இங்கு நிற்க.

இயல்பாக மலையாளத்திலுள்ள சொற்கள் முழுவதும் சத்துவம், தாது, தர்ம்மி என இம்மூன்று வேர்களினின்று முளைத்தவை என முன் விளக்கப்பட்டதன்றே. இவறறில் பேதகஙகளின் வேராகிய தார்ம்மி என்ற பகுதி மிகவும அளவில குறைந்தது. சத்துவம் அதனைவிட அதிகம். தாதுக்களே எண்ணிக்கையில் மிகுதி. தாதுக்களின் தன்மையைக் காட்டுதற்கு அவற்றில் முக்கியமான சில எச்சவியலில்

சேர்க்கப்பட்டிருக்கின்றன. சத்துவங்களுக்கு இவற்றைப் போன்று பகுதி வேறுபாட்டால் உருவ வேறுபாடு இல்லை. இவ்வாறு தாது பாடம் வினைச்சொற்களின் அமைப்பிற்கு ஒரு உத்தியை உண்டாக்க வேண்டும் என்ற கருத்தில் படைக்கப்பட்டதால், அதனில் எல்லாத் தாதுக்களின் சொந்த வடிவங்களும் விளக்கப் பார்வையில் அவ்வளவு சரியாக இருக்குமென நான் உறுதி கூறவில்லை. ஆனால் பாணினியின் பெரும் புகழ்பெற்ற தாதுபாடமும இகழ்ற்றதைத தொடாததன்று என்பதை நுண்ணிய இலக்கண இரகசியங்களை உணர்ந்தோர் உடன் படவே செய்வர்.

எண்ணிக்கையில் குறைந்ததும், தாதுவில் அடக்கப்படுவதுமாகிய ''தர்மமி'' என்ற வகையை வகைவைக்காது பார்க்கும்போது, பகுதிகள் சத்துவம் என்றும் தாது எனறும் இரண்டே உள்ளன வன்றே சிலவிடங்களில் ஒரு பகுதியே சத்துவமோ, தாதுவோ என நிச்சயப்படுத்த முடிவதில்லை எனவும் வரும் எவ்வாறெனில்,

1. சொல்: சத்துவம்—சொல்லின்றெ பொருள: பழஞ்சொல் முதலியன; தாது—சொல்லுன்னு.
2. நட: சத்துவம—நடயுடெ வேகம: அன்னதின்றெ நட; தாது—நடக்குன்னு.
3. களி: சத்துவம்—குளியுடெ ரஸம: பல குளிகள்; தாது—குளிக்குன்னு.

188. மூலப்ரக்ருதியில் ஸாரம்
பீஜம் அக்ஷரம் ஒன்னுதான்;
விவர்த்தன ப்ரக்ரியயால்
அதுபின் ஊதி வீர்த்தீடும்.

மூலப்பூதமாகிய பகுதி சத்துவமெனினும, தாதுவெனினும், தொடக்கத்தில் ஒரெழுத்தாகவிருக்க வேண்டும் என்பது ஊகம். ஆனால் இப்போது பகுதியாகக் காணப்படும் சத்துவங்களும் தாதுக்களும் ஊதிப் பெருகிப் பல எழுத்து மொழியாகிவிட்டன பெருகுதற்குரிய காரணம் வழக்கு, உருபு சேரும்போது அடையும் மாற்றம் ஆகியன. அதன் தன்மையை அடுத்தது விவரிப்போம். எ-டு:

சதுவம: கை, தீ, கால், கல், நெல், மண், உள், நேர்.
தாது: ஆ, சீ, தூ, தே, போ, அற், விட், புக, உண்.

இந்த ஊகத்தின் அடிப்படை யாதென்று சுருக்கமாகவேனும் விளக்க வேண்டுமன்றே.

முதலாவது—பண்டைக் காலத்தில் அமைந்திருந்த ஒரு மாத்திரைத் தாதுக்களில் பெரிதும் இப்போது சிதைந்து அரியவையாகிவிட்டன. என், உள், இன், அல், வேண், தக், மிக் முதலியவற்றை நோக்குக. என்—என்னு, என்ன; உள்—உண்டு, உள்ளு; இல்—இல்ல; அல்—அல்ல; வேண்—வேண்டும், வேண்டி; தக்—தக்க; மிக்—மிக என்று இவ்வாறு சில வடிவங்களே வழக்கிலுள்ளன. இவற்றுள் 'என்' முதலிய சில தாதுக்கள் அவ்வியமாகிப் போய்விட்டன. சில இணைவழக்காகவே வழங்குகின்றன. தக், மிக முதலியவை வினை முற்றுகப பயன்படுவதே இலை.* சிதைவில்லாது வழககில் உள்ள வற்றில் பெருமபான்மையும் மாததிரையோ, வண்ணமோ, எழுத்தோ சோந்து நீண்டிருககின்றன. புக—புக்கு; அது இபபோது உயிர் நீணடு ''பூக'' எனவாகிப் பூகுன்னு, பூகி, பூகும் என்பன போன்று எல்லா வடிவங்களிலும் இயல்கின்றது. மீது, மீதே, மீதது, மீத்தல் ஆகிய சொற்களில் மாததிரம் எஞ்சியிருப்பதும், ''மேல்'' என்னும் பொருள் உள்ளதுமாகிய ''மீ'' என்ற பகுதிக்கு இப்போது மிகக் குன்னு, மிகத்து, மிககும் என்றே, மிகய்க்குன்னு, மிகச்சு, மிகய்க்கும் என்றே நீண்ட வடிவிலேயே வழககு உளது. ''மிஞ்சுக'' என்ற வடிவமும் இதனுடைய வேடமாறுதலாக இருக்கவேண்டுமெனத் தோன்றுகின்றது. குழி, குழல், குழங்ஙுக, குண்டு, குளம், குளி, குண்டு முதலிய சொற்களைக் கூர்ந்து நோககும்போது ''குள்'' என்றே ''குண்'' என்றே ஒரு பகுதி அமைந்திருககவேண்டும் என்றும், அதன் வகை வேறுபாடுகளே இவையெல்லாம் என்றும் தெளிவாகின்றது. ''ஒடுங்ஙுக'' என்பதன் தொழிற்பெயராக நாம ''ஒடுவு'' என வழங்குவதுண்டு. இதனில் ங்கரம் காணப்படாததால் தொடககதில் தாது ''ஒடு'' என்பது மாத்திரம் ஆயிருக்கவேண்டும் எனக கூறவேண்டும்.

இவற்றைத தவிர ஒரு மாத்திரையுள்ள அடிச்சொற்களுக்கு 99-ம் நூற்பாவில் வேறுபாடு கூறப்பட்டுள்ளது. நூற்பாவில் க, ட, றகர இறுதிச் சொற்களே கூறப்பட்டுள்ளன. அதனிலும், அடுத்த நூற்பாவிலும் உத்தி கூறியதில், ககர இறுதிககு வேறுபாடு வருவதற்கு ஒரு அமைதியும் காணவில்லை. பச்—பச்ச; மிச்—மிச்சம் முதலியவைகளை நோக்கும்போது, க ட ற இறுதி மாத்திரமன்று, சகர இறுதியிலும் இவ்விதத்தில் வேறுபாடு எழுந்திருக்கலாம். இவ்வேறுபாடுகளில், டகர, றகர இறுதிகள் மாத்திரமே சிதைவற்றவையாக நிற்கின்றன. விட்—விடுன்னு, விடும்; பெற்—பெறுன்னு, பெற்று, பெறும் முதலியன. இவற்றிற்குச் சிறப்பு விதியில்லாது புணர்ச்சி நிலையால், விட்+து=விற்று; பெற்+து=பெ+து=பெற்று எனச்

* தகுன, மிகுன, என இவை தமிழில் வினைமுற்றுகப் பயன்படுகின்றன.

சாதாரண வடிவம் அமைகின்றன. அதனால், வேறுபாடுகளில் உட்படுத்தாததாலேயே, அவை வழக்கருகிச் சிதைந்த தாதுக்களாகப் போகவில்லை எனக கொள்ளவழி கிடைக்கின்றது.

இவ்வகைத் தெளிவுகள் நம்மை எந்தக் கருத்தை ஊகிக்க ஊகுகுகின்றன? பண்டைக் காலத்தில் தாதுகுகள ஒரு மாத்திரையுள் ளனவாகவே அமைந்திருந்தன. இப்போது அவை வேறுபட்டவை யாய்விட்டன. புணரியலின் 18-ம் நூற்பாவில் ''பதமில்லொற்றமாத்ற யில்'' என நிறுவப்பட்டுள்ளதன்ரே அநத உதாரணமே காலப்போக கில் பகுதிகளிலும் செயற்பட்டிருக்க வேணடும்.

இரண்டாவது—தூய பேதகஙகள் எல்லாம பகுதி வடிவங்களே யன்ரே. அவை தொகையாகவே வழங்கபபடுகின்றன பிரிதது வழஙகுவதெனில், அவற்றிற்குப் பெயரெச்சததின் வடிவம வேணடும. இதிலிருந்து ஒரு பொதுவிதியை ஊகிகக முடியாதோ? எநத வகைச சொல்லாயினும சுதந்திரமாக வழங்கப்படும்போது, அபபகுதி பெயராகவோ, வினையாகவோ, பேதகமாகவோ பரிணமிததிருகின்றது என்பதைக காட்ட, அதில மாறுதல் சிறபபுககளை அமைககவேண்டும. அநத உருவமே வழக்கு வடிவம் ஆகவிருக்கும. மூலபூதமாகிய பகுதி அவ்வியகருதமே அது பெயராகவோ, வினையாகவோ, பேதகமாகவோ பரிணமிக்க வேண்டுமெனில் அதனில் சில விகாரங்கள் வர வேண்டும. 'நாமாதியாம் விபாகததினெல்லாம் அர்ததம நியாமகம்'' (நூற்பா 33) எனச் சொற்பாகுபாட்டில் கூறியுள்ளமை நோககுக.[1] தமிழிலுள்ள சொற்பாகுபாட்டில் செம்ம, செறும என ''ம'' சேர்ந்த வடிவமே உரிச்சொல் (பேதகம) எனக கொள்ளப்பட்டிருகின்றது. செங்கனல், செறுபயறு என்ற தொகைகளிலோ, ''ம'' கெட்டது எனக் கூறுவதுகூடச் சரியன்று. அது தனியே பிரிநது போய்விட்டது எனக கூறவேண்டும். பவணந்தியின் கருதது இவ்வாறமைகின்றது.[2] இவ்வாறு கொள்ளுதற்குரிய உதாரணமும நமது கொள்கைகுகு துணை செய்கின்றது.

மூன்றாவது—சமஸ்கிருததில் தாதுக்களெல்லாம் ஒரெழுத்து டையனவே. அவற்றைத திராவிட மொழிகளில் கொள்ளும்போது, இறுதி மெய்யோடு இகரம சேர்தது ஈரெழுததாக ஆகுகுவதுண்டு. வத் = வதி; ஹஸ = ஹஸி; பச் = பசி. திராவிடச சொற்களிலும பெயரைத் தாதுவாகுகுதற்கும், தாதுகளினின்று தன்வினையைப் பிறவினை

1 ''செம்மை, சிறுமை என மை சேர்ந்து'' என்றிருக்கவேண்டும். இவை உரிசசொல் என்பது கருத்து வேறுபாட்டிற்குரியது.

2 நனனூலின் 'ஈறுபோதல்' (136) இஙகு குறிப்பிடபபடுகினறது இதறகு கருத்து வேறுபாடு கொள்வர். நசசினாக்கினியர் (தொல், சொல-200.)

ஆக்குதற்கும் இந்த இகரமே விகுதியாகச் சேர்க்கப்படுகின்றது. கல் = கல்லிக்குன்னு; ஒன்னு = ஒன்னிக்குன்னு; விட் = விடுவிக்குன்னு; கண் = காணிகுன்னு. தெலுங்கிலும் கன்னடத்திலும் தாதுக்களெல் லாம் உயிரிறுதியாகவிருக்க வேண்டும் என்ற கட்டாயம் உண்டாய் விட்டது. உயிரிறுதியெனில் தாதுவிற்கு உருவ அமைப்பில் வசதி உளது. அதனால் இபபோது பல எழுத்து உள்ள தாதுக்களிலுள்ள இறுதி உயிர, உருவ அமைபபிற்காகச சேர்ககப்பட்டிருகக வேண்டும். அவ்வாறுள்ள இறுதியுயிர சிலவிடங்களில ஒவ்வொரு மொழியிலும் வேறு வேறு காணப்படுவது நமது ஊகததிற்கு சான்றும ஆகும். தமிழ் மலையாளம்—நட; பழைய கன்னடம்—நடி; புதிய கன்னடம்— நடெ; தெலுங்கு — நடு ''சஞ்சரிதல்'' என்ற பொருளுடைய ''நடத்தல்'' என்பதன் வேட மாறுபாடே இவையெல்லாம். இதனில் இறுதியுயிர் வேடமாறுதலும் ''நட்'' என்ற ஒரெழுதது உண்மை உடலுமாகும் என்பது தெளிவாகின்றது.

நான்காவது—நல்லு, நல்ல, நலம் என்ற பலவகைச் சொற்களி லும் ''நல்'' என்ற அமசம ஒன்றிக காணபபடுவதால், அவ்வகைச் சொற்களுக்கெல்லாம், அது பகுதியாகும என நாம கொள்கின்ரோம். அதனபபோன்றெ, (1) விடுக, விடிருக, வெடியுக, வெட்டுக, விள் ளுக, வெடிகக; (2) திருதக, திரியுக, திரிககுக, திருமபுக, தெரியுக, திருத்துக; (3) வற்றுக, வறுககுக, வறளுக; (4) சூழுக, சுழியுக, சுழலுக; (5) வழுக, வழுதுக, வழுகுக என்றிவ்வாறு ஒரே சாதிச் (தாது) சொற்களிலேயே சிறிதுசிறிது பொருள் வேறுபாட்டோடு பல சொறரொருதிகள் காணபபடுகின்றன. இவற்றின் பொருளில, பொது-சிறப்புததன்மைகள தெளிவே இவை முறையே (1) விஸ்லேஷம்; (2) ப்ரதிவர்ததனம; (3) ஜலாங்கத்யாகம; (4) ப்ரமணம்; (5) ஸ்கல னம் ஆகிய பொதுவினைகளில் சிறப்பு நிலைகளாகும். இப்பொதுப் பொருள குறிககும் பகுதி (1) விட்; (2) திர்; (3) வர்; (4) சுழ்; (5) வழ் ஆகிய ஒரெழுததுப பகுதிகள். அதனால பொதுவான பொருளை விசே டிப்பதறகாகவும் தாதுகளை நீட்டுவதுண்டு எனவும எய்துகின்றது.

வடிவம அமைப்பதற்குள்ள வசதிகளோ, பொதுவாக நிற்கும் பொருளைச சிறப்பாக ஆகுதற்கோ, ஒரெழுத்து மூலப்பகுதியில் செய் யப்படும் விகாரங்களுக்கு ''விவர்த்தனப பரக்ரிய'' எனப பெயரிடப் பட்டது. அதன் தன்மை எவ்வாறெனில்,

189. த்வித்வம், தைர்க்யம், ப்ரத்யயத்தின்
யோகவும் தான் விவர்த்தனம்.

மூலப்பகுதி மெய்யிறுதியெனில் அதனை இரட்டல், அதன் குறிலை நீட்டல், பல மாதிரி உருபுகளைச் சேர்த்தல் முதலியவை விவர்த்தனமாகும். அதன் உருபுகள் யாவை எனின்,

190. *ப்ரத்யயம் ஸ்வரமோ சில்லோ*
கரமோ சேர்ச்சபோலெயாம்;
ஹ்ருஸ்வம்தான் ஸ்வரவர்க்கத்தில்;
சில்லோ ரேபலளங்ஙளாம்;
கரங்ஙள் தனியே நில்க்காம்
ஸானுநாசிகமாயுமாம்.

உயிர், சில், வல்லினம ஆகிய எழுத்துக்கள் விவர்த்தன உருபுகளாக வருகின்றன. அவற்றுள் உயிர்களில் அ, இ, உ ஆகிய குறில்கள் மாத்திரம் காணப்படுகின்றன. சில்லுகளில் ர, ல, ள ஆகிய மூன்றும் முக்கியம். ஆனால் அவை நேராகப் பகுதியோடு சேராததால், முதலில் உயிரைச் சேர்த்தது அர், அல், அள் என ஆக்கிச் சேர்க்க வேண்டும். வல்லினங்கள் கு, சு, டு, து, பு, று எனத் தனியாகவோ, ங்கு, ஞ்சு, ண்டு, ந்து, ம்பு, ன்று (=ன்னு) என மெல்லினம் முதலில் சேர்ந்தோ வரலாம். எ-டு:

இரட்டல்: வற்-வற்றுன்னு; தள்-தள்ளுன்னு; பொட்-பொட்டுன்னு.

நீட்டல்: மற்-மாறுன்னு; நற்-நாறுன்னு; புக்-பூகுன்னு; தங்-தாங்ஙுன்னு.

உயிர், அ: பற்-பறக்குன்னு; நட்-நடக்குன்னு; செம்-செவக்குன்னு.

,, இ: பட்-படியுன்னு; துற்-துறிக்குன்னு.

,, உ: கற்-கறுக்குன்னு; வெள்-வெளுக்குன்னு.

வல்லினம், கு: பெர்-பெருகுன்னு; பழ்-பழகுன்னு.

,, சு: வீ-வீசுன்னு (?) மி-மிச்சம்.

,, டு: பீச-பீசுடுன்னு; ஞெரி-ஞெரிடுன்னு.

,, து: பொர்-பொருதுன்னு; எழ்-எழுதுன்னு.

,, பு: அன்-அன்புன்னு.

,, று: வித-விதறுன்னு; சித்-சிதறுன்னு.

மெல்லெழுத்தும் வல்லெழுத்தும் } ங்கு: ஒடு-ஒடுங்ஙுன்னு; முடு-முடங்ஙுன்னு.

,, ஞ்சு: உறி-உறிஞ்சுன்னு.

,, ண்டு: சுர-சுரண்டுன்னு; பரண்டுன்னு.

,, ந்து (ந்று): முட-முடந்துன்னு; பொரு-பொருந்துன்னு

,, ம்பு துளு: துளும்புன்னு; தே-தேம்புன்னு; கெடு-கெடும்புன்னு.

மேல்காட்டப்பட்டவையெல்லாம் அடிச்சொற்களின் வடிவ நீட்சிக்குச் சான்றுகள். பெயர்களின் பகுதிகள் நீட்சி பெறுவதற்குரிய மாற்றங்களும் இவையே. பெயர் முதலியவைகளாய்ப் பிரிவதுவெறும் பொருளைச் சார்ந்து மாத்திரமே அமைகின்றதென சொற்பாகுபாட்டிலேயே உரைக்கப்பட்டிருக்கின்றது. பகுதிகளின் எண்ணிக்கையில் விஜனவகையில் உட்பட்டவையே அதிகம் என்ற வேறுபாடு மாத்திரம் உளது. ஆனால் சிலவிடங்களில் வடிவ அமைப்பிற்கு முன்னைய நிலையில் ஒரு பகுதி எந்த வகையைச் சேர்ந்ததென முடிவு கட்டுதற்கு வழியில்லை. அதனால் விவர்த்தன கிரியைக்கு முன்னர், பகுதியின் வகையைப் பற்றிச் சிந்திக்கத் தேவையில்லை முட்டை விரிந்து, இறகு முளைத்துக் குஞ்சு கூவியதன்மேலே காகமோ குயிலோ என்று தீடப்படும். எனினும் பெயர்ப் பேதகங்களின் பகுதி நீட்சிக்குச் சில சான்றுகள் காட்டுவோம்:

பெயர்			பேதகம்		
தொட்டி—தொட்டில்		துரு—துரும்பு	நால்—நாங்கு	தொள்—தொண்டு	
கார்	—கரம்பு	தரி—தரும்பு	செம்—செம்பு	கர்—கரி, கார்	
பெண்	—பெட	குழ—குழி, குழல்	நல் —நன்றி	மூ—மூன்று, =நன்னி(நங்கி)	மூன்னு

இனிச சொல்லின் தோற்றத்தை ஊகிக்கும் வழியைக் காட்ட விவர்த்தனகிரியை உள்ளவிடத்தில் அதனைச் செய்து, விஜனமுற்ருய உபயோகிகக்த தகக நிலையில் வந்துள்ள தாதுக்களிலிருந்து தோன்றிய சில பெயர்களின் சான்றுகள் காட்டப்படுகின்றன.

அடிசசொல்:	பெயர்:	பொருள்:
1 விரி	விரல்	விரிவது
2 பகு	பகல்	காலைப் பகுப்பது
3 கட	கடல்	கடக்கமுடியாதது
4 குட	குடல்	குடைவது
5 உருள்	உரள்	உருளுவது
6 நில்	நிலம்	நிறபது
7 நடு	நாடு	நடுவது, (பயிருள்ளது)
8 விள்	விண்	விள்ளுவது
9 மின்	மீன்	மின்னுவது(விண்மீன்)
10 வெள்	வெள்ளி	வெளுத்தது
11 குதி	குதிர	குதிப்பது
12 காண்	கண்ணு	காண்பது
13 நக்கு	நாக்கு	நக்குவது

அடிச்சொல்:	பெயர்:	பொருள்:
14 செய்	கைய்	செய்வது
15 இறு	இறும்பு	இறுப்பது
16 கொய்	கொம்பு	கொய்வது
17 பாய்	பாம்பு	பாய்வது
18 கோத்	கொதும்பு	கோதுவது
19 கொள்	கொளம்பு	கொள்ளுவது
20 இரி	இரிம்பு	இருப்பது
21 கொழு	கொழம்பு	கொழுபபது
22 விள்	விளும்பு	விள்ளுவது
23 கீழ்	கிழங்கு	கிழிவது
24 தண்	தணுங்கு	தணுப்பது
25 தள்	தண்டு	தள்ளுவது
26 சுள்	சுண்டு	சுள்ளுவது
27 மர்	மருங்கு	மருவுவது
28 கொழு	கொழுந்து	கொழுப்பது
29 உழு	ஊழி	உழுவது
30 ஆழ்	ஆழி	ஆழமுள்ளது
31 கர்	கரி	கறுத்தது
32 சுழ்	சுழலி	சூழவது
33 சுடு	சுடலி	சுடுவது
34 பொலி	பலிசை	பொலிவது
35 தள்	தளிர்	தள்ளுவது
36 குள்	குளிர்	குளிர்ச்சியுள்ளது

பெயரினின்று அடிச்சொல் படைததற்குரிய வழிகளுக்குப் பெயரடிச் சொல்லியலில் விவரித்துள்ளவை போதுமானவை.

191. பாஹ்யாந்தர பேதத்தால்
ஶப்தம் ரண்டுவிதம் வரும்.

தோற்றததினடிப்படையில் சொற்களை வகைப்படுததினால் அவை ஆபயந்தரம் என்றும் பாகியம் எனவும இருவிதப்படும. மலையாளம் திராவிட குடும்பதததில் பிறநத ஒரு மொழி மலையாளத்தைத் தவிர அககுடும்பத்தில் தமிழ், தெலுங்கு, கன்னடம், துளு என நான்கு முக்கிய தாய்வழி மொழிகள் உள்ளன. இவைகளினின்று எடுப்பவையோ, இவற்றிற்குச் சமமாகத தனககுக கிடைததுள்ள குடும்பச் சொத்தாகவோ உள்ள சொற்கள் ஆப்யந்தரங்களாகும். திராவிட குடும்பத்தைத் தவிர உள்ள சமஸ்கிருதம், ஆங்கிலம், இந்துஸ்தானி,

போர்த்துகீஸ், பறங்கி முதலிய மொழிகளிலிருந்து கிடைத்துள்ளவை பாகியங்களாகும்.

192. ஸ்வந்தம் ஸாதாரணம் தேஶ்யம்
என்னிஹாப்யந்தரம் த்ரிதா.

ஆப்யந்தரம் என்ற வகைக்குச் சொந்தம், சாதாரணம், தேசியம் எனப் பின்னரும் மூன்று உட்பிரிவுகள் உள்ளன. இவற்றில், ஏனைய திராவீடமொழிகளில் காணப்படாது, மலையாளத்தில் மட்டும் வழங்கும் சொற்கள் சொந்தம் எனப்படும். குடும்பச் சொத்தாக எல்லாவற்றிற்கும பொதுவாயுள்ளவை சாதாரணம். மலையாளத்திலேயே சில பகுதிகளில் மட்டும் வழங்குபவை தேசியம்.

193. பாஹ்யம் தத்பவமாயிட்டு
வராம் தத்ஸமமாயுமாம்.

பாகியம் என்ற பிரிவிற்கும் உட்பிரிவுகள் உள்ளன. 1. தற்பவம், 2. தற்சமம் ஆகியவை. ஒரு குடும்பத்தில் பிறந்த ஆள் பிற குடும்பத்தில் போவது இரண்டுவிதத்தில் அமையலாம். தத்து ஆகச் செல்வது முதலாவது. தூண முதலியவற்றுல் அமைவது இரண்டாவது. இவற்றுள் முதல் நிலையைப் போன்று பலவகைப்பட்ட சொற்கள் தற்பவங்களாகும். இரண்டாவது நிலையைப் போன்றுள்ளவை தற்சமங்கள். வளர்ப்புப் பிள்ளையின் கோத்திரத்தை எவ்வாறு பௌராணிகள் மட்டும் அறிவார்களோ அவ்வாறே தற்பவங்களின் தோற்றம் "நிருக்தகாரன்" மட்டும் தெளிவாக அறிவான். அதில் நின்று தோன்றியது தற்பவம். அதற்குச் சமமாக உள்ளது தற்சமம் என, அவற்றின் பெயர்களே பொருளைத் தருகின்றன. அதனுல் தற்பவங்களுக்குப் பல காரணங்களால் மிகுந்த வேறுபாடு நிகழ்ந்திருக்கும். தற்சமம் இரண்டு மொழிகளிலும் ஒத்த உருவமுடையதாகவே இருக்கும். இவ்வேறுபாடு சமஸ்கிருதத்திலிருந்து எடுக்கப்பட்ட சொற்களில் பெரிதும் காணப்படுகின்றது. கார்த்துவைட் துரை இத்தற்பவ தற்சமங்களை உபயோகிப்பது, இங்குக் குறிப்பிட்ட கருத்தில் தானே, என அறியவேண்டியிருக்கின்றது. எவ்வாறுயினும் நாம் இச்சொற்களுக்குக் கொடுத்துள்ள பொருளைத் தெலுங்கு இலக்கண ஆசிரியர்களின் அனுவாத முறையிலும், இவற்றைப் படைத்த காவியதர்ச ஆசிரியராகிய தண்டியைப் பின்பற்றியும், சொல்லின் தோற்றங்களைப் பின்பற்றியும் அமைத்துள்ளோம்.

சொல்

1. ஆப்பியக்தரம் { 1. சொந்தம் 2. சாதாரணம் 3. தேசியம் } 2. பாகியம் { 1. தற்சமம் 2. தற்பவம் }

தற்பவம்				தற்சமம்	
பகுதி	விகுதி	பகுதி	விகுதி	பகுதிவிகுதி சமம்	
ஶாஸ்தா	சாத்தான்	பல்யங்கம்	பல்லகு்	ஸுகம்	ஆயுஸ்ஸு்
ஶூத்தம்	சாத்தம்	யுகம	நுகம்	துக்கம்	மனஸ்ஸு்
ஶங்கம்	சங்கு், ஶங்கு்	பக்ஷம்	பக்கம்	ஸந்தோஷம்	விரோதம்
பாண்டாகாரம்	பண்டாரம்	குந்தளம	கூந்தல்	விரஹம	
க்ருஷ்ணன்	கண்ணன்	Lantern	ருந்தல்	வேதன	க்லாஸு் (Class) ஸ்லேற்று (Slate) ஆங்கிலம்
ஸீத	சிருத	Collector	கல்கட்டர்	விஶ்வாஸம்	
ஸுப்ரஹ்மண்யன்	ஶுப்பன், மணியன்	Judge	ஜட்ஜி	ஸபத்து்	
கனம்	கனம்	Hearing	ஈரங்கி	ஆபத்து்	
க்ஷாரம்	சாரம்	Report	றெப்பட்டு	பரயாஸம்	
த்ரோணி	தோணி	Record	றிகார்டு	விஶ்ரமம்	ஜல்தி (பாரசீகச்-சொல்)
ஸந்த்யா	அந்தி	Hospital	ஆஸ்பத்றி	விசாரம்	
உபாத்யாயர்	வாதயார்	Apothecary	அப்போத்திக்கிரி	ஸப	
ராஜா	அரசன்	Engineer	இஞ்சினீயர்	ஆலோசன	
ருதிரம்	உதிரம்	Superintendant	ஸுப்ரேண்டு்	ராஜா	
த்யூதம்	சூது	Cinzel (Port)	சிநதேர்	மந்த்ரி	
நாடி*	நாழி	Frank	பறங்கி	ப்ரஜ	
ஶ்ரேணி	ஏணி			தனம்	
ஹிதம்	இதம			தாரித்ரியம்	
பிஶாசம்	பே			ஸ்நேஹம்	
				தய	
				ஜீவன்	

* நாழி + உரி = நாகுரி என்ற தொல்காப்பிய விதி இங்கு நினைத்தறகுரியது.

ஆப்யந்திரம்:

எ-டு:

சொந்தம்: பனி[1] (=நோய்); முண்டு (=வேட்டி); அணடி, போற்றி, வேள (=கழுத்து).

சாதாரணம்: மழ, மாடம், வடி, பணம் (தமிழ், கன்னடம்), கலு (கன்னடம், துளு, தெலுங்கு). கவடி (தமிழ், கன்னடம், துளு) சிப்பி (தமிழ், கன்னடம், தெலுங்கு.)

தேச்யம்: அப்ப, தாப்ப, தொழுத்து, பொற்ற, கரிக்குற, கரிங் கண்ணீர், கரிங்கன்னல்.

தற்பவமாகவோ, தற்சமமாகவோ சமஸ்கிருதத்திலிருந்து பெயர் களை மலையாளத்தில் கொள்ளும்போது அவை தனிப்பெயர் வடிவத் திலோ, வேற்றுமையிறுதி வடிவத்திலோ அமையவேண்டும் என்ற ஐயம் தோன்றலாம். அது தீர்க்கப்படுகின்றது:

194. சம்ஸ்க்ருத ப்ரதமா ரூபம்
நாம ப்ரக்ருதி பாஷயில்
தீர்காந்தம் ஹ்ருஸ்வமாக்கேணம்
அனேகாக்ஷரம் ஆவுகில்.

சமஸ்கிருதத்திலுள்ள முதல் வேற்றுமை ஒருமையிலுள்ள உரு வமே மலையாளத்தில் பகுதியில் இடததை வகிக்கின்றது. மலையாளத் தில பெயரின் வடிவமே முதல் வேற்றுமை. அதற்குத் தனியே உருபும் மற்றும் தேவையில்லை சமஸ்கிருதத்தில் உருபேற்கும் பெயர் வடிவ மும், பெயரும் வேறுவேறெனில், நமக்கு அதனை நோகுவதில் காரிய மில்லை. மலையாள வழகைக அனுசரித்து முதல்வேற்றுமை ஒருமை வடிவத்தைப் பகுதியாகக கொள்ளவேண்டும். நெடிலிறுதிச் சொற்கள் மலையாளத்தில் மிகுதியும் வழக்கில் இல்லாததால் அவற்றைக் குறி லாக்கவேண்டும். ஆனால் ஒரு மாத்திரை உள்ள சொல் விருப்பமின் மையால் ஓரெழுத்தொரு மொழிகளில் நெடிலைக் குறிலாக்கக் கூடாது. நெடில் தேவை என்று தோன்றின் மலையாள விதியனுசரித்து யகர வகரங்களை இறுதியில் சேர்த்துக்கொள்க. எ-டு:

பித்ர:	பிதா	=பிதாவு",	பிதாவினை
மதுலிஹ்:	மதுலிட்	=மதுலிட்டு",	மதுலிட்டினை
கிர்:	கீ:	=கீர்",	கீரினை

1 பனி என்பதோர் நோயுமுண்டு (சிலம்பு-அடியார்க்கு நல்லார்.)

ராஜன்:	ராஜா	= ராஜாவு்,	ராஜாவினெ
ஶஶின்:	ஶஶீ	= ஶஶி,	ஶஶியெ
கர்ம்மன்:	கர்ம்ம	= கர்ம்மம்,	கர்ம்மத்தினெ
ஸம்ஸத்:	ஸம்ஸத்	= ஸம்ஸதது,	ஸம்ஸத்தினெ
மஹத்:	மஹான்	= மஹான்,	மஹானெ
வாச்:	வாக்	= வாககு்,	வாக்கினெ
திஶ்:	திக்	= திக்கு்,	திகினெ
த்விஷ்:	த்விட்	= தவிட்டு்	த்விட்டினெ
வேதஸ்:	வேதா	= வேதாவு்,	வேதாவினெ
வித்வஸ்:	வித்வான்	= விதவான்,	விதவானெ.

★

எச்சவியல்

அடிச்சொற்கள்

அண்ண அகர-இறுதி அகாரிதம்

அட = வழி மறைத்தல், வந்து சேர்தல் (அடைதல்)*
அண = சேர்தல் (அணைதல்)
அய = இறுகாதிருத்தல் (அயவு = அசைவு)
அர = திரவம் சேர்ந்து பொடிதல் (அரைதல்)
அற = அடித்து நொறுகுதல் (அறைதல்)
அல = இரந்து நடத்தல் (அலைதல்)
இட = சண்டையிடுதல் (இடைதல்)
இழ = ஊர்ந்து நடத்தல் (இழைதல்)
உட = செறித்துச் சிதறுதல் (உடைதல்)
உர = ஒன்றோடொன்று சேர்ந்து (உரைதல்)
உல = இளகுதல், நெகிழ்தல் (உலைதல்)
உற = கட்டியாதல் (உறைதல்)
கட = கலகுதல் (கடைதல்)
கர = கண்ணீர் ஒழுகுதல் (கரைதல் = அழுதல்)
கள = துறத்தல் (களைதல்)
கிண = வைராகியம்கொள்ளுதல்
குட = முழுவதும கலங்கக் குலுகுதல் (குடைதல்)
குற = சுருங்குதல் (குறைதல்)
குழ = திரவத்தோடு சேருதல், தளர்தல் (குழைதல்)
பட = இளைத்தல்
சத = இறுகுகம் குறைதல் (சதைதல்)
சம = வேடம் தரிததல், முடிந்த நிலை பெறுதல் (சமைதல்)
சவ = கடித்ததனால் சிறிதாதல் (சவைத்தல்)
சில = ஒலித்தல் (சிலைத்தல்)
தட = கதி தடைசெய்தல் (தடைதல்)
தற = உட்பொருத்தி அறைதல்
திக = முழுவதாதல் (திகைதல்)
திர = விசாரிததல்
துல = கேடுறுதல் (துலைதல்)
துள = துவாரமுளை தாதல் (துளைத்தல்)
துழ = வெள்ளத்தில் துழாவுதல் (துழைதல்)
நன = திரவத்தோடு பொருந்தல் (நனைதல்)
நிற = முழுவதாதல் (நிறைதல்)
நுண = மெதுவாய்த் தின்னல்
நுர = சிறு திவலைகள் சேர்தல் (நுரைத்தல்)
நுழ = துவாரம்வழிக கடத்தல் (நுழைதல்)
பத = நுரை சேர்தல்
பற = பேசுதல் (பறைதல்)
பிண = கலத்தல் (பிணைதல்)
புக = புகை தோன்றல் (புகைதல்)

---

* அடைபபுக் குறிக்குள் காணபபடும் சொற்கள் மொழிபெயர்ப்பாளரால் கொடுக்கப்படுகின்றன

புள = அங்கும் இங்கும் வளைதல்
பொத = தூசியில் தாழுதல்
(புதைதல்)
மற = காணுதாதல் (மறைதல்)
முள = கூட்டிலடைதல்
மெட = நெய்யுதல் (மிடைதல்)
வர = ரேகை விழுதல் (வரைதல)
வல = துன்புறுதல்
வள = வளவு உள்ளதாதல்
(வளைதல்)
விர = சிரதத்தை செயதல்
விள = மூபபு வருதல (விளைதல்)

காரிதம்

அக = குருத்து உண்டாதல்
அய = அனுப்புதல் (அசைதல்)
அற = பழி தோன்றுதல்
இம = சிமழுதல் (இமைதல்)
இற = (நீர்) இறைத்தல
(இறைதல்)
இர = முழங்குதல் (இரைத்தல்)
இள = பிணவாங்குதல்
உர = சொல்லுதல் (உரைத்தல்)
உழ = வேதனையால் துன்புறுதல்
(உழதல்)
கவ = கால்களை விரிதல்
(கவைதல்)
கழ = உளைசசல் தோன்றுதல
கிட = அடைதல (கிடைதல்)
கித = வேகமாய் சுவாசித்தல்
கிள = மண்வெட்டுதல
(கிளைத்தல்)
கும = அடிதல் (குமைத்தல்)
குர = ஒருவகை ஒலி எழுப்பல்
(குரைத்தல்)
குல = பயன் தரல் (குலைத்தல)
சில = ஒலித்தல் (சிலைத்தல்)
சின = பக்குவம் வருதல்
சுண = கோபித்தல்
சும = ஒருவகை ஒலி எழுப்பல்
செர = சவரம் செய்தல் (சிரைத்தல்)
தழ = செழிப்பாதல் (தழைத்தல்)
தள = யானையை கட்டுதல்
(தளைதல்)
திர = மேன்மேல் சுருட்டுக
(திரைதல்)
திள = நீர் கொதித்தல்
துக = (துணி) துவைத்தல்
(துவைத்தல்)
துட = தடவிகளை தல்
(துடைத்தல்)
நர = உரோமம வெளுதல்
(நரைத்தல்)
நிர = வரிசையாய் நிறுதல்
(நிரைத்தல்)
நின = சிந்தித்தல் (நினைதல்)
நில = நிலைபெறுதல் (நிலைத்தல்)
பக = பயப்படுதல்
பட = பாதிரத்தில் பகிர்ந்து வைத்
தல் (படைத்தல்)
பிழ = தவறுதல் (பிழைத்தல்)
புத = மறைதல் (புதைத்தல்)
மல = பயப்படுதல் (மலைத்தல்)
முள = குருத்துவருதல் (முளைத்தல்)
முழ = நிரப்பில் உயாதல்
(முளைத்தல்)
வித = வித்திடுதல் (விதைத்தல்)
விற = நடுங்குதல் (விறைத்தல்)

உதட்டொலியாகிய–அகர
இறுதி (அகாரிதம் இல்லை)
காரிதம

அமபர = அதிசயித்தல்
(அம்பரத்தல்)

கட = தாண்டுதல், நுழைதல் (கடத்தல்)
கற = பால் கறப்பது (கறத்தல்)
கிட = கிடத்தல் (கிடத்தல்)
துர = குழி உண்டாக்குதல்
துற = மறைவு மாற்றுதல் (திறத்தல்)
நட = நடந்துசெல்லுதல் (நடத்தல்)
நிர = வரிசையாய் நிற்றல் (நிரைதல்)
பர = சுற்றிலும் பரப்பது (பரத்தல்)
பற = ஆகாயத்தில் சஞ்சரித்தல் (பறத்தல்)
பிற = ஜனித்தல் (பிறத்தல்)
மற = நினைவிழத்தல் (மறத்தல்)
விச = பசி உண்டாதல்

அணண ஒலியாகிய–
ஆகார இறுதி
அகாரிதம

ஆ = பலமுன்றி இழுத்தல், முடியாதால்
ஆரா* = தேடுதல் (ஆராய்தல்)
கா = சூடுபிடித்தல் (காய்தல்)
சா = ஒருபக்கம் தாழதல் (சாய்தல்)
பா = பலத்தோடு முட்டுதல் (பாய்தல்)
மா = சிறிது சிறிதாக இல்லாதாதல் (மாய்தல்)

காரிதம்

ஆ = பரிணமித்தல், கழிதல் (ஆதல்)
சா = இறத்தல் (சாதல்)

இதழொலியாகிய–ஆகார இறுதி
காரிதம்

கா = பாதுகாத்தல், எதிர்பார்த்தல் (காத்தல்)

இகர இறுதி
அகாரிதம்

அடி = கீழ்த் தாழ்தல், சேர்ந்து கூடல்
அணி = அலங்கரித்தல் (அணிதல்)
அரி = துண்டாக்குதல் (அரிதல்)
அலி = உருகுதல்
அறி = உணர்தல் (அறிதல்)
அளி = பழுத்துத் திரவித்தல்
அழி = கட்டு நெகிழ்தல்
இடி = நிலைவிட்டு வீழ்தல் (இடிதல்)
உரி = உரிந்துபோதல் (உரிதல்)
உழி = வட்டத்தில சுற்றுதல்
எரி = தீ எரிதல் (எரிதல்)
எறி = தூரத்து ஆக்குதல் (எறிதல்)
ஒடி = துண்டாதல் (ஒடிதல்)
ஒளி = காணுதாதல் (ஒளிதல்)
ஒழி = விட்டுப்போதல் (ஒழிதல்)
கரி = கறுப்பாதல் (கரிதல்)
கவி = நிலையில் அதிகமாதல் (கவிதல்)
கழி = முடிதல், எஞ்சுதல் (கழிதல்)
கினி = திரவமுணடாதல்
கிழி = தாழதல்
குனி = உடல் முன்னேகி வளைதல் (குனிதல்)
குழி = துவாரம் உண்டாதல் (குழிதல்)

* இவை யகர இறுதியில அமையவேண்டியவை
ஆராய், காய், சாய், பாய், மாய் ஆகிய விணையடிகள்

கொழி = பொழிதல்
சரி = ஒரு பக்கம் நீளம் குறைதல் (சரிதல்)
சுழி = துணிதல், துரக்குதல்
சுளி = வளைதல் (சுளிதல்)
சொரி = சிதறுதல் (சொரிதல்)
சொறி = தினவு உண்டாதல் (சொறிதல்)
ஞரி = கொறுங்குதல் (ஞெரிதல்)
ஞெளி = பின்னுல் வளைதல்(ஞெளிதல்)
ஞெறி = ஒரேமாதிரியில் மடக்குதல்
தணி = சூடுமாறுதல் (தணிதல்)
திக = முழுமையாதல் (திகைதல்)
திரி = பக்கம மாறல், அறிதல் (திரிதல், தெரிதல்)
துணி = முயலுதல் (துணிதல்)
தெளி = தெளிவுபெறல் (தெளிதல்)
படி = இருத்தல் (படிதல்)
பணி = சிறபவேலை செய்தல், வணங்கல் (பணிதல்)
பதி = எல்லா அங்கத்தாலும் சேர்தல் (பதிதல்)
பறி = பங்தம் விடுதல் (பறிதல்)
பிரி = வேறுபடுதல் (பிரிதல்)
பிழி = ஞெகுகுதல் (பிழிதல்)
பொடி = பொடியாதல்(பொடிதல்)
பொரி = உலர்தல் (பொரிதல்)
பொலி = வளர்தல், மூடுதல், அழிதல் (பொலிதல்)
பொழி = தனியே வீழ்தல் (பொழிதல்)
பொளி = கெட்டு வீழ்தல் (பொளிதல்)
மறி = மறுபக்கத்திலாதல (மறிதல்)
முடி = அழிதல், தீர்தல் (முடிதல்)
முறி = துண்டாதல (முறிதல்)
மெதி = மென்மையாதல், வேருதல்
மொழி = சொல்லுதல் (மொழிதல்)
மெலி = இளைத்தல் (மெலிதல்)
மொரி = வறளுதல்
வலி = கனம் குறைந்து நீளல்
வழி = வழிந்தோடல் (வழிதல்)
வரி = சுற்றிக்கட்டுதல் (வரிதல்)
விரி = பெருகுதல் (விரிதல்)
வெடி = துறத்தல்

காரிதம

அடி = அடிகொடுத்தல் (அடித்தல்)
அரி = நீரில் கலக்கி வேறுபடுத்தல் (அரித்தல்)
இரி = உட்காருதல் (இருத்தல்)
இளி = பல்லிளித்தல் (இளித்தல்)
ஒலி = நீர் பெருகுதல் (ஒலித்தல்)
கடி = பல்லால் கடித்தல் (கடித்தல்)
கலி = துன்பம் உண்டாதல் (கலித்தல்)
களி = விளையாடல் (களித்தல்)
குடி = (நீர்) உண்ணல் (குடித்தல்)
குதி = வேகம் கொள்ளல் (குதித்தல்)
குறி = எழுதுதல், கருதுதல் (குறித்தல்)
குளி = நீராடுதல் (குளித்தல்)
கொதி = ஆசைப்படுதல்
கொறி = ஒவ்வொன்றுகத் தின்னல் (கொறித்தல்)
கொழி = இனம் வேறுபடுத்தல் (கொழித்தல்)
சதி = வஞ்சித்தல் (சதித்தல்)
சாலி = திரவத்தோடு சேர்த்தல்
சிரி = சிரித்தல் (சிரித்தல்)
சொடி = கோபித்தல்
தரி = பொறுமையின்மை தோன்றுதல்

தளி = திரவம் சிதறுதல்
துடி = இளகுதல், திரவத்தில், அடித்தல் (துடித்தல்)
துறி = உயர்தல்
துளி = சொட்டுச்சொட்டாக வீழ்தல் (துளித்தல்)
தொழி = அடித்தல்
மதி = நிச்சயித்தல் (மதித்தல்)
விளி = அழைத்தல் (விளித்தல்)

ஈகார இறுதி
அகாரிதம்

சீ = திரவித்தல் (சீத்தல்)
(காரிதம இல்லை)

உகர இறுதி
அகாரிதம

உழு = கிளைத்தல் (உழுதல்)
தொழு = கை கூப்புதல் (தொழுதல்)
பிழு = பறித்தல்
பொரு = போர் செய்தல் (பொருதல்)

காரிதம்

அடு = அண்மையில் வருதல் (அடுத்தல்)
அறு = கண்டித்தல் (அறுத்தல்)
உடு = ஆடைதரித்தல் (உடுத்தல்)
உளு = திறம்புதல் (உளுக்குதல்)
எடு = கிரகித்தல்
கறு = கருமையாதல் (கறுத்தல்)
குரு = துளைத்தல் (குருத்தல்)
தடு = தடைதல (தடுத்தல)
தொடு = சரம்தொடுத்தல் (தொடுத்தல்)

தணு = வெப்பம் இல்லாதாதல் (தணுத்தல்)
தெறு = மேன்மேல் சுருட்டுதல்
பகு = பங்கிடுதல (பகுத்தல்)
படு = இயற்றுதல
பழு = பகுவம் வருதல் (பழுத்தல்)
பெரு = பெருத்தல் (பெருகுதல்)
பொறு = பொறுமை கொள்ளுதல் (பொறுத்தல்)
மடு = சலித்தல்
முழு = பெருகுதல (முழுத்தல்)
வறு = பொரித்தல் (வறுத்தல்)
வெறு = விருப்பமில்லாதாதல் (வெறுத்தல்)
வெளு = வெள்ளாகிறமாதல் (வெளுத்தல்)

விவர்த்தனப்பிரகரிணையாக சில தாதுக்கள் ஒரு மாததிரை உள்ளனவாக எஞ்சியுள்ளன. அவை க, ட, ற என்ற மெய்யில் இறுபவை. அவை கொள்ளும் மாறுதல்களில் ஒபபுமை உள்ளன. ஒரு கூட்டமாகச் சேர்க்க, அவை குற்றியலுகர இறுதியாக கொள்ளப்படுகின்றன.

குற்றியலுகர இறுதி

அறு = முறித்தல் (அறுத்தல்)
இடு = சேமித்துவைத்தல் (இடுதல்)
கெடு = தீயிணைதல் (கெடுதல்)
சுடு = வெம்மையாக்கல (சுடுதல்)
தகு = பொருந்துதல் (தகுதல்)
தறு = ஆடையுடுத்தல் (தற்றுடுத்தல்)
தொடு = தொடுதல் (தொடுதல்)
நடு = பூமியிலிடுதல (நடுதல்)
புகு = பிரவேசித்தல் (புகுதல்)

பெடு = பதிதல், ஒருங்கிலையிலாதல் (படுதல்)
பெறு = ஈன்றல் (பெறல்)
மிகு = அதிகப்படுதல் (மிகுதல்)
விடு = துறத்தல் (விடுதல்)

ஊகார இறுதி
அகாரிதம் இல்லை
காரிதம்

ஊ = திரவம் கோரிச்சொரிதல் (ஊற்றுதல்)
தூ = குப்பை நீக்குதல் (தூர்த்தல்)
மூ = பக்குவம் வருதல் (மூததல)

எகர இறுதிகளெல்லாம் காலப் போகில் அண்ண ஒலியாகிய அகார இறுதியாகி விட்டதனால் இப்போது எகர இறுதித் தாதுக்கள் இல்லை.

ஏகார இறுதி
அகாரிதம்

தே = காலபபோக்கில் குறைதல்* (தேய்தல்)
மே = புல்லறுத்தல், கூரைவேய்தல் (மேய்தல்)
வே = சூடு ஏற்று மென்மையாதல் (வேதல்)

காரிதம்

ஏ = கூட்டிச் சேர்த்தல்* (ஏய்தல்)

ஐகார இறுதி
(அகாரிதம இல்லை)
காரிதம்

கை = கசததல் (கைததல்)
தை = நூலால் கட்டுதல் (தைத்தல்)

ஒகர இறுதி
(அகாரிதம் இல்லை)
காரிதம்

ஒ = சரிப்படல், சேர்தல் (ஒத்தல்)

ஓகார இறுதி
அகாரிதம்

போ = செல்லுதல் (போதல்)
நோ = வேதனைப்படுதல் (நோதல்)
(ஓகார இறுதிக காரிதமும் ஔகார இறுதியும் இல்லை)

காரித அகாரித வேறுபாடு உயிர், சில் இறுதிகளிலேயே உளது. ககரம் முதலிய முழுமெய்யிறுதிகளில் இல்லை.

ககர இறுதி

அழுக் = திரவித்தல் (அழுகுதல்)
இளக் = சலித்தல் (இளகுதல்)
இறுக = உறைத்தல் (இறுகல்)
உருக = திரவமாதல் (உருகுதல்)
ஏக = கொடுத்தல்
ஒழுக் = நீர் பாய்தல் (ஒழுகுதல்)
கழுக = நீரால் தூய்மைப்படுத்தல் (கழுவுதல்)
குறுக் = நீளம் குறைதல் (குறுகுதல்)
தடக் = தேய்ததல் (தடவுதல்)
தழுக = புணர்தல் (தழுவுதல்)
திருக் = செலுத்துதல்
தேக = தேங்கசசெய்தல் (தேக்குதல்)
நக = சுவை அறிதல (நக்குதல்)
நல்க் = கொடுததல் (நல்குதல்)

* இவை யகர இறுதியில் சேர்க்கப்படவேண்டியவை. தேய், மேய், ஏய் ஆகியன.

நோகக = பார்த்தல்(நோக்குதல்)
பழக் = பழையதாதல் (பழகுதல்)
பாக் = நடுதல் (பாவுதல்)
புல்க் = புணர்தல் (புல்லுதல்)
பெருக் = பெருத்தல் (பெருகுதல்)
முறுக = அவிழாதிருத்தல்
(முறுகுதல்)
முழுக் = முங்குதல் (முழுகுதல்)
மெழுக் = தடவுதல் (மெழுகுதல்)
ராக் = தேய்த்தல் (அரகுதல)
விரக = கலத்தல் (விரவுதல்)
வை(வழு)க = காலம் தாழ்த்தல்
(வைகுதல்)

ங்கர இறுதி

அடங் = கீழ்ப்படுதல், உட்படு
தல், முடிவடைதல்
(அடங்குதல்)
அனங் = அசைதல்(அனங்குதல்)
அமங் = அமிழ்த்தல்(அமுங்குதல்)
இடுங் = இடைபடுதல்
(இடுங்குதல்)
இணங் = சேர்தல் (இணங்குதல்)
இறங் = கீழ்நோக்கிவருதல்
(இறங்குதல்)
இருங் = முறுகிச் சேர்தல்
(இறுகுதல்)
இயங் = பெருகுதல் (இயங்குதல்)
உடங் } = பிடிபடல், தடைதல்
உடக } (உடங்குதல்)
உணங் = உலர்தல்(உணங்குதல்)
உறங் = தூங்குதல (உறங்குதல்)
ஏங் = தேம்புதல (ஏங்குதல்)
ஒடுங் = முடிதல (ஒடுங்குதல்)
ஒதுங் = பின்வாங்கல், அடங்கு
தல் (ஒதுங்குதல்)
ஒருங் = தயாராதல (ஒருங்குதல்)
ஓங் = கையுயர்த்தல் (ஓங்குதல்)
கலங் = கலுழ்தல் (கலங்குதல்)
கறங் = சுழலுதல் (கறங்குதல்)
கிடுங் = நடுங்குதல்
கிலுங் = குலுங்கி ஒலித்தல்
(குலுங்குதல்)
குடுங் = அகப்படுதல்
குணுங் = அழகோடு குலுங்குதல்
(குணுங்குதல்)
குலுங் = இளகுதல் (குலுங்குதல்)
குழங் = கவலைப்படுதல்
சதுங } = நிரப்பு தவறல்
சளுங }
ஞெங் = அமுங்குதல்(ஞெமுங்குதல்)
ஞெடுங் = அதிர்ச்சியடைதல்
(நடுங்குதல்)
ஞெருங் = நெருக்கமுண்டாதல்
(நெருங்குதல்)
தங் = தடைதல் (தங்குதல்)
தாங் = தாங்குதல் (தாங்குதல்)
திங் = நெருங்கிச சேர்தல்
திளங் = விளங்குதல் (துலங்குதல்)
துடங் = ஆரம்பித்தல்
(தொடங்குதல்)
திரங } = சேர்ந்து நெருங்கல்
திரக }
தூங் = நாலுதல் (தூங்குதல்)
தேங் = அலைபோலடித்தல்
(தேங்குதல்)
நீங = சேய்மையில் ஆதல்
(நீங்குதல்)
நுறுங் = துண்டுதுண்டாக ஆதல்
(நொறுங்குதல்)
பதுங் = நாணமடைதல்
(பதுங்குதல்)
பருங் = கவலைப்படுதல்
பிடுங் = பறித்தெடுத்தல்
(பிடுங்குதல்)

பிணங் = சண்டையிடுதல்
(பிணங்குதல்)
புழுங் = வேகவைத்தல்(புழுங்கல்)
பொங் = மேல்வருதல்
(பொங்குதல்)
மங் = ஒளிகுறைதல் (மங்குதல்)
மடங் = மடித்தல், தோற்றல்
(மடங்குதல்)
மயங் = தளர்தல் (மயங்குதல்)
மினுங் = மின்னுதல்
(மினுங்குதல்)
மிழுங் } = விழுங்குதல்
விழுங் } (விழுங்குதல்)
முங் = மூழ்குதல் (முங்குதல்)
முடங் = தடைப்படுதல்
(முடங்குதல்)
முணங் = முணுமுணுத்தல்
(முணங்குதல்)
முழங் = ஒலி அதிகமாதல்
(முழங்குதல்)
மோங் = அபயகுரல் எழுப்பல்
வணங் = தொழுதல்
(வணங்குதல்)
வாங் = ஏற்றுக்கொள்ளுதல்
(வாங்குதல்)
விங் = வேதனைப்படல
விலங் = குறுகேகிடத்தல், விலகுதல (விலங்குதல்)

சகர இறுதி

கொஞ்ச் = கொஞ்சுதல்
(கொஞ்சுதல்)
கோச்ச் = குளிராலை சுருங்கல்
பிச்ச் = விரல் சேர்த்துச் சிறிது சிறிதாகக்கவர்தல(பிய்த்தல்)
பீச்ச = பீச்சுதல்
ராஞ்ச் = காலால் இடுகிக் எடுத்துப் போதல்

டகர இறுதி

அலட்ட் = இடையூறுபடுதல்
(அலட்டுதல்)
ஆட் = அங்குமிங்கும் அலைதல்
(ஆடுதல்)
ஓட் = ஓடுதல் (ஓடுதல்)
கிட்ட் = கிடைத்தல (கிட்டுதல்)
கெட்ட் = பிணைத்தல (கடடுதல்)
கொட்ட் = (முழவு) கொட்டுதல்
(கொட்டுதல்)
கோட் = இயல்பு மாறுதல்
(கோடுதல்)
சாட் = குதித்தல (சாடுதல்)
சாண்ட் = கொய்தல்
சூட் = தலையில் அணிதல் (சூடுதல்)
சூண்ட் = சுட்டிக்காட்டல்
(சுட்டுதல்)
ஞெட்ட் = அஞ்சி நடுங்கல்
ஞேட் = சிறிதாகப் புடைத்தல்
ஞெரட் = பிசைதல (நெருடுதல்)
ஞொண்ட் = நொண்டியாதல்
(நொண்டுதல்)
தட்ட் = ஒன்றோடொன்று முட்டுதல் (தட்டுதல்)
திகட்ட் = நிறைவால் வெறுப்புதோன்றல்(தெவிட்டுதல்)
தீண்ட் = அடுத்துவருதல்
(தீண்டுதல்)
தெண்ட் = அங்குமிங்கும் நடத்தல்
தேட் = தேடுதல் (தேடுதல்)
தோண்ட் = அகழதல்
(தோண்டுதல்)
நாட்ட் = ஊன்றி நிறுத்தல்
(நாட்டுதல்)
நேட் = சம்பாதித்தல் (நேடுதல)
பாட் = பாடுதல் (பாடுதல்)
பூட் = தண்டுவீழ்தல்
மண்ட் = ஓடுதல்

மிண்ட் = சொல்லுதல்
மாட் = இயற்றுதல், வேலைசெய்தல் (மாட்டுதல்)
மூட் = மறைதல் (மூடுதல்)
மேட் = அடித்தல்
வாட் = மெலிதல் (வாடுதல்)
வீட் = விடுபடல் (விழுதல்)
வெட்ட் = வெட்டுதல் (வெட்டுதல்)

ணகர இறுதி

உண் = உணவுகொள்ளல் (உண்ணல்)
எண் = தொகை குறிதத்தல் (எண்ணுதல்)
கண் = நோக்குதல் (காணல்)
நண் = நினைத்தல்
பூண் = தழுவுதல் (பூணுதல்)
வேண் = தேவைப்படுதல் (வேண்டுதல்*)

தகர இறுதி

ஊத் = ஊதுதல் (ஊதுதல்)
எழுத் = எழுதுதல் (எழுதுதல்)
ஏந்த் = தரித்தல் (ஏந்துதல்)
ஓத் = மந்திரம் சொல்லுதல் (ஓதுதல்)
கத்த் = விளங்குதல்
கருத் = நினைத்தல், போற்றல் (கருதல்)
குத்த் = முனையால் குத்துதல் (குத்துதல்)
கொத்த் = கொத்துதல் (கொத்துதல்)
கொளுத்த் = தீபிடிக்கச செய்தல், தூண்டுதல் (கொளுத்தல்)
கோத் = கோதுதல் (கோதுதல்)
சிந்த் = சிதறுதல் (சிந்துதல்)
சீந்த் = வெட்டி எடுத்தல் (சீவுதல்)
செதத் = சீவுதல் (செதுக்குதல்)
தத்த் = துள்ளுதல் (தததுதல்)
நீந்த் = தண்ணீரில் சஞ்சரித்தல் (நீந்துதல்)
பொந்த் = மிதததல்
மாந்த் = தோண்டுதல்
மோந்த் = உறிஞ்சிக் குடித்தல்
வழுத = தவறுதல் (வழுவாதல்)

னகர இறுதி

ஊன்ன் = பற்றிகோடல் (ஊன்றல்)
கூன் = முதுகு வளைதல் (கூனுதல்)
தின் = உண்ணுதல் (தின்னுதல்)
துன் = தைத்தல் (துன்னுதல்)
தென் = கால்பின்னல் (தெற்றல்)
தோன்ன் = (மனதில்) உதிததல் (தோன்றுதல்)
மின் = ஒளிவிடுதல் (மின்னுதல்)

பகர இறுதி

அம்ப் = தாழ்தல் (அமைதல்)
ஈம்ப் = நகுதல்
ஒலும்ப் = உலைத்தல்
கலம்ப் = சண்டை உண்டாகுதல்
கூப்ப் = வணங்குதல் (கூப்புதல்)
சப்ப் = கடித்துத் தின்னல் (சப்புதல்)
சிலம்ப் = ஒலித்தல் (சிலம்புதல்)
தப்ப் = தொட்டறிதல்
துப்ப் = உமிழ்தல் (துப்புதல்)
துளும்ப் = நிறைந்து வடிதல் (துளும்புதல்)

---

* வேட்கை + அவா = வேணவா. (தொல். எழுத்து-289)

புலம்ப் = பயனில்மொழி பேசல் (புலம்பல்)
விளம்ப் = (உணவு) படைத்தல் (விளம்புதல்)

மகர இறுதி

கும்ம் = ஒன்றுய் கடிதத்துத் தின்னல்
